அரிச் சந்திரோபாக்யான
[illegible]

[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீராமஜெயம்.

அரிச்சந்திரோபாக்யான

நாடகாலங்காரம்.

என்னுமகீர்த்தனை.

இஃது
கும்பகோணத்திலிருக்கும்
மணஞ்சேரி
நரசிம்மையரவர்கள் பௌத்திரரும்
மூர்த்திராமையரவர்கள் புத்திரருமாகிய
நரசிம்மையராலியற்றி
சங்கீதசாஸ்திரமுறைப்படி
ஸ்ரீங்கார-வீர-கருணை-அற்புத பய-ஆஸ்யமென்கிற
ஷட்ரஸோபேதமாய்
இராகதாள ஸ்வர வர்ணங்களமைந்து

அ-வீராசாமிநாயுடு
அனுமதியால்
வ-வரதராஜுலுநாயுடு
தக்கோலம்
நரசிம்மலுநாயுடு
இவர்களால்
முன்பதிப்பித்தபிரதிகளைங்கத்
திருசிரபுரம்
சபாபதிபிள்ளையவர்களால்,
தமது
ஸ்ரீமட்டுவார்குழலம்பாள் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

௲௮௮௧௵.

O-,892MNM,A
M81

உ

ஸ்ரீராமஜெயம்.

அரிச்சந்திரோபாக்கியான

நாடகாலங்காரம்.

விநாயகர் துதி

விருத்தம்.

திருமருவும்பரிதிகுலத்திறைவனான
தீரன்அரிச்சந்திரன்றன்சரிதைதன்னை
அருமைமிகுகீர்த்தனமாயருளிச்செய்ய
அத்திமுகத்துத்தமனாயவதரித்து
பெருமைமிகுமேருவையோரேடதாகப்
பிடித்தொருகொம்பொடித்தெழுதிப்பாரதத்தை
ஒருமைமனத்துடன்முடித்தகடவுள்பொற்றாள்
உள்கொள்வேன்நித்தியமங்களங்கொள்வேனே (க)

க-தரு-இராகம்-நாட்டை-ஆதிதாளம்.

பல்லவி

திருவருள்புரிவாயே-ஞானத்- தேனினைச்சொரிவாயே

அநுபல்லவி

இருளொழித்திடுவாயே உன்
னிணையடிதுணையெனச்சேர்ந்திடுவாயே (திருவருள்)

சரணங்கள்

க, அண்டர்கள் தொழுவோனே மிக
அருந்தவர்மகிழ வாகுவினெழுவோனே
தொண்டர்கள் புகழுவோனே-உன்னை
துதிப்போர்மனத்தி விருந்து மகிழுவோனே (திருவ)
உ, மதியில்லா நிர்மூடன் உத்தன்
மலர்ப்பதந்தொழவறி யாமனக்கேடன்
கதிவிரும்பாத பாடன் தின்னைக்
கருத்திற்சேர்க்கவென்னுங்கருணாவிசேடன் (திருவருள்)

௩, சத்யவசன பாலன்-அரிச்
சந்திரன்வன்மைகள்சொல் வோர்க்கனுகூலன்
முத்தியளிக்குஞ் சீலன் நீயே
மூலகாரணனாய் வந்தாதிமூலன் (திருவரு)

முருகர் துதி.

விருத்தம்.

எள்ளளவுமாறுதகீர்த்திபெற்ற
வினகுலத்திற்புகழ்படைத்துஇணைவேறில்லா
வள்ளலெனவத்துதித்தஅரிச்சந்திரன்றன்
வண்மைதனைநாடகமாய்வகுத்துரைக்க
உள்ளமகிழ்ந்திடுதிருமான்மருகனாக
வுமையவளீன்றருளியடியர்தம்மைக்காத்த
கள்ளவிழுமலர்ப்பதத்தோன்முருகவேளைக்
கருதினேன்போற்றிசெய்யப்பொருதினேனே

உ-தரு இ-ம்-தனாசரி-ஆதிதாளம்.

பல்லவி

குமரகுருபரா-அடியார்க்கன்பு-கூறுந்தயாபரா

அநுபல்லவி.

அமரர்கட்கதிபா அறிஞரகத்துள்நிபா
சமரபுரிநிவாஸா சத்ருஜயவுல்லாசா (குமர)

சரணங்கள்.

க, ஞானம்முந்தந்தாய் குருவடிவாய்ஞாலந்தனில்வந்தாய்
மானபிமானா மாதவத்தோர்மோகனா,
ஏனனுக்மருகா குதலைமொழிமுருகா (குமர)
உ, புள்ளிமயில்வேலா கதிவிரும்பும் புனிதர்க்கனுகூலா
வள்ளிமனோகரா வரதகருணா
தெள்ளியகல்விகற்றோய் சீரனைப்பெயர்பெற்றோய் (கு)
௩, வெற்றிமிகப்படைத்தாய் வெகும்பிநிக்ற-வேளையிற்கன்று
[அடைத்தாய்
முத்திக்கோர்வித்தாய் மூலத்துஇங்குதித்தாய்
நித்தியமுனைப்போற்றும் நிமலர்கவலையாற்றும் (கும)
ச, வண்மைதனில் மிகுத்த அரிச்சந்திரன் வளங்கள்சொல்லத்
[தொகுத்த
உண்மையெனக்கருள்வாய் உனைத்தொழாரைவெருள்வாய்
கண்மணியாகவந்தாய் கபாலனுக்கருள்தந்தாய் (கு)

(உமாபதிதுதி.)

விருத்தம்.

நன்னெறியுடனயோத்திநாட்டினையாண்டவேந்தன்
சொன்னெறிதவறாச்செல்வன் கருணனுமரிச்சந்திரன்றன்
தன்னிகரில்லாத்திவ்ய சரித்ரகீர்த்தனங்கள்பாடக்
கன்னியோர்பாகச்செம்பொற் கழலினைப்போற்றுவேனே (௩)

௩-தரு இ-ம்-ஆநந்தபைரவி-அடதாளம்.

க, பல்லவி,

அரனேகங்காதரனே-உனைப்போற்றும்
அடியார்க்ருபாகரனே

அநுபல்லவி.

பரனேசிற்பதமலர் பணிந்தேன்குறைதணிந்தேன்
பார்த்தருவாய்செழிப்பாய் பவக்கடலையொழிப்பாய் (அர)

சரணங்கள்.

க, உனதுபாதமேகெதி விண்ணோர்களென்றும்
உளமகிழ்ந்ததுபோற்றி
மனதுமிகமகிழ்வாய் மருத்துவமேநிகழ்வாய்
எனதுகன்மமுடிப்பாய் எழிலுறவேநடிப்பாய் (அர)
உ, சத்தியஅரிச்சந்திரன் சரிதைகீர்த்
தனஞ்சொல்லவோர்தந்திரம்
வெத்தியைமிகக்கொண்டேன் விரும்பியுன்பதங்கண்டேன்
நித்தியமும்அபயம் அறைந்தனன்மெய்ஜெயம் (அர)
௩, பட்டகடன்தீரவே தமியேற்குப்
பாரில்புகழ்சேரவே
திட்டமாயிதுசொல்லத் திடங்கொண்டேன்வேறல்
இட்டவனுக்குப்பொருள் எவ்விதத்துநீயருள் (அர)

திருமால் துதி.

விருத்தம்.

அனைத்துலகெங்குந்தானாய் ஐவகைப்பூதமாகி
நினைத்தவருளத்துதிக்கு நெடியமால்பாதம்போற்றி
தனத்தினிற்நிறைந்தயோத்தித் தாரணிசெங்கோலாண்ட
கனத்தினன் அரிச்சந்திரன்றன் கதையிக்கீர்த்தனஞ்சொல்வேனே

௪-தரு-இ-ம்-பியாக்-அடதாளம்.

பல்லவி.

ஆராவமுதனே அயன் அமர்ந்தகுமுதனே

அநுபல்லவி,

ஆராதாரப்பொருளே உந்தன் அடியார்திருவருளே
தீராவினைதீர்ப்பாய் பொல்லாத் தீம்பனைக்கதிசேர்ப்பாய் (ஆரா)

சரணங்கள்.

௧, வல்லரக்கரைச்செகுத்தாய் வாழ்வை வானவர்க்குப்பகுத்தாய்
நல்வரந்தருவாய் மிக நன்மைசெய்ப்பவருவாய்
புல்லறிவாளனெனைக்-காக்கப்போற்றினேனுனை (ஆரா)
௨, ஆதிமூலமானவா-தந்திக் கருள்தந்தகோனவா
கோதிலாச்சுடரொளியே முத்திக் குதவும்பரவெளியே
தீதிலாதபாதனே-மிகத்தெளிந்தஞான போதனே (ஆரா)
௩, சத்தித்தர்மபாலனே பூர்ண சந்த்ரவதிலோலனே
நித்யமாய்ப்புகழ்ச்சரிதை-சொல்லும் நெறியறிவேனோயினி
சத்யமாயென்றனில் நின்று சாற்றுவாயிப்புவிதனில் (ஆரா)

சரஸ்வதிதுதி.

விருத்தம்,

அரசரிற்சத்யந்தானே அரும்பிதாகுருவென்றெண்ணும்
குரிசிலரிச்சந்த்ரன்றன் குலவுநற்சரிதைதன்னைத்
தரணியிற்புகழ்ந்திடுங்கீர்த் தனமெனப்பாடுதற்குச்
சரஸ்வதிதிருத்தாளிற் சாற்றுவேன்போற்றுவேனே (௧)

௫-தரு-இ-ம்ஸ்ரீ-ராகம்ஆதிதாளம்,

பல்லவி.

வாணியுன்றனிலிருந்தருள்வாயே வனஜாஸனத்தாயே (வாணி)

அநுபல்லவி

எணிலோசனியே எக்கலைக்கும்-இறைவிநீயே
எளியேன்தெளியவே ஏற்பாய்காப்பாய் (வாணி)

சரணங்கள்.

௧, உலகமாதாவெனத்துதித்தாயே உளங்களித்தாயே உலக
திலகண்டிடச்செய்குவாய் நிறைமதிதந்துய்குவாய்
நீவா மூவா நிறைவி இறைவி (வாணி)

௨, வேதபுரிநாதன்மனையாளே வெண்டாமரையாளே
ஆதாரமெனக்கு நீயே அன்பாயனுக்கிரகிப்பாயே
அறியேன் சிறியேன் அமலை கமலை (வாணி)
௩. எக்கலைக்குமிறைவியாய்வீற்றாயே எளியோனைக்காற்றாயே
வக்கணைச்சொற்கள்யாவும் வழுவாதென்றனில்மேவும்
வகையை துகையை வைப்பாய் ஒப்பாய் (வாணி)

குருஸ்வாமி துதி

விருத்தம்

தருமநெறியதிலளவுந்தவறிலாத
தருமன் அரிச்சந்த்ரன்பெருமைசொல்ல
பரமரகசியப்பொருளைப்புகுத்துணைக்கும்
பரமகுருபதமலரைப்பணிகுவேனே (௨)

௬-தரு-இ-ம்-சாவேரி ஆதிதாளம்

பல்லவி.

போதகுருநாதா புனிதர்துதிக்கும்பாதா
போற்றிசெய்தேன் ஸர்வாதீதா

அநுபல்லவி.

ஆதரவாய்வந்தெனை தகத்துயர்தணித்தாயே
ஆக்ரமிக்கும்யென்மனை அடக்கியபயந்தந்தாயே (போ)

சரணங்கள்,

௧, அண்டரும்முனிவரும் எண்டிசைக்கதிபரும்
அருந்தவமிகுத்தோர்களும்
கொண்டகோலமுழியாக் குறியுடனேதற்காத்தாய்
குவலயத்திலெனது குறைகளெவையுமாற்றாய் (போ)
உனதுவீட்சணைத்தாலே உயர்ந்தோரிந்தமண்மேலே
ஓதவெளிதோயென்றாலே
மனதுமகிழச்செய்தாய் மாபாவிகளைவதாய்
மாய்க்கவந்தோனாயெய்தாய் மகா[illegible]பாவாடெய்தாய் (போ)
௩, ஓயாக்கவலையான உத்திதனிலென்னென்னும்
உழலுந்தமியேனை யின்னும்
நீயாதேயெனத்தேற்றி தீயோர்வலுமையாற்றி
தாயைமகவைக்காற்றாயே தந்தையேபோற்றி (போ)

நூற்பெருமை.

விருத்தம்.

மிகுத்தநற்புத்தியுற்ற மேன்மக்களெவருங்கேளீர்
வகுத்தநல் அரிச்சந்திரன்றன் வண்மைகீர்த்தனமதாகத்
தொகுத்தபல்லிசைகளாலே தொல்புவிதன்னிலிந்த
மகத்துவங்கேட்போர்மெத்த மனக்களிப்படைகுவாரே

௭-தரு-இ-ம்-சுருட்டி-அடதாளம்,

பல்லவி.

மகிமைமிகுத்த அரிச்சந்த்ரன்சரிதை[illegible]க
மனஞ்சலித்தவர்களுண்டோ

அநுபல்லவி,

தகைமையில்லா துரைத்தும் தமதுளம்வெறுப்பாரோ
தம்பியின்னொருதரம் தயவாய்ச்சொல்வாயென்னாரோ

சரணங்கள்

௧, உன்னையுன்னைத்தெவிட்டாதவமுதாமிது
உம்பர்சோனாலெவரும் உண்டாரேபுவிமீது
உமைபாகன்ஜெகன்மோகன் ஒருவரும்இணையில்லா
ஒருமுனிவனைக்கைக்கொண் டுகந்தானேநெடும்போது
பண்ணவழிபார்பூஜாபலமடைந்ததுபோல
பார்த்திபன்முனிதவத்திற் பாதிகொண்டானப்போது
பார்த்தோர்திகைத்திடும்வானோர்காவலகற்றி
பத்தியாய்த்தொழுதேத்திப்பணிந்தானேமிகசாது (மகி)

௨, ஆண்பிள்ளைதாத்திலிந்தத்தவத்தினைத்தினில்
ஆத்மஞானியாயவதரித்தா னெங்குஞ்செழிக்க
அஷ்டரும்முனிவரும் எண்டிசைக்கதிபரும்
அதிசயித்தானந்தங் கொண்டாசிகள்கொழிக்க
விண்மொழிபிதுவிஸ்வாமித்திர முனிக்கேதோதி
வினைவிளையுமென்றருந் தவத்தோரொலாம்பழிக்க
வேந்தனிவ்வொருவனுலேசத்யதர்மங்கள்
விளங்குமினியென்றீ ரேழுலகுத்துயமொழிக்க (மகி)

௩, பசித்தழுஞ்சிசுவைத்தாய் முலைதந்தாதரித்தாப்போற்
பஞ்சவர்க்குமார்க்கண்டரிது சொல்லத்தொடுத்தாரே
பத்திவிஸ்வாசமாம்விருவியுள்ளங்களித்து
பரிதாபமகன்றவர் பதத்தினைடுத்தாரே

புசித்தவருசுவையின் அரு[illegible]த்தெவிட்டும்
புண்யமேனையிவ்வமுதைப் புகட்டுமென்றெடுத்தாரே
பிறப்புமிறப்பில்லைடகஞ்சியென்றென்றுமுண்டு
புனிதர்நீங்களேயென்று புகழ்ந்திதைக்கொடுத்தாரே)மகி

அவையடக்கம்,

விருத்தம்

கருடனிருசிறகினையும் விரித்துவானில்
கண்டோ[illegible]ற மாறுமட்டும் வட்டமிட்ட
ஒருணமதில[illegible]ப் பூச்சியுந்தன்றெக்கை
தனைவிரித்துப்பறந்திட வெத்தனித்தாப்போல
வருளுடையோர்பாதாசமங்களாய்ந்தோ
ரருந்தவத்தோர்முன்னென்மனவாசையாலே
பொருளறியேனிதுபுகழும்பிழைபொறுத்து
போற்றுவீரொத்தனையீடேற்றுவீரே (அ)

அ-தரு-இ-ம்-மத்தியமாவதி,அடதாளம்

பல்லவி,

மகிழ்ந்தென்வாய்மொழிகேட்பீர்பிழைசொல்லினும்
மதலைச்சொல்லென மீட்பீர்

அநுபல்லவி.

இகழ்ந்துரைப்பாரோநிங்கிங் கெனுஞ்சிசுச்சொல்லை
புகழ்ந்துநாளுங்கொண்டாடும் புண்யமாதாபிதாப்போல் (மகி)

சரணங்கள்.

௧. எளிதிற்காமுகர்தம்மூ டிச்சக்கமாடிக்கொஞ்சும்
எந்திழையர்மொழியை இனிப்பாய்க் கொள்வதுபோல
இதமாய்த்தழுவுங்கள்ளப் புருஷர்கூடும்பூவையை
ஏனும்போதவள்கூறும் இனியவசனம்போல
கிளிகளைவளர்த்தக்கக் காரெங்காரெங்காவென்னை
கேட்டுள்ளங்களித்திடும் கெம்பீர்தமைப்போல
கிலேசமகற்று மரிச்சந்த்ரமன்னன்சரித்ரக்
கீர்த்தனைச்சொல்லக்கேட்பீ ரென்னன்பர்போல (மகி)

௨, பலநாள்பேய்ந்தொரு பெரியநதியாகியே
 விரிற்றீய்ந்தபயிலைப் பல்பாய்க்காப்பதுபோல
பரிவுள்ளசிங்கந்தங்குங் குகையிற்பாச்சைக்குக்குடி
 பிரபலமாச்சுதாமென்னும் பழமொழியாதுபோல
ஜலதாரையிலுமிநீர் ஸாகரந்தனைச்சேரில்
 ஜாதியென்றேற்றிடும் ஜலத்திலிணக்கம்போல
ஜெகத்திலுள்ளவரிரு ரெவரையுஞ்சரணென்றென்
 சத்துருதனைக்ரஷிக்குஞ் சாதுக்கள்குணம்போல (மகி)
௩, அரியவரங்கள்பெற்று ஆயுள்மிகவடைந்த
 அருந்தவமார்க்கண்டர்பால் அன்றடைந்[illegible]டவர்)
அருகில்வந்தடைந்துசோர் வடைந்துமிகமெலிந்து
 ஐயுறவால்சிதைந்தோ மையாவெனவாவிண்டவர்
தெரியவேயவர்க்கருள் செய்தகாதையிதனால்
 தெளிந்தகத்துயர்தீர்ந்து திருத்தாள்பணிபூண்டவர்
தேறுதலையான்மன மாறுதலையடைந்து
 தெவிட்டாவமுதினைத் தேடியுண்டுமீண்டவர் (மகி)

ஆக்கியோன்பெயர்

ஆசிரியவிருத்தம்,

சீர்மருவுகலியுக நாலாயிரத்துந்
 தொளாயிரத்தன்பதொன்பான்
சகமாயிரத்தேழு நூற்றெழுபத்தொன்பதிற்
 சிறந்தசாலிபவாகனம்
சீர்மருவுகாலாயுக்தியி லிகழுமார்கழியி
 லியல்பூர்வபட்சமீ
எழிலுத்ரபஞ்சமி பிருகுவாரமகநாளி
 லியல்பாந்திருக்குடந்தை
பேர்மருவுநகரில் ருக்வேதியனெனப்புகழ்
 பெற்றநரசிம்மாரியன்
பெருமைமிகுதேவிகனை முனிவரந்தணர்தமைப்
 பிரியாதகவிஞர்தனையும்
கார்மருவுவையகத்துள்ளசிவனடியரைக்
 கண்ணனடிதொழுதாஸரைக்
கழல்தொழுதிறைஞ்சியரிச்சந்த்ரன் கீர்த்தியைக்
 காசினியிலோதினேனே.

மார்க்கண்டரியல்புகூறல்-விருத்தம்.

உமையவளோர்பாகனருட்படைத்திரேழ
 உலகோரும்புகழவென்றும்பதினாறாய்வாழ்
வமையவரந்தருகவெனத்துதித்திறைஞ்சி
 யடியவருக்கடியவராய்மார்க்கண்டேயர்
சமையங்களெவற்றையுமாராய்ந்துணர்ந்து
 ஜகமுழுதுஞ்சிவமயமேயெனத்தெளிந்து
இமையகிரிக்கடுத்தவில்லவனத்திற்சென்று
 இருந்திட்டாரவர்களுக்கும்விருந்திட்டாரே (௰)

கூ-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வனத்தில்வந்திருந்தாரே-மார்க்கண்டர்வில்வ-வனத்தில்வந்திருந்தாரே.

அநுபல்லவி.

அனைத்துயிர்க்குமீசனும் அரன்றிருவடிதனை
நினைத்துப்பூசித்துப்போற்றி
நிலத்தில்வீழ்த்திடேமனை (வன)

சரணங்கள்.

அவனிமீதினிலரனடியார்க்கடியனாகி
ஆயிரத்தெட்டுசிவஸ்தலமுமன்புடனேகி
தவநிலையிற்குறையாதன்மைதனக்கிறையாய்
பவனிவரவுகந்தபத்தர்களிற்சிறந்து (வனத்தில்)
இந்திரன்முதல்தேவரெவர்களுமகிழ்ந்திட
ஈசன்மாலயனோர்களென்றென்றும்புகழ்ந்திட
மந்திரமுறைகீதமார்க்கமெவர்க்குமோதி
தந்திரமதிபூதவத்தோ[illegible]வர்க்குந்தியாக (வனத்தில்)
மாதவத்தோரெவருமலரடிதொழுதேத்த
மணிமுடியரசர்களுமலர்தூவிப்போற்ற
பேதவபேதநீக்கிப்பிறப்பிறப்பைநீக்கி
ஆதலன்மதிகுழும் அருந்தவத்தோர்கள்வாழும். (வனத்தில்)

பஞ்சபாண்டவர்-மார்க்கண்டர்ஆச்ரமஞ்சேர்ந்தமைகூறல்.

விருத்தம்.

மதிமிகுத்ததர்மபுத்ராதியர்களாண்ட
 மாநகர்விட்டெழுந்துமதிமயக்கமுற்று
நிதிமிகுத்தவனவாசியாகிமுந்தில்
 நிமலனடிபோற்றிதர்மநிலையைச்சாற்றி
நதிமிகுத்தவாச்சிரமங்களையுந்தேடி
 நற்றுறவோர்தமைநாடிநலங்கொண்டாடி

உ

விதிமிகுத்தமார்க்கண்டராச்சிரமத்தை
விரும்பினார் மனமகிழ்ந்துதிரும்பினாரே.

௰-தரு-இ-ம்-ஆரபி.

பல்லவி.

தவவடிவாகப்பஞ்சபாண்டவர்கள்மார்க்கண்டர்
தமைக்காணவந்தாரே

அநுபல்லவி.

சிவவடிவாமிதென்று சீருடன்றேடிச்சென்று
சிந்தைதனில்மதித்துச் சேவடியைத்துதித்து

சரணங்கள்.

௧, மன்னன்த்ரௌபதன்செய்தயந்திரத்தானாதிகள்
மனநொந்துமிகவாடவெவரும்நாட
அன்னநடைதுரௌபதைதன்னைக்கொண்டோடிவந்து
ஆசையுடன்புவிராஜவர்களுமுகந்து (தவவடி
௨, இன்பமாகராஜசூயாகமியற்றவென்று
எழுதியவோலையிலேஅயலோர்போலே
அன்பாய்வந்ததுரியோதனுதியனாநகைத்து
ஆகடியஞ்செய்ததினாலேமிகத்திகைத்து (தவவடி
௩, சகுனிமாமன்சொற்கேட்டுச்சபையுண்டாக்கிக்கௌரவ
சதிருக்கழைத்தாலேஅவருடன்
வெகுநீதியாய்ச்சூதாடிவிளங்குமரசைத்தோற்று
வேந்தன்றந்தவக்ஷயபாத்திரந்தனைபெற்று (தவவடி

பாண்டவர்க்கு-மார்க்கண்டர்-அரிச்சந்திரன்
சரிதைகூறல்-விருத்தம்.

வந்தபஞ்சபாண்டவரைமார்க்கண்டேயர்
நந்திப்பழைத்தவற்குரியவண்மையெல்லாம்
தந்தவர்கள்முகவியல்பைத்தானறிந்து
தயங்குவதோபுரவலர்கள்தன்மையென்று
யிந்தவகைபெரிதல்லவிதற்குமேலா
யியம்பக்கேளிதிலுமிகவிசித்திரமென்று
நொந்தகன்றைப்பசுநிலைதந்தாற்றுமாறு
கொடிக்கின்றார்பூவலுறப்படிக்கின்றாரே

௰௧-தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

உங்கள்மனக்குறை மீட்பீர்-மிக வுசிதமாமிதிகாஸ
மொன்றுண்டதைக்கேட்பீர்

அநுபல்லவி.

திங்கள்குலத்தோர்க்குத் தீவினையில்லை
தெளிந்திதைக்கேட்போர்க்குத்திருமேவெகுதொல்லை (உங்)

சரணங்கள்.

சீர்மருவுமயோத்தி சீமையாளச்சிறந்த
செங்கதிர்குலத்துற்ற செல்வன் அரிச்சந்திரன்
செங்கோலேந்திராஜ நீதிசெலுத்துநாளில்
சிறந்தவசிஷ்டதவத்தோர் சேர்ந்துவந்துபூவிந்த்ரன்
பேர்மருவுவாயென்று பெறுகவாசீர்வதித்து
பெருமைசேர்மதிதபன் பெற்றபேற்றைத்துதித்து
பெண்கட்கரசிசந்திர மதியைமணம்புரிந்து
ப்ரியமாயவாழ்வாயென்றப் பெண்குணமறிவித்து
நேர்மருவுமதிதய மன்னவர்க்கின்னீர்மை
நெறிதவறுதுணர்த்தி நிருபன்றன்மனங்கண்டு
நிறைசெல்வனரிச்சந்திர மன்னர்க்கிந்நெறிசொல்லி
நிலையானசதுரங்க தளத்தையழைத்துக்கொண்டு
ஏர்மருவுமோர் வனத்திடையணுகையில்
எழிலுயர்துர்க்கையின் கோயிலொன்றைக்கண்டு
வெல்லவருமென்றும் சொல்லவருந்தவம்
இயற்றினேமென்றுளந் தேற்றிக்களிப்புண்டு (உங்கள்)

௨, அந்தயாகத்தி தந்தபொற்பேறி
அடங்கமகிழ்ச்சிகொண் டடைந்தானேகண்ணோசி
அன்மத்தாறுமேசதகாதரங் [illegible]
அழைத்தானேமதிதயன் தெளித்தநல்விருவாசி
இந்தராசனுக்கிணை யிந்திரனுவானோவென்ன
எழிலுயர்கனகத்தேரேறி யூர்வலம்வந்து
இலயீநினிலுவமையில்லாச் சந்திரமதியை
யேற்றுமணத்துபள்ளி யெழுச்சிக்கொலுவமர்ந்து
கந்தமும்மலரும்போற் காமன்களிகூடி
களித்துமித்யாகந்தக் கடலிலாச்சுகித்து
கண்ணோசிகாடாளன் தந்தமிதனங்கொண்டு
களித்துச்சேனைகளுடன் ஊரதலங்கள்குவித்து
அந்நன்னகர்கடந் தடர்வனம்பூஞ்சோலை
அனைத்தும்நடந்துகாளியம்மன்பொற்பதம்போற்றி
ஆனைசேனையுடன் ஆளும்அயோத்தினை
அடைந்திடக்கண்டோர் மலர்மாரிதூற்றி (உங்)

௩. சிங்காதனமேறிச் செங்கோலாளுநாளில்வச்
சிரபாணிசபையிற்கோ சிகவசிஷ்டர்சபதஞ்
செய்ததினால்வன்மங் கொண்டரிச்சந்திரன்
சிமையாவுங்கொள்ளக்கோ சிகன்செய்தான்விபரீதம்
தங்காமல்மறுநகரேகச்செய்துவழியில்
தாங்கொணாத்துன்பத்தாற் றதும்பிவெதும்பியழ
தாயுஞ்சேயையுமறையவருக்கடிமையாக்கித்
தந்தானேபுலையனைத் தார்வேந்தன்கைதொழ
அங்காதரவான சந்த்ரமதிமகனை
அடர்வனத்தேகச்செய் சரவாலுயிர்செகுத்து
அண்டர்கள்திகைத்திட வாதித்தன்குலமாதை
அவள்கணவன்கையப[illegible]க்கிநிணிக்கவகுத்து
கங்காதரன்முதற்கடவுளரெவர்களும்
கண்டதைத்தடுத்துக் களித்துமலர்கள்தூற
கனகங்கரானன் கையால்முடிசூட்டி
கனங்கொண்டவரிச்சந்திரன் கதைகேட்டுக்களிகூற(உங்)

விருத்தம்

வேதமுனிமார்க்கண்ட முனிவரிந்த
விதமியம்பக் கேட்டதர்மபுத்திரனவர்
மேதமறவிளங்கவெமக் கின்னொருக்கால்
விரித்துரைக்கவேண்டுமெனப் பேணுவோனை
போதமுறத்தழுவியரு கிருத்திமெத்தப்
புண்ணியருங்கேளெயலதிப் புவியிலுண்டோ
[illegible]த்துதித்தவர்க்கு நன்மையாக
நவிலுவார்முகமலர்ந்து நவிலுவாரே

விருத்தம்.

சங்கரன்முருகனுக்குமானயன்திருமாலுக்குஞ்
செ[illegible]ரனி[illegible]ஹனுக்குஞ் சேய்ய[illegible]தமுனிக்கும்
பொங்குபவிசுவாமித்திரர் புகழ்பெறுவசிஷ்டர்சுக்ரர்
எங்கணுநிறைந்தவானோரெவர்க்குமங்களஞ்சொல்வேனே

இதுவுமது,

அத்தியும்பரிதேர்சேனையனைத்துடனவனியாண்ட
சத்தியரிச்சந்திரனுக்குஞ் சந்திரமதிமங்கைக்கும்
சத்தியகீர்த்தியென்னுஞ் சதுரனாமந்திரிக்கும்
நித்தியலோகிதாசனுக்கு நிறைந்தமங்களஞ்சொல்வேனே

சுத்தமங்களம்

௧௨-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்

பல்லவி.

தேவாதிதேவருக்கு ஜெயமங்களம்-நாளும்
திங்களணிவேணியர்க்கு சுபமங்களம்

அநுபல்லவி.

மூவர்முதலானவர்க்கு முத்திதரும்வேலவர்க்கு
மேவுதவத்தோர்களுக்கு மேலவரெவர்களுக்கும்(தேவா
கண்ணாயிரவனுக்குக் கற்றுணர்ந்தநாரதர்க்கும்
விண்ணோர்புகழ்கௌசிக விசுவாமித்திரமுனிக்கும்(தேவா
வேதநாலாறுநூலும் விளங்கியவசிஷ்டருக்கும்
ஓதுநட்சத்தரையருக்கும் உத்தமர்பாலண்டவர்கட்கும்(தேவா
சத்தியஅரிச்சந்திரனுக்குஞ் சந்திரவதிமங்கையர்க்கும்
புத்திரலோகிதாசனுக்கும் புகழ்ந்திடுஞ்சத்தியகீர்த்திக்கும்(தேவா)

பாயிரம்-முற்றியது,

ஆசு-விருத்தம்-௧௫-௧௫-௧௨

௨

முதலாவது;

அரசாட்சிகாண்டம்.

* * *

கடவுள்வணக்கம்

விருத்தம்

நாடியபுகழ்பெற்றோங்கு நரேந்திரனரிச்சந்திரனருமை
நீடியசரித்திரத்தை நிறைந்தநாடகமாய்ப்பாட
கூடியவியலிசைச்சொற்குலவுமுத்தமிழினாலே
சூடியகவிமாலைக்குத்தோடையஞ்சொல்லுவேனே

தோடயமங்களம்.

௧-இ-ம்-நாட்டை-தாளம்-ஜம்பை

ஜெயஜெயகஜமுகேச ஜெயஜெயகுமாரேச
ஜெயதேவதேவேச ஜெயஜெகதீசா-ஆ-ஆ
ஜெயஜெயவரவாணீச ஜெயலட்சுமிபிராணேசஹரே-ஆ-ஆ
ஜெயலர்வலோகேச ஜெயஜெயகௌரீச ஜெயஜெயா

வானவரிந்திரர்முனிவர் வாழ்த்துமரிச்சந்திரனெனும்
கோனவன்றன்சரித்திரத்தை குருவருளாற்பாட-ஆ-ஆ
ஆனவரீமில்கு மரியயனரன் மூவர்-அரோ-ஆ-ஆ
ஆனவொருவனைத்தினமு மடிபணிகுவேனே-ஜெய
இமையவரெவரும்புகழும் இறைவனரிச்சந்திரன்றன்
கமைபெருகுங்கதைபதனை காதலுற்றுப்பாட-ஆ-ஆ
உமையவளெட்சுமிவாணி உத்தமியாளம்மூவர் அரோ-ஆ-ஆ
தமையனுதினமும்போற்றித் தாமரைத்தாள்தொழுவாம் ஆ-ஆ
தருமநெறிதவராத சத்தியஅரிச்சந்திரன்றன்
அருமைசரித்திரமதனை யகமகிழ்ந்துபாட-ஆ,ஆ
குருமுனிவர்பெரியோர்கள் திருவடியார்மறையோரும்
அருமையறு நூலறிவு மையர்பதந்துணையேஜெயஜெய

வசனம்-அகோகேளுஞ்சபையோர்களே ராசாதிராசனான அரிச்சந்திரமகாராசனது புகழ்பெற்றசரித்திரத்தை ஆடிப்பாடிமுடியுமளவும் யாதொருவிக்னமும்வாரமற் பாதுகாக்கும்பொருட்டு சர்வேந்திரியாமியாகிய விக்னராசர்வருகிறவிதங்காண்க,

விருத்தம்.

வெத்தியைமிகப்படைத்தவ்ரிஷபத்தின்கொடிபடைத்தோன்
சித்தவாகுவாகனத்தோன் சிறக்கவோர்செங்கோலாண்டோன்
பத்திசெய்பவர்கட்கெல்லாம் பாக்கியமளித்துக்காப்போன்
வித்தகன்மைந்தனான விக்னராசனும்வந்தானே (௨)

௨ தரு-இ-ம்-சங்கராபாணம்- ஆதிதாளம்

பல்லவி.

ராசரா[illegible] சபையில்வந்தானே

அநுபல்லவி.

பே[illegible]சன்பூ[illegible] ராசராசர்துதிக்குந்
தேஜோமயனுட ராசன்தவத்துதித்த-ராசராச

சரணங்கள்.

௧ இஷ்டமாமுனிவசிஷ்டர் விசுவாமித்திர
ரிருவருமிமையவர்க் கெதிரேசெய்தவிசிதா
அஷ்டஹஸ்தனைப்ரிந்த அரனார்புத்திரர்
அரிச்சந்திரராசனுக்கனுகூலமானமித்திரர் (ராச)
௨ கிம்புருகின்னரர் கீதங்கள்பாட
தும்புருநாரதர் துதித்துக்கொண்டாட
தம்புருவீணையிசை தடக்கையிலாட
அரம்பையூர்வசி சங்கராபரணம்பாட(ராச)

௩ நெற்றியிற்றூயவெண்ணீற்றி னொளிவிளங்க
கொத்துமுடியிற் சந்திரகாந்திமிகத்துலங்க
உற்றபுயத்திலுக * யக்ஞோபவீதமிலங்க
சித்திதரும்பதத்தில் பத்தர்பூசித்திலங்க(ராச)

வசனம்-இவ்விதமாயெழுந்தருளியவிநாயகமூர்த்தியை குருக்களையர்பூசைசெய்கிறவிதங்காண்க.

விருத்தம்,

சம்புவின்பதந்துதித்துச் சரயுவில்ஸ்நானஞ்செய்து
அம்புவியோர்கள்போற்று மடைவுளகுருக்களையர்
தும்பைசம்பரத்தைகொன்றைத் துளவமாவிலையுங்கொண்டு
தும்பிமாமுகவன்பாதந் துதித்துநற்பூசைசெய்தார்

௧ திபதை-இ-ம்-ஆனந்தபைரவி அடதாளம்,

கண்ணிகள்,

ஆதிதேவனானவிநாயகனே சிவசாம்பசிவ
ஐயனேயுமைப்பூசைசெய்குறேன்
பாதிமதியைப்பகைத்தாசனே சிவசாம்பசிவ
பண்புடனெனைக்காரும்பரமனே
உமையவள்தனக்குகந்தமைந்தனே சிவசாம்பசிவ
உளமகிழ்ந்துனைப் பூசைசெய்குறேன்
இமைப்பொ[illegible]மை இடைவிடாமலே சிவசாம்பசிவா
இகல்[illegible]த்தெமையாளுமீசனே
செல்வியல்லிமுல்லைமல்லிகைமலரால் ஓங்கணபதி
நேசமாயுமைப்பூசைசெய்குறேன்
வல்லபைதனையிடத்தில்வைத்தவா வரதவிக்நேசா
வாகுடனெனைக்காருவ[illegible]
எப்பிழையும்பொறுத்தாளுமீசனே சிவசாம்பசிவ
ஏழைக்கிரங்குமீசன்மைந்தனே
முப்பழமோதகமப்பமவல்பொரி[illegible]கணபதி
ஒப்புடனுமக்குத்தப்பாமல்காண்டருவேன்

வசனம் இவ்விதமாகப் பூசைசெய்கிறசமயத்தில் குருக்களும் அர்ச்சகரும் சடுத்தல்செய்வதுகாண்க

குருக்கள்சொல்லுகிற பூசைசுலோகம்

மூஷிகவாகன மோதகஹஸ்தா சாமரகர்ணவிளம்பிதசூத்ர வாமரூபமகேஸ்வரபுத்ர விக்னவிநாயகபாதநமஸ்தே

---

* யக்ஞோபவீதம்-பூணூல்

அர்ச்சகர்சொல்லுகிற பூசைசுலோகம்
தசாகாம்திவ்யசூர்ணம். சடகோபாதியோசினம்
தேசிகேக்ரம்தயாசிந்தும்வந்தேகம்சைசியகாயகம்

குருக்கள், ஏதுகாணும்இல்லாதவாடிக்கையெல்லாம் பண்ணுறீர் அர், எண்ணைக்குமில்லாதவாடிக்கை இப்போ என்னகாணு முண்டாச்சு,

குருக்கள், விக்கினேசுவாருக்குவைஷ்ணவாள் பூசைபண்ரது அகம்பிரமித்திபந்தானே

அர்ச்சகர், விஷ்வக்ஸேனருக்குசைவாகம பூசைபண்ரது ஆகாத்தியந்தானே

குருக்கள், வயிற்றுவலிக்கிடங்கொடுத்தாலும்வைஷ்ணவனுக்கிடங்கொடுக்கப்படாது

அர்ச்சகன், சைத்தோபத்திரவத்துக் கிடங்கொடுத்தாலும் ஸ்மார்த்தனுக்கிடங் கொடுக்கப்படாது

குருக்கள், தத்துபுத்திரனுய்வந்தவனேயில்லையோ அதான் தத்துபித்தென்னுஉளறிவழியிறான்

அர்ச்சகன், கடன்தண்டவந்த கண்டகாசுரனேயில்லையோ அதான் கடுகடுசிடுசிடென்றுகண்டகண்டவாக்கேகதர்ரான்

குருக்கள், ஏண்டாவுங்கள்பிதாமகாள் காணியாட்சியோ அர், அடே இலலாதபோனா லுங்கள் மாதாமகாள் பிதுரார்ச்சிதமோ

குருக்கள், போடாபோடாஜாதயாதிஷடஜடாமுனியே
அர், கிடாவு [illegible] கிடமதிப்ரதிஷ்டமனுஷாசுரா

குருக்கள், [illegible]ங்கலும் [illegible]பாலும் திங்கத்தான்தெரியும்பூசைபண்ணிப்பிட்டாய [illegible]செயதாவிதியீசுவரனுக்குத்தான் தெரியும்

அர்ச்சகன், சவுசபுஷ்கரணியிலேஸ்நானம்பண்ணி சவுண்டிசோட்சஞ்சாப்பிடத்தானுவாய்அர்ச்சனைபண்ணினுன் அர்ச்சனை பூசாவிதாணம்புருஷோத்தமனுக்குத்தான்தெரியும்

குருக்கள், இனிமேல்கோவிலுக்குள்ளேவந்தால் குடுமியை யறுத்து கோமயத்தைக்கரைச்சுத்தி முன்வாய்ப்பல்லை பிடுங்கிமோரையை மூளியாக்கிப்பிடுவேன்

அர்ச்சகன், சன்னிதிக்குள்ளேவந்தால் சாணியைக்கரைச்சுத்தி சண்டாள அபிஷேகம்பண்ணிமுழங்கால்சில்லைப்பேத்தும்பியைவாட்டி முனுவருஷம்முப்பத்தாறுமாசம் மூலையிலேபோட்டுவிடுவேன்,

(குக்ருகர்) ஏண்டா திருப்பட்சிபொங்கல் தெகட்டாமல்தின்னதியிரோ.
(அர்ச்சகன்) ஏண்டா திருவாக்களியில்லுண்டைபோலே திம்மாவிழுந்தெம்போ.
(குருக்கள்) போடாபோடா சாப்பாட்டுராமா
(அர்ச்சகன்) போடாபோடாதுபுரதிண்டி குண்டோதரா

பாதாசாரியன்சொல்லும்.வசனம்.

பட்டமார்களே நீங்களிருவருமிப்படி ஒருவருக்கொருவர் சடுத்தஞ்செய்துகொண்டிருக்கிறீர்களே தேவஸ்தானத்தார்கண்டால் அபராதம் போடுவார்கள் சீக்கிரமாய்ப் பூசைக்கு யத்தினப்படுங்கள் சுவாமிகளே,
(குருக்கள்) நான்தான் பூசைபண்ணுவேன்
(அர்ச்சகர்) நான்தான்பூசைபண்ணுவேன்
(குருக்கள்) ஏதுடா ஒண்டிவந்த பிடாரி ஊர்ப் பிடாரியைதுரத்தினதுபோலே யிருக்கிறது ஸ்வாரஸ்யந்தான்
(அர்ச்சகன்)ஏதடா மழைக்கொதுங்கி மனைக்கிவழக்கிடுவதுபோலேயிருக்கிறது பலே பலே சபாசு சபாசு

பாதாசாரியன்-வசனம்,

ஓய்சுவாமிகளே இப்படிநடக்கிறது பார்த்தபேருக்கு மரியாதை தப்பிப்போய்விடும் சுமுகமாய் நான்சொல்கிறபடி கேட்பீர்களா.

பட்டமார்-வசனம்,

ஆகா நல்லது நீசொல்றபடியே கேட்கிறோம்

பாதாசாரியும்-[illegible]

பட்டர்-ஸ-ம-சரிதான்

(பாதாசாரி) சுவாமிக்குப்பெயரென்ன நிசமாய்ச்சொல்லுங்கள்.
(பட்டர்) சுவாமிக்குப்பெயர் சிங்காரநாராயண தாமோதரகுருநாதபிள்ளையார்
(பாதாசாரி) ஆகாநல்லதையா இதுநீங்களிட்ட பேரா பெரியவாளிட்டதா
(பட்டமார்) இந்தப்பேர் எத்தனையுகமோ ஆயிருக்கும்,
(பாதாசாரி) நல்லதுதான் இரண்டுபேருமாசப் பூசைபண்ணிப்போட்டு சிக்கிரமாயலங்கிர்தஞ் செய்துகொண்டு தூபதீபநைவேத்தியாதிஷோடசஉபசாரங்கள் செய்துகொண்டு அவரவர்கள் ஆசிரமத்துக்கு எழுந்தருளுங்கள் ஸ்வாமிகளே

(பட்டமார்) அப்படியே ஆகட்டும்பிள்ளாய்
பட்டர்கள்செயிக்கிற-அர்ச்சனை

ஓம் சுமுகாயநமா
ஏகதந்தாயநமா
கபிலாயநமா
கஜகர்ணிகாயநமா
லம்போதராயநமா
விகடாயநமா
விக்நராஜாயநமா
கணாதிபாயநமா
ஓம் தூமகேதவேநமா
கணாத்யக்ஷாயநமா
பாலசந்திராயநமா
கஜாநநாயநமா
வக்ரதுண்டாயநமா
சூர்ப்பகர்ணாயநமா
ஏரம்பாயநமா
ஸ்கந்தபூர்வஜாயநமா

சித்திவிநாயகாயநமா நாநாவிதமந்த்ரபுஷ்பாணி சமர்ப்பயாமி

வசனம், இந்தப்பிரகாரமாய் விக்கிநேசுவரர் பூஜாவிதிகளைப்பண்ணிக்கொண்டு அவரவர்கள் ஆச்ரமஞ்சேர்ந்தபின்பு அரிச்சந்திரமகாராசாவினது துவாரபாலகனான கட்டியக்காரன்வருகிற விதங்காண்க;

விருத்தம்,

கொட்டியமுரசசின்னங் கொண்டுதான்முழங்கயோத்தி
மட்டிலாப்புகழ்படைத்த வாழரிச்சந்திரன்வாசல்
கட்டளையானதிரணடைவழிசெலுத்திவைக்கும்
கட்டியக்காரன்வந்துகளிப்புடன்றோன்றினானே

௪-தரு-இ-ம்-சுருட்டிதாளம்-ஆதி

-பல்லவி,

௧ கட்டியக்காரனும்வந்தானே-ஒய்யாரமாகக்
கட்டியக்காரனும்வந்தானே

அநுபல்லவி.

கட்டியக்காரனும்வந்தான் கைகளில்விருதுகட்டி
சட்டமாயயோத்தியர்கோன் சத்தியஅரிச்சந்திரன்வாசல்(கட்)

சரணங்கள்.

௧ பாதச்சிலம்பொலி பன்ன-இடையினில்வெண்
பட்டுச்சேலைகட்டு மின்ன
சோதிமார்பிற்பதக்கம்மல்சொக்காய்ப்பச்சென்றுமின்னக்
கோதில்லாமுடிமீது குண்டுமுண்டாசுதுன்ன(கட்)
௨, பிண்டிபாலமும் எடுத்து-மருங்கினிலே
பின்னர்க்கச்சையு முடுத்து
வெண்டயம்பொற்காலுசு தண்டைச்சிலம்புடுத்து
பண்வில்லம்புதொடுத்து பசப்புமொழியடித்து(கட்)

௩. சிறக்கப்புகழ்ந்து பேசியே-நித்தியதானங்கள்
செய்யுங்கைகளை வீசியே
துறக்கத்தவரைக்கூப்பித் தொழுதுநின்றவாசியே
உறக்கத்திலுமறவா உளவுக்கள்ளனாயேசியே(கட்டி)

௪, மந்திரிப்ரதானிமார் கூடிதினமும்போற்றி
மகிழ்ந்திடுஞ்சமுகத்தைத் தேடி.
சுந்தரந்தனைக்கொண்டாடிச் சுருட்டிராகம்பாடி
வந்தனஞ்செய்திடுமரிச் சந்த்ரன்சபையைநாடி(கட்டி)

கட்டியக்காரனுக்கும்-பாதாசாரியனுக்கும்-தர்க்கவசனம்

(கட்டியக்காரன்)ஸந்துலஸத்து அரோமியாஅஜாத் நீங்கள்யார்வோய்நம்முடைய அரிச்சந்திரமகாராஜனுடைய அரண்மனைவாசலிலே ஆட்டமென்ன பாட்டமென்ன நாட்டமென்ன கூட்டமென்ன கடபிடாவென்ன லோடபிடாவென்ன எவ்வளவாவது பயமச்சமில்லாமல்மாரிகாலத்திலே மதிச்சுப்போன தவளைகளைப்போலே தலைதெறிக்கக் கத்துரீங்கோ அச்சாருப்பரகோ நீங்கள்யார்வோய்

(பாதாசாரியன்) நாங்களெல்லோம் உம்முடையபுத்திரசிகாமணியினுடைய விவாகமுகூர்த்தத்துக்குவந்த வித்துவாம்ஸாள்வோய்.

(கட்டி) நீங்கள் யெத்தனைபேர் வந்தீங்கோவோய்

(பாத) இந்தசபையிலே வந்திருக்கிறவர்க ளெல்லாரும்எங்களைச்சேர்ந்தபேர்கள்தான் வோய்

(கட்டி) அடாயப்பா இத்தனைபேருக்குமெங்கேஇருந்து சர்பராபண்ணுவீங்கோ அரேவோய் நீங்கள்வருகிறவழிகளிலே காடுசெடிகல்லுகறடு-பள்ளம்-படுகுழி-கரடி-புலி பாம்பு-தேள் இதுகளிலே ஒன்றுமில்லையா

(பாத) ஏண்டா அப்பா இவ்வளவு கடுமையாகக் கேட்கிறாய்

(கட்டி) உங்களத்தனைபேருக்கும் வைகுந்தத்துக்குப்வழிகாட்டத்தான்வோய்

(பாத) எங்களையேண்டாப்பா அப்படிசொல்லுகிறாய்

(கட்டி) இல்லாவிட்டால் ஒங்களப்பன்பிள்ளைசேர்த்துவட்டிக்கிப்போட்டிருக்கிறிங்களோ

(பாத) அரண்மனை சொத்தெல்லாம் உங்கள்பாட்டி கொட்டைநூற்றதோ

(கட்டி.) அடவோய் நீங்கள்வருகிற வழியிலே ஆறுகுளங்களுண்டா

(பாத) முடிகொண்டான் குடமுருட்டி திருமலைராசன்-அரசலாறு-காவேரி-கொள்ளடம் இதுகள்தானிருக்குது

கட்டி; இந்த ஆறுகளிலே தண்ணி யெவ்வளவிருக்குதும்பிரா
பாத, இடுப்பளவு மார் அளவு கழுத்தளவு வாயளவுமிருக்கும்
கட்டி, இன்னம்நாலுவிரற்கடைதண்ணிபெருசமாப்போச்சா
பாத, ஏன் அப்பா இவ்வளவுபிரதாபப்படுகிறாய்

கட்டி, உங்களை யப்படித்தானே அடித்துக்கொண்டு போகாமல் போச்சேயென்கிற துக்கந்தான் சாப்

பாத, நாங்கள் வேண்டுமானால் சொல்லாமற் புறப்பட்டு ஓடிப் போய்விடுகிறோம் நீயேன் இவ்வளவுமனஞ்சலிக்கிறாய்

கட்டி, ஞ்சகாலத்திலே ஒருத்தர்வீட்டுக்கு ஒருத்தர்வந்தால்பரிதாபமாயிருக்காதா ஒருத்தரா இரண்டுபேரா நாங்குபேர்க்கு
இந்தப்பக்கத்திலே இருக்கிறவுங்களெல்லாம் யார்வோய
பாத, அவர்களும் வித்வாம்சான்தானையா

கட்டி, ஆஹாஹா வித்துவான்களைமச்சங்களா எத்தினைதரம் வாடாகும்வோய்

பாத, என்னவோய்சாத்திரம் பொய்யானாலும் சதிராய்பார்த்து நீயார்குடிமக்களிலே கண்ணியோரத்து லப்பைக்கூட்டமோ

கட்டி, அடே பாபு மாகுலமுமீசையுங்காவலசி உண்டாகி மீள வருவோய்

பாத, மேமுபாகவதுலமண்டி.

கட்டி, ஆ-ஆ-ஆ-ஆ-ருபாயிக்கு எத்தினிபடிவிக்கிறீங்கோ யாதரியெங்கேகாட்டுவேயபப்பேம்.

பாத, தனமதுக்கொண்டதயா பிள்ளைக்னவோய் வாகசம்பவங்களைபுறப்பட்டுப் பார்த்த முதலெல்லாம் வைத்து முடியாதுதோ என்னவோய் பாகத்திராவத்திலே கேட்கிறாய்

கட்டி. அரே நாந்தேரீ மாவிலேபெல்லாம் சனவர்வேபீச்அரோபானைதோதும்பாபோலே

பாத, நாங்கள் அரியஞ்னபன்றும விஷ்ணுபக்தாள்வோய்
கட்டி, அரிப்பத்தாகேயானாலும் ஆக்கிறலஞருசய்டியெப்படிகாணும்வோய்

பாத, என்னவோய் உங்கள்வீட்டிலே பொங்கலுக்குபொங்கல்அடுப்பூதறதும் நீபாவனிதண்ணீர் மொர்க்கிறதுதான் வழக்கமோ என்னத்தைவோய் அரியப்பத்தா ஆக்கப்பத்தாதென்கிறாய்

கட்டி, அரிப்பசனைக்கிறைதான் வோய் அரிப்பசனைக்கிறைதான்

பரத; அங்கேபலநுஷத்திலேயல்லவோ அஞ்சரிசிப்பஞ்சம்இப்வோவென்னுவோய் மக்கு அரிக்கிறைப்பஞ்சம்வந்தது
கட்டி, பின்னை நீசொன்னதென்னவோய்
பாத, என்னவோய் தட்டுகெட்டமுட்டுப்பார்த்தா உமக்குகாதிலே கல்லும்முள்ளும் அடைத்திருக்குதோ நாங்கள பரதநாட்டியஞ்செய்கிறபாடகாள்வோய்

கட்டி ஆ ஆ ஆ ஆ அரேமியா பௌத்தச்சா அய்தைசுனைபலே பலே சபாஸ்சபாஸ் உங்களுக்கு பாரம்பரியமாய் இதுதானுபிழைப்பு
பாத, ஆம் எங்கள் குடும்பங்கோணியர்கள் முதலாக இதுதான் பிழைப்பு.

கட்டி, எப்தாம்மேதும் குடியானபிறானா ஒருத்திக்குபாடுகோதனம்.பண்ணிறாய் உங்கள்கி என்னுவோய் தாருகொடுப்பாங்கோ.
பாத, என்னடா கட்டுகெட்டபயல் தாறுமாருமாய்ப்,பேசுகிறான் அடவோய் நாங்கள்சங்கீதசாஸ்திரம்நிச்சு பரதநாட்டியங்கற்றவித்துவாம்சர்கள்ஓய்

கட்டி, இவ்வளவுசொம்பகாரியத்துக்கு வாயிலேவந்ததெல்லாம் உளருவானேன்நாங்கள் அரிச்சந்திரமகாராஜாவினிடத்திலே ஆடிப்பாடிப்பாகம்வாங்கிக்கொண்டு போகவந்தோமென்று சொல்லுகிறதுதானே இப்போதான்கற்றுமோழையென்பதுகண்ணுக்குக்கண்ணாடிவைத்ததுபோலிருக்கிறது நல்லது உங்களுக்குத்தெரிந்த வித்வத்தென்னவோய் நம்முடைய அரண்மனையிலே யிருக்கிறவித்துதாம்சானைப்போலயாயிவீர்களா என்னென்னராகம் தெரியும் ஓய்

பாத, ராட்டைகவரோசு-ஜுஜாவந்தி-செஞ்சுருட்டி-குருஞ்சி-நாதநாமக்கிரியை-அசாவேரி-பளவும்-சங்கராபரணம்-இப்படி இன்னம் அநேகவிதராகங்களும் பாடுவோம்

கட்டி, அரேமியா ஓசைப்பருப்புக்கேற நம்பள்து இப்படியிருக்காதுவோய் ராயபகம்மத்தா இருக்கும்வோய்.
பாத, ஆனால்உங்களுக்குத்தெரிந்த இராகதாளங்களிலேகேட்டாலுப்பாடுகிறோம்

கட்டி, ஆ ஆ ஆ ஆ பல்யஜாத் உவாயல்குவிமே சக்தாரும் அவொதுயாசுகோ சக்கடைராகட்-காபிராகம்-தோடிராகம். குண்டுசட்டிராகம் இதுகளெல்லாம்பாடும் ஒப்பார்ப்போம்

பாத, இதுகளெல்லாம் எங்கேபோய்பாடம் பண்ணினீர்

கட்டி; அரோவாய் அவுங்கபேர் மகா அருமையான பேவாய்ரே அந்த மகாவித்தவானுடையபேர் அங்கயினை அல்பசனை மூகாந்தகவக்ரதத்தருஷ்ட ரோக்பாகவதர்ஓய்

பாத· சபாசு உம்முடைய வித்வத்துக்கு காரதிகளும் ஈடல்ல மகாராஜாவினுடைய சமுகத்துக்கு எங்களை அழைத்துக்கொண்டுபோய் பேட்டிபண்ணிவையும் கட்டியக்காரரே

கட்டி, அப்படியே அழைத்துக்கொண்டுபோய் மகாராஜாவினிடத்தில் த்யாகம்வாங்கி கொடுத்தனுப்புகிறேன இங்கேதானே யிருங்கள் கொலுச்சபைக்குப் போய்வருகிறேன்

அரிச்சந்திரமகாராஜன்-அரசாட்சிசெய்தல்-விருத்தம்

மகாராசன்கதிர்குலத்தி லுதித்தயோத்தி
மகாராசன்திரிசங்கு மகாராசன்பெற்ற
மகாராசன்சத்ய அரிச்சந்திரனென்னும்
மகாராஜனரசியற்றி மகிழ்கின்றனே

அ-தரு-இ-ம-சாவேரி-ஆதிதாளம்,

பல்லவி,

ராஜராஜமகாராஜன் அரிச்சந்திர ராஜன்செங்கோலாண்டானே

அனுபல்லவி,

நேசமாயன்பத்தாற தேசத்துள்ளராஜரும்
நிறைந்துகப்பங்கட்ட நெடியமுடிபூண்டானே (ராஜ)

சரணங்கள்,

௧, வேதநாலுமாறு நூற்களுங்கற்றுணர்ந்த
வேதியர்மறையோதி மகிழவே
விளங்கும்க்ஷத்திரியர்கள்கலக்கமில்லாமறு
விதிகளையராய்ந்து புகழவே
கோதிலாதவைசியர்வாணிபமதிற்
கொள்கைதவறாமல் திகழவே
குடியானவர்கள்வேளாண்மைத்தொழில்களில்
குறைவிலாமலே திகழவே(மகா)

௨, கற்புமிகுந்தபெண்கள்கணவனுயுட்குன்றாமல்
காலமறிந்துகொண்டு நோற்கவும்
கழல்தொழுவோர்க்குதேவர்வேண்டும் வரம்கொடுத்து
கலுஷம்போகநியெவையுங் காக்கவும்
சற்பனையாலெவருஞ் சிந்தைநொந்துருகாமல்
சதாகாலமுங்கிருபை பார்க்கவும்
தற்பரனருள்படைத்தொப்புயவடைந்தோர்கள்
தன்னூர்திருவுளத்துக் கோர்க்கவும்(மகா)

௩, கருக்கடல்போலவேதனையெங்கணுங்கசிந்து
கசிந்துனல்மிகப் பெருகவே
காலகாலத்திற்பயிர்கள்தழைத்திட
கருதமுப்போக ஞருகவே
நெருங்கவிளைந்திடுவதியும்நாட்டில்
நிறைந்துமிகமிக வருகவே
நீர்வளமுநிலவளமுங்குறைவிலா
நெற்வளமெவர்க்கும் தருகவே

ஸரயுநதியின்மகிமை-வஞ்சிவிருத்தம்

பரவியநாட்டில்விரவினிற்பாய்ந்த
சரயுவினியல்பைக்கரவிலாதுரைப்போம்

கூ-தரு-இராகம்-ஆனந்தபைரவி-தாளம்ஆதி

பல்லவி,

புவியில்மிகமகிமை பெற்றநதியில்நல்ல புண்யநதி ஸரயுவாம்

அநுபல்லவி,

இரவிகுலத்தரசர்கள் அரசாட்சிசெய்துவரும்
ராச்யத்திலயோத்தியாபு ரத்தினிற்பரவிய புவியில்)

சரணங்கள்

௧, விசும்பிற்குலதரன்போல் வெளுத்துபரவிமேகம்
விரிவாங்கடலாற்சென்று விரும்பியமுதருந்தி
விமலன்விண்டுவைப்போல மேனியெல்லாங்கறுத்து
விரைவிற்றிரும்பிச்சூர்யன் வெதும்பாவிமயமன்னன்
பசும்பொன்னிகர்மெய்யனைந்து பூரதயித்தாரென்றெண்ணி
பஞ்சதீர்த்தாபிஷேகம் பண்ணிவைப்பதுபோலப்
பருவதத்திற்பொழிந்த மழையின்புனற்றிரண்டு
பகரும்த்யாகிகள்போல பாரிலருவியாய்ந்து
விசும்பிசாயுதனில் வேகமாகவேபாய்ந்து
விளங்குமிகவரையும் வெடிக்கவிரைந்தோடியில்
விண்ணுமண்ணுள்ளோர்களும் விபரீதமேதென்றெண்ண
வெற்றிமிகுந்தரசன் விளங்குங்கௌசலமென்ன
துசம்பார்மலையின்மீது துலங்குபொருட்களெல்லாம்
துறட்டினையழித்துத் தொல்படியிற்புரட்டித்
தோதகமாமேம்விலை மாதாண்டையையொத்து
தூயபூவிற்பாவித் தொல்லுலகோனைக்காக்குஞ்
சோதியே தவசிகள்செய்யும்
நீதியே மகன்கள்விளக்கும்-அ
நாதியே நிஷ்டானுபூதியை (புவியில்)

௨. நீலம்வைரம்வைடூரியம் நித்திலஞ்சோமேதகஞ்செங்
சோலக்கிளர்துகிர்ச் கேழ்மணிப்பத்மராகம்
சிறிமிகுபுட்பராகம் பச்ச[illegible]க்கமுதல்
நிறைந்திலங்கிடுஞ்சவ [illegible]விதமனேகம்
சாலகீர்த்திறந்துசருவும் [illegible]லசெந்துக்கள்
சன்னைசெய்புழுபிர்கள் சாட்டைவரியின்திருக்கை
சுறிதியிற்கொட்டுந்தேளி மு[illegible]வலாயுழுவை
சாரைசர்ப்பமுதலை சரிந்துவருமனேகம்
தாலம்ஏலம்லவங்கம் தக்கோலம்தேவதாரம்
தாதகிலசமாகி தாணிகர்ச்சூர்க்கோஷ்டம்
தவளமல்லிகைமுல்லை தாமரைமலர்செருன்னைத்
தருவுக்கொடியும்அந்தத் தறும்பில்வருமனேகம்
ஞாலமீதினிற்றந்தி யாளிபுலிகாடி
நரிகேசரிசாகம் ஞமலிவோநாய்கலைமான்
ஞானமிகுமன்னப்புள் ஞலவனுடன்மண்டூகம்
ஞாபகமிகுகுயில் ஞாட்புக்களுமனேகம்

நாட்டமே சனையோரத்தினைகள்
கூட்டமே தேடும்யோகியர்களின்
தேட்டமே அட்டபாட்டமே!

௩, அத்திருநதிக்கரை மருகேயன்னகர்மாதர்
ஆனந்தஜலக்கிரீடை ஆகமகிழ்ந்தாடுவார்
ஆத்மஞானிகள்கூடி அருணோதயத்தின்முன்னே
ஆதித்தனைப்புகழ அன்புடனேகூடுவார்
முத்திருவழியிலும் முப்பொருளுணர்ந்தோர்கள்
முன்னவர்கள்கடமை முடிக்கவந்தாடுவார்
மூவேழுகலைமுறை மூப்பர்கள்கதிசேரும்
மூத்துவழியைநாடி மூனந்தசாயம்பாடுவார்
ஒண்சிருர்தாசர்மக்கள் பத்திமத்தியதாக
ஓதும்வேதாகமங்கள் ஓசைவிதிகள்தேடுவார்
ஒப்புகழ்வேதியர் யாவருமன்புடனே
ஒப்புமைவாசியாதிவி லோக்கமதிருடுவார்
இத்திருநகர்க்கிணை இலகும்வைகுந்தமென்ன
இமையோருளமகிழ்ந்து இபற்சையாய்க்கூத்தாடுவார்
இவ்விதமாமிராயு மகிமைபெறுத்துரைக்க
என்னுலாகுமோபுகழ் சேஷனொருவர்க்கல்லால்

ராசனே அயோத்திநகர்
வாசனே கவிவாணர்கள்
நேசனே சத்யவிலாசனே

அயோத்தியா புரவர்ணனை பூரணவிருத்தம்
மகாதோரணவாயிலும்மாஞ்சிலும்
கோமர்ந்தியுஞ்செறிப்போகமு
சகாரிவர்ணபுகழ்சாற்றுமயோத்திமா
நகரமேன்மைமிகுதிருநாடாத்துவாம்

எ-ரு-ஜு-ர-அடாணா-ஆதிதாளம்

பல்லவி,

மருத்துவந்தனிலமிருத்தமாதவத்தோர்புகழும்
மாநகரிதுதானே-அயோத்தி மாநகரிதுதானே-கனவானே

அநுபல்லவி

மிருத்தபெருஞ்செல்வமும்-மேலாமேன்மைபடைத்த
தொகுத்தபுராணமைந்த அலங்குநாற்கவெவற்றும் (மரு)

சரணங்கள்

௧, வேதவாக்கிய வோசையும் வேதியரோதி
விளங்குங்கலை யோசையும்
யோதஞ்செய்திடு-மோசையும் பெரியோரோதும்
புனிதமந்திர வோசையும்
சிறுமழலை வோசையும் கிள்ளைகள்கூடி
விளக்கம்பாடலினோசையும்
நாதகீதநா மோசையும் நங்கையர்கூடி
நடித்திடும் பதவோசையும்
கீதநேதி யோசையும்-திறைமங்களவோசையும் ,
கதிற்கேட்டிடும்நித்ய கல்யாணவோசையும் (மரு)
௨, பூமச்சாலைகள் காணுமேசோமயாகஞ்செய்
அன்னஞ்சாலைகள் தோணுமே
தொமச்சாலைகள் காணுமே விர்த்தவர்களின்
வெங்கச்சாலைகள் தோணுமே
தேறமச்சாலைகள் தோணுமே பலகலைதேர்
இசைக்குஞ்சாலைகள்-தோணுமே
காமச்சாலைகள் காணுமே கணக்கிலக்கணை
காட்சிசாலைகள் தோணுமே
கோமகன்குணங்களைக் கொண்டாடிக்குயிற்கூவும்
சோமதீதிநெறியே தின்றுடைமயில்தாவும் (மரு)
௩, அத்திரு நகரத்திலே அதியுன்னத
மாநவரேந முத்திலே

சித்திரப் பதுமைபோலே அமைத்திட்ட
அத்தமண்டப மீதிலே
நித்யதான தர்மத்திலே மிகுத்தமனு
வுற்றநீதி நெறியிலே
சத்ய நிதானத்திலே நிறைந்ததவ
ரொத்தசிம் மாதனத்திலே
சித்திரமணித்தசிவன் முத்திருலணைந்தசெம்பொற்
சத்திரநிழற்றரிச் சந்திரமன்னனிருந்த (மகு

அரசாட்சிகாண்டம்-முற்றிற்று

ஆக விருத்தம்-௭-தரு-௭.

இரண்டாவது,

விவாககாண்டம்,

தபோநிதிகள்வருகிறவிருத்தம்.

பொருந்துநன்னெறிதப்பாதபூபனுமரிச்சந்திரன்றன்
திருந்தியசெங்கோலேந்தித் திறமுடனாளும்நாளில்
அருந்தவத்தோர்கள்போற்றும் அமரர்கட்கொப்பதான
கருந்தவத்தவரநேக ரயோத்திமாநகரடைந்தார்

௧-தரு-இ-ம்-பத்தியமாவதி-ஆதிதாளம்

பல்லவி

யோகிகள்வந்தார் தவமிகுத்த யோகிகள்வந்தார்

அநுபல்லவி

போகிமுதலோர்கூறும் புண்ணியநெறியினிரு
வாகிகளானபெரு வாழ்விற்சிறந்தஞான (யோ)

சரணங்கள்

௧, முப்புரிநூன் மார்பர்சிலர் தப்பிலாவாசகர்சிலர்
செப்பருந்தவத்தோர்சிலர் ஒப்பிலாக்குழையர்சிலர் (யோகி)
௨, வேதமோதுவோர்சிலர் கீதம்பாடுவோர்சிலர்
நாதமுணர்ந்தோர்சிலர் பாதம்பணிந்தோர்சிலர்(யோகி)
௩, விடுத்தசிகையர்சிலர் தொடுத்தசடையர்சிலர்
உடுத்தவுரியர்சிலர் எடுத்தகோலினர்சிலர்(யோகி)

குசலப்பிரச்னை பொதுவிருத்தம்

வந்தமாதவத்தோர்தம்மை வாழரிச்சந்திரநோக்கி
சிந்தைமிக்களிப்படைந்து சேனையுடெதிர்கொண்டேகி

அந்தமாமுனிவர்பாதத் தணிமுடிமலராத்தூவி
விந்தையாய்த்துதித்துப்போற்றி விசமுற்றுரைசெய்வானே

வசனம்,

அகோசேனும்தர்மபுத்திராதிகளேஇந்தப்பிரகாரமாய்வந்தயோகிளவர்களைப்பார்த்து அவர்கள்வருகையையறிந்து எதிர்கொண்டழைத்துவந்து ஆசனமளித்து அர்க்யபாத்யாசமனாதிஷோடச, உபசாரங்களைப்பண்ணிக் குசலபிரச்னை பண்ணுகிறவிதங்காண்க,

௨-தரு-இ-ம்-சாவேரி ஆதிதாளம்

பல்லவி

(விரு) வந்தகாரியஞ் சொல்வீராயா-மாதவர்களே வந்தகாரியஞ்

அநுபல்லவி

எந்தப்பந்தமகல முந்தநாளில்வெகு
தொந்தம்போலவுங்கள் சிந்தைமகிழ்ந்திவடம் (வந்த)

சரணங்கள்

௧, அறியாசனத்திருக்க ஐயா உங்கட்குரிய
மரியாதைசெய்யவல்லே ஐயா
சரியாசனத்திருக்க ஐயா முனிவர்களே
பரியாசப்பண்ணவேண்டாமையா
பெரியோரையானறியே ஐயா எந்தனையென்றும்
பிரியாவரந்தாருங்க ஐயா
கருதிமுறையறிந்த யோகிமுனிவர்களே
சுருதியிந்நகர்தனைக் கண்டுகளித்திவடம் (வந்த)

இராசன் வசனம்.

சுவாமிமகத்துக்களேஎந்தனது பிறவித்துன்பமகல அனேகநாளையதிலேகிநர்கள்போலேசந்தோஷமாய் இவிடத்துக்கு வந்தகாரியமென்ன நீங்களெல்லாரும் இந்தரேத்தியான நவரத்தினகசிதமான சிம்மாசனத்தில் மீதெழுந்தருளுங்கள் உங்களுக்குரியமரியாதை செய்யும்படியான முறையறிந்தவனல்ல பரியாசம்பண்ணாதையுங்கள் உங்களைப்போலுள்ள மகத்துவமாக்கினை என்னுமறிந்தவனல்ல என்னைஎன்றும் இணைபிரியாதிருக்கவும் சுருதிஸ்மிருதிகளினியல்பறிந்த யோகீஸ்வரர்களே மனவம்போடு இந்த அயோத்தியாபுரிக்கு வந்தகாரியமென்ன திருவருள்புரிய வேண்டும் முனிவர்களே,

விடை,

மன்னுவுன்மகிமையைவினவியேவந்தோம்-சத்தியரிச்சந்திர - மன்
உன்னிதமாய்வளரு மிந்நெடும்புவிதனில்
உன்னைப்போலரசர்கள் பின்னையொருவருண்டோ (மன்)

தேசதேசமாய்சுத்திவந்தோம்   உந்தனுடைய
நேசவிசுவாசமறிந்தோம்
ஆசையெனுங்கடலிலாழ்ந்தோம்   மனமகிழ்ந்துன்
வாசநகரயோத்திவந்தோம்
மாசமும்மாரிக்கன்புகூர்ந்தோம்   மனமதனில்
மாசிலாமணியென்றனைத்தேர்ந்தோம்
கூசிடாச்சிலவார்த்தை   பேசவெண்ணியேவிசு
வாசமுடனேவந்தோம்   தாசனுதாசனுனை (மன்)

முனிவர்வசனம்;

அரிச்சந்திரமகாராசனே உன்னுடையப்ரபாவங்களைக் கேள்வியுற்று உனக்கிணைஇந்த அன்பத்தாறுதேசத்திலும்இராசாக்களில்லையென்றுமதித்துவந்தோம் உனக்கிணையான ராசாக்களாரிருக்கிறார்கள் ஒவ்வொருதேசமாய்சுற்றிவந்தோம் உன்மீதிலுற்ற ஆசைவலையிலகப்பட்டு நிவாசமாயிருக்கிற அயோத்திக்குவந்தோம் மாதமும்மாரிதவறாமற் பெய்யும்படிக் கருள்தந்தோம் களங்காகிதனென்பதையுமறிந்துணர்ந்தோம் உனதுவம்சாபிவிருத்தியாகும்படியான சில க்ஷேமசமாசாரங்களைக்குறித்துசம்பாஷிக்கவேண்டி மகாவிசுவாசத்துடனே இவடத்துக்குவந்தோம் தாசானுதாசனே.

௫, எந்தெந்தத்தேசங்கள் கண்டீர்கள் கண்டுமகிழ்ந்து
எந்தெந்தத்திசைதனிற்சென்றீர்கள்
எந்தெந்தத்தீர்த்த   மாடினீர்கள்-அடியனீங்கள்
எந்தத்தலங்கள்   சேவித்தீர்கள்
எந்தெந்தமகிமையைக்   கேட்டீர்கள்கேட்டறிந்தோர்கள்
எந்தெந்தமருத்துவ   மறிந்தீர்கள்
வித்தையாவையு   மாதியந்தமாயுரைத்தால்
எந்தன்றுன்பமகன்று   சந்ததமுமிருப்பேன் (வந்)

இராசன்சொல்-வசனம்

எந்தெந்ததேசம் போய்வந்தீர்கள் அங்கங்கே என்னென்ன அதிசயங்கள் கண்டீர்கள் எந்தந்ததீர்த்தமாடினீர்கள் எந்தெந்த ஸ்தலங்கள்சேவித்தீர்கள் எந்தந்தமகிமையைக் கேட்டீர்கள் எந்தெந்தமருத்துவமுணர்ந்தீர்கள் அந்தந்தஅதிசயமான விசித்திரங்களைகிருபைசெய்து புகலுங்கள் ஜென்மாந்திரங்களில் பண்ணின பாபவிமோசனனாய்க்ஷேமத்தையடையுவேன் மகத்துக்களே,

௬, அதிநாகரீகமாங் கன்னோசி   எனுந்தன்னாட்டிற்
கதியளிக்கும்புண்யகண்டகி
நதியெனுமதிற் தீர்த்தமாடி   நன்மையதாய்ப்
பதியாளும்மதியனைநாடி

விதியாகச்செய்தபூசை கொண்டோம் அவன்பெண்சந்திர
மதியாளும்மனையாளாக   வெண்கொண்டோம்
அதிபெருமன்று   அவளிருபயிருபுத்தி
மதிகளோவர்ணித்திட   விதித்தவனாலுமாமோ (மன்)

முனிவர்சொல்-வசனம்

அகோகேளும் அரிச்சந்திரமகாராசனே நாங்களித்தபூமண்டலமெங்கும்யாத்திரைபண்ணிவந்தோம் அப்படிவரும்போது மிகுந்தநாகரீகமாயிருக்கிற கன்னோசிராச்யத்திலிருக்கிற கண்டகிநதியில்ஸ்தானம்பண்ணி அந்தராஜாதிபதியான சந்திரதயமகாராஜனண்டைக்கிப்போயிருக்கையில் அவர்செய்தவேதவிதியான பூஜையாவையுமடையும்போது அவருடையமகளான சந்திரமதியினதுரூபலாவண்யசவுந்தரியாதிவைபவங்களையாராய்ந்துணர்ந்து உனக்குஅக்கன்னிகையைபாணிக்கிரகணம் பண்ணிவைக்க வெண்ணங்கொண்டு உன்சமூகத்துக்குவந்தோம் அந்தமகாபதிவிருதையைவரிக்கவேண்டுமானால் அவளைப்படைத்தபிரம்மாவுக்காகிலும் அருமையாகும்மகாராசனே.

விருத்தம்,

மிகுத்தவருந்தவத்தவரித்தன்மைகூற
மெய்த்தவன் ஆதவன்குலத்தோனும்மிகமகிழ்ந்து
தொகுத்துரைத்தஉங்கள் மனத்தோற்றம்போலே
துடங்குகருமங்களெல்லாந்துரிதிற்கூடும்
பகுத்தறியாவடியேற்கப்பாவைக்குற்ற
பற்பலநற்குணவொழுக்கவடிவமெல்லாம்
வகுத்துரைக்கவிரும்பியடிதொழுதேனென்று
வணங்கினான் அவர்கள்மருங்கிணங்கினானே (௫)

வசனம்

இவ்விதமாய்ப்புகழ்ந்துகொண்டாடிய யோகீசுவரர்களைப் பாதபூசைபண்ணி உபசரித்து மதிதயமகாராசன்மகளுடையவைபவங்களை அரிச்சந்திரமகாராசன் விவரமாய்க்கேட்பதுகாண்க,

௫-தரு-இ-ம்-கேதாரகவுளை-ஆதிதாளம்

பல்லவி

அருள்வாக்கிய மீதுங்களன்பே   எனதுபாக்கியம்
ஐயாமிகவும்   ச்சிலாக்கியம்

அநுபல்லவி

திருவாக்குக்கெதிர்வாக்கு   தேடிச்சொல்வாருண்டோ
தெளிந்தமுனிவர்களே   தெரிசனந்தந்தீர்களே (அருள்)

சரணங்கள்

க, அந்தநாளிலெங்கள்முன்னோர் முயன்றுசெய்த
அருந்தவமிது தானே
ஆம்பிள்ளைபெண்வடிவா யவனியிலேயீன்ற
தறிந்தோரும்நீங்கள் தானே
இந்தநாளிலுங்க ளெழிலுயர்வசனத்தால்
எவர்க்குமதிபன் தானே
எட்டுமிரண்டுமறியா ஏழைமதியேனெனை
ஏற்றிப்புகழ்ந்திடோநானெக்குலமபுத்திர்ந்தேனே (அரு

உ, இந்தவொளிமுகமும் செங்கமலபாதமும்
தேவரினங்கள் போலே
திருமுஞ்சடைமுடியும் தெளிநீர்க்காவியுடையும்
தெரிசித்தேனொருக் காலே
எங்கள்மூவேழுதலை முறையிருக்குமொழிந்தேன்
இனியுங்களரு ளாலே
ஏர்வையானதுணைக்கி விப்போமணக்கொண்டுவேன்
இகபரத்துள்ளார்க்கொப்பர் தென்னிலதைத்தன்றுவேன் (

௩. கன்னியின்நல்லுருவும் குணமுஞ்சவுந்தரியமும்
காணமனது கோறுதே
கருதும்நற்கற்பும்பொற்புங் காக்குந்தர்மசிந்தையின்
கருத்தறியவுட் சோறுதே
உன்னியசுருமங்கட் கொப்பவுரைப்பாளோவென்
றுள்ளமிக வயறுதே
உங்களாலேயிதெல்லா மதித்தாலென்மனமுய்வேன்
உபசரிக்கவறியேனுள்ளம்பாய்த் தொண்டுசெய்வேன் (அ)

விருத்தம்

உத்தமநீறுணைத்திடலும் நற்றவத்தோர்
உமைபாகன்வரம்படைத்தமதிதயேந்திரன்
பெத்தமைக்குத்தவிசேடங்கள்யாவும்
பேதமகன்றிடக்கேளாய்ப்பெம்மானேயென்
றுத்தமத்திலமச்சர்முதலோர்கொண்டாட
அகமகிழ்ந்தேயாதியந்தமாயுரைக்க
சித்தமகிழ்களிப்புற்று வெருமோர்பால்
சேர்ந்திட்டார்வள்ளலன் முன்தேர்ந்திட்டாரே (௩)

௬ தரு-இ-ம்-நாதநாமக்கிரியைதிரிபுடைதாளம்,

பல்லவி

அவனிதனிற்சந்திரமதிக்கிணை ஆரிவையாரடா அறிந்துளோரடா

அநுபல்லவி

தவமிகுத்திற்றுரோபதை தானிவட்கீடோ
தாராமாதக்கலிகை தமக்கெனிற்சோடோ
கவலமாயிவளைவ திரித்தனுகேன்று
கல்யாணபுருஷனு இருந்தாசானு (அவனி)

சரணங்கள்

க, செந்திருமகளோ புலோமிசைப்பெண்ணோவெனத்
தோணும் இவர்கட்கிணை
செப்பவெனிலிப்புவியி லொப்புவோரில்லாமல் மனம்நாணும்
சுந்தரவனங்கள்வேத மந்திரமேகதியுணர்ந்த
ரதியோ அவளைச்சொன்றால்
சொர்க்கத்திலில்வாழுந் தேவர்வர்க்கத்தோரிலிவற்குநற் கதியோ
கந்திருவமாதர்களு மிவள்கற்புக்கிணையோ
கதிதரும்பீசன்பாதம் பெறவொருதுணையோ
சித்தித்துப்பாரிலமுந்தன் மதிதனக்கிசைந்த
சித்திரவிசித்திரங்கள் எத்தனைகோடியுண்டிந்த (அவ)

உ; கார்முகிலெழுமிவள் கருங்குழல்தனக்கிணை
யாமோ கடலோரத்து
கரியதெள்ளாலச்சை வனத்தைன்னிலுஞ்சொல்லரிபோமோ
ஆரிருக்கிருளெனக் கிணையெனவாக்ரமித்
ததட்டும் மதிமிகுத்து
அருந்தவத்தோர்க்குமிவள் பிதிலாசைகொள்ளமணக்கிட்டும்
நேரிருக்குமோயிவள் கூர்விழிக்கெமன்வேல்
நெடியவஞ்சனஞ்சமும் நெறியொழிந்திடுமேல்
கூறிருக்குமோகாமன் கணைக்கெனிற்சொல்லு
குதலைமென்மொழியாளைக் கொண்டாடப்புல்லு (அவனி)

௩, இந்திரன்கைச்சிலைதனைப் பழிக்கவெழுந்ததிவள்
புருவம் ஆகாவென்சொல்வோம்
எழிலுயர்கபோலமோ மிசைந்தகண்ணாடியினுருவம்
சுந்தரத்திலதப்பூ விணையொத்தழுக்குமிந்
நாசி வள்ளைப்புட்பத்தை
சுருக்கில்முனிந்துநகைத் திடித்ததையவள்காதின்வாசி
புந்திமகிழ்ந்தருந்தும் செழுங்கோவைக்கனியை
பூவையாணியும்செம் பவளத்தின்மணியை
சிந்தியமகரந்தந் தருமாவிந்தச்
செழுமலரைவத ரமுடையாளிந்த (அவனி)

௪, நித்திலத்தைசெம்மாதனை முத்தினைப்பழிக்குமவள்
பற்கள் ஆரவமுதை
நேராகுந்தேனைகற்கண்ட முப்பழத்தினுமதுரச்சொற்கள்
முதல்யகடவுக்குள்ளேசத்திக்குஞ்சங்கினையொத்த
கழுத்து பிரமனன்று
முக்கணன்வரத்தினால் 'படைத்தானிவள்தாளிதனைக்கெழுத்து
அத்தினத்தினிற்பிரமன் அகிலமும்படைத்து
அடிற்கடிதிகைத்திரு கைகளையந்துடைத்து
அத்திமத்தகத்தைச்சக்ரவாளத்தைப் பொன்பொருப்பை
அதின்பின்படைத்தப்படைத்தானிவள்முலையுறுப்பை (அவ)
௫, வடத்தினற்றரிரிவன் வயிற்றினைக்கண்டேடல்
சேரும் ரோமதாரைகள்
வரிபெறும்பைக்காரெள்ளைவாதுளைச்செய்தோட்டிவிட நேரும்
தொடுத்தவைங்கணைதுற்றும்தூணியின்கைக்கணையெனும்
உந்தி தோள்களிரண்டும்
துலங்கும்வசனைபளாவி விளங்கும்மூங்கிலையொத்த பந்தி
தடக்கைகளிரண்டுஞ்செங் காந்தளின்மலரோ
தைபவிடகாணல்சொற் பசுமென்பாரிகலரோ
துடைகள்செங்கதலியைத் துதிக்கையைப்பழிக்கும்
தோற்றும்பதங்களாமைமுதுகைநன்குவொழிக்கும் (அவ)

இவைமேகங்களின்பெயர்

சம்வர்த்தம் ஆவர்த்தம் புட்கலாவர்த்தம் சங்காரிதம்துரோணம் கான்முகி நீலவருணம் இவைமுறையே மணி நீர் பொன் பூ மண் கல் தீ

பொது-வசனம்.

இந்தப்பிரகாரமாய் மாதவத்தோர்களால் சொல்லக்கேட்ட அரிச்சந்திரமகாராசன்மகிமையங்கமையல்பெருகி காதல்மிகுந்து மனந்துருகி சந்திரமதியின்மீதுள்ள விரகதாபத்தினால் வெதும்புண்டு அத்தபோதனர்களை அடிபணிந்து சொல்லுகிறவிதங்காண்க,

இராசன்சொல் விருத்தம்

அருந்ததிதனக்குமேலாமவ்வரிவையனோயானே
பொருந்தமாமாலைசூட்டப்புரவலன்மனதறிந்து
வருந்தியதீங்களேபோய் வன்மைகளறிந்துவந்தால்
இருந்துளமகிழ்ச்சிமேன்மை எந்நாளுங்கட்டாமே (௫)

வசனம்

அகோவாருங்கள் தபோதனர்களே அருந்ததிதேவிக்கும் அதிகமான பதிவிரதாதர்மத்தை யுடைத்தான அந்த சந்திரமதியை

எனக்கே மாலையிடும்படியான ஏதுகரஞ்செய்யும்பொருட்டு நீங்களே அந்த மதிதய மகாராஜனிடத்திற்குப்போய் அவருடைய மனோபாவ மறிந்துக்கொண்டுவந்து என்மனோயிஷ்டத்தை நிறைவேற்றினால் அதினாலுண்டாகப்பட்ட சகலசந்தோஷாதி மகிமையும் புகழ்ச்சியும் உங்களுக்குக் கிடைக்கும் மகத்துக்களே.

முனிவர்கள் சொல்-விருத்தம்.

முல்லையின்கைவாய்மன்னு முகமலர்ந்துரைத்தவர்கள்
சொல்லையுமந்தயன்பாற் சுருக்கினில்மொழிந்துவந்துன்
தொல்லையைவிடுத்துச்சந்திர சூரியருள்ளமட்டும்
எல்லையில்லாதகீர்த்திக் கிடந்தேடிவருகுவோமே. (௬)

வசனம்,

அகோவாரும் அரிச்சந்திரமகாராஜனே-நீ மகாசந்தோஷத்தோடு சொன்னசொற்களை மதிதயமகாராஜனிடத்தில் அதிசீக்கிரத்திலறிவித்து உன்னுடைய விரகதாபத்தைத்தீர்த்து சந்திராதித்தருள்ளமட்டுக்கும் நிலைபெற்றகீர்த்திக் கிடந்தேடி வருவோம் அரிச்சந்திர மகாராஜனே,

பொது-விருத்தம்

சந்திரமதிதன்பாற் தனக்குளன்சைலதாமஞ்
சுந்தரமார்பின்சூழ்கச் சூட்டுவோமென்னவாழ்த்தி
மந்திரமுனிவரெல்லா மண்டபமகன்றுதேவ
இந்திரபுரியிதென்னு மெழினகர்நடக்கின்றாரே (௭)

வசனம்,

அகோகேளுந் தர்மபுத்திரர்களே இந்தப்பிரகாரமாய் சந்திரமதியையே உனக்குக்கல்யாணம் பண்ணிவைக்குறோமென்று எழுந்தருளிய முனிவரர்கள் யாவரும் இந்திரநகருக் கிணையான அயோத்தியா புரியைவிட்டுப் புறப்பட்டு கன்னோசியா நகருக்கு வருவதுகாண்க

௬-தரு-இ.ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி.

மன்னன்வாசகங்கேட்ட மாமுனிவர்கணனோரி
மாநகர்த்தனைத்துடர்ந்தார்-வழிநடந்தார்

அநுபல்லவி,

சொன்னமொழிதவறாச் சுகுணன்சத்யரிச்சந்திரன்
றன்னைச்சந்திரமதிக்குத்-தகவாய்க்கல்யாணஞ்செய்ய (மன்)

சரணங்கள்.

வாவிகூபதடாகம் வளியகுகையோடைகள்
சேவிக்குந்தேவஸ்தலங்கள் சிறந்தவழிநடந்து (மன்)

௫

௨, குன்றுகள்மேடுகள் குழிக்குமாகிகளும்
சென்றுதரிசனஞ் செய்புமலைகள்கடந்து (மன்)
௩, கந்தவனங்களும் நாடுநன்னகர்களும்
அந்தமானபூஞ்சோலை யடர்ந்தயாவுங்கடந்து(மன்)

பொது-விருத்தம்,

முனிவர்கள்போனபின்னர் முன்னவன்கொலுவைநீங்கி-
இனியராப்புசிப்புமுண்டு எழிற்றிருப்பள்ளிசென்று
கனிவுனமாரன்றங்கைக் கணைகளாலெய்தல்கண்டு
தனியனுயுள்ளத்தோடுந் தானிதுவுரைத்திட்டானே, (௮)

வசனம்

இவ்விதமாய்ப்போனதவத்தவர் நெடுந்தூரங்கடந்துகண்ணேறி காட்டையும்போது இங்கே அரிச்சந்திரமகாராசன் விரகதாபத்தினுல் வெதும்பி தன்னுடைய கொலுச்சமூகத்திலிருந்து அரண்மனைக்குப் போய் உண்டுதாம்பூலந்தரித்துப் பள்ளியறையிற் சேர்ந்து படுத்திருக்கும்போது தன்னிலே தானே சொல்லிக்கொள்வதுகாண்க,

௭-தரு-இ-ம்-தோடி-திரிபுடைதாளம்

பல்லவி,

உள்ளத்தோடுரைத்தானே-உருவிலிக்கணைஉடம்பெங்குந்தரித்தானே

அநுபல்லவி,

கிள்ளைமீதேந்திரமன் வள்ளலரிச்சந்த்ரன்றன்
பள்ளியறைசேர்ந்தபின் சன்னைசெய்தவையாவும்(உள்)

சரணங்கள்

௧,மயங்கிவருந்திமனம் வாடிமன்மதனம்பாற்
றியங்கிவளருங்காமத் தீயினுற்செயலற்றுத்
தயங்கித்திராதமோக தாகத்தாலாவிசோர்ந்து
வுயங்கியயங்கிமெத்த வுருகியுருகித்தானே (உள்)
௨,சந்திரதயனன்பால் வந்தமாமுனிவரோடு
வந்தவள்மாயமாகி யெந்தனுளத்தைவல்லி
சொந்தம்போலும்புகுந்து தோதகஞ்செய்திருந்து
வந்தமாமுனிவர்பின் னடந்ததறியேனென்று(உள்)
௩,மாயபாடாவென்னையும் மாதுசிரோமணி
வேறுமிப்படியனேக விதஞ்செய்தயாவுஞ்சொல்லி
ஆறுதலெவரோடென் றயர்ந்துமிகப்பயந்து
ஏறுமோகுறையுமோ வெள்ளடனந்தளர்ந்து(உள்)

பொதுவிருத்தம்!

மானவனுமரிச்சந்திரமன்னவனிவ்வண்ணமுற
மாலைதனைச்சாற்றவென்றுமகிழ்ந்தெழுந்த
ஞானமிகுயோகியர்கள்தானடந்தவழிகடந்து
ஞாலமுயர்கன்னோசிகானடைந்தார்
மாககரிற்றேர்பரியசெம்மாசிகைச்சேனையொடு
மன்னமன்னரடிவணங்கமகிமைகொண்டு
வானவர்கள்வாழ்த்திடவும்வையகத்தோர்போற்றிடவும்
வண்மையுளகொலுவில்மதிதயனும்வந்தான் (௯)

வசனம்.

இவ்விதமயரிச்சந்திரமகாராசன் காமன்கணையால் உள்ளமுருகி மதியழிந்து மனந்தளர்ந்து கிலேசுடின்றி நெறிதயங்கி தனக்குள்தானே புலம்பிசந்திரமதியினுடைய ரூபலாவண்ணியசவுந்தர்யாதிகளை நினைந்துருகிறுன், யோகீஸ்வரர்களும் நெடுந்தூரம் நடந்துகன்னோசிமாநாடடைந்தார்கள் இப்படியாக வரக்கண்ட மதிதயமகாராஜன்கொலுவில்வந்திருந்து ராஜரீகஞ்செலுத்துவதுகாண்க.

௮-தரு-இ-ம்-ஆரபி-ஆதிதாளம்,

'பல்லவி.

மதிதயனெனவிகவதிகமகிமைபெற்றமன்னன்கொலுவில்வந்தான்

அநுபல்லவி,

பதிதபாவனனான பானுகுலேசனெனும்
பாலனரிச்சந்திரற்குப் பாணிக்கிரகணம்பண்ண(மதி)

சரணங்கள்.

௧, மேருகிரியைவெளிச்செய்ததெனவுமுயர் மேனிலைமணிமாட
வாரிதியிதுவெனவந்துகப்பணைக்கட்டி வருமரசர்கொண்டாடக்
காருங்கடல்போலக் கதிர்மணிமுரசாடத்
தேரும்யானையும்பரித் திரள்களும்படையாட(மதி)
௨, செங்கதிரொளியெனப்புங்கவன்சிரமீது தங்குமகுடமின்ன
செங்கரமிரண்டிலும்வங்கிகடகமுந்தோள் வளைகள்சிறந்துதுன்ன
செங்கமலபதத்திற் றங்கப்பிரகாசமென்ன
அங்கமுழுதுநிறைந் தெங்குமொளிமன்ன(மதி)
௩: செம்பொற்குடம்போற்கொங்கை சிறந்திலகுமாதர்கள்- செழுங்க
(வரிகள்வீச
கும்பற்கும்பலாய்மந்திரிப்ரதானிதானுபதியர் கொண்டாடிபோற்றிப்
அம்புவிமறையோர் முனிவர்வாழ்த்தும்விலாச (மேச
ளம்ப்ரமமாகச்சிம்மா சனத்தின்மீதுவுல்லாச (மதி

பொதுவசனம்.

இவ்விதமாய்கொலுவிருக்கும்மதிதயமகாராஜன் - சபைக்குவந்ததபோதனர்களினடிவணங்கி பதம்பணிந்து உபசரித்துச்சிலவர்த்தமானங்களை இராசன்வினவுதல்காண்க,

மதிதயராசன்வினவுதல்-விருத்தம்.

வானநீர்பொழிந்து முத்தமணிகொழிக்கருவிபாய்ந்த
கானநீர்பெருகுந்தெய்வக்கண்டகியென்னுந்தீர்த்தந்
தானநீராடியெந்தன் றலைக்கடிமுகள்சூட்டிப்
போனநீருடனேமீண்டபுதுமையைப்புகலுவீரே

வசனம்,

அகோவாருங்களைபா, சுவாமி தபோதனர்களே- நீங்களெல்லாருங்கண்டகிநதியில்தீர்த்தமாடி எனக்குத்தெரிசனங்கொடுத்துப்போய்வருகிறோமென்று விடைபெற்றுக்கொண்டுசென்று மறுபடியும்உடனே வந்தகாரணந் திருவுளம்பற்ற வேணுமையாசுவாமி,

மாமுனிவர்கள்சொல்-விருத்தம்,

அரசனேபுகலக்கேளாயவனியிலயோத்தியாளுங்
குரிசிலரிச்சந்திரன்றன் கொலுச்சபைதனிற்சென்று
பரிசிந்தான்மகட்குப்பதியவனெனக்குறித்தோம்
அரசரிலனேகர்தம்மு ளவனல்தில்லைத்தானே (௰௧)

வசனம்,

அகோகேளும் மதிதயமகாராசனே உம்முடைய கொலுச்சமுகம்விட்டு அயோத்தியாபுரியைநோக்கி நடந்தோம் அங்கேஅரிச்சந்திரமகாராசனைக்கண்டு அவன்செய்த அத்யபாத்தியாதிஷோடசோபசாரங்களையும் மனக்களிப்போடு கைக்கொண்டோம் அவனிருக்கிறசுருசி ஆசாரவிவகாரங்களையும் ரூபலாவண்யாதி குணநிசயங்களையு மறிந்தோம் மகில்மிகுந்தஆனந்தபரவசமாகினோம் இந்தலோகத்திலே அவனைப்போலேசீலனையும் குணவானவனையும் நாங்களெந்ததேசத்திலுங்கண்டதில்லை ஆகையால் அவனுக்கு உன்னுடையபுத்திரியாகிய சௌபாக்கியவதி சந்திரமதியைவிவாகஞ்செய்துகொடுத்து சந்தோஷிக்கவேணுமென்கிறவெண்ணமுற்றுமறுபடியும்வந்தோம்மகாராசனே,

மதிதயமகாராசன் முனிவர்களுக்குச் சொல்விருத்தம்.

ஐயனுலமைத்தவாரி யணுவேனுந்தவறிடாது
தெய்வாசியங்கள்தன்னைத் தெரிந்தறிந்துரைக்கவல்லோர்
தையலென்மகட்குக்கேள்வர் தரணியோரியாவரேனுக்
துய்யதேர்க்கவென்றன்றொல்சபைக்கழைத்துவரீர் (௰௨

வசனம்

அகோகேளும்முனிவர்களேபிரமாவினாலேசிருஷ்டிக்கப்பட்ட பிரமாணங்களிலணுப் பிரமாணமாவது பிசகுவராது, எமக்குமுன்னாலேஈஸ்வரனால் கொடுத்திருக்கப்பட்ட திருவருட்படிக்கு எவர்களினிமையாய்ந்தறிந்து இயல்புடன்சொல்வார்களோ அவர்களேஎனதுசவுந்தர்யவதியாகிய சந்திரமதிக்குப் பிராணநாயகராவார்கள் ஆகையினாலியாவராகிலும் பூலோகத்திலே உங்களுடைய மனதுக்கிசைந்தவர்களையழைத்துக்கொண்டு அதிசீக்கிரத்திரத்தில் வாருங்களையாசுவாமிகளே

பொது-விருத்தம்,

மாதவர்கள்சத்யரிச்சந்த்ரனையழைத்துவர
மகிழ்ச்சியொடுசென்றபோது
மதிதயனும்மகளினதுசுயம்வரமோரேழுநாள்
மத்தியிலிருக்குதென்று
தூதுவர்கள்கையிற்கலியாணவோலைவிடுத்து
தொல்புவியின்-வேந்தர்க்கெல்லாம்
தூரிலேறிவித்துவர வென்றுசுபமங்களம்
சொல்லியாக்ஞாபித்திடும்
போதவர்களன்ப பத்தாறுதேசத்திறைவர்
புந்தியில்மகிழ்ந்துபொங்க
பொற்புடையகல்யாணவோலைகொடுத்தப்புறம்
புகழுமங்களசோபனம்
ஆதரவதாகமதிதயன்மகட்கென்னவே
அதிசயித்தரசரெவரும்
ஆனைசேனைகளுடன்கண்ணோசிகாடாளன்
அரண்மனையில்வந்தமர்ந்தார் (௰௩)

வசனம்,

இந்தப்ரகாரமாய் வந்தயோகீசுரர்கள் அரிச்சந்திரமகாராசனையழைத்துவரப்போனபோது மதிதயமகாராசன்அம்பத்தாறு தேசத்துஇராசாக்களுக்கும் கல்யாணஓலையனுப்பிஇன்னைக்கெழுநாள்முகூர்த்தமிருக்குதென்று அறிவித்தபோது அவரவர்களெழுந்து ஆனைசேனைசைன்யங்களோடுகண்ணோசிகாட்டவே நோக்கிப்புறப்பட்டுவந்து அரண்மனைக்குள் வருவதுகாண்க,

தேசாதிபதிகள்வருதல்

௧-தரு-இ-ம்-கௌளிபந்து-அடதாளம்

பல்லவி,

அஷ்டதிசையாளுமரசரெவர்களும்-ஆசைமிகுந்துவந்தார்

அநுபல்லவி.

சிஷ்டபரிபாலனஞ் செய்யுஞ்சந்திரதயன்
இஷ்டமாய்ச்சுயம்வர மியற்றுஞ்சபைதனில் அ

சரணங்கள்.

௧, சிங்களர் கேரளர் சீனகர்ஞுடகர்
சிந்தர்குலிங்கர் சூரசேனர்
கொங்கணர் தெங்கணர் நேபாளர்கூச்சரர்
கோயர் மகதர் குகுதர்கையிடதர் அ
௨, காந்தாரர் காஸ்மீரர் காம்போஜர்கேப்பாளர்
கலிங்கர்வங்களரோட்டர் காசர்
ஆந்த்ரர்யவாந்தரர் யவனரவந்தியர்
அருணர்மிலாடர் மாடர்அங்கர்வங்கர்
௩, பல்லவர்சாலவர் பாஞ்சாலர்திராவிடர்
பாண்டியர்விதர்ப்பர் மற்பரர்சரேர்
கொல்லர் துளுவர் குடகர்மச்சர்விராடர்
கோசலர்சௌராஷ்ட்ரர் கொங்கர்குருகர் அ

பொது-விருத்தம்,

இன்னவாறெழிற்கன்னமாபுரிதனையடைந்த
மன்னமன்னவர்யாவருமதிதயன்விடுத்த
வன்னமாமணிமேடையில்வந்தமர்ந்திருந்தார்
சொன்னமாதவாயோத்தியைச்சுகத்துடனடைந்தார் ௰௪

வசனம்

அகோகேளும்தர்மபுத்திரர்களே இந்தப்பிரகாரமாகவந்த அன்பத்தாறுதேசத்தரசர்களும் சந்திரதயன்பட்டணத்தில்வந்து அவரவர்களுக்குவிடுத்த விடுதியிலமர்ந்தார்கள் முன்வந்திருந்தமுனிவர்கள்யாவரும்அயோத்தியாபுரியைச் சேர்ந்தபிற்பாடு நடக்கிறவிதங்காண்க,

இதுவுமது,

வந்தமாதவத்தோர்கற்றுள்வணங்கியேதிரிசங்குமைந்தன்
அந்தமாய்மதிதயன்பாலடைவுடன்சென்றுவந்த
விந்தையாம்வர்த்தமானவிவரங்கள்சொல்கவென்ன
புந்தியிலுவகைகொண்டுபுனிதர்கள்புகலுவாரே ௰௫

வசனம்.

அகோகேளுஞ்சபையோர்களே இவ்விதமாய்வந்தமாதவமுனிவர்களைவணங்கியஅரிச்சந்திரமகாராசனானவன்மதிதயமகாராசன்சபைக்குப்போய்விவாகசமாச்சாரங்கள்விசாரித்ததைவிவரமாகச்சொல்லவேண்டுமென்று வேண்டும்போது மாதவமுனிவர்கள்சொல்லுகிறவிதங்காண்க.

௰-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்,

பல்லவி,

சேதிகேட்டகமகிழ்வாய்-நாங்கள்போய்வந்த-சேதிகேட்டகமகிழ்வாய்

அநுபல்லவி

சோதிகுலத்துதித்த சுந்தராஅரிச்சந்திர
நீதியதாய்ப்பிரமன் நெஞ்சினினினைந்த(சேதி)

சரணங்கள்.

௧, அதிசுகுணவானெனும் மதிதயனுமுனது
விதிமதியதனை வியமிகக்களித்தசேதி(சேதி
௨, சந்திரமதியெனும் சுந்தரவதிக்குனை
மந்திரவிதிமாலை தந்திடவிசைந்தான்(சேதி)
௩, முன்னமுன்னருந்தவ மின்னதென்றறிலா
மன்னவருனதிணை மானிலத்துளரோ(சேதி)
௪, மங்களவாத்ய முழங்கவுமுன்சது
ரங்கதளங்களோ டம்மெழவிசைவாய்(சேதி)

மாதவமுனிவர்கள்சொல்-வசனம்

அகோவாரும் அரிச்சந்திரமகாராசனே உம்முடையமனதில்நினைத்தபடியே பிரமஸங்கற்பமும் இருந்ததுமதிதய மகாராஜனும் நாங்கள்சொன்ன வர்த்தமானங்களையங்கீகரித்து மந்திரமுறைதவறாமல் சந்திரமதியைப் பாணிக்கிரகணம்பண்ணிக்கொண்டுக்ஷேமமாய்வருவீர் உம்முடைய சதுரங்கதளங்களுடனே கல்யாணஞ் செய்துக்கொண்டு வரலாம்வாரும்மகாராசனே,

பொது-விருத்தம்

உத்தமமுனிவரிவ்வா றுரைத்திடவயோத்தியாளும்
சத்யரிச்சந்த்ராசன் சதுரங்கதளத்திலோடு
முத்தியசடற்போர்ச்சேனை முழுவதுங்கூட்டிக்கொண்டு
வெத்தியின்மிருகண்ணேசி வேந்தனைக்காணவாரார்,

வசனம்

அகோகேளும்தர்ம்மபுத்திரர்களேஇவ்விதமாகக்கேட்ட அரிச்சந்திரமகாராஜனானவன்தன்னுடையசதுரங்கதளங்களுடனேகன்னோசிநாடாளப்பட்ட மதிதயமகாராஜன் சபையைநாடி வருவதுகாண்க,

௰௧-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்,

பல்லவி,

மகாராசன் அரிச்சந்திரமகாராசன் மதிதயமகாராசன் சபைக்குவாரார்

அநுபல்லவி,

மிகராஜர்போற்றவா னகராஜர்வாழ்த்திய
ஜெகராஜனுந்திரிசங்கு மகாராஜனற்றவத்தின்(மக)

சரணங்கள்,

௧, சந்திரவிம்பநிகர்முகமாதர்கள்
சாந்துபனிநீர்கலந்து தெளிக்க-வேத
மந்திரமுறைதவறாதமாமுனிவர்கள்
மங்களஞ்சொல்லிமனங் களிக்க-மேலே
அந்திரத்தண்டர்களனைவரு மனங்களித்
தபயாஸ்தமாசனுக் களிக்க-பு
ரந்தன்றனைக்கண்டசம்பரன்போலேவேமா
ரன்மன்னவனுளத்தி னொளிக்க(மகாரா)

௨, முத்துப்பவழவரத்நங்கள்கலந்தஆ
லாத்திசுவாசினிகள் சுத்த-அங்கே
சப்தமேகமும்யேகோபித்துகெர்ச்சித்தல்போலச்
சகலவாத்யகோஷமும் நத்த-எங்கும்
மெத்தப்பெருஞ்செல்வம்பெற்றகெடிமன்னர்
மெத்தகப்பணங்கட்டி வைத்தபுகழ்
பெற்றவெற்றிவீரர்கள் பத்தியதாய்வரப்ர
சித்தவானென்பெயர்பெத்த வரிச்சந்திர(மகாரா)

௩, ஆனைகுதிரைசேனைகளும்
சணிபணியாய்நின்று கொண்டாட-உயர்
வானையளாவும்நிசான்மகரதோரண
வாலவட்டச்சுருட்டிக ளசைந்தாட-பேசுந்
தேனைப்பாலமுதினைப்பொழியும்மொழிகள்பேசுந்
தெரிவையர்கோடிகோடி யாட-தேவர்
தேனைகீர்த்தருணைவாலைச்சத்தியவானை
மானைப்பழித்தமடமான்சந்திரமதைத்தேட (மகாரா)

பொது விருத்தம்

சொற்களிற்றவறுமன்னன்சதுரங்கசேனை
வற்கத்துடெழுந்தடர்ந்த வனமதில்வருகும்போது
மற்கடமதின்மேற்றவ மயிற்குயிற்கூவுந்தேவ
துர்க்கையின்கோயில்கண்டு தொழுதெழுந்திறைஞ்சலுற்றார்

வசனம்.

இந்தப்பிரகாரமாய் கல்யாணத்துக்குப் புறப்பட்ட அரிச்சந்திர மகாராசனானவர் சதுரங்க தளங்களுடனே யெழுந்து நெடுந்தூரம் நடந்து அடர்ந்தவனமத்தியில் வரும்போது அங்கிருந்த துர்க்காதேவியின் கோயிலைக்கண்டுவிசையினில் முத்துச்சிவிகை விட்டிறங்கி அம்மனைவணங்குதல்காண்க

22

௰௨-தரு-இ-ம்-கெண்டா-ஆதிதாளம்

பல்லவி.

துர்க்காவதுதேவித்தாயே-எனதுபக்கத்-துணையாய்நீ வந்துநித்தாயே

அநுபல்லவி,

பொற்கழல்கள்பணிந்து போற்றிசெய்யும்பாற்கவன்
வற்கத்தவர்களிக்க வரப்ரசாதமளிக்கும் (துர்)

சரணங்கள்

௧, சம்புவாகனமேறியே அலகைக்கொடி
சாற்றிகசனை மீறியே
தெய்புபடைத்தரூபி தேவியெனத்தேறியே
கும்புகும்பாய்க்கூளிகள் கூடிவிருதுகூறியே (துர்)
௨, அன்னைபிதாகுருதெய்வமும்நீயே எவ்வுயிர்கட்கும்
ஆதாரமதும் நீயே
உன்னைப்பணிந்தோரேழுலகாளும்வகைசெய்வாயே
என்னையீடேற்றவுந்த விதையமகிழ்ந்துய்வாயே (துர்)
௩, எந்தன் கவலையைத் தீர்ப்பாய் எனக்கென்றென்றும்
முந்தன்பதந்தந்து காப்பாய்
சுந்தரிரூபிதேவி யந்தரியம்பணத்தி
செந்தாமலைப்பதத்தி செய்யசக்ராயுதத்தி (துர்)

பொதுவிருத்தம்.

சிந்தனைசெய்துவந்த திருவயோத்தியாளன்
சந்தனம்புட்பங்கூறை சகலவாபரணங்[illegible]
எந்தனைப்பாதுகாப்பா யென்ன[illegible]றஞ்சியேற்றி
வந்தனஞ்செய்துபோற்ற துர்க்கைவருகின்றளே (௰௮)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் சந்தபுஷ்ப அக்ஷதாதி சகலபரிமள சுகந்தவஸ்திராபரணங்களோடு துர்க்காதேவியைப் பூசித்து மனப் பூர்வகமாய்த் தோத்திரஞ்செய்யும்போது அம்மன்பிரத்யட்சமாய்சுயரூபத்தோடு வருகிறவிதங்காண்க,

௰௩ தரு-இ-ம்-கௌளிபந்து-சாபுதாளம்,

பல்லவி.

இனகுலத்தினன்மிகக்கனவானரிச்சந்திரன்முன்
வனதுர்க்கைவந்தாளே

அநுபல்லவி,

அநுகூலிசாதுஸ்த்ரீ ஜனபரிபாலி
அதியோகசாவித்ரி சூலிஹஸ்தகபாலி(இன)

ஞ

சரணங்கள்,

௧, ஒருக்காலும்விபுதர்கண் டொருக்காததிரிபுர
வருக்காதிகளையீசன் வருத்தும்வகைதோணுயல்
பெருக்கநகைத்தெரித்த பெருந்தியும்
ஒருவராலும்வெல்லொண்ணு அருகும்வகையெய்திடும்
உரும்வலியெனும்பொல்லா வுளவறிளவனைத்
திருநுதற்கணலீசன் தீய்த்ததியும்
பெருக்கமாயலைவீசி ப்ரளயம்போலப்புனலை
முருக்கமாகத்தெறிக்க முனைகின்றகடல்நடு
விருக்கும்வடவையினு லெழுந்ததியும்
ஒருக்காலேயெழுந்திரோ மூலகுங்களித்தாற்போல்
தரிக்குஜெந்தரிதக தநிங்கணத்தோமென(இனகு)
௨, ஒருகைதனிற்பட்டய மொருகைதனிற்சொட்டையும்
ஒருகைதனிற்பத்திர யொருகைதனில்மழுவும்
இருகைதனிற்சக்கர மெடுத்திலங்க
ஒருகைதனில்வச்சிர மொருகைதனிற்கரகம்
ஒருகைதனிற்பேய்க்கொடி யுடன்வரவெவர்களும்
ஒருக்காததனற்கொழுந் தெரிந்திலங்க
பெருகுங்காதினோலைகள் பிணைத்தசரப்பளிகள்
மருவுமஸ்தகடக மணித்தோள்வளைச்சூடகம்
பருத்தபதங்களில்நூ புரயிலங்க
பெருத்தபாடகந்தன்னடை பின்னற்கொலுசுபூண்டு
தரிக்குஜெந்தரிதக தநிங்கணத்தோமென(இனகு)
௩, ஆடுஞ்சிலபூதங்கள் பாடுங்கெவுளிபத்து
போடுஞ்செழுங்கவர் கூடியிருபுறமும்
ஓடுமலர்கொள்கைக்கொண் டுளமகிழ்ந்து
சூரிந்திருப்பதத்தை நாடுந்துதிசெய்துகொண்
டாடுமஞ்சலிசெய்து தேடுமிடாகினிகள்
கூடும்விதவிதமாய்க் கோடாகோடி
வாடும்நரபலிகொடுத் தாடுமெக்களித்துக்கூத்
தாடுமேவலாற்சில சாடும்வாயல்முகப்பிற்
போடுங்காவலில்மிகப் புகழ்ந்துபேசி
முடுகுதந்தமிழ்பேரி முழங்கமூன்றுலோகமும்
முடுகுதப்புகள்திடு முடுதிடெனமுழங்க(இனகு)

வசனம்-

இவ்விதமாக ப்ரத்தியட்சமாய்எதிர்கொண்டுவந்த நர்க்கா

தேவியையும் எதிரேயிருந்த தேரையும் அரிச்சந்திர மகாராசன் பார்க்குங்காலத்தில் சம்பவிப்பதுகாண்க,

புராணவிருத்தம்,

நற்றேரைவிட்டிறங்கி நாயகியைத்தொழுதிரைஞ்சி நன்னி
ராசன். முற்றேலாநோக்குதலும் முடிவேந்தன்கருணைவிழி மு
னைகடாக்கக், கற்றேருங்கற்பரியும் கற்சிலையுங்கற்கணையுங் கன்னி
முன்னே, பொற்றேரும்பொற்பரியும் பொற்சிலையும் பொற்க
ணையும்பொலிந்ததாமால், (௰௧)

வசனம்,

இப்படியாக பரதேவதையையும் சன்னிதானத்துக்குநேரே யிருந்த கல்லினுலுள்ள தேரையும் குதிரையையும் வில்லையும். கணையையும் பார்த்தமாத்திரத்தில் முன்னுருவமாறிபொற்றேராயும்பொற்குதிரையாகியும் பொன்வில்லாயும் பொற்கணையாயுமானது கண்டு அதிசயித்து மதிபிரமணமடைந்து நின்ற அரிச்சந்திர மகாராசன் முன்னும்பின்னும்பார்த்து யாதொன்றுந் தோற்றுமலிதுசொல்லும்போது நடப்பதுகாண்க-

புராணவிருத்தம்.

முன்னிற்கல்லானமுடித்தேரும்வாம்பரியும்முறிவில்லும்
பொன்னுகக்கண்டிறைவன் புத்திமகிழ்ந்ததிசயித்துப்புளகமெய்கி
யன்னுகவந்ததிதுவெனக்கருதி யவ்வளவுவிரண்டமேனி [ன்
பொன்னுருங்களபமுலைப்புரிசடையான்மணிவாயற்புறத்துவந்தா

வசனம்,

இவ்விதமாய் கல்லாயிருந்ததெல்லாம் பொன்னுகக் காரணமென்னவென்று அதிசயித்துமகிழ்ந்து புளகடைந்து எவ்விதமாயுண்டாச்சுதென்று ஆலோசித்துக்கொண்டிருக்குமளவில் அர்க்காவதிதேவியானவள் கோபுரவாயிலில்வந்து நின்றதுகண்டு அரிச்சந்திரமகாராசன் தோத்திரஞ்செய்வதுகாண்க.

இராசன்சொல்தேவாரம்,

முச்சுடருதயம்போலெக் முன்வந்தனையேபோற்றி
அச்சுதன்றன்பினுற்ற வமலியேபோற்றிபோற்றி
நச்சுமிழரவாபரணன் நகைப்புடனடமுகந்து
மெச்சுதற்கரிதாமுந்தன் மெய்ப்பதம்போற்றிபோற்றி (௨௧)

அரிச்சந்திரமகாராசன் அம்மனைவிருவுதல் விருத்தம்

பொற்றுளைப்போற்றவந்தபோதுவுந்தன்சன்னதியில்
புகழுமொருபெருமலைபோற்பொலிந்துநின்ற
கற்றேலாக்கற்பரியைக் கற்சிலையைக்கற்கணையைக்
கண்டவுருமாறிபெருங்காட்சியாகப்

பொற்றேரும்பொற்பரியாய்ப்பொற்சிலையாம் பொற்கணையாய்
பொற்புமிகத்தோன்றுமிந்தப்புதுமைதன்னை
நற்றுளித்தெருண்டேடுமறாயேனுமுணர்ந்தறிய
நன்மனத்தோய்களங்கமறறவிளுவாயே (௨௨)

வசனம்,

அகோவாரும்மா லோகமாதாவே உமது பிரகாசமாய்விளங்காநின்ற வரமிகுந்தபாதாரவிந்தத்தை தெரிசனஞ்செய்துதோத்திரஞ்செய்ய யான்வரும்போது உம்முடைய திருவாலயத்துமுகப்பின்நின்ற கற்றேரினையும் கற்குதிரையினையும் கல்வில்லினையும் கற்கணையினையும் காணும்போது கல்லைப்போலிருந்தது உம்மைத்தோத்திரம்செய்கையில் தற்செயலாய்த் தோன்றிய ஒலியைக்கண்டு ஜில்லென்று திரும்பிப்பார்க்கையில் அவையாவையும்பொன்னுருவாகக்காட்டிய கண்காட்சியைத் திருவுளம்பற்றவேணுமம்மாதாயே

துர்க்காதேவியம்மன்சொல்லும்விருத்தம்

தவமிகுந்தவருணையன்னல் தரணியினசையையொழித்து
தற்பாத்துக்கேகுமந்நாட்டனதாயாரும்
கவராதுபொற்றேனாக்கற்றேராகச்செய்து
கடல்சூழ்ந்தவையகத்தென்கண்முன்காட்டி
எவராலுமிதுநோக்கினிவ்வுருப்போய்முன்னுரு
வெய்திடலாமவர்தமக்கென்றியம்பிப்போனார்
~~உலகாளு~~முலகாருமரிச்சந்திரனே
யுத்தமதாமிவைகள்கைக்கொண்டிருவாயே (௨௩)

வசனம்.

அகோவாரும் அரிச்சந்திரமகாராசனேமாதவமிகுந்தவருணமகாராசனவர் மூப்பொருளாசையையும் ஒழித்து தேவலோகத்துக்கேகும்போது தனக்கிருந்த பொற்றேரையும் பொற்குதிரையையும் பொன்வில்லையும் பொன்னம்பையும் அவைக்குடையவர்களையெல்லாம் வேறேயாராவது அபகரித்துக்கொண்டுபோகாமல் அவைக்குடையவர்கள் வருமளவும் கல்லாய்ச் சமைந்தோம் உடையவர்கள்வந்தால் பொன்னாய்விடுமென்று என்னிடத்தில் ஒப்பித்துவிட்டுப்போய்விட்டார் ஆகையால் இந்தநாலுருவங்களும் உம்முடையதாகையால் இதுகளைநீர்பெற்றுக்கொண்டு சுகமாய்ப்போய் சந்திரதயன் பெண்ணைக்கலியாணஞ்செய்துக்கொண்டு, சேமமாய் வாரும்மகாராசனே.

இராசன்-வசனம்-

அப்படியே மகாபாக்கியமம்மா துர்க்காதேவிதாயே

அரிச்சந்திரன்-மதிதயமகாராஜன்
சபையைநோக்கிவருகிற-விருத்தம்

உன்னியகருமந்தன்னை உரியையாய்ப்பாதுகாக்கும்
தன்னியனரிச்சந்திரன்றன் றளங்களைக்கூட்டிக்கொண்டு
கன்னிமாதேவிதந்த கனகத்தேர்மீதிலேறி
மன்னியமதிதயன்றன் மாநகர்நோக்கிவாயார் (௨௪)

வசனம்,

இந்தப்பிரகாரமாய் துர்க்காதேவியினிடத்தில் வரப்பிரசாதம்பெற்றுக்கொண்டு சதுரங்கதளத்துடனே அம்மன் கொடுத்த பொன்னின்தேரிலேறிமதிதயமகாராசனாளப்பட்ட கன்னோசிநாட்டுக்குவருகிறவிதங்காண்க-

௰௪-தரு-இம்-சாவேரி, அல்லது-தோடி ஆதிதாளம்,

பல்லவி,

மன்னவனரிச்சந்திரமன்னவன்மதிதயன்-மாநகர்நோக்கிவந்தானே

அநுபல்லவி.

மின்னிடைச்சந்திரமதியாள் மீதில்மிகமோகமீறிக்
கன்னிமாதேவிதந்த கனகத்தேர்மீதிலேறி (மன்ன)

சரணங்கள்

௧. சிஷ்டர்துதித்திடும் வசிஷ்டமாமுனிவரும்
அஷ்டமந்திரியாரும் இஷ்டமுடன்வெகுசந்
துஷ்டியதாகவா அஷ்டாதசவாத்தியமும்
சட்டமதாய்முழங்கப் பொன்மாரிகள்
திட்டமதாய்வழங்க
கட்டியம்படிக் கடிநின்றுகூறக்
கருணைசாவேரிபாடிக் கவிவாணர்சோ
வட்டமாகவரு மட்டில்லாபடைகள்
எட்டுத்திசையுமேள மவர்கள்தாவ
விசும்பிற்றுல கனைகளோவ (மன்)

௨. அச்சுதனரன்பிரமன் வச்சிரமணிமுதலாய்
மெச்சிப்புகழும்வெகு உச்சிதமாமணிகள்
தைச்சரதத்தின்மேலே உச்சிவண்ணம்போலே
பச்சைப்பரிகளாலே பூட்டிய
செச்சையினிசையாலே
முச்செகத்தவரு மிச்சையொடுவாவே
முழங்குமோசையெட்டு மூக்கருமதிரவே
எச்சரிகைசொல்லி மெச்சுமன்னவர்கள்

வச்சகப்பணத்தாலே　　பூவைமேலே
ஆசையாலே　　மலைபோலே(மன்)
௩ மத்தமதகரியும்　　நித்தமிடுபரியும்
சத்திபகிசழ்கொடியும்　　ரத்நமணிமுடியும்
உத்தபூசக்ரக்குடையும்　　நத்திவருமபடையும்
மெத்தமகிழ்ச்சிகொண்டு　　அறுசுவை
யுற்றவமுத　　முண்டு
பத்தியாகயிரு　　பக்கமும்வருக
பார்க்குமாதர்மனம்　　பதைபதைத்துருக
சித்தமானதமிர　　மித்துசந்திரமதி
நத்தும்வகையைநாடி　　மெத்தமோடி
செய்துகூடி　　கொண்டாடி(மன்ன)

வசனம்,

அகோகேளும் தருமபுத்திராதிகளே இந்தப்பிரகாரமாய் இரதகஜதுரகபதாதி சேனைசேனுபதிகளோடு தேவேந்திரனுக்குச் சமானமான பிருதுகளோடுங் கூடிவருகிற அரிச்சந்திரமகாராசனை சந்திரதய மகாராசன் எதிர்கொண்டழைக்கப் புறப்பட்டது காண்க,

பொதுவிருத்தம்,

என்னருந்தளங்கள்சூழவிரவியின்குலத்துவேந்தன்
நன்னருமானைசேனைநலங்கமிழமைச்சரோடுந்
தன்னருட்சபையைமேவிச்சகலரும்வருகக்கண்ட
அன்னவன்மதிதயேந்ரனகமகிழ்ந்தெதிர்கொண்டானே

வசனம்,

அகோகேளுந் தர்மபுத்திராதிகளே இந்தப்பிரகாரமாய்சேனைசனியங்களுடனேவந்த அரிச்சந்திரமகாராசனுடைய ஆரபாரத்தைக்கண்ட மதிதயமகாராசன் ஆனைசேனை துரகபதாதிகளோடு எழுந்துஎதிர்கொண்டுபோய் அழைப்பதுகாண்க

௰௫-தரு-இ-ம்.சுருட்டி-அடதாளம்

பல்லவி

மருகன்வருகைகண்ட　　மதிதயமன்னவன்
மகிழ்ந்தெதிர்கொண்டானே

அநுபல்லவி

அருகேயிருந்தவ　　மச்சர்சூழஅரி
யாசனமிழிந்துமே　　ராசையுடனெழுந்து(மருகன்)

சரணங்கள்,

௧, மன்னமன்னவர்களும்　　மாதவத்தோர்களும்
பன்னரும்வீரரும்　　பற்பலமுனிவரும்
துன்னியமாதர்களுந்　　துளிர்க்குமரத்தாணிபோல்
உன்னியிமைக்கொட்டாம　　லுளகாளன்முகநோக்க(மரு
௨, மாந்தருமாதரு　　மமைச்சருமன்னரும்
ஏந்தலைப்பார்க்குங்கண்க　　ளிமைத்திலர்சற்றேனும்
மாந்தளிர்நிகர்மேனி　　வாணுதல்சதியிந்தன்
காந்தனிவனேவேறு　　காமனுள்ளனோவென்ன(மரு)
௩, சிவனமக்கருளிய　　திருவருளிவையென
சிவனிவனேயாகி　　லீசனவனுமிவன்செய்
தவப்பனிதுவென்ன　　தாணியோரவர்களும்
புவனத்திலிவனினை　　பூபருளரோவென்ன(மரு)

பொதுவிருத்தம்,

எதிர்கொடுபோயழைத்துவந் தாசருக்கு மியாவருக்குமியற்
கையான, கதிரொளிபோல்விடுதிவிடுத்தவரவர்களமர்ந்தபின்னே
ரிகள்விதூல்லாள்; நிதிகொடுபோய்ச்சந்திரமதிபொன்னடியில்மு
டிசூட்டிநகைநகைத்து, சதற்பெறவேசத்ய அரிச்சந்திரன்றன் வ
டிவழகைச்சாற்றுவாளே,　　(௨௬

வசனம்

அகோகேளும்சபையோர்களே இவ்விதமாய்வந்த அரிச்சந்திரமகாராசனை எதிர்கொண்டழைத்துவந்த மதிதயமகாராஜன் அவரவர்களுக்குத்தகுந்தவிடுதிவிடுத்து அரண்மனைக்குள்போனபிற்பாடுசந்திரமதியின்சமூகத்தில்சஞ்சரிக்கிறஒருமாதுசிரோமணியானவள்சந்திரமதியினுடைய பாதாரவிந்தத்திலே தெண்டனிட்டு அரிச்சந்திரமகாராசனை வர்ணிக்கிறவிதங்காண்க

௰௬-தரு-இ-ம்.ஆனந்தபைரவி ஆதிதாளம்,

பல்லவி

முந்நாளினில்நீசெய்ததினைதவமோஎன்றுல்
மொழியவரிதமானே

அநுபல்லவி

இந்நாளினிலுந்தனை　　கல்யாணஞ்செய்யவந்த
இனகுலத்தரிச்சந்த்ர　　னியற்கைசொல்லுவேனே (முன்)

சரணங்கள்

௧. திருவளர்ந்தமுகமும்　　திகழ்செம்பவளவாயும்
மருவளர்மாலைமார்பும்　　மலர்தாமரைக்கரமும்
அரியையரோவெவரு　　மதிசயிக்குமிடையும்
சிறுவமரம்ரோமரேகை　　சிறந்தமேனியுங்காண(முன்

௨, புரந்தரன்சாபம்போற் புருவம் நுதற்பிறையாம்
நிரந்தரமுநிந்தகத்தில் நிறைந்தவயிருங்காய்ந்த
மரந்தழைத்திடநகைக்கும் மாமொழியும்வாயினன்
சுரந்தவமுதச்சொல்லுஞ் சோராநடையுங்காண (முன்
௩. உள்ளத்துருகுமின்பத் திறைவனையுற்றுநோக்கிங்
குள்ளமன்னவர்களை யுடன்களித்தெதிர்நோக்கக்
கள்ளர்க்குத்துணையான காரிருள்கடத்துஞ்சோதி
வள்ளலைக்கண்டகண்கட்கு வளர்தாரகைபோலாமே (முன்)

விருத்தம்

ஈதுரைத்துநல்லேந்திழைபருகுறும்
போதுளத்தனிற் புன்சிரிப்புற்றிட
வேர்துகொய்திடும் பூவையர்குழவே
மீதுசந்திர மதிசபைவந்தனள் (௨௭)

வசனம்

இந்தப்பிரகாரமாய் சந்தோஷித்துச்சொல்லிய தோழியானவள் அருகேயிருக்கும்போது சந்திரமதியானவள் தனக்குள்ளே அடங்காதமகிழ்ச்சியினால் புன்சிரிப்புகொண்டு புஷ்பஜாலங்கள் சொரிந்துவரும் சகிமார்களோடு கூடிக்குலாவிக்கொண்டு கன்னி மாடத்திலுலாவவருவதுகாண்க

௰௭-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு.

பல்லவி

வந்தனளே-சந்திரமதி-வந்தனளே

அநுபல்லவி

வந்தனள்சபைதனில் சுந்தரமாகவே
கந்தமலர்க்குழலாள் கன்னிமாடத்துலாவ (வந்த)

சரணங்கள்

௧, திங்கட்சடையோனருள் திகழ்ந்ததினற்பிறந்த
பங்கையபதத்தினற் பாவைகலகலென (வந்த
௨. முல்லைநகையாள்நவ மோகனங்கியர்சூழ
வில்லைப்பழித்தவேல் விழியார்களுநிலாவி (வந்த)
௩. சித்திரப்பதுமைபோலே சேடியருடனகொஞ்சி
பத்தரமிகவடையும் பாவைசந்திரமதி (வந்த

வசனம்.

அகோவாருமம்மா பெண்கள்நாயகியே. இப்போது வந்திருக்கிற அரிச்சந்திர மகாராஜாவினுடைய ஸ்ரீகரம்பொருந்தியமுகத்தின தழகும்இந்திரன் தநுசுபோல இசைந்தபுருவமும் தாமரைமலரினிதழைப்போர்கண்களும் செம்பிறைபோன்ற நெ

த்தியும் சங்குபோன்றகழுத்தும் விசாலமானமார்பும் கமுகுபோன்ற தோள்களும் காந்தள்மலர்போன்ற கரங்களும் பயற்றங்காய்போன்ற விரல்களும் பருக்கஇடையும் பொருந்தியபின்தட்டுகளும் கதலியை இசைந்ததுடைகளும் பதுமமலர்போன்ற பாதங்களும் தாவள்யமாய் அர்த்தசந்திராகிருதியான நகங்களுமுள்ள அந்தராசனையும்பார்த்து இணைக்கிணையாக வந்திருக்கிற இதரராஜாக்களையும் பார்க்கையில் அனேகங்கோடி நட்சத்திரங்களினடுவே செகத்ஜோதியாய் விளங்கிக்கொண்டிருக்கிற சந்திரனுக்குச்சமானமாய் வந்திருக்கிற உனதுபிராணநாயகனைக்கண்டு வந்தேன்தாயே,

பொதுவசனம்

இப்படிவந்த சந்திரமதியினுடைய இயற்கை எவ்விதமாயிருக்குதெனில்

எண்சீர்க்கழிநெடில் விருத்தம்-இ-ம்-பந்துவராளி

விதம்விதமான பதுமைகல்யாண வேட்டைகள் மிகமிக விளைப்பாள். விளங்குசம்பந்தியாகுநற் றோழிமார்க்கெலாம் விசையினின்மிதந்த, முதமுள அறுசுவைப் போனகமளிப்பாள் முயபழம்பால்கெட்டே[illegible]ளை, முதிர்ந்தழகொழுகு பூஞ்சோலைக ளமைத்து முனைந்துபூங்கொடிகளைப் புதைப்பாள், இகழ்ந்திடவரத்ந மேடைமீதிருந்து இன்பமாயூசலாடுவாள். இணைபுரிகிலாசற் பாங்கியர்தம்மொடெழிலுயர்பந்துகளாடிப்பாள், பதமிகுசாரிகா கிளக்கடமக்குப்பர்பலபாழைகள்பயிற்றி, பரிவுளமயில்குயில் இனங்களுட்களிக்கும் பான்மையில்பற்பல யினைப்பாள், மதமாளங்கட் கிதமுருவிதமாய் மக்ககதிகள்பயில்விப்பாள், மகிலத்திந்தநேர்மையாய் சந்திரமதியெனுமாதிருந்தனளே, (௨௮)

வசனம்

இப்படிவிக்கிரமசமையத்தில் இருவருக்கும் உடற்கூறுதொந்தநிலைமை எப்படியிருக்கின்றதெனில்,

பொதுவிருத்தம்,

இனகுலாதிபனெனக்கொடிபடர்ந்தினிதிலங்க
இமகரன்குலத்திறைவி மெய்க்கொடிபடர்ந்திலங்கும்
கனமிகுத்தவனிதைய கமலமதுமலரக்
காமியாள்செழுங் கமலமாமுகமதுமலரும்
இனமிகுத்தவனிதைதத்துட் காமத்தீயெழும்ப
இறைவிமார்பினை எழுமுலைபதுபுடைத்தெழும்புக்

திவாகரன்குலத்தலைவன்றன் வீரமுஞ்செருக்க
செவ்வியன்றன் மின்னிடை யணுவளவெனச்சிறுத்திடும்
கனகத்தேரின் னுசாப்ரசமததிகரிக்க
காதலிக்குமெய்க்கட்டுகள் மிகவதிகரிக்கும்
வனசமித்ரகுலேந்திரன் ப்ரமையதுநிறைய
வனிதையெளவனப் பருவவளமும்நிறைந்ததுவே

வசனம்

இவ்விதமாயிருக்கிற சந்திரமதியினுள்ளுருக காமராஜன்பாணப் பிரயோகஞ்செய்ய மன்மததாபத்தினால் மனதுவாடிசந்திரனைத்தூஷிக்கும்விதங்காண்க,

சந்திரமதிசொல்-தெலுங்கு-நடை-சீசபத்தி

இ-ம்-ஆனந்தபைரவி

கடலுளாமுதங்கடைந்திடும்போதுமந்
தரகிரியாலேநீதடவிடதாகின்
ஆலகாலவிஷாக்கினிஜ்வாலையினாலுனை
மூழ்கச்செய்திட்டதில்மூட்டமாதில்]
பரமேசன்சிரதனைப்பரிவுடன்றரிக்கையில்
நெத்திகண்ணெறுப்பினால்நீறுசெய்யின்
மாயவர்க்கேவல்நீமகிழ்ந்துசெய்யும்போது
காகாரிக்கிரையாகிலகாணிலத்தில்
இந்தவாதனைசெய்திடலெய்திடாது
குருமனைவியைநீதொட்டால்குருவுமுன்னைப்
பங்கஞ்செய்யாமல்விட்டதாற்பயமில்லாமல்
விரகிபணாவேதைசெய்கிறாய்வெண்ணிலாவே, (க)

௰அ-தரு-இ-ம்-ஆனந்தபைரவி! அடதாளம்

பல்லவி

இந்தமதிவந்ததேதடா சந்திராவுனக்கு (இந்த)

அநுபல்லவி

இந்தமதிவந்ததேது அந்தமாரன்போதினையோ
வந்தடிக்கடியெந்தனைத் தொந்தரவுசெய்கிறாயுனக் (இந்த)

சரணங்கள்

க, பாற்கடலிலேபிறந்திட்டாய் தேவர்பணியும்
பரமன்சிரவாசியாய் விட்டாய்
நீர்த்தவென்றுடம்பெடுத்தாய் கோதையர்களைவதைத்தாய்
கார்த்திகைக்கதிரினை நீகர்த்துளம்தவிக்கச்செய்தாய்(இந்த)
உ, இலக்குமிக்குச்சோதரனாய் அமுதையும்
ருக்களிக்கத் தக்கவனாய்

தக்கவனென்று மக்கம்வருமுன்னமென்னை
மொய்க்குமதனுக்குப்பயந் தொளிக்கவென்னைச்சிக்கவைத்
தாய்(இந்)

பெண்பழிதன்னையே னேர்க்கிராய் விரகமென்னும்
பெருங்கடலதிலேன் சேர்க்கிராய்
பண்புற்றவனென்றுனைப் பாருளோர்புகழ்வதுபோய்
கண்பற்றவனென்றுனையிக்காணிலத்துள்ளோரிகழ (இந்)
சந்திரமதிசந்திரனை தூஷணித்துச்சொல்- சீசபத்தியம்,
கடினசித்தனேயுனைக் கண்ணுக்குக்கண்ணாக
வைத்திருந்தானே ஸ்ரீவாசுதேவன்
நஞ்சுடல்பிறந்தநீயஞ்சாநெஞ்சனென்றலோ
சிரமிசைதரித்தனன் சிவனுமுன்னை
பாவியேஉந்தனைப்பிராணநாயகனென
அரிவைரோகிணிதேவியாசையுற்றாள்
கோமளமேனியனென்றலோகுருபாரி
தாரைமாதுந்தனைச்சார்ந்தணைந்தாள்
கொடியபாதகாவுனதுதுர்க்குணமறிந்தும்
என்னமாய்க்காதலுற்றனர் கன்னிமார்கள்
நிமிஷமாவதுபொறுத்திடார் நினதுமாய்கை
நிதத்தையசற்றுமிலையோ பூர்ணசந்திரா உ

வசனம்

இவ்விதமாய்தூஷணித்து மறுபடியும் தன்னிடத்திலிருக்கிற பிராணசகிகளைச்சொல்லிக்காட்டும்விதங்களைக்காண்க,

௰க-தரு-இ-ம்-அடாணா-ஆதிதாளம்,

பல்லவி,

அதிதுரிதமாகவோடடா-அடடாசந்திரா
அதிதுரிதமாகவோடடா

அநுபல்லவி

கதியளித்திடுமீசன் கழுத்திலிருந்தநாகம்
சதிசெய்யவந்தனையே சடையிலொளித்திருக்கு(அதி)

சரணங்கள்

க, பிம்பந்தனக்குப்பிரதி பிம்பமொன்றிருக்கத
பிம்பமெனதுமுக பிம்பமென்றறியாயோ (அதி)
உ, காந்தியுளதானது காந்திக்குநிகரான
காந்தியென்மேனியென்று ராய்ந்துபார்த்திடுமிக(அதி)
௩, அமுதமிருக்குதந்த அமுதத்துக்கிணையெந்தன்
அமுதமொழியேதேவ ரமுதமென்றறியாயோ (அதி)

வசனம்

இவ்விதமாய் சந்திரனைத் தூவித்தபிற்பாடு வசந்தனை நிந்திப்பதுகாண்க,

சீசபத்தியம் -இ-ம்-எதுகுலகாம்போதி

விரகியர்மிசப்பயங் கரமுருவேளையில்
உன்னையேன்படைத்தன னுந்திபூத்தோன்
உலகையுண்டவனெனவுயர்த்தபெருளமாயன்
உனைபெக்குவித்தன னேதுதங்கின்றாய்
அனங்கனைத்தீப்பத்து நீறாக்கியவாண்டவன
அங்கயினனென்றனையறிகிலானோ
எந்தநாளினிலேனு மெந்தமாமுனியானுஞ்
சாபமிட்டுந்தனைச்சபித்திலாரோ
கஞ்சன்முதலானவர்களும்வஞ்சநீசர்
ஆனபிறகுனையான்சொல்லியாவதென்ன
யூகித்தறிவதினனுவசிதமில்லை
வாடவெனையாளடாபோரில்வசந்தமன்னா

௨௰-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்,

பல்லவி,

வாவாவாவசந்தா-உந்தன்வளமுயர்தளமுடன் வாவாவாவசந்தா

அநுபல்லவி,

ஆவலுடனேவந்தாய் ஆஜிசெய்கொடுமை
பாவையானுனையோர்கைபார்க்கிறேன் போர்க்களத்தில் (வா)

சரணங்கள்,

௧, உள்ளபுன்மதிகெட்டு உருவிலியையேசித்தாய்
உன்னிலுமவன்மிக வுயர்ந்தவனேவசந்தா
வெள்ளமிகுத்தால்நாய் பள்ளந்தூர்ந்துபோமென்ற
வள்ளலறிந்திடாயோ துள்ளாதேபோர்க்களத்தில் (வா)
௨, களிபங்கயங்கண்டு களித்தென்னெதிர்வந்தாயுன்
காட்டங்கண்டாலென்முக வாட்டமடைவேனென்றோ
பனிதமின்னலைக்கண்டு பயந்திடவிற்பதுங்கி
படத்தைவிரித்துப்பாம்பு பசித்துவந்திருக்குது (வா)
௩, அலைக்குளசைந்தசைந்து நிலைக்குள்நில்லாமல்நிதம்
கலைக்குறைந்தானைச்சேர்ந்து கலங்கிறாயோவசந்தா
தலைகீழாயோதநு தலையேயெந்தன்முன்னேசெஞ்
சிலையுடனேவாமுலை மலையுடனமர்பொருத (வா)

கலித்துறை,

திங்கட்குடையுந்தென்றலுந்தேருந்திமிங்கிலத்தி
னங்கட்கொடியுமருங்கிள்ளையூர்திடலைமுரசம்

தூங்கக்கரும்பின் றுலக்குநல்வில்லுஞ் சுமலுவண்டி
வங்களிறுறுளனங்கனைக்கண்டு நடுங்கினனே

வசனம்,

இந்தப்பிரகாரமாய் சந்திரபதியானவள்வசந்தனைநிந்தித்துக்கொண்டிருக்கும்போது சந்திரனைக் குடையாகவும் தென்றலைத்தேராகவும் மகரத்தைக்கொடியாகவும் கடலை முரசமாகவும் கரும்பைவில்லாகவும் வண்டினங்களை நாணாகவும் இசைத்து சேனைசைன்ய மாக்கிக்கொண்டுவந்த மன்மதனைக்கண்டு நடுக்கமுற்று பாணப்பிரயோகங்களுக்கஞ்சி கெஞ்சுவதுகாண்க,

௨௧-தரு-இ-ம்-பியாக்-அடதாளம்,

பல்லவி

எய்யாதடாமதனுசனே-எய்யாதடா

அநுபல்லவி

எய்யாதடாமெய்யினிற் றையாதடாபிடிக்கஞ்
செய்யாதடாவென்மேற்கண் வையாதடாவம்புகள்
எய் வாயோ-ஐயாவுன்மனம்
றாக வாயோ-செய்யாதவினை
மெய் வாயோ-வையகத்தினி
லுய் வாயோ(எய்யாதடா(

சரணங்கள்,

௧ பதிவிருதையார்க்கோய் பஞ்சஞ்செய்திடுமெந்த
பதிபோதனையோமாரா மதிமோசமோசொல்வாய்
இது வேதோ-நீசெய்திடு
வது வாதோபெண்ணாய்பிறப்
பது திதோ பூமியிலினி
யுத வாதோ(எய்யாதடா)

௨, கன்னமாபுரியாளும் மன்னன்மகளாமென்னைச்
சின்னப்படுத்தவரு முன்னையறியேனிந்நா
ளெங் கானோ-எவனுனக்குச்
சொன் னானோ தூசங்கட்டி
நின் னானோ மன்னர்வருநா
ளெங் கானோ (எய்யாதடா)
௩-வெண்பழியேர்க்காதே கண்பிழைபார்க்காதே
செண்பகமேனியைப் புண்படச்செய்வது
பண் பாமோ-பெண்பழிகொள்ளல்
வீண் போமோ விண்ணவனொனல்

கண் பாமோ-கணைவிடுமுனைக்
காண் போமோ (எய்யாதடா)

சந்திரமதிசொல்-வெண்பா,

மன்னவனீயாவா பேரமானிலத்திலேமதியிற்
சின்னவனையல்லாற்சிறந்தவனே உன்னை
மதிப்பாரோபூவுலகில்மங்கைபர்கட்கிவ்விதியை
விதிப்பாரோவேதன்விளக்கு

வசனம்,

அசோகேளாய் மன்மதா நீஇராஜனுவாயா பூபதிகளிலேஅம்பபத்திக்காரனேயொழிய கண்யமுள்ளவனு உன்னிடத்திலே உலகத்தாரியாவரும் சந்தோஷப்படுவார்கள் அந்தப்பிரமதேவன்தான்ஸ்திரீஜாதிகளுக்கு மாத்திரம்இவ்வளவு விரகதாபத்தை உண்டாக்கலாமா,வைகலசிவசெந்துக்களும் உன்னாலேஎக்காளும் காமாந்தகாரமென்னுங்கடலிலேயமிழ்ந்தி கரைகாணமல் மடியலாமா சிவசிவா அரிஅரி

௨௨ தரு இ-ம்-பிலகரி-அடதாளம்

கண்ணிகள்,

௧, மாதற்மேற்கணையெய்தல் மன்னவர்க்குத்தகுமோமன்மதா-இந்த
நீதருனைபோல்காணிலத்திலுங்காண்கிலேனே மன்மதா
௩, குடியிருக்கவீட்டைக்கொளுத்தக்கோருவாருண்டோமன்மதா என்ன
பொடியிருக்கதோகையிற்பூமாரிபொழிகிறாய்மன்மதா
௪, வண்கோனேற்றயே வல்லவனேமிக மன்மதா உன்னை
கண்டவர்கைக்காரோகரும்புவில்லோனென்றால் மன்மதா
௫, திங்கட்குடைபிடித்தாய்தென்றற்றேரேறினாய்மன்மதா இவை
யுங்கள்குலத்தவர்க்குரியவிருதுகளோ மன்மதா

சந்திரமதிசொல்-ஓசபத்தியம்

மகிதலந்தனைக்காக்கும் மாயவன்றவத்தினில்
எங்குவந்துபிறந்தாயேமன்போல
கணவனைக்கண்டிடக்கன்னியர்தமைசக்கும்
பாவியென்றேன்பெயர்படைத்தாய்நின்றாய்
யாருதவமறிவண்டேயில்குயில்கிளியிலே
இவைகளைத்தோழாக எங்கணுற்றாய்
மூவுலகினுங்கோருமோகிக்குமந்திரம்
உபதேசஞ்செய்ததாரோதுமதனு
நல்லதாகட்டும்நீயும் நல்லவனையானால்
நங்கையைவாட்டுதல்நியாயமல்ல

21

இருவருக்கனமெனமனந்தேறவுந்தன்
மாயைசெல்லாதபோபோடம்மந்திரத்தே (௬)

௨௩-தரு-அடாணா-அடதாளம்.

பல்லவி

அடடாமதிகெட்டபோடா மன்மதாமெத்த
ஆசைவமடையாதடாபோடா (அடடா)

அனுபல்லவி

அடடாபோருக்குப்புறப் படடாசவுரியத்தை
விடடாமலர்க்கணைக வெடடாவுன்னிலுக்கேடா (அடடா.

சரணங்கள்

௧, கணைக்கெள்விழிக்கணையுன் கரும்புவில்லுக்குப்புருவம்
இணைக்கிணைத்தென்றற்றேர்க்கென் அக்குழற்றேரிருக்குதா (அட)

௨, அம்புலிக்குடைக்கெந்த வழகியமுகமுந்தன்
மும்மதக்கங்குலாவைக்கெதிர் முலையானையொண்டிருக்கு (அட)

௩, வண்டோனுக்கெந்மேனியலர்ச் செண்பகமுண்டிந்தன்
வெண்டிரைக்கடலுக்கிதோ விரகாக்கினியிருக்கு (அடடா)

கலித்துறை

குன்றலைவுநெடுங்கொடுந்தென்றலோசையுங்குமுதவண்பன்
கன்றலரக்கிரைகடன்மூர யோசையுங்கன்னகல்விண்
சென்றலைவுஞ்சுகமருளைருயி ரோசையுந்திறந்தெதிரே
நின்றலைவுக்கன்றிரே மாறைதோழியைநினைந்தனளே

வசனம்

இவ்விதமாய் விரகதாபத்தினல் சந்திரனையும் மன்மதனையுந்துஷித்துசந்திரமதியாளவள் முன்தனக்கு கடவர்த்தமான முறைத்தசித்ராங்கியென்னும் சகியாளவள் வாராதிருப்பதுகண்டு ஏக்கமடைந்து விரகவேதனையால் வருத்தப்படுவதுகாண்க

௨௪-தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்

பல்லவி

வந்தாளில்லையே-என்பாங்கி-வருத்தமறியாளோசித்ராங்கி

அநுபல்லவி

சொர்க்காபணத்திலுள சந்தாபந்தீர்த்தருளும்
சிங்கபுரமன்னவர் வந்தாரென்றுஇன்னம் (வந்தாளி)

சரணங்கள்

௧, கொண்டைச்சொருக்கிய பொல்லாவண்டினங்கள்சூழக்
கொங்கைகள்பேழ்பாவிக் குமுதவண்பனுமூல

கொண்டைக்கொடிபோன்செய்யுஞ் சண்டையின்மனம்நையக்
கேள்வர்க்கழிக்கைசெய்ய கெலித்தனைகாணுய்ய (வந்தா)

௨. பிரியாநேசத்தாலென்னைச் சரியானசகிமார்செய்த
பெரும்பாக்யந்தன்னைச்சிறு பேதைநானறிவேனோ
அரிவைப்பருவமுதல்அய்ளிசெய்யு மனக்குள்
கெருவமடக்கியானுக் கேழ்வர்வந்தாரென்றென்முன் (வந்தா

௩. வாகாளக்கனையுற்ற வாலைப்பருவங்கண்டு
ஏகாந்தமாய்நடக்து இரதிகாந்தன்செய்போரில்
மோகமாகக்கலந்து முத்திதந்துதழுவும
பாகருணக்குகந்த பிராணேசர்வந்தாரென்னை (வந்தா)

விருத்தம்.

மதிமிகுந்தசக்கிரமதியிக்கவாறு
மனமகிழ்ச்சிதருமெனதுதோழிவாரா
விதிமிகுத்தேதனக்கன்றன்னைவெல்ல
வேறுவகையேதனதோவறிகிலேனே
நிதிமிகுத்தவிக்காட்டிலெனவிளம்பி
நெடிதுருகும்வேளையினிலுமையாள்போலக்
கதிமிகுத்தகுறவஞ்சியொருத்திவந்து
கதிக்கின்றாள்மின்கொடிபோல்நிக்கின்றாளே;

வசனம்

அகோகேளும் தர்மபுத்திராதிகளே அதிசாதுர்யமுள்ளசந்திரமதியானவள் நமக்குசந்தோஷத்தைத்தரப்பட்ட பிராணநாயகர் வந்திருக்கிறாரென்றுசொல்லிப்போனசகியானவள் இன்னமும்நம்மிடத்துக்குவாராதவகைஎன்ன இந்தமன்மதனை செயிக்கிறதற்கு முடியவில்லையேஎன்று சிந்திக்கும்போது முக்காலக்குறிகளையும் அறிந்து சொல்லப்பட்ட உமாதேவிக்கொப்பான வடிவையுடைய குறவஞ்சியானவள்சபைக்குவருவதுகாண்க

௨௫-குறத்திவருகிறதரு-இ-ம்-தவுராஷ்டகம்-ஆடதாளம்

பல்லவி

வஞ்சிவந்தாளேமலைக்குறவஞ்சிவந்தாளே

அநுபல்லவி.

செஞ்சிலைமாரனுக் கஞ்சிவிரகநோய்
மிஞ்சிவருந்தி வஞ்சிபனைமிகக்
கெஞ்சிக்களிப்புறக் கொஞ்சிமகிழ்ந்திடும்
ரஞ்சிதமோகன சஞ்சிவிமருந்திடும்

வசனம்கூடையில்லையாம்மேகட்ட கூடையில்லையாம்மேகட்ட
டையில்லையாம்மேகட்ட

சரணங்கள்.

௧. பாரமுலைமுக மேருவியமாம்
பார்க்கவொண்ணுதசொற் பனமெனவாமிடை
பரினிஸ்முல்லை மலைபொத்துதனை
பஞ்சபாணனுமஞ்சப் பார்க்கும்விழிக்கடை
சூரத்தவத்தில் மிகுத்தமகிடா
சூரனைவென்றதிரி சூலியெனக்குற (வஞ்சி)

வசனம்-முறமில்லையாம்மேகட்ட-முறமில்லையாம்மேகட்ட-முறமில்லையாம்மேகட்ட.

௨, பங்கயந்தன்னைப் பழிக்கின்றபாதமும்
பரிவுளநூபுர வொலியிசைகீதமும்
செங்கதிரைக்கண்டு செழித்தமலரெனச்
சிறந்தமுகமும்செப் பரிபகரங்களும்
பொங்கமுள்ளவள்ளைப் பூவைநிகர்செவி
பூக்குமிழ்நாசியைப் பொருந்துமெனக்குற (வஞ்சி)

வசனம்: பச்சையில்லையாம்மேகுத்தபச்சையில்லையாம்மேகுத்த பச்சையில்லையாம்மேகுத்த.

௩, மானைச்சடையுடை யானைத்தொழுதேத்தி
வள்ளிமணாளன் மலர்ப்பதத்தைவாழ்த்தி
பூனைக்காச்சிவக்கா மணிகள்மிகப்பூட்டி
பொற்புளமாத்திரைக் கோலுங்கையிற்காட்டி
தேனைப்பழித்தமொழி யாயெனுமமுதாட்டி
தெரிவைமீதுஅள்முன்னுரிமையப்பாராட்டி (வஞ்சி)

வசனம்: கூடையில்லையாம்மேகட்ட முறமில்லையாம்மேகட்ட பச்சையில்லையாம்மேகுத்த.

[illegible]தவிருத்தம்.

கொந்துலைந்து தளர்ந்துமெலிந்தநக
சிந்துருகுஞ்சந்திரமதியைத்தேற்றிப்
பந்தமாமுலைகுலுங்கக்குறவஞ்சி
வந்துவாசல்வளமதுகூறுவாள் (௬௧)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் வந்த குறவஞ்சியானவள் மன்மதனால்பீடிக்கப்பட்டு சிந்தனையுற்றுதயக்கமடைந்த சந்திரமதியின்மனத்தேற்றமுறும்படி மதிதயமுகாரஜனது வாசல்வளப்பங்கூறிவருவதுகாண்க.

அ

௨௬-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

வாசலிதுகாண்-மதிதயேந்திரன்-வாசலிதுகாண்

அநுபல்லவி.

நேசமிகுந்தபாக சாஸனன்முதலோர்விண்
வாசமுடனபணியும் வள்ளிமணவாளருள் (வா)

சரணங்கள்.

௧, அஷ்டலக்ஷ்மிகளுஞ்சந் துஷ்டியுடனேவாழும்
இஷ்டமதாகமிகு சிஷ்டர்கீதமுஞ்சூழும் (வாச)
௨, கோதில்லாதமனு நீதிநெறிசூழும்
ஆதியன்மால்போற்றும் சோதியருள்திகழும் (வாச)
௩, போதகுமாரகுரு பாதந்தொழுதுநாளு
வேதமோதுஞ்சௌம்ய நாதரவாயருளும் (வாச)

சந்திரமதிசொல்-விருத்தம்.

வாசலின்வளங்களினிதாய்ச்சொலி
பாசமுற்றுப்பரிவுடனேசெக
தீசனருளாலிங்குவந்தவுன்
நேசம்யாதுநீயோவெனக்கூறினள். (௧௨)

வசனம்.

அகோவாரும்பெண்ணே மகாசந்தோஷமாய் லோகநாதனுடைய கிருபையினாலே எங்களரண்மனைக்குவந்தஉன்னுடைய அறுபந்தமென்ன நீயார் எனக்கறியச்சொல்லும் மாதுசிரோமணியே.

௨௭-தரு-இ-ம்-சங்கராபரணம்-அட்டதாளம்.

பல்லவி.

ஆரடி-அந்தபெண்ணே-நீயாரடி

அநுபல்லவி.

ஆரடிநீயெந்த ஊரடிஉனக்கென்ன
பேரடியென்முகம் பாரடிஅடிவாடி (ஆரடி)

சரணங்கள்.

௧, நாககன்னிகையோமே னகையோதிலோத்தமையோ
மோகனாங்கியோசெகன் மோகினியெனவந்தாய் (ஆரடி)
௨, ஆவலுடனேயுனை யாவரறிவாரதை
மூவருமறியவுன் முழுமறியோமனைப்பாய் (ஆரடி)
௩, மாத்திரைக்கோலுடன் மகிழ்ந்துவந்தாய்கைக்குறிச்
சாத்திரமுறைப்பாயோ சங்கரிபோலேவந்தாய் (ஆரடி)

வசனம்.

அகோவாராய் மாதரசே உன்னுடைய ஊரேதுபேரேதுநீயார் நாககன்னிகையாதிலோத்தமையா மோகனாங்கிபோலவந்துள்ளாய் வாசல்வளப்பஞ்சொல்லிவந்தாய் உனக்கு ஸாமுத்ரிகா லட்சணந்தெரியுமா கையிலேமாத்திரைக்கோலுடன்வந்த வகையென்ன உன்னுடைய சாதியென்ன இவையெல்லாம் விஸ்தாரமாய் தெரியப்படச்சொல்லிவாரும் பெண்ணே.

விருத்தம்.

ஆதிநான்முக லாகவவனியில்
நீதிகன்னெறி யாவுக்குமொப்பவே
சோதிபோல விளங்குஞ்செகத்திலுன்
சாதியேதெனச்சாம்பவிகூறுவாள் ௧௩

வசனம்.

பூர்வகாலம்முதலாக இந்தபூலோகத்திலே இராஜநீதிகளுக்குத் தக்க உன்னுடையசாதியின்னிலமை ஏதென்றுகேட்டபோது உண்மையன்னப்போதுள்ள குறமாது சொல்லுவதுகாண்க.

௨௮-தரு-இ-ம்-கல்யாணி அல்லது சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

ஆரென்றிருயிந்த-அவனியிலென்னையென்றும்
அறியாயோநீமடமானே

அநுபல்லவி.

பாரெல்லாஞ்சுற்றித்திடப் பற்பலகுறிகளும்
வருத்தமாதிரிக்குறப் பாவையானவளானே - ஆரெ

சரணங்கள்.

௧, மூவர்க்குஞ்செகதலம் புகழ்ந்திடுமுப்பத்து
முக்கோடிதேவர்க்கும் முனிவர்க்குங்குறைதீர
தேவர்க்கத்தோர்கட்குங் குறிகள்சொல்லத்தொடுத்து
குபேரசர்க்கொருபெண்ணைக் கொடுத்தோர்தன்னருள்
(சேர (ஆரென்றிருய
௨, குறவள்ளிக்குலந்தழைத் திடவரங்கொடுப்போம்
கொழுந்தனையழைத்தொரு குடிகூசக்குட்படுப்போம்
உறமுடனருந்தவர்க் குபசரித்திடுப்போம்
உலகில்காலங்களைதெய்வமெனச்செஞ்சமெடுப்போம் - ஆரெ
௩, அரவில்லாமலையடி வாரத்தன்றிரிவோம்
அன்புடனறுமுகன் பூசைகள்புரிவோம்
களவின்மறைக்கண்டால் கல்மாரிசொரிவோம்
சாரினிதனிலாக்கியர்கள் மூக்கையரிவோம்-ஆ
௪, விமலரெவர்க்குமலே யாசாட்சிகொடுத்தோம்
விரும்பியெங்குமித்தீர்கள் மனக்குறைவிடுத்தோம்

அமலன்முதலோரை படிபணிந்தமுத்தோம்
அரசர்குலத்தோர்பர சாட்சிதனைக்கொடுத்தோம் - அ

விருத்தம்.

இலைமையென் கெறியைச்சொன்னுயின்
மலைவளஞ்சொலி மனமகிழ்வாயெனத்
தலைவியானவத் தையலைநோக்கியே
அலைமகளனைக் காதலிகூறுவாள் ௧௭

வசனம்.

இந்தப்பிரகாரமாய் சாதிவளப்பஞ்சொல்லி வந்தகுறவஞ்சியை நோக்கிமலைவளப்ப மாதென்றுவினவிய சந்திரமதிக்குக்குறவஞ்சிமலைவளப்புஞ்சொல்லிவருவது காண்க.

திபதை-தரு-இ-ம்-சங்கராபரணம்-திரிபுடைதாளம்,

கண்ணிகள்

௧, எங்கள்மலைதங்கமலை இமையமலையம்மே
இப்புவியோர்களித்துறையும் இடபமலையம்மே
இங்கண்மலைசலமலை திருமலையாமம்மே
தேவர்கள்வந்துறைதினமும் திரியுமலையம்மே
௨, காகமலைசித்ரக்கூடம் நகரிமலையம்மே
நற்றவத்தோர்விற்றிருக்க நாமமலையம்மே
தோகைமலைவெள்ளிமலை எங்களமலையம்மே
துறவோருறைபழனிமலை அருணைமலையம்மே
௩, வெத்தியிருவேழமலை பருணைமலையம்மே
வேதகாலும்ஓதிவரும் விருத்தமலையம்மே
பத்திமிகுத்தவருறையும் பவழமலையம்மே
பஞ்சமாபாதகமொழிக்கும் பருதிமலையம்மே
௪, கல்வினைதீர்த்தருள்கொடுக்கும் விராலிமலையம்மே
வாகானவருணமலை சாமிமலையம்மே
தொல்வினையாவையுமொழிக்கும் ஆர்க்கமலையம்மே
துதிப்போர்கள்குறைநீக்கும் துருவமலையம்மே

விருத்தம்

இந்தவகைகூறிடலும் எந்தாய்களித்து
உந்தனுரையாலெனது வழ்வினையொழிந்தேன்
பந்தமகன்றதென்றுப் பாலியெனவஞ்சி
யந்தமலைக்குள்வதிசயங்களென்றாள் ௧௮

வசனம்.

இப்பிரகாரமாய் மலைவளப்பஞ்சொல்லிவந்த குறவஞ்சியை அவைகளிலுள்ள அதிசயங்களைச் சொல்லியாவென மலைகளின திசயஞ் சொல்லிவருவது காண்க,

---

௧௮-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

மலைகளினதிசயங்கேளாய் அம்மேயிந்த - மலைகளின்

அநுபல்லவி.

மலைகளின திசயங்கள் பலபலவிதங்களுண்டு
மாதேவிநீவாய்ந்தன் மனமகிழ்விப்பேனம்மே - மலைக

சரணங்கள்.

தேனருவிவழிந்து தெளிந்தம்பரத்திற்பாயும்
செங்கதிரவன்தேரின் நிகழுங்கால்களுஞ்சாயும்
வானரங்கள்களித்து வளர்கனிகள்பறித்து
வானவர்க்குக்கொடுக்கும் வழிகளிற்போய்மறித்து - மலை
ஆடிமாவின்மணி யாலேவெயிலெறிக்கும்
அம்புலிமைக்கவள மென்றேதும்பிபறிக்கும்
கர்டுமவரையடுக்கள் நடித்துக்கொம்பிற்றிப்பாயும்
சாமணமீயுமஞ்சத் தருவுமங்கதுதோயும் - மலை
வித்தையாகக்கிளிகள் வேதாகமங்களோதும்
விளங்குங்குயில்களங்கள் விருவிப்பாமெய்போது
சித்தத்துயரொழிக்கும் சிவசப்பிரமலையம்மே
சிங்காரஞ்சொலவாதி சேஷன்கூறுனேகம் - மலை

விருத்தம்.

தாமும்வார்சடையன்சசலனைப்புடை
சூழுமானிலந் தனில்மாதவர்
ஓருவேடத்துளோர்க்குமொழிந்திட
வாழும்நாட்டுவளமதுகூறுவாள் ௧௯

வசனம்.

மலையினதிசயஞ்சொல்லியாதை குறமாதினைப்பார்த்து நாட்டுவளப்புஞ்சொல்லென நாட்டுவளப்புஞ் சொல்லுவது காண்க.

௧௯-த்விபதை-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

கண்ணிகள்.

௧, வேதம்நாலும்நூற்களாறும் விளங்கும்வளநாடு
விமலனிலாவின்குலத்தோர் வெற்றிபெறும்நாடு
போதன்திருமாலாலும் புகழ்ச்சிபெற்றநாடு
பொற்புமிடிவிந்தவரா பொருந்திவசெந்நாடு
௨, தேசமன்பத்தாறினுக்குஞ் சிறந்தவளநாடு
தீரன்சந்திரனரசன் செகுலவும்நாடு
நேசவஷ்டலட்சுமியும் நிலையாயவாழும்நாடு
தெளிதருமசாயுமேதும் நதிபெருகும்நாடு

க, அருந்தவாகடக்ஷிணமும்   விருந்திடுமந்நாடு
அமரர்கொண்டாட்டமுடனே   உந்தமர்ந்திருக்குமந்நாடு
சுரந்தவருட்கடலிதெனசை   சொல்லியநந்நாடு
சுகர்முதலோர்பூசைசெய்து   சுகிக்கவருமந்நாடு
௨, நிலவளமும்மலைவளமும்   நிறைகண்ணேநிகாடு
நித்தியானந்தம்கொண்டமனு   நீதிக்கழ்காடு
குலவன்மைகளனுவளவும்   குறைவிலாநந்நாடு
குமரகுருபதம்போற்றிக்   கொண்டாடுமந்நாடு

விருத்தம்.

உலகிலுள்ளநன்னாட்டினிலங்கங்கு
இலகியவிச்சையெல்லாமொழிந்தநீ
விலகியெங்கெந்தநதிதனிலாடினாய்
அலகிட்டாப்போலறையெனக்கூறினேன்   ௩௭

வசனம்.

இந்தப்பிரகாரமாய் நாட்டுவளப்பஞ் சொன்னகுறத்தியைப் பார்த்து நதிவளங்கள்கேட்க நதிவளஞ் சொல்லிவருவதுகாண்க,

௩௨-தரு-இ-ம்-கேதாரகௌளை-ஆதிதாளம்.

பல்லவி.

நானுரையுபுண்ய   நதிகளின்வளமைகேள்
தேனார்மொழியுறை   தெரிவையர்க்கரசே (நானுரைய)

அநுபல்லவி.

மேனாளிற்செய்த   தவப்பலனுனக்கிது
மெல்லியரோயிந்த   மேதினியிலுற்றது (நானுரை)

சரணங்கள்.

க, மங்களமிகத்தருங்   துங்கபத்திரைநதி
மகிமைமிகப்படைத்த   மாலாபஹாரிநதி
செங்கதிர்குலத்தோனை   சிறக்கச்செய்யும்காளிந்தி
சிருலாவியசொர்ண   முகிசிக்தசரஸ்வதி(நானுரை
௨, காதம்பினிகபினி   கபிலைமகாநதி
கண்டகிபம்பைநதி   காச்யபிகாவேரி
கௌதமிகிஷ்ணவேணி   கர்த்தமாலகாயத்ரி
கௌசிகைகோமுகி   கலுஷவிமோசனி(நானுரை
௩, வேகவதிபவானி   வருணையசிலாயு
வேத்ராவதிபாப   நாசனிரேணுகா
மேகமாலாநதி   மிகநலந்தருஞ்சுவேதா
மேன்பசுந்தருப்பிம   சுபிபாநதி(நானுரை)

விருத்தம்,

கனகலம்பாவுமொழித்துகளித்துநீ
பலகலைகளுங்கற்றுணர்ந்தவன்னே
உலகுமீதிலுனக்கிணையோரிலை
தலமகிமைகள்சாற்றெனக்கூறினேன்   ௩௮

வசனம்,

நதிவளஞ்சொன்ன குறவஞ்சியைப்பார்த்து தலமகிமைகள்சொல்லி வருவாயென்ற சந்திரமதிக்கு அனேகபுண்யத் தலமகிமைகளைச் சொல்லுவதுகாண்க,

௩௩-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்,

பல்லவி.

பூதலத்தினில்மிகப்   புண்யதலங்களுண்டு
புகலக்கேளடி   யம்மே-அம்மே (அம்மே)

அநுபல்லவி,

காதல்கொண்டினைப்பேனுன்   கருத்தென்னிடத்திருத்தி
களித்துக்கொண்டாடிமிகக்   காட்சிபெறுவாயம்மே (பூத)

சாணங்கள்.

க, நம்பிதெண்டனிட்டுக்   களித்தவலம்வரக்
கருத்தில்நினைப்போரைக்   கருதியழைத்திடும்
காலதூதர்களைக்   கனவிலும்விடுத்திடாக்
கருமஞ்செய்தேமிகக்   கருணைதழைத்திடுந்
தொண்டுசெய்தநாளு   தொழிலுஞ்செய்வோர்பத
தூளியெனத்திரி   வார்க்குமுத்திதரும்
துறவோர்கள்வாழுஞ்   சிதம்பரமென்றொரு
தூயபதலமுண்டு   தொல்லுலகினிலம்மே(பூத)
௨, ஊர்வனங்களாய்ப்பிறந்   தெத்தனைசெனனமோ
௨ தமச்செந்துவென்   றுலகினில்வாழ்ந்துபின்
உய, ப்பறக்கின்ற   பறவைகளாய்ப்பிறந்
தூர்வியுள்ளோர்மகிழ   ஓங்குநற்புகழுற்று
பார்தனில்நடப்பன   வாகச்செனித்ததினும்
பதவிதனில்மிகுந்து   பசுவாய்ப்பூவிற்செனித்து
பரிவுள்ளமானிடச்   செனனந்திருவாரூரிற்
பலித்தவர்க்கினியுண்டோ   பவமெனுமல்லலம்மே(பூத)
௩; வேதபுராணங்க   மாதியாறுநாலும்
விளங்கியசௌதல்மார்த்   தாதிஷண்மதங்களும்
விரிகடல்சூழ்ந்த   பூதலத்தினிற்பெருகிய
விமலர்களியாத்   தலங்களினிலங்களும்

கோதாய[illegible]யாகாதி க்ருதுக்களுடன்
குலவணமைக்கவுறமற பிதுர்க்கள்புவிமிகழும்
குவலயமெலுஞ்சிவ காசிவிச்வரித்தோர்க்
குயர்முத்திதருமன்றே புலவோரும்புகழும் (பூத)
௩, முன்னொருகாலத்திற் திருமாலும்விரிஞ்சியும்
மூடியடிகாணவென் றன்னவராகமாய்
முயற்சிக்கொண்டுதேடித் தேடிகெடுந்தாம்
முடியாமலோடிவந் தேர்மிகவேகமாய்
இன்னொருக்காலும் பண்டயோமிவ்வணைவம்
என்றடிபணிந்தோரை ஏற்றிக்காட்சிதந்த
ஈசனருணேச லேசனுண்ணமுலை
நேசனைநினைந்தோர்க்கு நிறைந்தமுத்தியாமம்மே (பூத)

விருத்தம்

பாரளாவருக்குமயனுக்கும்
நீரணிந்தநீலகண்டர்க்குக்குறி
யோரச்சொல்லிப்புகழுந்தவிராங்கிய
சீரதென்னொனசசேயிழைசாற்றுவாள்

வசனம்

அகோகேளும் தர்மபுத்ராதியரே தலமகிமைசொன்ன குறமாதைப்பார்த்து அந்தந்தஇடங்களில் குறிசொல்லிவாங்கின வெகுமதிகளெங்கேயென்றுகேட்க அவைகளைவிவரமாகச்சொல்லுவதுகாண்க

௩௪-தரு-இ-ம்-அசாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

அரிகரபிரம்மாதி கட்குநான்குறிசொல்லி
அடைந்தவெகுமதிகள் பாரம்மே

அநுபல்லவி.

விரிகடற்சூழ்புவியில் வெற்றிமிகுகண்ணேசி
வேந்தன்றவத்துதித்த விமலசந்திரமதியே (அரி)

சரணங்கள்.

௧, நாமகள்மேற்பிரமன் மோகித்தகுறிகண்டு
கூடியவள்மனதைத் தேடிச்சொன்னேனேர்குறி
சோமாயவன்சந்த நிறைமதிகலையித
செறிதவருநற்புத்தி மாலைதந்தாள்பாரம்மே (அரி)
௨, மிக்கவைகுந்தன்மீது லெக்ஷுமியாசைகொண்ட
மெய்யைநான்சொன்ன மெய்க்குறியால்மகிழ்ந்து

கைக்கங்கணமுத்தங்கப் பீதாம்பரமும்தீனை
ளையுத்தத்துமணக் களித்தாளிதோபாரம்மே (அரி)
௩, மலைபரசன்மகள்மேல் கைலையொளிமோகித்து
மணம்புணர்வதறிந்து மகிழ்ந்துசொன்னகுறியால்
விலைமதிப்பில்லாச்சந்திரக் கலைபளித்துக்கொண்டாடி —
வெகுமதியாகத்தா விளங்கும்மணிபீதம்மே

விருத்தம்

நெறியெலாம்வெகுநேர்மையாயென்னுனம்
அறியச்சொன்னதுயானந்தமிக்கக்கொண்டேன்
வெறியனைகளைவெல்லவெனக்கொரு
குறிசொல்வாயென்னக்கோதைமுன்கூறினாள் (சாய்)

வசனம்

இவ்விதமாயவ்விடங்களில் வாங்கியவெகுமதிகளைக் காட்டியவுடனேசந்திரமதியம்மாள் தனக்குக்குறிசொல்லென குறத்திபூசைத்திரவியங் கேட்பதுகாண்க,

௩௫-தரு-இ-ம்-பைரவி. அடதாளம்

பல்லவி

குலதெய்வபூசைசெய்து குறிசொல்வேன்நான்கேட்பதை
கொண்டுவந்துகொடடியம்மே

அநுபல்லவி

கலிவந்தணுகாது காரியசித்திபுண்டு
காமாசனைவெல்லும் கணவனுனையணைவான் (குல)

சரணங்கள்

௧, தருமணச்சாந்திட்டுத் தரைமொழுகிஅம்மே
நல்குசந்தனத்திரூர்க் கோலமிட்டுஅம்மே
பெருமணவரைகட்டிப் பிள்ளையார்பிடித்திட்டு
பெருமையாகத்தொழுதீ யேகம்வலையறிந்து (குல)
௨, அருகுவில்வம்தும்பை அருமைச்செம்பரத்தையும்
அமலத்தாமரைப்புட்ப மல்லிகைதனித்துப்போற்றி
பருகும்பொரிகடலைப் பியாவல்முப்பழமும்
பாக்குவெத்திலைத்தூபம் பூதகாணிக்கையிட்டு (குல)
௩, ஆதிபராபரியை [illegible]பாதியுள்களித்து
அறுசுவையமுதந்தநல் லன்னப்பாவாடையிட்டு
பாகிப்பெண்குணமான பார்ப்பனருளாய்வளரும்
பயாரியவுடனே பிரார்த்தனைசனைத்தெளித்து (குல)

விருத்தம்,

கலிதன்னைக்கடிக்கிமுடுக்கிற
லலிதவட்சகலாதகக்குறைவென
ஜலதிதன்னிலக்காளவெருக்கிடப்பின்
குலதெய்வங்களைக்கும்பிட்டுக்கூறுவாள் (௬௧)

வசனம்

இவ்விதமாய்சகலமான பூசாவிதானம்செய்து குலதெய்வங்களை கும்பிடுவதுகாண்க,

௩௨-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்-

பல்லவி

ஆதிமூலப்பொருளான விநாயகனே
அருள்தரவருவாயே

அநுபல்லவி,

சோதிச்சுடரொளி யாகவிளங்கிய
சுமுகனேஞானஞ் காரனேஷண்முகனே(ஆதி)

சரணங்கள்

௧. கந்தாகுமாரகுரு கடவுளர்க்கதிபனே
கடைகண்ணருளிக்காவாயா
கானத்திற்புள்ளிமான் புதிர்க்குறக்குல
கன்னிவள்ளிநாயகியே
சந்தாபம்தீர்க்கும்அா விந்தைப்பொற்சரணனே
சாம்பசதாசிவனே
சத்ருசங்காரனே சங்குசக்ரதரனே
சதுமுகதேவனை ஈன்றபத்மநாபனே(ஆதி)

௨, திருமலைவாசனே ஓ தேவர்கள்நேசனே
திருவருள்தருவோனே
திருக்குடந்தபுரி வாழுஞ்சக்கதேவியே
தில்லையம்பலத்தழகே
பெருமலைமேல்வாழும் அருமைப்பெண்களரசே
பெருகுமுத்துமாரியே
பேசரியவல்லியாளும் ஒழித்தாளும்
பெருந்தேவியேதிருக் குருந்தவனத்தாயே(ஆதி)

௩, குவலயங்கொண்டாடும் கோலமருளியை
கும்பகோணக்கரியே
கொண்டாட்டமுடன்வரும் சண்டனைபுதைத்திட்ட
குன்றமயில்வின்பாதியே

கலையாவுமொழிக்கும் கனதுஷ்டிக்கருப்பியே
கருணைப்பொன்னியம்மையே
கருத்திலிருந்தெந்தன் உளைத்திநினைந்தருள்
கந்தலையின்றஆனந்தபைரவித்தாயே (ஆதி)

விருத்தம்,

வையத்தோரைவாழ்த்துக்குறவஞ்சி
தெய்வதேவர்கள்பாதந்தொழுதபின்
செப்பமாமலர்தன்னைச்சிரத்திடுக்
கையைக்காட்டெனக்காரிகைகூறுவாள் (௬௨)

வசனம்,

இந்தப்பிரகாரமாய் குலதெய்வங்களை கும்பிட்டு சந்திரமதியின் கையைப்பார்ப்பது காண்க

௩௩-திபதை-தரு-இ-ம்-உசேனி-திரிபுடைதாளம்

கண்ணிகள்

௧, கைதாஅம்மேகைதாகாமன் கணைக்காசேகைதா
கருணைநிதியெனமேவிய கமலமலர்க்கைதா
மைத்தாவியவிழிபாலேசெம் மணிகள்தரும்கைதா
மன்னன்சந்திரதயஞ்செய்தவ மகளேவலக்கைதா

௨, முல்லைநகையாளேதவ மோகநாக்கியுன்கைதா
முத்துக்குயர்வித்தேகிளி மொழியேசெழுங்கைதா
எல்லையில்லாத்தவமாதர்கள் இறையேயுந்தன்கைதா
ஜனன்குமரேசன்றனை எத்தித்தொழுங்கைதா

௩, சோமகுலக்கொழுந்தேகர்ப்பின் சோதியேதிருக்கைதா
சுருதிமுகலெல்லையும்புகழ் கடலேயெழிற்கைதா
ஏமசபையீசன்றந்த எத்திசைமேயுங்கைதா
இமையோர்புகழ்சந்திரகுலத்திறையேயருட்கைதா

௪, கோகநகமேயன்ன குயிலினமேகைதா
குவலயமாதரசிக்கிரு குணசீலியேகைதா
மோகனமாமயிலேதவ முத்தேசெழுங்கைதா
முனிவர்புகழ்ம்போற்றுஞ்செங்குமுதமாமலர்கைதா

௫, கண்டோருநாடாளன்றவக் கடலேயருட்கைதா
கருத்துணர்ந்ததுரைப்பேனுநற்கருணைமிகுங்கைதா
விண்ணோர்ச்சியராமுதேசத்திய வியக்கேவெற்றிக்கைதா
விரையாய்நற்குறிகேட்டிட விரும்பிவந்தனைதா

விருத்தம்,

உரவிசீயிக்காஞ்சைக்கெனைப்போலிலைத்
தூறவியென்னுளத் தோற்றமிதாமெனப்

பறவின் னுமன்னுள்ளோர்பிரமிக்கவே
குறவிமலைக்குறிய துகூறுவாள் (௪௩)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் கைபார்த்து குறிசொல்லும் விதங்காண்க

௩௮-தரு-இம் ஆனந்தபைரவி-சாப்புதாளம்

கண்ணிகள்

௧. திருவுளத்துதித்தகுறி சொல்லுகிறேன்கேளாய்-குல
தேவியையமனத்திலுன்னி யாதரித்தாளாய்
குருகுமாரதேவரருட் குறிதோணுதம்மே-அவர்
கொண்டுவரும்கோலமனைக் கோலங்காணம்மே
௨, அக்காளாயிந்தரேகை தன்னாட்பாரம்மே-இது
அஷ்டலட்சுமியுமுன்தோழமை புகன்றிடாளம்மே
நக்கனையடிபணியும் ரேகையிதம்மே-என்ன
நாடிவரும்சக்கரதேவி நாட்டங்காணம்மே
௩, வெத்திபெறும்ரேகையிதின் சத்தம்பாரம்மே-மன
வேதனையகற்றியாளுஞ் சோதனையம்மே
பத்தினிப்பெண்களைக் காக்கும்ரேகையிதம்மே-இந்த
பாரினிலுந்தன்றனை யோரிலையம்மே
௪. விசித்திரமனேகங்காட்டும் ரேகையிதம்மே-இதில்
விளங்குறவிதங்கள்மெத்த வேடிக்கையம்மே
பசித்திருப்போர்க்கன்னமிடு ரேகையிதம்மே-மெத்த
பாக்யவதியார்க்குமிது யோக்கியவதியம்மே
௫, இந்தரேகைசத்யதர்மம் மேற்றிமம்மே-உன்னை
ஈரேழுலகும்புகழு மியற்கைதானம்மே
வந்தவரிந்தரேகை சுந்தரமம்மே-இது
வையகத்தோரொருவருக்கும் வாய்த்திடாதம்மே
௬, அம்மேயிந்தரேகையே ஜோதிக்கங்கேளம்மே-புவியில்
அரிவையர்க்கிதுவமைப்ப ததிசயமம்மே
செம்மையாகக்கேட்பாயிந்த ரேகைதானம்மே-உந்தன்
சிந்தனையகற்றியாளும் செல்வமுண்டம்மே
௭, பூமிதன்னிலிந்தரேகைத் தன்மைகேளம்மே-நீ
புருடனொடுபத்தோனைமனம் புணருவாயம்மே
காமிதம்பரவுமுதவும் ரேகையிதம்மே-இதைக்
காலகாலனுமறிந்து காணுவனுதம்மே
௮, அண்டரும்மறியவொண்ணு ரேகையிதம்மே-உன்னை
அணையுமோவனல்லாதெவரு மறியொணுதம்மே
தெண்டனிட்டுக்கொள்வாய்குல தெய்வத்தையம்மே-நாடு
செல்வமுமித்தனையுஞ்சூழும் சொல்வதென்னம்மே

விருத்தம். 36

சுந்தமார்சடைக்காரிமையேயுனை
இந்தவாறுரைத் தேகவோவேண்டினேன்
அந்தமாயெனை யாளவருபவர்
எந்தநாட்டுக்கினைவருவாரையென்றாள் (௪௪)

வசனம்

இந்தப்பிரகாரமாய் குறிசொன்ன குறவஞ்சியுடன் சந்திரமதி தர்க்கஞ்செய்வதுகாண்க,

௩௯-இ-பிறை-தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்,

கண்ணிகள்,

௧, ஆகாநீமெத்தச் சமர்த்தியடியுந்தன்
அசப்பும்பசப்புந்நா னறியாமல்மோசம்போய்
வேகமாயுன்னைத் தொடர்ந்துவந்தேன்மன
விருப்பமறியாமல் வீண்போதுபோக்கிறாய் (ஆகா)
௨, தோகையரேமதி யுகத்திலுந்தன்
தொல்வினைதீர்க்கத் தொடர்ந்துவந்தேனைத்தன்
ஆகமகிழ்ந்துசொல்வே னவனுண்டிடும்
அவனியின்மேன்மையா மயோத்திநாடம்மே (தோகை)
௩, வெள்ளியின்மிக்கவவ் வேந்தனயத்தையும்
விளங்கியவேதன்மா லானும்புகழ்ந்திட
தாழ்வில்லாதுசாப்பாயித் தாரணியோர்புகழ
தையலேயெனைச்சுற்றும் மையல்தனைத்தீர்ப்பாய் (ஆகா)
௪. அந்தரிமனங்களித் தளித்தபொற்றேரேறி
ஆசைகொண்டுசேது ரங்கதளத்துடன்
சுந்தரியேவந்தா னுன்னைமணந்திடச்
சோர்வில்லாசத்தியரிச் சந்திரமன்னவன் (அந்தரி)

விருத்தம்,

வந்தகுறவஞ்சியித்தவண்ணஞ்சொல்லி
வனிதைசந்தவெகுமதிகளெல்லாங்கைக்கொண்
டந்தமுடனடந்தனளம்மதியேந்திரன்
அடைந்தசபைக்குமார்முகவோரும்வந்தார்
தொந்தமுளசந்திரமதிதனையநோக்கச்
சொல்லுமெனும்வசிஷ்டருநாதனைவிளைய
சுந்தமலர்த்திருடிசியொன்றுந்துவந்து
சதிக்கின்றான் கன்னிகைமனக்குறிக்கின்றதோ (௪௫)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் சொல்லிவந்த குறவஞ்சிக்கு அநேக

மானாத்ராபரணத்தினை வெகுமதிகொடுத்து அனுப்பினபின்பு மதிதய மகாராசன்சபைக்கு தேவர்கள் முனிவர்கள் இராசாக்கள் முதலானஸ்தலத்தாரும் வந்துநிறைந்தார்கள் அந்தவேளையில் வசிஷ்டமகாரிஷியானவர் சந்திரதயமகாராசனைப்பார்த்து உம்முடைய சௌபாக்கியவதியான சந்திரமதியை மணக்கோலத்துடன் சபைக்கழைத்துவரச்சொல்லுமென்றவார்த்தையைக்கேழ்வியுற்ற சித்ராங்கியென்னும்சகியானவள் எழுந்துவருவதுகாண்க

௪௰ தரு-இ-ம்-செஞ்சுருட்டி-திரிபுடைதாளம்

பல்லவி

சந்திரமதிக்குகந்த சகிவந்தாளையா
சந்திரமதிக்குகந்த சகிவந்தாளையா

அநுபல்லவி

அந்தியிலெழும்பூர்ண சந்திரநிகர்முகார
விந்தமெனவேபிரம்மா நந்தமடைந்திருந்த(சந்திர)

சரணங்கள்

௧. பாதச்சிலம்பொலிகள் கொஞ்சவிழித்துப்
பார்க்கும்பாவையிற்பஞ்ச பாணனுமஞ்ச
காதலனாகுதன்னை மிஞ்சமிக்
களித்துக்காரிழையவள் கைகூப்பிக்கொஞ்ச(சந்திர)

௨. இலையுள்காமனைச்சினத் தோங்கிக் கூட்டிச்
சேர்க்கப்பிரிக்கவொண்ணுந் தெரிந்தசித்ராங்கி
கலைகள்யாவுங்கற்றுணர்ந்த பாங்கிப்பருவ
காலமறிந்துரைக்கக் குருதம்ராத்தாங்கி(சந்திர)

௩. வஸ்திராணனைவாலி லெத்திவாயும்
வனிதையர்மனத்தினை வாகுடன்தேத்தி
தண்டினபமாரிபனைப் போற்றி-நானுந்
தையற்சந்திரமதியைத் தழுவுஞ்சங்காத்தி(சந்திர)

விருத்தம்.

மன்னவரிவ்வாறுவந்தவள்முன்னன்மதியினுறநவையதிர்ந்தெழுந்து, செங்கதிர்குலத்துமன்னவரெவருஞ் சிறந்தகல்யாணமண்டபத்தில், பொன்மொய்விரைந்துவந்தணர்நீயும் புறப்படு மகிழ்ந்தெனை, மங்கையர்முடிக்கண்வேளமதிபோல் மதிதயன்மகளும் வந்தனளே (௬௧)

வசனம், —

இவ்விதமாய்வந்தசகியானவள்சந்திரதயமகாராசன் சமையமறிந்துசந்திரமதியினந்தப்புரஞ்சேர்ந்து சகலமான ராசாசக்களும்வேதவேதாந்த வேதோத்மரிஷிகளும் பிராமணர்களும் கல்யாண சபைக்குவந்துவிட்டார்கள் தாயேநீயும்கல்யாணசபைக்கு எழுந்தருள்வாயென்றழைக்கச் சந்திரமதியானவள்கல்யாணசபைக்கு வருகிறவிதங்காண்க:

௪௧-தரு-இ-ம்-தர்பாரி-அடதாளம்,

பல்லவி

வந்தாள்சந்திரமதி மனமகிழ்ச்சி தந்தாளதிசமதி

அநுபல்லவி

செந்தாமரைமலராச் சினத்தமலர்முகத்தி
சந்திரதயன்றவத்தில் வந்தசுந்தரவதி(வந்)

சரணங்கள்

௧. செண்பகமலரொளிச் சிவந்ததிருமேனி
செகத்தினிலிவளைப்போ லில்லைகல்யாணி
பண்புமிகுத்தப்பாரில் பலர்க்குமிவளபிமானி
பதிவிரதைகளிலுண்டோ பாரிலிவள்சமானி(வந்)

௨. இன்னலிசரிடையா அன்னநடையுடையாள்
சவுரிபின்னற்சடையாள் சாதுர்யமுடையாள்
கன்னல்பரிவிய காமனிசிக்குலடையாள்
கண்டோர்களிக்கச்செய்யுங் காட்சிமிகவுடையாள் (வந்)

௩. மூவுலகோர்கட்கு மிவளனுகூலி
மும்மூர்த்திகளுமிவளை முனிந்திடமோசி
பூவுலகினிலிவ ளேபுண்யசாலி
புறக்கும்போதேகழுத்திற் புனைந்தாள்புகழுந்தாலி(வந்)

௪. அழகினில்ரதிதேவி அன்பிலவனிதேவி
அமுதம்படைப்பதி லன்னமாதேவி
பழியபேர்மீதிற் பார்வையினில்ஸ்ரீதேவி
பாரிலரிச்சந்திரற்காய்ப் பண்ணியதிவளாவி(வந்)

விருத்தம்.

உத்தமியிப்படிவந்துபெற்றவனையடிபணிந்து
உடுவினமதிதயனையொத்திருந்தாள்
மத்தமதகரிபரிகள்நத்திவருஞ்சுற்றமுடன்;
மெத்தமயனுற்றரசர்மிகுத்துவந்தார்
மெத்தப்பெருஞ்சேனையுற்றவரிச்சந்திரனும்
வெற்றிமிகுசபைநோக்கிவிரைவில்வந்தான்
அத்தலைமையுற்றசபைமத்தியிலோர்சித்தினிப்பெண்
ணுக்கியெழுந்தவரவர்களுறவுசொல்வான் (௬௨)

வசனம்,

இந்தப்பிரகாரமாய்வந்த சந்திரமதியானவள் தன்னுடைய தந்தையான சந்திரதயமகாராசனை நமஸ்கரித்து தாரகைக்கணங்களுக்குநடுவேயிருக்கிறசந்திரனைப்போலசபையிலேவந்திருக்கிற ஸ்திரீசெனங்களின்மத்தியிலே அமர்ந்திருந்தாள் அந்தசமயத்திலேசகலமானராசாராசரும்சகலசேனைகளோடுவந்தார்கள் அரிச்சந்திரமகாராசனும் ஆசைகொண்டுவந்தான் அந்தசமயத்திலே சித்திராங்கியென்னும்பாங்கியானவள் சந்திரமதிக்கு சபையிலுள்ளோர்களினியல்பைச்சொல்லி வருகிறவிதங்காண்க,

சித்திராங்கிசொல்

௪௨-தரு-இ-ம் உசேனி-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧, மாதுசிரோமணியே சந்திரமதியேநீவாராய் இந்த
மன்னமன்னவரையுன்னிப்பார்த்துவிடைதாராய்மனந்தேறாய்

சந்திரமதிசொல்தரு

ஆவலுடனிவடம் வந்தவரசர்கள்தன்பேரும் ஊரும்
ஆசைகொண்டுரைக்க நேசமானதிப்போதே வஞ்சிமாதே
௨-(சித்) வானவர்புகழுதற்கானவரங்கள்பெற்றதாயே இந்த
வரிசையுள்ளோர்மதோர்குருதரிவர்களைப்பார்ப்பாயே காரிப்பா
(சந்தி) மானேமரகதமே மயிலேகுயிலனமே இந்த [யே
மண்டலீகருக்குநான் தெண்டனிடஆந்தாளாது மீனாது
௩, (சித்தி) கன்னமாபுரியாளும்மன்னன்தவத்துதித்தகன்னி - இவர்
கவுடர்கன்னுடர்சினர்கலிங்கர் தெலுங்கர்களைக்காணு - இன்ப
[ம்பூணு
(சந்திர) மின்னேரிடையினிற் பெண்ணமுதேபெண்ணேயுன்னி இவர்
மெத்தமோகங்கொண்டதெத்திறத்தடைவோர்-களோய்- னையா
ளாய்
௪. (சித்தி) முகிலைவென்றகலச்சைவலத்தைமுனித்தகூந்தலழகி- இ
வர் மூவர்புகழுஞ்சோழர் முதியபாண்டியர்சேரர்-முன்னோர்
சபைதன்னோர்
(ச) அகிலைச்செண்பகத்தைக்கேதகையையிகழ்ந்தமேனியாளே
இவர்-அண்ணன்றம்பிமுறைமையாகுமென்பதையறியாயோ குறி
யாயோ
௫. (சி) பால்தேனமுதைமுப்பழத்தைப் பழித்த மொழியாளே
இவர் பார்ப்பார்குர்ச்சரர்பாஞ்சாலர் நேப்பாளர் பாராயெ
னக்காராய்

(சந்) வெல்லியிந்திரன் வில்லைப்பழித்தவிழியாளே இந்தவேந்தரு
க்குழ்ந்திருக்குமாரகுருமெந்தன் சிறதக்கை பெருங்
௬, (சித்) அன்னத்தைமருகி யதனைப்பழிந்தநடையாளே - இவர்
அவந்தியர்கள் ஆரியர்கொங்கணர் அன்னேயிடை மின்னே
(சந்) பன்னகத்தைப்பழித்த சன்னற்பின்னலுற்றசடையாளே-இந்
த பார்மன்னவரெவரையும் பார்க்கவெனக்குச்சிறு பாட்டன் -பெரும்
பாட்டன்,

௭, கொங்கைக்குடத்தைப்பூரணக்கும்பத்தைச்சினத்தமுலையாளே இ
வர், குடகர்வடுகர்சினர்கோசலர்கூட்டமிதுகோதாய் - எந்தன்தாதாய்
(சந்) பங்கயத்தைக்கூர்மத்தைப்பருக்கபதத்தையுடையாளே- உ
ந்தன், பார்வையின்முன்னேயுள்ள பந்தியிலுள்ளவரைபாரு- கவித்த
௮, (சித்) பருதிகுலத்தபாலரிச்சந்திரிவரோ - இந்தப்பாரிவருக்கி
ணையாரையுரைப்பீ பனிவர்க்கிவரோ-மிகுந்தவரோ

(சந்) கருதிபபடிக்குக்கண் காட்சிபருளியகாதலியே-இவனைக்கண்
டவுடனேப்ரமைகொண்டுயென்மதிமயங்குதடி-தயங்குதடி

வசனம்,

இவ்விதமாய் சபையில்வந்திருந்தவர்களையெல்லாம்குறிப்பாகக்காட்டிக்கொண்டுவந்து அரிச்சந்திரமகாராஜனிடத்தில் வந்தநின்ற அவருடையகுணநிசயங்களைச்சொல்லும்போது ஆசையடக்கத்துணையாத அரிச்சந்திரமகாராசனெதிரேந்து முகத்தைப்பார்க்கும்போது கழுத்திலேயின்னிய மாலைகல்லியருஸ்திரத்தைக்கண்டுநினைத்துச்சொல்லுகிறவிதங்காண்க

விருத்தம்

அந்தமுடனவையணியாயிருந்தவன்பத்
தாமதேசத்திடைவரிபல்புகழ்
வந்தசகிதனை அழகவனசோக்கி
வனிதசிரோமணிசந்திரமதிகைத்துத்
தொக்குமுளவல்களைனுபங்குறித்
துடர்ந்தவனைக்கடைப்பக்கி நோக்கம்காடி
எந்தன்மனக்களவனிகோவென்மோகானும்
எழில்கல்டானரிச்சந்திரனெழில்கொண்டானே ௪௯

வசனம்

அகோகேளுந்தர்மபுத்திராதிகளே இவ்விதமாயன்பத்தாமதேசத்திராசாக்களினியல்புகூறிய சகியினது வாய்மொழிகேட்டுக் கொண்டிருந்தவள் அங்குள்ளவர்களுடைய குணபாவங்களைச்சொல்லிக்

கொண்டுவந்து கடைப்பக்தியிலிருக்கிற அரிச்சந்திரமகாராஜனைக்கண்டவுடனேஇசெயுற்று தலைகுனிந்துமனக்குறிப்பினலே இவர்தானே என்னுடையபிராணநாயகனென அரிச்சந்திரமகாராஜன் ஆனந்தசந்தோஷபரிதனனுதுகாணக,

சுங-திபதை-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-திரிபுடைதாளம்.

கண்ணிகள்,

க, கன்னிகைமனத்துளகருத்தையறிவித்திடக்
கண்டகதிர்குலத்தோன் களித்தானே
உன்னிப்பார்த்தவ்வாறுளத்துதித்தகாதலாலவள்
உவமையில்லமுகக்கண் ணொளித்தானே

உ, சங்குநிகர்கழுத்திலங்குந்தாலியின்ப்ரகா
சத்தினைக்கண்டுமனஞ் சலித்தானே
சங்கொழிக்கவல்லோரமையிதுகழைத்தானென்று
ராஜதன்மனத்து டேசலித்தானே

௩, தன்னிகரில்லாமதிதயனவ்வகையறிந்து
தன்னியனுளேமென்று கடித்தானே
அன்னியரவர்களுமயர்வுறவரிச்சந்திரன்
அரிவையின்பெருமையை கொடுத்தானே

ச, அவ்வுரையேமெய்யாமுலரசரொருவரேனும்
அறியீரோவீங்களென்றே அறைந்தானே
ஒவ்வுமோயிவ்வுபாண்டம் ஒப்புவாருண்டோவென்றே
உரவியில்மதிதயன் உறைந்தானே

ரு, அச்சபையோரெவரு மரிச்சந்திரமன்னவன்பொய
யறைந்ததென்னென்றேமனந் திகைத்தாரே
முச்சகமும்புகழ முக்கண்ணரன்றுதர
முயன்றதிவ்விதவென்று நகைத்தாரே

சா, அரசரெவருமனங்களிக்கச்சொல்லக்கேளீரென்
றுனந்தங்கொண்டுநடஞ் செய்தானே
புரிசடையோனளித்த வரத்தினைமதிதயன்
புகழ்ந்துகொண்டுமனத் துய்த்தானே

எ, தங்கத்தாலியுடனித் தைதில்லுவிம்பிறக்கத்
தற்பரன்முன்னேவரம் தந்தானே
இங்கதறிந்தவரிச் சந்திரனதிலே
எவரும்நினைக்கொண்ணுதென் றிசைந்தானே

அ, தேவராசியமிது தெரிந்தவரிலரெனத்
திருவருட்படிவைக் கண்டாரே
காவணத்துள்ளடைந்தகதிர்குலன்மனங்குன்னிக்
கருத்துவையோகியர்மாற் கொண்டாரே

கூ, அத்தருணத்திற்சந்த்ரமதிகைப்புட்பமாலையை
அரிச்சந்த்ரர்க்கென்றேவானி லெறிந்தாளே
சொர்க்கவந்தன்கழுத்திற் கோணுதப்புட்பமாலைக்
குடிகொண்டுவிழுந்ததைய றிந்தாரே

ய, நயத்திற்சிறந்தானிவன் றனக்கிவள்மனைவியாகத்
தகுமென்றசரீரவாக் குண்டாச்சே
பயத்திற்சிறந்தோனிவ னென்றேதேவர்பூமாரி
பலதரஞ்சொரியருட முண்டாச்சே

யக, அக்காலத்தரசர்களுன் மகிமையறிந்திலோம்நீ
அன்னையெனுக்கட்டென்றடி மணிந்தாரே
முக்காலுமிநீயெம்மைப் பாதுகாத்திடவேண்டும்
குயலவனென்றுரைத்திடத் துணிந்தாரே

யஉ, அரிவையீதாசைகொண்டஅரசரெவருந்தம்முள்
அடங்காமோகபாசத்தை வீழ்த்தினரே
வருத்தினிற்பிறவர்க ளெவருமனங்களித்துப்
பகருமாசிகூறி வாழ்த்தினரே

வசனம்,

இவ்விதமாய் யோசித்த அரிச்சந்திரமகாராஜனவர் சந்திரதயமகாராஜனை உம்முடையபெண்ணின்கழுத்தில் தாலியேதென்றுகேழ்க்கச்சந்திரதயமகாராஜன் அதிகசந்தோஷப்பட்டு இவரே நம்முடைய மகளுக்குப்புருஷரென்று மகிட்சிகொண்டு இதராராஜாக்களின் இதய மகிழும்படிக்கு ஓ ராஜராஜர்களே இந்தஅரிச்சந்திரமகாராசனென் குமாரத்திகழுத்தில் தாலியைக்கண்டோமென்கிறீர் உங்களுக் காருக்காவது அதுதெரியுமாவென்று கேழ்க்க அவர்களில் நாங்கள் யாதொருவரும் காணோமென்றுசொன்னவுடனே அரிச்சந்திரமகாராசனுமவர்தன்னையழைத்துக்கொண்டுவந்த முனிவர்களிருக்குமிடத்தைநோக்கிப்பார்க்கும்போ தசந்திரமதியானவள் கழுத்துமாலையைக்கைகளிலெடுத்துக்கொண்டு ஆகாசவாணிபூமாதேவிமுதலானதேவர்களைப்பிரார்த்தித்து ஆகாசத்திலெறிய அந்தப்புட்பமாலையானது தாச்செயலாய் அரிச்சந்திரமகாராஜன்கழுத்தில்வந்துவிழுந்தது பிறகுசந்திரதயமகாராசன்சந்தோஷப்பட்டு எல்லாராசாக்களையும்பார்த்துத்தவக்குருவானவர்குளிச்செய்தவரப்பிரசாதத்தின்மகிமையையும்சொல்லி யுபசரித்தார் பிறகுயாவரும் ஆனந்தமடைந்து தேவர்கள்முதலானவர்களும் பூமாரிதூவி ஆசிகூறிவாழ்த்தினார்கள் தவம்மியர்வசிஷ்டர்முதலான முனிவர்களும் அம்பத்தாறுதேசத்துராஜாக்களும் யிருந்து கலியாணம் நடப்பிக்கும் விதங்காணக,

வசனம்

(வசிஷ்டர்) தவுமியர்முதலானவர்களும் ராசராஜர்களும்வேதவேதிப்ருஞ்சொல்லுதல் (தேவர்கள்சொல்) அசோ வசிஷ்டமகாமுனிசுவரரே (வசி) ஏன் (தவுமியரே (என்-கல்யாணசாமக்கிரியெல்லாம்வந்திருக்கிறதோ (தவுமியர்) ஸமஸ்தஸமபத்தும் வந்திருக்கிறது (வசிஷ்டர்) புண்யாகவாசனத்துக்கு எத்தனம்பண்ணலாமோ இல்லையோ (தவுமியர்) முன்னேமுன்னே பிள்ளையாத்து கல்யாணந்தான் ஆரம்பிக்கவேணும் (வசிஷ்டர்) ஆம்-சரித்தான்பரத்வாசரெங்கே-கௌதமரெங்கே- வாலஇல்யரெங்கே (தவுமியர்) அவர்களெல்லாரும் எங்கேயோதெரியாது விசுவாமித்திர மகாரிஷிஸ்வரர்மாத்திரம் வந்திருக்கிறார் (வசிஷ்டர்) ஓஹோ அத்தான் அவன்பேச்சுசொற்பனத்திலேகூடச் சொல்லாதது அவனென்ன தபஸ்வியோ என்ன தேவதைக்குதவ உபத்திரமத்துக்காக ஆனால் பிர்மரிஷிகானென்று சொன்னேன் (தவுமியர்) ஆமாமாமாமுன்னேயே அப்படித்தான் கேள்விப்பட்டேன் (வசிஷ்டர்) நல்லது-இஷ்டமித்திரபந்துவர்க்க அதிதி அப்யாகதாதிசகலஜனங்களும் வந்திருக்கிறார்களா விசாரித்துக்கொள்ளும் (தெவுமியர்) சந்திரதயமகாராஜவேசமஸ்தமானபெயர்களும் வந்திருக்கிறார்களா (சந்திரதய மகாராஜன்) சுவாமி தேவர்களும்-முனிவர்களும்-அவர்முதலான ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்களும் பந்துதார்கஇஷ்டமித்திராதிவரும் வந்திருக்கிறார்கள் கல்யாண முகூர்த்தத்துக்கு (ஆரம்பிக்கலாமா (சந்திரதய மகாராஜன்) அப்படியே ஆரம்பிக்கலாம் (தெவுமியர்) ஏன் அரிச்சந்திரமகாராஜனே முகூர்த்தத்துக்கு ஆரம்பிக்கலாமா (அரிச்சந்திரமகாராஜன்) சுவாமிகளே சபையாருடைய அனுமதியின்படி முப்பத்துமுக்கோடி தேவர்கள் காற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்முதலானவர்களுக்கும் உபசாரஞ்செய்து அநுக்ஞைபெற்றுக்கொண்டு என்னுடையநமஸ்காரஞ்சொல்லி ஐம்பத்தாறுதேசத்துராஜாக்கள்முதலானசர்வத்தாருடையஅனுமதியின்பேரில் முகூர்த்தத்துக்கு ஆரம்பிக்கலாம் (தெவுமியர்) புண்யாகவாசனம் சிவாபஸ்லஸ்து-சாந்தி- உபநயனம் இவைகளுக்கெல்லாம் வேண்டிய சாமக்கிரியைகளை வாங்கிக்கொள்ளுங்கள் (வசிஷ்டர்) அப்படியே அப்படியே நீர்மகாசமர்த்தரோ அக்கோ இப்படிப்பட்டகல்யாணங்களில லட்சோபலட்சம்கோடாநுகோடி நடப்பித்திருப்பீர்கள் சந்திரசூரியவம்மிசத்திலே கல்யாண விமரிசையே மகாசிரேஷ்டம் அரிச்சசந்திரரே சிவாபஸ்வத்தாக் இஉபநயனம்முதலானதுகளுமாச்சுதே பியாத்திரைக்கு புறப்படலாமா அரிச்சந்திரமகாராசன் அப்படியேபுறப்

படுவோம் சுவாமி-தவுமியர்-சந்திரதயமகாராசனே மாப்பிள்ளையெதிர்கொண்டழைக்க சகலசனங்களுந்துடனே எழுந்திருங்கள் (சந்திரதயமகாராசன், அப்படியேவருகிறோம்சுவாமி(தவுமியர்) அக்கினிக்காரியம் நடப்பிவிக்கிறதுகளே (வசிஷ்டர்) கல்யாணப்பெண்ணை மணவறைக்கு அழைத்துக்கொண்டுவரவேணும் (தவுமியர்) அம்மா குழந்தையை அழைத்துக்கொண்டுவாருங்கள் வசிஷ்டர் தெளமியரே அக்னிகாரியங்களெல்லாம் ஆச்சோ இல்லையோ ஆயிற்று (வசிஷ்டர்) சந்திரதயமகாராசனே பாணிக்கிரகணம் பண்ணிக்கொடுக்கிறதுக்கு ஆகவேண்டியசாமக்கிரிகைகள் அழைப்பித்துக்கொள்ளும் (சந்திரதயமகாராசன்) அதோவாரும் சுருணைநிதியென்னும் மந்திரி(மந்திரி) ஐயா (சந்திரதயன்) கோதானுதி சமஸ்தமானதானங்களுக்கும் பிராமணாளை சேமகம்பண்ணிவாரும் மந்திரி(மந்திரி) அப்படியே சேமகம்பண்ணியாய்விட்டது(சந்திரதயன் அவாளவாள் கிரமப்படிக்கு இஷ்டப்படி தானதருமங்களைக் கொடுப்பித்துவிடும்மந்திரி-மந்திரி-அப்படியே மகாபாக்கியம் மகாராசனே (வசிஷ்டர்) சந்திரதயமகாராஜனேசுவாமி(வசிஷ்டர்) விவாககாலமாய்விட்டது கன்னிகாதானத்துக்குஎத்தப்படும் இக்கடத்தில்கன்னிகாதானம் செய்விக்கிற ஸங்கல்பம் செய்துக்கொள்ளவேண்டியது (சந்திரதயன்)அரிச்சந்திரமகாராசனே எமக்குஈஸ்வரவரப்பிரசாதத்தினாலே லபிதமாயிருக்கிற சவுபாக்கியவதியான சந்திரமதியென்னும் என்துபுன்யகுமாரியை பாணிக்கிரகணஞ் செய்து தருகிறேன் மனமகிழ்ந்து வாங்கிக்கொள்ளும் மகாராசனே (அரிச்சந்திரன்) அப்படியேமனமகிழ்ந்தேன் மகாராசனே இனிஅவரவர்கள்போஜனத்துக்கு எழுந்திருக்கலாம்,

அஸ்தமித்தபிறகுநடப்பதுகாண்க,

வசிஷ்டர் சையாக்கிரக ப்ரவேசத்துக்கு சமயமாய்விட்டது சேர்ப்பதான மகோற்சவத்திற்கு யாவரும்வாருங்கள் இவ்விதமாய் தம்பதிகளை பள்ளியறையில் சேரவைத்தபின்பு யாவரும் தெக்ஷதாம்பூலாதி வாங்கிக்கொண்டு அவரவர்கள் வீடுகளுக்குசென்றபிறகு கல்யாணசம்பிரமத்தை புகழுவதுகாண்க,

புகழ்ச்சி-ஓரடி-தரு-இ-ம்-தோடி- ஏகதாளம்,

ஒருநூட்டர்க்கண்ணிகள்;

௧, சந்திரதயேந்திரன்றன் செந்தவத்துதித்தபூர்ண
சந்திரமதியைஅரி சந்திரன்மணம்புனர

மந்திரமுறைக ளுரைத்தார் வெகு
சுந்திரமதாய்க்களை யலங்கரித்தார்

௨ கல்யாணபேரிகை யடித்தார் சந்ரதயன்
சொல்லியபடியேவேலை யெல்லாமுடித்தார்
எல்லோருமனந்த மடைந்தார் ஆதிசேடனும்
சொல்லரியமுனிவர்மண வுறைதொடர்ந்தார்

௩ வாழைகமுகுகள் நாட்டினர் பரவுசெடும்
வானமட்டும்பந்தலையுலாவ வோட்டினர்
ஆழிபோலேதிரை யமைத்தார் மிக்கவலங்
காரமாய்வேதிகையுடவுடன் சமைத்தார்

௪, தூணுக்குத்தூணை நாட்டினர் பூரணச்சந்த்ர
சூரியர்போலவிலக்கண்ணாடிகள் மாட்டினர்
சாணுக்குச்சாண்மாலை தொடுத்தார் தங்கமயமாய்
தாலமுங்கும்பமுந்தக வாகவெடுத்தார்

௫, பொன்னரிமாலைகள் தேக்கினர் கண்ணயமான
பொற்பதுமைசித்ரப்படம் பொற்பாய்த்தூக்கினர்
கன்னபுரியோர்கள் நிறைந்தார் அணியணியாய்
காவலர்சேனைகளுடன் கலந்தங்குறைந்தார்

௬ பூரணகும்பங்கள் பதித்தார் முனிவர்வேத
பூசுரர்வேதாகமங்கள் புகழ்ந்து துதித்தார்
தோரணத்தால்வெளி மறைத்தார் வரிசைவீதி
தோறுஞ்சொர்ணமாரி பொழியவேயிறைத்தார்

௭ மாணிக்கத்தீபங்க ளேற்றினர் முகமலர்ந்து
மனோகமழ்வாடை கஸ்தூரிபுனுகுதீக்கினர்
ஆணிப்பொனுடைகள் சாற்றினர் வீதிவீதியாய்
ஆலபனிநீரின்மாரி யாகஊற்றினர்

௮, சந்தனத்தாந்தோலஞ் திட்டினர் மணவறையைச்
சார்க்ககற்பகத்திவற சாணிபூட்டினர்
சுந்திரப்பாலிகை கூட்டினர் தூமணமும்
தூபமுந்தீபமுந்தூரி சாகக்காட்டினர்

௯, பொன்னிலவட்டம் வீசினர் மகரந்தம்
பொழிந்திடும்புட்பசாலக்க ளெங்குந்தூவினர்
மத்தளமல்லரி தாளங்கள்பேரிகையொடு
சுத்தமத்தளங்கைத்தாள முகவீணைகள்

௰, நாககரமபில்லாங் குழல்கள் வயத்துக்கள்
கசராடம்ருதங்கள் நத்தமொத்துக்கள்

மோர்சிங்குகள் மகுடிகள் முதலாகிய
மூப்பத்திரண்டுவாத்ய முழக்கங்களும்

௰௧, அண்டகோளமெங்கு முட்டவே அந்தத்தொனியைக்
கண்டவர்கள்கொத்தளித்துக்கைகள் கொட்டவே
பந்திபந்தியாக விருந்தார்-பந்தல்நடுவே
வந்தவர்யாவரும்புட்ப மாரிசொரிந்தார்

௰௨, பூவுலகோர்க்கெல்லா மாவிலை-மதிதயன்றன்
புண்யத்திலுதித்த சந்திரமதிதேவியை
அந்தரங்கத் திருக்கச்செய்தார்- அந்தவேளையில்
அருந்தவரெலருங்கூடி யாசீர்வதித்தார்

௰௩, சத்யதர்ம பரிபாலனை-மணவறையைச்
சாருமென்றராதரவாய் சுபசீலனை
வெத்தியில்மிகுத்த கீர்த்தி படைத்தயோத்தி
வீதிகளையோ குடைக்கீழாளும்மூர்த்தி

௰௪-மந்திரிப்பிரதா னியர்சூழ மணவறையை
வந்திரந்தும்பந்துவர்க்கத் துடனவாழ
சதகோடிமன்மதன் போல-வந்தபின்பத்துச்
சதகோடிரதிதேவிபோல் சந்த்ரமதிவந்தாள்

௰௫-முனிவரெவர்களுங் களித்தார்-தௌம்யவசிஷ்ட
முனிவரிருவருமானந்த முற்றுக்குளித்தார்
முத்துப்போற்றண்டுல மிறைத்தார் சாத்திரத்துள்ளே
முகூர்த்தவேதமந்திர முற்றிலும்விளைத்தார்

௰௬-உத்தமமந்திரம் விளைத்தார்-மாதவத்தோர்கள்
ஓமகுண்டத்தினிலக்கி னியைவளர்த்தார்
கௌரிதேவிபூசை முடித்தார்-சுமங்கலிகள்
கெம்பீரமாய்க்கௌரி கல்யாணங்கள்படித்தார்

௰௭, காந்திதேவதையை அரிச்சித்தார் அதுமுதலாய்
காதல்கொண்டபிர்மசாரி யூத்தைவர்ச்சித்தார்
சபையோரனுமதி கொண்டார் செய்துமுடித்த
சாத்திரச்சடங்குகள் சகலமுங்கண்டார்

௰௮: எல்லாமொருமின்பம் பூணவே சந்த்ரமதியாள்
எந்நாளுங்கணவனை இணங்கிப்பேணவே
மன்னன்மதிதய னென்றுந்து மூலருந்தேவர்
மானிடர்யாவருங்காண மனமகிழ்ந்து

௰௯: சந்த்ராமதிவலக்கை தொட்டு சத்திய அரிச்
சந்திரன்வலக்கைமேலிட்டுத் தன்னிருயிட்டு

பாணிக்கிரகணம் பண்ணினார் அந்தணர்களும்
பாராளர்களென்றும் வாழியாகவென்னினார்

௨௰, கொள்ளைவிட்டார்கோடி கோடியாய் அறுசுகட்டு
சன்னோதிர அன்னமிட்டார் சாடிசாடியாய்.
தேனாமுகயாகப் புசித்தார் ஓபேர்ப்பிரியாய்
தேவரும்பூவோருமுண்டுதேக ருசித்தார்

௨௧. கேக்கதாம்பூலங்க ளளித்தார் வந்தபேர்க்கெல்லாம்
சிந்தைமகிழவேபரி மளங்தெளித்தார்
யாவர்க்குஞ்சன்மானங்கள் செய்தார் உலகிலென்றும்
யாவரும்வாழ்த்த்தேவர் பூமாரிகள்பெய்தார்

௨௨. இந்தவகையாகவே ஆசுந்திரமார்க்கமாகமாயன்
உந்தியிலுதித்தோன்செய்த தந்திரஉபாயத்துய்த
சந்திரதயேந்திரன் செக்தவத்துதித்தபூரண
சந்திரமதியைஅரிச் சந்திரன்மணம்புணர

பொதுவிருத்தம்.

மங்களச்சடங்குசெய்து மகிழ்அரிச்சந்திரராசன்
திங்களன்மங்கைகைபற்றித் திருப்பள்ளியெழுச்சிகொண்டார்
துங்கமாம்பிமுகத்துச் சுமங்கிலிப்பெண்கள்கூடி
மங்களகலமுபாட மகிழ்வுடன் நடக்குவாரோ ௪௪

௪௫-கலங்கிடு-தரு-இ-ம்-சங்காபரணம்,

கண்ணிகள்.

௧. சீர்மருவுமதிதயன்றன்செந்தலத்தில்வந்துதித்த
பார்புகழும்அயோத்தியாளும் எங்கள் பார்த்திபனேபதந்தருவீர்
௨, கந்தபரிமளகளபகஸ்தூரிகமழ்ந்திலங்க
அந்தரங்கமறிந்தநுணு மெந்த ரைசேனற்பதந்தருவீர்
௩, விண்ணவர்மன்னவர்புகழும் வெற்றிபெற்ற நற்புத்தேராய்
அண்ணலெனவந்துதித்த னரசேசைகளேத்தருவீர்
௪, குரிசிலரிச்சீர்த்திபெற்றகோமானேபுமைப்புகழும்
காசிம்மருபனைத்துதிக்கும் பிராணநாதனேநினைக்காரும்

௪௬ பலவிதசெய்கை தரு இ-ம்-உசேனி-அடதாளம்

கண்ணிகள்.

௧, திருமருவி ஈசா-உமது
திருவருள்புரிவீர்பிரா னேசா
௨, பரிமளங்களணிய வாரீர் பெண்ணா
பங்கத்திருந்துமுக்கக் தாரீர்
௩, தருமலர்மாலைதாரோன் வாரீர் கூச்ச
நாச்சமகந்திபெனேச் சேரீர்

42

௩, நெஞ்சைவிட்டகலாத நேசா-அனா
நிமிஷமோர்யுகமாம்பிரி னேசா
பஞ்சபாணன்செய்துன்பந் திரும்-உமது
பாதமெமக்கருளிக் காரும்

௪, அஞ்சலென்றோர்க்கருள் நீதா - இந்த
அகிலமெங்குமிகப்ராக் யாதா
தஞ்சமென்றுமையடைந் தேனே-உமது
தாள்கதியெனத்துடர்ந் தேனே

௫, அம்புவியாண்டஅரிச் சந்திரா-என
தன்னைவருவிரயோத் யேந்திரா
தாம்பூலமருந்தும்ராஜ தீரா-உமது
தாள்தந்தாருங்கள ருரா

௪௭-மாலையிடும்-தரு-இ-ம் சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி

மாலைகளணிந்துமகிழ்வீர்-மணவாளரிவன்
மனுவினுக்கிசைந்துநிகழ்வீர்

அநுபல்லவி

மாலைநேரத்திற்சன்று மாருதன்மதிமன்மத
னுலெழுபடைகளைச் னைத்தெதிர்த்துப்போரில்வெல்ல (மா)

சரணங்கள்.

௧, அனாவிரிசாதிமல்லிகை அரும்பெனப்படர்ந்த முல்லை
தரைமிற்படர்சம்பங்கி தமக்கந்தவிழ்க்குஞ்செண்பக (மாலை)
௨, நாகப்புன்னைகமலர் நன்மணமுள்ளரோஜா
மோகமிருந்தபன்னீர் முனிவரணியுந்தும்பை (மாலை)
௩, விருவாஜிவெண்செவந்தி விமலமாகியகாந்தள்
பருவப்பெண்களணியும் பாரிசாதமலரின் (மாலை)

௪௮-பூவின்செண்டாடல்-தரு-இ-ம்-சங்கராபரணம்.

பல்லவி

செண்டெடுத்தாடினரே-அரிச்சந்த்ரான்
செண்டெடுத்தாடினரே

அநுபல்லவி

அண்டர்புகழ்முனி ரருளினாலுலகோருக்
கன்னைசந்திரமதி தன்னைவதுவைகூடிச் (செண்)

சரணங்கள்.

௧, கண்டார்கவிதிரவே-சந்திரமதி ரணடமயல்மீறவே
தண்டெலாவிச்சந்த்ர தயன்கவலைமீறவே
அண்டர்கள்பூமாரி னுதினந்தூறவே (செ)
டிய

௨, கதிர்குலந்தனிற்பிறந்தோன்-உலகாளுங்-காவலரிச்சிறந்தோன்
சதுர்பெறவொருகுன்[illegible]ழ்ச் சாகேதபுரியுண்டோன்
சமயமகளாலேகாந் சபைத்தேறிமணடோன்(செ)
௩, மல்லிகைபுன்னைமுல்லை-மலர்ந்ததாமரைவெண்செலங்கிபுட்பம்
வல்லிகையார்கொடுக்க வதுவைமன்னனெடுக்க
வதுவைமன்னன்கொடுக்க வல்லிகையாலெடுக்கச்(செ)
௪, சலியாமலிருவருமாம்-பஞ்சபாணன்-சமரினிலொருவிதமாய்
நலியாமலெவர்களும் நகுகொழிக்கிடாமல்
நரசிம்மதாசனும் நவிலுமாமெலியாமல்(செ)

௪௧-லாலி-இ-ம்-காம்போதி.

லாலிகஜமுகதேவ லாலிகுகதேவ
லாலிசதாசிவதேவ லாலிமகாதேவ
லாலிபிதாமகதேவ லாலிதேவதேவ
லாலிசர்வதேவ லாலிகுருதேவ லாலி
லாலிஞானஸ்வரூப லாலிப்ரதாப
லாலிசத்யமூர்த்தி லாலிஜகத்கீர்த்தி
லாலிசந்த்ரமதீச லாலிசாகேதேச
லாலிகோஸலகுலேந்த்ர லாலியரிச்சந்திரா-லாலி

ஊஞ்சல்

திருவளருங்கன்னபுரி தன்னையாளுந்
திரன்மதிதயன்முன்னாட் செய்தவத்தால்
பெருவளமுமிகச்சுகமுந் தருந்திரிநேத்ரன்
பெற்றமனமகிழ்ச்சியினாற்பிறந்தபூவை
ஒருவரிணையுரைக்கரிதகற்பின்மிக்கா
ளுற்றதிருமங்கிலியத்துட னுதித்து
பருவமதிற்கணவனரிச்சந்திரன்கூட
பாவைசந்திரமதி கூடியாடிரூசல். (௫௰)

௪௨-ஆலாத்திசுற்றுதல்-தரு-இ-ம்-சவுராஷ்டிகம்.

பல்லவி

சோபானே-சோபனமே

அநுபல்லவி

வைபவந்தரும் வரதவிக்கினேசருக்கும் சோபானே

சரணங்கள்

௧, புள்ளிமயிலேறி[illegible]தும் புண்யனுக்கும்
பூவைவள்ளிதெய்வ[illegible]யைப் புணர்வானுக்கும்
வெள்ளிமலையாளனுக்கும் விமலன்கும்பேசனுக்கும்
பள்ளிகொண்டசாரங்க[illegible] பாணியர்க்கும்(சே

௨, வேதனுக்கும் விமலைசரசுவதிக்கும்
விண்ணவர்கள்நாதனுக்கும் விமலையிந்திராணிக்கும்
போதமிகுயோகியான புண்யர்தவம்பியர்க்கும்
ஆதவன்குலகுருவா யமைந்தவசிட்டருக்கும் (சோபா)
௩, சத்தியஅரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும்
சத்தியகீர்த்திமந்திரிக்கும் சகலசேனைக்கும்
நித்தியமதிதயனுக்கும் நிறைமதிமந்திரிக்கும்
வெற்றில்மிகுந்துவந்த வேந்தவெவருக்கும்.(சோபா)

(வசனம்) அந்தப்புறத்தில் புறத்தொழில்நடப்பதுகாண்க

புராணவிருத்தம்

உடைபெரும்பண்டமிகக்கலத்தேறி
யொலிகடனீந்தியோர் துறைசேர்ந்
தடைபெரும்பதத்தாற்றமுமென்றோடி
யறப்பயந்திறக்குவார்போல்
படைக்கலவிழியாளணியொடுகலையும்
பணிமலர்த்தொடையலும்பரமாய்
இடைக்கிடர்விளைக்கவருமெனப்புகரி
யிருகையாற்களைந்தருகிருந்தாள் (௫௧)

இதுவுமது

தானைசென்றூர்க்கமங்கலமிடற்றுஞ்
சஞ்சலம்புடம்பிடத் தனைக்கோட்
டானைசென்றடரமாத்தலைமயங்க
வல்குலந்தேரினைச்செலுத்தி
மீனைவென்றடுகண்வேல்படப்புருவ
வில்வளைத்தயோத்தியர்வேந்தை
தேனைவென்றினித்த செஞ்சொலாலின்பச்
சிறுத்தொழில்புறம்பறவினைந்தாள். (௫௨)

பொதுவிருத்தம்

மந்திரந்தந்திரங்கள் மாதவமறையோர்செய்யச்
சுந்தரமிகுந்தமாதர் சுபசோபனங்கள்பாடச்
சந்திரமதிகல்யாணச் சம்ப்ரமமெல்லாங்கண்டு
அந்தரத்திருந்ததேவ வரிவையரி[illegible]சொல்வாரே. (௫௩)

வசனம்

அக்கோகேளும் சபையோர்களே இ[illegible]மாய் அனேகவிமரிசையாக நடந்தசந்திரமதியின் கல்யாண விமரிசைகளைக் கண்ணாரக்கண்டு காட்சியைகண்டு அதிசயித்த தேவர்களுந் தேவகன்னிகையர்களும்புகழ்வதுகாண்க

௫௧-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-திரிபுடைதாளம்.

பல்லவி

சந்திரமதிகல்யாண சுந்திரஞ்சொல்லஆதி
சத்திதேவிக்கல்லாமல் மற்றவர்க்குத்திரமோ

அநுபல்லவி

மந்திரதந்திரமும் வித்யாதிமித்திரமும்
மகம்மாதவங்கள்செய்யும் மதிதயன்மகளான
மதன் கணை-மாரன்மேனியோ
இவட் கிணை-உவமைசொல்லல்
வக் கணை-அவளேயவ
ருக் கிணை-எங்களுக்குத்துணை (சந்

சரணங்கள்

அண்டகோளம்முட்ட வடிக்கீந்துந்திமியேரி
அதுகேட்டவானோர்பூவோர் அடைந்தார்கன்னமாபுரி
எண்டிசையுமுலாவ விசைத்ததாள்களேநாட்டினார்
இயற்கையாகவேசித்ர விசித்ரநாணகள்பூட்டினார்
கொண்டல்மின்மண்டலத்தைக் குறுகியபந்தலிட்டார்
கோலமாமணிகளின் கொத்துகள்தொங்கவிட்டார்
வண்டுமொய்த்திடும்புட்ப மாலைகளனேகமாய்
வான்மீன்கள்போலத்துன்ன மரிசைமிகுந்ததென்ன
மண்டலந்தன்னிலிந்த மகிமைகண்டவர்களும்
மகிழ்ச்சிகொண்டுள்ளடங்கா மையல்மிகவுமிஞ்சி
மாய்கு வார்-மாதர்மேன்மாதர்
பாய்கு வார்-மாரன்வெதுப்பார்
காய்கு வார்-மாதவத்தோர்கள்
தேய்கு வார்-போய்குவார்குமாரி (சந்திர)

மழையைக்கண்டபயிர்போல் மாதவத்தோர்கள்கூடி
மந்திரமுறைகளை மன்னவர்முன்னுரைப்பார்
துறைவழிதனைக்கண்டு தொறுகியவெறுகன்போல்
நொடிக்குள்நாறுவிதங்கள் நாலோர்கொடித்துரைப்பார்
தழைவிரியவனுருக் தண்கமலங்கள்போல
தந்திரங்களைக்கற்றோர் தகவாய்ப்புகழ்ந்துரைப்பார்
பிழையணுகாமற்காக்கும் பெற்றதாய்தந்தைபோல
பெருமகங்கள்செய்துப்த குருவசிட்டர்தேனுமியர்
இழையுமூசியும்போல வென்றுறுமனமொத்து
இணைந்துவாழ்வீர்களென்றுயியல்புடனேபுகழ்ந்து
கூறு வார்-முகூர்த்தஞ்செப்பு
தேறு வார்-மதிதயனுய்யச்

கோறுவார்மகிழ்ந்து சேனை
தூறுவார்-கூறுவாராசிகள். (சந்திர)

54

௩, திங்களொளிமிகு முகங்களோர்சாயலுற்ற
தெரிவையர்கட்குகங்காய் பருவங்கனிற்கூடினர்
அந்தரங்கவைபோக மாச்சுபமங்கலிகள்
மங்களகெவுரிகல்யாண சோபனங்கள்பாடினர்
மங்களவாத்யங்கள்மு ழங்கமணவறையின்
மங்கைதலையிற்செழு மலர்கள்மிகச்சூடினர்
திங்கட்குடையோன்கொடி தெரிவைதியோர்கோடி
திகழ்ந்தங்கிருந்தாற்போல தெளிந்ததேவர்களுநாடி
அங்கம்புளகிக்கவே னந்தம்பரவிபாடி
புங்கவதேவர்களும் பொலிந்தசபையைநாடி
போற்று வார்-பொன்மாரியாகத்
தூற்று வார்-வாழ்கவாழ்கவென்
தேற்று வார்-மனக்கவலை
மாற்று வார்-சாற்றுவார்மணிமுடி (சந்திர)

பொதுவிருத்தம்

வேந்தனுமயிலுங்கூடி விளங்கியகலைமானென்ன
காந்தனும்ரதியுமென்ன களித்தினிதிருந்தபின்னு
வேந்தனல்வரிசைக்கொண்டெழிலுடனயோத்திசேர
வேந்தலாலழித்தபொற்றேரேறியேவருகின்றாரே. (௫௧)

வசனம்.

இந்தப்பிரகாரம் தேவதேவர்கள்முதலானவர்களும் ஐம்பத்தாறுதேசத்துராஜாக்களும் புகழ்ந்துதித்துப்போற்ற ரதியுமன்மதன்போலேகூடிக்குலாவி கொஞ்சிமருவி சிலநாள் மாமனாருடைய அபீஷ்டப்படிக்கு அங்கிருந்து அவர்கள்கொடுத்த சன்மானங்களைப்பெற்றுக்கொண்டு தம்பதிசமேதமாகப் புறப்பட்டு ரதகஜதுரகபதாதி சேனைசமுகங்களுடனே துர்க்காதேவிகொடுத்தபொன்ரதத்தின்மேலேறிக்கொண்டு அயோத்திபாபுரிக்கு வருகிறவிதங்காண்க.

௫௨-தரு-இ-ம்-தனசரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

இரதமேறிவாரார்-இராஜாதிராஜன்
இரதமேறிவாரார்.

அநுபல்லவி.

இரதமேறிவாரார் மதன்ரதிபோலசு
ரதவிதமதிச்சந்திர மதிரிடனொருமித்து (இரத)

சரணங்கள்.

க, ஆனைகுதிரைகளும்   அஷ்டமந்திரிகளும்
சேனைகாவலர்சூழ   செழித்தசத்யரிச்சந்திரன் (இரத)
உ, சிஷ்டர்புகழ்ந்திடும்   வசிஷ்டர்புட்பகமேறி
இஷ்டமுடன்முன்னேக   ஏவர்களும்பின்னேக (இரத)
௩, வாத்தியங்கள்காலெட்டும்   சேத்தியாய்முழங்க
அயோத்தியாளனெவர்க்குந்   தோத்தியபொன்வழங்க (இரத)
௪, கவுரிசாய்மணிகொண்டு   கன்னியர்வீச
கவிவாணர்கள்புகழ்ந்து   களிப்புற்றுபேச (இரத)
௫, குயிலினங்களைப்போல   கோதையினங்கள்பாட
மயிலினங்களைப்போல   மதர்கள்நடமாட (இரத)
௬, மாதவமிகுத்த   மதிதயனளித்த
சீதனங்கள்கைக்கொண்டு   சீருளயோத்திசேர (இரத)
௭, விளங்குகல்யாணபேரி   விளம்பினேற்றுவ
உளங்களித்துப்பூமாரி   யும்பர்கள்தூவ. (இரத)

பொதுவிருத்தம்.

தேரினிலேறிவந்த தெரிவையும்வதுவையானும்
பாரினிற்சூழ்ந்துவந்த பலரையுமனுப்பிக்கொண்டு
காரினைபழித்தகூந்தற் கன்னிதன்மனங்களிக்கத்
தாரினிற்சிறந்தகானத் தரிசயமரசன்சொல்வான். (௫௨)

வசனம்.

ஆகோகேளும் சபையோர்களே தேரின்மீதேறிவந்த தம்பதிகளிருவரும் தம்மைச்சூழ்ந்துவந்த கண்ணோசிதேசத்தாரனைவரையுமனுப்பிவித்துக்கொண்டு அயோத்தியாபுரி பட்டணத்துக்குதம்மோடுவருகிறவர்களையழைத்துக்கொண்டு விமரிசையாக வரும்போது வனங்களிலுள்ள பற்பலவிநோதங்களையும் அரிச்சந்திர மகாராஜன் சந்திரமதிக்குச் சொல்லிக்கொண்டு வருதல்காண்க.

௫௩-தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

ஆசைக்கிசைந்தமனையாளே -என்ன
அதிசயம்பார்மதிதயன்றனையாளே (ஆசைக்கி)

அநுபல்லவி.

ஓசைமுழக்கங்கண்   டுளமகிழ்வாயே
ஒருநாளுங்காணாத   திருநாளைக்காண்பாயே (ஆசைக்கி)

சரணங்கள்.

க, முனிவர்களோதிய   வேதங்களைக்கிளிகள்
மொழிமாறலில்லாமல்   முகஸ்தமாய்படிப்பதும்

தினைப்புனங்களிற்குரங்   கினங்கள்கூடிப்பம்பைகள
இசையுள்ளோர்மனங்களிற்   றிகைத்திடவடிப்பதும்
தினகரன்பரிகள்போற்   றெளிபச்சைநிறம்பாய்ந்த
திகிரியேறிமேடத்   திரள்கொண்டாடிப்பதும்
பொழிலானகத்தினிற்   பிணைத்தோடும்மேகத்தைப்
பிடியானைதனைக்கையாற்   பிணையானைப்பிடிப்பதும் (ஆசை)
உ, வல்லமாதவத்தோர்கள்   மலையேறும்படிபோலே
வணங்கியபடத்துடன்   வளைநாகங்கிடப்பதும்
கல்லுமுள்ளைதக்காமல்   காட்டுபன்றிகள்கொம்பால்
கடினமடவழிகளை   கருதிச்சீர்படுத்தும்
சொல்லரியவயோத்திதனிற்   சத்தியக்கொடிபோல்
தோன்றுமுங்கில்நற்பாம்புத்   தோற்பளபளப்பதும்
வெல்லரியமுனிவ   ரெல்லார்க்கும்வழிகாட்டி
விளங்கியமந்திகள்   வீதிகள்கட்டப்பதும் (ஆசை)
௩, மதகயங்கள்தும்பியால்   மலையருவியைமொண்டு
மாதவத்தோர்கள்க   மண்டலம்நிறைப்பதும்
க்கிர்நிறைதினைகளை   மூக்குநுனியால்கொத்திக்
கருத்துடன்மடந்தனிற்   களிப்புடனிறைப்பதும்
இதமாயோமகுண்டத்தில்   எரிவளர்த்திடமயில்
இயமகையானசிறகால்   எழிலுடன்மறைப்பதும்
நிதமுமாமுனிவர்க   ளணியுமுப்புரிநூற்காய்
நிரந்தரஞ்சிலந்திகள்   நெகிழ்ந்தநூற்றிறைப்பதும் (ஆசை)

விருத்தம்.

அந்தரியன்றருளிய பொற்றேரிலேறி
அரிச்சந்த்ரன்மணவாளக் கோலத்தோடு
சந்திரசூரியரொருக்கா லெழுந்தாற்போலே
சாகேதபுரியதனிற் சகலமான
விதைபுரிவீதியெல்லாம் பவனிவந்தான்
வேதனரன்மால்விண்ணோருளம்பூரித்து
அந்தரத்திற்பூமாரிபொழியச்செங்கோல்
ஆளுமணிமுடிபூண்டானரசாண்டானே. (௫௪)

வசனம்.

ஆகோகேளும் சபையோர்களே இந்தப் பிரகாரமாய் அரிச்சந்திரமகாராஜன் மணவாளக்கோலத்தோடு பொற்றேரேறி வீதிகள்தோறும்பவனிவந்து தேவாதியர்கள் புகழ நவரத்ந மணிமுடிதரித்துக்கொலுச்சபைக்குவந்து அரசாளும்விதங்காண்க.

ருக - தரு - இ - ம் - கமாசு - ஆதிதாளம்,

பல்லவி,

ராஜாதிராஜன்கொலுவில்வந்தான்-ரவிகுலதிலகமக
ராஜாதிராஜன்வந்தான்.

அநுபல்லவி-

பூசிதனைபரத்வாஜர் - [முதலோர்புகழ்
தேஜனமகாராஜன் சத்தியரிச்சந்திர(ராஜா)

சரணங்கள்,

க, சிஷ்டர்புகழ்ந்திடும் வசிஷ்டமுனிவராசிகூற-அருள்சேர
துஷ்டவர்த்தனர்மதி துணுக்கம்தெய்தியச்சோற
அஷ்டதிசையுள்ளோரு மரசன்றன்ஜெயங்கூற
இஷ்டமாயெவர்க்கு மிறைவன்பொன்மாரிதூற(ராஜா)
உ, வேதியர்முனிவர்நாமறை-யோதிப்புகழ்ந்துகொண்டாடமுடிசூட
வித்தியாதரர்கூடி விசித்திரக்கவிகள்மிகப்பாட
ஆதிமன்முந்தேவ விசித்ரக்கவிகள்மிகப்பாட
அரம்பையூர்வசிய ரானந்தநடமாட(ராஜா)
ங, சத்தியக்கொடிபடைத்துநித்தியமும்வாழ்ந்திடும்பிரசித்தன் -பரிசு
சகலஜாதுகூலமான செங்கோலாண்டிடும்நித்தன் [த்தன்
எத்திசையிலுமுள்ள வெற்றிவீரர்கள்நத்த
ஏகசக்கரனை போகமுற்றமக(ராஜாதி)

வசனம்.

இந்தப்பிரகாரமாய்க்கொலுவிருந்த அரிச்சந்திர மகாராஜனவர் தேசத்தியற்கையை விசாரித்துவருவதுகாண்க,

இராஜன் மந்திரிக்குச்சொல் விருத்தம்

சத்தியந்தவறுச்செங்கோல் சதுர்பெறும்நமதுநாட்டிற்
பத்தியதேவர்நீதிபாராளும்வேந்தர்நீதி
முத்தியமறையோர்மற்ற முத்திறத்தவர்கள்நீதி
நித்தியநெறிதப்பாமல் நிகழ்பவைபுகல்வாய்மந்திரி (ருஎ)

வசனம்,

அகோவாரும்சத்தியகீர்த்தியென்னும்சற்குணமந்திரிமைபாப்தேவர்நீதி ராஜநீதி பிராமணநீதிக்ஷத்திரிவைசியசூத்திரர் முதலான வர்களுடைய நடவடிக்கைகளை தெளிவாய்ச்சொல்லி வாரும்மந்திரி

சத்தியகீர்த்தியென்னும்மந்திரி ராஜனுக்குச்சொல்-விருத்தம்.

காலமும்மாரிபெய்யக் கடவுள்தெவருமுய்ய
சாலவேதிகளும்பிர்ம்மக்ஷத்திரியர்வைசியர்சூத்திரர்
சீலராமிவர்கள்நீதிசெல்லுவதயோத்திபோலே
கோலமாய்த்தேவர்கோன்செங் கோமுறையுளதேமன்ன. (ருஅ)

வசனம்.

அகோகேளும் அரிச்சந்திரமகாராஜனே தேவநீதி இராஜநீதிபிரம்ம க்ஷத்திரியவைசியர் சூத்திரர் முதலானவர்களுடையவர்ணாச்சிரமங்களின் நீதிகளும் காலாகாலத்தில் மாரிபெய்யவும் நடக்கிற விநோதங்களானது தேவேந்திரன் ராச்யபரிபாலனம் பண்ணிவருவதிலும் அதிகமாய் நடந்துவருகின்றது மகாராசனே.

பொது-விருத்தம்.

வாரணத்தொலியெழு மன்னிவாயலிற்புகுந்துத்
தோரணத்தெருகடந்து சோபனம்பலசொல்ல
வாரணத்தொலியாதிகண்மறையெனவார்க்கப்
பூரணக்குடஞ்சுமந்து பொற்கோயிலுட்புகுந்தார். (ருகூ)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் தேசவிசாரணை முதலானதுகளுஞ் செய்தபிறகு இரதகஜதுரகபதாதி சேனைசந்தியங்களை ஆஸ்தானத்திலேயிருத்தி பூரணகும்பங்கள்கொண்டு சகலசனங்களுந்தொடர கல்யாணமண்டபத்திலமர்ந்து அந்தப்புறத்தில் நடக்கிறவிதங்காண்க.

ருஉ-சந்திரமதிசொல்- தரு-இ-ம்-பிலகரி-சம்பைதாளம்.

பல்லவி.

நம்மிருவரைப்போற்கூடி-நலமுடனின்பம்நாடி

அநுபல்லவி-

இம்மகிதலத்தின்மின்னே-ரெவரைக்காணலாமன்னா (நம்மிரு)

சரணங்கள்

க, நளமகாராசன்நீரே நாரிதமயந்திநானே
தாவணியும்ஸ்ரீகிருஷ்ணன்நீரே தோகைருக்மணிதேவிநானே(நம்)
உ, தேவர்சேனாபதிநீரே தேவிதெய்வானைநானே
தேவதேவர்கோனுநீரே தேவியிந்திராணியும்நானே(நம்)
ங, நித்யமாமன்மதநீரே நிறைமதிரதிதேவிநானே
சத்யஅரிச்சந்த்ரன்நீரே சுவாமிசந்த்ரமதிநானே (நம்)

பொது- விருத்தம்.

தருவையொத்தகரத்தரிச்சந்திரன்
அரிவையைப்பிரியாம லண்ணந்தநாள்
மருவையுற்றமலர்க்குழல்வல்லிதன்
திருவயிற்றினிற் கற்பந்திகழவே. (௬௰)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் மன்னனுமனைவியும்அந்தப்புறத்திலேரதிகேளிருந்தாறலத்துடனேயிருந்து வாழ்ந்திடுநாளில் கர்ப்போற்பத்தியாவதுங் காண்க.

௨௬-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி.

கெற்பவதியானளே-சந்திரமதி-கெற்பவதியானளே.

அநுபல்லவி,

தற்பரன்செயலினல் தறையிற்பிறந்தபோது
தன்னிகரில்லாத்தங்கத் தாலிபூண்டாண்மாது (கெ

சரணங்கள்.

௧, காதல்மிஞ்சிட மருவிகணவன்றன்
கருத்தையறிந்து சருவி
களிப்புமிருக்கப் புணர்ந்து-காமன்போற்
கலவியாவையு முணர்ந்து
பூவலத்தினி லிவரோபுனிதர்கள்
புகழ்ந்திடும் அருந்தவரே
பொற்பின்மனத்திலுன்னி புகழருங்கற்பின்கன்னி
போகபாக்கியமிவர்க்கே பொருந்தியதெனத்துன்னி
புண்ணியமன்னரில் கன்னியரிவரென
வெண்ணியவசிட்டர்முன் னண்ணியவேள்வியால் (கெற்)

௨, சேவற்பேடையைக் கூடும்-அதுபோலச்
சிந்தையிசைந்து நாடும்
செங்கதிர் குலதீரன்-ரதிகாந்தன்
செயல்படைத்த கெம்பீரன்
ஆவல்கொண் டணைந்திடவே-அடக்கொண
வருந்தளி யிணைந்திடவே
அறுசுவையிற்பிசைந்த புளிசிற்றயிரிசைந்த
வதுபோலரவிந்தத்து ளமர்ந்ததந்தவித்துகொள்
அதுமுதல்நாளேழி லிதமுறமசக்கைகொள்
விதமறிந்தவள்மனே ரதமதற்கிசைந்திட (கெற்

௩, மூவைந்து தினத்திலேபிண்டமும்
முதிர்ந்தவள் வயிற்றினிலே
முதன்மாதத்தினிற் சேரும்-இரண்டினில்
முயன்றெழு பலபுயமும்
தேவகற்பனை யாலேமும்மதியும்
தெளிந்தநற் கதியாலே
திறமாய்வயிற்பருத்தத் தேர்ந்தநான்காமாதத்திற்
திகழுமவயவங்கள் சிறந்திடும்நற்றினத்தில்
திரண்டெழுபசுநா முரந்தனிற்றழைத்திட
பருகிடுமுலைநுனி கருமுகிலொற்றிட (கெற்)

௪, ஐந்தாமாதந் தனிலே-மேழுமாசிக
ளதுமெய்யிற்படரா யிலே
அன்னையின் குழலவிழ்ந்து-மதிசோர்ந்து
அணுவினிடைய நெகிழ்ந்து
செந்தாமரைமுகம் வாடி-செண்பகமேனி
சிவந்துருவழிந்து கூடி
செய்தவறுசுவையின் சிறந்தநாவுணவழிந்து
சீருற்றாம்பண்டங்கள் சீச்சீச்சீமென்றுமிகழ்ந்து
சீருடனிருக்கையில் பேருளகாப்பிசூ
ஆருஞ்சுபசோடனம் நேருடன்கூடிட (கெற்ப)

௫, ஆறுமாதத்திற் சீமந்தம்-அடவுடன்
அடைந்தானே யனுபந்தம்
அதுமுதல்நடை தளர்ந்து-நரகங்கள்பசித்
தரிவையினிடை யுளர்ந்து
கூற்றுணகெற்பந் தலைக்காய்-சல்யங்களுற்றுக்
குணவாயில்நனு மொன்பதாய்
கூறுமேழாமாதத்திற்கோமளமெய்யுருவாய்
வீறுகொள்மதியெட்டில் விளங்குமதிபூதியாய்
குலமகளிவளென நலமுளவொன்பதில்
இலகுமதிற்செனித்திடத் தலமெலாமதித்திட (கெற்ப)

பொது-விருத்தம்,

தற்பரனருளாற்சந்திர தயன்றவமகள்வயத்தில்
கெற்பவுற்பத்தியாகி கிளிமொழிமதியாள்மெய்யி
லற்பமானநோயா லுளத்திலிற்கவலைகொண்டு
அற்புதமாகச்சந்ர மதிமனமயர்கின்றளே (௩௧)

வசனம்.

அகோகேளும்சபையோர்களேகட்வுளுடையகிருபையினலேசந்திரம
தியினுடையகெற்பத்திலுண்டாகியபலவிததுன்பத்தை சகிக்கப்படா
மல்அறிவழிந்துசகியின்முகம்நோக்கிப்புலம்புகிறவிதங்காண்க,

௨௭-தரு-இ-ம்-பியாகடை-அடதாளம்

பல்லவி,

வஞ்சியே-இத்தவஸ்தைமையறிகிலேன்-வஞ்சியே

அநுபல்லவி.

கொஞ்சுங்கிளிமொழி யாளேகிருகிய
பஞ்சுபோற்கன் றறக்குறிதல்செய்வேன் (வஞ்)

சரணங்கள்,

௧, அசதிமசக்கையா லங்கம்நோகுது
பசிதீவனிற்றுடல் பதைபதைக்குதே (வஞ்)
௨. ஆயிரந்தேள் கொட்டினதுபோலவென்
காயந்துடித்திடுவேன் காரணமறியேன் (வஞ்)
௩, திறிகைபோலவென் னிடையைத்திருகுது
அறிகிலேனொந்து ஞாசைக்கிசைந்தநல்ல(வஞ்)

வசனம்,

அகோவாரும்பெண்ணேசித்ராங்கிகண்களிரண்டும் பஞ்சுபோலப்பறக்குதுதிரேகத்தில்அசதியும்கடுப்பும்வலியும்பசியும்தீவனமும்ஒருவேளையைப்போல்ஒருவேளையில்லாமல்ஆயிரந்தேள்கொட்டுவதைப்பார்க்கிலும்அதிகமாய்தேகமெங்குங்கடுத்துதுடிதுடிக்குது இடுப்புவலியோசொல்லிமுடியாதுபுத்தியோஅடிக்கடிபேதிக்குதுநமதுஅரண்மனையில்வயித்தியும்பார்க்கும்மருத்துவச்சியைஅழைப்பியும்பெண்ணேஅப்படியேமகாபாக்கியமம்மாதாயே,

(பொதுவசனம்)அப்போதுமருத்துவச்சிவருகிறவிதங்காண்க,

விருத்தம்.

சந்திரகாந்தம்போலச்சரிகைசல்லாவுடுத்திச்
சுந்திரக்கொந்தளோலைசொருகுகாதினிற்றொடுத்துத்
தந்திரயந்திரங்கள் தக்கநூன்முறையெடுத்து
மந்திரமுறைநடாத்தும்மருத்துவமாதுவந்தாள் (௫௨)

௫௮-தரு-இ-ம்-பூரிகல்யாணி-அடதாளம்.

பல்லவி.

மருத்துவமாதுவந்தாளே-மன-மகிழ்ச்சிதந்தாளே,

அநுபல்லவி.

குருத்துக்கும்பர் தரித்தநாள்முதல்
குறிகளறிந்து மருந்துகொடுக்கும் (மருத்)

சரணங்கள்,

௧. உடற்கூறினிலமை யாவுமறிந்துஊணுறக்கமறந்து
ஓயாக்கலை கொண்டுளமறிந்து
இடர்விளைத்திடும் வேளையறிந்து
ஈசனார்பாத பூசைபுரிந்து (மருத்)
௨, பருதிகுலத்துதித்த பெண்களுக்கு-மெய்ப்பாண்மையறிந்து
ப்ரசவிக்கும் காலத்திலவர்க்கு
கருதியவிக மறிந்துகாக்கும்
வருத்தில்மிகுத்த வருத்தமேற்கும் (மருத்)

௩, மருந்துப்பையை யிடையிலேசொருகி தசவிதநாடிகளின்
மர்ம ங ளறிந்துமனதுருகி
பொருந்தும்தாய்போற் பூவையைமருவி
புகலுவார்த்தையி லமுதம்பெருகி (மருத்)

சந்திரமதிசொல்-விருத்தம்

வாராய்மருத்துவதிமாதே மெலிந்துமனம்
வாடுதேமதிசோருதே
யாராலுமறியாவென்னிடையினைத்திருகிமுறுகி
வங்கமெங்கணுநோகுதே
போனவெந்தனிருதொடைகளும்நடுங்கிவெகு
பிரமையாலயற்சிகொளுதே
சீராகவேபிரமதேவனெனைத்தேடியென்
சிரசினில்விதித்ததிதுவோ (௫௩)

வசனம்

அகோவாருமம்மா மருத்துவத்தாயே தேகமெல்லாமிகவும்வாடி மதிகலங்கி இடையைத்திரிகி அங்கமுழுதும் நோகுதே என்னிருதொடைச்சதைகளும் நடுநடுங்கிக் கிடுகிடுத்துமனமொடுங்கிப் படபடத்து பிரமிப்படைந்து ஒருநிமிஷம் ஒருயுகமாகுதே இதுக்கென்னசெய்குவேன்தாயே-

மருத்துவச்சிவசனம்

அடியம்மா என்கண்ணே என்கண்மணியே நீயொன்றுக்கும்பயப்படவேண்டாம் உனக்கு லோகோத்தரமாய் இம்மையிலும் மறுமையிலும்புகழத்தக்க புத்திரனுற்பவமாகப்போகிறான் நிமிஷநேரம்பொறுத்துக்கொள்ளுமம்மணி.

௫௯-சந்திரமதிசொல்-தரு இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்

பல்லவி

என்செய்வேனம்மா-இத்தயிமிசைக்-கென்செய்வேனம்மா

அநுபல்லவி

என்செய்வேனம்மா இதுவென்னகோலமோ
இன்சொல்லினூலோர னெங்கிடுங்காலமோ (என்)

சரணங்கள்

௧, உதறுதேதேகம்-என்னுயிர்படு-முபத்ரவமனேகம்-நடுநடுக்கிப்
பதறுதேயிதுவென் பாவவினையோதாகம்
படைத்தபரமன்கற் பனையோயிதுவென்ன
பாவம்நிமிஷமே யாகுதொருயுகம் (என்)
௨, நரம்பெல்லாஞ்சுருட்டித்துடித்துடல்- நல்லுயிர்புரட்டிசுழிசுழித்து
சுரும்புபோற்சுழலுது சோகமிகவாகுது

சோர்வுகொண்டிரு விழியுஞ்சொருகுது
சோம்பியுடலனல் மெழுகாயுருகுது (என்)
௧, பூங்கொடிமாதே-மிகவருத்தம் பொருக்கவொண்ணுதேகேளாயிது
தாங்கொணுதென்செய்வேன் தலையினைப்புறட்டுது
தாதுகலங்கியென் மதிமயங்குது
தயக்கமுற்றுமனஞ் சலித்துலய்குது (என்

பொதுவிருத்தம்

இக்கண்ணும்மூன்றுநிறைந்துபூரணமாய்
தெரிவையினுதரத்தினின்று
அங்கண்பானாலத்தன்விதிப்படியே
யாக்ரமித்திடத்தனஞ்செயனும்
பங்கயப்பொலிவிப்பதைத்திடவுதைக்க
பாவையினுடல்மிகநடுங்கிச்
செங்திர்கோடியுதித்ததுபோலச்
செல்வனுஞ்சிருட்டினுதித்தான். (௯௪)

வசனம்

அகோகேளும் சபையோர்களே இந்தப்பிரகாரமாய் ஒன்பதுமாதமும் நிறைந்தசந்திரமதியினுடையகெர்பத்திலுற்பத்தியாயிருக்கின்றபிண்டத்தின்சிரசிலேபிரம்மதேவருடைய யேவலுனதனஞ்சயனென்பவன் விதிப்படியே பதைபதைத்து உதைக்கசந்திரமதியினது மதிமயங்கி மனங்கலங்கி அறிவழிந்து உடல்பதறித்திடுக்கிடும்போது கோடானுகோடி சூரியர் எக்காலத்திலே பிரகாசித்தாலெவ்வளவுபிரகாசமாகுமோ அதற்குப்பதின்மடங்கு மேலானபிரகாசத்தையுடையவனாய் சந்திரமதியினுடைய கெர்ப்பத்திலேயுதித்தலோகிதாசன்பிறப்பதுகாண்க

௯௰-தரு-இ-ம்-கௌளிபந்து-அடதாளம்

பல்லவி

காசியருளும்விருபாக்ஷன்கிருபையல்லோகி
தாஸன்பிறந்தானே

அநுபல்லவி

ஆட்சியாகவயோத் யாபுரிதனையர்
சாட்சிசெலுத்துமரிச் சந்திரன்றவத்தில் காட்சி)

சரணங்கள்

௧, நித்தியமாயவ நீதலத்தருந்தவர்
நிறைந்தமாதவத்தாளின் பம்பூண-மனு
நீதிதவறாத சானுஞ்சத்யரிச்சந்திரன்
திகழ்த்துந்தவத்தாற்றேவ ரஷ்டேண

சித்திரைமாதச் சதுர்த்தசிபுதன்மருக ய
சிரத்தினிமீனலக்னந் தோண-வெ
சீரானசௌபாக்கிய யோகமுங்கூடிச்
செழித்தபத்திரைகர்ணஞ் சிறந்துமுன்கான (காட்)
௨, பருதிகுலபாலகன் பாரிலுதித்தானென்னப்
பச்சைப்பரிகளேழும் நடிக்க-மிக
பரிவுளவேதியர்முனிவர்தபோதனர்
பண்பாய்வேதாகமங்கள் படிக்க
கருதியபடிக்கிக்கண்காட்சி. கண்டோமெனக்
காசினியோர்மெத்த கொடிக்க-நாளும்
காதலுடனுவர்ணாச்ரமத்தோர்செய்
கருமங்கள்தவறாமல்களித்து முடிக்க(காட்சி)
௩, சந்ததமூர்த்தி, சங்குவம்சாதிபர்
சகலருமானந்தச் சதிராட-நல்ல
சாமிகுருமுனி யானவசிஷ்டருஞ்
சத்யசிந்தனை னற்சபையை நாட
அந்தசுபதினத்தன்னிலயோத்திய
ரடங்கலுமாவலுடன் கொண்டாட
அண்டம்புவனமிரண்டினுந்தேவர்கள்
அடங்காமகிழ்ச்சிகொண் டம்பரத்தாட(காட்சி)
௪, சிந்தைமகிழ்ந்தரிச் சந்திரபூபதி
செய்ததவப்பலன் நிறைவேற-மிகச்
சீருள்ளகண்ணேறி காடானுமதிதயன்
செல்வத்திருமகள் களிகூற
நிந்தையில்லாதவ நிதலத்திற்சத்திய
நீதிநெறிதிகழ்த்தும் நிலைதேற-என்றும்
நித்யகல்யாணங்க ளுற்றிடவாளவர்
நிறைந்தபொன்பூமாரி தினந்தினந்தூற(காட்சி)

பொதுவிருத்தம்

மைந்தன்வந்துதித்தவந்நாள் மகிபனுங்கோடாகோடி
யந்தமாம்பீஜதான மருமையாம்பலதர்மங்கள்
வந்தவரெவர்களுக்கும் வருஷித்தபின்னர்மங்கைக்
கந்தனைக்கரத்திலேந்தி களிப்புற்றுக்கொஞ்சலானே (௯௫)

வசனம்

இந்தப்பிரகாரமாய் குழந்தைபிறந்தவன்று உதயம்முதல் அஸ்தமானபரியந்தம் எண்ணிறந்த தானதர்மங்களைப்பண்ணி பூஜதானம்முதலான அநேகதானங்களைக்கொடுத்து களித்தபிறகு சந்திரமதியா

அவர் குழந்தையைக் கையிலேந்திக்கொண்டு உச்சிமுகந்து கொஞ்சி க்குலாவுகிற விதங்காண்க,

௯௧-இபந்தை-தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்

கண்ணிகள்

௧, தாச்சிக்குச்சடாமகனே　　தாச்சிக்குச்சடா-அயோத்தி
　தரணியாளுங்கண்மணியே　　தாச்சிக்குச்சடா
பாச்சியிந்தாடாமகனே　　பாச்சியிந்தாடா-எந்தன்
　பிராணேசன்றவமகனே　　பாச்சியிந்தாடா
௨. கக்குச்சடாமகனே　　கக்கக்குச்சடா-மாமன்
　காணியாளுங்கண்மணியே　　கக்ககுச்சடா
விக்கலிடாதேமகனே　　விக்கலிடாதேத்திரிசங்கு
　வேகதனுர்பௌத்ரனே　　விக்கலிடாதே
௩, கற்கண்டுதின்பாய்மகனே　　கற்கண்டுதின்பாய்-மக்கள்
　கவிதவிழ்த்தகண்மணியே　　கற்கண்டுதின்பாய்
சர்க்கரையிந்தாமகனே　　சர்க்கரையிந்தா-என்தந்தை
　தந்திரதயன்றவப்பயனே　　சர்க்கரையிந்தா
௪, வீரிட்டழாதேமகனே　　வீரிட்டழாதே-உன்மேனி
　வெதும்புவதேனென்மகனே　　வீரிட்டழாதே
நேரிட்டதென்னமகனே　　நேரிட்டதென்ன-உனது
　நெஞ்சரிதீராய்மகனே　　நெஞ்சரிதீராய்
௫, முகம்பாராடாமகனே　　முகம்பாரடா-எனது
　முத்திக்கோர்ரத்தினமே　　முகம்பாரடா
அகமகிழ்ந்திடாய்மகனே　　அகமகிழ்ந்திடாய்-எங்கள்
　அருந்தவதுதித்தையனே　　அகமகிழ்ந்திடாய்

போதுவிருத்தம்

இன்னவாறெழிற்பிள்ளையைப்பெற்றநாட்பத்துஞ்
சென்னகாலையிற் சீருளசடங்குகள்முடித்த
மன்னர்மன்னர் மண்டலத்தெவர்களுமகிழ்ந்து
துன்னத்தூய்நவ மணிதிகழ்தொட்டிலிட்டனரே (௧௬)

வசனம்

இந்தப்பிரகாரமாய் பிரசவித்த பதினோராநாட்காலையில் புண்யாகவாசனம் முதலான சாத்திரச்சடங்குகள் முடித்து மகிழ்ந்தபிறகு ரத்தினகசிதமான தொட்டிலிலே குழந்தையைவைத்து தாதியர்கள் கூடி சீருடனேதாலாட்டுகிறவிதங்காண்க.

தாலாட்டல் விருத்தம்,

புலங்கொள்காப்புப் புனியுகிர்த்தண்டைமுத்
தலங்கல்மின்னிணிமைம்படையாழிக
ளிலகுபொன்னணை ஞாணிவைசாத்தியே
நலங்குமாமணித்தொட்டி லிட்டாட்டினார், (௧௭)

௯௨-தரு-இ-ம்-நீலாம்புரி;

பல்லவி,

ஆராரோ-ராரிரரோ-ஆரிரரோ-ரரோ

அநுபல்லவி,

சீராணயோத்திவளர் ———— செல்வமேகண்வளரீர் (ஆ)

சரணங்கள்,

௧, நிலவுளவரிச்சந்திரன்　　செய்தவத்தில்வந்துதித்த
　கோலமிகுகோமானே-என்　　குமரனேகண்வளரீர் (ஆரா)
௨, பூதலத்தோர்செய்தவத்திற்　　றூபனெனவவதரித்த
　மாதவெனபோதமில்லா　　மாமணியேகண்வளரீர் (ஆரா)
௩, சாத்திரவிதிகளுணர்ந்து　　சத்யதர்மநிலையறியும்
　கோத்திரத்திலுற்பவித்த　　கோமானேகண்வளரீர் (ஆரா)
௪, தேனேதேவாமிர்தமே　　தெகிட்டாததெள்ளமுதே
　கோனேகதிர்குலத்துக்　　குணநிதியேகண்வளரீர் (ஆரா)

விருத்தம்,

தொட்டிலிட்டெக்கிளித்துமகிழ்முக
ரெட்டுத்தும்பரொவருந் திகைத்திடக்
கொட்டிக்கொண்டாடிக் கூவியழைத்துக்கை
தட்டிச்சோபனந் தையலர்பாடுவார், (௧௮)

சோபனங்கொட்டுதல்,

கண்ணிகள்,

சோபனமேசோபனமே சித்திகனேசர்க்குச்சோபனமே
ஆபத்பாந்தவனைசுப்ரமண்யர்க்கனுதினமுஞ்சோபனமே (௧)
(முக்கண்ணனுக்குமுகுந்தனுக்கும் முதுமறையோனுக்குஞ் சோபன
திக்கனைத்தும்புகழ்கொண்டவதரித்ததேவியர்மூவர்க்குஞ்சோபனமே)
பருதிகுலத்திலுதித்தவனும்　　பார்த்திபனுக்குமிகுத்தவனும்
சுருதிமுறைகளறிந்தவனும்சொன்னசொற்கள்தவறாதவனும் (௩)
சாகேதநன்னகராள்பவனும் ஸர்வஜீவாதாரனானவனும்
போர்கேந்திரன்முதல்யாவர்களும்புகழுந்திருநகராள்பவனும் (௪)
சத்யதர்மந்தவறாதராசாளரிச்சந்திரனென்றமகாராசன்
நித்யமன்னன்மனுநீதிதவறாமல் நிறைந்தசெங்கோலாளும் நாள்தனிலே

ரிட

ஆதிநடுமுடிவானவெற்றையும்ஆராய்ந்தறிந்தநல்யோகியர்கள் கோதில்லாவேதாகமமுழக்கத்துடன்கூடிவந்தாரடிசோபனமே (௭)

வந்தவர்க்கர்க்யபாத்யாதிதந்துவாகுடன்பூசித்துப்போற்றிசெய்து சொந்தமாயிங்குவந்தவரவேதனைதச்சொல்லியருளெனநறாவித்தோர் (௮)

மன்னவாவுந்தனல்வன்மைக்காசித்திந்த மண்டலமெங்குந்திரிந்தலைந்தோம், உன்னதமாமுன்சமுகத்தை தேடிவந்துளங்களித்தோமென்றார் சோபனமே, (௯)

விண்ணோரெவருக்குஞ்சொல்லரியவேந்தரின் மிக்கச்சிறந்தவனும் கண்ணோசிநாடாளும்சந்த்ரதயன்மகள் கற்பினைமெத்தப்புகழ்ந்துரைத்தார் (௰)

புகழ்ந்திடக்கேட்டந்தப்பூவைபெணைமணம்புணரச்செய்வீரென்றுன்புண்ணியனும். திகழ்ந்தவரேகிமதிதப்னைக்கண்டிதீரன்றனிதிநெறியுரைத்து (௰௧)

கற்புமிகுத்தவன்மகளுக்கிப் பூமனைக்கணவாளுயேலென்றுரைத்திடவே, பொற்புமிகுத்தமுக்கண்ணன்றிருவருள்பொய்யாதுங்கண்மனக்கோறிக்கைபோல், (௰௨)

அழைத்துவருவீரரிச்சந்த்ரமன்னனைஆதரவாயென்றான் சோபனமே, தழைமிகுசோலைமலிநகர்நாடெல்லாந்தாண்டியருந்தவத்தோரெவரும் (௰௩)

விரைவில்அயோத்திநகரடைந்துவேந்தனைக்கண்டுகல்யாணஞ்சொல்லி, அரைகியிஷத்தினித்தாமதியாமலுன்னுரபாரத்துடன்வருவாயென.

மன்னன்றன்சதுரங்கதளத்துடன்மகிழ்ந்தெழுந்துசிலவழிநடந்து, கன்னயமாகவருகைபிலேஷ்நாகபுன்னைகதமாலங்களும் (௰௫)

கோங்குகுருந்தமும்வன்னிதேக்கும்குளுந்தவில்வத்தோடுதேவதாரம தேங்குபனைமாவரசுநெல்லிதிவ்வியமாச்செழித்திலகும் (௰௬)

அடர்வனந்தன்னில்வரும்போது ஆதிபராசக்திகாவலிலே,இடர்தவிழக்குங்கற்றேறென்று கண்மெளதிதிருந்திருக் கோவில்கண்டு. (௰௭)

சேவித்துவருவோமென்றரசன்சேனையெல்லாமோரிடத்திலவிட்டு ஆவித்துணையான்மந்த்ரியுடனேஅரசனவ்வாலயத்துட்புகுந்தான் (௰௮)

அம்மனிணையடிபோற்றிசெய்துமிக வன்பாய்த்தெண்டனிட்டான் சோபனமே, செம்மனத்தானிது செய்திடவே சிறுள வம்மன்ப்ரசன்னமானள். (௰௯

ஆனைகற்றேர் பொற்றேராய் விளங்கியப்போதரசன் முன்தோன்றையிலே, வானவருக்கு மதிசயமாமிந்தவண்மையைச் சொல்லலென்றீர்சோபனமே, (௨௰)

அப்போதுமாதரியுந்தனுக்காய் ஆதிகாலத்தில்வருணராசன், எப்போதிதுக்குரியோன்வருவானோஎன்னணியவண்ணத்திலுயர்ந்த..(௨௧)

பொன்றேராருமவனைக்கண்டாலிதுபொற்புடனேயவனுக்களித்துதன்றேரென்றேறியாண்டிடச் சொல்லலென்று சாற்றினுரென்றுமனமகிழ்ந்து. (௨௨)

உந்தனைப்போலேமகராஜன்ஒருவனுமில்லையுலகத்திலே, எந்தனையிடேற்றவந்தவனேமகிழ்ந்தேத்துக்கொள்வாயென்றாள்சோபனமே ()

அந்தவகையம்மன் சொன்னவுடனே அரிச்சந்த்ர ராசனகங்களித்து,செந்தவமுன்னேனென்செய்தனனோசேவித்தேனுன்பாதந்தீருட்டேனே.

ஆசீர்வசனமிகக்கூறியனுப்புவாயென்றம்மனைப்பணிந்தான், மாசில்லாபருதிகுலோத்துங்கனைமாதரிமெத்தமகிழ்ந்துவாழ்த்தி (௨௫)

தேன்மொழிச்சந்திரமதியாளுனக்கே தேடிமணமாலைசூட்டிடுவாள், நான்மொழிந்தமொழிபொய்யாதுகன்மனத்தோனேநடந்திடென, ()

முன்னேதானேறிவந்தரதத்தை மூத்தமந்திரிக்குக்கொடுத்துவிட்டு, அன்னைகொடுத்தகனகத்தேரேறிஆனைசேனைதளத்துடனெழுந்தான்

இங்கிதுவானபின் சந்திரதயராச னின்னேரெழுநாளிலேமகட்கு மங்கிலியதாரணமுகூர்த்தம்மகிழ்ச்சியுடன்செய்வதாமெனவே (௨௮)

அன்பத்தாறுதேசத்தரசருக்கும் அன்பாய்கலியாண வோலையனுப்ப, இன்பமாயோலையைக் கண்டோரெவர்களும்எழுந்துகன்னோசிநன்னாடடைந்து. (௨௯)

சந்த்ரதயன்சபைசேர்ந்தவுடன் சந்தோஷமாயரிச்சந்திரனும், சுந்தரமானபொன்றேரேறிக் கொடிசூரியன்போலேவருகையிலே, (௩௰)

கண்டுகளித்தெதிர்கொண்டு சோமகுலன்கண்டோம் முக்கண்ணன்கருணைநமக்கு, பண்டையநாள்தந்த தின்றுபலித்தது பாக்கியஞ்செய்தோமிகவெனவே, (௩௧)

பூரணகும்பங்களைகளிம்கொடுத்து புகழ்ந்துகொண்டாடமிகத்துதித்து. தோரணவாயில்தனிலழைத்து துப்பறிவென்முத்திரைலாத்திசுத்தி

அங்காங்கவைபோகத்துடனே அடைந்திருக்கவிடுதிவிடுக்கச்,செங்கதிரோன்குலச்செல்வனிருந்தான்சிருடனந்தசபைதனிலே, (௧௪)

குருவசிஷ்டர் தவும்பிய திருவருங்கொண்டாடி சந்ரதயேந்திரனை, திருவருளாலுன்றவத்தில்வந்த தெரிவைச் சந்திரமதியாளைப் போ, (௧௫)

மணக்கோலஞ்செய்தழைத்துவரமகிழ்ந்துரைப்பாயென்றுர்சோபனமே,குணக்கோலமுடனுரைத்தகுருகுலவரசர்களின்வாக்யமுணர்ந்து

அந்தபுரத்துக்குத்தூதனுப்பி அருந்தவக்கொழுந்தை யலங்கரித்து, இந்தசபைக்கழைத்துவருவீரென வேந்தனுரைதோழிகள் கேட்டெழுந்து, (௧௬)

மங்களஸ்நான மாதரசிக்குச் செய்வித்து மலரணிகூந்தற் சிக்கெடுத்து, தங்கப்பிரகாசமுள்ள பீதாம்பரத்தை தையனல்லாளிடையிற்றரித்து, (௧௭)

நறுமணப்புகைகள் சிகைக்குகாட்டி நல்லசடைநாகமிட்டுப்பின்னி சொருகுகிளிதாழம்பூச் சூட்டிசுந்தரநெற்றிக்குப் பட்டங்கட்டி, (௧௮)

சூரியசந்திர பிறையடுக்கி சொகுசானவெண்முத்துக் கொச்சுமிட்டு, சீரியல்பாணுப் பட்டிசுட்டிகட்டி சிறந்தழகுக்கு மூக்குத்தியிட்டு (௧௯)

காதோலை பஞ்சகல்சவாளி கற்களிழைத்தகுண்டலங்கள், சோதிமிகுசக்கரமுருகு சொகுசான கோசுமயிருமாட்டி (௨௰)

நாகங்கண மஸ்தகட்கம்நாகரீகமாயலங்கரித்து சேகரமாய்பச்சை வளையடுக்கி சிறப்பானபோஞ்சுபாட்டிதொடுத்து (௨௧)

பாதச்சிலம்புதண்டைகொலுசும்பாங்காகவலங்கரித்தார், நாதமிகுத்தபொற்கிண்கிணியும் நலமாகவலங்கரித்தார் (௨௨)

காலாழிபீலாழி யிட்டார் கனகப்பாடாம்பகசரங்களிட்டார். கோலகலமாய்லங்கரித்து கோதைக்குப்புருவச்சிலையெழுதி. (௨௩)

வங்கிகளையாழிமோதிரமும் வாகுள்ளபொன்னியுஞ்ஞாலுமிட்டு. மங்கிலியத்துடனே யிணங்கமார்புநிறைந்தபதக்கமிட்டு. (௨௪)

மோகனமாலைசந்த்ராரங்களும் முத்துநவரத்னமாலையெல்லாம்,தேசம்நிறைந்தஉடமை பூட்டிதேவிக்கிசீராயலங்கரித்து. (௨௫)

கண்களிரண்டுக்கும் மைதீட்டி கஸ்தூரி பொட்டையும் நெற்றிக்கிட்டு, பெண்கள்கற்பின்கொடியான தனங்களைப்பொருந்திய கஞ்சுகத்தான்மறைத்து (௨௬)

இழையொருநூறாயிரம்பொன்பெற்ற யிந்திரவாளிப்பட்டெடுத்துடுத்தி, அழைத்துக்கொண்டாரபாரத்துடனேவரும் ஆனந்தங்கண்டரிச்சந்திரனும், (௨௭)

காணாப்பெருநிதிகண்டவன்போலக் கட்டழகிமுகம் கண்டிடவே கோனுமிவன் கழுத்திற்றங்கத்தாலியின் குறிப்பையறிந்து மனந்திகைத்து (௨௮)

மன்னன்மதிதயன் பண்ணின மோசத்தை மாநிலமன்னரறியாமல், கன்னயமாய்மணக்கோலங் காணவந்த நாகரீகங்களிதேதெனவே, (௨௯)

மனந்துளங்காத கோபமுற்று மாதவர்தேவரும் மதிபிரமிக்க. இனத்தாரிலிப்படி கண்டதுண்டோ யெவ்வகையோரு மீதொப்புவாரோ. (௩௰)

ஆயிரத்தெட்டு மாத்துக்குமேலாம் அபரஞ்சிமங்கள சூத்திரந்தான்: சேயிழையாள் கழுத்தினி லிருக்கச்சிறந்த வருந்தவத்தோனாவிட்டு, (௩௧)

என்னையழைத்திங்கு சின்னப்படுத்த யோக்யமோ வென்றுர் சோபனமே, அன்னைபிதாகுருதெய்வம் நகையாதோ ஆதித்தன்குலத்தோர்க் கடுக்காதென்றுர், (௩௨)

அந்தமொழி கேட்டப்புகழ்குலத்தோன் அரசரைவரையுமழைத்து, இந்தமகாராஜன் சொல்லுவதும் நிதையமறிந்ததோவென்றுரைக்க, (௩௩)

அவ்விதங்கேட்ட தரசரெல்லாம் ஆகடியமிது வென்றுரைத்து, ஒவ்வுமோவிம்மக ராஜனுரைப்பது உலகிலிவனைப் பழிக்காரோ, (௩௪)

சத்திய வானென்று பேராச்சே ஜகமுழுதுமிப்போ தூராச்சே, நித்தியமுங்கோடி பொய்யென்று சொல்லநெஞ்சந்துணியாதோ மற்றயர்க்கு, (௩௫)

என்றுசொல்லக் கேட்டெழுந்து சந்த்ரதயன்யெல்லோருங்கேளுமிவ்விசயத்தை, அன்றுமுக்கண்ணனெக்குத்தந்தவர மாமிதுவேயெண்மகள்கணவன், (௩௬)

இவனையல்லாது வேறல்லகண்டீர் என்றளவி லந்த சந்திரமதி கனமாதானைக் கைக்கொண்ட பூமாலையைக்கனமார்க்கத்தினிலேயெறிந்தாள், (௩௭)

ஆகாசவாணியம்மாலை தனை யாகமகிழ்ந்துகையில்வாங்கி,ஏகாஸநாதிபனையுன்னாமகிழ்ந் தேலுவாயென்றிரை கழுத்திலிட்டாள்,

இந்தவதிசயந்தன்னையறிந்தங் கிருந்தவைம்பத்தாறுமன்னவரும் உந்தன்மகள்கற்பினுக்கீரேழுலகிலெவருளரோவெனவே, (௩௮)

துதித்துப்புகழ்ந்த யொன்டாடையிலேதெளியர்வசிஷ்டரிருவருமாய், மதித்துசந்திரமன்னவனைமங்கையைத்தன்னருகாகவைத்து

வேதவிதிகள் தவறுமல் விண்ணவர்வேதியர்யாவரையும், பாதபூசாவிதியாவுஞ் செய்துபாங்காய் வதூவரர்பூசைசெய்து (௬௧)

காணிக்கையாகக் கணக்கில்லாக் கனகமாரி யாகவேசொரிந்து பாணிக்ரகணம்பண்ணிக்கொடுத்து பரிமளமிகுத்தபூமாலைசூட்டி (௬௨)

இஷ்டமித்ரபந்துவர்க்கத்தோர்க்குயோர்வையான வெகுமானஞ்செய்து, சிஷ்டருக்கெல்லாம்வஸ்த்ராபரணமிபூரிச்சிலவுடனன்னப்ரதானம்பண்ணி (௬௩)

அன்பத்தாறுதேசத்தாசருக்கும் அன்புடன் தாம்பூலவகையளித்துதின்பிராயஸ்ரவணேறிவசயெழின்மிகுயானைகுதிரைதந்து (௬௪)

ஊர்வலம்வந்தார்தேவேந்திர போகமாய் உத்தமரெவருமனங்களிக்க, நீர்வளமிகவயோத்தியாளும் நிருபனரிச்சந்திரனுல்லாயமாய்

கோடிமதன்ரதிபோல விளங்கி கூடியுலாவி புளங்களித்து, நாடிமன்மதன்போரினிற்சுகித்துநல்லகொக்கோமுறைபுணர்ந்து (௬௭)

கெற்பசின்னங்கள்மிகுத்திடவேகிளிமொழியாளுன்வசக்கைகொண்டாள், விற்பனத்தாருடல்நாளுக்குநாள் வேறுவேறு விதமாய் வளர்ந்து (௬௮)

அன்னம்வெறுத்துநடைதளர்ந்து ஆரோசகமாயிரு தகையும் தன்னயமாக்கண்டதெல்லாமுன்னமாமைந்து மாதமாசுதென்ன, (௬௯)

குல்காப்பிட்டுவளையடுக்கி சொர்ணபுட்பாதிவகைசூடி, பால்தேனமுப்பழவகையுடனே பஞ்சபட்சபரமான்னமிட்டு (௭௰)

அடுத்தஅருமாதந்தன்னிற்சீமந்தமென்றறிவைச்சூழச்சுப்பிறந்து விடுத்ததாள்முதம்பத்து மாதவனையிலும்விரதிமேலிபெரும்போடாமல்

நாளொருவண்ணம் பொழுதொருமேனியாய் நங்கையைப் பாதுகாத்துவருவார், தாமொன்றுவயிற்றுவலியெடுக்கத்தாதியர்தங்கைக்குப் போயுரைத்தார். (௭௧)

அந்தட்சணம் பஞ்சபட்சபரமான்னமானவருந்தாட்டி யாதரித்து, சந்தபுட்பாதி தாம்பூலஞ்சந்துகருதூப்ரீதாதிகளளிசலர்குதந்து(௭௨)

அறைவிட்டுக்குட்டசென் றிருக்கையிலே அன்றுசந்தரிவனும்திருப்பால் குறையேதுமில்லாமல்தினகரர் கோடிபோல்குழந்தை பிறந்ததுகேட்டரசன் (௭௧)

எழுவகையானதீர்த்தங்களாடி எவருக்கும்பிஜதானஞ்சிகந்து பழுதில்லாப்பத்தாநாள்ராத்திரியே பந்துக்களெல்லாம்வரவழைத்து ( )

பதினோராநாளதைகபத்தின்கண்ணேஏரிபட்டணமெங்கு மலங்கரித்து, இக்வாரபஞ்சவர்ணகோலமிட்டவீன்கு நவரத்னாலாத்திகொண்டு (௭௩)

மருந்துலேயெருர்லவகையுடனே மங்கிலியப்பெண்களெல்லாரும் விருந்துக்கெழுந்துவருவாரும் விளங்குசுவரிகல்யாணம்பாடி.

சுபசோபனங்கள்கூறிக்கொண்டுவந்தசுமங்கிலிபெண்களெல்லாருக்கும் விபவமிகுபட்டுச்சேலைரவிக்கை வேண்டியவரத்ந பூஷணமும் (௭௭)

தந்துபந்துத்வங்கள் கொண்டாடினதயலரை நன்றாகூர்த்தமதில் இந்தபரிதிகுலந்தழைக்கவென்று எழுவகைதீர்த்தங்களாலாட்டி ( )

நிருபனருகிலுட்காரவைத்து நிறைந்தசாத கர்ம்மங்களெழுதி குருவசிஷ்டர் லோகிதாசனென்று கொண்டாடும் நாமகரணஞ்சூட்டி

வந்து நிறைந்தநன்மாதவத்தோர் கட்கவாரியாய் பீஜதானஞ்சிகந்து ஐந்துவகைசுத்தியுடனேயாவர்க்கு மன்னவனுஞ்சிகந்து (௮௰)

கர்ணனகுடையைப் பழித்ததெனக்கும் காசினிதன்னிலுள்ளசவெவர்க்கும் சொர்ணமாரியாம்பொழிந்திடப் பொக்கிஷந்தூர்விட்டாடிசோபனமே (௮௧)

இத்திரமாய்ச்சிலநாளிருந்து ஏழெட்டுமாதமானபின்பு பத்தினிதன்னையழைத்தரிச்சந்திரன் பாங்காமயோத்திக்கினிடக்க

சித்தமகிழ்வாயென்றுரைத்து சேதியைதந்தைதனக்குரைத்தாள் உத்தமத்தருணத்தில்மகிழ்ந்து உசிதமாய்ச்சீதனங்கள்கொடுத்து.

மெத்தமருமகனைத்துதித்து மெல்லியர்க்குமிகப்புத்திசொல்லி சுத்தமதியுடன் வாழ்வீரென்று சோமகுலத்தரசனனுப்ப (௮௪)

புத்ரகளத்ரமித்ரர்களுடன் பூபனரிச்சந்திரனெழுந்து புத்ரகளத்ரருடன்கனகத்தேரில் பொம்புடனேதிவழிகடந்து (௮௫)

மித்ரர்கொண்டாடுமயோத்தியடைந்து மேதினியில்சிசவாழ்வடைந்து புத்திமிகுந்தல்சத்யகீர்த்திமனம் போலேமதியூகத்தைச்செலுத்தி (௮௬

நித்யதானதர்மங்களுடன்சேமாநுஷ்டானபரனுஞ்சத்யதர்மஞ்
தவறுதரசாண்டரிச்சந்திரனிருந்தான் சோபனமே

பள்ளிக்கூடத்துஉபாத்தியாயர்-சபைக்குவருகிற

விருத்தம்.

துள்ளியேமிகத்திரிந்து துலக்குநல்வயோத்தேசரைத்திற்
றெள்ளியகல்விசெல்வித் திருமணம்புணரச்செய்யும்
பள்ளியிலோதவைக்கும் பருவமீதென்றுணர்ந்து
ஒள்ளியகதிர்குலத்தோ ருபாத்தியாயரும்வந்தாரே. (௬௦)

வசனம்.

அகோகேளும்சபையோர்களே இந்தப்பிரகாரமாய் நடந்துவருகிற லோகிதாசனுக்கு ஐந்தாவதுவயதுபிறந்தவுடனே தலைமுறைதலைமுறையாயுள்ள வசிஷ்டரிஷி சம்மந்தமான உபாத்தியாய ரானவர் ராஜகுமாரனுக்குப் பள்ளியில்வைக்குந்தருணமாச்சுதென்றுநாட்டியசபையைநாடிவருவதுகாண்க.

௬௧-தரு-இ-ம்-உசேனி-அடதாளம்.

கண்ணிகள்,

அரிச்சுவடிவருக்குவாய் பாடமும்
ஆத்திச்சூடியும்படியுங்களென்று
வரிக்கொருபிழைதிருத்திக்கொண்டு
உபாத்தியாயர்வந்துதோணினார்
௨, பாகுமொழிகள்பேசிக்கொண்டு
பருதிகுலத்தோர்நேசங்கொண்டு
வாகுள்ளவல்லவாட்டு வீசிக்கொண்டு
வாத்தியாயர்வந்துதோணினார்
௩, மடிதன்னிலெழுத்தாணிஇருக்கி
மலையாளத்துப்பாக்குபுட்டியும்சொருகி
விடியுமுன்பள்ளிக்கூடத்தைநோக்கி
வேதியர்வந்துதோணினார்
௪, நெத்திதனிற்கீறுசந்தனமிலங்க
நேத்தியாயட்சதைப்பொட்டுந்துலங்க
புத்தகங்களைக்குவிடுக்கிக்கொண்டு
போதகனார்வந்துதோணினார்
௫, சிகைதனிலுருமாலை சுற்றிக்கொண்டு
சிறுகையிற் பிரப்பங்கோலுங்கொண்டு
வகைக்கோர்கணக்கினைக்கேட்டறிந்துகொள்ளும்
வாத்தியாயர்வந்துதோணினார்

உபாத்தியாயர்-சட்டாம்பிள்ளைக்குச்சொல்-விருத்தம்.

அடாவடாசட்டாம்பிள்ளாய் ஆத்மஞானியனுமெங்கே,
இடாரிக்கசுப்பனெங்கே சித்திக்கணேசனெங்கே
தடாபிடாச்சாம்பனெங்கே. தாண்டவராயனெங்கே
கொடாதகண்டுகனைச்சேராக் குருணிக்கோபாலனெங்கே.

வசனம்.

அடாவடாசட்டாம்பிள்ளாய்இடாரிக்கச்சுப்பன்சிந்திக்கணபதிதடாபிடாச்சாம்பன் தாண்டவராயன் கொடாதவனைச் சேராத குருணிக்கோபாலன்இவர்களெல்லாம் எங்கேபோனார்கள் சொல்லும்பிள்ளாய்சட்டாம்பிள்ளை.

சட்டாம்பிள்ளைசொல்-விருத்தம்.

ஐயனேகேளுமந்த அலப்பற்றுமோதரன்றான்
கையிலோர்காசுகொண்டு கரும்புவாங்கிவரப்போனான்
பையவேயவனைத்தேடி பசுபதிதொடர்ந்துபோனான்
ஐயகதவனைக்கண்வாருடன்யான்போய்வாரேன்

வசனம்;

அகோகேளுங்களையா சுவாமி நச்சுவாய்த்தாமோதரன் ஒருகாசெடுத்துக்கொண்டுகரும்புவாங்கிவருகிறேனென்று போனான் மெள்ளமெள்ள அவனைத்தேடிக்கொண்டு பசுபதியும் தொடர்ந்துபோனான்அவர்களையான்போய் தேடிக் கண்டுபிடித்துக்கொண்டு வரும்படிபோய்வருகிறேனையா சுவாமி.

உபாத்தியார்வசனம் ஆனால் அதிசீக்கிரத்தில்வந்துவிடும்பிள்ளாய்

உபாத்தியார்-வேறொருவனை வினவுதல்விருத்தம்.

உண்டுநான்வருவேனென்று ஓடியபாலகிருஷ்ணா
கண்டுநான்வெகுநாளாச்சே கபடனேவாவென்முன்னே
குண்டுணிபோற்றிரிந்தாம் கோதண்டந்தனிற்போடேனு
கண்டுகொண்டாய்நீதோப்புக்கரணங்கள்போடுவாயே (௬௨)

வசனம்.

அடாவடாபாலகிருஷ்ணா உன்னைக்கண்டு வெகுநாளாச்சுதேஎன்கேதயவுசெய்து என்முன்னேவா உன்முகத்தை நான்பார்க்கட்டும் குண்டுணித்திம்மனைப்போலே கண்டகண்ட யிடமெல்லாந் திரிந்தால் உன்னையும் அவனைப்போலே கோதண்டத்தில்மாட்டி விடுவேன்நீசிறுபிள்ளை யாச்சுதேயென்று முன்பின்யோசித்துப் பார்ப்பதை நேத்தியாகக்கண்டு கொண்டாய் நல்லது இப்போது தோப்புக்கரணங்கள் போடடாபோடு.

பாலகிருஷ்ணன்-சொல்விருத்தம்

ஐயனேசிறியனல்ல வறிவிலான்பிழைபொறுத்து
உய்யவேசெய்விரிந்த உபத்ரவம்பொறுக்கமாட்டேன்
துய்யனேமிழந்தாளிரண்டுந் துடித்திடல்நடுங்குதிப்போ
செய்யவாயென்னைக்காரும் திருவடிசரணமையா (௭௫)

வசனம்

அகோவாருங்கள் கருணைமிகுந்த என்னையனே சிறுவனும் அறிவீனனுமாகிய நான் இத்தனைநாளும் செய்துவந்த பிழைகள்யாவையும் மனம்பொறுத்துக்கொண்டு நான் இன்றுமுதல் வீண்காலம்போக்காமல் புத்தி கற்பித்தருளி இரட்சிக்கவேணுமே யல்லாது இவ்வளவுகொடூரமான தண்டனைக்குட்படுத்தினால்பொறுக்கமுடியாது எனது முழந்தாளிரண்டுங் கடுகடுத்துதேகமெல்லாம்நடுநடுங்குதுதயவுசெய்து மனம்பொறுத்துக் கொள்ளுங்கள் செந்தாமரைமலருக்கொப்பான திருவடிகளுக்கு சரணஞ்சரணமையாசுவாமி.

இந்தயிடத்தில் அன்பத்தூருதேசத்து இராஜராஜாக்களும் வந்ததாக முன்னுள்ளவிருத்தமும் தருவும் பாடிக்கொள்க;

மந்திரி-கட்டியனுக்குச்சொல்விருத்தம்

இறைவனற்க்ருபைபடைத்த யினியகட்டியமேகேளாய்
முறைமைசேரயோத்தியாளும் முன்னன்குழந்தைக்கின்று
திறமையாய்மகிழ்ந்துகல்விசெல்வியின்மணஞ்செய்விக்க
நிறைமிகுமுபாத்தியாரை நேமமாயழைத்துவாராய். (௭௬)

வசனம்

அகோவாரும்பிள்ளாய்வரப்பிரசாதியான கட்டியனே நமது அரிச்சந்திரமகாராஜனது குமாரனாகிய லோகிதாசனுக்கு கல்விக்கல்யாணஞ்செய்விக்கும் பொருட்டாய் கனம்பொருந்தியஉபாத்தியாயனையழைத்துவாரும்பிள்ளாய்கட்டியனே

கட்டியன்வசனம்

அப்படியே அழைத்துக்கொண்டுவருகிறேன் மகாப்பிரபோ.

கட்டியன் உபாத்தியாயருக்குச்சொல் விருத்தம்

லக்கணமிகப்படிக்கும் வாத்தியாரையாபோற்றி
இககனத்துள்ளோர்போற்றுந் திருவடிக்கமலம்போற்றி
முக்கண்ணனருள்மிகுத்த முன்னவனுன்றுள்போற்றி
பொக்கணவழைத்தாரிப்போ பொற்புடனெழுந்துவாரீர்.

வசனம்

அகோவாரும் கல்வித்திறமுள்ள உபாத்தியாயரே நமஸ்காரஞ் சுவாமி, ஈஸ்பராகிருபை படைத்து வாழ்விற்சிறந்த இராஜாஜாக்களும் துதிக்கப்பெற்ற அரிச்சந்திரமகாராசனுடைய குமாரனாகிய லோகிதாசனுக்குக் கல்விக்கல்யாணஞ்செய்விக்கும்பொருட்டு அதிசீக்கிரத்தில் தங்களைசமுகத்துக்கு அழைத்துக்கொண்டுவரும்படி ஆக்யாபித்தார் ஆகையால் தயவுசெய்துவரவேண்டுமையாசுவாமி,

உபாத்தியாயர்-வசனம்

அப்படியேவருகிறேன்நடவும்பிள்ளாய்கட்டியனே,

உபாத்தியாயர்-இராஜசபைக்குவருகிற-விருத்தம்,

கட்டியனிதனைக்கூறு கழலிணை துதித்துப்போற்ற
எட்டிரண்டறியாப்பாலர்க்கெவற்றையுமுணர்த்தவேண்டி
மட்டில்லாச்சிஷரோடு பாத்தியாயருமெழுந்து
அட்டியில்லாதசெங்கோலாண்டிடுஞ்சபைவந்தாரே (௭௭)

வசனம்,

இந்தப்பிரகாரமாய்ச்சரணஞ்செப்புசொல்லியகட்டியக்காரனதுவார்த்தையைக்கேட்டுதிவ்யஞானபரிபூரணரான சச்சிதானந்த சக்திசுரூபத்தையறிந்துணரும்படியான லோகிதாசனுக்குஸர்வசாஸ்திரபுராணாகமங்களின்மர்மங்களை உபதேசிக்கும்பொருட்டு பள்ளிக்கூடத்துஉபாத்தியாயர் அரிச்சந்திரமகாராசன்சமுகத்துக்குவருவதுகாண்க,

கூறு-தரு-இம்மத்தியமாவதி-அடதாளசாப்பு;

பல்லவி,

வந்தாரையா-உபாத்தியாயர்-வந்தாரையா

அநுபல்லவி,

வந்தாரையா இதோ வண்மைதரும்விவேக
சிந்தாமணியோதும் சீஷர்களுடன்கூடி (வந்தா)

சரணங்கள்,

௧, சங்கரநாராயணர் பொற்பாதம்போற்றி
சச்சிதானந்தத்தை நித்தமுந்தொழுதேத்தி
அங்கறங்கவைபோ கங்களிலங்கவே
ஆரியவேதாகம முறைகளுந்துலங்கவே ((வந்)
௨, செய்வையாகவிபாசா தஸ்தியர்சொன்னெறி
சிருடனேயோதும் செல்வர்க்கருள்வழி
ஔவைசொன்னீதி யனைத்தினையுமோதி
அவனியிலெங்கணும் விளங்கியபரஞ்சோதி (வந்)
௩, சப்பன்னபாஷைகளிலு மிகவனுபோகி
தகவாயுணர்விக்குந் தந்திரமதியூகி

ஒப்பெனையாயெமைத் துனைக்குங்கல்விச்செல்வர்
உலகுள்ளோர்பாலகற் குபதேசம்பிதஞ்சொல்வர் (௭௪)

கட்டியன்-வசனம்,

அகோ இராஜாதிராஜ இராஜகெம்பீர இராஜராஜேசுவர அகண்
டமண்டலமார்த்தாண்ட குலோத்பவா சரணஞ்சரணமையா மகாரா
ஜனேபள்ளிக்கூடத்துபாத்தியாயர்வந்திருக்கிறார்மகாட்பிரபோ;

இராஜன்சொல்-விருத்தம்,

ஐயனேவருகிருத்த னடிமலர்சரணஞ்சுவாமி
செய்யவர்மறுவுங்கல்விச் செல்வியின்மனமுமிப்போ
துய்யலோகிதாசனுக்குத் தருசினிற்செய்வித் தன்றும்
உய்யவேமனங்களித்தேன் உபாத்தியாரையாபோற்றி (௭௫)

வசனம்,

அகோசரணஞ்சரணமையா உபாத்தியாயரே

உபாத்தியாயர்-வசனம்,

தீர்க்காயுஷ்யமஸ்து வம்சாபிவிர்த்திரஸ்து சமஸ்தமங்களானிபவந்
துநிரந்தரம் ஸத்யதர்மபரிபாலனசித்திரஸ்து

இராஜன்-வசனம்.

சுவாமி இன்றையதினம் நமதுகுமாரனாகிய லோகிதாசனுக்கு கல்
விச்செல்வமென்னும் வித்யாப்பியாசம் பண்ணிவைக்கவேணுமெ
ன்கிறமனோபாவத்தினாலேதங்களைஎமதுசபைக்கழைத்துவர வாக்யா
பித்தோம்தேவரீர் திருவுளமகிழ்ந்து உபதேசஞ்செய்வித்துபள்ளிக்கூட
த்துக்கழைத்துக்கொண்டுபோய்வரும்பிராமணோத்தமரே,

உபாத்தியாயர்-வசனம்

அப்படியேதர்மாதிசகலசாஸ்திரபுராணேதிகாஸங்களும்உபதேசி
த்து அழைத்துக்கொண்டுவருகிறேன்மகாராசனே

பொதுவிருத்தம்,

அவனியிற்பூர்ணசந்த்ரனேகர்வந்துதித்தாற்போலப்
புவனியிற்சங்கைகயில்லா பருதிகளுலாவுமாப்போல
நவநிதிகொழிக்கும்பள்ளிநன் குறப்படிக்கவேண்டித்
தவனெறிமிகுத்தலோகி தாசனும்வருகின்றானே (௭௬)

வசனம்,

அகோகேளும்சபையோர்களே இந்தப்பிரகாரமாய்உபாத்தியாய
னைஅழைத்துவந்துயதோசிதாஸனமளித்த பின்புசங்கைகியில்லாதின்
றுதிர்ணயிக்கக்கூடாதசந்திரசூரியாள்பூலோகத்தில்பிரகாசிப்பதுபோல
லோகிதாசனுமவன் சம்பன்ன

பாஷைகளும் சகலகலாவித்தைகளுங்கற்றுணரும்பொருட்டு வித்வத்
சபைக்கு வருவதுகாண்க.

௩௯-தரு-இ-ம்-கருட்டி-ஆதிதாளம்,

பல்லவி,

பள்ளியிற்படிக்கவந்தானே-லோகிதாசன்
பள்ளியிற்படிக்கவந்தானே.

அநுபல்லவி,

பள்ளியிற்படிக்கவென்று பாங்குள்ளதோழர்கள்சூழத்
தெள்ளியகல்விசெல்வத்தாற் றினகரன்குலத்தோர்வாழ (பள்)

சரணங்கள்.

௧, செத்தியிற்றிலத மின்னவே-மாற்றிழந்து
நிறைந்தவாப ணங்கள்தன்னவே
ஸத்தியதர்மமேஜெயம் சத்துருபராஜயம்
புத்திகற்பித்திடுமின்று பொற்புடனையரேயென்று
௨, தண்டைசசிலம் பொலிக்கவே-தேவர்புகழும்
தாரணியாளன் களிக்கவே
பண்டையநீதிநெறி பல்வுமறிந்துகொள்ள
அண்டையில்வந்துநின்று ஐயரேசரணமென்று (பள்)
௩, நவரத்நகுல்லாவு மணிந்து-விளங்குமெய்யில்
நல்லமுத்தினங்கி புனைந்து
தவகலத்தோரிடையில் சரிகைச்சோமனுடுத்துப்
புவனத்தோர்க்குகிதன் பூபஅரிச்சந்திரன்சுதன் (பள்)

விருத்தம்,

வந்தலோகிதன்றாய்தந்தை வாகுளவுருந்தவத்தோர்ந்
கந்தமாம்நமஸ்கரித்து ஆசிர்வாதங்கள்பெற்று
செந்தவத்துபாத்தியாயர் சிறபதம்போற்றிசெய்து
எந்தனுக்கருள்வீரென்ன இனிதுபதேசிப்பாரே. (௭௮)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் வந்தலோகித குமாரனானவன் தாய்தந்தையர்
களை வந்தனஞ்செய்து மாதவர்களடிபோற்றிசுந்தரமாய் ஆசிர்வாதங்க
ளை பெற்று தவமிகுத்தஉபாத்தியாயரிடத்தில்வந்து சரணமடைந்தான
னக்கு சகலசாஸ்திர புராணேதிகாசாதிகளும்உபதேசித்தருளுமென்ற
போது அவருபதேசிப்பதுகாண்க,

௪௦-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

கண்ணிகள்-உபாத்தியாயர்சொல்-தரு

ஹரிஓம்நமோநாராயணயசித்தமென்று
ஆதிநாராக்ஷரங்கள் ஓதும்பிள்ளாய்நீ (ஆதி)

லோகிதாசன்-தரு,

(லோகி) வரிசைதப்பாமலேனுன்வாசித்துக்கொண்டேனினி
வாசிப்பதெப்போதித்து வாருமையா-நான்வாசிப்பதை
(உபா) மேவுமுயிர்பன்னிரண்டு மெய்பதினெட்டுமோக
விளங்குமவ்வுயிர் மெய்களாராயும்பிள்ளாய் நீ விள
(லோ) கூறுமுயிர்மெய்யெலாங் குறிப்பறிந்துக்கொண்டேனினி
குணமாய்படிப்பதென்ன கூறுமையா நான் குண
(உபா) ஆத்திசூடிவேதமுகத் துலகநீதிலக்கங்கள
அடவுடனேபடித்துவாரும்பிள்ளாய் நீ அட
(லோ) சூத்திரங்களவழுவாது சொன்முறைகளறிந்தேதன்
சுகமாய்படிப்பதெனவுசொல்லுவீரையா இனி சுக
(உபா) எண்சுவடிகீழ்வாயிலக்கம் இசைந்தகுழிமாறலும்
இயல்பாய்ச்சட்டங்களைக்கும் எழுதும்பிள்ளாய் நீ இய
(லோ) மண்விண்ணோர்கள்புகழும்மாதவரோ நீர்சொன்ன
மாற்றமயாவுமெழுதிவந்தேனையா நீர்சொன்ன-மாற்ற
(உபா) மன்னுதிவாகரம்நிகண்டுநீதிசாரமும்
மகிழ்ச்சிதரும்நன்னூற்களோதும்பிள்ளாய்-நீ மகி
(லோ) தானுபுகழ்நைடதம் குறளும்நாலடியாரும்
நுகளுறவெந்தனுக்குச் சொல்லுமையாசுவாமிநுகளுற

விருத்தம்

சோழமன்னன்முதலன்பத்தறுவரும்
ஆழீச்சரயுநகரடனே
வாழுவென்றடி போற்றியெழுந்தனர்
தோழர்பின்னுமவனழைக்கத்தொடங்குவார் (௭௯)

வசனம்

இந்தப்பிரகாரமாய் லோகிதாசன்வாசித்துக்கொண்டு வருங்காலத்தில் கல்யாணத்துக்குவந்த சோழதேசர்முதலான அன்பத்தாறுதேசத்து இராசர்களும் அரிச்சந்திரமகாராசனை வாழ்த்தி அவர்கள்தமது தேசத்திற்குப்போனபிற்பாடு நாள்தோறும் பள்ளிக்கூடத்துப்பிள்ளைகள் லோகிதாசனைப்பள்ளிக்கூடத்துக்கழைத்துவருவதுகாண்க.

௧௮ தரு-இ-ம-புன்னாகவராளி மட்டையதாளம்

பல்லவி

வாடாலோகிதாசா-பள்ளியிலோத-வாடாலோகிதாசா.

அநுபல்லவி

வாடாலோகிதாசா வசிஷ்டர்கிருபாகடாட்சா
சூடாணதோழரோ டிருந்துநாளும்படிப்போம்(வா

சரணங்கள்.

௧, செப்பிவினைகள் விட்டாஅறியாத
செல்வந்தனே காடடா
வையகத்தோர் மதிக்க-உனையென்றும்
வானோர்களும் துதிக்க
செய்யவனேஉனது சிறந்தபஞ்சணைவிட்டு
செங்கமலமாமுகக் துலங்கவெவைக்கமிட்டு (வா)

௨, சாலவெண்ணீறு பூசடா-அமுதம்போற்
சத்யமொழிகள் பேசடா
காலவந்தனஞ் செய்யடா-மாதாபிதாக்
களின்பங்தொழு துய்யடா
கோல்விழிகட்குமை திட்டுக்குமயின்னி
குலம்விளக்கிடும்நாளு பதவியும்மனமுன்னி (வா)

௩, அன்புடனே நடவடா-எவர்கட்கும்
அடுக்காதவழி கடவடா
தென்புடர சாருவாய்-ஐயருனைச்
செப்புமொழிகள் தாருவாய்
இன்புறவெனதுபக் கந்தனிலேவிருப்ப
மிருந்துபடிக்கமன மென்றுமகிழ்ந்திருப்பாய் (வா)

௪, ஸத்யகர்ம பரிபாலா-அனுதினமும்
சாதுஜனனு கூலா
நித்யதானதி காரா-உலகெங்கும்
நிறைந்தமோகனு காரா
வித்யாசகமென்னுதே விலங்குமுன்மனவிருள்
விறைவினிற்பெறுவாய்நீ வேதியர்திருவருள் (வா)

உபாத்தியாயர்சொல்-விருத்தம்.

செந்[illegible]துதித்த செல்வனேலோகிதாசா
[illegible]விளக்கின்முன்னே மகிழ்ந்துநீபடித்ததெல்லாம்
எங்களைதெயெடுத்துவந்து யெழிலுறவெனக்கொப்பித்துப்
பொங்கமாய்காலவேளைப் புசித்துநீவருகுவாயே (௮௰)

வசனம்.

அசோவாரும்பிள்ளாய் லோகிதாசா நேற்றிராத்திரி விளக்கின்முன்னே படித்த பாடங்கள்யாவையும் எனக்கு ஒப்பித்து காலைச்சாப்பாட்டிக்குப்போய்வாரும பிள்ளாய்

லோகிதாசன்சொல்-வசனம்,

அப்படியேஒப்பித்துப்போட்டு போய்வருகிறேனையா சுவாமி.

விருத்தம்.

இன்னெறியிலோகிதனுக் கேழ்வயதென்ன
அந்நெறியிலெள்ளளவும் தாட்சியில்லாச்செங்கோல்
நன்னெறியுடாளுமந்த நாளிலமரேசன்
பின்னெறியுடாளுநகர் மேன்மைசிலசெல்வோம்.

வசனம்,

இவ்விதமாகலோகிதாசனுக்குஏழுவயதளவும் நடந்தேறிவருங்காலத்தில்அரிச்சந்த்ரமகாராசனனவன்சத்தியதர்மந்தவறாமல்செங்கோல்செலுத்திக்கொண்டுவந்ததுசொன்னோம்இப்பால்தேவேந்திரமகாராசனென்னவனாளப்பட்ட அமராபதி பட்டணத்தினுடையவைபவங்களில் சிலது சொல்லத்துடங்குவதுகாண்க:

விவாகக்காண்டம்முற்றிற்று,

——※——

விருத்தம்-அகூதரு-கூஅ-கலித்துறை-கஎ,
வெண்பா-க-சீசபத்தியம்-ச,

மூன்றாவது

இந்திரகாண்டம்.

அமராபதிப்பட்டணவர்ணனை,

தரு-இ-ம-கல்யாணி-அடதாளம்

பல்லவி,

அமராபதியினதழகினைச்சொல்லவாதிசேடனாலாகுமோ.

அநுபல்லவி,

கமலக்கண்ணனுமுக்   கண்ணனும்வேதனும்
கருணைசேர்முப்பத்து   முக்கோடிதேவரும்
விமலராம்நாற்பத்தெண்   ணாயிரமரிஷிகளும்
விளங்கியவானோர்   பூவோர்கள்துதித்திடும் (அமரா)

சரணங்கள்

க, மாடமாளிகைமேடைமாமதில்-மண்டபம்நீளமதிலுருப்புக்களும், மரகதயம்பரிஷிபார்ஸியதூண்களும்மகுடதோரணவிருப்புக்களும், ஆல
கந்தன்னிலமுந்தியநவமணின்சல்விசாக்கியந்தபெருமைகளும்அண்டம
ளாவியகூடகோபுரங்களும் அலங்கார்சிவிகையார்மருப்புகளும்

நாடகமாடிய   சாலைகளுமிக
நாகரீகமான   வேலைகளுமநேக
கூடமர்மாடியுங்   கொத்தளமுமல்ல
குலமன்னர்கூடிக்   குலாவியிருக்குமல்ல
கோடரங்களுங்   கொடுங்கைவளங்களும்
ஆடரங்களை   யணையவமர்ந்தனல் (அமரா)

உ, வேதசாஸ்திரங்களோதியசாலையும் விளங்கும்ஞான யோகசாலையும், வித்தியாதரர்கள்கூடியசாலையும் விண்ணவர் நாடியசாலையும் கீதசாலைகளுமஷ்டாதசவாத்யங்கள் கிளர்ச்சிகொண்டிடுசாலையும் கின்னரர்துதிகொண்டாடிய சாலையும்-கருடர்கந்திருவர்கள் சாலையும்.

காதலாயெவர்களும்கண்டுகளித்திடும்
கன்னியர்கள்கூடிக்காதல்கொள்ளுஞ்சாலையும்
புண்ணியத்தோர்கள்செய்புண்ணியபாவங்கள்
புகலுஞ்சித்ரபுத்ரர்   புக்கவென்சாலையும்
பூதச்சாலையும்   போதச்சாலையும்
கீதச்சாலையும்   க்ஷேமமாவமர்ந்த (அமரா)

ங, நன்னகரிற்பெருவண்மைக்குஞ்சொல்லநாவொருகோடிவேணுமே, நாகரிகமாகவானவர்கட்கெந்த நாளும் வாழ்வுற்றிடத் தோணுமே, பொன்னகர்க்குநிகரண்டமெண்டங்களிற்புகன்றிடவென்றிடநாணுமே, ஔவையுளவைதிருவள்ளுவரும்முன்புபுகன்றநன்னூற்களுங்காணுமே
இன்னகர்க்குவமிக்கவெளியோர்க்கெளிதல்ல

ஈசன்மாலயனுக்கு   மிதமுறுமோசொல்ல
எவ்வகரைஇதுக்   கிணையிடலாம்வெல்ல
இறைய்வ்வுலரையுரு   மிவ்வூருக்கிணையல்ல
தன்னகத்துயர்   தணிதுக்கார்ந்திடும்
முன்னமன்னவர்   மகிழ்ச்சியேற்றிடும் (அமரா)

தேவேந்திரன்-கொலுவுக்குவரும்-விருத்தம்.

அன்னநடைமேனகையரம்பைநடமாட
கின்னரர்கள்கந்திருவர் கீதவிசைபாட
பின்னிடையிலோத்தமையோர் மெய்கவரிபோட
மன்னியதேவேந்திரன் மகிழ்கொலுவில்வந்தானே. (க)

வசனம்:

ஆகோகேளும் பஞ்சபாண்டவர்களென்னும் தர்மார்ச்சுன பீமசேனாதிகளே இவ்வளவு ஸ்ரீங்காரமும் அழகும் மேன்மையும் பொருந்திய அமராபதிபட்டணத்தை யொருகுடையின்கீழ் ஆண்டு அரசாட்சி செய்கின்ற தேவேந்திரமகாராசனனவன் மேனகைஅரம்பைமுதலானவர்கள்

நாட்டியமாடிக்கொண்டு முனீசுவரகின்னரர்கந்திருவர் முதலான முப்பத்துமுக்கோடிதேவர்களும்நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும்வேதாகமசாஸ்திரங்கள் கோஷிக்க மேனகை முதலான தேவதாசிகள் செழுங்கவரிவீச கொலுவிற்கு வந்து ராசரீகஞ்செய்கிறவிதங்காண்க-

உ-தரு-இ-ம்-தேவகாந்தாரி-ஆதிதாளம்.

பல்லவி.

அமரர்பதியையாளும் இமையவர்வேந்தனெனும்
ஆயிரங்கண்ணன்வந்தான்-கொலுவினில் (அமர)

அநுபல்லவி,

குமரர்குபேரனோர் கொன்றைசூடியச்சுதர்
விமலர்விபுதருடன் வித்தியாதரர்வாழும்(அமரர்)

சரணங்கள்-

௧, சுரர்தானவர்கேசரர் தும்புருசித்தர்பூதர்
கந்தர்வசாரணர் சாண்டில்யர்-கவுண்டின்யர்
வார்காரதமுனிவன் னார்பைசாசரியக்ஷர்
அரக்கிராவத ரீனவருங்கூடிவாழும்(அமரர்)
௨, நீதிகுபேரன்கேது கொடியசெங்கோற்கடவுள்
நிறைந்தபவனன் வருணன்நிருதியும்
சோதிபெருமாமதி சுக்ரன்சவுரிபுதன்
ஆதித்தரேடம்புலி யாரல்மறையோன்வாழும்(அமரர்)
௩, சனகன்சநந்தக்கினி சனத்குமாரனுஞ்சனகன்
கனகர்கவுசிகர் காசிபர்வாலகில்யர்
பனகருபமன்னியர் பகர்ந்திடும்ருச்யஸ்ரீங்கர்
அனகராத்ரேயர்பிருகு ஹரிதலருடன்வாழும்(அமரர்),

பொதுவிருத்தம்.

மாதவவிசுவாமித்திரர் மாமுனிவசிஷ்டர்தாமும்
ஆதவனுதிக்குமுன்னே யாச்சிரமந்தன்னையகன்று
பூதலநதிகளாடி புண்ணியதலஞ்சேவித்து
கோதறவும்பர்கோமான் கொலுச்சபைதனையடைந்தார் (க)

வசனம்.

இவ்விதமாய்கொலுவிலிருந்து இராஜநீதிதேவவிதிகளை நடாத்திக்கொண்டு வருகிறநாளிலே ஒருநாள்தபோதனர்களாகியவசிஷ்டவிசுவாமித்திரர்கள் பஞ்சபஞ்சவுஷக்காலத்திலெழுந்து புண்யநதிகளிலேதீர்த்தமாடி ஆலயங்களைச்சேவித்துக்கொண்டுதேவேந்திரன் கொலுச்சபை நாடிவருகிறவிதங்காண்க-

௩-தரு-இ-ம்-ஆஹிரி-திரிபுடைதாளம்

பல்லவி

வசிஷ்டரும்விசுவாமித்திரரும் வாசவன்சபையில்வந்தார்,

அநுபல்லவி

வசிஷ்டமுனிவர்சூழ விளங்குஞ்சிடர்கைதொழுதுவாழ (வ)

சரணங்கள்

௧, புனகங்கள்போல்சடையின் பரிவுளமகுடம்மின்ன
கனகுண்டலங்களிரு காதிலேபளபளென்ன
இனகரர்கொடிபோல நிரோசகாந்திதகதகென்ன
கனககரோனும்பாக- சாதனன்சபையிருமென்ன(வசி)
௨, வெள்ளிமின்னார்போலமார்பில் விளங்கியபூணூலும்
அள்ளித்தெளித்தபுட்பம்போல்அமர்ந்தசிறுபுலித்தோலும்
ஒள்ளியகாந்தவிலே உள்ளிருந்தண்டுங்கோலும்
தெள்ளியமறைகளாலுந் தெளியவுரைத்துமென்மேலும் (வசி)
௩- பவளமலைநிலாப்போற்பரிக்கணிந்த வெண்ணீற்றுப்பூச்சும்
தவளம்போலவேகையில் தண்டுகமண்டலவீச்சும்
குவலயங்கட்குடுங்கக் கோபித்துவிடும்பெருமூச்சு
சவலைமொழியாகப்பேசும் சபையிற்பாகசாதனன்மெச்சும்

வசனம்

இவ்விதமாய்வந்ததபோதனர்களை மரியாதையாகவணங்கி அர்க்கியபாத்யாசமனதி ஷோடசவுபசாரங்களுஞ்செய்து சித்திராசனமளித்து எழுந்தருளியபின்பு நடக்கிறவிதங்காண்க.

விசுவாமித்திர வசிஷ்டாதி முனிவர்களைநோக்கி
தேவேந்திரன்வினவுதல்

விருத்தம்

மெத்தவுந்தவத்தோர்விசுவா மித்திரவசிஷ்டர்கேளீர்
சத்தமூவுலகுங்கண்ட யோகிகள்நீங்களாதல
சித்தியப்பூமியாளும நிருபரிற்பொய்சொல்லாத
சத்தியவான்களதம்மைச் சந்நுடன்மொழிகுவீரே, (௩)

வசனம்

அகோகேளும்வசிஷ்ட விசுவாமித்ராதி முனிவர்களே நீங்கள் அரியதவத்தையுடையவர்கள் மூன்றுலோகத்திலேயும் நடந்துவருகிற பூதபவிஷ்யத்வர்த்தமானங்களையாராய்ந்துணர்ந்தவர்களாகையினாலே பூலோகத்திலேசத்யந்தப்பாமலும் பொய்யணுவளவுஞ் சொல்லாமலும் ராச்யபரிபாலனஞ்செய்கிற ராஜாக்களாரோதெரியப்படுத்தவேணுந்தபோதனர்களே.

வசிஷ்டர்சொல். விருத்தம்

மாதவந்தனின்மிகுந்த மாமுனிவசிஷ்டர்சொல்வார்
ஏதமிலாவேந்திசிஷனியல்புடனயொத்தியாள்வோன்
ஆதவனகுலத்துதித்தோன் அரிச்சந்திரராஜனென்போன்
பூதலந்தனிற்பொய்வார்த்தை புகன்றிடாதொருவன்தானே.

வசனம்

அகோகேளுந்தேவேந்திரமகாராஜனே பூலோகத்திலே அயோத்தியாபுரி பட்டணந்தனையாளப்பட்ட சூரியவம்சிஷர்களிலே அரிச்சந்திரராஜன் ஒருவனல்லாமல் பூலோகத்திலேயுள்ளமற்ற எந்தராசாக்களும்பொய்யில்லாமல் ராச்சியபரிபாலனம்பண்ணமாட்டார்கள் மகாராசனே

தேவேந்திரன்-வசனம்-ஆம்-ஆம்-மெய்தான்மெய்தான்

விசுவாமித்துரர் சொல் விருத்தம்

வஞ்சனைக்கடமார்க்கம் வகுத்திடும்விஸ்வாமித்ரன்
நெஞ்சினிற்பதைபதைத்து நிருபர்முன்யேதுசொல்வார்
மிஞ்சியேவசிஷ்டர்சொல்லை மெய்யெனத்தலையசைத்தீர்
அஞ்சிடாவரசன்பொக்குஅரிச்சந்த்ரனொருவன்றானே.

வசனம்

அகோகேளுந்தேவேந்திரமகாராஜனே இப்போது இந்தசபையிலேயுள்ள தேவதேவோத்தமர்கள் மெய்க்க வசிஷ்டனும் அந்தஅரிச்சந்திரமகாராஜனைப்புகழ்ந்துசொன்னான் நீரும்மகாஆனந்தத்தோடுதலையசைத்தீர் அவனொருநாளொன்றுக்குஎண்ணியொருகோடியெண்ணாமல் நூறுகோடிபொய்சொல்லப்பட்டவன் அவனைப் போலேபொய்சொல்லப்பட்டஅரசனும்ஒருவனுண்டோதேவேந்திரமகாராசனே.

வசிஷ்டர் விசுவாமித்திரருக்குச்சொல் விருத்தம்

ஆயிரங்கண்ணன்மெய்க்க வதட்டியேவிசுவாமித்ரர்
வாயினால்மதம்பொழிந்த வாரணம்போற்குதித்தாய்
பேயனேயுனதுசித்தம் பிரமித்தசீபிதற்றலுற்றாய்
நாயரின்குலத்தோர்பொய்யை நவிலுமூர்தனிலிராரே (௬)

வசனம்

அகோவாராய்விசுவாமித்திரமகாமுனியே இப்போது தேவேந்திரமகாராசன் மெய்க்கும்படிக்கு மதத்தினாலேயானையானது தன்றலையிலேதானே குப்பைகளைவாரிப்போட்டுக்கொள்ளுவதுபோல ஆகாசபூமியும்கிடுகிடுக்கக்கிளம்பிக்குதித்தாய் பிரமையடைந்துபிதற்றலுற்றாய் சூரியகுலத்திலேபிறந்தராசாக்கள் பொய்சொல்லுகிறவூரிலேகூடவாயிருக்கமாட்டார்கள் பேர்போ வீண்வார்த்தை பேசாதேமதிப்பிரஷ்டா.

விசுவாமித்திரர்வசிஷ்டருக்குச்சொல்லுதல்விருத்தம்,

கொத்தவன்பாலுற்றகொடூரமுங்கவடுஞ்சூது
முத்தவஞ்சகமுங்காமு முறைத்திடும்பொய்கள்கோடி
நித்தமும்நவில்வோன்றன்னை நிசங்களென்றாய்வசிஷ்டா
பித்தனேயுனைப்போலிந்த பெருஞ்சபைதன்னிலுண்டோ (௭)

வசனம்,

அகோவாராய்வசிஷ்டமகாமுனியே அந்தஅரிச்சந்திரமகாராசனிடத்திலே உண்டாயிருக்கிற கொடூரவார்த்தையும்கபடமும்சூதும்வஞ்சனையும் காமாதிகளும்விளைந்திருப்பது நோக்கென்னதெரியும் ஒருநாளைக்குஎண்ணியொருகோடிஎண்ணாமல்நூறுகோடி பொய்சொல்லப்பட்டவனை நிசங்கண் அவனைவிட்டால்லோகத்திலேஇல்லவேயில்லையென்றுசொல்லிவந்தாய்சபையோர்களும் ஆம்ஆமென்றுதலையசைத்துவிட்டார்கள்பித்தாஉன்னைப்போலேயிந்தசபையிலேயாராவதுண்டோபேபோபேத்தாதேபோதும்போதும் வாயைமூடுமதிகெட்டவனே.

பொதுவசனம்,

இந்தசமயத்திலேநாரதர்சபைக்குவருதல்காண்க

நாரதர்கொலுச்சபைக்குவருகிற-விருத்தம்,

கரந்தனில்வீணைதம்பூர்கமண்டலமிலங்கவென்றுந்
சிரமதில்மகுடம்பூண்டு சிறுபுலித்தோலுஞ்சார்த்தி
பரிந்துமெய்நிறைந்தபூச்சும் பார்த்தவர்திகைத்துநிற்க
புரந்தரன்சபையைநாடிப் புண்ணியநாரதர்வந்தாரே.

வசனம்,

அகோவாரும்பஞ்சபாண்டவர்களே இந்தப்பிரகாரமாய்வசிஷ்டவிசுவாமித்திர ரிருவரும் ஒருவருக்கொருவர் முன்னுள்ளவிரோதத்தினாலே சபதஞ்செய்துகொண்டிருக்கிறசமயத்தில்தண்டுகமண்டலவீணைபுஸ்தகபாணியாய்புலித்தோல்சாத்திக்கொண்டுசடாமகுடம்பிரகாசிக்கச்சங்கராநாராயணா கிருஷியாய்பரப்பிறம்மோச்சாடனமந்திரசபத்துடன் தேவேந்திரமகாராஜன்சபையையநாடிவருவதுகாண்க.

_சு-ரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்சாப்பு

பல்லவி.

நாரதர்வந்தார்-சபைதனில்-நாரதர்வந்தார்

அநுபல்லவி.

சாரதம்பாள்பதம் போற்றிபரிச்சந்த்ரன்
பேரதைப்பீரிம் ப்ரபலஞ்செய்யவென்று (நாரத)

சரணங்கள்,

௧ கவுசிகர்வசிஷ்டரைக் கண்டுமகிழ்ந்தொரு
கலகம்விளைத்திடக் கருத்திச்சபைதனில் (நாரத)

௨ வாச்சுது வாச்சுது வள்ளலரிச்சந்த்ரன்
பேச்சுகிசயென்று பெருமையுடன்சொல்ல (நாரத)

௩ தஞ்சமென்றோரை யதட்டியெதிர்த்திடும்
வஞ்சனைசெய்விசுவா மித்திரர்வசிஷ்டர்முன் (நாரத)

நாரதர்வசிஷ்டருக்குச்சொல்-விருத்தம்.

நிரந்தரம்புனிதமான நீடியதவத்தாய்போற்றி
புரந்தரன்சபையின்முன்னே சிஷனைப்புகழ்ந்துகொண்டாய்
அருந்தவமுனிவசிஷ்டர் அரசனோர்பொய்மொழிந்தால்
பொருந்தநீசெய்ததென்ன பொழ்புடன்புகலுவீரே (௧)

வசனம்,

நெடியதவத்தையுடையவசிஷ்டமகாமுனிவனே தேவேந்திரசபையிலேயுள்ளயாவரும்மெய்த்துக்கொள்ளும்படி சிஷனைஸ்தோத்திரம் பண்ணத்தலைப்பட்டீரேய்முனிசிரேஷ்டரே அந்தஅரிச்சந்திரனென்பவன் அநுப்ரமாணமாவது ஒருபொய்சொன்னால்நீரென்னசெய்துக்கொள்வீரோ அந்தச்சபதத்தைஇப்போதேனக்குத் தெரியப்படுத்திவிடுமானுந்தேழக்கட்டும்.

௧-வசிஷ்டர்-நாரதருக்குச்சொல்-விருத்தம்,

பூவினிலொருவனன்பபூவையர்சகோதரன்முன்
மேவியநான்மறைக்கும் மெய்த்திடும்புகழ்க்குநல்லோர்
கூவியபேர்க்கும்மன்னர் குலாவியமனுநீதிக்கும்
கூவியிலொருவனந்த கெத்து.

அரிச்சந்திரராசனல்லாமல்பொய்புரையாத
அரசர்களவனியிலுண்டோ
சரச்சந்ரனொருவனுலேசப்தலோகம்விளங்கும்
நிரந்தரமர்கக்கேளும் நிகழுஞ்சபதந்தன்னைக்
கொற்றவனுற்றிடுசொற்றவறிலெனது
நற்றவமிழந்திந்த நற்றவரறியவே
குற்றமென்னுது கடகுடன்தலைகொண்டுமோர்
குற்றிறடியைமலோடுவேன்தென்திசை (அரி)

வசிஷ்டர்-நாரதருக்குச்சொல்வசனம்,

அகோவாரும் முனிவரிற் சிறந்த நாரதரே நீரறியாதது பூலோகத்திலேஇந்த விடிக்கிலேயிருக்கிறதாசரேழுபதினாலுலோகத்திலேயுமுண்மையறியாமல்அநுவள்வுமசையாதுஅப்படியாயிருந்தாலும்இப்போது நானுறுதியாய்ச் சொல்லுகிறேன் கேளும் பூலோகத்திலேராச்சியபரிபாலனம் பண்ணிவருகிற ராசாக்களிலே உன்னுடைய சிஷியன் அரிச்சந்திரமகாராஜன் ஒருவனே பரனுரிசகோதரனும் சாஸ்திரஞ்ஞனும் கீர்த்திவந்தனும் நல்லோர்பெரியோர்களாலேபுகழ்ந்துகொள்வதற்கும்ராஜராசாக்கள் நடத்திவருகிற மனுமந்தாதிகளின்நீதிநெறிப்படி நடவடிக்கை நடப்பிவிக்கிறதற்கும் அந்த அரிச்சந்திர னொருவனேதவிரபொய்சொல்லாத பூபதிகளுண்டோ பூலோகத்திலே பூர்வபட்சத்திலிருந்தியாகிற சந்திரனைப்போல ஏழுலோகமும் விளங்கும் ஒருக்காலும்சந்தேகமேயில்லை ஆகினும் ஒருக்கால் அந்த அரிச்சந்திரமகாராசன் அசத்தியவந்தனானேயானால் நான்செய்த தபசயாவையும் விட்டுவிட்டுமுப்பத்துமுக்கோடி தேவதைகளும் நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளுமறியகளுகுடத்தைத் தலையிலேசுமந்துகொண்டியாதொருவார்த்தையும்சொல்லாமல் தெட்சிணதிக்கைநோக்கி ஓடிப்போவேனே அவிரசென்மம் (நம்பும்)ஒருபோதும்மடவாது

நாரதர்-விசுவாமித்திரனை வினவுதல்-விருத்தம்.

கொற்றவன்வாயிற்பொய்யைக் குறித்திடாயாகில்நீயும்
எற்றவமியற்றுவாயோ விளம்புவாய்விசுவாமித்திரா
குற்றமென்மேலொன்றுதே குணமிகுமுனிவரேண்யா
நற்றவனைப்போலிந்த நாற்றிசைகளிலுண்டோ (௨)

வசனம்.

அகோவாரீர் விசுவாமித்திரமகாமுனியே கிழக்குமேற்குத் தெற்குவடக்கானநாலுதிக்குக்குட்பட்ட ஸ்தலத்திலே உம்மைப்போலே ரிஷிசிரேஷ்டர்களுண்டோ என்மேலேகுற்றஞ்சொல்லவேண்டாம்நீர்குணபூஷணனன்றோ அந்த அரிச்சந்திரமகாராசன்பொய்சொல்லாதிருந்தால் நீர்செய்வதுஎன்னசபதம்சொல்லிவாரும் முனீசுவரனே.

௨-விசுவாமித்திரர்சொல் - விருத்தார்த்தம்.

வெய்யவன்குலத்துதித்த வேந்தரிலவனுமொத்த
பொய்யன்களவன்சூதன் பொருக்கொணுக்காமன்கண்டாய்
தையலரயலார்தம்மேற்றுங்கொண்மையல்கொள்வோனைத்
துய்யவனென்றுரையாற் கெத்து.

அரிசாயுரைத்திடலாமோ அரிச்சந்திரனைத்
தூய்யவனென்றெண்ணலாமோ

வையந்தனிலயோத்திவாழரிச்சந்திரமன்னன்
பொய்யுரையானேயாகிற் புனிதரெல்லோருக்காண
காவியற்றியதவவெறிதனிற்பாதியைக்
கோனவர்க்கீந்திட கூறுவேனன்றியிவ்
வானவர்க்காவலில்வாழுவேன்வளமுடன்
மானவனேயுனதுமனதுமகிழ்ந்திடத்-துய்ய

நாரதருக்கு-விசுவாமித்திரர்சொல்-வசனம்,

அகோவாரும் நாரதமகாமுனீஸ்வரரே ஆ ஆ ஆ நன்றாயிருக்குது நன்றாயிருக்குதென்ன ஆச்சர்யமென்ன ஆச்சர்யம்பளா ரெபளா கெட்டிகெட்டி ஓகோய் நாரதச்சிரேஷ்டரே நீர்கலகப்பிரிய ரன்றோ என்னாலகமுண்டாகிறதோ அந்த அரிச்சந்திரனுடைய நடத்தைகளுமக்குத் தெரியாதோ சூரியகுலத்திலேபிறந்த ராசாக்களிலே இவனைப்போலே பொய்யுங்களவும் சூதும் பொருக்கொண்ணாதகாமாதுரமும் உடையவனை எண்பத்தி நான்குலட்சஞ் சீவராசிகளிலுங்கண்டதேயில்லை இப்பேர்ப்பட்ட துர்மார்க்கனைப் பரிசுத்தனென்று வாயினாலேசொல்லலாமாமகாசத்யவந்தனென்று எண்ணலாமா அப்படி இந்தஅரிச்சந்திரன்வாயினால் அணுவளவும பொய்சொல்லிவையாமற் போனேனேயானால் நான்செய்த தபசிலே சரிபாதியை தேவேந்திரனுக்குக்கொடுத்து விடுவதுந்தவிர எமதர்மராசனுடைய சிறைச்சாலையிலிருந்து அவரிடுகிற ஏவலுக்குக்கட்டுப்பட்டுக்கொண்டிருப்பேன் நாரதமகாமுனிசுவாமி-

நாரதர்-விசுவாமித்திரருக்குச்சொல்-விருத்தம்.

அருந்தவமிகுத்தோர்தம்மையாய்ந்திடினுமைப்போலென்றும்
பொருந்தவேபுகழடைத்த புனிதர்களெவர்களுண்டு
பெருந்தவத்தோர்கட்கெல்லாம் பின்னுக்கோரிழிவுறாமல்
திருந்தவேவுமக்குரைத்தேன் திருவுளமகிழுவீரே.

வசனம்,

அகோகேளும்விசுவாமித்திரமுனீஸ்வரரேதவத்தினாலேபெரியோரைப்பார்க்கும்போது உம்மைப்போலேதபோநிதியாவரிருக்கிறார்கள் இனியுள்ள தவசிகட்கெல்லாம் பிற்காலத்திலே யாதொரு தூஷணமான சொற்களும் வராமல் நானிப்போதேபச்சைமரத்தில் ஆணியறைந்தது போலே ஸ்தாபித்தேன் சந்தோஷமாயிரும்

விசுவாமித்திரர்வசனம்-

ஆ ஆ நன்றாச்சொன்னீர்நன்றாச்சொன்னீர் நீர்கலகப்பிரியரோ அன்றோ போய்வாரும்போய்வாரும் கலகப்பிரியரே.

62

பொதுவிருத்தம்,

இப்பெருஞ்சபதஞ்செய்து யிருடிகளிருவர்பேரும்
ஒப்பருஞ்சபையைநீங்கியும்பர்கோன்விடைபெற்றுபதார்
அப்பெருஞ்சபையிலுள்ளோ ரவரவராச்ரமத்திற்
செப்பரும்புகழ்படைத்துச் சேர்ந்தபின் செப்புவேனே

வசனம்,

அகோகேளும் சபையோர்களே இவ்விதமாய் சம்வாதம்செய்த அந்த இருமுனிவர்களும் சம்வாதம்முடிந்தவுடனே உபமானமில்லாத சபையைநீங்கி தேவேந்திரமகாராஜனிடத்திலே ஆக்ஞைபெற்றுக்கொண்டு ஆச்ரமத்துக்குப் போய்விட்டார்கள், அந்தச்சபையிலுள்ள மற்றதேவசமூகத்தார் முதலானவர்களும அவரவர்களாச்ரமத்திற்குப்போனது பிரகடப்படுகாண்க,

இந்திரகாண்டம்-முற்றுப்பெற்றது.

ஆக விருத்தம்-௰௨-விருத்தார்த்தம்-௨-தரு-௪.

* * *

௨

இரண்டாவது

வஞ்சவனகாண்டம்.

விருத்தம்,

ஆரணன்முதலோர்கூடும் அமரர்தன்சபைக்குச்சென்ற
வீரனாம்விசுவாமித்ரர்விலாச்ரமஞ்சேராத
காரணமெங்கேயென்று கருத்தினிலையமுற்றுப்
பூரணமனத்தரான புனிதச்சீஷரும்வந்தாரே (௧)

வசனம்,

அகோகேளும் தருமபுத்ராதிகளே பிரமதேவர்முதலானசகலதேவர்களும் நிறைந்தஇந்திரன்சபைக்குப்போன விசுவாமித்திரரான நமது குருமுனிவரானவர் எப்போதும்போலிராமல் இக்கோவேளைதங்கியிருக்குக்காரணமென்னமோவென்றுநினைத்து சீஷர்கள் விசுவாமித்திரருடைய சன்னதிக்குவருவதுகாண்க,

௧-தரு-இ-ம்-சுருட்டி-அடதாளம்,

பல்லவி,

சீஷர்கள்வந்தாரே-விசுவாமித்திரர் சீஷர்கள்வந்தாரே

அனுபல்லவி,

அஷணபூஷணச் அலைந்தவருந்தவர்
அய்யவேதாகமச் சொற்களிருந்தவர் (சீஷ)

சரணங்கள்,

௧. குருமொழிதனை மறவார்-அனுவேனும்
குலவன்மைதனைத் துறவார்
பொறுமையுடனுரைக்கும் பேச்சுக்கத்தவிராது
புதுமையென்னவுண்டதைப் புகலுமென்றுளம்வாடி (சீஷ)

௨, மனத்துள்ளதறி யோமே-அன்றுவிளைத்த
மார்க்கமுங்குறி யோமே
இனத்துடனுரைத்திடும் சிரோதேவெனக்கூறி
சேவடிபோற்றிடச் செப்புவாயெனத்தேறி (சீஷ)

௩, தயங்குவதேனோ வென்று-மனமிகத்
தளர்ச்சியுறுவதே னின்று
மயங்கொளதேவர்கள்முன் நடந்தகட்டளைசொல்லி
நாதனேயெங்களால் நடக்குமோவெனப்புல்லி (சீஷ)

விருத்தம்,

வெய்யவன்குலத்து வேந்தனுமிக்க
வீரதிவீரனு மல்லாற்
றுய்யவன்வசையுங்கடன் மதிகதிரோன்
றுய்யகன்னிலைகுலைந்திடினும்
பொய்யதுபுகலானென் செய்வோமெனவே
புந்தியிலையுறவுற்ற
செய்கோசிகன்றனடிபணிந்திறைஞ்சுஞ்
செல்வியமறையவர்க்குரைப்பார் (௨)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் விசுவாமித்திரமகாமுனியானவர் சூரியகுலத்து ராசாக்களிலே அரிச்சந்திரமகாராசன் மகாபலபராக்கிரமனும்மகாசத்தியவந்தனும் சற்குணவானுமல்லவென்சமுத்திர பர்வதம்சந்திரசூரியர்முதலானவர்களும் அலைவர்கள்நிலைபிசகிடத்தாலும் அரிச்சந்திரராஜனவர்பிலே பொய்வார்த்தை சொல்லாதேதன்னைச் செய்யப்போகிறேனென்று மனவ்யாகூலப்பட்டுதன்னிடத்திலே வித்தியார்த்திகளாயிருக்கிற பிராமணர்களுக்குச் சொல்லி அவர்களை அரிச்சந்திரமகாராஜன்சபைக்கனுப்புவதுகாண்க.

கண்ணிகள்,

௧, மறையாளரேகேளீர் நீங்கள்
மாணக்கர்தனிலுறை வாஞ்சைதீர்த்திடப்

போனவுடனேயாரும் ஞானவசிஷ்டனைக்
குறையாகாதில் வெல்லவெண்ணிக்
கூறிவேனவமொழி சிறினைவுபோற்
றூறினைமிகமிகத் தேறினேன்மனதில்

௨, மறையாக மாதிகளோதிய
மாதவத்தாலும்கோதுமன்வார்த்தைகள்
பேதமிலாமனப்பேதமகாக
சோமாமதி படைத்திருக்கள்
செஞ்சரத்திடைமிக வஞ்சகமகளவே
கஞ்சனனுருக்கொடு கிஞ்சுகமொழிபோற்

௩, சாகேதபுரஞ் சேர்ந்தரிச்
சந்திரன்மகிழ்ந்திடத் தந்திரமாகவே
இந்திரஜாலஞ்செய் மந்திரமோதி
போகேந்திராதியர் பொற்புறப்
புண்ணியவேள்வியை கண்ணியேசெய்திட்
டெண்ணியபொருட்கு மண்ணலனைப்போல்

௪, சூழ்ந்தோர்தேச மப்பத்தாறினும்
அவனியிறைவனைப்போலத் தவநெறிமிகுந்தவர்
எவனிருக்கிறானெனக் கவனமதாகப்
பாய்ச்சுறன்பக்கல்வந்தோமெனப்
பகருவீர்பிரமனை நிகர்த்தபூசுரர்களே
பகர்ந்திடுமோசன்சொல் தகர்ந்திடச்செய்வேன்

வசனம்.

அகோகேளும் வித்தியார்த்திகளே நான் தேவேந்திரன் சபைக்குப் போயிருந்தபோது வசிஷ்டமாமுனிவனுரைக்கும் வார்த்தைகளிலே அவனைவெல்லும்பொருட்டு அரியாபிரமாதிகளுக்கும் சகாப்படாத ஒருவார்த்தைகளிலே யானையின்காலில் மிதிபட்ட சர்ப்பம்போற்சீறி விறைத்துநின்றேன் மனம்தேறினேன் ஆகையால், காசிசெல்லுகிறவர்களைச் சகல வித்தியாசமில்லாமல் உபதேசம் பண்ணினதையிர் மஉபதேசமென்றெண்ணிபுத்தியுகதியோடு வஞ்சனையில்லாமல் சாட்சாத் பிரம்மாவே ஆயுதமுளித்து வந்ததுபோல உருவெடுத்துக்கொண்டு அயோத்தியாபுரிப்பட்டணத்திற்குப்போய் அரிச்சந்திரமகாராஜனை அனேகவிதமான மந்திரதந்திர யந்திரங்களினாலும் இந்திரஜாலமகேந்திரஜாலவித்தைகளினாலும் பிரமிக்கும்படி செய்து இந்திராதிதேவர்களும் மகிழ்ந்துகொள்ளும்படி தெய்வயாகம்பண்ணவேண்டியநிமித்தியமாய் இந்த

ஐம்பத்தாறுதேசத்திலும் ஆராய்ந்துபார்த்த ராஜாக்களிலுன்னைப்போலே சமர்த்தரும், தாதாக்களுமில்லையென்று உன்னுடைய பட்டணம் வந்து உன்னைக்கண்டோம் ஆகையால், அட்டியில்லாமல் யாகத்துக்கு [illegible]யானையின்மேலேறி கல்லெறிந்தால்எவ்வளவுதூரம் போகுமோஅவ்வளவுயாகத்துக்குத் தனம்வேணுமென்று கேளுங்கள் அதற்குடன்பட்டுக்கொடுப்பானேயாகில் அவனுடையவார்த்தையைத் தப்பவைத்து விஸ்வாமித்ரமகாமுனியைவெல்ல வழிதேடிப்போகிறோம் அதிசீக்கிரமாய் சாகேதபுரஞ் சேருங்கள் வித்யார்த்திகளே,

வித்யார்த்திகள்-வசனம்,

அப்படியேபோய்வருகிறோம் விசுவாமித்திர மகாமுனீசுவரரே,

பொது-விருத்தம்.

கோசிகமுனிவரித்திறமுரைத்தார் குவலயந்தனிலரிச்சந்த்ரன்
ஆசிகள்கூறும்வேதியர் அறவோரானைசேனைகளின்காவலரும்
விசிறுகவரிகைதனில்லாரும் விளங்கியமாதர்கள்சூழப்
பேசியவிருதாவளிகளினுடனே ப்ரியமுடன்கொலுவில்வந்தனனே

வசனம்,

அகோகேளுஞ் சபையோர்களே விசுவாமித்திரர் ஆச்ரமத்திலேயிவ்விதமாய் நடக்கிற சமயத்திலே வேதவேதியர்கள் தபோதனர்கள் முதலானவர்களும் ஆசிர்வதிக்கச் சேனைசேனாபதிகள் விருதாவளிகள் முதலாக அஷ்டாதச வாத்யங்களோடும் ஆடல்பாடல்களுடனே சாய்மறை வீசிவரும் மாதர்களுடனே அரிச்சந்திரமகாராசன் கொலுவுக்குவருகிற விதங்காண்க,

௩-தரு-இ-ம்-பியாகடை-அல்லது-சங்கராபரணம்-அடதாளம்,

பல்லவி,

இராஜராஜமகாராஜ னரிச்சந்திர ராஜன்கொலுவில்வந்தான்

அனுபல்லவி.

தேசத்துள்ளமன்னர்கள் தினமுந்துதிசெபேசர்
தாசசெனங்கள்பரி தாபந்தீர்க்கும்வில்வாளர்
மாநிலாமணியெல்லை மார்த்தாண்டன்றன்குலேசர்
வாசவன்முதலோர்கள் வரிசைதெரிந்தவல்லாளர்(ராஜ)

சரணங்கள்.

௧, மாதரும்மாரி மழைமிகப்பொழிந்திடக்
காதன்மிகுமாதர்கள் கற்புநிலைநிறந்திட
வேதமொழிப்படி நீதிசெலுத்திடப்
பூதலத்தின்மன்னன்பொற்புமிகுந்திட (இராஜ)

௨, சுந்தரமாமதி நிகர்த்தமுகந்துலங்கச்
சந்ததம்லோகிதன் சபையுமிகமுழங்க
மந்திரிசத்யகீர்த்தி மகிழ்ந்திலகத்
தந்திரமாய்வர தானியருமிலகக(இரா)

௩, மத்தளதாள முழக்கசதுடனுடை
முத்தமிழ்மாதர்கள் முனைந்துயிர்த்தமிட
மத்தகமண்டப முறைமணிமாட
சித்திரமாய்மவை ரத்நமுடிசூட(இரா)

பொதுவிருத்தம்,

௧ அரிசிலேமிகத் துன்பம்விளைத்திட
மரிசிபாகவம் மாமுனிவன்விடு
பரிசிலாளர்கள் பாண்மைமிகுந்திடு,
குரிசிலோன்றன் கொலுச்சபையுற்றனர் (௪)

வசனம்,

அகோகேளுஞ்சபையோர்களே தேவலோகத்திலேநடந்தவிருத்தாந்தங்களை விசுவாமித்திராலே சொல்லக்கேட்ட வித்யார்த்திகளென்னும் அவருடைய சிஷ்யரானவர்கள் இமைப்பொழுதில் சண்ணிறங்க இமிசைவிளைக்கும்சாமார்த்திய முள்ளவர்கள் மகாபயபக்தியுடனேநியமனப்பிரகாரம் அரிச்சந்திரமகாராஜன்சபைக்குவருவதுகாண்க,

௪-தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்,

பல்லவி.

வித்யார்த்திகள்வந்தார்-சபைதனில்-வித்யார்த்திகள்வந்தார்

அனுபல்லவி,

வித்யார்த்திகள்வந்தார் வேதாவிலுமேலாய்
சத்யானவேலையில் மாதவத்தில்மிகுந்த(வித்)

சரணங்கள்,

௧, குருவிசுவாமித்திரர் திருவருளின்படி
மருவிய அரிச்சந்திர மன்னவன்சபையைநாடி(வித்)

௨, கொடிக்குன்றாமயாகம் நோக்கிச்செய்யமிக்க
படியில்லாவேத ப்ராமணர்யாமென(வித்)

௩, கருணனுக்குப்பின் தருணத்திலேகொடை
தானியில்சத்யரிச்சந் திரனுதாமென(வித்)

கட்டியக்காரனுக்கும்-பிராமணர்களுக்கும்

தர்க்கவசனம்,

கட்டியக்காரன்

சரணஞ்சரணமையா சுவாமி தேவரீரெங்கேயிருக்கிறது,

பிராமணன்

மகாராஜனுயிருக்கவேணும் மகதைஸ்வர்யமிகுந்திருந்து இராஜ்யபாரம்வகித்துவாழ சிரஞ்சீவியாயிருந்து

(கட்டி) எவ்விடத்திலிருந்துவருகிறீர்கள் பிராமணசிரேஷ்டரே

(பிரா) நாங்கள்விசுவாமித்திர முனிவருடைய சிஷியன் ஆச்ரமத்திலிருந்துவருகிறோம்,

(கட்டி) அதென்னசுவாமிகளே கடற்கரைநண்டைப்பெட்டியிற் றூட்டிச்சருணியைப்போலே யிருக்குது,

(பிரா) அடேதுஷ்டப்பொட்டிமகனே என்னவார்த்தை சொல்லுகிறாய்மதிப்பிரஷ்டாதிஅமனேமர்க்கடதுஷ்டபாஷ்டகமன்றே

(கட்டி) மயிலன்சன்னை கச்சாலப்பங்கடை கச்சக்கருவாட்டுச்சகுனியா,

(பிரா) அடேபோடா மதிப்பிரஷ்டமர்க்கடமே நீசென்மசென்மத்துக்கும் துர்வாசனுய்ச்சனித்து அந்தியசென்மத்திலே சண்டாளனுய்ப்பிறப்பாய்,

(பிரா) மதிப்பிரஷ்டமகாலிங்கசாஸ்திரிகளேயேன் பிரமகத்திபிரசத்தீஜசாஸ்திரிகளே வன் அமேத்தியபிரஷ்டிம் அப்பசாஸ்திரிகளாரும் காணுமவாரும் நமதுகுருமுனிநாதருடைய பாதஅரவிந்தத்தைத்யானம் பண்ணிக்கொண்டு மகாராஜன்சபைக்குப்போனால் சகலகாரியமும்செயமாகிவிடும்,

மற்றுபிராமணன்-வசனம்-அப்படியேயன்றது

பொது விருத்தம்.

போதகமுனைத்தபுன்னியமொழுக்கு புகழ்மலையடர்வனம் கடந்து பாதகந்தொழிலுனுவலவெனும்பயிலாப் பருதிகுலசம்பாதிசெல்வப் பேதகமிழந்தபார்மன்னனைப்போற்றிப் பெருமைசேர்சனமளித்திடச், சந்ததிவிடம்வந்தனற்கருமஞ்சாற்றுகவெனச்சருவினரே

வசனம்,

குருமுனிவருடையவார்த்தைக்கெதிர்வார்த்தை சொல்லாமல்வந்த பிராமணர்கள் அரிச்சந்திரமகாராஜாவின் சமீபத்திலேவந்தவுடனேபாதப்ரட்சாளனுதி ஷோடசவுபசாரங்களுஞ்செய்துகுசலப்பிரசன்னம்பண்ணுகிறவிதங்காண்க,

இராஜன் சொல்-விருத்தம்,

ஐயரேபோற்றிபோற்றி யருமறையோரேபோற்றி
மெய்யரேபோற்றிபோற்றிமிகுதவப்பேறேபோற்றி
அய்யவின்னகர்க்குவந்த அரியவாருள்வீர்போற்றி
பொய்யனுவனுஞ்சொல்லாப்போதமதனைப்பீர்போற்றி

வசனம்,

அகோவாருங்கோனயாசுவாமிகாளுவேதங்களும், ஆறுசாஸ்திரங்களும் பதினெண்புராணங்களும், இருபத்தெட்டாகமங்களும் முப்பத்திரண்டுஉபநிடதங்களும், அறுபத்துநாலுகலைஞானங்களும், தொண்ணூற்றாறுதத்துவங்கள்முதலான சகலகலைகளுங் கற்றுணர்ந்த மறையோர்களே சுவாமிகளே சரணமையா சுவாமி, அதிசீக்கிரத்திலேதாங்களிவிடத்துக்குவந்த காரணத்தை அடியேன் கொடிதிருவுளம் பற்றிப்பொய்யென்பது அணுவளவும் புகலாமல் திருவாய் மலர்ந்தருளவேணுமையா, தேவதேவாகளும் துதிக்கப்பெற்றபுனிதரானபிராமணோத்தமர்களே,

க-பிராமணர்கள் சொல்லும்விருத்தார்த்தம்,

மோகனம்-அடதாளம்,

மன்னவாவின்மயக்கேளாய் மாமுனிவிசுவாமித்திரர்
சொன்னகன்மொழியியானறவைகேளிர்தமுகவிடைகருங்கண்டங்
தன்னைநேர்த்துசெய்த தவமதுதவறிடாமற்
பண்ணரும்யாகஞ்செய்யப் (தொத்து)
பணங்கள் வேண்டிநாங்கள்வந்தோம்-அரிச்சந்திராவுன்
குணங்கள்கண்டுளமகிழ்ந்தோம்-இப்புவிமீதில்
மனைதிகழ்ந்திடவல்லிமாலைதிகழ்மார்பனே
கனத்தனிற்கோடாகோடிசெம்பொனளிப்பவர்கள் (முடுகு)
உத்தனுக்கினையேந்த குலதனிலிலோனா
வத்துனையுமுத்தனம் வழியுளைப்பாயென்ற
சத்தனும்மனைவியுங் கருகதனிற்களிப்பூரச்
செந்தவத்துடனிந்தச்சீமையையாளுவாய் (பஜ)

வசனம்,

அகோவாரும் அகண்டபூமண்டலாதிபதியாகிய அரிச்சந்திரமகாராஜனே முனிசிரேஷ்டராகிய விசுவாமித்திரமகா முனிவருடைய சிஷயர்களாகிய எங்கள்குருவானவர் அருள்கிருபைசெய்து திருவருள்புரிந்த திருவாக்குண்டு, அதைக்கேட்பீரானால் உமக்கு மூவேழுதலை முறைக்கும் புகழும் கீர்த்தியும் சாயுஜ்யமும் கிடைக்கும் அந்தமகாத்மாவே இயற்றிவந்தவமானது இந்நாளிலேதவறிப்போகாமல் தேவயாகஞ்செய்யப்பொருள்கள்வேண்டி இந்த அன்பத்தாறுதேசமுந்திரிந்தும் அதற்குத் தகுந்த இராசாக்களகப்படாமல் உம்முடையகுணநிசயங்களை கேள்விப்பட்டு எங்களையும் இடத்துக்கனுப்பினர் நாங்களும்மகாசந்தோஷத்தோடேயுமுடையசமுகம்வந்தோம் அரிச்சந்திரமகாராஜனே அல்லிமாலையணிந்தவரே இருமாத்திரைப்பொழுதிலே சுவர்ணதிரவியங்கள்

கொடுப்பீரென்றும், உமக்குச் சமமானராசாக்கள் ஈரேழுலோகத்திலேயுமில்லையென்றும், இந்த பூலோகத்திலே உம்மைவைத்தேதோம் கொடுக்கமுண்டாவவயாதில்டம்முடையபுத்திரகளத்திராதிகளுஞ்சகலசௌக்கியமாய் மகாதலத்திலே யிருக்கவாய் இந்தஅயோத்தியாபுரி பட்டணத்தையாண்டுக்கொண்டு மகாராஜனுய க்ஷேமமாயிருப்பீர்மகாராஜனே நீர்க்காயுசுயமந்து சம்பந்தங்களாளிபவந்து

இராசன்சொல்விருத்தார்த்தம்-மோகனம்- அடதாளம்,

ஆழிசூழுலகோர்போற்று மருமறைநூல்வல்லோரே
ஊழியன்பொருள்கள்தேடி யுத்தமர்க்களிப்பதல்லாற்
பாழினிலீவப்பதுண்டோபண்புளமுனிவர்க்கித்த
நாழிகைதன்னிற்செம்பொன் (கொத்து)
காணேதருகுவே னையா-தூயசாமமறை
யோனேவருகுவீ ரையா
தானேதன்னருட்கீர்த்தி
டானேயிம் மாத்திரத்துக்
காணேன் பொருட்களையி
வேணேயிதோகைப் பற்றில் முடிகு,
வாருவீராச்ரமஞ் சேருவீர்தன்னருள்
கூருவீர்யிகமனக் தேறுவீரையனே (காணே)

வசனம்,

அகோவாருங்கையர் சுவாமி] வேதியர்களே தொண்டனுகிய நான் தேடிய சொத்துக்கள் யாவற்றும் உங்களைப்போலுள்ளமகாத்மாக்களுக்கு உதவிசெய்வதேயொழிய வீணுய் களைவக்குசுவாதவிஷயத்திலும் உபயோகிப்பதுண்டோ அந்தமகாத்மநக்கு இந்தநிமிஷத்திலேயேதருகிறேன்சுவாமிகளே வேதவிற்பன்னர்களே வாருங்கையா சுவாமிஎன்பேரில் தயவுசெய்து அருளிச்செய்தாரே இம்மாத்திரத்துக்காவது காண் தொண்டனேனேவேண்டும் பொருட்கேட்கதருகிறேன் கைக்கொள்ளுங்கள் ஆச்ரமஞ்சேருங்கள் அருட்கிருபைசெய்யுங்கள் மனக்கவலையைமாற்றுங்கள்சுவாமிகளே திருவுளமகளிகூறுங்கள்நமஸ்காரம்மெனகாரம்

பொதுவிருத்தம்,

அந்தணன்னுள்ளிசிந்ததற்பொருட்க
ளியாவுங்கைக்கொள்வோமெனத்துணர்ந்து
அன்னைக்கருவுமகிழ்ந்தும்கிடு
படர்வனத்துகைப்பிகங்கன்று
கந்தமூலமகாகாய்கனி மிருந்த

கடுவெளிசூழ்கழுனிகளுங்
களிப்புற்றுநடந்தமறையவரெவருங்
கவுசிகமுனிபர்ணசாலை
வந்தபின்னடந்த வாறவர்க்குரைத்து
வாழ்ந்திடுக்தாவிடத் துறைந்தார்
வாதனைவினைக்கு மாமுனிநெடிய
வையமும்வானமும் நடுங்க
மந்தராசலமிகர் மாடகூடங்கள்
மணிதிகழ் மேடைகள்பொலிந்த
மாநகர்சாகேத புரியினிற்கௌசிகனை
மைந்தனும்வருந்தக வுரைப்பாம்,

வசனம்,

அகோகேளுஞ் சபையோர்களே இவ்விதமாகச்சொன்ன அரிச்சந்திரமகாராஜனை வெகுவாகப்புகழ்ந்துயாகஞ்செய்கிறசமயத்தில்வந்துவேண்டியபொருட்களை வாங்கிக்கொண்டு போகிறோமென்றுவிடைபெற்றுக்கொண்டு வநாந்திரங்களைக்கடந்து விசுவாமித்திர ராச்ரமத்துக்குவந்து அரிச்சந்திரமகாராஜன் சபையில் நடந்தவிருத்தாந்தத்தை பிராமணன் சொன்னவுடனே வானமும்பூமியும் அதிரமகிழ்ச்சியால் இளம்பிக்குதித்த விசுவாமித்திரர் அயோத்தியாபுரியைநோக்கிவருகின்ற அதிசயஞ்சொல்லுவது காண்க.

விசுவாமித்திரர் அயோத்தியாபுரியை நாடிவரும்போது
நடக்கிற அதிசயங்கள் -விருத்தம்,

அலக்கியவஞ்ச மாமுனிதோற்றையில்
இலங்கியவண்ட புவனமிரண்டிணும்
விலங்கின்விக்கின பாவைநீர்ப்பாவையும்
கலங்கினின்றன கண்ணீர்சொரியவே (அ)

வசனம்,

அகோகேளும் தர்மபுத்ராதிகளே அரிச்சந்திரமகாராசனது அரண்மனையைநோக்கி விசுவாமித்திர மகாமுனிவர்வருதல்கண்டு அண்டபிண்டங்களிலுமுள்ளமிருகங்கள் பறவைகள்- சலஜெந்துக்கள் ஊர்வனங்கள்வித்துக்கள் முதலாகியயாவும் நடுகலங்கி கண்ணீர்சொரியவிடும் அதிசயங்காண்க,

ரு-தரு-இ-ம்-ட துவாளி- ஆதிதாளம்,

பல்லவி,

கெடுக்கவர்தனன் விசுவாமித்திரனென்று
கெதிகலங்கினவே
ஒள

அநுபல்லவி;

மடுக்களும்வாவியும்　　　மலரும்பூஞ்சோலையும்
நடுக்கமிகுந்து　　　நலிந்திடநாடெலாங் (கெடுக்)

சரணங்கள்,

௧, கள்ளமதியுள்ள　　　கரியகுரங்குகள்
துள்ளமதியற்று　　　சோலைக்குள்ளொளிந்தன
உள்ளமதிகெட்　　　டொடுங்கினகின்னரர்
வெள்ளமதிலோடி　　　யொளித்தனவிராலெலாம் (கெடுக்)

௨, தலைசாய்த்தநெற்கதிர்　　　தரையிற்புரண்டன
குலைசாய்த்தவாழைகள்　　　குப்புறவிழுந்தன
கலைசாய்த்துநின்றன　　　கஞ்சமலரெல்லாம்
உலைசாய்த்துநின்றன　　　வுர்வியிலெங்கணும் (கெடுக்)

௩, அன்னப்புட்களார　　　வாரமொடுங்கின
சொன்னப்பறவைகள்　　　சொரிவாயடங்கின
வன்னப்புறாவிகள்　　　வலுமையொடுங்கின
யென்னவிளையுமோவென்　　　றேங்கத்தொடங்கின (கெடுக்)

பொதுவிருத்தம்,

படர்சடைமுடியிலங்கப் படியெலாங்கிடுகிடுக்கத்
துடர்வெறுண்முகத்துலங்கத்தோற்றுவோர்மனமொடுங்கச்
சுடர்குலத்தரசனாளுந் தொல்புவியோரொடுக்க
இடர்விளைவிசுவாமித்திரன் இறைவனற்சமுகம்வந்தான்　(௯)

வசனம்.

சர்ப்பக்கூட்டங்களையுதறிவிட்டதுபோலே விரிந்ததழைந்தசடைகளுடன் கடக்கையில் பூமியதிர்ந்து கிடுகிடுக்கவும் முகத்திற் கோபாக்கினிஜொலிக்கவும் கண்டவர்கள் மனமருண்டொடுங்கவும் அயோத்தியாபுரியோரெவரும் திகைத்து அங்கங்கு ஓடிஒளித்துக்கொள்ளவும் கெடுதல்விளைக்கிறவிசுவாமித்திரானவர் அரிச்சந்திரமகாராஜன் சமுகத்தில்வருவதுகாண்க.

௯-தரு-இ-ம்-ஆகிரி- அடதாளசாப்பு-ரூபகம்,

கண்ணிகள்,

௧, விரித்தசெஞ்சடையாட　　　விளங்கியபுலித்தோலாட
தரித்தமுப்புரிநூற்களாடத்　　　தவசியர்வந்துதோணினார்
௨, கையினிற்கமண்டலமுங்　　　காதிலெழிற்குண்டலமும்
மெய்யினில்வெண்ணீறிலங்க　　　விசுவாமித்திரர்தோணினாரே
௩, மித்திரபேதங்களற்று　　　மேவுமரிச்சந்திரன்கையில்
நித்யதானம்வாங்கவென்று　　　நிமலர்வந்துதோணினாரே
௪, அஞ்சலென்றவரிச்சந்திரன்　　　ஆளும்பூமியடங்கலுமா
வஞ்சகமாயபரிக்க　　　மாமுனிவருந்தோணினாரே

அரிச்சந்திரமகாராஜன் வாசல்காக்கும்,
கட்டியக்காரன்-விசுவாமித்திரரை-வினவுதல்-விருத்தம்,

சந்தமாதவத்திருக்கட் சியற்கையாம்நிலைமையெங்கே
மந்தமாருதம்போற்பொங்கிமனந்தனின்வெகுட்சியோங்க
இந்தநற்புவியையாளு மிறைவனற்சமுகந்தேடி
வந்தகாரியமதென்ன வளம்பெறவிளம்புவீரே

வசனம்,

அகோவாருங்களையா சிறந்ததவத்தையுடைய மகாமுனிவரேநீங்களெந்த ஆச்ரமத்தைச்சேர்ந்தவர்கள் நீங்களிருக்கப்பட்ட இயல்பானவிடமீது பிரளயகாலருத்திரனையுந் தகித்தசண்டமாருதம்போலே மனங்கசிந்துட்பொங்கி மகாகோபாக்கினிபொருந்திய நெற்றிக்கண்ணைப்போலே ஜ்வாலாமுகராய், இந்தராச்சியத்தையாளப்பட்ட அரிச்சந்திரமகாராஜாவின் சமுகத்தைத்தேசித்து வந்தகாரியத்தைத்தெளிவாக அறிவிக்கவேண்டுமையாசுவாமி முனிநாதரே,

விசுவாமித்திரர்கட்டியக்காரனுக்குச்சொல்-விருத்தம்,

சட்டமாயரசையாளும் சத்யரிச்சந்த்ரன்வாசல்
கட்டியக்காரகேளாய் கவுசிகவிசுவாமித்திரன்
இட்டமாய்மகிழ்ந்துநின்ற திவ்யதானங்கள்வாங்கப்
பொட்டெனவந்தேனென்று பூபதிக்குரைத்திடாயே,　(௰௧)

வசனம்,

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா மகாநீதிநெறியோடு சத்யதர்மந்தப்பாமல் ராச்யபரிபாலனம்பண்ணிவருகிற அரிச்சந்திரமகாராஜன் சமுகத்தில்கடக்கப்பட்ட நித்தியதானம் வாங்கிக்கொள்ளவேண்டி தேவலோகத்திலேயிருந்து விஸ்வாமித்திர மகாரிஷியானவர் வந்திருக்கிறாரென்று மகாசந்தோஷத்துடனே உங்கள்மகாராசாவுக்குச் சொல்லிவாரும்பிள்ளாய்,

கட்டியக்காரன்-வசனம்,

அப்படியேசொல்லிவருகிறேனையா சுவாமி,

கட்டியக்காரன்-மகாராஜாவுக்குச்சொல்-விருத்தம்,

அல்லினன்மலரின்மாலை அணிந்திடுமார்சேவுந்தன்
நல்லியல்முழக்கங்கேட்டு நற்றவவிசுவாமித்திரர்
சொல்லியவாசறன்னிற் சுகமுடன்வந்தாரையா
புல்லியிங்குரைத்தேனெந்தன் பூபனேசரணமையா　(௰௨)

வசனம்,

அகோராஜாதிராஜராஜமார்த்தாண்டா கோடிசூரியப்பிரகாசா [illegible]ஞ்சரணமையா சுவாமி நம்முடைய அரண்மனையிலே கடக்கப்பட்ட நித்தி

மந்தாரமகிமையையுங்கேட்டு தேவஸேரசத்திலேயிருந்து விசுவாமித்திரமகாமுனிசுவரர் வந்திருக்கிறசமாசாரத்தைசமூகத்தில் தெரியப்படுத்த அருள்புரிந்தார் மகாராஜனே,

சந்திரமதி-கொலுவுக்குவருதல்-விருத்தம்,

நித்தியமகிமைபூண்டநெடியமாதவத்தோர்தம்மை
பத்தியாய்ப்பூசைசெய்துபதமலர்பணிந்துபோற்றி
நித்தியதானஞ்செய்யும்கீர்த்திசேர்ராஜன்தேவி
சத்தியந்தவறாமங்கைசந்திரமதிவந்தாளே (௰௩)

வசனம்,

நிர்த்தர்மான் மகத்வமுள்ள அருந்தவத்தோர்களை பயபக்திநேசத்துடனே பாதபூசைசெய்துதொழுதுபோற்றி நித்தியதானதர்மங்கள் செய்கின்றகீர்த்திநெறிமிகுத்த அரிச்சந்திரமகாராஜன் தனது தர்மபத்தினியை சபைக்கு அழைத்துவரும்படி ஆக்யாபிக்க சத்யதர்மபரிபாலநியான சந்திரமதியம்மாள்சபைக்குவருதல்காண்க,

௭-தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்,

பல்லவி,

வந்தனள் அரிச்சந்திரன்-வாழ்வுமிகும்மனையாள் வந்தனள்

அனுபல்லவி,

வந்தனள்சந்திரத மேதினிதவத்தினள்
சந்திரமதியெனும் ஸகலஸற்குணத்தினள் (வந்த)

சரணங்கள்,

௧, கொண்டல்நிகர்கூந்தலாள் கூறுந்திங்கணுதலாள்
கெண்டைநிகர்விழியாள் கிளர்புருவச்சிலையாள்
வண்டுமொய்க்குந்திலத மலர்போன்றநாசியாள்
கண்டுமொழிபுகர்ந்து களிக்குஞ்செங்கனிவாயாள் (வந்)

௨, சங்குநிகர்கழுத்தாள் தழைந்திலகுபுயத்தாள்
செங்கமலகரத்தாள் சிறந்தகொங்கைக்குடத்தாள்
பங்கேருகவுந்தியாள் பளிங்கொளிமின்னிடையாள்
செங்கதலிதொடையாள் செய்யபொன்னடியாள் (வந்)

௩, செண்பகமலரெனச் சிவந்திலகுமேனியாள்
பண்புயர்ந்திடுங்கற்பில் பகருமருந்ததியாள்
தண்பயிலுமொழியில் ராணிமாதினிவையாள்
வெண்மதிமுகத்தினள் மிகப்பெருந்தவத்தினள் (வந்த)

சந்திரமதிசொல்-வஞ்சிவிருத்தம்,

திருவருள்படைத்த-திருச்சபைக்கெங்கனைப்
பெருக்கமாயழைத்த-பெருமையேதருள்வீர்

மெச்

வசனம்,

ஆகோவாரும் எனதபூர்வஜென்மதபோபலத்தின்மகிமையினாலே அழைத்தருளியபிராணநாயகனே என்னைத்தமது சமுகத்துக்கழைப்பித்தகாரியமின்னதென்று திருவுளம்பற்றவேணுமகாராசனே,

அரிச்சந்திரமகாராசன்சொல்-விருத்தம்,

சந்திரமதியேகேளாய் சாற்றுசன்மொழியொன்றுண்டு
இந்திரன்முதலோர்போற்று மியல்புளகாதிமைந்தன்
மந்திரமுறையறிந்த மாதவவிசுவாமித்ரன்
சுந்தரப்பதங்கள்போற்றிச்சுசித்த மாயழைப்போம்வாராய்

வசனம்,

ஆகோவாரும்பெண்ணே பிராணநாயகி நான்மகா நன்மையாகவுனக்கு வார்த்தைசொல்லுகிறேன் இந்திராதியர்களும் போற்றப்பட்ட காதிராஜன்மைந்தனை விசுவாமித்திர மகாமுனீசுவரர்நமது ஆசாரவாசலிலேவந்திருக்கிறார் அவருடைய பாதசேவை பண்ணி அரண்மனைக்கு அழைத்துவருவோம் வாரும்பெண்ணேபிராணநாயகி,

சந்திரமதிசொல்-வசனம்,

அப்படியே மகாபாக்கியம் பிராணநாதனே

௮-திபதை-இ-ம்-நீலாம்புரி ஜம்பைதாளம்,

கண்ணிகள்,

௧, தேவருலகோர்கள்போற்றுந் திவ்வியமுனிநாதாசரணம்
மூவருள்பெற்றுவந்தமுனிவனேசரணமையா
௨, வானோர்கள்தினம்வணங்கும் வண்மைமிகுபாதாசரணம்
தேனோர்கள்தினம்பூசிக்கும் திருவருளேசரணமையா
௩, மித்திரபேதமற்றவிசுவா மித்திரமுனிநாதாசரணம்
சித்திரங்கள்கற்றுணர்ந்த சேவடிசரணமையா
௪, தருணத்திலேவந்தன்றைதன்னை தற்காத்தவனேசரணம்,
கருணையில்மிகுந்தராஜ காதிசுதனேசரணமையா

பொது-வசனம்,

இந்தப்பிரகாரமாய் பிரார்த்தித்து அர்க்யபாத்யாதி யளித்துகுசலப்பிரச்னைகள் செய்வதுகாண்க,

இராசனும்-முனிவனும்சொல் விருத்தம்,

வந்ததோர்காரியங்கள் வளமுடனேமக்குரைத்தால்
சிந்தையில்மகிழ்ந்துன்னீர்மை சீக்கிரம்நடத்துவோமே (௰௪)

வசனம்,

தேவரீரிவ்விடத்துக்குவந்தகாரியமென்னமோ அதை அடியார்களுக்கு அருளிச்செய்தால் அப்படியேநடத்துகொள்ளச்சித்தமாயிருக்கிறோம் முனீசுவரரே,

இதுவுமது,

அந்தமாயாகஞ்செய்ய ஆருரபொருளனேகக்கோடி
தந்தகமகிழ்வாயாகிற்றாணியிற்புகழுண்டாமே (௰௭)

(வசனம்) தேவயாகஞ்செய்யும்பொருட்டு அனேகம்பொருள்வேண்டிவந்தோம் தந்துமகிழ்விப்பாயாகில் பூலோகத்திலேஎக்காலும் கீர்த்தியுடையாய்மகாராசனே

இதுவுமது,

தேசமூர்சிலமையுண்டோ திரவியமிருக்கதென்செய்ய
யூகமாய்த்தொகையுரைத்தா லொப்புடன்றாரைவார்ப்பேன் (௰௮)

வசனம்,

மனுஷதேகம் அநித்தியமானபடியினால் அனேகமான திரவ்யங்களிருந்தும் என்னகாரியத்திற் குதவியாகும் இவ்வளவென் றுரைத்தலை சொன்னால்மனப்பூர்வகமாய் தாரைவார்த்துக் கொடுக்கிறேன்தபோநிதியே,

விருத்தம்.

தாகமாயானையேறித் தனிக்கவணெறிந்ததூரம்
மோகமாய்ப்பொன்னளித்தால் முழுதினுங்கைக்கொள்வேனே

வசனம்,

அதி புஜபலபராக்கிரமசாலியான ஒருமனிதன் மதயானையின்மீதேறிநின்று மாணிக்கக்கல்லைத்தெறித்த கவண்டின் விசைபோகுமளவுயர்ந்த பொருட்களைக்குவித்துக்கொடுத்தால் மற்றத்துகைக்கு ஏறக்குறைய இன்னமெனக்கையாவது சம்பாதித்துக்கொள்ளுவேன் மகாராஜனே,

இராஜன்சொல்-சுலோகம்,

சத்வாரோவித்ததாயாதா தர்மாக்நீன் றுபதஷ்கரா,
ஜயேஷ்டபுத்ராவமானேன தாயத்தோப்யந்திசோதரா. (௧)

வசனம்,

அகோகேளும் முனிசிரேஷ்டரே பூலோகத்திலே ஒருவர்சம்பாதித்தசொத்துக்களுக்கு தர்மன், அக்கி, ராஜன், சோரன், இவர்கள்நாலுபேரும் தாயாதிகளாவார்கள் இவர்களில்யாவருக்கும்முன்னவனாகிய தர்மன் ஒருவனுக்கே சம்பாதித்த சொத்துக்களைக்கொடுத்துவிட்டால்மற்றமூவரும் சந்தோஷிப்பார்கள். ஜேஷ்டபுத்திரனாகிய தர்மனை அவமானம் பண்ணினால்மற்றவர்கள்கோபிஷ்டாளாய் தனங்களைப்பகரித்துக் கொள்வார்கள் ஆனதால் அடியேன்சம்பாதித்தபொருட்களில் கிஞ்சிற்றுமாத்திரம் பெரியோர்களுக்கு விபாகத் தருகிறேனதைக்கொண்டருளும் மகாத்து

மாமுனிவர்சொல்-விருத்தம்,

மன்னவாபொருட்களெல்லாமாதவனென்னுநாகச்
சொன்னவுன்பொக்கிஷத்துட்சுகிர்தமாய்வைப்பாயன்று
ளென்னகமகிழ்ந்துவந்துன் னிடத்திட்ட பொருட்களியாவும்
பின்னபேதகமகற்றிப்பிரியமுடன்கைக்கொள்வேனே

வசனம்.

அகோவாராய்அரிச்சந்திரமகாராஜனே நீதந்தபொருள்கள்யாவுமென்னுதாக உன்னுடையபொக்கிஷத்திற்றனே வைத்துவைத்தால் நான் யாகஞ்செய்ய யத்தனப்படுகிற அன்றையதினம்வந்துவாங்கிக்கொள்ளுகிறேனவ்வரையி லுன்னடைக்கலமாய்வைத்துவைப்பாயமகாராஜனே,

இராசன்சொல்-விருத்தம்,

பொக்கிஷந்தன்னில்விட்டபொருட்களிலணுவில்லாமல்
அக்கிஷமானவுங்கட் கறுதியாயளித்தபின்னும்
கக்கிஷஞ்செய்யலாமோ கபடமோமுனிவாஐய
சிக்கெனவாச்ரமத்திற்சேர்த்திடச்சுகிர்தந்தானே (௨௰)

வசனம்,

அகோவாருங்களையாசுவாமிவிசுவாமித்திரமகாமுனிசுவாமீ பொருட்கள்யாவையும் அணுவளவுமில்லாமல்முழுமையும் வாங்கிக்கொண்டு மறுபடியும் என்வசத்திலேயே வைத்துப்போனால்அதுராஜாக்களுக்குமிடைவதுசம்பவிக்கும் ஆகையால் என்னை இமிசைபடுத்தாமலும் கபட வஞ்சகம் நடத்தாமலும் கைபற்றிய பொருட்களியாவையும் எடுத்துக் கொண்டு ஆச்ரமத்திற்குப்போய் சேரவேண்டுமெமகாமுனிவரே

விசுவாமித்திரர்சொல்-வெண்பா,

இத்தனைரனத்தையா ரொருத்தனெடுத்தேகுவனே
சத்தியில்மிகுத்தயோத்தி பூபாலா-சத்யவரிச்
சந்திராநீதந்தபொரு ளெந்தநாளில்வந்துகேட்பே
னுந்தனதுபொக்கிஷத்துள்வை.

வசனம்,

அகோவாரும்மகாராசனே இவ்வளவுதனங்களை நானொருவனெப்படிச்சுமக்கப்படும் நான்யாகம்பண்ணுகிறநாளில் வந்துவைகப்பற்றிக்கொள்ளுகிறேன்பத்திரப்படுத்திவையும் மகாராஜனே,

இராசன்சொல்-வெண்பா,

சுத்தமேமிகுத்தவனிடத்திலுமக்குற்றபொரு
ளத்தனையுமன்வதுவைத்தி ருத்தமனே-சித்தமதில்
பேதமிலையாதுமது தூதவருடனேயொரு
போதநனில்வந்தெடுத்துப்போம் (௨)

69

வசனம்,

அகோவாரும்விசுவாமித்திரமுனீந்திரரே மிகுந்த சமுசாரியாகிய என்விட்டத்திலோ உமக்குக்கொடுத்த தானமானபொருளை மறுபடியும் வைத்துப்போட்டீர் ஆகிலும் உம்முடைய ஊழியக்காரரோடுவந்துமனப்பேதகமில்லாமல் அதிசீக்கிரத்திலெடுத்துக்கொண்டுபோயருளவேணும்மகாமுனிவரே,

பொது-சந்தவிருத்தம்,

கேடுவிளைந்தியாமுனியாசனைக்கேட்டபொருட்களெல்லாம்
வேடுமன்னுளினிற்றருகவென்றேதிவினாந்தெழுந்தோடிநெடுங்
காடுளமிருகப்பறவைகளுநேர்வனக்கலைக் கருதிநினைத்திடலும்
சூடுபட்டுயிர்துள்ளும்வாறுபோலவையாவுஞ் சூழ்ந்தனவெங்கணுமே,

வசனம்

அகோகேளுந் தர்மபுத்திராதிகளே இவ்விதமாய்க்கொடுமைவிளைக்கவந்தகுசிகைசுதனவர் யாகஞ்செய்ய வேணுமென்று கேட்டருளிய பொருட்களைக்கொடுத்த அரிச்சந்திரனிடத்திற்றானே மறுபடியுமனுப்பிவித்து நானயாகஞ்செய்யத்தொடங்குகிற அனைத்தையுமினமேவந்துவாகக் கொள்ளுகிறேனென்றெழுந்து விரைவாயோடிப்போய் வனாந்தரங்களிலுள்ளமிருகங்கள்பட்சிகளூர்வனங்கள் முதலானஇனமம் அனேகம் செந்துக்களையினைத்துமந்திரோச்சாடனஞ்செய்தமாத்திரத்தில் அவைகளெவ்வொன்றும அக்கினியாதையுற்றுத் துள்ளித் திரிவதுபோல அடர்ந்துவருவதுகாண்க,

௯-தரு-இ-ம்-கல்யாணி-அடதாளம்

பல்லவி,

வனமிருகங்களோர் வனப்பறவைகள்வந்துநிறைந்ததுவே

அநுபல்லவி,

மனந்தனில்முனி நினைத்தபோதந்த
வினந்தனைக்கணித் தெண்ணமுடியில்லா (வன)

சரணங்கள்,

௧, பார்வையிலேயிந்தப் பாரெலாந்திப்பொறிப்
பரந்திடப்பாய்ந்திடும் பரிதிரள்களனேகம்
பந்திபந்தியாகக்கார் மேகமெழுந்ததுபோல்
பரிவாய்முடிகிவரும் படர்யானைகளனேகம்
ஊர்வையானபிடி யானையின்கன்றுகள்
எக்களித்துக்கொண் டெழுந்துவருமனேகம்
எடுத்துவிழுங்கவரும் வாயைப்பிளந்தெதிர்
எழும்பிவருஞ்சிங்க மின்றுவருமனேகம்

70

சேர்வையாகவருஞ் சிறுத்தைப்புலிகளும்
சிரமயிர்சிலிர்த்தோடுஞ் சிங்கக்குட்டியனேகம்
சீரானமுகிற்களைச் சினத்துமயிர்க்கலை
சிலிர்த்தாடுக்காடிகள் சேரவருமனேகம்
கோர்வையாகவொற்றைக் கொம்புளபன்றிகள்
கொண்டானடித்துக் குதித்துவருமனேகம்
கோடேறிப்பாய்ந்திடுங் குரங்கினங்களனேகம்
கொடுமைசெய்தேகொல்லுங் கொடியாடுகளனேகம்
(முடுகு) கோலமாகவே ஞாலமீதில்வி
சாலமானகல் மூலபலமென (வனமி)

௨, அம்புபோலவொற்றைக் கொம்புளதந்திகள்
ஆக்ரமித்தேவந் தடைந்திடுவதனேகம்
அண்டம்புவன மிரண்டையும்பேதிக்கும்
அஷ்டதிக்கசம்போல்வெள் ளானைகளுமனேகம்
கும்புகும்பாய்வாலில்லாக் குரங்கினங்களும்
குவலயத்தைத்துளைக்குங் கொடும்வராகமனேகம்
கூக்குரலிடுமோனாய்க் குட்டிகளுமனேகம்
குளறியுளறிச்சேருங் குழிநரிகளனேகம்
தெம்புடன்வருஞ்செந்நாய்க் கும்புகளுமனேகம்
திரண்டுவந்தெழும்நீர்நாய் திரட்களிலுமனேகம்
தேய்பிறைபோற்கூனித் தேகரம்புகள்
தீய்த்துடல்காறிய தேவாங்குகளனேகம்
கொம்புகளிற்கிளைத்துக் கூடுமான்களனேகம்
கோடைக்கானலைநீராய்க் குறிக்குங்கலைகளனேகம்
கொண்டாணடித்திடுங் காண்டாமிருகமனேகம்
கொண்டபிணத்தைத்தாவுங் கொடும்யாளிகளனேகம்
(முடுகு)கொடுமையாயிந்த நெடும்புவியதனிற்
கொடுமைசெய்யும்முனிக் கடுமையாகவே(வனமி)

௩, செங்கதிரைக்கண்டு சிறகைவிரித்தாடுஞ்
செய்யமயிலினங்கள் சேர்ந்துவருமனேகம்
செப்புமொழிகளில் அமுதம்பொழிந்திடச்
சிறக்கக்குலாவிய செழுங்கிள்ளைகளனேகம்
பங்கமில்லாமங்கைக் கொங்கைகட்கிணையான
பண்புமிகுஞ்சக்ர வாகப்புட்களனேகம்
பாதகக்கூகைக்கோட்டான் பரவிவருமாந்தைகள்
பசியகுயிலினங்கள் பறந்துவருமனேகம்

மஅ

புக்கவராஜாளிகள்　　புண்டரீகாளம்
புசித்திடுமன்னங்கள்　　புகழ்க்கருடனனேகம்
　புனத்தனிலுலாவிய　　காடைகவுதாரிகள்
　புகைக்கனல்புசித்திடும்　　புள்ளினங்களனேகம்
மங்களமொழிகூறும்　　நாகணவாய்ப்புட்கள்
மதிட்களெல்லாம்கொத்தும்　　மாங்கொத்திகளனேகம்
　மாடப்புறுச்சேவல்　　நாரைவல்லூர்காகம்
　மதிமிகுதூக்கணான்　　மகிழ்ந்துவருமனேகம்
(முடுகு)மாயஞ்செய்திடு　　மாமுனீந்தானு
　பாவஞ்செய்திடு　　கேயமறியாத(வனம்)

௨, கொட்டியவாயில்　　விடங்கக்குந்தேட்களும்
கொடியயிண்டப்புலிக　　கூட்டங்களுமனேகம
　கொடிவேலமுட்போற்சடைக்கா　　ளுளசெய்யான
　கொள்ளிகட்டுவாய்க்காலிக்　　குலங்களிலுமனேகம்
தட்டியபோதுயிர்　　தள்ளாடவிழ்த்திடும்
தறைவாழ்புடையாஞ்சுத்தி　　தவிழ்ந்துவருமனேகம்
　தாதுகலக்குஞ்சீதக்　　சலமண்டலியனேகம்
　தவளைப்பவழக்காலி　　தறையிலூறுமனேகம்
கிட்டியசீவனைப்　　பொட்டெனவேகொத்திக்
கிளைக்குக்கிளைதாவும்　　வளைப்பாம்புகளனேகம்
　கீரிகருடனைச்　　சீறியுயிர்விடும்
　கிலிகொண்டசர்ப்பங்கள்　　கிளம்பிவருமனேகம்
நெட்டியவாரண்மீது　　நிகமுஞ்சதையும்போல
நெடியவுடும்புகள்　　நெருங்கிவருமனேகம்
　நினைத்தபடிமுடிக்கக்　　கருதியசகுனிகள்
　நெஞ்சில்நினைத்திடு　　வஞ்சமறிந்திலா
(முடுகு)நிறைந்தகரிமுதற்　　பறந்தகருடனும்
　நிறைந்தயெறும்பையும்　　குறைந்தமுனிக்கெதிர்(வன)

பொதுவிருத்தம்.

அனந்தங்கோடிப் பறவையூர்வனவிலங்
கினந்தனைநினைக்கின் றேனேவணங்கவோர்
தினந்தனிற்சென் றயோத்தியையழிக்கவென்
றெனக்தலோடங்க ணேன்றதுகூறுவாம்

வசனம்,

அகோகேளுஞ் சபையோர்களே இவ்விதமாய்வந்தகோடாகோடிப் பறவைகளும் ஊர்வனங்களும் மிருகங்களும் விசுவாமித்திர முனிவனை யடிவணங்கி நின்றவைகளைப் பார்த்துத் தாயகேதுவிங்கேபரி லக்கியாஸ்

நாம் விழுந்தாற்போற்கோபித்து இந்த ஒருநொடிக்குள்ளே அயோத்தியாபுரிப்பட்டணத்தைச்சேர்ந்தவங்களுமழித்துவிடும்படி உத்திரவுகொடுத்து விசுவாமித்திரமகாமுனிவர் ஆச்ரமஞ்சேர்ந்தபிறகு அயோத்தியாபுரியைநோக்கிவந்த ஜெந்துக்கள்நடப்பிக்கிறவிதங்காண்க,

ம-தரு-இ-ம்-வராளி -அடதாளம்,

பல்லவி.

அழிக்கத்துணிந்ததுகாண்-அயோத்தியை-அழிக்கத்துணிந்ததுகன்

அநுபல்லவி,

அழிக்கத்துணிந்தது　　அவனியிலெவற்றையும்
பழிக்கஞ்சாமுனிவனால்　　பற்பலவுயிர்கூடி
பலித்தபலன்களைச்　　சொலித்ததூறுடு
கலித்தவேளையிற்　　கெலித்தனமெனவே(அழி)

சரணங்கள்,

௧, மல்லிகைமுல்லைகுருக்கம்.　　புன்னைகளும்
　மந்தாரைசெங்　　தாழையும்-நாறுவலித்த
நெல்லிபூவல்லித்துளசிப்　　தமாலமும்
　நிறைந்தவில்வங்　　குருந்தம்-மிகமணத்த
வல்லிமிகும்சம்பங்கியும்　　செம்பரத்தையும்
　வாராபலா　　சம்பூகமும்-பூவிற்செழித்த
சல்லிவேர்களைக் கூடக்　　கெல்லிக்கெல்லியுழுது
　சைலங்கவிழ்ந்தாற்போற்　　சாகேதபுரமெல்லாம்
　　வெலவெலவென்றுவிழச்　சலசலவென்றுதாழ
　　கலகலவென்றதிரப்　பொலபொலவென்றதிர　　அழிக்க

௨, முழுங்குநன்னீர்சாக்கும்　　கூபங்களும்
　முழுதின்கெடு　　மடுக்களும்-கவிதியும
வழங்கும்படுகைகளும்　　வண்டர்ப்படியும்
　வதித்தறைகளிற்　　செழிக்கும்-பதம்பதியும்
தழுக்குவெண்ணைற்　　சென்னலும்-வளர்த்தோங்கிய
　சாமரைத்தடாகங்களும்　　மீதிமிதியும்
கிழங்குகளையும்கீழ　　கிளைத்தநற்றார்களையும்
　செல்வனுவனுவாய்　　புல்லைப்புனைப்புனையாய்
　பூவில்மானிட　　ராவிதுடிந்திடக்
　　கூவித்தெருவெங்குந்　தாவித்தாவிக்கொண்　　டழிக்க

௩, சன்னைகளையோர்க்கில்லாச்　　சனங்களுஞ்
　சந்தடிசெய்　　தொந்தக்கச்-சின்னஞ்சிறு

பிள்ளைக்குட்டிகளைவதைக்க   மூலைமுடுக்கிற்
பிரிந்தவர்களை   பொதுக்க-விதம்விதமாய்
வெள்ளைநிசான்பிடிக்க   வீதிகள்தோறும்
வேட்டைக்காரர்கள்   அடிக்க-மிகப்படிக்க
கொள்ளையோகொள்ளையெனக்கூவி   மாந்தர்ஓடிக்க
கோசிகன்மாயவு   ராசமுறையழிக்க
கூடகோபுர   மாடமாளிகை
யாடல்புரிநிலம்   நாடகசாலையும்   அழிக்க

வஞ்சனைகாண்டம் - முற்றுப்பெற்றது,

ஆக-விருத்தம்-௨௨-விருத்தார்த்தம்-௨,
வெண்பா-௨-சுலோகம்-௧-தரு-௰,

* * *

உ

ஐந்தாவது,

வேட்டஞ்செய்காண்டம்.

பொதுவிருத்தம்.

இகல்விளக்குமாமுனிவ னியற்கையாலே
இவ்வகையாயயோத்தியுள்ளோர்க்கிடுக்கணெய்த
பகலிரவுமெண்ணிறந்த மருகங்க ளோடும்
பலகைகளுர்வனங்களுமிப்பாரழிக்கச்
சகலருமாய்முறையிடும்ச்சமயந்தன்னில்
சதுரங்கசேனைகளுஞ் சமூகஞ்சூழப்
புகலரியசத்ய அரிச் சந்த்ரமன்னன்
புறப்பட்டான்வேட்டைக்குவரப்பட்டானே (௧)

வசனம்,

இந்தப்பிரகாரமாகப்பகையைக்கைக்கொண்டு விசுவாமித்திரமுனிவராலே அயோத்தியாபுரியிலுள்ள எறும்புகடைதலையானை முதலாகிய எண்பத்துநான்குலட்சம் ஜீவராசிகளுக்கும்வந்த இமிசையைப் பொறுக்கமாட்டாமல் தலைவிரிகோலமாய்கதிகலங்கி மதிதயங்கி அறிவழிந்துதிக்குத்திசை தப்பியோடிப்போனதுகள்போக மற்றபஞ்சவறிவையுமுடையமாவிடர்கள்கூட்டங்கூடி அரிச்சந்திரமகாராசனிடத்திலே முறையிடும்போதுஊரார் யாவரும் பரிதாபப் படுவதுகண்டு, அரிச்சந்திரமகாராஜன்வேட்டைக்குவருகிறவிதங்காண்க,

௧-தரு-இ-ம்-துசாவந்தி- அடதாளம்.

பல்லவி.

சந்திரன்வேட்டைக்குவாரார்-சுந்தரமாமரிச்
சந்திரன்வேட்டைக்குவாரார்

அனுபல்லவி.

மந்திரமாய்ச்சாகே   தபுரந்தன்னையாளும்
தனசர்த்தர்க   ளுளமொற்றிட
வளமுற்றிவர்   சனமற்றிட (சந்தி)

சரணங்கள்.

௧, தன்னிகரில்லாப்   படைத்தலைவர்சூழத்
தரிடலர்கள்தத்தர்   தலைதாழ
உன்னியகருமத்   திடன்சூழப்பூமி
லொத்துமையாயெவ்வழி   ருமவாழ
கன்னியன்றுதந்த   கனகதேர்மீதேறி
கதிர்கொடிகள்   கதிர்கொண்டுவர
நெதிர்கொண்டாரப்போற்   சதிர்கொண்டரிச்(சந்திர)

௨, கட்டித்தடியுடன்   சிலவேடர்-கையிற்
சுரிகயிர்சுழற்றிய   சிலவேடர்
ஒட்டியுகவசத்தாற்   சிலவேடர்-மிக
ஒளிமழுவேலினர்   சிலவேடர்
கட்டியதாணி   நிறைந்தசரத்தொடு
கனகூர்மையா   முனையப்புள்
தனைக்கொண்டுகொல்   லுலைசெய்திட(சந்திர)

௩, பாசக்கயிர்கண்ணிகள்   சங்கிலிகள்-கையிற்
பற்றியகேடயம்   வல்லயங்கள்
பூசவிற்கெலித்திடும்   விற்கணைகள்சேர்க்கும்
பூரிசின்னமல்லரி   சல்லரிகள்
வீசக்கொடியிடைபோல்   வெடிகளதிர்ந்திட
வீரன்சுகு   மாரன்கன
ரூரனவ   மாரன்அரிச்(சந்திரன்)

௪, மந்திரிப்பிரதானி   மார்கள்முன்னும்-சில
மண்டலந்தனையாளு   மன்னர்பின்னும்
சந்திரமதிசுதன்   லோகிதனும்-மருங்கிற்
சாமரைவீசிவரும்   தாதியரும்
சுந்தரப்புலவர்கள்   சூழ்ந்துவரவருகிற்

சுரரேற்றவ சுரர்தூற்றபூ
சுரர்போற்றபூ தாழ்க்கேற்றரிச் (சந்திரன்)

பொது விருத்தம்.

இறைகொடுத்திடுக்குடிகளும்படைகளுமெழுக
மறைபுகழ்த்திடுமன்னனு மரிவையத்தொழுக
அறைகெடும்பறைப்திரச்சிபூட்டவியிலெழுக
முறைதொடுத்திடுவேந்தனும வேடரும்முனைந்தார் (உ)

வசனம்,

அநேகர்களுஞ் சபையோர்களே ராசாங்கத்துக்குப்பகுதிகட்டப்பட்ட குடியானரும படைத்தலைவர்களும் அரிச்சந்திர மகாராஜாவிறேறிக்காளிகாதேவியைத் தொழுது முப்பதிரண்டுவாத்தியமும்முழங்க வேட்டையாடப்பட்ட பிண்டிபாலம்சூலம் வாள்கத்திகேடயங்கள் துப்பாக்கிகள் பின்தோல்களோடு அடவிகள்தோறுஞ் சென்று வேடர்களும் மன்னர்மன்னவனுன அரிச்சந்திரமகாராசனும வேட்டையாடிவருதல் காண்க,

உ-தரு-இ-ம-சங்கராபரணம்-இங்கிலீஷ்மெட்டு-ஏகதாளம்,

பல்லவி,

வேட்டையாடினாரிச்சந்திரன்-வேட்டையாடினார்-தங்கள்
காட்டைச்சூழ்ந்திட்டுக்காட்டைக்கலைத்து (வேட்டை)

அனுபல்லவி,

கோட்டைக்கொத்தள மெங்கும்பரவிய
சூரக்குயாளிசிங் கம்புலியானைகள்
சாட்டைப்பம்பரம் போற்சுழலுங்கே
சரிகவரியோரிசென்னாய் மான்களை(வேட்)

சரணங்கள்,

க, மல்லயுத்தங்கள் வல்லவீரர்கள்
மன்னனடிதொழு மிக
மாயஞ்செய்யவு பாயக்கற்றறிந்த
மண்டலத்தனிற்றண்டரீகமாய் மாந்தர்சூழ்ந்தெழ
மல்லரிகொம்புகள் தாளமேளங்கள்
மலித்துமுழங்கவே அந்த
மாதவமுனி போதந்தால்வந்த
மாயமருகமூர்வனப்பறவைகள் மதிகலங்கவே
சல்லரிகள்கா ளங்கள்பம்பைகள்
சத்தமலியவே இந்தச்
சகத்திலேமிகத் தகத்தைப்பெற்றவர்
சன்னையாவையுமகற்றியா ளெனச்சனங்கள்களிக்கவே
வில்லம்பெடுக்க வல்லவீரர்கள்
விளங்கிறுடனே மிக

வேகமாய்மனை பூசக்கொண்டேகல்
வேந்தர்களை பணியாய்ச் சூழ்ந்திட்டுவெடிகளதிர்க்கவே
கல்லல்செய்திடும் விலங்கினங்களைக்
கலைத்துக்குலைத்து அலைத்தவலைந்து
கண்ணிகள்வைத்ததில் கண்ணுமுயிர்களைக்
கவர்ந்துகடுக்கிக் கலக்கமுடிக்கி(வேட்டை)
உ, வேல்கள்பட்டதிற் கோடாகோடிகள்
விழுந்துமாய்ந்தவே இந்த
விண்ணும்மண்ணுமுன்னோர் கண்ணின்காட்டியாய்
வேகமாய்மனம்வெருண்டு அருண்டுவெறும்பிச்சாய்ந்தவே
கோல்கள்பட்டதிற் கோடாகோடிகள்
குன்றிப்போர்ந்தவே சில
குலைந்துவிறிட்டு மலைந்துபோரிட்டு
குண்டுகள்பட்டதிற்கோடாகோடிகள் குதித்துச்சோர்ந்தவே
வால்களறுந்து சிரங்கள்துணிந்து
வையகத்தனிலே மிக
வாழ்வுபெருகத் தாழ்வுசிறுக
வரதவேடர்களவ்வினங்களை வளைக்கும்போதினிலே
கால்கள்பட்டொரு கோடாகோடிகள்
கலைந்தவோடினவே அங்கு
காலனுதர்போற் சாருவேடர்கள்
கத்தியால்வெட்டத்தத்தி முண்டங்கள்களத்திற்கூடினவே
பாற்பழம்புசித் திடுவார்மனம்போற்
பாரினைப்பாலித் தாள்பவர்யாவரும்
பத்திபத்தியாய் சுத்திவந்திட
எத்திசையிலும் வெற்றிவீரர்கூடி(வேட்டை)

ந, அடைகளற்றிடத் தொப்பைகளற்றிடத்
தொங்கல்களற்றனவே சில
தோள்களற்றிடத் தாள்களற்றிடத்
துணிந்துவீழ்ந்திடும்விலா வெலும்பொடுதோள்களுமற்றனவே
இடைகளற்றிடத் துடைகளற்றிட
வியற்கையற்றனவே சில
வேக்கமுற்றிட யாக்கையற்றிட
ஈரல்களற்றிட மூளைகளற்றிட விசைகளற்றனவே
நடைகளற்றிட நரம்புகளற்றிட
நல்லுயிரற்றனவே சில
காயியற்றிட ஆவியற்றிட

நாட்டமற்றிட வாட்டமுற்றிட நலிவுற்றதுவே
கடையுகத்திடக் கடலைப்போல்ரத்தம்
ககனமுற்றதுவே வளர்
கானகத்தையும் வனகத்தையும்
கண்டாட்டியுட்கொண்டபட்சிகள் காயமுற்றதுவே
படைத்தலைவரும் பாருளோர்களும்
பற்பலவீரரும் பரிந்தவேடரும்
தடைசெய்தேவிலங்கி னங்கள்யாவையும்
தகத்தியிடைநூ றகற்றிசெகத்தில்(வேட்டை)

பொதுவிருத்தம்,

இந்தவாறெழில்வேட்டையாடி யெழுந்தவீரரும்மாந்தரும்
இன்பமாயோரிடத்திற்சேர்ந்தினிதி ருந்தகாலையிற்கோசிகன்
அந்தமாய்விடுத்திட்டசெந்துக்களற்றவைநீங்கமற்றவை
அருட்செய்மாமுனியருகடைந்தபின் னதிசயித்தவ்வனத்திடை
வந்தமானிடர்வாழுமன்னவர் வலியவேடுவரிவர்களில்
வள்ளலுட்செயும்பெண்டிர்மந்திரி வாழ்கமற்றெவரையும்
கொந்தளித்திடவேமனுக்கினை கொடுத்துவாவென்றோர்பன்றியைக்
கோசிகன்மாய்கையால் விடுத்திடக்கொடுமை மெத்தவிளைந்தது

வசனம். வே-

அகோகேளும் சபையோர்களே இந்தவிதமாய் வேட்டையாடியபவுத்த ராஜராஜாக்கள் முதலான பரிவார ஸேனைஸைன்யங்களும் ஒரிடத்திற்கூடி இளைப்பாறி உண்டுதாம்பூல மருந்திக்கொண்டுமகாகிலேசத்தோடு இன்னமென்னவருமோ வென்று உள்ளத்திலயர்ந்துகொண்டிருக்கையில் விசுவாமித்திர மகாமுனிவன் மாயத்தினாலே அனுப்பினசெந்துக்களிலே வதைபட்டதுபோக மற்றவைகள் வந்துமாமுனிவர் பாதங்களைவணங்கக்கண்டதிசயித்துமிருந்த தாபத்தினால் மிதிப்பட்டசர்ப்பம்போலவெகுண்டுஇருவிழிகளும் நெருப்புப்பறக்கப் பார்த்தமாத்திரத்திலே புருவத்திலிருந்துஒரு கொம்பினோடுஒருபன்றியைச் சிருஷ்டித்துஅரிச்சந்திரமகாராசனையும்அவன்பெண்சாதி பிள்ளை மந்திரிமுதலானவர்களைத்தவிர மற்றவர்களைக்குடும்பத்தோடழித்துவாவென்று ஆக்ஞாபித்தனுப்ப ஆரண்யத்திலேவந்திருந்தமானிடவர்யாவரையும் வந்தவளைத்துக்கொண்டுபோரிடுதல்காண்க.

௩-தரு-இ-ம்-சவுராஷ்டிகம்-ஏகதாளம்.

பல்லவி.

மானிடவர்சேர்க்கும்-மாயமாய்வந்தபன்றிக்கும்மலிந்ததேசண்டை

அநுபல்லவி;

வானிடத்திற்றேவர்கள் மலர்மாரிதூற்றவும்
வையகத்திலின்மாந்தர்கள் வள்ளலைப்போற்றவும், (மானி)

சரணங்கள்,

௧, கோசிகன்பதம்வணங்கிப்பேசியே அன்போடிணங்கிவந்து
கூட்டியிருந்தவாசிகள்கரிகள்வன ராசிகளழிவுகண்டெழுந்து
காசியிலெழுந்திடுமுச்சோலையிற் றிசையெலாம்நடுங்க-நாலுபக்கமும்
வீசியவாலின் சுழற்றிற்பேசிய மானிடர்களொடுங்க
கோசிவேவீரனாமிகப்பேசியேமுளையால்நிலமுட்டத் தாரைதாரையாய்
காசினிநீர்மேன்மிதக்கும் பாசிபோற்படர்ந்துதிரைகட்ட
மாநிலாமன்னன்சேனையர்யோசினையிலுல்மனக்கிலைக்க-விரைந்தெழுந்
தாசியெதனைவெண்ணித் தடர்ந்துபடைகளெழ [ந்து
வீசியமெய்சிலிர்ப்பில் வீரர்கள்வெருண்டழ (மானி)

௨, தலைகள்தெறித்தோர்சிலர் தாள்கள்தெறித்தோர்சிலமாந்தர்
கையிற்பற்றிய-சிலைகளறுந்தோர்சிலர் வலைகளறுந்தோர்சிலமாந்தர்
குலைகளறுந்தோர்சிலர் குடல்களறுந்தோர்சிலமாந்தர்-மூலைக்குழலை
கலைகள்தெறித்தோர்சிலர் கண்கள்தெறித்தோர்சிலமாந்தர்
நிலைகள்குலைந்தோர்சிலர் மூலைகளறுந்தோர்சிலமாந்தர்
மதிகலங்கி-மலைமீதுங்குகைமீதும் மாங்களின்மீதுஞ்சிலமாந்தர்
அலைமீதுஞ்சிலைமீதும்அண்டமீதுமர்ச்சிலமாந்தர் அலறிக்கொண்டு
தலைவிரிகோலமாகித் தரணிகாவலன்முன்னேகி
உலைமெழுகாயுருக உனிர்மெய்யிற்பெருக (மானி)

௩, சங்கமுஞ்சக்கரமுற்றசாமியும்வந் தெதிர்ப்பானோவென்னச்-சண்ட
னேவலர், எங்களூர்திறைத்தனியிம்மட்டின்மனம்பொறுப்பாயென்
ன, துங்கமன்னன்சேனைகளினங்கமீது பீறிட்டோடும்ரத்தம்-செக்கச்
சிவக்க-செங்கடற்போலேதிரண்டுபொங்கமாய்ப்புரண்டுவருஞ்சத்தம்
சிங்கங்கள்மேகங்கள்கெர்ச்சிதங்கள்மிகச் செய்வதுபோலார்க்கவும்வெ
ள்ளத்தில்,லங்கமுங்கவர்தமுண்டமெங்கணும் பாவிவாயபார்க்க
பங்கமுற்றமானிடர்கள் சங்கமாசங்கமாகவோட
வானோர்களித்தச் சங்கற்பஞ்செய்ததாரென்றுசகலவுலகும்நாட
செங்கதிர்குலேசனுஞ்சேனையோர் முழுதும்வாட (மானி)

பொதுவிருத்தம்,

பன்றியிலைசெய்தகன்றோர் பங்கஞ்சென்று
பதுங்கியபின் பங்கமுற்றபரிவினோர்கள்
குன்றியசற்சொன்மிகுந்த குரிசிலோன்பாற்
குறையுடன்போயடி வணங்கிக்கூவென்னக்

கன்றினைக்காணும்பசுப்போற்கவலையுற்றுக்
கனகத்தேரேறியமர்க்களத்தில்வந்து
நின்றினியவில்லையும் நாணேற்றிவீரம்
பேசிட்டான் அரிச்சந்திரன் போரிட்டானே (௩)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் மாய்கையினால்வந்த பன்றியானது அமர்க்களத்தில்போரிட்டு நேரிட்டவர்களியாவரையும் தம்சம்பன்னியலுத்துப் போய் ஒருபுறமிலேபதுங்கி இளைப்பாறிக்கொண் டிருப்பதைக்கண்டு சமீபியாயிருந்த ஜெனங்கள்யாவரும் மனங்கலங்கி ; சத்திய அரிச்சந்திர மகாராஜனைப்போற்றி யடிவணங்கி முறையிடும்போது தாயீன்ற கன்றைத்தழுவிவரும் பசுக்களைப்போல மனக்கவலையுற்று போர்க்களத்தில் வந்து மலைமலையாய்க்குவிந்திருக்கிற பிரேதங்களையும் செங்கடல்போலே சிவந்த ரத்தப்பிரவாகமும் பார்த்துபிரமித்துநின்று கையிலிருக்கிறவில்லை நாணேற்றிக்கொண்டு பொன்னின்றேரிலேறி பன்றியுடன் யுத்தஞ் செய்கிற விதங்காண்க,

௩-தரு-இ-ம்-ராதகாமக்கிரியை-துருவதாளம்,

பல்லவி,

பன்றியுடன் சண்டைசெய்தானே-இதேதோமாய
மன்றியில்லை யென்றேவுய்தானே (சத்யரிச்சந்திரன்)

அநுபல்லவி

பன்றியுடன்சண்டைசெய்ய வன்றுதார்க்கைதந்தஐய்ய
பசியபொற்றேர்மீதிலேறி பரிவுடன்விட்டானேசாரி
பாந்துசண்டமாருதம்போற் பாய்ந்துமனோவேகம்போற்
பருதியின்தேர்மீதிற்செச்சைப்பரிகள்போல்ரதத்தினிச்சைப்
பார்மலையெலாஞ்சிதறக் கார்முகிலேமுழங்கதறப்
பார்க்கும்வீரர்கள்பிரமிக்கப் பங்கமுற்றோராக்ரமிக்கப்
பாரினைச்சுமக்குஞ்சேடன் பதுங்கவைத்தகுடிகேடன்
பரிந்துவிட்டபன்றியெதிர்ப் றப்பட்டுவரவிட்டகணைகள்
பாய்ந்தவே பன்றியின்மீது
தோய்ந்தவே பூமியின்மீது
சாய்ந்தவே வாய்ந்ததென்றரிச்சந்திரன் (பன்றி)

சரணங்கள்.

௧, செம்பொன்னைநிகர்த்தமெய்யும் செய்யகோவைக்கனிக்செய்யும்
சென்னிறத்துக்கண்கள்ரெண்டும் செழுமுகம்ப[illegible]கொண்டும்

75

செவ்வியகண்டமும் வாலும்-அற்புதமான
திவ்வியபதக்க ஞாலும்
செம்பவழவன்னமுன்னர் சிக்கநீலவச்சிரமென்ன
கொம்பனையகோடாமென்ன கொடிவீரசூரனென்ன
வயிற்றினாற்பூமியை மறைக்கும்-கொந்தாலிநிகர்
[illegible]யிற்றினாலுழுது குறைக்கும்
கையினாலுயிர்கவரும் காலனைக்கூடத்தடரும்
ஞானியோர்தம்மைக்கொல்ல கோசிகனால்வந்தபொல்லாக்
காயமோ அவன்செய்தவு
பாயமோ அதையாம்கொல்ல
ஞாயமோ நேயமோவென்றரிச்சந்திரன் பன்றி

௨, அண்டத்துள்ளோர்களும்வ கண்டத்துள்ளோர்களுமேவ
அற்புதவிற்புதமாக —— அலறிகள்மிகுதியாக
ஆனைகளொட்டகக்குதிரை-சூழ்ந்துவந்திடும்
சேனையர்கள்கட்டவேதிரை
அணியில்வந்தவீரர்களும் ஆயுதக்கொள்சூரர்களும்
பிணியில்சொந்தவேடர்களும் பிரமைகொண்டநாடர்களும்
ஐயையோவென்றுதாவுவார்-பன்றிமேற்கணை
எய்யுங்களென்று கூவுவார்
ஆனைபெருராட்சதர்போல்- மானிடர்கைத்தலத்தில்வேல்
அம்புவிற்கணையெடுப்பார் அஸ்த்திரசஸ்த்திரந்தொடுப்பா
நாயினர் வேட்டையிற்றுரி
சாயினர் ரெத்தவெள்ளமே
லாயினர் வாயினாற்முடிக்கிப்பொல்லாப் பன்றி

௩, மாயவராகந்தனது பாயலாம்சமுறுது
மண்டிவரும்படைகளைக் கண்டுமுன்பின்றுடைகளை
மாறிடமனவச்சங் கொண்டு-நடுக்கமுற்று
கூறிடும்விசேடங்கள் கண்டு
மாமுனியைமனதிலெண்ணி மாய்க்கும்வகை யேதென்றெண்ணி
மாரவைரியைநினைப்பார் மதிதசிங்கம்போற்கனைப்பார்
மலைக்குகைக்கு ளோடிப்புகுமே-வேடர்கள்வைத்த
வலைக்குளகப்பட்டு தேய்குமே
மண்டைபூமீதிலுருளத் தொண்டையிற்கணைகள்தெருளத்
கண்டவர்கள்கண்களிக்க அண்டர்கள்வானிலொளிக்க
ஆடியே மெய்யும்மூச்சும்
வாடியே மாமுனிபாதம்
தேடியே ஓடிப்போகின்ற பன்றியுடன்

புராண-விருத்தம்,

ஏனம்விழுந்தயர்மால்வனைகண்டதி லேறியிழிந்தகலப்
போனதுணர்ந்தடிமீதுதொடர்ந்து புகாதவனத்திடைபுக்
கானனமூந்திருமேனியும் நுண்பொடியாமடமங்கையுடன்
ஆனவனைத்திருவாசநெடும் புனல்வாவியணைந்தனனே

வசனம்,

இந்தப்பிரகாரமாய்வந்த மாயப்பன்றியைக்கண்டதுண்டமாகச் சேதித்து நாலுவிதமான இம்சைசெய்யும்போது மலைமீதுமாயமாய்ப்பாய்ந்து ஓடிப்போனதுகண்டு அதனடியையேதொடர்ந்து நுழையாத புதர்களிலும் வெடித்தகுகைகளிலும் நுழைந்துகையுமெய்யும்அசந்து கெந்தியிற்குநவியர்வைபாய தேகமெல்லாம் பொடிப்பொடியாய் மெலிந்து நடந்துபோகிறபோது மகாஅற்புதமான ஒருதிருவாசலுந்திருக்குளமுங்கண்டு தன்னுடைய பரிவாரசேனாசமேதனாய் அங்கிருந்து இளைப்பாறிப்போவோமென்று தங்கியவிதங்காண்க,

ரு-சரு-இ-ப-சுருட்டி-ஆதிதாளம்,

பல்லவி,

தடாகமொன்றிருக்கக் கண்டானே-அரிச்சந்திரன்
விடாய்கள்யாவுந் தீர்த்துக்கொண்டானே

அநுபல்லவி

படாவவதிகள்பட்ட பற்பலர்களுங்கிட்ட
தொடாதிவரிம்மையென்றெண்ணித் துய்யபராக்கிரமம்பண்ணி-தடா

சரணங்கள்,

௧, தாமரைமிகப் பெருகுமே-அதிற்சங்கங்கள்
காமறையோதி யுருகுமே
சாமரைப்பாசி படருமே-அதைக்கோதவும்
க்ஷேமமாய்ப்புள்ளினம் அடருமே
நாமறைப்பொருளறிந்த நற்றவானேகர்கூடி
பாமாமகற்றுஞ்செபம் பண்ணிவருவதைநாடி தடா

௨, அன்னப்புள்ளினங்கள் நண்ணுமே-நாளங்கள்கோத
வன்னப்புள்ளினங்கள் எண்ணுமே
சின்னசிச்சிலிகள் சூழுமே-அத்துடன்பஞ்ச
வன்னக்கிளிகளும் வாழுமே
நன்னயமாய்ப்பேசிக்கொஞ்சி நாகணவாய்ப்புட்கூடுமே
பன்னகமுதலைமீன்கள் பாய்ந்தங்குவந்துசாடுமே(தடா)

௩, முத்தினத்சிப்பியும் மேயுமே-மிகுந்தண்ணீரில்
ரத்தினக்குப்பையுந் தோயுமே

முத்தியகடல்போற் காணுமே-கலிங்கிற்றாம்பாய்
பத்திபத்தியாகத் தோணுமே
வெற்றிபெறுமன்னர்களும் புத்திமிகுமாந்தர்களும்
பெற்றபேறிதாமென்றெண்ணிசுத்தவீரர்மொய்த்துநண்ணிலைத-தடா

பொது-விருத்தம்,

சேப்புடனிலைப்புக்கமழ்ந்திடப்பூமன்
கண்டனன்னீர்க்கரையுற்றான்
கபடவஞ்சகமிகுகவுசிகர்தமது
கமலமென்பதந்தொழுதிறைஞ்சும்
இளைஞர்கள்சிலபேர்கெடிமிகுமன்னன்
கெம்பிரமாயுறைவிடம்போய்
கிடைத்தவுன்னினமுஞ்சேனையுமிங்கு
இடத்தொணாதெனமிகமுனிந்து
முனைப்பரும்வனத்தையழித்தரிச்சந்திரன்
முனிந்தனன்முனிவன்முன்னெனவும்
முனிவனுந்தனதுமூச்சினிரண்டு
முதுமடந்தையர்களைப்படைத்து
விளைத்திடுமோகலாகிரியதனால்
வேந்தனைப்புணர்ந்திடாலது
விளங்குபூச்சக்கிரக்குடைதனைக்கவர்ந்து
விரைவினில்வருகவென்றிசைத்தான் (௧)

வசனம்,

அகோகேளும் சபையோர்களே இவ்விதமாய் மிகுந்த யிளைப்பினாலேவாடிவதங்கித் தடாகத்தருகிற் சேர்ந்து பர்ணசாலையில் மந்திரிமார்களும் பரிவாரகுடும்பத்தோடு அமர்ந்திருக்கும்போதுவிசுவாமித்திரர்சிஷ்யர்களிற்சிலபேர்இராசன்பர்ணசாலைக்குள்வந்துசாமியிடத்தில்சற்றாவதுபயமில்லாமல்நீயும் உன்சேனைகளும்வனத்தைவிட்டகன்றுபோமென்று முறுமுறுத்து முனிவனோடுஇராசன்செய்யும்அமளியைச்சொல்லக்கேட்டு அம்முனிவனும் தனதுமூச்சினாலே இரண்டுபெண்களைச்சிருஷ்டித்து அரிச்சந்திரமகாராசனிடத்தில் உங்களுடைய ஆடல்பாடல்களால்அவனுடையமுகமலர்ச்சியுறச்செய்து புத்தியைமறக்கடித்துமோகலாகிரியுறச்செய்துமணம்புணர்ந்துவருவீர்கள் அல்லாவிட்டால்அவனுடைய பூச்சக்கரக்குடையை யபகரித்துக்கொண்டு வாருங்களென்று அனுப்பிவிட்ட பிற்பாடு இங்கு அரிச்சந்திரமகாராஜன் சமூகத்தில் நடக்கிறவிதங்காண்க,

மந்திரிக்குஇராசன்சொல்-விருத்தம்.

அந்தியின்வேளையாச்சு தபச்சனேயவரவர்க்கு
முந்தியேவிடைகொடுத்து முகமதுமலர்ந்துவுந்தன்
புந்தியின்மகிழ்ந்தால்ல போசனமளிக்கச்செய்யில்
உந்தியிற்பசியைநீக்கியுளமகிழ்ந்துறங்குவேனே, (௭)

வசனம்,

அஹோவாரும்மந்திரி சத்தியகீர்த்தி சந்தியாவந்தனகாலமாய்விட்டது அவரவர்களுக்கு அனுஷ்டானங்கள்முடித்துக்கொண்டு அனுப்புந்தினத்தைப்பாரிசுகமாயிருக்கும்படிக்குஉத்திரவுகொடுத்தனுப்பிவிட்டு பர்ணசாலைக்குள்சென்று போஜனசவுபாயஞ்செய்வித்தால் நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டுபோசனஞ்செய்து சொற்பநேரமானது நித்திரைகொள்ளலாம்மந்திரி,

மந்திரி வசனம்,

அப்படியே மகாபாக்கியம் மகாராஜனே

பொது-விருத்தம்

மன்னனிவ்வாறுகூற மந்திரிசத்தியகீர்த்தி
தன்னகமகிழ்ந்துட்சென்று சந்திரமதிக்குரைக்க
அன்னவர்பின்றுடர்ந்த யாவர்க்குமுபசரித்து
பொன்னாகர்மாதினைப்போல்போசனமளித்திட்டாளே. (௮)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் ஆக்யாபித்தராசாவினுடையமனதுசந்தோஷிக்கும்படிவழூத்துபோஜனசாலைக்குட்சென்றுசந்திரமதியினிடத்திலேஅறிவிக்கையிட்டதம்முடன் கூடவந்தசகலசனசமுகத்துக்கும் ஞானபக்தியாகஉபசரித்து தேவகன்னியர் அமுதளிப்பதுபோலே போஜனம் நடப்பிவிக்கும்விதங்காண்க,

௬-தரு-இ-ம்-தர்பார்-அடதாளம்,

பல்லவி.

போஜனஞ்செய்வீர் பூபாலா-மிகராஜராஜர் துதிக்கும் ரவிகுலபாலா

அனுபல்லவி,

வ்யாஜகருணாலவாலா-சட-ராஜன்முதலோர்புகழ் நயகுணசீலா

சரணங்கள்,

௧. சன்னசீரகச்சம்பா வன்னம்-வெகு
சட்டமதாகச் சமைத்திருக்குதின்னம்
தின்னப்பயற்றின் பருப்பும்-வெகு
சிராகக்காச்சிய சுரசிநெய்யும் (போஜன

௨, அவரைக்காய்புடலங்காய் கறியும்-மிக
அருமையாம்வெண்டைக்காயத் மோர்க்குழம்பும்
துவரையின்பருப்பு ரசமும்-பொடித்
தூவியபாவற்காய் துவட்டலுமாக (போஜன)
௩, அப்பளமதிரசம் சுகியன்-போளி
யாமைவடைபேணி பகுபரிபூந்தி
முப்பழஞ்சர்க்கரைப் பாகும்-நல்ல
மோதகம்பாயசம் முதிர்ந்தபாலுடனே (போஜன)
௪, மாடப்புறவி னிறைச்சி-மகிழ்
மாசிலாக்காடைபுள் மானினிறைச்சி
டக்குயிலி னிறைச்சி-மிகக்
கொக்கரித்தேவாழும் கோழியினிறைச்சி (போஜன)

பொது-விருத்தம்.

அருக்கலையுடனேபோசனமுண்டு
அனைவர்க்கும் வேதிகையமாத்தி
வெறுட்சிகொண்டமர்ந்த வீரனைத்தேற்றி
விளங்குதாம்பூலங்களீந்து
மருட்சிகொள்மாரன் சிலையெனும்புருவ
மங்கைசந்திரமதியுடனே
தருவினையொத்தகரத்தரிச்சந்திரன்
தனட்ளியறையமர்ந்தனனே

வசனம்:

பஞ்சபட்சபாயசங்களுடனே போஜனம்பண்ணினபிறகு அவரவர்களுக்குத் தகுந்தவிதியமர்த்தி பயமுற்றிருந்த யாவருக்குந் தயிரியஞ்சொல்லி தாம்பூலமுங்கொடுத்து அனுப்பிவிட்டு,தேவதேவர்களுடைய தபசையும் அழிக்கப்பட்ட மன்மதனுடைய கருப்புவில்லுக்கிணையான புருவத்தையுடையசந்திரமதியுடனே பள்ளியறைசேர்ந்து நித்திரை செய்கிறவிதங்காண்க,

௭-தரு-இ-ம்-பியாகடை-அடதாளசாப்பு

பல்லவி,

நித்திரைசெய்தானே-அரிச்சந்திரன்-நித்திரைசெய்தானே

அநுபல்லவி,

நித்திரைசெய்தானே திருபன்திரிசங்குவின்
புத்திரனுகிய சத்தியஅரிச்சந்திரன் (நித்)

சரணங்கள்,

௧, எண்டிசையுமுலாவிக் கண்டமிருகங்களைத்
தண்டித்தலுத்தமு தண்டவரிச்சந்திரன் (நித்)

௨, வண்டணிகுழலினள் வளர்காமத்துயராற்றக்
கொண்டகோலமழிபாக் கோமானரிச்சந்திரன் (நித்திரை)
௩, மஞ்சணைமெத்தைமேல் வஞ்சியர்தாலாட்ட
ரஞ்சிதமதியுடன் கொஞ்சியரிச்சந்திரன் (நித்திரை)

பொது-விருத்தம்,

அரிவையுமரசன்றானும் அரும்பினல்லமளிமீது
திருமகன் ரதியுமாக திருப்பள்ளியமர்ந்தாற்போல
மருவியே துயிலும்போது மன்னவன்சொப்பனங்கண்டு
சருவியமந்திரிக்குச் சாற்றுவான்யேற்றுவானே.

வசனம்,

அங்கோகேளும்புனிதர்களே சந்திரமதியும் அரிச்சந்திரனும் இரதியும் மன்மதனும்போலே திருப்பள்ளியடைந்துகாம்புகளாய்ந்த மல்லிகை மலர்கள்தூவிய மஞ்சத்தின்பேரிலே சுடிக்குலாவிக்களிப்புற்றுறங்கும் போது இராஜனானவன்றான்கனாத்தனைக்கண்டு திகைத்தாற்போலே சொப்பனங்கண்டு திடுக்கிட்டெழுந்து மந்திரியான சத்தியகீர்த்திக்கு ளாப்பமும் அதற்கு அவர் சமாதானஞ்சொல்லுவதுங்காண்க,

அரிச்சந்திரன்சொல்-தரு

இ-ம்-அசாவேரி - ஆதிதாளம்,

பல்லவி,

அதிவிசித்ரமாயானோர் சொப்பனங்கண்டெழுந்தேன்
அதின்கருத்தையுரைப்பாய்மந்த்ரி

அநுபல்லவி,

அதிரூபமுறுபெண்களவர் கதியென்றெனைப்புணர்ந்தார்
தொழுதுபோற்றியவர்கள் தோழ்மைதனைப்பாராட்டி
மதிமகிழ்ச்சொருத்தியை மாதவத்தோருக்கீந்தேன்
குதிகொண்டொருத்தியர்தக் கோதையுடனேசென்றாள் - அதி

சரணங்கள்,

மந்திரிசொல் தரு

௧, மதிசனின்மன்றுமெத்த பயங்கவொன்றுமெயெந்தன்
மதியிலுணர்ந்தமட்டு மகிழ்ந்துணர்த்துவேனே
பொதிபொதியாய்தனத்தைப் புனிதர்க்களித்தபோதே
பொங்கியதனில்விற்ற பூவையினத்துச்சென்றாள்
விதிசவழ்க்கபூராது கெதியென்றனடைந்தவள்பின்
கதிகளுக்குச்சாகரம் பதியதாமென்றுபோனாள் (மதி)

அரிச்சந்திரன்சொல்-தரு.

௨. ஒருத்திபோரமுகமா யொதுங்கியூணற்றகன்றாள்
ஒருத்தியந்தகைப்போ லுலகினில்வீற்றிருந்தாள்

78

ஒருத்திவிட்டெனைநீக்கே னென்றேருறுதிதந்தாள்
உத்தமியாளென்றெந்தன் சித்தமிகக்களித்தே
திருத்தமாயிதிலுள்ள கருத்துயாவுமுயர்ந்து
பொருத்தமாயுரைத்திடில் வருத்தமகலுவேனே (அதி)

மந்திரிசொல்-தரு

௩, கண்ணிழந்தாற்போலுள்ள காரிழையராக்ரமி
எண்ணியொதுங்கிநின்ற யேந்திழையாளேசவுரி
விண்ணும்மண்ணுமுள்ளமட்டும் விட்டேனென்றவள்ஜயிப்போள்
வெற்றிமிகவுடைவீர் விளங்குமுமதுகீர்த்தி
அண்ணலேயிதுவெல்லாம்எண்ணிவெகும்பொன்றுது
பண்ணியபலன்போல புண்ணியம்வழித்திடுமுன் (மதி)

பொதுவிருத்தம்,

மந்திரிக்குரைத்தபின்னர் மதிமயர்ந்துமன்னன்
தொந்திரவடைந்தென்னதோதகம்விளையுமோவென்
றந்தரங்கத்தடங்காவையமுற்றருகேயுற்ற
சுந்தரமனையாளான சந்திரமதிக்குச்சொல்வான் (௰௧)

வசனம்,

இவ்விதமாய் மந்திரியினாலே சமாதானப்பட்ட இராஜனானவன் பின்னும் மனக்கலக்கமுற்று திகைப்படைந்து என்னகலகம் விளையுமோவென்று சிந்தையிலடங்காதஜபுறவுற்று அருகிலிருந்த தர்மபத்தினியாகிய சந்திரமதியுடன் தான்கண்டகனவை சொல்லிவருவதுகாண்க,

௯-தரு-இ-ம்-கமாசு-அடதாளம்

பல்லவி,

கண்டகனாவினைக்கேட்டாயே-காதலியேநான்

அநுபல்லவி,

கொண்டகோலமழிந்து-இந்தகுவலயந்தனையிழந்து
மண்டலந்தன்னையோர் மாமுனிக்களித்து
மறுநகரேக மிறுதயன்மகளேநான் (கண்)

சரணங்கள்,

௧, கானகத்தினில்நடக்க * ஒற்றைக் கண்ணன் வழிமறிக்க
போனகமில்லாமல் புலம்பித்தவிக்கவும்
சேனைத்தலைவர்கள் சிந்தித்துநிற்கவும் (கண்)
௨, காசிநகர்தன்னிலே-கால கவுசிகர்தன்கையிலே

* ஒற்றைக்கண்ணன் நட்சத்ராயன்.

கூசிடாதன்னையும் மைந்தனையும்வித்துப்
பேசியநீசர்க்கு நான்பிணையாகவும் (கண்)
௩, சுதனுயிர்தனையிழக்கச்-காசிச் சுடலையைநான்காக்க
மதனைவல்லியெனும் மங்கைசுதன்மாளவும்
விதனமில்லாதென்னை யுற்றுணைவெட்டவும் (கண்)

சந்திரமதிசொல் விருத்தம்

இந்தநல்லியற்கையெல்லா மீசன்மாலயனாலல்ல
வந்தவற்றுறவோன்றன்னாள் வளர்துன்பமிகுதிகண்டோ
கந்தமுமலரும்போலே காதல்கொண்டாண்டமன்னா
எந்தவாறிடுக்கணெய்தி னெழிற்சத்யந்தப்பொணாதே (௨)

வசனம்,

அகோகேளும் எனதுபிராணநாயகனே இவ்விதமான செய்கைகள்யாவும் அரிகரபிர்மாதிகளும் செய்யமாட்டார்கள் செந்தவத்தோர்க்குசெங்கோலாளன் தருணமாத்திரம்கையால் மூன்யாசகார்த்தமாய்வந்த விசுவாமித்திரருடைய மாயத்தினாலேஉண்டாகப்போகிறதுன்பங்க ளினனேகமிருக்கும் புஷ்பங்கள்வாசனையினாலே பரிமளிப்பதுபோல என்னையாண்டபிராணநாதனே எப்படிப்பட்ட துன்பம்வந்தாலும் அந்தசத்யவாக்கு ஒன்றுமாத்திரம் தப்பலாகாது மகாராசனே,

பொது,விருத்தம்.

ஆட்டைகாக்குமவ்வாயனைப்போலவே
நாட்டைக்காக்கும் நரேந்திரன்கானகத்தில்
வேட்டையாடியவேளையிற்சூழ்வினைப்
பாட்டையாய்ந்துபரிவுடனோதுவாம் (௰௩)

வசனம்,

அகோகேளும் தர்மபுத்திராதிகளே ஆட்டின் கூட்டங்களைப் பாதுகாக்கின்ற ஆயர்களைப்போலே அந்த அரிச்சந்திரனான நாடாளன் வனத்தில்வந்துவேட்டையாடும்போது அகஸ்மாத்தாய்விளையப்பட்ட சூழ்வினைகளிற் சிலவற்றையுரைப்பேனென்று மார்க்கண்டேயர் தர்மபுத்திராதிகளுக்குச் சொல்லத் துடங்குவது காண்க,

* * *

வேட்டஞ்செய்காண்டம்-முற்றிற்று

ஆக விருத்தம் - ௰௩ - தரு - ௩

உ

ஆறுவது,

சூழ்வினைகாண்டம்.

பொது விருத்தம்,

குன்றிடாப்புகழ்படைத்த சூரிசிற்கைக்கணைகள்தைத்து
துன்றியகுருதிசோரத் துவண்டுடல்துடித்துவந்த
பன்றியின்வருகைகண்டு பதைபதைத்துளம்வெகுண்டு
குன்றியமுனிவன்மெத்தக் கருவுவான்சருவுவானே (௧)

வசனம்.

அகோகேளும் குந்திபுத்திரர்களே குறைவற்ற பிரக்யாதியுற்ற அரிச்சந்திரமகாராசன் கையிலிருக்கின்ற கூர்மைபொருந்திய அம்புகளாலே எறிபட்டு இரத்தஞ்சொட்டச்சொட்ட வந்துவிழுந்தபன்றியைக்கண்டு பதைபதைத்துருகிக்கோபமுற்று மனநொந்த விசுவாமித்திர முனீந்திராவர் அரசனைநோக்கி கருவுகிறவிதங்காண்க,

௧, தரு-இம்-மோகனம்-அடதாளம்

பல்லவி.

என்னவலிவன்படைத்தான்-மிக
எத்தவித்யாலமா யியன்றதெல்லாம் விடைத்தான் (என்)

அநுபல்லவி.

மன்னவனானு மாமுனிவர்க்கெதிரோ
மாவனமழித்தெம்மை மதியாதிவன்சதிரோ (என்ன)

கண்ணிகள்,

௧, வடவாக்கினியைவர வழைத்துத்தகிக்கிறேன்
வாழும்வையமுழுதும்வாய்ப்பேச்சிற்கரிக்கிறேன்
துடர்காலவிடமதைத் தூக்கிக்கைமுகிக்கிறேன்
துய்யவனெனும்பேரைத் தூரிசினில்வகிக்கிறேன்
கொடியவினைசெயுங் குறிசிலனிவனோ
மடியச்செய்யேனாகில் மாமுனிவன்நானோ (என்ன)
௨, காமன்கணைகளைக் கடுக்கியேமுடிக்கிறேன்
காலதூதுவருக்குங் காவுகள்கொடுக்கிறேன்
ஸோமன்சூரியர்களின் சோதியைவிடுக்கிறேன்
சொற்றவருனெனுஞ் சொற்களைத்தடுக்கிறேன்
கோமானிடத்தன்பு கூறாய்கொடுஞ்சனி
தாமதமேன்மனந் தாளிடேனெனி (என்ன)

௩, மாலயன்முக்கண்ணன்   மாதவர்களினாலும்
மாய்கையறியவிடமாகுமோ   யெவராலும்
கோலவிசுவாமித்திர   லென்றலாறாலும்
குன்றிடாமலெதிரே   நிற்குமோபெருப்பாலும்
ஞாலமாளுவோர்   ஞாயங்களுமீதோ
ஆலமுண்டகண்ட   னாருளுமீதோ (வீணை)

பொதுவிருத்தம்.

இத்தருணத்தில்நற்றவன் முன்னொழில்புறமுறையாளர்களிருவர்
இணையடிதொழுதுவணங்கியன்பாக வினமுடனுரைத்திடக்கேள்
சித்தரும்புகழுஞ்சத்தியரிச்சந்திரன் சேனையுந்தளங்களுஞ் சூழச்
சேயுமனைவியுமந்திரிமுதலோர் சிறக்கமுங்கமர்ந்தனனொன்
மத்தருமிகழுமுப்புராதியரை மகிழ்ந்தியாலெரித்தவக்கனலும்
மாரனைவிழியாலெரித்தவக்கனலும் மண்டியவடவையின்கனலும்
உத்ததாமெனவக்கோசிகன்வெகுளா லுதித்திடுமூச்சினிலிருந்து
உத்தியிலெழுந்தாஞ்சுருக்கொமிந்துதித்தனர்கன்னியரிருவர் ()

வசனம்,

அந்தவேளையிலே விசுவாமித்திர மகாமுனிவரிடத்திலே யிருந்த பிராமணர்களிருவர்கள்வந்து நமஸ்கரித்துக் கேளுஞ்சுவாமியெற்குருநாதனே அந்தஅரிச்சந்திரமகாராசன் நம்முடையஸ்ரீங்காரவனத்திலே தன்னுடைய குடும்பப்பரிவார சமேதனாய்வந்து இருக்கிறானென்றபோது விசுவாமித்திரருக்கு அதிகமான கோபாக்கினி சொலிக்கையில் சிவன் நகைத்தெரித்தழலும் மன்மதனைத் தகித்தழலும் ஏககாலத்திலே பிரளயகாலஜாஜ்வல்லியமான மாவதுபோல ஜொலிப்பித்து பெருமூச்செறியும்போது இரண்டு பேர்கன்னியர்களுற்பத்தியாகியவிதங் காண்க

௨, தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி,

மாதர்களுற்பவமாயினர்-மாமுனிவன்
மாயத்தாலுமோ-ருபாயத்தாலுமிரு (மாதர்க

அநுபல்லவி,

நீதர்கள்புகழ்ந்திடும்   திருபன்மிகச்செழிக்க
நிறைந்தநான்மறையரு   நூலுமிகக்கொழிக்கச்
சூதர்கள்புகழ்சோதி   சுதன்சொல்லையழிக்கச்
சூர்முனிவனுறுதிச்   சொல்லாத்துல்பமொழிக்க.(மா)

சரணங்கள்.

௧, சுழிகொண்டுபெருகியே   சுரந்துவருங்கங்கையைச்
சூடினேன்   நெற்றியிற்கண்ணை

ழிகொண்டதழலினுள்   வெந்துமனம்நொந்துமிக
வாடினோன்   வெற்றியின்மிகு
பழிகொண்டபரமேசன்   பானஞ்செயுநஞ்செனப்
பாமரர்கொளுங்கால   பாசமதென்ன
அழித்திடும்வடவா   முகாக்கினியென்ன
அரிவையர்க்குவிழிக   ளமைந்ததாமென்ன (மா)

, சந்திராதித்யனாமிச்   சங்கடப்படுத்துஞ்சர்ப்ப
மாகுமே   சுவைமிகுத்த
செந்திருவமுதுடன்பிறந்தவஞ்ச   நஞ்சிதென்ன
லாகுமே   அதில்வந்துற்ற
இந்திரநீலக்கொம்பிரண்   டெழுந்ததாமென்ன
இப்புவியிலிப்படியே   திழையன்றோவென்ன
சுந்திரவனக்கன்றன   ளேகையிவர்களென்ன
சாமுனிவசிஷ்டர்முன்   சொன்னசொற்களையுன்ன (மா)

௩, நீலக்கடலுற்பவம   நீலக்கொடிவந்துநின்றாற்
போலவே   முனிவனாலே
ஆலக்கடல்தன்னில்மூழ்கி   யன்றெழுந்துவந்தவன்னம்
போலவே   மடமாதர்கள்
சீலத்திநுபர்மாரன்   சேனையிருவரென்னத்
சீருலவியபுலைச்   சியரிற்றெளிந்தோரென்னத்
கோலத்திலழகிய   குயரிகளிவரென்னக்
குவலயத்திவர்க்கிணைக்   கோதையரிலையென்ன (மாத)

பொது விருத்தம்.

நங்கையருற்பவித்து நாதன்முன்னிற்றபோது
பங்கையன்முதலோர்போற்றும் பாதநூலவர்க்குரைத்துப்
புங்கவன்றன்பாற்சென்று புணர்த்திடப்புகல்வீரல்லால்
செங்கையிற்குடையைக்கேண்மினென முனிசெப்பலுற்றார்,

வசனம்,

இந்தப்பிரகாரமாயுற்பவித்துவிசுவாமித்திரர் முன்னேநிற்கிற போதுவேதாதியர்களும் அதிகப்பட்ட பாதசாஸ்திரங்களேயிகத் தெளிவா யவர்களுக்குப்போதித்து அரிச்சந்திரமகாராச னிடத்திற்குப்போய்பிரசங்கம்பண்ணிஅவனைத்தழுவிப்புணரமனங்கொள்வீர் அதற்குடன்படானாகில் அவன்[illegible]யிலேயிருக்கிற பூச்சக்கிரக் குடையைக்கேட்டுவாங்கிக்கொண்டுவாருங்களென்று கபடவஞ்சக மிகுத்தமனத்தையுடையவிசுவாமித்திரர் சொல்லுகிறவிதங்காண்க.

பொது விருத்தம்,

இவ்வுரைவினவிமாதரிருடியின்சபையைவிட்டு
ஒவ்வுமவ்வரசன்முன்னே யோதிமமெனநடந்து
கவ்வுமிவ்வியல்பையெல்லாங் கவனமாய்களித்துப்பாடச்
செவ்வுரையரசன்வீற்றசிற்சபைசேரலுற்றார்.

வசனம்.

இந்தப்பிரகாரமாய்சொல்லக்கேட்டு மோகினிப் பெண்களிருவரும்விசுவாமித்திருடைய சபையைவிட்டு அன்னப்பட்சியைப்போலேநடந்து அரசன்சபைக்குவந்து தங்களுக்குதெரிந்தபரதசாத்திரவிதிகளைப் பிரசங்கிக்கவேண்டிவருதல்காண்க.

௩, தரு இ-ம்-பியாகடை-அலது-அடாணா.

பல்லவி.

வந்தாரே-மோகினிப்பெண்கள்-வந்தாரே

அநுபல்லவி.

வந்தாரேந்தற்பசதகோடி - வந்துவணங்கு மரிச்சந்திரன்சபை
சந்தாபங்கொள்விரக சாகரந்தனிலாடி (தேடி
சரசவிலாவினிகள் சகிமாரிருவர்கூடி (வந்தா)

சரணங்கள்,

௧, பேச்சினிற்கிளிபோலப் பெயர்ச்சியிற்பெடைபோல
வீச்சினிற்கரங்களும் விளங்குமின்மினிபோல
வச்சில்லாமுனியன்முன் னிசைந்தவெகுளில்மூல
மூச்சினிற்பிறந்திரு மோகினிமாதர்கள் (வந்தா)
௨, ஈசன்மால்விரிஞ்சியும் இசைந்தவிரகால்வாட
நேசமாய்த்துறவோரும் நினைந்துதவம்விட்டோடப்
பாசத்தாலெவர்களும் பரிந்தவர்களைநாட
வாசவயோத்தியாளும் வள்ளலினைக்கூட (வந்தா)
௩, சொல்லினிற்பட்டொழிந்தசோலையெல்லாஞ்செழிக்கக்
கல்லினையுங்கரைக்குங் கானவிதங்கொழிக்க
வல்லியர்தங்கட்குற்ற வலதனைத்தும்ஒழிக்க
நல்லியலரிச்சந்திரன் நற்றவத்தையழிக்க (வந்தா)

வசனம்.

இவ்விதமாய்வந்த மோகினிப்பெண்க ளிருவரும் அரிச்சந்திரமகாராசனைப்புகழும்.

கலித்துறை;

வையப்பரவும்பொன்வரைத்தடமாமுத்தன்வாழ்நகரம்
மெய்யும்வடமலையி[illegible]குமுன்மிடமிலங்குமொளி
செய்யுங்கதிர்மணிதிங்களைச்சேருமுன்பிறந்தகுடைக்
செய்யுப்புகழ்தனையெம்மாலளவிடவியர்க்கையன்றே (௧)

வசனம்,

அகோவாரும் மகாராசனே உம்முடைய அயோத்தியாபுரி பட்டணமே சொர்ணமலையாம் உம்முடையசிங்காசனமே வைகுண்டபர்வதத்துக்கு சமதையாகும் தம்முடைய புகழ்பெற்ற குடையோ சந்திரசூரியர்களைப்பார்க்கிலும் மேலானகீர்த்தியை வகிக்குமென்பதை யெங்களா லிவ்வளவென்றறிய வல்லமையோ மகாராசனே,

௪, தரு-இ-ம்-கல்யாணிதிரிபுடைதாளம்,

பல்லவி.

கலவிக்கிசைவீர்மன்ன-காதலொளிப்பதென்ன

அநுபல்லவி,

இலவிதழ்கே[illegible]யுண-விசையாதிருப்பதென்ன (கலவி)

சரணங்கள்

௧, மாரன்கையிற்றரித்த மலரம்பெலமைத்தரத்த
திரஅரிச்சந்திராமெத்தத் தென்றலைமைவந்துசுத்த (கல)
௨, சுரதநீரிடைவுஞ்ச சுகித்துவும்முடன்கொஞ்சப்
பரிதாதமெமைமிஞ்சப் படர்சந்திரன்படைக்கஞ்ச (கல)
௩, கைவளைகள்சோருது காமவெள்ளமூருது
மெய்வளமுனைக்கோருது-மென்மேலும்மோகமீருது (க

இராஜனும்-மோகினிகளுக்குச் சொல் விருத்தம்;

தடவரைமுலையாரேயாந் தங்குநன்னகர்கடந்து
அடவியில்வந்ததென்ன வதிசயமுரைத்திடீரோ

இராசன்வசனம்

பொன்மலைபோன்ற கொங்கைகளையுடைய பெண்களே நாங்கள்வாசஞ்செய்யப்பட்ட அயோத்தியாபுரியைவிட்டு மிருகங்களாலேதுன்பமுற்றிருக்கிற இந்தஆரணியத்திலே வந்ததைப்பார்த்தால் மெத்தஆச்சரியமாயிருக்குது உங்களிருப்பிட மெங்கே சொல்லிவாரும்பெண்களே

புடவியிர்ச்சிறந்தயோத்தி பூபனைபுகலக்கேளீர்
மடமயிலுலாவிளாடும் வனத்திடைவாழ்வோமியாமே (இ)

பெண்கள்-வசனம்,

பூலோகத்திலே மிகுந்த செல்வம்பொழிகின்ற அயோத்தியாபுராதிபதியான அரிச்சந்திரமகாராசனே மயிலினங்கள் சஞ்சரிக்கின்ற இந்தவனத்தில்வாசமாயிருக்கப்பட்டவர்களும்முடைய தெரிசனைக்காகவந்தோ மகாராசனே.

இராசன்சொல் விருத்தம்,

பாடியபாட்டின்வண்மைப் பட்டதோர்மாந்தருக்கும்
வாடியவாடல்காண வரம்பையூர்வசியைமிஞ்சும்

நீடியோ துதியோவென்னில் நெடியகல் லுருகுமிங்கே
கூடியிச்சபையில்வந்த கொள்கையைக்கூறுவீரோ

வசனம்.

நீங்கள் பாடினபாட்டினிசையைக் கேட்கில் பட்டவிருட்சங்களும் துளிர்க்கும் ஆடல்களைக்காணிலோ அரம்பையூர்வசிமுதலான தேவஸ்திரீகளுக்குமேலாயிருக்கும்நீங்கள்செய்யும் புகழ்ச்சியோகல்லையும் கரைக்கும் இப்படிப்பட்ட நீங்கள் யிந்தச் சபையில்வந்தகாரியங்களைத் தெரியப்படுத்தும் மோகினிப்பெண்களே

வாணப்பெண்கள்சொல்-விருத்தம்

பொன்னுளபுவியைக்கேளோம் பூண்பொற் பணிதிகேளோம்
நின்னுடவன்மைகேளோம் நெடியசெங்கோலைக்கேளோம்
தன்னிகரில்லாச்சேனைத் தளங்களைக்கேளோமுன்பால்
மின்னுமக்குடையின்மீதே மெத்தவுமையலுற்றோம் (௭)

வசனம்

அகோவாருமகாராசனே பொன்மலைபோலேநிறைந்தபொருட்களினும்சமுத்திரஞ்சூழ்ந்த பூமியிலும்மெய்நிறைந்த வாபரணங்களிலும் நீர் ஆளப்பட்ட செங்கோலிலும் சேனைசைனிய பரிவாரங்களிலும் யெங்களுக்கு ப்ரீதியடையாது ஆனால் உம்மிடத்திலே யிருக்கப்பட்ட பூச்சக்கிரக்குடையினிடத்திலே அதிமோகங்கொண்டிருக்கிறோம் மகாராசனே

இராசன்சொல் விருத்தம்,

தலைமுறைமுறையாயிந்தத் தகத்தினிலிருக்கப்பெற்ற
விலைமிகுகுடையைக்கேட்டீர் மெத்தவு மனஞ்சலித்தோம்
நிலைமிகுபணிகளாடை நிதிபுவிகொடுப்பதல்லா
தலைந்திடும்பரத்தைமார்க்கீ தரித்திடாதெடுத்துநல்கோம்

வசனம்,

இந்தஇட்சுவாகுவம்சத்து ராசாக்களுற்பத்தியான நாள்முதலாய் இந்தராஜாங்கத்திலேயிருக்கப்பட்ட பூச்சக்கிரக் குடையைக்கேட்டீர்களாகையால் நீங்கள்பேதையென்றுமனமிரங்கிப்பொறுத்துக்கொண்டோம் உங்களுக்கு வஸ்திராபரணாதி நிதிநிட்சேபங்களைத்தரத்தக்கதேயொழிய இந்தக்குடையைக்கொடுப்பது அடுக்கொண்ணாது வீணாய்ப்பிதற்றவேண்டாம் சபையைவிட்டு அகன்றுபோங்கள் பெண்களே

வாணப்பெண்கள்சொல்-வெண்பா

ஆனவரம்நல்கு மரிச்சந்திரபூபா
மானிலத்திலுந்தனைப்போல்மன்னருண்டோ வானவருந்

சிந்தனையுற்றெமையழைத்தார் சீச்சியென்றோடிவந்தோம்
உந்தனையேமணம்புரிவோமென்று

வசனம்,

அகோகேளும் எங்களுக்குரிய வெகுமதிகள் தருகிறோமென்ற அரிச்சந்திரமகாராசனே இந்தப் பூலோகத்திலும்மைப்போலுற்ற அரசர்களாரிருக்கிறார்கள் ஓய் மகாராசனே தேவர்களும் யெங்கள்மேல்மோகித்து மயக்கமுற்றார் அவர்களை நிராகரித்துத் தூஷித்துப்பேசி உம்மையொருவரையே யிருவரும்புணர்ந்து யெங்கள் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளவந்தோம் கிருபைசெய்யும்மகாராசனே,

௫-தரு இ-ம்-யமுனாகல்யாணி. அடதாளம்

பல்லவி.

மோகமாகிறோம்மன்னா-மிக-மோடிசெய்குவதென்ன

அனுபல்லவி.

சாகேதபுரியாளுஞ்   சத்யரிச்சந்திராவி
வேதியென்றன்மேல்   விரக்ரச்செய்தமை
ஏகிவரவிசுவா   மித்திரரிசைந்தனர்
ஆகையினாலுன்   சமுகந்தனில்வந்து (மோ.

சரணங்கள்

௧, சோமனுதித்திடலாச்சே   கனைக்
காமனெதிர்த்திட   லாச்சே
கோமளவெற்பினை   யொத்ததனங்கள்
குலிங்கிக்கலங்கித்   துலங்கியேவிம்முது
தாமமலர்ப்பளி   மெத்தையிலும்முடன்
தாங்கவென்றேமிகப்   பாங்குடன்வந்து (மோ
௨, தென்றலிறைந்திடலாச்சே   யெங்கள்
தேகஞ்சிறந்திட   லாச்சே
அன்றிற்கிளிகளும்   ஆடுமயில்களும்
ஆரவாரித்துப்   போராட்டங்கள்செய்யுதே
குன்றினுமிக்கப்   புகழ்படைத்தேயிந்தக்
குவலயந்தனையாளுங்   குரிசிலரிச்சந்திரா (மோ
௩, கலைநெகிழ்ந்திட   [illegible]லாச்சே
மார்பிற்கஞ்சுகந்   தெறித்திடலாச்சே
முலைமுகட்டில்மலரம்புகள்   தைக்குதே
முன்னவர்னல்லமுதங்களுங்   கைக்குதே
நிலையாகவல்குலுன்னேசம்   நினைக்குதே
நித்யனேசத்யரிச்   சந்திரநிருபனே (மோ

இராசன்சொல்-விருத்தம்

பாதகப்பாத்தைமாரோ பகரொணாமொழிபகர்ந்து
தோதகமடிப்பதென்னதற்புத்திபடைத்தீர்சற்றும்
பேதகம்நினையாதிந்தப் பிரம்பினாலடிப்பித்துங்கள்
நீதகந்தனையகற்றித் திறமுடனனுப்புவேனே (௯)

வசனம்.

அகோவாரும்பொய்களவு கொலைகள்காமமுதலானபஞ்சமாபாதகஞ்செய்யும் பாவிகளானபெண்களே உங்களுக்குத்தமதுவார்த்தையைவசனித்துக் கொண்டாடிக்கிறீர்கள் இதென்ன துற்புத்தி கொஞ்சமாவது ஈவிரக்கமில்லாமல் யென்கைதனி லிருக்கிறபொற்பிரம்பினாலடித்து உங்களுக்குற்றஆணவத்தையடக்கி அகத்தைக்குலைத்து அனுப்பிவிடுவேன் சமுகத்தில்நில்லாமல் சனுதியிலகன்றுபோங்கள் பெண்களே

வாணப்பெண்கள்சொல்-விருத்தம்

சேதிப்பேனென்றுரைத்த செல்வனேதிரிசங்குமைந்தா
போதித்ததாருனக்குப் புகலுவாய்ப்பூவைமாரை
வாதித்தலுண்டோபாரில் வதைப்பரோபுலவர்தம்மைச்
சோதித்தலென்னவெம்மைச் சுகத்தினில்மருவுவீரோ

வசனம்.

அகோவாரும் திரிசங்குமகாராசன் தவத்தில்வந்த செல்வகுமாரனேஇப்படிப்பட்ட புத்தியைப்போதித்ததாரு பெண்களையாவது வித்துவத்தறிந்தவர்களையாவது இம்சித்தோரை யறிந்திருக்கிறீரா என்னெங்கள்மனதைச் சோதிக்கிறீர் சுகமாய்யெங்களை மருவிக்களிகூறு மகாராசனே

புராணவிருத்தம்

வள்ளலென்றடைந்தோமுன்பால்வந்திரந்தோர்க்கொன்றீயாக்
கள்ளனென்றறிந்தாலிங்கு வருகலங்கண்டாயென்றார்
உள்ளமுங்கண்ணுஞ்செந்தீ யுருத்தெழச்சினத்துவேந்தன்
தள்ளுமென்றருளிச்செய்தான் விளைவதுதன்னையோரான் (௰௧)

வசனம்.

மகாராசனென்று தியாகத்துக்குவந்தோம் யேழைபேதைகளுக்கு கொடுக்காதயாமுடியென்றால் வரமாட்டோமென்றவிசுவாமித்திர மோகினிகளை இனிப்பின்வருங்காரணமறியாமல் தள்ளிவிடச்சொன்னபோது பக்கத்திருந்தபரிசிலாளர்கள் தடப்பிவிப்பதுகாண்க

மந்திரிசொல்-விருத்தம்

ஆரடாஅருகிருக்கும் அடவுளசேவையேவுன்
சீரடமெத்தப்பேசும் செருக்கிகள் தம்மைக்கன்றுற்

பாரடாகைப்பிரம்பாற் பகைத்திடவடித்துதைத்து
நேர்டாயெந்தன்முன்னே நிருபனுங்களிக்கத்தானே (௰௨)

வசனம்

அகோஅதாரும்பிள்ளாய் அருகிலிருக்கும் சேவைக்காரா இங்கு அதிகமாய்ப்பேசப்பட்ட இந்தமோகினிப்பிசாசுபோலே வந்திருக்கிற பெண்களைத்துரத்திவிடுவது உன்னுடையவேலையல்லவோ அவர்களைப்பார் உன்கையிலுள்ளபிரம்பினாலே அவர்களைக் கலைத்து வெறட்டினபிறகு எமக்குத்தெரியப்படுத்தினால் மகாராஜாவைசந்தோஷிப்பித்து உனக்கு அதிகவெகுமானம் வாங்கித் தருகிறோம், பிள்ளாய் சேவைக்காரனே

சேவைக்காரர் வசனம்.

அப்படியே வெறட்டிவிட்டுவருகிறேன்மகாராசனே

மோகினிப்பெண்களுக்கும்-சேவகர்களுக்கும் தர்க்கம்

௯-தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்-திபுதை

கண்ணிகள்.

(சேவகர்) கடுகடுத்துப்பேசுங் கன்னியரே நீங்கள்
குடுகுடெனநடந்து குடிசைக்குட்புகுங்கோள்
(மோகினி) தடதடென்றோடிவந் தெங்களைத்தள்ளியே
வெடவெடென்றடினால் விட்டுப்போவோமோ
(சேவகர்) பெண்புத்தியால்மெத்தப் பேசவேண்டாம்வெகு
நண்புற்றவார்த்தையை நான்சொன்னேன்போபோ
(மோகினி) பண்புடனெங்களைப் பார்மன்னன் மருவாமல்
தன்புற்றவார்த்தையால் தனியேபோவோமோ
(சேவகர்) துங்கமன்னவன்றனை துடுக்கமாயினிச்சொன்னால்
தங்கப்பிரம்பினால் தகத்திவிட்டிடுவேன்
(மோகினி) பங்கமாயெங்களைப் பதறியடித்தாலும்
புங்கவன்றனைமணம் புணராமற்போகோம்
(சேவகர்) குடியைக்கெடுப்பதுங்கள் குலவன்மையல்லவோ
முடுகுச்சவுக்கினால் முதுகிலடிப்பேன்
(மோகினி) படுபாவியின்றெமைப் பங்கஞ்செய்தானலோ
அடுபாவியென்பதை யாமறியோமே

பொதுவிருத்தம்.

ஆறுகொண்டோடார்செல்லாவடவியிற்சென்றுமேனி
மாறுகொண்டிறஞ்சிந்தமஞ்சினைப்பழித்தகூந்தற்
றாறுகொண்மார்க்கச்சோர்ந்த துகில்கிழிந்தகலச்சாப
வீறுகொண்டேவிவிட்ட முனிவன்முன்வந்துவீழ்ந்தார்

வசனம்.

அகோகேளும் தர்மபுத்திரர்களே இப்படி தௌஷ்டியத்தினாலடிப்பட்ட மோகினிகள் நீர்நுழையாத அடர்ந்த சோலைவனங்களைக்கடந்து நடந்துபோய் தேகமெல்லாங்குருதிசிந்த மேகத்தைப்பழித்தகூந்தலை தாருடனே முட்செடிகள் பத்தியிருக்கக் கட்டிக்கொண்டிருக்கிற பட்டுப்பீதாம்பரங்கிழிந்து முற்றலாய்ச் சோர தம்மைப்பொருமையுடன் ஏவிவிடுத்தவிசுவாமித்திரரிடத்தில்வந்து அடிக்குவிழ்ந்து சொல்லிக்கொள்ளுகிறவிதங் காண்க,

மோகினிகள்-விசுவாமித்திரருக்குச்சொல்-விருத்தம்

ஆரணமார்க்கமெங்கட் கறிவித்தகுருவேபோற்றி
நாரணமுதலோரேற்றும் நரேந்திரனரிச்சந்திரன்றன்
பேரணப்பதத்தைப்போற்றிப் பிரமையினுற்றழுவலுற்றேம்
காரணமில்லாதெம்மைக் கடுகடுத்தடித்தானையா (௰௪)

வசனம்.

அகோகேளும் சற்குருநாதனே சகலசாஸ்திரமுமோதிவைத்து எங்களுக்காக்ஞாபித்தபடிக்கு மகாவிஷ்ணு முதலானவர்களும் புகழுதற்கரிய அரிச்சந்திரமகாராசனுடைய பாதாரவிந்தத்திலேநமஸ்கரித்து அவனிடத்திலே யெங்களுக்குண்டாயிருந்த காமவிகாரத்தினாலே காதலுற்று மணமிடும்படிக்குத்தழுவினோம் இதற்காயாதொருகாரண மன்னியில் அடித்து வெறட்டி விட்டான் எங்கள்தேகமெல்லாம் நோகுது சுவாமி,

விசுவாமித்திரர்சொல-வசனம்,

ஆ ஆ ஆ புட்டிமகன் இன்னமென்னசெய்தான். சொல்லுங்கள்,

௭-தரு-இ-ம்-நீலாம்புரி-ஜம்பைதாளம்,

கண்ணிகள்,

௧, ஐயனேமுனியேயெங்க ளங்கமெங்கும்நடுநடுங்க
வெய்யவன்குலத்துவேந்தன் விம்பினாலடித்தானையா
௨, அடிமையென்றரசன்றன்னை ஆசையாற்பணிந்தோமையா
கொடுமையாய்முதுகிற்குத்தி கொறடாவினாலடித்தானையா
௩, பூபதியிற்கர்ணனென்று பூச்சக்கிரக்குடையைக்கேட்டோம்
சாபமிட்டிருவரையும் சாட்டியாலடித்தானையா
௪, அரசரிற்பொய்யுரையானென்று அமளியிலணையலுற்றேம்
சரசஞ்செய்யமனம்விரும்பி சந்தோஷித்தழைத்தோமையா

பொது-விருத்தம்,

கோதையரிருவர்சொன்ன கோள்களைக்கேட்டுமெத்த
வாதையாயுருகிவிசுவா மித்திரர்வருத்தமுற்றப்
போதையில்மிகவெகுண்டு பூவையர்தம்மைநோக்கி
பேதையேமனம்பொருப்பீ ரெனவிதுபேசுவானே (௰௫)

வசனம்.

ஓய் அரசர்க்கரசனே இவ்விதமாய் சலிகைசொல்லிக்கொண்டவாணப்பெண்களின் வாய்பாடான கோள்வார்த்தைகளைக்கேட்டு மிகவும் மனவருத்தமடைந்து அத்தருணத்தில் அரசன்மீது மிகுந்தகோபமுற்றுமுன்பாக நிற்கின்ற நீலிகளைநோக்கி பேதைமையுற்ற எனது பெண்மக்களே மனம்பொறுத்துக் கொள்வீர்களென்று அவர்கள் மனத்தேற்றமுறும்படி இனித் தான்செய்யப்பட்ட கபடநாடக சூத்திரமானவிசித்திரங்களைச் சொல்லிக் காட்டுகிறவிதங்காண்க,

௮-தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்,

பல்லவி,

ஊரைவிட்டுக்காட்டிலோட்டுவேன்- அவன்பொருளைச்
சூரையிட்டுக் கொடிகட்டுவேன்

அநுபல்லவி,

ஊரைவிட்டவனையோட்டி-உள்ளவென்கோலங்கள் காட்டி
பாரையாளத்துசங்கட்டி - பட்டணத்திற்செங்கோல்நாட்டி
தாரைதாரையாகக்கண்ணீர் பாரைபாரையாகவுண்ணீர்
சேரைசேரையாய்ப்பெருக சிறந்தவர்களுள்ளுருக
பார்த்தபேர்க ளங்கலாய்க்கவே-அவனைத்தினம்
கார்த்தபேர்கள் தலைசாய்க்கவே-எந்தனைக்கண்டு
பூரைபூரையென்றெவரும் பொற்புடனடிவணங்க
மேரைமேரையாயிதென்று மேலவர்களும்பிணங்க (ஊரை)
௧. இப்பவேஅயோத்திக்கெய்குவேன் அவன்முடியைச்
செப்பவேஉதைத்துள்ளுய்குவேன் அதுதவழ்ந்தால்
ஒப்புவுங்களைப்புணர்விப்பேன் ஒப்பிடாதுகில
ஒப்பனைச்சொல்லினால்வாதிப்பேன் அதுமறத்துச்
செப்பவகையின்னதென்று சொப்பனத்திலுமறியான்
கப்பணப்பொக்கிஷமுதல் எப்பணமும்என்னுதென்ன
இப்பவேதாரைவார்ப்பாயென் றிடுக்கங்கள்மிகவிளைத்துத்
தப்பவழியொன்றில்லாமல் தயங்கிமனந்தளரச்செய்வேன்(ஊ)
௨, சத்தியக்கொடியையறுப்பேன் அவன்பேலினி
நித்தியமும்முறைமுறுப்பேன் ஆளுகைக்குள்ள
வெற்றியானையுங்கைக்கொள்ளுவேன்-கும்பத்துடன்
எத்தியேகாசிக்குத்தள்ளுவேன் புறப்படையில்
முத்திரையிட்டுமுன்னவன் பத்திரத்தடைக்கலஞ்செய்
வித்திருந்தபொருள்யாவும் மித்திரபேதமில்லாமல்
இத்தினத்திலேதருவா யென்றிடம்பையில்வெய்புவான்
இத்தனைதினத்திலீவா யென்றொருதவணையிட்டு (ஊ)

தரகனைப்புகரோனைவிடுப்பேன்　　கொடுவிடவீர்
உரகனைப்போற்சிறந்தொடுப்பேன்　　அடவிதனில்
சிறகமிருகத்தூறிடச்செய்வேன்　　அவன்பாரியை
விரகத்தினால்நொந்திடச்செய்வேன்　　அம்மூவரையும்
நரகவுலகோர்க்கப்பாலாய்　　கரகமுடையோர்கட்கேலாம்
அரகராவென்பார்மெய்நூலாய்　　இரகவேகத்திலும்மேலாய்
புரகரன்விரிஞ்சிமாயோன்　　புண்ணியன்சுகநாரதர்
மரகதன்முதலோர்காணு　　மாவனமெக்குந்திரிய (உன)

௪, புலிகரடிபூரான்சுருட்டை　　சாரைசர்ப்பமும்
புலியிரண்டுதேளட்டைகுறட்டை　　நட்டுவாய்க்காலி
எலிபெருச்சாளிசிங்கமோரி　　கழுதைசெந்நாய்
வலியவோநாய்பன்றிகாந்தாரி　　இன்னமனேகம்
பலிகொளும்விலங்கினங்கள்-நலிசெய்யவந்தொதுங்கச்
சலித்தவர்களங்கம்லொங்கச்சொலித்தெழுந்தீய்வந்துதங்கக்
கிலியனல்மனமொடுங்கக்　　கிலேசித்துநடுநடுங்க
கலியினைக்கண்டுபதுங்கக்　　கண்களெவர்க்கும்பிதுங்க (உன)

௫, காசியிலோர்வேதியனுக்கு　　பெண்டுபிள்ளையைத்
தாசிகள்செய்யும்வேலைகட்கு　　ஒப்பிடச்செய்து
பூஜிதனரிச்சந்திரனை　　நீசர்க்கடிமை
பேசியேதரும்பொருள்தனைக்　　கைகொண்டபின்
கோசிகனென்றன்மாயத்தால்　　வீசியகொடுவிடத்தால்
மாசிலாதார்மைந்தன்மாளப்　　பூசிதனுக்கொப்பித்துமீள
காசிநகர்காவலன்முன்　　காதலியைக்கணவன்வெட்ட
யோசித்துத்தேவர்முனிவ　　ருத்தமனென்றென்றுங்கிட்ட (உன)

பொதுவிருத்தம்

ஒப்புறவிதுவியம்பி யுள்ளத்திற்சினத்துமுன்னாள்
முப்புராதியரைத்தீர்த்த முக்கண்ணன்வடிவமுற்று
தப்புரையாதவேந்தன் றங்கியபொய்கைநோக்கி
செப்புதற்கருந்தவத்தோன் செல்கின்றான்வெல்கின்றானே

வசனம்,

இவ்விதமாகச்சொல்லி அங்கிருந்தெழுந்து காலருத்ரசுரூபனாய்த்திரிபுராதகனரது வடிவமுற்று அரிச்சந்திரமகாராசன் தங்கியிருக்கப்பட்ட பொய்கைக்கரையைநோக்கி விசுவாமித்திரர் மகா உக்கிரத்தோடு இரண்டுகண்களிலும் நெருப்புப்பொறிபறக்க சர்ப்பக்கூட்டங்களைத் திரியவிட்டதுபோலே சடைகளை விரித்துவிட்டுப் பெருமூச்செறிந்துகொண்டு வருகிறவிதங்காண்க,

௯-தரு-இ-ம்-மோகனம்-ரூபகதாளம்;

பல்லவி,

சினத்தகோசிகரிதோவந்தார் - அந்தசெல்வனரிச்சந்திரன்
சிரத்திலொருதைதந்தார்

அநுபல்லவி,

சினந்துமுப்புரத்தைமுன்　　சிரித்தெரித்தவுமேசன்
இனத்தோரெல்லாமிகழ　　யினகுலேசன்புகழ (சின)

சரணங்கள்;

௧. இருகண்களானுந்தி　　யெரித்துப்புகைமூட
இருடிமெய்வேர்வைநீ　　ரிடியாரெதிர்த்தோட
சருவுஞ்சாற்றனைப்போற்　　சடைமுடிகுலைத்தாட
தருமதேவதைநாணுஞ்　　சத்தியநிலைநாட
வருந்தியுலகுளோர்　　வல்லலடிதொழ
பொருந்திமுனிவர்தாள்　　பூயன்தொழுதெழ (சினத்த)
௨, சுரர்மிகப்பரதவித்　　தபயமிட்டலறிட
நரர்மிகவிதிர்ப்புற்று　　நடுங்கிக்கதறிட
பாரியிம்முனிக்கேனிப்　　பாடென்றுதறிட
வார்செய்யுமிடியினால்　　வையகுசிதறிட
உரகனையணிமுடி　　யொடிங்கிப்படித்திட
கரகமெடுப்போர்செய்　　கலகமுடிந்திட (சினத்த)
௩, நாடழித்திட்டாய்　　நகரழித்திட்டாய்
கூடழித்திட்டா　　யெழிற்புனமழித்திட்டாய்
ஏடழித்திட்டாய்　　கரையழித்திட்டாய்
கோடழித்திட்டாய்　　குவலயமழித்திட்டாய்
தோடழித்திட்டாய்வேர்　　தூரழித்திட்டாய்
சோடழித்திட்டாய்　　சூரிசுழவென்று (சினத்த)

பொதுவிருத்தம்.

மணிமுடிதனையுதைத்த மாமுனிவிசுவாமித்திரன்
இணையடிதொழுதயோத்தி யேழையோர்க்கபயமீந்து
பணிவிடையாவுங்கொள்வீர் பரிவுடனெனைத்தற்காத்து
அணிசடைமுடியாயென்றும் ஆளென்பான்றாளென்பானே

வசனம்;

கேளுந்தர்மபுத்திராதிகளே இந்தப்பிரகாரமா யெண்ணிறந்தகோபங்கொண்டுவந்து ஆவிமதிப்பில்லாத அரிச்சந்திரமகாராஜனணிந்திருக்கின்ற நவரத்தினகஜிதமயமான திருமுடியைஉதைத்தவிழ்த்திய விஸ்வாமித்திரருடைய பாதாரவிந்தத்திலே மகாராஜனானவன் நமஸ்கரித்து ஏழையைப்பாதுகாத்து இரட்சிப்பீரெ

ன்றும் எவலைக் கைக்கொள்வீரொன்றும் என்னையாளுவீரொன்றும் சடாமகுடமுள்ளவரேயென்றும்என்னையாதரிப்பீரொன்றும்தோத்தரித்துச் சொல்வதுகாண்க,

௰-இராசன்சொல்-தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்,

பல்லவி

பிழைபொறுத்தருள்வீர்-எனைச்சிறு
பிள்ளையெனக்கைக்கொள்வீர்

அநுபல்லவி.

தழைமலிசோலையித் [illegible]டத்தினிலேயும
தாச்ரமமென்றெந்தன் னுளமறியாதுசெய் (பிழை)

சரணங்கள்,

௧, சிறியரானவர்கள் தன்னுளமறியாதுசெய்
தெய்தாலுங்கொடுந்திமை என்ன
செய்தாலுமவர்கட்குச் சிற்பதந்தருள்
செய்தலல்லோவாய்மை மிகநன்னு
லறிஞரானவர்தமக் கல்லவோமிகட்சமை
ஆய்ந்தறிந்துணர்ந்தோர்கட் கவைகள்மீதென்பிரமை (பி)
௨, பெத்தபிள்ளைகள்செய்யாதபிழைகளைப்பொறுத்திடல்
பிதாவின்குணமல்லவோ மிகப்
பேதமையாகயா னேதேதுசெய்தாலும்
பேணல்மணமல்லவோ இனி
எத்தகையாகினு மென்னையிந்தட்சணம்
ஏனுவதல்லோ யெவர்க்கும்ஸலட்சணம் (பிழைபொ)
௩. பாதம்பணிந்தோனைப் பராமரித்தல்முன்னாள்
பண்ணியதவமல்லவோ பொல்லாப்
பாதகஞ்சூதகஞ் செய்தவையாவையும்
பாவியெண்ணிச்சொல்லவோ ஞான
போதமுனாக்குந் தபோதனரல்லவோ
புனிதரொன்றுமைப்பூவோர்-புகழ்வதுசொல்லவோ (பிழை)

பொதுவிருத்தம்

எண்ணியரசனிவ் வண்ணமுரைத்திட
நண்ணியகவுசிக னவிநாம்பொழிந்
துண்ணியகரண கடோரமதாகவே
புண்ணிடைவேனுழைந் தாற்போற்புகலுவான் (௰௮)

வசனம்,

இவ்விதமாயரிச்சந்திரமகாராசன் மிகவும் மதிப்பித்துமொழியும்போது விசுவாமித்திரரானவர் நாவிலே நரம்பில்லாதவர்க

ளைப்போலும் காதிலேநாராயுதத்தைச் செலுத்தினாற் போலும், மழுவைக்காய்ச்சி யூற்றியதகைமைபோலும், புழுத்து நெளிகின்ற புண்ணிலேவேலாயுதத்தாலிடித்தாற்போலும், சிலவார்த்தைசெல்லத்தொடங்குவதுகாண்க,

௰[illegible] விசுவாமித்திரர்சொல்-தரு-இ-ம்-அடாணா-அடதாளம்;

பல்லவி,

அடடாயிதென்னகூதடா- இனிமேல்விட்டு- விடடா உனக்கடாத (டா

அநுபல்லவி,

நடடாபோருக்குப்புறப் படடாவில்லிற்கணை
தொடடாயெத்தன்மேற்படை யெடடாபொல்லாமுரடா

சரணங்கள்,

௧, விலங்குகளுடன்போரி செய்தாய்-அனுவளவாய்
விளங்குப்புறவைநேர் செய்தாய் அதுபோயென்மூன்
கலங்கிறவனைப்போலக் கைதனைப்பிசைகிறாய்
கலிதுடர்ந்தானேயெந்தன் காலைப்பிழைகள்தானே (அ
௨, வாகினியாவுஞ்சிதைத்தாய் என்றும்நானுனும்
வலைசாரிகளை வதைத்தாய்-எனதுதவ
மோகினிகளையடித்தாய் முடியாக்கைவமுடித்தாய்
மொழிபாருதல்படித்தாய் முனியென்முனையொடித்தாய் (அ)
௩, அழுத்தநெஞ்சம் படைத்தாய்-அரசர்களில்
அதிபனென்பது துடைத்தாய்-அறிவழிந்து
கழுத்தரித்தபின்னையோ கைப்பிழைவந்ததென்றாய்
கைப்பாலிற்றுளிவிஷங்கலந்தாற்போற்றிரிகிறாய் (அட)

பொதுவிருத்தம்;

மனந்தனிற்கபடவஞ்சனைமிகுத்தமாமுனிகௌசிகர்க்குற, இனந்தனையெவரும்பொருந்திடாதெனவேசெய்தனிர்குலத் தரிச்சந்திரன்! அனந்தமாயிரமாயடிதொழுதிறைஞ்சி யையநின் மலர்ப்பதமலதிப், புனந்தனிலினிவேறுயர்துணையுளதோ பொறுத்திடுமெனமிகப்புகழ்வான்,

வசனம்.

அகோகேளுங்கள் நீவிர்களே கபடநாடகசூத்திரதாரியான விசுவாமித்திரரிஷியினுடையகோபத்தையாதொருவரும் பொறுக்கவொண்ணாதென்று அனேகவிதமாயடிபணிந்து போற்றி ஐ ஐயனே உமது பாதாரவிந்தந்தவிர இந்த ஆரணியத்திலேவேறுதுணையேது நான் என்னபிழைகள்செய்தாலும் மனம் பொறுத்தருளுமென்று மன்னிப்பளுங்கேட்பதுகாண்க,

௰௨-தரு-இ-ம்-ஆகிரி-ஆதிதாளம்

கண்ணிகள்,

௧, மனதறியாமல்நான் செய்தபிழைகள்யாவும்
மனம்பொறுத்தருளுமையா சுவாமி
உனதரியதவத்தி லுதித்தமாதர்களென்று
னுரிமைத்தங்கச்சிக ளையா
எனதறியாய்ப்புத்தி யென்னாமலிவர்களை
யிடுக்கஞ்செய்திட்டேனையா இந்த
எந்திழையர்புலையச் சாதிப்பெண்களென்றெந்த
னிணையடி தொழுதாளையா
௨, உலகத்தில்விலைபெற்ற நவரத்தினமுடிதனை
யோங்காரமாயுதைத்தீர் அதி
லுற்றநவமணிகள் தைத்தாற்பாதங்கள்நோமென்
றுள்ளங்கலங்கு தையா
கலகமிகவளர்க்கும் வச்சிரக்கற்களுன்
கால்களிற்றைத்திட்டாதோ என்ன
காரணமோபரி பூரணகிருபைசெய்வாய்
கவுசிக மாமுனியே
௩, பச்சைக்கல்லுகளுந்தன் பதங்களிற்றைத்திடப்
பாதகமென்செய்தேனோ மெத்தப்
பழிகொளுமேயதை யழிக்கும்வகையறியேன்
பாலிப்பாய் வரமுனியே
இச்சையாயெனைகார்க்க யிதமாயெழுந்துவந்தீர்
எழிலுயர் மாமுனியே
இசைந்தகோமேதகம் பட்டாலும்புண்ணுமே
இதமோகுசிக சுதனே
௪, மரகதங்கள்வதைத்தால் மாறாப்புறையோடுமே
மாதவாவென்ன செய்வேன்
மனமதுசுழலுதே மதிகனிந்தழலுதே
மகிழ்ந்திடு மாமுனியே
விரகதாபப்பிறந்தால் விவேகமகிழ்ந்திடுமோ
விசுவாமித்திர முனியே
விளங்குமுன்மக்களென்றால் மணம்புணர்ந்திடவென்னை
விரும்புவாரோ தவியே

விசுவாமித்திரர்-சொல் விருத்தம்

முன்னமுன்றந்தை முடிப்புலைநீக்கினம்
இன்னம்நீக்க வெமக்கறிதன்றியாம்

சொன்னவாசகங் கேட்டுச்சுடர்முடி
மன்னர்மன்னவென் மக்களைச்சேர்ந்திடாய் (௨௰)

வசனம்,

வாரும்பிள்ளா யரிச்சந்திரா இதற்குமுன் உன்னுடைய தந்தையாகிய திரிசங்குவின் நீசத்தன்மையை ஒழித்து மாறாத சொர்க்கங்கொடுத்தேன் இன்னம்உனக்கு வரப்பட்ட தீமை யாவையும் அகற்றியாளவும் திறமையுண்டு ஆகையால்என்னுடைய போதனையைக்குருவாக்கியமா யங்கீகரித்து எனது மக்களாகியமோகினிப்பெண்களை விவாகம்பண்ணிக்கொள்ளும்பிள்ளாய்,

அரிச்சந்திரன்சொல்-விருத்தம்

அடினும்நின்விழி யாரழலாலெனைச்
சுடினுமென்னுயிர் தன்னைத்துறந்துயிர்
விடினுமேனியை வெட்டியரிந்துகூ
றிடினுமிச்சொற்கிசைந்திலனென்னையாள் (௨௧)

வசனம்

அகோவாருங்களையாசுவாமி என்னை வெதும்பினாலும் திருவிழியிலெழுகின்றதீயினாற் றகித்தாலும் என்னுடைய சரீரத்தையும் ஆத்துமாவையும் வேறுசெய்யினும் தேகத்தை யறுத்துக்கூறுகூறாயிடினும் இப்படிப்பட்டகொடுமையான பாதகவார்த்தைக் கிடங்கொடுக்கேன் சுவாமி என்றென்றும் எனதுகுடும்பம் புரோவிருத்தியாகும்படி ஆசீர்வதித்தாலும் முனி சிரேஷ்டரே,

பொதுவிருத்தம்,

பூபவேள்விக் கவுசிகனோய்விலாக்
கோபமெய்திக் கொடியிடைமாதரைத்
தீபமன்னவா சேர்க்கிலையாயினென்
சாபநீபெறு கென்றனுஞ்சாற்றுவான் (௨௨)

வசனம்,

இயாகாதி க்ருதுக்களியற்றப்பெற்றவிசுவாமித்திரானவர்மிகுந்தகோபமுற்று மின்னற்கொடிபோல யிடையையுடைய எனது சிருஷ்டியாலுற்பவித்த மோகினிப்பெண்களை மாலையிடவொட்டாயாகில் சாபமிடுவேனென் றுரைத்தபோது அரிச்சந்திர மகாராஜன் சொல்லுவதுகாண்க,

௰௩, அரிச்சந்திரன்சொல்-தரு-இ-ம்-ஆகிரி அடதாளம்

பல்லவி

சாபமிட்டாலுமினிவீரினியிந்தச்-சள்ளைதீர்த் தெனையாளுவீர்

அநுபல்லவி.

கோபமிருந்தாலுங் கோதையரைப்புணரக்
கொள்ளுமோதெனதாசை-யின்னுமோகடலோசை (சா)

சரணங்கள்,

௧, என்னைவைதாலும் ஒவகுவிரொந்தாலும்
எரிதழலிடச்செய்குவீர்
அன்னையெனக்காமல் வரிவையரிருவரும்
ஐயோயிதென்னவன்மம் வெய்யோன்குலத்துக்கன்மம் (சா)
௨, அடாவினைத்திடவல்லோ விவ்வாதைசெய்குறீ
ரிதபாமனுய்க்குறீர்
உடற்பிறப்பினைக்கூட வுடன்படுவாரோசுவாமி
ஊழிவினைகள்செய்தா ளாழிபொங்கமெய்த்தோ (சாப)
௩, வக்கணையாக வுரைக்கிறீர்தேவர்கள்
வன்மையெல்லாமறைக்குறீர்
அக்கினிசாட்சியா யணைந்தவளைவிட்டவ்
வரிவையரைக்கூடத் திருவுளமிசைவாட (சாப)

விசுவாமித்திரர்சொல் விருத்தம்

அழமருங்குலத் தோகையர்தங்களைக்
கடிமணஞ்செயத் திதென்றகள்வனே
கொடுமைசெய்யக் கொடுபுலையர்க்குநீ
அடிமையாவை யகிலமிகழ்வ (உ௩)

வசனம்,

நீசப்பெண்களை கல்யாணஞ்செய்வது இழிவென்று சொன்னதிருடனே இந்தலோகத்தோ ரெல்லாரும் தூஷிக்கும்படி அனியாயஞ்செய்யக்கருதுந் தீயகுணத்தையுடைய நீசனுக்கு நீ விலையாகுவாய் அரிச்சந்திரமகாராசனே.

அரிச்சந்திரன்சொல்-பழமொழிவிருத்தம்

வேலியானதுபயிர்தனை மேய்ந்திடவிதித்ததால்
ஆலமன்னையர் பாலகர்க்களிப்பரோயானால்
காவலூர்விடு தூதர்கள்கட்டுவாரானால்
மேலிதோர்ந்திதையார்கொலோவிலக்குவார்விளம்பீர் (உ௪)

வசனம்.

அகோவாரும் விசுவாமித்திரமகாமுனிசுவாமி-பயிரைக்காக்கும் வேலியே பயிரையழித்தாலும் பெற்றதாயே பிள்ளைகளுக்குவிஷத்தைக்கொடுத்தாலும் எமகிங்கரர் எமதண்டனை செய்தாலும் இதுகளைவிலக்குவதற்கு யாவரால்சக்கியமாகும் தேவர்களாலுங்கூட சக்கியமில்லையே சுவாமி,

௪௩-அரிச்சந்திரன்-சொல்-தரு-இ ம்-நாதநாமக்கிரியை அடதாளம்

பல்லவி.

தடுத்திடுவாரெவர்காண் - உமதுரையை - விடுத்திடுவாரெவர்காண்

அநுபல்லவி.

தடுத்திடுவாரிந்தத் தாரணிதனிலுண்டோ
தொடுத்திடுவீரிந்தத் துன்பந்துலைந்திட (தடுத்)

சரணங்கள்

௧, பழவினையறியாத பசுங்கிளிபோற்பேசுந்
குதலைசொலுஞ்சொற்களிற் குற்றம்பிடித்தால் (தடுத்)
௨, நஞ்சினைச்சிசுவுக்கு நானிடுவேனென்னும்
வஞ்சிக்கிதஞ்சொலி வையகந்தன்னிலே (தடுத்)
௩, கடல்நீரைநீரொலாங் காய்ந்தழலெய்தையில்
மடல்நிறைசெய்ததை மாற்றவாரொல்லால் (தடுத்)
௪, ஆக்கவுங்காக்கவு மழிக்கவும்நீயல்லால்
நோக்கவறிந்துமிக நொடித்திதைநாளும் (தடுத்)

{அரிச்சந்திரமகாராஜனும் சந்திரமதியும் லோகிதாசனும்
மந்திரியுஞ்சொல்புராணவிருத்தம்;}

தாயுந்தந்தையுந் தஞ்சமுந்தெய்வமும்
நீயென்றென்று நினைந்திருந்தோமெனச்
சேயும்வேந்துந் திருவுமமைச்சனும்
போயுன்பாதம் புகலெனப்பூண்டனர் (உ௫)

வசனம்.

கேளுந்தர்மபுத்திராதியரோ அரிச்சந்திரமகாராசனும் சந்திரமதியும் லோகிதாசனும் மந்திரியானசத்தியகீர்த்தியும் விசுவாமித்ரருடைய பாதத்தில் சரணாகதியடைந்துதாயுந்தந்தையும் தெய்வமும் அடைக்கலங் காப்பவனும் நீயேயென்று பின்னையுஞ் சொல்லத்துடங்குவதுகாண்க,

௪௫-தரு-இ-ம்-அசாவேரி அடதாளம்.

பல்லவி.

கருணாகரக்கடவுள்நீயையா-அடைக் கண்ணருள்கூர்ந்தெமைக்காவா

அநுபல்லவி, (யா

அருணம்புயப்பதம் தொழுவோமேயும
அடைக்கலமெனுஞ்சொல்லை வழுவோமே ஐயா (கரு)

சரணங்கள்

௧, உண்மையெல்லாதெங்கட் குயர்துணையார்சொல்வீர்
உத்தமனேயிந்த ஊழிவினையைக்கொல்வீர்
இம்மைக்குமறுமைக்கு மிடரும்பகையைக்கெல்வீர்
இனகுலத்தரசர்கட் கிடுக்கண்வாராமல்வெல்வீர்
அம்மைக்குசிலைகுத லுயவதரித்திரோ
அருமறைப்பொருட்களா ராய்ந்தநுசரித்திரோ (கருணா

௨- அந்நாளினிலேயும தருந்தவத்தாலெமை
யாண்டத்திரிசங்குமன்னன்- அடைந்ததில்லையோநன்மை
இந்நாளினிலும திணையடிதொழுமெமை
ஈடேற்றவோவுமக் கெடுக்கொணாத்தலைச்சுமை
எந்நாளினிலுஞ்சாப மேலாமலருள்செய்வீர்
எமனைவலர்கட்கெலமைஇறைகொடுத்திடாதுய்வீர் (கரு)
௩. ஊழ்வினைப்பயனா லுமதுபகையடுத்தோம்
உலகிலெவர்களுக்கும் உறவெனப்பேரெடுத்தோம்
வாழியென்றென்னாளும்நீர் வாழ்த்தஉடம்பெடுத்தோம்
வாதுக்குச்சண்டைக்குவந்தீர்தாழ்ந்துகொடுத்தோம்
பாழிலெங்களைக்கூற்றன் பற்றியிழுத்திடாமல்
பாவிகளுறைநரகோர் பார்த்துக்கொழுத்திடாமல் (கரு)

பொது,விருத்தம்.

வேந்தனுடன்மந்திரியும் மகனுங்கொண்ட
விரகிசந்திரமதியுமிவை விளப்புங்காலை
நேர்ந்தபடிமுறமுறத்து மிகவெகுண்டு
நெஞ்சிலணுவளவுமிதம் நினைந்திடாமல்
சாத்தணியும்நுதலரிச் சந்திரன்றன்னைச்
சள்ளைமிகச்செயக்கருதிச் சகலருக்கும்
பாந்தமிலாமொழிகளினால் விசுவாமித்திரன்
பகருவான்கடுகடுத்து நகருவானே (௨௬)

வசனம்,

கேளுந்தருமபுத்திராதிகளே அந்த அரிச்சந்திரமகாராசனும்.மைந்தனும்,மந்திரியும்,சந்திரமதியும், அனேகவிதமா யுபசாரஞ்சொல்ல அவர்களைமறுத்துமனதுக்குத் தோற்றியபடி பற்களை நெறநெறென்றுகடித்து கோபாக்கினியினாலே திக்குத்திசையாவுந்தீய்ந்துபோகும்படிக்கு திருகுமருகாய்ப்பார்த்து இன்னமனேகமா யரிச்சந்திரமகாராசனை மிகவும் இம்சிக்கக்கோரி பூமியில்ளவர்களுக்கும் சகிக்கப்படாதவசனங்களை விசுவாமித்திர மகாமுனிவர் சொல்லத்தொடங்குவதுகாண்க.

௰௬-தரு-இ-ம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்

பல்லவி,

உன்னைப்போலயிவ்வூரே மூலகாளரிச்சமர்த்தன்
ஒருவனுமில்லைகண்டாய்

அநுபல்லவி

என்னைப்போல்முனிநாற்பத் தெண்ணாயிரவரையும்
ஏய்த்தமூளையுமிஞ்சவாய்த்ததென்பாயேமிண்டா (உன்னை)

சரணங்கள்

௧: மண்டலந்தன்னிலேநீகொண்டகாதலிசந்திர
மதிகள்ளக் குறசீலி
மாதவர்க்குமவள்தன்முகம்பார்க்கமனங்குன்றும்
மசித்தாலு மிகச்சோலி
விண்டலந்தனைவிட்டுத் தாய்வயிற்றில்வரையில்
விளங்குமே யிவள்தாலி
வேதமாலிசனுக்கும் வெளியானபாக்கியசாலி
வேறேயுண்டோவுலகில் விரும்பும்பாணுகூலி (உன்)
௨, மெத்தத்தவஞ்செய்துநீ பெற்றபிள்ளையியல்போ
மேருவிலும்பிர சித்தம்
மேவுதல்செய்திடவோரத்தக்கண்ணென்றபோதும்
மின்னுமுனக்கு நித்தம்
உத்தமனிவனுக்கொருத்தன் பிறந்ததாலே
வுள்ளமகிழ்வாய் சற்றம்
ஒருக்காலும்நியாயோ யிவனதுபரிசுத்தம்
ஒருவர்க்குங்கிடைக்காது மலைக்காதேயுந்தன்சித்தம் (உன்)
௩, தந்தைதாய்தமர்சுற்றம் தெய்வமும்நீயென்றென்னைத்
தழுவுவதென்ன சூதோ
தந்திரத்திலும்மணி மந்திரத்திலுமாங்காய்
தனையில்வீழ்வ திப்போதோ
சிந்தைத்துயரால்மிக நொந்தவர்கள்போலெனச்
சீறுவதென்ன வாதோ
சித்தமகிழ்வாயந்தச் சீமாட்டிகளோசாது
சீருடனேநீமணஞ்செய்துகொள்வாயிப்போது (உன்)

புராணவிருத்தம்,

கண்ணைவேண்டினுமீகுவன்காக்கின்ற
மண்ணைவேண்டினும்வாழ்வுடனீகுவன்
பண்ணைவேண்டியசெஞ்சொற்பறைகுலப்
பெண்ணைவேண்டிலன்யானெனப்பேசினான் (௨௭)

வசனம்,

கேளும்தருமபுத்திராதிகளேதன்னுடையகண்களைக்கேட்டாலும் ஆளப்பட்ட பூமியைக்கேட்டாலும் கொடுப்பேனேயல்லாமல் பரதசாஸ்திரமறிந்து இனிமையான சொற்களைப்பேசும் நீசகுலப்பெண்களைப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொள்ள மாட்டேனென்றான் அரிச்சந்திரமகாராசன்.

பொது விருத்தம்,

மருவுதாடும் வளநகரும்பெருந்
திருவமிகுவ னென்றனைச்செல்வியோய்
தருவனென்ற மொழிதவறுமனுன்
அரசளிக்கி னமையுமெனச்சொன்னான் (௨௮)

வசனம்,

கேளுந்தருமபுத்திராதியரே நீயாளப்பட்ட நாடுநகர் ஆனை சேனை பண்டுபண்டாராதி சகலைஸ்வர்யங்களையும் தந்திடுவேன் என்றுசொன்னாயல்லவோ உன்னுடையபெண்டுபிள்ளைகள் ஒழியமற்றயாவற்றும் என்னுதாகத்தாரைவார்த்துக்கொடுப்பினாய் அரிச்சந்திரனே.

பெது விருத்தம்,

எழில்விசுவாமித்திரனிந்த வண்ணஞ்சொன்னான்
இரவிகுலத்தரிச்சந்திரனியற்கையான
தொழிலிதுவேயென்மனத்துள்துன்பகன்று
தோகைசந்திரமதியையாற் பொய்கைதன்னில்
வழிநீரைமொண்டுவந்து வார்க்கச்சொன்னான்
வனிதையுந்தன்கணவனுரை வழுவிடாமல்
மொழிதவறுதிருத்தலொன்றே வேண்டுமென்று
மோர்க்கின்றான்நீரெடுத்துவார்க்கின்றானே (௨௯)

வசனம்,

இந்தப்பிரகாரமாய் விசுவாமித்திரர் கேட்டவுடனே அரிச்சந்திரமகாராசன் மனந்தெளிந்து தனது தர்மபத்தினியான சந்திரமதியைநோக்கி உன்கையினால் சலம்வார்க்கவும் நான்தத்தஞ்செய்யவும் தகைமையானதால் பொய்கையில்போய் சலங் கொண்டுவந்தால் உதகதாராபூர்வமாய்த்தத்தஞ்செய்வேனென்ற கணவன்மனங்கோணாமல் சத்ய தர்மந் தவறுதொன்றே வேண்டுமென்றுப் பொய்கைநீரைமொண்டுவந்து சகலபரிவாரங்களையும் விசுவாமித்திரருக்குத் தத்தஞ்செய்வதுகாண்க,

௰௭-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்,

பல்லவி.

விசுவாமித்திரமுனியே, எனைரட்சிக்கவிரும்பிவந்திரோதனியே

அநுபல்லவி.

விசுவாசமாகயிந்த வேளையெந்தனுக்கருள்
வீரென்பதையென்சொல் வினிலுமட்கிலேனே
நகுவராமன்யிந்த நாட்டின்வளப்பம்யாவும்
நான்தாரைவார்த்தேனுய்வீர்நன்மைகிடைக்கச்செய்வீர் ()

சரணங்கள்,

௧, ஆண்டிடும்பூமியும் அயோத்திமாநகரும்
ஆனைகுதிரைப்படை அணிவகுப்புப்ராணுவும்
வேண்டிடும்தற்பரியும் விளங்கும்கொடிப்படையும்
வெற்றிமிகுக்குடையும் விரும்பியசொல்நடையும்
தாண்டிடுந்திரர்களுந் தாய்ஆர்க்கைதந்ததேரும்
தனதாயமுமேழைகள் தங்குந்திருவாசலும் (விசுவா)
௨, சீராளமாகச்சித்ர மெழுதியமடங்களும்
ஏகாந்தமாயோசனைக் கேகுவவ்விடங்களும்
தாராளமாயெவரும் தங்குமாமடங்களும்
தையலர்விளையாடத் தாவுமவ்விடங்களும்
காராளர்தொழில்செய்து களிகூறுமிடங்களும்
கணக்கில்லாமற்கப்பணங் கட்டுமவ்விடங்களும் (வி)
௩. நாடகச்சாலையும் நறுமணச்சோலையும்
நன்னீர்தருஞ்சாயு நதிவருஞ்சாலையும்
பாடசாலையும் பரித்திரள்சாலையும்
பள்ளியோதுஞ்சாலையும் பந்திவைக்குஞ்சாலையும்
ஆடகச்சாலையும் ஆரணச்சாலையும்
அரும்பாகசாலையும் அரசாட்சிசாலையும் (விசு)

பொது விருத்தம்.

என்றுமன்ன னியம்பியிளைத்தநீர்
அன்றுகௌசிக னங்கையிலேற்றபின்
நின்றமாதவர் தங்களைநேர்குறித்
தின்றுநீரெழுந் தார்த்திடுமென்றனன் (௩௰)

வசனம்.

கேளுந்தருமபுத்திராதியரே இந்தப்பிரகாரமாய் தாரைவார்த்துக்கொடுத்தபோது கைக்கொண்டகௌசிகன் தன்னுடன்கூடவந்தமாமுனிவர்களைக்கூவி நீங்கள்யாவருமானந்தங்கொண்டாடுங்களென்றபோது அவர்கள் தாங்களடைந்தமனங்களிப்பினால் திருக்கூத்தாடத்தொடங்குவதுகாண்க

௧·ஆனந்தக்களிப்பு-நாதநாமக்கிரியை ஆதிதாளம்

முனிவர்களானந்தங்கொண்டார்-அந்த
முன்னவனானகமுழுதுங்கைக்கொண்டார் (முனி)
௧, கோசிகமுனிவனை வாழ்த்தி-அந்தக்
கோமனரிச்சந்திரன்கொடிதனைத்தாழ்த்தி
ஆசிகள்சொன்னாரயோத்தி வீதி
அடங்கலும்பூரணக்கும்பங்கள் சாத்தி (முனிவ

௨, வாரணமுப்பரிதேரும் உள்ள
வரிசையும்பரிசையும் உளமுந்தலமும்
ஆரணமோதுவோர்சீரும் முனிக்
காகினவெனப்பறையறைந்தா ரூர்தோறும்(முனிவ)
௩, விரிசடையோர்தலைப்பட்டார் வேத
விதிகளினூலோவிருப்பங்கொண் டிட்டற்
புரிசடைகளைவிரித்திட்டார் அந்தப்
புண்ணியமாதவர்புகழ்ச்சிபெற் றிட்டார்(முனிவ)

பொது-விருத்தம்,

மன்னனைச்சந்திரமதியினையின்றமைந்தனைக்கோசிகன்மறித்து
இன்னலையின்னயிடத்திருக்கிதனையிந்நெறியாளுதியென்றும்
என்னடைக்கலத்திலிருந்திடுவோர்களெவரையு மெனக்கொப்புவி
உன்னடையாளவாழிபுமளித்து ஓடுவாய்கூடுவாயென்றான் [த்து

வசனம்.

அப்போவிசுவாமித்திரமகாமுனியானவர் அரிச்சந்திரனையும், சந்திரமதியையும், லோகிதாசனையும், வழிமறித்துக்கொண்டு தனக்குதாரைவார்த்துக் கொடுத்ததையும் தானாளப்பட்ட பட்டணத்திலுள்ள ஜெனங்களையும் தனக்கு ஒப்புவிப்பாயென்றும் ஆளுகைக்குத்தகுந்த முத்திரைமோதிரமுங் கொடுத்தபிற்பாடு அயோத்தியாபுரியை விட்டுப் போவாயென்றபோது நடப்பது காண்க,

அரிச்சந்திரன்சொல் விருத்தம்,

வண்ணமாமயிலேசந்திர மதியெனும்பெண்ணேகேளாய்
எண்ணமுங்கலங்கவொண்ணு தெத்திறவருமையாகிற்
கண்ணகமகிழ்வதெல்லாற் கருத்தினிலிருத்தொணாது
திண்ணமேபுகல்வோமென்றுந் தினகரொய்திடாமே ௬௨)

வசனம்-

மயிலினுக்கொப்பான சந்திரமதியே உன்னுடைய எண்ணங்கலங்காமல் எப்பேர்ப்பட்ட துன்பமாயினும் கண்ணாரக்கண்டுகளிப்பதல்லாது கருத்தில்வைத்துக்கொண்டு விசனப்படுவது க்ரமமல்லசத்தியத்தையே நிலை நிறுத்துவோமேயானால் சொர்க்கலோகஞ்சேரலாம்பெண்ணே அயோத்திக்குப்போவோம் வாருங்கண்ணே,

---

௰௮·தரு-இ-ம்-சகண· அடதாளம்

கண்ணிகள்,

சந்திரமதி

௧, நடந்திடுமன்னவா-மிக-நல்லபுத்திசொன்னவா-முன்னே
நடந்திடுமன்னவா
அடைந்திடுமரண் மனைவெகுதொலை - ஆகையால்மெத்த
வேகமதாகவே (நடந்திடு)

இராஜன்,

௨, மடந்தைமாமயிலே-சந்திர-மதியெனுங்குயிலே- செல்வ
மடந்தைமாமயிலே
தடந்தப்பாமல்தவசியருடன்
தனயனைக்கூட்டிதனைவழிநட (மடந்தைமாமயிலே)

சந்திரமதி

௩, மெத்தவும்நீர்மெலிந்தீர்-தேகம்-சுத்தமதாய்நலிந்தீர்மன்னா
மெத்தவும்நீர்மெலிந்தீர்
உத்தமனேயிந்த ஒத்தையடிதனில்
வைத்தடிதன்னைப் பெயர்த்தடிவையாமல (நடந்திடும்)

இராசன்

௪, கோசிகமாமுனிவர் மிக-நேசமதாய்ப்பொருளைபெண்ணே
கோசிகமாமுனிவர்
வாசியாகநம்மை யடுத்துவாங்கவந்த
யோகினைகண்டிட ஆசையொழிந்திடும் (மடந்தைமா)

பொது-விருத்தம்.

மங்கையுமன்னனுமகனுமுன்னடக்க
மந்திரியும்மாமுனியும் பின்னடந்தார்
பங்கயப்பொற்பதம் போற்றும்பரிவினோரும்
பாரிலுள்ளபற்பலரும்ப்ரமிப்படைந்து
செங்கையிரண்டையும்வீசிநடந்தாரானை
சேனைசதுரங்கதளஞ்சிறந்துமீள
அங்கெவரும்சாகேதமடைந்தபோது
அரிவிப்பானரிச்சந்திரன் தெரிவிப்பானே (௫௩)

வசனம்:

சந்திரமதியும் ராசனும்லோகிதகுமாரனும் முன்னேநடக்க மந்திரியான சத்தியகீர்த்தியும் விசுவாமித்திரமகாமுனீசுவரரும்பின்னேநடந்தார்கள் அரசனடிபணிந்து ஆதரனைபெறும் மனுஷியாளும் அண்டியிருக்கிறஏழைகளும் பலதரமான நாநாதேச ஜனங்களும்திகைத்து கைகளைவீசிக்கொண்டு நடந்துவந்து அயோ

த்தியாபுரஞ்சேர்ந்தபோது அரிச்சந்திரமகாராஜன் யாவருமறிய எவர்களுக்கும் தெரியப்படுத்துவதுகாண்க

௰௯-தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்

கண்ணிகள்,

க, நகரிச்செனங்களே நான்-விசுவாமித்திரருக்கு
நாடெல்லாந் தாரைவார்த்தேன்
சிகரியானைபரி சேனைகாவலாண்ட
சீமையை தாரைவார்த்தேன்
உ, ஆண்டிடுமுத்திரை யமர்ந்திடுஞ்செங்கோலு
மாழியுந்தாரைவார்த்தேன்
வேண்டிவிரிந்த விசுவாமித்திரர்பாதம்
வெற்றி மிகுத்தவரோ
௩, வேதாகமங்கள் புராணங்களோதி
விளக்கிய வேதியரோ
சூதாகவாயினால் சொல்லேனொருக்காலும்
சுருதிகள் கற்றவரோ
௪, வெற்றிமிகுத்து விளங்கியிந்நாடாளும்
க்ஷத்திரிய ராசர்களே
புத்திமிகுத்துப் பொருள்கள்விளைவிக்கும்
புகழூவ வர்த்தகரோ
௫, நாட்டிலுள நஞ்சை புஞ்சைபயிரிடும்
நலமுள சூத்திரரோ
பாட்டில்மிகுத்துப் பயிர்களைச்செழுப்பிக்கும்
பள்ளப் பறையர்களே

இராசன்குடிகளுக்குச்சொல்-விருத்தம்

நாற்றிசைதன்னிலுள்ள நாடெல்லாமுனிவனாலாப்
போற்றியேதாரைவார்த்தேன் பொற்புளபுனிதர்பாதம்
ஏற்றியேதுதித்திறைஞ்சி யெனைத்தொழுதிருந்தநீர்ளை
சாற்றியபணிகள்செய்து சகத்தினில்வாழ்ந்திடீரே (௫௪)

வசனம்,

அகோவாருங்கள் பிர்மக்ஷத்திரியவைசியசூத்திரபள்ளப் பறையர்முதலான சமஸ்தமானவர்களே நானாண்டராச்சியமும் அதைச்சேர்ந்த நாடுகளும் அதுகளிலுள்ள ஆனைசேனை பண்டிடண்டாரமுதலானதுகளையும் விசுவாமித்திர முனிவருக்கு தாரதத்தம் செய்துவிட்டபடியால் யாவரும் எனக்குச்செய்தபரிபாலனையிலும் அதிகமாய்நடந்து அவருக்குப் பாதபூசை பண்ணுங்கள்நகரத்திலுள்ளவர்களே,

---

12

விருத்தம்,

துணியுந்தனிநெஞ்சுடையாய்நினதுதோண்மாலை
மணியும்வளையும் வலயங்களுநின்வடிவாளும்
அணியும்முடியுஞ்சேயுந்தாயுமணியும்பொற்
பணியுங்கழலுந்தந்தேகென்றுபலசொன்னான் (௫௫)

வசனம்

துணிந்தநெஞ்சுடையவனே உன்னுடைய தோளிலிருக்கும் அல்லியின்மணிமாலையும் முத்துமாலையும் வளையல்களும் வல்லயங்களும் உடைவாளையும் உன்னுடையகிரீடத்தையும் பெண்சாதியும்பிள்ளையும் அணிந்திருக்கப்பட்ட ஆபரணங்களும் பாதச்சிலம்புகளும் கொடுத்துவிட்டுப்போவென்றார் விசவாமித்திரர்,

விருத்தம்.

எத்துக்கிலவையென் றனிமாமுடியும்வடிவாளும்
புத்திப்புதல்வன் பூணும்பணியும்புனைமாதின்
பத்திக்கிரணப்பணியுங்கனகப் பணியும்வெண்
முத்திற்பணியுங்கழிபாமுனிவன் முனமுய்த்தான் (௫௬)

வசனம்.

இதுகளெல்லாமென்னத்துக்கு இதுவரையில் அணிந்திருந்துசந்தோஷப்பட்டபோதும் இனிசத்தியம் ஒன்றேநமக்கு நன்மையென்றுநினைத்து தானணிந்திருந்தபூஷணங்களும் மைந்தன் பூண்டிருந்த ஆபரணங்களும்பெண்சாதிதரித்திருந்த பூஷணாவளிகளும்எடுத்து விசுவாமித்திரருக்குக்கொடுத்துத் துதித்து இன்னமும்பொறுமைசொல்லத் தொடங்குவதுகாண்க

௨௰-தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்

பல்லவி.

முனிவரேமனம்விள்ளுவீர்-டணிதிகள்-முழுவதுங் கைக்கொள்ளு (வீர்

அநுபல்லவி.

தனிவழிபோகையிற் றயங்குவோமயங்குவோம்
இனியவாரருள்செய்தீர் ஏதுங்குறைவில்லாமல் (முனி)

சரணங்கள்.

க, மன்னர்மன்னர்சூடிய மணிமுடியை
மாதவா சூடிக்கொள்ளுவீர்
வன்னவன்னமணிகள் பதித்திட்ட
வண்மைத்தொடுகள் கைக்கொள்வீர்
சன்னஸரப்பளியும் சொர்ணபுஜகீர்த்தியும்
சந்திரஆரமும்பிடி சரங்களுங்கைக்கொண்டு (முனி)

௨; நாககங்கணங்கைக்கொள்வீர் மார்பிலிலங்கும்
நவரத்தினப்பதக்கங் கொள்வீர்
போகனமாலைகள்கொள்வீர் கழுத்திலுள்ள
முத்துமாலைகள் கொள்வீர்
யோகன்னவபோக னுமைப்போலிலைகண்டீர்
ஏகனேகர்த்திக் கிசைந்தமனப்பாலுண்டீர் (முனி
௩, பாதச்சிலம்புகொள்வீர் பெண்களணியும்
பாடகந்தண்டை கொள்வீர்
மோதமாயாமணிந்த கற்கட்டு
மோதிரங்கள்கைக் கொள்வீர்
வேதன்மாலீசனும் விண்ணோரும்மண்ணோரும்
போதமாயுந்தனைப் புவியிற்றினம்புகழ (முனி)

பொதுவிருத்தம்

வள்ளலன்சென்னிமிசை வகித்திருந்த
வலியநவமணி முடியும்வளமிகுத்த
பிள்ளையின்றன்மெய்திகழ்ந்த பணிகள்யாவும்
பிசகில்லாதணுவளவும் பெயர்த்தபின்பு
கள்ளமனமொழிந்த சந்திரமதியாளென்னுங்
கன்னியினற்பணிதியெலாங் கவுசிகற்கு
உள்ளளவுங்கபடமிழிந் தெடுத்தளித்து
எடுமென்றுன்போகவிட்ட கொடுமென்றனே (௩௭)

வசனம்

அசோகேளுங்கள் குருகுலமன்னர்களே அந்த அரிச்சந்திரமகாராசன் றரித்திருந்த திருமுடிமுதலான சகல பூஷணங்களும் இராஜகுமாரனது சர்வாபரணங்களும் கிஞ்சிற்றாவது கபடமில்லாதமனதையுடைய சந்திரமதியினது பூஷணாவணிகளையுங் களைந்து விசுவாமித்திரர் முன்பாகவைத்து நமஸ்கரித்துஉத்தரவுகேட்பதுகாண்க,

௨௧-இராசன்-விசுவாமித்திரருக்குச்சொல்

தரு-இ:ம்-மத்தியமாவதி-அடதாளம்,

பல்லவி.

விடைகொடுத்தருள்வீரோ-வேறுநாடேக-விசுவாமித்திரமுனிவரே

அனுபல்லவி.

தடையேதுமுண்டோயாந் தங்கியிங்கிருந்தியக்
கடைப்படாதெங்கள்மேற் கடுஞ்சினமாறநீர் (விடை)

சரணங்கள்

௧, மாமணிமுடி சூடுவீர்·உமதுதிரு
மாதவந்தனை நாடுவீர்

93

கோமகனெனக் கூடுவீர்சத்தியத்திற்செங்
கோன்முறைதனைத் தேடுவீர்
பூமகள்தன்பனும் நாமகள்கொழுனனும்
ஈமத்தரடியும்வானோ ரெவர்களும்களிகூற (விடை)
௨ படைகளைப் பாதுகாப்பீர்-மிகப்புகழ்
படைத்தவீரர்களைச் சேர்ப்பீர்
அடுத்தவிதிக்குத் தீர்ப்பீர் அவனியி
லெருதிக்குக்கஞ்சி வார்ப்பீர்
படைத்தோனெழுத்தின் படியல்லாதின்றதை
உடைத்தோரெவர்களுண் டுளமகிழ்ந்தெங்கட்கு (விடை)
௩ வேதியர்களை யடுப்பீர்·அவர்கட்கு
வேண்டும்பொருள் கொடுப்பீர்
ஆதிராட்பகை விடுப்பீர் எதிர்த்திடும்
அரசர்மேற் கணைதொடுப்பீர்
நீதிதவறுத நெறியுடனரசாள்வீர்
கோதிலாமாதவக் கோசிகனேதாள்வீர் (விடை)

பொதுவிருத்தம்.

விடையருளிப்போவென்ற விசுவாமித்திரன்
வெடவெடத்துக் கடுகடுத்துமுறுமுறுத்து
தடைதடையங்கிருவொருசொற் தப்பிப்போனேன்
தரணிதனிலாண்ட சதுரங்கசேனைப்
படைதனையுங்குடைதனையுந் துறந்தபேர்க்குப்
பட்டுப்பீதாம்பரமேன் பார்ப்போரில்லை
அடைந்தவெனக்கதையுமளித் திந்தக்கந்தை
யதையணிவாய்வழிநடக்கத்துணிவாயென்றான் ௩௮

வசனம்,

இந்தப்பிரகாரமாய்ப் போய்வாருங்களென்றுரைத்தவிசுவாமித்திரர் மறுபடியும் காலாக்கினிபோற் சீறி போகாதேபோகாதேஇருஇரு ஒருசொற்றப்பிப்போனேன் இங்குவா நீங்களாண்டனுபவித்தயாவையுந் தத்தஞ்செய்த உங்களுக்குப் பட்டுப்பீதாம்பரமேன் அதையும் உரிந்துகொடுத்து இந்தக்கந்தைகளைக் கட்டிக்கொண்டுபோங்களென் றுரைத்தபின் நடப்பதுகாண்க

இதுவுமது,

வள்ளலன்முன்மாமுனிவனிந்தவாறு
வழுத்துதல்கண்டகங்களித்துத் தனதுதூசும்
கள்ளவிழுமலர்க்கூந்தற் சிறந்துலாவும்
காரிழைசந்திரமதியா ளணித்ததூசும்

உள்ளமதிற்சத்தியமேமிகக்கொண்டாடும்
ஓங்குபுகழ்குமாரனது தாசம்நீற்றுத்
தன்ளப்போகாதிலைக்கொள்ளுமென்று
தாண்டுவான்மலர்ப்பதத்தைவேண்டுவானே (௩௯)

வசனம்.

இவ்விதமாயரசன் முன்னுரைத்தமுனிவரது பாதத்தைபோற்றிசெய்து தானுடுத்த உடுப்பையும் லோகிதாச னுடுப்பையும் சந்திரமதியினுடுப்பையும் அவிழ்த்துக்கொடுத்து உத்திரவுகேட்பதுகாண்க

௨௨-இராசன்சொல்-தரு.இ-ம்-வராளி-அடதாளம்

பல்லவி,

உத்தாரந்தாருமையா எங்கட்கினி யுத்தாரந்தாருமையா

அநுபல்லவி,

சித்தாளர்நீரித்தச் செல்வமெல்லாம்ஆள்வீர்
அத்தாஉமதிணை யடிதொழுதோமீள்வீர் (உத்)

சரணங்கள்,

௧, சந்திரகாந்தந்தைப் போல் நானணிந்திடும்
சரிகைச்சோமனும் சால்வையும்
சுந்திரமானபொன் னுருமானுடனங்கியும்
சோதிகரத்திலகுந் தூவாலையுங்கைக்கொண்டு (உத்தார)
௨, சுதனணி சிற்றாடையும் இடைதனில்
சோதிமணிக் கச்சையும்
விதனமில்லாதளித் தேன்விசுவாமித்திரரே
பதன்முடனேகப் பாங்குடனீரொமக் (குத்தார)
௩, சந்திரமதியணிந்த பசும்பொன்னின்
சரிகைச்சேலையுங் கைக்கொள்வீர்
அந்திரமானேமாகினு மாசிகள்மிகக்கூறி
தந்திரமாயின்னோர் தாரணிசேர்வாயென் (உத்தார)

பொதுவிருத்தம்-

பணிந்தவரிச்சந்திரனைமுனிவன்சீறிப்
பார்வையிலேகனற்பொறிகள்பரபரக்கத்
துணிந்தமனம்படைத்தனையேயினியென்னை
துன்பத்திற்காளகாயென்றுதூற்றி
அணிந்தநற்பொற்பணிதியுடனுடையீந்தாய்
ஆழிமுதற்பீலிவரையாவுமீந்தாய்
தணிந்தமெய்ச்சினமினிப்போவென்றுகூறித்
தாவினான்பூமாரிதூவினானே (௪௰)

வசனம்.

அகோகேளுந் தருமபுத்திராதியரே சரணாகதனை அரிச்சந்திரனைவிசுவாமித்திரமகாமுனிவன் மிதிபட்ட சர்ப்பம்போற் சீறிப்பார்க்கும்பார்வையிலே தாவாக்கினிபொறிபறக்க அரிச்சந்திரா உன்னுடையமனது மிகவுந்துணிந்தது இப்பேர்ப்பட்டமனதையுடையவன் என்னெல்லையிமிசைக்கெல்லாம்எதிர்நிற்கமாட்டாய்தரித்துக்கொண்டிருந்த ஆடையாபரணங்களையும் அணிந்திருந்தகணையாழிமுதல் காற்களிலணிந்தபீலி வரையிலும் தாரைவார்த்துப்போட்டாய்நானுங்கோபந்தணிந்தேன் இனிஎங்கேயாவதுபோவென்றார்விசுவாமித்திரமகாமுனிவர்;

பொது-விருத்தம்,

கோசிகமாமுனிவனிந்தக்கோலஞ்செய்தான்
குரிசிலரிச்சந்திரனுங்கொடுமையெண்ணு
மாசிலாச்சுதன்லோகிதாசன்முன்னும்
மானகிரோமணிச்சந்திரமதியாள்பின்னும்
ஊசிமுதலுப்பரிகைவரையிலந்த
உத்தமமாமுனிக்களித்தோமுகிதகார
ணுஇநகர்தனைநோக்கி நடப்போமென்றே
நகருவார்முகமலர்ந்துபகருவாரோ (௪௰)

வசனம்,

அகோகேளும் தருமபுத்திராதியரேவிசுவாமித்திரமகாமுனிவர்இவ்விதமாயுத்தாரங்கொடுத்தபின்பு அரிச்சந்திர மகாராசனும் ஈவித்துங் கபடமென்னுங் குற்றமற்றபுத்திரனாகிய லோகிதகுமாரனும் முன்னேசெல்ல ஸ்திரீரத்நமாகிய சந்திரமதியானவள் பின்னேசெல்லும்போது ஊசிமுதலானபலவித பண்டங்களையும், முனிசிரோஷ்டராகியவிசுவாமித்திரர்க்குக்கொடுத்து விட்டோமாகையால் காசிபட்டணத்தைநோக்கிப்போனால் க்ஷேமங்கிடைக்கும்போவோமென்றுஒருவருக்கொருவர் முகமலர்ந்து பேசிக்கொண்டு அடிமேலடியாக மெள்ளமெள்ள நகருவதுகாண்க,

தரு-இ-ம்-தனாசரி-அடதாளம்,

கண்ணிகள்,

(அரிச்) காசிதேசம்போவோம்வாராய் பெண்ணே வாராய்
கோசிகனமக்குச்செய் குணங்களைப்பாராய் (காசி)
(சந்திர) திருவருட்படிசெய்வேன்நாதா பிராண நாதா
மருவிபதிருவுள மகிழும்விநோதா (திருவருட்)
(அரிச்) மாமுனிவர்பாதத்தைப்போற்று மகிழ்ந்தேற்று
காமுகியேமைந்தன் களைதனையாற்று (மாமு)

(சந்திர) தாதிமார்க்கட்குரைத்துவாரேன் ஆக்ஞையீறேன்
சோதிகுலேந்திராவுந்தன் சொற்கெதிர்கூறேன் (தாதி)
(அரிச். மாமறையாளர்பதம்பணிவாய் மனந் துணிவாய்
தாமரைத்தார்ட்களுன் தலைமிசையணிவாய் (மாமு)
(சந்திர) வீதிவீதியாய்ப்பார்ப்போம்வாரீர் மனந்தேறீர்
நீதிச்சொற்றவறிடா நெறிதனைக்கோறீர் (வீதி)

பொது விருத்தம்,

போக்குவிட்டமாமுனிவனிவர்கள்நோக்கிப்
போவதுகண்டின்னமொரு புதுமைசெய்வோம்
வாக்குநமக்களித்ததுபே ரானைமீதோர்
வலியவனேறியெறிந்தகவண்போம் பொற்கள்
சாக்குச்சொல்லாதளிக்கச்சக்தியில்லைச்
சத்தியவார்த்தையைத்தவிழ்ப்பான்சதுரன்சொல்லை
நீக்குதற்குநற்றருணமிதுவேயென்று
நில்லென்றான் ஒருவசனஞ்சொல்லென்றானே (௪)

வசனம்,

இந்தப்பிரகாரமாய் போக்குவிட்ட விசுவாமித்திரர் இவர்கள் நோக்கிப்போகிற விசையைக்கண்டு இதைப்பார்க்கிலும் வேறொருஅலங்கோலஞ்செய்வதாவது நமக்கு முன்கொடுக்க வேண்டியஆனைமேற் கவண்போமுயரமுள்ளபொருட்களைக் கொடுக்க இப்போதுசக்தனல்ல பொய்சொல்லத் துணிவான் சத்யதர்மந்தவர்ந்திடும்என்கிற எண்ணமுற்றாநில்லுமென்று சொல்லத்துணிவதுகாண்க,

௨௪-தரு-இ-ம்-சௌராஷ்டிகம்-ஆதிதாளம்,

பல்லவி,

பொறுபொறுபின்னமொரு சேதிசொல்லஉண்டு போகாதேபுரவலனே

அநுபல்லவி.

அருவெறுப்புக்கொண்டுந்தன் ஆகம்நோகாதே
அவதிக்கென்செய்வேனென்று கோபங்கொள்ளாதே
மருவியதேவரும் மாதவருமிகழ
மதிமோசம்போனேனே விதிவசமானேனே (பொறு)

சரணங்கள்,

௧, அன்றனதடைக்கல மாகயிருந்திட்ட
ஆனைமீதெறிக்கவ ணெழுந்ததூரம்
குன்றப்போரைநிகரக்-கொடுத்துப்போனபொருட்கள்
கோடிகோடி யுண்டதைக் கொடுத்திடுவாயிந்நேரம்

இன்றுமுதலாய்வேள்விக் கிசைந்துமாமுனிவர்கள்
எவர்களையுமழைக்க இமையோர்செங்கோல்தழைக்க
நின்றகங்குகங்காக நிறைந்தமறைகளோத
நிலைகுலையாவெண்டிசை நிருபர்கட்கருள்மோதப் (பொ)
௨, வெற்றியில் மிகுத்திடும் வேந்தர்களுனைப்போல
விண்ணிலுமண்ணிலும் வீரரொருவரில்லை
புத்தியில்மந்திரி சத்தியகீர்த்தியைப்போல்
பூவுலகினில்வேறு புகழ்ச்சிபெற்றோரில்லை
சத்யரிச்சந்திரனெனச் சாற்றும்பேருக்கல்லால்
சகலருக்குமோசொல்லை சதுரனெனப்புல்ல
முத்திவழிக்கிசையும் முந்திரைபிசகில்லை
முதல்வனேயிநின்வழி முறையறிந்தாயில்லை (பொறு)
௩, ஒன்றுஇரண்டாபத்தா ஒருநூறுயிருநூறு
ஓராயிரமாநூறுயிரமா ஒருகோடியா
எண்ணுதபொன்னெவ்வள வெண்ணியபொன்னெவ்வள
எந்தசித்ரபுத்திரனு மெண்ணுமுடியாதே
தண்ணார்ந்தவுன்னெஞ்சந் தயங்கவேண்டாமெந்தன்
தனங்களைத்தந்தாலாச்ச தரோனென்றுலையேச்சு
புண்ணாகவேண்டாங்கை பூண்டபொருளேது
போய்விடுவீரென்றால் போதுமதேயனந்தம் (பொறு)

இராஜன்சொல்-விருத்தம்,

முன்னமுனகுடிச்சொன்னதிறத்தின்மொழிமாறி
அன்னதுகைக்கொண்டின்னிதந்தேறல்லேன்யான்
தன்னகரோடும்பொன்னுளமுற்றும்நனிதந்தேன்
இன்னமுனக்குப்பொன்றரவென்பாலிடமுண்டோ (௫)

வசனம்,

ஆதிகாலத்தில்உமக்குச்சொன்னசொல்லையும் இத்துடன்சேர்த்துஅதுவும்என்னுடையதகரும் தாரைவார்த்தேன்ல்லாமல் எனக்குடன்பட்டிருக்கிற நாடுநகரியானைசேனை பரிவாரமுதலானஉடுத்தவஸ்திர முதலானதுகளு முமக்குக்கொடுத்தபிறகு இன்னமும் என்னிடத்திலுமக்குத்தரும்படியான சொத்துக்களுண்டாசுவாமி,

விசுவாமித்திரர்சொல் விருத்தம்.

தாருடனேசெந்தாமரையாள்சேர்ந்தடமார்பா
யாருடனேயிம்மோச முரைப்பாயறிவில்லாய்
ஊருடனேமுன்கூறிய பொன்னுமுடனென்றே
நீருடனேநீபேசியளித்தநெறியுண்டோ, (௬)

வசனம்.

கிண்கிணிமாலையை யுடைய செந்தாமரையாளான மகாலட்சுமிக்கொப்பான சந்திரமதி வாசமாயிருக்கிற மார்பையுடைய வனே யாரிடத்திலே இப்பேர்ப்பட்ட மாறுபாடுசொல்லுகிறாய் புத்தியற்றவனே நீதாரைவார்க்குப்போது யான்உமக்குக்கொடுக்கப்பட்டஎன்னுடையநாடுநகருடனே இதுக்குமுன்நீர்என்னிடத்தில் ஒப்பித்திருக்கிறபொருட்களுமென்றசொல்லி தாரைவார்த்ததுண்டானால் சொல்லுவாய் அரிச்சந்திரமகாராசனே

பொது,விருத்தம்.

மொழிதவறாரிரவிகுலத்தரசனென்னும்
மொழிபுனிடத்திலையென்றமுனிவன்சொல்லப்
பழிசுமந்தாற்போனைந்துவீரங்குன்றிப்
பண்புடையமதிபடைத்தோய்பாதம்போற்றி
விழிநுதலோன் விதிஅரிகட்கிணையாயென்னை
விதியினாற்பொருளுளதோவிதியற்றேனே
வழிவிடுவாய்தவணையிட்டுவருக்கும்பொன்னை
வந்திடுவேன்தந்திடுவேன்வழுவேனென்றான். (௪௪)

வசனம்,

அகோசேனும் ஞானசிரோமணிகளே இந்தப்பிரகாரமாக வினவிய விசுவாமித்திரர் சூரியகுலத்திராசர்கள் சொற்றவறுவொன்பது உன்னிடத்தில்மாத்திரம் இல்லையென்று உதாசனிக்கக் கண்ட அரிச்சந்திர மகாராஜனானவன் பஞ்சமாபாதகஞ் செய்தவனைப் போற் பதைபதைத்து வீரியமழிந்து முனிவனைச் சரணடைந்து அரிஹரப்பிரம்மாதிகட்கும் ஸமமானதபோதனரே ஸர்வஸோபாரமும் இழந்த என்னை இன்னமும் இம்சித்தால் என்னிடத்தில் துகையேது ஆகிலும் இத்தனைநாளில் தருவதென்றுதவணையிட்டனுப்பினால் தந்துவிடுகிறேனென்று ஒப்புக்கொண்டுதவணைகேட்பது காண்க.

தரு-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

மன்னவன். (யா

௧, தவணைதந்தருள்வீரையா-மாமுனிவரே-தவணைதந்தருள் வீரை
அவனானையென்னை யதிக்குங்கடைகெய்தாய்
சுவணமுள்ளதுந்தாரேன் சொற்றவறுதலெய்தாய் (தவணை)

முனிவன், [பால்

௨, பொற்றடவரையினுக்கும்பூவோர்புகழும் - புண்யகாசிக்குமப்
நற்றடமாமயோத்தி நாடுநகருக்கப்பால்

நற்றவனேநடத்தால் நற்பொருட்கள்ரெட்டியாம்(பொற்ற)

இராஜன், [வோ

௩, இந்தவெல்லைகடக்கவோ-முனிவரோநான் - இதிலிருந்தாரநடக்க
இந்தவெல்லைகடவேன் இரட்டிப்புப்பொன்னுந்தாரேன்
முந்தவேநீருவார்த்த மொழியோரனந்தங்கோடி (இந்தவெ)

முனிவர்.

௪, தருவதுமாறிடிலோ-வதனுக்கொரு-சத்தியச்சொல்மொழிவாயே, வருவதணுவானாலும் வாய்மதமிகுமலோ
கருவமைத்ததேவர்க்கும் காணவொண்ணாதுகண்டாய் (தரு)

பொது விருத்தம்,

வேந்தனுடனிதகூறிவிசுவாமித்திரன்
விளங்குமுகமலர்ந்துவெகுவிசித்ரமாகச்
சாந்தணியுந்திருநுதலாளாம்நீகொண்ட
சந்த்ரமதியெனுமாதுமமள்வயிற்றிற்
சாந்தமுடன்வந்துதித்ததன்யனான
சதுரில்மிகுலோகிதனும்மூவர்நீங்கள்
பாந்தமுடனொருமித்தோர்சத்யவார்த்தை
பகர்வீரிவ்விடம்விட்டு நகர்வீரென்றான் (௪௫)

வசனம்,

இவ்விதமாகச்சொல்லி நீயும்உன்தர்மபத்தினியாகிய சந்திரமதியும் குலோத்தாரகனான உனது குமாரன்லோகிதாசனும்எவ்விதமாவது பிரமாணபூர்வகமாய்ச்சொன்னால் தவணையிடன்னுப்புவேனென்றவிசுவாமித்திரருக்கு அரிச்சந்திரமகாராஜனும் பிரமாணஞ்செய்வதுகாண்க

௨௯-தரு-இ-ம்-பிலகரி- சாபுதாளம்,

பல்லவி,

அடைந்தபதவிகளடையவோலமையா உமதாக்கினைதப்பினேனோ அ

அநுபல்லவி,

கடைந்தவெண்ணையில் மாலைவக்கலந்தவன்
காராம்பசுவின்பாலில் நீரைக்கலந்தவன்
உடைந்தமூடிகளை ஒட்டிமலிந்தவன்
உறுதிசொல்லியபின் னுள்ளம்நலிந்தவன் (அடை)

சரணங்கள்.

௧, நெஞ்சிலொருவினை நினைந்துகெடுத்தவன்
நீதிநெறியணுவளவும் விடுத்தவன்
அஞ்சினோரைமிக வல்லற்கொடுத்தவன்
அருந்திக்கிடுப்பிச்சை யதனைத்தடுத்தவன் (அடை)

உ, தூர்த்தனென்றுடம் பெடுத்துத்திரிந்தவன்
துணைவந்தடர்வனந் தன்னிற்பிரிந்தவன்
கார்த்தபேர்கட்கவ டங்கள்புரிந்தவன்
கரிழையர்கள்தன் கழுத்தையரிந்தவன் (அடை)
௩, உண்டவீட்டுக்கு ரண்டகஞ்செய்தவன்
ஒரிபோற்பெரி யோரைவைதவன்
அண்டர்களைப்பழித் தாபகமுய்தவன்
அருந்தவத்தோர்களை யம்பினாலெய்தவன் (அடை)

பொதுவிருத்தம்,

நலமுளனின்னெறிசொல்ல விசுவாமித்திரன்
நற்றினமோரிருபதுக்குட் பொருட்களெல்லாம்
குலமுறைதுங்கீர்த்திபெறத் தருவாயென்னக்
கொடுத்தகெடுவிருமடங்கிற் குறைந்துகாசித்
தலமுனையையடைவோமென் செய்வோமென்னத்
தவசியநற்கிருமடங்கு தவணைசொல்ல
நலமுடையோய்தூதுவரை யனுப்புமென்ற
நரபதிக்குமகபதியும் நவிலுவானே (௬௬)

வசனம்,

இந்தப்பிரகாரம்பிரமாணஞ்செய்த இராசனைப்பார்த்து இன்னம்இருபதுதினத்திற்குள் பொருட்களையெல்லாந் தரவேண்டுமென்ன இப்போது நீர்தந்தகெடுவிற்கிருமடங்கானபோதிலும்ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தின் எல்லையைக்காண்பதரிதாமென்றேங்க அப்படியேநாற்பதுநாள் தவணையிட்டுக்கொடுத்த முனிவனைப்பார்த்து தொகைகளைக் கைக்கொள்ளும்படியானதூதுவரை யனுப்புமென்ற அரிச்சந்திரமகாராஜனுக்குப்பாகாதிபதியான விசுவாமித்திரமகாமுனிவர்சொல்லுவதுகாண்க,

விருத்தம்.

பாரளித்தனைபுறக்கனின்பதியிடைசென்றால்
ஆரளித்தனரென்பார்நின் னடியவரெவரும்
ஊரளித்திடவுடன்வரத்துணிதியேதொழிபின்
சீரளித்ததேயெனக்குமன்னனைக்கெனுமொழிந்தான் (௬௭)

வசனம்,

அகோவாரும்பிள்ளா யரிச்சந்திரா நீகொடுத்த பூமியையுந்தனதானியாதி சமஸ்தபாக்கியங்களையும் நாம்கைக்கொள்ளப்போனால் உன்னுடைய ஆக்ஞையைச்செலுத்திவந்த ஒவ்வொருவேலைக்காரர்களும் உடன்படாமல் உனக்குயார் கொடுத்தார்களென்று வெதும்புவார்களாகையால் நீயும்எனனோடு அயோத்திக்குவந்து சாமாதிகாளனைவரையும் ஒப்புவித்துப்போ இல்லாவிட்டால் நீ

தந்ததெல்லாம் உன்னுடையதுதான் நீயே கைக்கொள்ளும் பிள்ளாய் என்றுசொன்னார் விசுவாமித்திரர்,

பொதுவிருத்தம்,

நன்றுநன்றுநீ நகரியிலெழுந்தருளுயேன்
இன்றுநின்பிறகெய்துவ னென்றினிதியம்பச்
சென்றுகோசிகன்றேர்மிசையேறினர்திரண்டு
நின்றமாதவர்கரியினும்பரியினுநிறைந்தார், (௬௮)

வசனம்.

நல்லதுநல்லது நீங்கள்சீக்கிரமாக அயோத்திக்கெழுந்தருளுங்கள் இதோஅடியேனுங்கூடத்தொடர்ந்து வருகிறேனென்ன விசுவாமித்திரமகாமுனிவரும்தேரிலேறிக்கொண்டனர் அவரைப்பின்பற்றியதபோதனர்களும் யானை குதிரையின்பேரிலேறிக்கொண்டு வரத்துடங்கிவருவதுகாண்க,

௨௭-தரு தொண்டிச்சிந்து சங்காபரணம் ஆதிதாளம்,

தானத்தோந் தானத்தந்தான தந்தோம்
தரனத்தத்தானத்தந் தானத்தந்தானே (தானத்)
க, அருந்தவத்தோரயோத்தியாள வந்தார்-மதித்த
யானைபரியல்லக்கேறி யானந்தமடைந்தார்
இருந்தநல்லோரெவர்களுங்கொண்டாடி யெல்லாம்
ஈரேழுலகாள்வோரியாமேயென் றெழுந்துகூடி
௨, கதிர்குலத்தோரெதர்க்குமிகு தீரன் இந்தக்
காசினியிற்கர்ணனிலும் கருணைமிகுதான்
முகிர்ந்தசத்யதர்மந்தனைக் காக்க நாளும்
முன்னவனரிச்சந்திரனை மூவுலகோர்க்க
௩, எத்தவத்தோருந்துதிக்குஞ் சித்ரன்-முனிவர்
எவர்களிலும்மிகுதவத்தோ னென்றும்விசுவாமித்ரன்
உத்தமர்தமைப்புகழ்ச் செய்வோன்-உள்ள
ஊழ்வினைதனையகற்றி உம்பர்களுய்வோன்
௪, அன்றுமாத்தஇந்திரன் பொழியாலே தேவ
ரனைவருந்திகைத்திட வடைந்தபழிபாலே
இன்றுசெங்கோலாளும்வகை கண்டு வேள்விக்
கேற்றசாமக்கிரிகையாவுஞ் சேகரித்துக்கொண்டு (அருந்த)

பொது விருத்தம்,

முனிவிசுவாமித்திரன்பொற்றேர்மீதேறி
முன்னடக்கப்பின்றொடர்ந்த முனிவரெல்லாம்
இனியகரிபரித்திரள் மீதேறிக்கொண்டார்
இணங்கிடமர்நவனையேயெழிலுயர்ந்த

தனிச்செங்கோலாண்டவனும் புதல்வனோடு
தையலும்பாரினில்நடந்து தத்தளிக்கப்
பனிமலர்மார்பனைத்தேர்மேற் காணுமாந்தர்
பதறுவார்மனஞ்சலித்துக் கதறுவாரே (௪௧)

வசனம்,

அகோகேளும்இராசர்களே அந்தவிசுவாமித்திரரானவர்பொன்னின்தேரிலேறிக்கொண்டு முன்னேநடக்கத்தொடங்கினதுகண்டு அவருடன்கூடிவந்த சகலமானவர்களும யானையின்மீதும்குதிரையின்மீதும் சிவிகையின்மீதும் நிறைந்தார்கள் அவர்கள்நடுவே சத்யதர்ம்மபாலகனை அரிச்சந்திரராஜனும் சந்திரமதியும்லோகிதாசனும் பாதசாரியாக நடந்துவரும்போது அயோத்திநகரினுள்ளயாவரும்அதிசயித்து அங்கங்குள்ளவர்கள அணியணியாக நின்று துயரப்படுவதுகாண்க,

உ௮-பட்டணத்தார்-பலருஞ்சொல்-தரு

இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்-

கண்ணிகள்,

க, தேரின்மீதேதினநாளும் தெருவிற்பவனிவரத்
தெரிசனஞ்செய்தோமென்பார் வெகுவீரர்
பாரின்மீதினில்பலர்ப் பாதங்களால்நடக்கப்
பதறுதென்செய்தோமென்பார் மிகுசூர
உ, ஐயோயிவர்கட்கிந்த அவதிவந்தெய்தலாமோ
ஆர்செய்தமோசமென்பார் வெகுவீரர்
வெய்யோன்குலத்துதித்த வேந்தரொவர்க்குமிந்த
விதிவந்தறியோமென்பார் மிகுசூரர்
௩ வனசமலர்க்கரங்கள்வாடயாங்கண்டதுண்டோ
வன்மைசெய்ததாரென்பார் வெகுவீர்
கனகமிக்கைக்கொண்ட கபடவஞ்சமுனிவன்
கற்பனையிதெல்லாமென்பார் மிகுசூரர்
௪, பவளமலைநிலாவின் பான்மையானமெய்சேரப்
பலித்ததெவராலென்பார் வெகுவீரர்
தவளத்தாமரைமலர் தாள்சரணடைந்தோர்க்குத்
தக்ககெதியென்னென்பார் மிகுசூரர்
௫, முனிவர்சடைக்குமணி முடிபொறுக்குமோயென்ன
மோசகாலமீதென்பார் வெகுசூரர்
கனிவர்க்கங்கள்கிழங்கு காய்கள்புசிப்போர்க்கிந்தக்
கனகாசனமேனென்பார் மிகுசூரர்
௬, எங்கியேங்கித்தவிப்பார் இளவரசையுந்தாயும்
எந்திக்கலைகிடுவார் வெகுமாதர்

தாங்கித்தாங்கிமன்னவன் தத்தடியிடக்கண்டு
தாளாமல்மனஞ்சோர்வார் மிகுநீதர்
௭, அழுவாரழுது அடியிணைதனில்வீழ்ந்து
ஆண்டவனேகாவென்பார் வெகுமாதர்
தொழுவார்தொழுதெழுந்து துன்பம்வரக்காரணந்
துரிசாயுளாயுமென்பார் வெகுமாதர்
௮, மிகுபாவமென்னசெய்தோம் மெய்யவர்க்கிவ்விதிவா
மேதினிதனிலிலென்பார் வெகுமாதர்
வெகுகாமையாயிந்த விசுவாமித்திரமுனிவன்
வீம்பென்செய்தானோவென்பார் மிகுநீதர்

பொது விருத்தம்.

நகரிலுளாரவரவர்க்குத் தோன்றும்நீர்மை
நவிலையிலே நற்றவத்தோனேறிவந்த
திகிரிநிகர்த்தேரிறங்கி அரிச்சந்திரன்றன்
திவ்வியசபைசென்றரியாசனத்தின்மீது
பகறிடுதற்கரிதெனமாதவத்தோர்சூழ
பண்புடனேவீற்றிருக்கும்பான்மைகண்டு
திகரிலாவரசுதனைக்குரியயாவும்
நேர்விப்பான்முனிவன்மனந் தேர்விப்பானே (௪௨)

வசனம்,

இப்படியாகப்பட்டணத்துள்ளோர் யாவர்க்குந்தோன்றியபடியெல்லாஞ் சிந்திக்கும்போது விசுவாமித்திரரேறிவந்த பொன்னின்மலைக்கொப்பான தேரைவிட்டிறங்கிமுனிவர்கூட்டங்களுடன் அரிச்சந்திரமகாராஜனதுகொலுச்சபையேறிச் சொல்லுதற்கரியதபோதனர்களுடன் சிம்மாசனத்தி லமர்ந்திருக்க இராஜயகோசபுரங்களை ஒப்புக்கொடுப்பதுகாண்க

உ௯-திபிதை-தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்

கண்ணிகள்.

க, எந்தனுக்குமுன் னிருபத்தோராசர்கள்
எடுத்துவைத்தபொக்கிஷ மிதுவே-இதை
எற்றுக்கொண்டேமனந் தேற்றிக்கொள்வீரும்
திணையடியேகெதியா வதுவே
உ, உந்தனுக்கிணையான மாதவத்தோர்கள்வந்
துளமகிழ்ந்திருப்பிட மிதுவே-நல்ல
உத்தமரொவர்கட்கும் நித்தமன்னதானம்
உகந்துசெய்திடுமிட மிதுவே

என்னுளிற்றேடிய பொன்னனைத்தும்பூட்டி
யிருக்கின்றபேழைக ளிதுவே-என்றும்
ஏற்றமிகுகணக்குப் பார்த்துவிவரஞ்சொல்லி
எழுதியவரண்மனை யிதுவே
௪, முன்னுளிலொவ்வொரு மன்னமன்னவர்களும்
முனைந்துபூசிக்குமிட மிதுவே-ராச
முறைதவறுதராசாளுந்தேவிக்குபூசை
முனைந்துமுடிக்குமிட மிதுவே
௫, மாடமாளிகைத்திரு மஞ்சனசாலையும்
மடப்பள்ளிகளிருப்பு மிதுவே-ராஜர்
மக்தர்கள்கூடிமகிழ்ந்துநோம்புநூற்கும்
மாதவசாலையு மிதுவே
௬, பாடங்களோதிக்குருபத்திசெய்திடும்
பாங்கானமாடங்களு மிதுவே-எந்தப்
பாஷைகளும் ஓதிப் பண்பதியும்பெண்கள்
பரிவுடன்வருமிட மிதுவே
௭, முக்காலத்திலும்வேத முறையுடனனுஷ்டானம்
முடித்துவருமிடங்க ளிதுவே யிரு
முகுதையரவரவர் மணவாளர்தமக்கன்னம்
முகமலர்ந்திடுமிட மிதுவே
௮, இக்காலத்திலுங்குணசீலர் திருப்பள்ளிக்
கெழுமங்களவிலாச மிதுவே-யின்னம்
இங்கேயிருக்குஞ் சித்திரவிசித்திரங்கள்
இருக்குமிடங்க ளிவ்வளவே

பொது-விருத்தம்,

இவ்விதமாயுள்ளபொரு ளெல்லாமொப்பித்
திறையவனுமடிதொழுது யிறைஞ்சும்போது
கவ்வியமாமுனிவரனைக் கண்டோரெல்லாம்
கடுகடுத்துமிகவெறுத்துக்கடுஞ்சொற்சொல்லி
ஔவியமில்லாதவனே யென்றிறைஞ்சி
யாசனடிதொழுதழுதா ரவர்கடம்மை
திவ்வியசெங்கமலகரத் தெடுத்தமற்றித்
தேற்றுவாரவர்கள்கண் ணீ ராற்றுவானே (௫௧

வசனம்.

இப்படியாக ஸகலஸமஸ்தமும்ஒப்புக்கொடுத்துத்தநித்து நின்ற மன்னவனைப்பார்த்து அயோத்திநகரிலுள்ளயாவரும்முனிவரிடத்தில் வெருட்சியுற்று உதாசனித்து அனுவளவும் கொடுமை பற்றவனே என்று அரசனைத்தொடர்ந்து ஐயுறவுகொள்ளும்போது அவர்களைக் கையமர்த்திக்கண்ணீராற்றி மனந்தேற்றுவதுகாண்க.

௩௰-இராஜன்சொல்-தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்

பல்லவி.

இனியேனுங்களுக்கேன்விசாரம்-விசுவாமித்திரர்
இணையடிதொழுதாலிதுக்கிணையில்லை-உபசாரம்

அநுபல்லவி.

தனியேகாசிநகர்க்கிந்நேரம் தவசிகளாய்த்
தான்போயவ்விடந்தனிற் றங்குவதெங்கள்பாரம்(இனி

சரணங்கள்.

௧, காதிராஜன்குமாரனிவரோ கதிர்குலத்துக்
கரசனென்றந்தைக்குக் காட்சிதந்தவரோ
பாதியாணும்பெண்ணுமானவரோ இவரையிகப்
பாக்யவானிவர்க்கிணை பாரிலையென்பாரோ (இ)
௨, அரியதவத்தில்மிகுத்தவரோ இவருக்கிணை
அரசர்மக்களிலுண்டோ ஆராய்ந்துணருவீரோ
அரியயனுமகிழ்ந்திட்டாரோ இவர்பாதத்துக்
கன்புசெய்யாதமாந்தர் அமரருரைக்கிட்டாரோ(இனி
௩, இருடிகளின்மேலானோரிவரோ இனிப்பிறவி
எனுந்துன்பமதொழிக்கும்- எழிலெடுக்கச்செய்தனரோ
வருடியிவர்க்குத்தொண்டுசெய்வீர் என்றென்றைக்கும்
வண்மைசேரயோத்தியில் வாழ்ந்துங்கள்மனமுய்வீர்(இனி

பொது-விருத்தம்,

அரசனவர்க்கிவ்வண்ண முரைக்கக்கண்ட
அருந்தவவிசுவாமித்திரனேயோயிந்தக்
குரிசிலனேதருமத்திலுருவாய்வந்த
குவலயத்திலவதரித்தான்கொடுமைசெய்தே
பரிசனைத்தும்பறித்திவனைக்காட்டிலோட்டும்
பான்மைநமக்காகாதப்பகவன்செய்த
வரிசைதலைத்தடுத்திடுதற்கெதர்க்காமென்று
வாதிப்பான்முனிவனிது பேதிப்பானே (௬௨)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் அரிச்சந்திரமகாராஜனுனவன் பட்டணத்திலுள்ள ஸமஸ்தமானசனங்களையும் மனந்தேற்றக்கண்ட விசுவாமித்திரரானவர் பரிதாபமுற்றுஐயோஅரசன்தர்மசொரூபியாயவதரித்தான் நாமிவனைக் கொடுமைசெய்து சகல பொருள்களையும் அபகரித்துக்கொண்டு காட்டிலோட்டுவது நமக்கு தர்மமல்லவே வலிலும் ஈசுவராஜ்ஞைக்கு யாமென்னசெய்வதெனச் சிந்

சித்து மறுபடியும் நீதந்ததைவாங்கிக்கொள்ளுவாயென்றுபோதிக்கத்தொடங்குவதுகாண்க,

௯௧-தரு-இ-ம்-மத்தியமாவதி-திரிபுடைதாளம்

பல்லவி,

ஒருமனுக்கருவாயே-உத்தமாயிந்த-ஊராளவருவாயே

அநுபல்லவி

தருமமுனதேயாகும் தாணியோர்குறையேகும்
கருமங்கள்முடிவாகும் காட்சிக்கிடமுண்டாகும்(ஒரு)

சரணங்கள்.

௧, சின்னஞ்சிறுமதியேன் முன்னேநான்செய்த
செய்கையாவையுந் தள்ளுவாய்
முன்னமென்கையில்நீ-தந்தபொருட்கள்தன்னை
முழுமையுங்கைக் கொள்ளுவாய்
அன்னங்குயில்மயில்போல் அரம்பையூர்வசிகள்போல்
அன்றென்றவத்தில்வந்த அரிவையரைப்புணர்வாயிந்த -ஒரு
௨, முனிவனென்குறைதீர்ப்பாய்-அயோத்திநாட்டை
முழுவதும்நீ ஏர்ப்பாய்
இனிவருவதைப்பார்ப்பாய்-உனக்கிரக்கும்
இப்புவியோரைக் காப்பாய்
கனிவருமுன்னமது கல்லேறசெல்லுமிந்த
காரணம்யாவுமுந்தன் கருத்திலுணர்வாயிந்த ஒரு
௩, பக்கமிகப்படுவேனோ உனைவேறொரு
பாரினில் விடுவேனோ
மங்களங்கெடுவேனோ-விரகதாபம்
மங்கையருக் கிடுவேனோ
துங்கமன்னவாவுந்தன் தோளைச்சேரவிரும்பும்
தோகையரைமணந்து தொல்லுலகையாள்வாயிந்த(ஒரு)

பொது-விருத்தம்.

வேளையறிந்தெடுத்துரைத்த விசுவாமித்திரன்
வெற்றிமிகுபதமலரை வேந்தன்போற்றி
சூளைக்கூட்டங்களையான் மணம்புணரேன்
சொன்னபொருட்காள்விடுவீர் சுகமாயென்ன
நானேவரவிடுவேன்முன்னடநீயென்று
நவின்றிடுமாமுனிவனுக்கந் நகரிலுள்ள
ஆனையமைச்சரை யரிவையரைசேவிக்கும்
அனைவரையும்பிடித்திட்டான் கொடுத்திட்டானே (௫)

௰ம். இந்தப்பிரகாரமாய்ப்போதித்தவிசுவாமித்திரமகாமுனிவரதுபாதத்தில் தண்டனிட்டு அந்தவேசிக்கூட்டத்தின்பெண்களைக்கூடமாட்டேன்உமக்குக்கொடுக்கவேண்டிய பொருட்களுக்குத்தூதாள்விடுமென்ன நானேயத்தினம் தூதனுப்புகிறேன் நீமுன்னுநடப்பாயென்ன முனிவருக்கு நகரிலுள்ளயாவரையும் அடைக்கலங்கொடுப்பதுகாண்க,

௯௨-இராஜன் விசுவாமித்திருக்குச்சொல்

தரு-இ-ம்-அசாவேரி-திரிபுடைதாளம்,

பல்லவி,

அடைக்கலங்கடைக்கண்ணுற்பாரையா - இந்த
அமைச்சரெவர்களையுங் காரையா

அநுபல்லவி

உடைக்கொருநிமிஷம் உண்டாக்கவொருயுகம்
படைக்கவரிதாமிந்தப் பாரோரெவர்களையும் (அடை)

சரணங்கள்.

௧: சத்தியமுறையிலிவர் சற்றுங்களங்கமில்லார்
சதுர்மறையிலிவரைச் சகத்திலெவரும்வெல்லார்
நித்தியநேமநிஷ்டையில் நிபுணரிவர்களல்லார்
நீதிநெறிமுறையில்நிறைந்தோரொருபொய் சொல்லார்
அத்தியந்தமிவர்களா லடைந்தேன்மிகவுபோகம்
அனைவருக்குமுண்டிந்த அரசாளுமனுபோகம் (அடை)
௨, இராஜாதிராஜர்மெய்க்கும் ரணரங்கத்திலிவர்
இரகசியமறிந்துணர்ந்தோர் ரசிகர்கள்சுத்தவீரர்
ஆஜானபாகுபலர் அதிமதிமந்திரியிவர்
ஆசாரதர்மபாலர் அனைவர்க்குமனுகூலர்
பூஜாதுரந்தரர்கள் புவியினிலிந்திரஜாலர்
புஜபலபராக்ரமர் புகழும்பிரதானியிவர்(அடை
௩, விகடப்பிரசங்கரிவர் வில்வித்தைகளுணர்ந்தோர்
வெற்றிமிகுசேனையர்விதி விகிதமுரைப்போர்
அகடமிகச்செய்வோரை யடக்குந்தாளுதியர்
அச்வலட்சணங்களி லனைத்துமுணர்ந்தோரிவர்
சகடங்களின்முன்னின்று சாரத்யஞ்செய்வோரிவர்
சாமியுமக்கெல்லோரும் சரணாகதர்களாவர் (அடை)

பொதுவிருத்தம்,

குடைநிழற்பொலிகௌசிகனடியின்மேற்கொடியனே
ரிடையிளையுமகனையுமிறைஞ்சுவிற்றேத்தி
படையையநோக்கியெதிர்நின்றங்கையாலமர்த்தி
யிடையிதேயெனப்பணிந்தனன் வேந்தர்க்குவேந்தன் (௫௨

வசனம்-

அகோகேளுங்கள் பூபதிகளே பூச்சக்கிரக் குடையினிழலிலே வீற்றிருக்கின்ற விசுவாமித்திரருடைய பாதாரவிந்தங்களிலே மின்னற்கொடிபோன்ற இடையினையுடைய சந்திரமதியையும் புத்திரசிகாமணியாகிய லோகித குமாரனையுந் தண்டன் சமர்ப்பிவிக்கச்செய்து படைத்தலைவர்களைப்பார்த்து இனிநீங்களுங்களென்று தனதுகைகளாலமர்த்தி இதுவே எங்களுக்கு உத்திரவென்பதாகச்சொல்லி இப்பால் விசுவாமித்திரரைப்பார்த்து அரசர்க்கரசனை அரிச்சந்திரமகாராசன் விடைகேட்பதுகாண்க

௯௩-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி,

உத்தாரந்தாருமையா - விசுவாமித்திரரே - ஊழ்வினை தீருமையா

அநுபல்லவி,

விஸ்தாரமாகச்சொல்ல வேண்டியதென்னநேரும்
வெற்றிமிகுவீரனாப் பத்தியாய்ப்பாதுகாரும் (உத்தா

சரணங்கள்.

௧, வீராதிவீரனுக்கும் விளைவினில்வருங்கோபம்
வெட்டையாடும்வேளையில் விளங்காதமனஸ்தாபம்
சூராதிசூரருக்குஞ்சொல்லென்றால் மிகுசோபம்
சுகிர்தமாவுமக்குச்சொன்னேன் விவர்ப்ரதாபம் (உத்)
௨, காத்தாளுவதுபாரம் கழிக்கச்சொல்லாதுநேரம்
கருதிவந்தடுத்தோரைக் காப்பதான்பிள்ளைதீரம்
மூத்தாள்மக்களாளுலும் மூட்டிக்காவரோர்நேரம்
முனைபங்கமற்றிருந்தால் முடிக்கலாம்ராச்யபாரம் (உத்தா)
௩, செய்யாதீவினைகோடி செய்வார்களேயானும்
சேய்கள்செய்பிழைதனைத்தாய்பொறுப்பதுபோலும்
ஐயாவுந்தனையிவர் வைதாலுமெய்தாலும்
ஆளவுமதுபாரம் ஆகுமினிமென்மேலும் (உத்தா)

பொது-விருத்தம்.

முனிவனது விடைபெற்ற வேந்தனொடு
முதலவருந்தலைமகனும் முனைந்துவாசித்
தனிவழியேகிடமுயன்றாரயோத்திநாட்டைத்
தவமுனிவிசுவாமித்திரன் றானியாள
வினிதமதுமாதவத்தின் துசத்தைநாட்டி
யெவர்க்குமிந்தநெறியறிவித்திடுவிரென்னப்
பனிமூட்டங்கண்டசெழும் பயிர்கள்போலப்
பற்றுவாராசரைச் சுற்றுவீரே

வசனம்.

அகோகேளுங்கள் வேந்தரிற்சிறந்தவர்களே விசுவாமித்திரருடையஆக்ஞைபெற்றஅரிச்சந்திரமகாராஜனும்சந்திரமதியும்லோகிதகுமாரனும் தனியேவழிநடக்கத்துணிந்தார்கள் அயோத்தியாபுரியை ஆளுவதற்கு உபக்ரமித்தவிசுவாமித்திரரானவர் தமதுசெந்தவக்கொடியைத் துசமாநாட்டி எவர்களும் இந்தவிதமாய் அரசியற்றுங்களென்றுரைத்தபோது பனிக்காலத்தில் கருகிச்சருகும்பயிர்களைப்போல அங்குள்ளமுனிவர்கள்யாவரையும் அரசர்க்குரியவர்களாக்கிக்கொண்டு அரசாட்சிசெய்வதுகாண்க

௯௪ தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி

மாதவத்தில்செங்கோலாண்டானே-விசுவாமித்திர
மாமுனிமகிழ்ச்சிகொண்டானே

அநுபல்லவி,

ஆதவன்குலதீரன் அரிச்சந்திரனெனும்வீரன்
ஆளுமயோத்தியில்வந்து ஐயமெனப்புகுந்து (மாதவ)

சரணங்கள்

௧, மணிமுடியணிந்தோர்கள் மகுடச்சடையணிய
மன்னரைப்பணிந்தோர்கள் மாதவரைப்பணிய
திணிபுஜகீர்த்திமாற்றித் தெறிபுலித்தோலைச்சாற்றி
தேவதைகளைப்போற்றித் தினமுய்வதிஷ்டைத்துற்றி (மா)
௨. கோதையர்கள்களித்துக் கூந்தல்களைவிரித்து
கோதிச்சோமதுமங்கள் கொடுத்தகொண்டாட்டமற்று
தாதையர்கடன்செய்யுந் தர்ப்பைகளுஞ்சமித்துந்
தளராமலேவிரித்துத் தரணியெங்கும்புகைத்து (மாதவ)
௩, புனிதமிகுமாதவர் பொற்புமிகுத்துச்சூழப்
புரவலர்களெவரும் போற்றித்தினமும்வாழ
கனிதிருந்தியசொல்வின் கற்பின்மிக்கோரைத்தூறி
கவுசிகன்றவணிக் கனகாசனத்திலேறி (மாதவ)

ஊழ்வினைகாண்டம்-முற்றுப்பெற்றது

* * *

விருத்தம்-௫௫-கலித்துறை-க-வெண்பா-க.

ஆனந்தக்களிப்பு-க-தொண்டிச்சிந்து-க-தரு-௯௪.

உ

ஏழாவது,

ஆரண்யகாண்டம்.

விருத்தம்,

செங்கதிர்குலத்தோர்கள்செலுத்திய
துங்கமானஸத்யத்வஜநீக்கியே
அங்கண்மாதவக்கோன்முறையானுநாட்
புங்கவன்றிரு வாலயம்போற்றுவான்

வசனம்.

அகோகேளும் ஸமர்த்தர்களேசூரியகுலாதிபதிகளாளப்பெற்றசிரேஷ்டரானஸத்யக்கொடியைநீக்கி செவந்தக்கொடியை நாட்டிக்கொண்டு அந்ததபஸ்விகள்யாவரும்ராச்சியபரிபாலனஞ்செய்துகொண்டிருந்தார்கள். இப்பால்அரிச்சந்திரமகாராஜனுனவன் பரிவாரங்களுடனே அந்த அயோத்தியாபுரியிலுள்ள முக்யமான தேவாலயங்களிற்போய்மனக்களிப்புடனேப்ரதட்சண நமஸ்காரஞ்செய்து பிரார்த்திக்கிறவிதங்காண்க,

௧-தரு-இ-ம்-பியாக்-அல்லது-செஞ்சுருட்டி.

பல்லவி,

ஸத்யதர்மமேஜெயம் - ஸர்வேசுவராபயம்-ஸத்ய

அநுபல்லவி,

நித்யதானதர்ம்ம நிகழ்ந்திடுமாறுகன்மம்
நெறிதவறுதெந்நாளும் நிறைந்தசெங்கோலாளும் (சத்)

சரணங்கள்,

௧, அன்னைபிதாநீயே அருட்குருநாதன்நீயே
உன்னையன்றி ஒப்புடன்கொண்டாடி
உரிமையாய்ப்பதம்பூசித்தேன் உண்மையொன்றேநேசித்தேன்
௨, சச்சிதானந்தா ஸனகாதிமுனிப்ருந்தா
நச்சினையுண்ட நாதனேநீலகண்டா
நாயடியேனைக்காப்பாய் நன்முனிருணந்தீர்ப்பாய் (சத்)
௩, வேதஸ்வரூபா விமலர்புகழ்ப்ரதாபா
போதவறுநூலா புனிதர்கட்கனுகூலா
போய்வாரேன்பரதேசம் போதகருபதேசம்(சத்)

பொ.து-விருத்தம்.

தலமுழுதுந்தவமுனிவன்றனக்களித்தோமினியுனாதற்
றருகியென்றன்

திலகுமணிமண்டபமுமெழின்மணிச்சிங்காசனமு
மிழந்துபேர்ந்து
பலவரசருடனமைச்சருமுடன்போய்ப்பாதவிக்கப்
பதாதியெய்க்கக்
குலமகனுமடமயிலுமுன்னடக்கப்பின்னடந்தான்
கொற்றவேந்தன் (௨)

வசனம்-

அகோகேளுங்குரிசிலர்களே தனது ஆர்ஞையிலிருந்த யாவற்றையும் விசுவாமித்திரமுனிவருக்குத் தத்தஞ்செய்து அங்கிருக்கிறஒருஆஷாக்கிரமாவது அனுபவிக்கலாகாதென்றெழுந்து இராசராசாக்களும் ஒவ்வொருமந்திரிமார்களும் பிரலாபித்துக் கொண்டு தொடர்ந்துவரத் துரகபதாதிகள் சூழ்ந்துவர புத்திரசிகாமணியாகியலோகிதகுமாரனும் தர்மபத்தினியாகிய சந்திரமதியும் முன்னேநடந்துபோகச் சூரியகுலசிரேஷ்டனாகிய அரிச்சந்திரமகாராஜன் பின்னடக்கத் தொடங்குவதுகாண்க,

௨-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்,

பல்லவி,

என்னுயிர்க்குயிரான-அன்னமே-எழிலுறநடமுன்னமே

அநுபல்லவி.

பொன்னுலகாளும்புரந்தரனேர்களும் புனிதமாதவத்தோர்களு
பன்னும்நான்மறை மன்னும்நூலாறுந் [ம்
துன்னும்புகழ்மிக வுன்னுங்காசிநகர்க் (சென்)

சரணங்கள், (யே

௧, அருமறையோர்கள் நிரந்தரமுங்கூடி-யாரணங்களோதலங்கை
அரசர்க்கரசனுனமதிதயேந்திரன் அருந்தவச்செல்வமங்கையே
தருமநூன்முதலாய்மனுநீதியின் றன்மையறிந்தநங்கையே
தயவாயுனதுதோழிமார்க்கெல்லாந் தந்திடுவாய்விடையிங்கே
வருமுடாய்விசுவா மித்திரமாமுனிவர் (யே
வந்துவாதுசெய்யாத லென்செய்வோம்
வையகப்புகழ் தையலேநானும்
செய்வன்மருவுந் [illegible]நகர்க் (சென்று)

௨, பொன்னிராசையும்மன்னிலுனை [illegible] புகழ்ந்தே
கருவாய், புலம்பிவந்துனைப்பின் [illegible] பூல[illegible] நீக்கு
வாய், தன்கரில்லாமைந்த னுந்தனைத் தழுவியேவா [illegible]ருவா
ய், தயங்கிடாமலே காசிவிஸ்வேசன் பொற்றுளின் மேன்ம[illegible]தா
([illegible]வாய்

மின்னியமின்னற் போன்மறைந்திடும்
மெய்புறவைப்புறம் பாக்குவாய்
மெய்த்தவத்தோர்கள் கைத்தலத்திடை
வைத்தவாமலகத்தை மொய்த்தகாசிநகர்க்(கென்று)

௩, கொண்டல்வண்ணன்காகுத்தனுக்கென்றுங்கொண்டாடமனங் கூடுமே, குறவன்செய்விதிதன்னைத்தவிர்க்கக் கோறியுங்குசித்தம் நாடுமே மண்டலத்தோர்கள்செய்மாபாவமெதுவும் மிருவிடப்பயந்தோடுமே, மாதவத்தோரைக்காணுமல்மனம்-மகிழ்ந்திடாதே
அண்டர்கோனுக்கும் அமரொவர்கட்கும் (ன்றும்வாடுமே
அருந்தவர்க்குங்கதி தேடுமே
ஆதியாருமை பாதியார்பரஞ்
சோதியார்தானுறை நீதிகாசிநகர்க் (கென்)

பொது-விருத்தம்.

ஆண்டநன்னகரும் நாடும் ஆனைசேனைகளுமெய்யிற்
பூண்டபொற்பணியாடை பொற்பிவைமுனிக்களித்து
வேண்டவவ்வேந்துஞ்சேயும் விரகியுமயோத்திநாட்டைத்
தாண்டக்கண்டவ்வூர்மாந்தர் ததும்புவார்வெதும்புவாரே

(வசனம்) இப்படியாகத்தானாண்ட இராச்சியங்களும்ஆனை சேனைகளும் ஆடையாபரணங்களும் முனிவருக்களித்து பிரார்த்தித்தஅரிச்சந்திரமகாராசனானவன் புத்திரகளத்திராதிகளுடனே அயோத்திநகரைக்கடக்கக்கண்ட அவ்வூரிலுள்ளயாவரும் புலம்புவதுகாண்க, ௩,தரு இ-ம்-காம்போதி-ஆதிதாளம்,

(கண்ணிகள்,)

க, சந்திரனேயரிச்சந்திர மன்னனே
சுகுணனேயுன்பாதசேவை இனி
புந்திமகிழ்ந்திட வெந்தநாட்காண்பதென்று
புலம்புவார் சிலமாந்தர்
இந்தமாமுனிபிதற் கெத்தனைநாட்டவ
மியற்றினனோ வறியோமே-தானே
வந்தவிதிதவிர்க்கத் தேவர்க்குமாமோவென்று
வரைவார் சிலமாந்தர்
உ, ஆளுமரசுஞ்செங் கோலுமையுமீய்ந்து
அவனியில்வாழ்ந்திருந் தாலும்-எந்த
நாளுமுமைப்போற்றி நாங்கள்வாழ்வோமென்று
நவில்வார் சிலமாந்தர்
மீளுவகையைஇனி யாவதெமக்குனைக்கின்
மீட்போமல்லாதலை விடோமே-என்று

103

தாளுந்தடக்கையுங் கூப்பித்தொழுதுமெத்த
தவிப்பார் சிலமாந்தர்
௩, அன்னைபிதாகுரு வாகவமைந்தநல்
லரசேஎன்றழுதழு தேற்றி-நீ
முன்னைவினையகற்று முறைபறியாயோவென்று
மொழிந்தார் சிலமாந்தர்
தன்னைப்புகழ்ந்திந்தத் தாணியாளுஞ்செங்கோல்
தன்னைப்பறித்துத் துறவோனாய்பூவை
என்னமாயாளினும் மன்னவனாவாரோவென்
றியம்புவார் சிலமாந்தர்
ச. எந்தநாளினுமரிச் சந்திரமன்னனுக்
கிடுக்கமுறுதென்றிருந் தோமே-மிகத்
தொந்தமாய்கௌசிகன் தோன்றியதென்னென்று
துடர்ந்தார் சிலமாந்தர்
முந்தநாளினிற்பலிற் சக்ரவர்த்திமன்னனை
முகுந்தன்பலிகேட்டது போல-இன்று
விந்தவிசுவாமித்ர னியாவுமபகரித்தா
னென்றார் சிலமாந்தர்
ரு, பஞ்சணைமீதடி வைக்கப்பொறுக்காத
பாதகமலங்கள்நோக இவர்
நெஞ்சந்துணிந்துகாட்டில் நடந்திடுவாரோவென்று
நினைப்பார் சிலமாந்தர்
கஞ்சமலர்ப்பக்தி கன்றக்கன்றமிகு
கல்லுமுள்ளுந்தைக்க நடந்துமனம்
தஞ்சமென்றேகாசித் தலமடைவாரோவென்று
தவிப்பார் சிலமாந்தர்

பொதுவிருத்தம்,

தொடைதுரந்துமுடிதுரந்து பணிதுரந்து அடிமுரசந்துரந்துகாமக், குடைதுரந்து வெண்கவரிக் குழாந்துரந்துகரிபரி தேர்குலந்துரந்துக், கடைதுரந்து மறுகணைந்த காவலன்றன்திருமுகத்தைக்கண்டோரெல்லாம், அடையமனமகிழ்ந்துருகி யவரவரே முகத்திலறைந்தழுவாரானார்,

(வசனம்) தனதுஆளுகைச்செங்கோலும் மணிமுடியும்பூச்சக்கிரகுடையும் கீர்த்திமிகுந்த முரசமும்வெண்சாமரையும் இரதகஜதுரகபதாதிகளும் இழந்து புத்திர களத்திரர்களுடன் தேசாந்திரியாகிப்போகிற அரிச்சந்திரமகாராஜன் திருமுகத்தைக்கண்டயாவருந்தத்தம்மனைகளுக்குப் போகமனமொவ்வாமல் நெஞ்சுருகி முகத்திலறைந்துக்கொண்டுபிரலாபிக்கத்துடங்குவதுகாண்க,

௪-தரு இம்-அசாவேரி-திரிபுடை-தாளம்,

பல்லவி,

ஆயிதென்னவனர்த்தகாலம்-அரிச்சந்திரர்
காகலாமோஇவ்வலங்கோலம்

அநுபல்லவி,

ஞாயமாமோமுனிசெய்ஜாலம் அவர்க்குமெத்த
நன்மையாமோ இந்தநிதிமூலம்
காயிருக்குமரங்கள் கல்லேறிதாங்குமல்லால்
வாயிருந்தாலும்மெல்ல வகைவேணுமல்லோசொல்ல(ஆயி)

சரணங்கள்.

௧, மயிருடன்சிறகினை யிழந்தபட்சிகள்போல
மானிலந்தனில்வேலி யோடுவரம்புஞ்சால
பயிரிழந்தாற்போல்பாரில் பதியழிந்தபெண்போல
பண்புமிககரிக்குப் பாணியற்றதுபோல
உயிர்போய்பாதவிக்கு முடற்போல்மத்தாலுடைந்த
தயிர்போலிப்புவியோர்கள்தளும்பிவெதும்பமேலா (ஆ)
௨, குஞ்சரப்பொற்சிவிகைக் குதிரைகளும்விடுத்து
கொடியுங்கனகத்தேரின் குலங்களையும்விடுத்து
பஞ்சரத்துள்ளிருந்து பாடுங்கிளிகளைவிடுத்து
படிதனிலழகிய பாங்கியரைவிடுத்து
செஞ்சரோருகபாதச் சேவகரைவிடுத்து
சீலமிகுமுனிவன் செய்கைதனையடுத்து(ஆயி)
௩, பஞ்சணையில்நடக்க பதைபதைத்துறந்தவித்தார்
பாரில்நடந்திடவோ பரனிவர்க்குவிதித்தார்
கஞ்சமலர்ப்பதத்தாற் கருணைமிகப்படைத்தார்
கழல்பணிவோரைப்பாது காத்துவிருந்தளித்தார்
தஞ்சமொருவர்காணே நெஞ்சம்பதைக்குதையோ
வஞ்சமாமுனிவனிவ் வாதைசெய்திடல்மெய்யோ (ஆயி)

பொது,விருத்தம்.

நகர்கடந்தோர்முகமலர்ந்துசரயுவென்னும்
நதிக்கரைவந்தடைந்திடவேநன்னெக்கற்றுத்
தகர்படவேந்தேயுனதுவிதியென்னென்று
தாளேற்றித்தண்சுவரிதாரோர்குழப்
புகர்கடந்தமணன்மீதுகுடும்பத்தொடு
புரவலனும்வீற்றிருந்தான்புனிதவெய்யோன்
திகர்கடந்தகடற்புகுந்தான்விஸ்வாமித்ரன்
நேர்ந்திட்டானத்தலத்தைச்சேர்த்திட்டானே (௪)

(வசனம்) இந்தப்பிரகாரமாய் அயோத்தியா புரியைக்கடந்து யாவர்களும் முகமலர்ச்சியுற்று சரயுநதிக்கரையடைந்து இராஜனது செந்தாமரைபோன்ற முகத்தைப்பார்த்து தாயைப்பிரிந்தகன்றுக்குட்டிகளைப்போற் பரதவித்துக்கொண்டு ஆற்றிலிரங்கி நுண்ணியமணலில் ஓரிடத்திலமர்ந்தார்கள் சூரியபகவானும் அஸ்தமானமானார் அத்தருணத்தில் விசுவாமித்திரரும் அவிடம்வந்தமர்ந்தபின் நடப்பதுகாண்க.

பொதுவிருத்தம்,

அக்காலத்தமைச்சரெல்லாம் அடல்வேந்தனடிபோற்றி யரசேநீமீண், டெக்காலமெழுந்தருள்வதென்றுரைக்கவாங்கவரை யிருகணோக்கி, முக்காலங்களுமுணருமுனிவனுக்கின்றியான்கொடுத்தமூதார்தன்னி, லெக்காலமும் வருவதில்லையென்று னமைச்சரொலாமேங்கி வீழ்ந்தார்.

வசனம்.

இத்தருணத்தில் அரண்மனையிலுள்ள மந்திரிபிரதானிமார்யாவர்களும் அரசனைத்துதித்து அகோ இராஜபரமேசுவரா இனிஎந்தநாளில் மறுபடியும் இங்குவருவீரென அவர்களைக் ருபாதிருஷ்டியினால் நோக்கிப்பார்த்து பூதபவிஷ்யத் வர்த்தமானங்களையுணர்ந்தவிசுவாமித்திர முனிவருக்குக் கொடுத்துவிட்ட இந்தஅயோத்தியாபுரியைநாடி இனிஎந்தநாளிலும் வருவதில்லை யெனக்கேட்ட யாவரும் ஏக்கமடைந்து பிரலாபிப்பதுகாண்க,

௫-தரு-இ-ம்-சாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவி,

ஆயிதென்னமன்வன்மம்-அருந்தவத்தோர்க்
கடுக்குமேஉங்கள்-ராஜதர்ம்மம்

அநுபல்லவி

பாயுவதென்றெண்ணியோடிப்பதுங்குவதோஆண்சென்மம்
பதிபசுபாசமற்றோர் பாராளுவதோகன்மம்(ஆயிதென்ன)

சரணங்கள்.

௧, முன்செய்ததீவினையோ முன்னோரைக்காக்க
முயன்றதெப் பாவனையோ
பின்செய்தார்போதினையோ நமைப்படைத்த
பிரமன்செய் சோதினையோ
நன்செயலல்லயிது தள்ளோம்நிமிஷப்போது
என்செய்வாரவர்மீதுஎடுப்போம் படையிப்போது (ஆ)
௨, மன்னவர்நகைக்காரோ தர்ப்பைசமித்தால்

மாதவர்   புகைக்காயோ
அன்னையர்நிலைக்காரோ   ஆருகையென்றல்
அருந்தவத்தோர்க்கு   நேரோ
என்னையிதஞ்சொன்னாலும் எற்றிடோமொருக்காலும்
உன்னைப்புரிவதிலும்   ஊழிமூழ்கலாம்மேலும் (ஆ)
௩. தவசிகட்குமுடிதரோம்   எக்காலத்திலும்
தனித்திந்நகர்தன்னி   விரோம்
அவசியமாய்மனம்பொறோம்   சடையர்களை
அடவிக்கேக   விட்டுவரோம்
கௌசிகன்செய்தவத்தைக்   காத்திடச்சல்யமாமோ
சிவசிவாநீயாளாத   ஜென்மசாபல்யமாமோ(ஆபி)

பொது-விருத்தம்.

புரவலனிம்மொழிகேட்கப்பொறுதிருகாதிலுங்கைகள்
பொருத்திநின்றான்
அரவனுமாயிரம்படத்தினரவினைப்போற்சடைவிரித்தங்
கடைந்துசீறி
தரவரிய்செங்கோலைத் தந்தாயென்றனைவெகுண்டித்
தரணியோர்கள்
இரவலனென்றனையிகழ்ந்தாரோவென்றான் ஆளுஞ்செங்
கோலென்றானே (௭)

(வசனம்) இப்படியாகச்சொல்லிய அவர்கள் வார்த்தையைக் கேட்கமனமொவ்வாமல் இருகாதுகளையும் கைகளாற்பொத்திக் கொண்டு அரசனிருந்தான். அத்தருணத்தில் விசுவாமித்திரரிஷியானவர் ஆயிரம்படங்களையுடைய பாம்புகளைப்போலே நெடிய தழைத்த சடைகளுடன் வந்து அடக்கொண்ணாத கோபிஷ்டராய்க் கொடுப்பதற் கருமையாகிய செங்கோலை யபகரித்துக் கொண்ட பிச்சைக்காரனேயென்று என்னைஇகழ்ச்சியாகப்பேசுகிற இந்த இராச்யத்தோரியாவரும் மனமகிழும்படிக்கு இதோ நீகொடுத்த செங்கோலும முத்திரைமோதிரமும் கைக்கொள்ளுவாயென்று கபடஞ்செய்வதுகாண்க,

௬-தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்

பல்லவி,

செங்கோலைநீயாளுவாய்-உனக்குயான்
செய்தீவினைகள்தாளுவாய்

அநுபல்லவி.

சங்கோலமிடுமித்தச்   சாகேதபுரியாளச்
சன்யாசிக்கடுக்குமோ   சகத்திலெவருமீளச் (செங்)

105

சரணங்கள்,

௧, திரிசங்குமன்னனைச்   சொர்க்கத்திற்சேர்த்தேன்
தேவர்கள்முன்னிந்தத்   தீவினையேர்த்தேன்
வரசிங்கமுன்னாலென்   வன்மையாவுந்தோர்த்தேன்
வையகத்தோரெனை   வாழ்த்ததத்தாவாவார்த்தேன்(செ)
௨, அரசூர்மணிமுடி   யாண்டிதகைக்காமோ
ஐயப்புகுவோர்க்கர   சாட்சிநிலைக்குமோ
முறசறைந்தாலோக   மூன்றுமெனக்காமோ
முக்காலுங்கங்கையில்மூழ்குங் காக்கைகொக்காமோ(செ)
௩, தலைகீழாய்நின்று   தவஞ்செய்வதைவிட்டு
தரணியாள்வேறோபோடா   மூடாமதிகெட்டு
நிலைகுலைந்தலையாதே நிஜச்சொல்லொன்றைத்தொட்டு
நியமநிஷ்டைகளெல்லாம்   நீடுலகச்சொற்கேட்டு(செ)

பொதுவிருத்தம்;

முனிவனிதுகூறமன்னனடிபணிந்து
முகமலர்ந்துதந்ததுனக்கெனக்கேதாகும்
இனிவருவதில்லையென்றானிருடிநீமுன்
னியம்பியபொன்னைவைக்கும்வகை யெங்கேயென்றான்
தனிவழியேவரத்திறைமையுளவோர் தூதாள்
தனைவிடிலும்பொன்னனைத்துந்தருவேனென்றான்
கனிவருமுன்கல்லெறிகைக்கொண்டாற்போலக்
கதிர்கண்டான்புகரோனையெதிர்கண்டானே (௮)

(வசனம்) இந்தப்பிரகாரமாகச் சொன்ன விசுவாமித்திர ருடையபாதத்தில் தெண்டனிட்டு மனப்பூர்வகமாய் அன்றுயான் கொடுத்தயாவற்றும் உமக்குத்தான் இப்போது நானிருக்கும்நிலைமை எனக்குத்தான் இனிபட்டணத்துக்குள் வரமாட்டேனென்றுரைத்த அரிச்சந்திரனைப்பார்த்து நீகொடுக்கவேண்டிய பொருட்களுக்கெல்லாம் வழிசொல்லுவாயென்ற விசுவாமித்திரரை எங்களைத்துடர்ந்துமறுபடியும்தனியேநடந்துவருவதற்குச் சக்தியுள்ளஒருவனைத் தூதுவரவிடுமென்றுசொல்லி அரசன் வாய்மூடுவதற்குள் கனிபுசிக்குமுன்கல்லெறிபூசித்தாற்போலநட்சத்திரையன்சபைக்குவருவதுகாண்க,

௭-தரு-இ-ம்-மத்தியமாவதி-சாபுதாளம்,

பல்லவி

நட்சத்திரையன்வந்தான்-முனிவர்முன்-நட்சத்திரையன்வந்தான்

அநுபல்லவி,

பட்சமறவாத   பார்மன்னன்கைதனில்
இட்சணம்லட்சோப   லட்சம்பொன்வாங்கிட (நட்ச)

சரணங்கள்

க, பொட்டியிலுள்ள பொருட்களைக்கவர்ந்தெதி
வட்டிமுதலுக்கு வாதுகள்மிகச்செய்யும்(நட்சத்)
உ, சடுத்தங்கள்பேசியே சன்னைசெய்தேபொன்னைக்
கொடுத்திடுவாயென்று கூக்குரல்செய்திட(நட்சத்)
ங, அடிமையென்ற வரிச்சந்திரமன்னனைக்
கொடுமைகள்செய்திடக் குடுகுடுவென்றிதோ(நட்சத்)

பொதுவிருத்தம்.

உன்னியதீவினையனைத்துந்தனித்திருத்தி வகைவகையே
யுரைத்துநீபோய்
அள்ளியிடும்பொருட்கவரா தானையின்மேற்கவண்சிலைபோ
மளவுதந்தால்
கொள்ளுதிநீபின்போன கூலியையும்பெறுதியெனக்
கூறித்தீய
வெள்ளிதனையுடன்கூட்டிமீண்டுமழைத்தொருவாய்மை
விளம்பலுற்றான்

(வசனம்) அகோகேளும்பஞ்சபாண்டவர்களே கர்னகடோரமானசெய்கைகள்யாவும் விசுவாமித்திரானவர் நட்சத்ரையனையழைத்து அந்தரங்கமாய்போதித்துயானையின்பேரில்நின்று கவண்டுக்கல்லெறிந்த வுயரங்குவிந்தபொருட்களில் ஒருகாசளவுங் குறையாமல்வாங்கிக்கொள்ளுவதுமல்லாமல் நீதொடர்ந்துபோன நடைப்படிக்கும்ரொக்கமான துகையை வாங்கிக்கொண்டுவா வென்றுசொல்லியனுப்பிக் கொஞ்சதூரம் நடக்கவிட்டு மறுபடியுந்தன்னருகழைத்து இரகசியமாய்ப்போதிக்கிற விதங்காண்க

அ-தரு-இ-ம்-சௌளிபந்து-ஆதிதாளம்

பல்லவி,

(வைப்பாயே
மறைமொழிபோற்கில - மகிழ்ந்துரைப்பேனதன் - மனந்தனிச்

அநுபல்லவி,

குறைவில்லாத்தவத்தோனே கொண்டாடுங்குணத்தோனே
நிறைமதிபடைத்தோனே நெடியகீர்த்திபெற்றோனே (மறை)

சரணங்கள்

க, பசிக்குக்காய்கனிதேடிப் பகருவானையாகிற்
பாலுஞ்சாதமுங்கேட் பாயே
பண்புளவறுசுவை யொடுபழியாதினும்
பழித்துயாவையுந்திட் பாயே
விசிக்கியுனையொருத்து விரும்பியுன்பானையாகில்
வெதும்பியதைத்தடுப் பாயே

வேதனைபொறுக்காமல் வெகுண்டுகொடேன்போவென்றால்
விளங்கவருள்கொடுப் பாயே
ருசிக்குஆசைகொண்டால் ருணந்திரல்மோசமென்று
ருத்ராய்புசிக்கக்கொண்டு ரோஷப்படுவாயென்று(மறை)
உ, சென்றவொருநாட்போக மறுநாள்நிமிஷப்போதுஞ்
சிறக்கவங்கிருந்தி டாதே
சிறுகல்லும்பெருமுள்ளில் நடைகளாலலுத்திடும்
ச்ரமம் நீங்கப்பொருந்தி டாதே
நன்றல்லதொருநூறுபதினாயிரம்
நானுஞ்செய்வதொழி யாதே
நகர்ந்திடிநடவாதேநடத்திடினகராதே
நான்சொன்னசொல்லழி யாதே
இன்றல்லநேற்றல்ல வெளிதோவெடுத்துச்சொல்ல
இதத்தில்மாத்திரமல்ல பாரத்திலுப்புகழ்செல்ல(மறை)
ங, எல்லையிலாநெடுந் தூரம்நடந்துநொந்தே
விளிவரோனென் பாயே
ஏற்றமிலங்கருடன்றிடயமிவைபோ
லெனைச்சுமந்துபோவென் பாயே
இல்லையென்றொருமொழி சொன்னாற்போதுமுனைக்
கெவையுந்தருவோமென் பாயே
இனியொருவழக்கில்லைபோவென்றுரைப்பானுகி
விதயமகிழ்ந்தேனென் பாயே
தொல்லைசெய்வதாலலைத் துரும்பாய்நலிந்துவாடத்
தோகையுமனுமி துயரால்மெலிந்துவாட (மறை)

பொது-விருத்தம்.

பார்த்திவனையில்வண்ணம்பங்கயஞ்செய்யப்
பதியதனைவிட்டகல்வாயென்றுவேத
மூர்த்தியையுந்துதுவிட்டுமுனிவனேக
முன்னிருந்தபரிகலத்தோர்முகத்தைநோக்கி
பார்த்தினிப்போமுனிக்கினியாரொனக்காரொன்றே
பகருமிறைமொழிகேட்டுப்பதத்தில்சத்திய
கீர்த்தியெனுமந்திரியும்பணிந்துபோற்றிக்
கெதியென்றுனெந்தனையாளுதியென்றானே (ய)

(வசனம்) கேளுங்கள் மகானுபாவர்களே அந்த அரிச்சந்திரமகாராசனை நானாவிதமானபங்கப்படுத்தி இனி அணுவளவுந் தாமதமில்லாமல் அகன்றுபோவாயென்று சுக்கிரயகவானுகிய நட்சத்ரையனையுந் தூதுவிட்டு விச்வாமித்திரரும் அந்தரத்யானமாயி

ஞர் அப்போது இராசன் தன்னைத்தொடர்ந்துவந்த சேனை சயன்யங்களை நோக்கி இனிவிசுவாமித்திரருடைய ஆக்ஞைப் பிரகாரம் நடந்துக்கொள்ளுங்கள் உங்களுக்கும் எனக்கு மிவ்வளவுதான் ருணனுபவந்தம் அவரவர்கள் அகத்துக்கெழுந்தருளுங்களென்றுரைக்கக்கேட்ட மதிபூஷியாகிய ஸத்தியகீர்த்தியென்னுமந்திரியானவன்மனந்திகைத்து சாஞ்ஞகதியடைந்து மிகுந்த துயரத் துடன் பிரலாபிப்பதுகாண்க.

௯-தரு-இ-ம்-பைரவி-திரிபுடைதாளம்,

பல்லவி.

அடியேனுக்கார்கெதியோ இந்த அருந்தவத்தோர்செய்யும் சதி
[யோ

அநுபல்லவி.

கொடியபாதகமென்செங் கோலாளையிற்செய்தேனோ
கோமானேயுன்மனதிற் குறிப்பறியாதய்தோனோ (அடி)

சரணங்கள்.

௧, கோதொழிந்தகுணத்தோய் உந்தன்
குற்றேவல்செய்யமுன் பிணைத்தாய்
ஏதொழுந்தாலுமுன தேவலிலொழிவேனோ
இரவலர்களைச்சேவித் தென்னைகமழிவேனோ (அடி)
௨, அடர்ந்தவனந்தனிலே நீபோய்
அடைந்திளைப்பாறு மிடந்தனிலே
படர்ந்துபசிக்குத்தேடும் பழங்காய்கிழங்குகளும்
பார்த்துப்பொறுக்கிச்சேர்த்துப் பணிவிடைசெய்வேனும்
௩, கஞ்சமலர்ப்பதனே என்னைக்
காருந்திரிசங்குமன்னன் சுதனே
நெஞ்சகமறியாமல் நெடியமுடவன்தொட்டால்
நெறிதவறிஎந்தனை சீராளாதுகைவிட்டால் (அடி.)

பொது-விருத்தம்,

இடிவிழுந்தமரம்போலயேங்கிவீழ்ந்த
வியல்புமிகுமந்திரியையெடுத்துமேனிப்
பொடிதுடைத்துமுடிதடவிப்பொருமலாற்றி
புகலரியமனவெறுப்பனிவனையூரில்
விடினுயிரைவிடுவனென்றேவேதையுற்று
விதிவசமுந்தனுக்குமுண்டோவிளைந்துவாவென்
றடிபணியுமூவரையும்வேந்தனோக்கி
யழைத்திட்டான்கீர்த்திமிகத்தழைத்திட்டானே (௰௩)

(வசனம்) இந்தப்பிரகாரமாய்ச் சரணடைந்து வேரொழிந்தமரம்போல மனத்தயக்கக்கொண்டு புலம்புகின்றசத்தியகீர்த்தியை

இரண்டுகைகளால் தொட்டெழுப்பி மெய்யெங்குந் துடைத்துக் கண்ணீராற்றிய அரிச்சந்திரமகாராசனானவர் இவன்மிகுந்த ரோஷமுள்ளவன் இவனைத்திரும்பவும் அயோத்திக்கனுப்பினால் ஒருக்கால் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளுவானென்றுமனோவேதையுற்று உனக்கும் இது அமைந்ததுவோ மந்திரியேயென்று விஸனத்துடனே மந்திரியையும் மனைவியையும் மைந்தனையும் அழைத்துக்கொண்டுகாசிப்பட்டணத்தை நோக்கிப்புறப்படுவதுகாண்க.

௰-இராசன்சொல்-தரு-இ-ம்-பூபாளம்-ஆதிதாளம்,

கண்ணிகள்,

௧, அந்தரியம்பிகையாதிபராபரி
யருள்தரும்வேளையீதரிவையே எழுந்துவா
சந்திரசேகரர்தந்தபெருஞ்செல்வச்
சந்திரமதியேகளித்தெழுந்துவா மதிதெளிந்துவா
௨, மாதவமறையோர்கள்சாயுவில்நீராடி
மகிழ்ந்துசெங்கதிர்கடன்மாரிடாது முடிக்க
போதமுடனெழுந்துபோகக்கண்டேனெந்தன்
பொற்கொடியேவிரைந்தெழுந்துவா மகிழ்ந்தெழுந்துவா
௩, ஆதவனுதிப்பானென்றருங்குயிற்கூவுது
அருந்ததிற்கபின் மிகுந்தபரிவையே
சீதவெண்கமல நாளங்களுண்ணுமன்னங்கள்
சிறக்கப்பூபாளம்பாடு தெழுந்துவா-மகிழ்ந்தே
௪, சுந்தரமுகனரவிந்தபாதன்மிகு
கருணையும்சந்திரதயேந்திரன் றவத்தில்வந்த
சுந்தரியேபூரணசந்திரமதியேகருஞ்
சோலைக்கோழிகள் கூவுதெழுந்துவா சுருக்காயெழுந்துவா

பொது-விருத்தம்,

தொடர்ந்தமதிமந்திரி தொடர்ந்துபிறகேக
விடந்திகழ்கடுந்தொழிலின் வெள்ளிமுன்னடக்க
வடந்திகழ்செழுந்தன மடந்தைசுதன்மன்னும்
நடந்தனர்அயோத்திவளர் நன்னகர்கடந்தே (௰௪)

(வசனம்) அகோகேளுங்கள் ராசாதிராசர்களேஸ்னேகவாத்ஸல்ய குணசீலனாகத் தொடர்ந்துவந்தமந்திரியான ஸத்தியகீர்த்தியானவன்யாவருக்கும் கடைசியில்வருவான் ஆலகாலவிஷத்தின் குணத்தையுடையகொடிய செய்கைகளில்மிகுத்தநட்சத்திராயனானவன் முன்பாகநடக்க ஸர்வாபரணபூஷிதமானகும்பஸ்தனங்களை யுடைய சந்திரமதியும் புத்திரசிகாமணியாகிய லோகிதகுமாரனும் இராஜசிரோன்மணியான அரிச்சந்திரமகாராசனும் அயோத்தியாபுரியின் எல்லையைக்கடந்து நடப்பதுகாண்க,

௰௧. இராஜனும் சந்திரமதியுஞ்சொல்-தரு-இ-ம்-பிலகரி-ஆதிதாளம்

கண்ணிகள்,

௧: தரைதனில்நடந்துவா தையலேசிவகாசித்
தலந்தனைத்தெரிசிக்கத் துலைந்திடும்துன்பம்யாவும்
இறைவன்செய்விதிதனை ஈசனால்வெல்லாமோ
மறையோன்பதம்பணிந்து மனதுமிகத்துணிந்து (தரை)

சந்திரமதி,

௨, வருகிறேன்மன்னவாவுன் மைந்தன் மெலியாமலே
வருந்தியழைத்துக்கொண்டு வழிதனில்பையப்பைய
திருகுகள்ளிமுள்ளுக்கள் தேகமெங்கும்பூறுதென்
ஒருகுமென்பாலகனை யுரிமையுடனழைத்து (வரு)

அரிச்சந்திரன்

௩, மெல்லியபோஇந்தத்தொல்லைவரக்கண்டோமோ
அல்லல்செய்வித்தமுனி வல்லமையறிந்தோமோ
சல்லியப்படல்சிவ சங்கரர்க்குமுளது
கொல்லும்புலையான்சிறிக் குதிகாலிற்குத்துதையோ(த)

சந்திரமதி: [வேன்

௪, கொள்ளித்தேள் கொட்டித்தெந்தன்வள்ளலே என்னசெய்
உள்ளங்குழையச்சூரை முள்ளுகள் தைக்குதையோ
வெள்ளிமின்னல்போற்படர் வேலாமுள்வீசுதையோ
வெள்ளெருக்கங்கட்டைகள்விரற்சந்துகுத்துதையோ (வ)

பொது-விருத்தம்

சக்கரைதேன்பாற்செழும்பாகென்னுஞ்சொல்லாள்
சந்திரமதியாளு மரிச்சந்திரன் றானுஞ்
செக்கரைத்த வெள்ளினைப்போற் குருநீர்சிந்தச்
சிறந்திலகுங்கூந்தலினைச் சிணுக்கிக்கோதி
சொக்கனைநான்முகனையுந்திச்சுழிபூத்தோனைச்
சோதிமிகுமாதிபராபரத்தைநெஞ்சில்
அக்கரையாய்த்தொழுதுதுதித்திறைஞ்சியேற்றி
அணையென்றுலவடைவழிக்குத்துணையென்றுனே (௰௩)

(வசனம்) சக்கரை தேன் பால் தேன்பாகுமுதலான அமுர்தத்தை நிகர்த்த சொற்களையுடைய சந்திரமதி அரிச்சந்திரன் முதலான நால்வரும் செக்கினிலகப்பட்ட எள்ளிற்க்ரக்குமெண்ணெயைப்போல்குருவியர்வை நீருஞ்சந்திரமதியின் அளகபாரஞ்சரிந்துலைய விஸனக்ராந்தர்களாய் ஆதிபரப்ரம்ம சொரூபஸாக்ஷாத்காரத்தையும் சிருஷ்டிஸம்ஆரதிரோபவ காரணராகிய மும்மூர்த்திகளையும் துதிப்பதுகாண்க,

௰௨-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்,

கண்ணிகள்,

௧, வேணவச்சகசங்கரா-உங்கள்பாதம்-விளங்குந்துணைபராபரா
ஆதரவர்ஸ்ரீதரா இணையடிக்காளானேற்கருணாகரா
மணிமுடியேற்றீர்களோ நாண்ட மானகர்காத்தீர்களோ
பணிவிடைபெத்தீர்களோ எங்களையிந்தப் பாட்டிற்குச்
சேர்த்தீர்களோ

௩, துணையாகவருவீர்களேகடம்பொருள்தரிசினிற்றருவீர்களே
இணையடியருள்வீர்களே எங்களை என்றுங்காத் தருள்வீர்களே

௪, முன்செய்ததீவினையோ மூவர்க்கும் முதல்வர்செய் சோதினை
யோ,எஞ்செய்வோம்வேதனையோ பொறுத்திடலெவர்களா
லாகுமையோ
பணிவிடையிற்குறையோ இப்படி பங்கஞ்செய்யமுறையோ
அணிமுடிமுனிற்கிறையோ நாளுண்ட அயோத்தியாகஞ்செய்
(தரையோ

பொதுவிருத்தம்

இந்தடவாய்வழிநடந்துவரும்போது
எழுகனற்கண்டஞ்சியிளவரசமந்த்ரி
வந்தடவாய்தோள்மேலெற்றிக்கொண்டான்
வனிதைபடுந்துயர்கண்டுவெள்ளமேலங்கி
எந்தனதுதோண்மேலேநீவாவென்று
னேற்றிடுமோமணித்தோளிச்சுணங்குக்கென்று
அந்தவினைதீரகேயரமிக்கானை
யகலென்றுள்இங்கடைதவிகலென்றுளே (௰௪)

(வசனம்) இவ்விதமாகத் தேவாதிகளைத் துதித்துக்கொண்டு வழிநடக்கும்போ தக்கடூரிய தவாக்கினியான வெய்யலில் நடக்கப்பொறுக்கவொண்ணாத லோகிதகுமாரனை மந்திரியானசத்தியகீர்த்தியென்பவன் தோளிலெடுத்துக்கொண்டான் சந்திரமதியானவள்படப்பட்டகஸ்தியைப்பார்த்த அரிச்சந்திரனனவன்பெண்ணே நீ எனதுதோளின்மேலேறிக்கொள்ளென்று சொல்ல நவரத்நகசிதமான புஜகீர்த்தியைத் தரிக்கப்பட்ட உம்முடைய தோட்களிலுட்காரும்படியானபதவி இந்தநாய்க்குத் தகுமோ அந்தச்செய்கைநரகப்ராப்திக்கேதுவாகையால் நான்நடந்துவருகிறேன் இந்தஆரண்யத்திலிருக்கவொண்ணாது சீக்கிரத்தில் நடவுங்களென்று சந்திரமதிசொல்வதுகாண்க,

௰௫-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்,

பல்லவி,

இனிநாமென்னசெய்வோம்-அயன்விதிக்-கெவ்விதமாகமுய்வோம்

அநுபல்லவி. [போ

தனியேகுடும்பத்துடனடவிக்கேகுந் தன்மைகளாற்றிவா-இப்
தயங்கிமயங்கித்தாரைதாரையாய்க்கண்ணீர் தனைத்திலர்சொரி

சரணங்கள் [வார்(இனி)

௧, விதிப்பயனைவெல்ல வேந்தர்சிகாமணியே
வேதன்றன்னாலாகுமோ புண்ய
நதிமதியணிமீசனஞ்சுன்னை விதியேனோ
நம்மாலவ்விதி போகுமோ (இனி)

௨, அறமுறைதவறும லாசாண்டபோதுநா
மறியாதெப்பிறழ யுற்றதோ என்றும்
வரமுறையில்லா வரவணைமேற்பள்ளி
வைகுந்தங்கே குற்றதோ(இனி)

௩, ஆதவன்குலத்தோரிவ் வதிம்படமுன்ன
மார்செய்த தீவினையோ பூவிற்
பேதவப்பேதமாய்ப் பிரமர்க்குச்செய்பூசை
பிரிந்ததெப் பாவனையோ[இனி)

பொதுவிருத்தம்,

இத்திறமாயடர்வனத்துளெவருமேக
இனகுலத்தோனரசுரிந்தவிசுவாமித்திரன்
சித்திரமென்செய்தனை மந்திரியையென்பாற்
சிவிடுவிடென்றரவைச்சினந்துசீற
அத்திரமதறிந்தமந்த்ரிசத்யகீர்த்தி
அரசனையான்பிரிகிலுயிரறுதியென்று
மித்திரமோநல்லதுபோவென்றயோத்தி
மேவினன்கிருமிகளையேவினனே (௰௫)

(வசனம்) இவ்விடத்தில் நடக்கிறவிருத்தாந்தத்தை செவ்வையாகக்கேளுங்கள் இருண்டடர்ந்து நெருங்கிய வனமத்தியில் வருகிறதருணத்திலே விசுவாமித்திர மகாமுனீந்திரரானவர் தற்செயலால் அவர்கள்முன்வந்து வழிமறித்து ஆகா நீசெல்தகாரிய மகாவிசித்திரமாயிருக்குது சீசீ இந்தமந்திரியை என்புறமாய் விட்டுவிடாவென்று மிதிப்பட்ட சர்ப்பக்கூட்டத்தையும் பழிக்கக் கோபித்திடக்கண்ட சத்தியகீர்த்தியானவன் எனது ராஜனைப்பிரிந்தால் உடனேஎன்பிராணனுக்கு ஆனிவருமென்று சிடுடுக்கென்றபோது விசுவாமித்திரரானவர் முகங்குன்னிநீதானவனுக்குசினேகிதன் கூடப்போய் வாவென்றனுப்புவித்து அயோத்தியை நோக்கிப்போய் நாநாவிதமான கிருமிகளை ஏவுதல்காண்க-

௰௬-தரு-இ-ய்-சுருட்டி-அடதாளம்,

பல்லவி. [ரோ

முனிவன்புழுத்தொடுத்தாரோ-ஊர்வனங்களோ-முதல்வன்முன்விடுத்தா

அநுபல்லவி.

தனிச்செங்கோலாண்டமன்னன் தயங்கிமனந்தளர்ந்து
இனிச்செய்வதென்னென் றிருக்கையிலெதிர்வந்து(முனி)

சரணங்கள்.

௧, வெட்டதெளி தனிலே-கனல்பாப்பி
விட்டெழுங்கொழுந் தினிலே
விட்டநெய்விதம்போல வெதுப்பும்மட்டைதேள்பணி
கிட்டவகையில்லாமற் சுட்டடிகள்கருக(முனி)
௨, சுருட்டைநட்டுவாய்க் காலிகள்-வெட்டுக்கிளிகள்
சுழித்துச்சொத்தும் புடையான்கள்
வருட்டுமருணைகளு வலியகொம்பேறிகளும்
மருட்டித்தொடுஞ்செய்யானும் மலையழக்காலியும்(முனி)
௩, நடக்குமதுகள் நலியும்-எறும்புகள்
நரம்புபுடைக்கும் பூரான்கள்
அடக்கும்வாளரவுகள் அட்டைகௌவுமாமைகள்
மடக்குமயக்கங்கொள்ளும் மைகருவளைகளும்(முனிவ)

பொது-விருத்தம்,

ஊர்வனங்களிடுக்கிடுக்காய் நெளிந்துமீள
ஒதுங்கவிடமில்லாம லுருகியந்தத்
தார்வேந்துமைந்தனும் மைக்குழலினளும்
தம்மைச்சேருமந்திரியுந் தயக்கங்கொண்டு
சேர்வதற்கோரிடமிலையென்றுநொந்து
செல்விழியின்புனல்சிந்தச்செந்திப்பற்றும்
ஏர்வனத்திலேமறந்தும் நடக்கும்போது
எதிர்கண்டாரவைநெளியுஞ் சதிர்கண்டாரோ (௰௬)

வசனம்.

இப்படியாகத் தரையிலூர்ந்துவரும் ஊர்வனங்களானது விரற்சந்துக்களிலகப்பட்டு நெளியும்போது இடவலம் முன்பின் ஒதுங்கவிடமில்லாமல் உருகியஅரசன் முதலான நால்வரும் மதிகலங்கி கண்ணீராறாய்ப்பெருகக் கசிந்துருகி தங்குவதற்கிடமில்லையேயென்று அக்கினிப்பொறிகளைப் பரப்பினாற்போலே பரவிய சுடுமணலிலே நடக்கும்போது குறைக்கும்நெடுகேகும் இடசாரி வலசாரியாய் அவைக ளங்குமிங்கு மோடக்கண்டு துயரப்டுவதுகாண்,

௰௫-தரு-இ-ம்-பியாக்-அடதாளம்

பல்லவி,

என்னசெய்வோம் இந்தத்துன்பத்துக் கேதுசெய்வோம்

அநுபல்லவி.

பன்னகங்களானுயிர் பழுதாவதினுமவி
ன்னமாயிறப்பது சிறப்பாகுமெனினுயிர்
செகுக் காதே-செகுமருந்து
தொகுக் காதே ஈசாயெங்களை
வகுக் காதே-வகுக்கிவிலை
பகுக் காதே-(என்னசெய்வோம்

சரணங்கள்.

௧ அரவுகளொருகோடி அட்டைகளொருகோடி
அரணைகட்டுரவுகள் அரியவில்லடம்புலிகள்
அலை வாலே-அலைந்துதிலை
குலை வாலே-குலைந்துகூட்டம்
கலை வாலே-கலைந்துமதி
புலை வாலே-(என்னசெய்வோம்)

௨, மெய்நடுநடுங்குது கைநடுநடுங்குது
பைநடுநடுங்கிடப் பலபாம்புகளும்வந்து
படு தையோ பட்டுத்திக்குமுக்
இடு தையோ-இட்டுவிடங்கள்
தொடுதையோ-தொட்டுப்பிர்மிக்க
விடு தையோ(என்னசெய்வோம்)

௩. எந்தவிடத்தும்வெரொ பூந்தமருமில்லை
வந்தபேய்த்தேரினைச் சந்தநின்னொன
உகந் தோமே-உகந்துமனம்
நொந்தோமே-நொந்தவுடனும்
நைந்தோமே-நைந்துவனத்துள்
வந் தோமே(என்னசெய்வோம்)

பொது-விருத்தம்.

பாராளனிப்பரிசான் மனங்கலங்கிப்
பரமனைநோகாமற்றன்பிறப்பைநொந்து
ஏராளநீர்மிகுத்த யிடத்திற்சென்றான்
எழுந்தகடுஞ்செங்கதிரோன் கடலிற்சென்றான்
சீரானொவர்களும் நன்னீருருந்திச்
செய்யமணல்வண்டலிடை சிறந்திருந்தார்
பேராளன்மந்திரிநற்கனிகாய்த்தேடிப்
பெய்கின்றான்பணிவிடைகள்செய்கின்றானே

110

(வசனம்) கேளும்பஞ்சபாண்டவர்களே அரிச்சந்திரன்முதலான யாவரும் இவ்விதமாகக்கலக்கமுற்று செகதீசனை நோகாமற்றங்களுடையபிறவித்துன்பத்தை நொந்துக்கொண்டு புட்களமாய்நிறைந்திருக்கிற நீர்பரவிய ஓரிடத்திற் சேர்ந்தார்கள், சூரியபகவானும் அஸ்தமனபர்வதத்தை யடைந்தான் அப்போது அவரவர்கள் தாகதாபோபசாந்தியடைந்து அத்தடத்தில் மணலினிடைவீற்றிருந்தார்கள் பெருமைபொருந்திய மந்திரிபாலவன் கனிகாய்கிழங்குகள் முதலானவஸ்துக்களைப் பறித்துக்கொண்டுவந்து அரிச்சந்திரனைக்கண்டு சொல்லுவதுகாண்க.

௰௬-தரு-இ-ம்-காம்போதி-திரிபுடைதாளம்

பல்லவி,

கனிகாய்கள்பறித்துக் கொண்டுவந்தேனிதோ கைக்கொள்வீர்ம

அநுபல்லவி [ன்னவனே

தனிக்காவலர்மனந் தளராமற்புசித்திடத்
தக்கதுமிக்கது தானேகனிந்தது(கனிகா)

சரணங்கள்.

௧. இனித்ததென்றேடும்பழ மிசைந்தகர்ச்சூரந்திராட்சா
எழின்மிகுபாதரியு மினியசீனிப்பிலாவும்
தனித்தவொற்றைவிதையன் தன்மிகுகமலாவும்
தாங்கவெடித்துச்சி தருமாதளையினுற்ற(கனிகா)

௨, தேனொழுகுபலாவும் தித்திக்குஞ்செங்கதலியும்
தெள்ளமுதம்பொழியும் தெவிட்டாதமாங்கனியும்
தானொருவருக்கீயத் தரும்நாளிகேரமும்
தளராமல்புசித்திடத் தருந்தகொய்யாய்விளாவின்(கனி)

௩, நார்த்தைபுளிமாதுளை நற்சுவைதம்பரத்தை
நற்பரிமளம்வீசும் நாவற்சம்பூகமும்
வார்த்தைதெளியச்செய்ய வல்லசெந்துருஞ்சியும்
வன்மையுள்ளமானிடர் வாஞ்சையுடன்புசிக்கும் (கனி)

பொது,விருத்தம்.

அக்கனிகாயனைத்தினையுமெடுத்துவேந்தன்
அந்தணன்முன்வைத்திறைஞ்சி யருந்துமென்றான்
இக்கனிகாய்களைப்புசித்தென்னகம்நோக
எத்தனைநான்யான்பிரிவதென்றிகழ்ந்து
மைக்கிளிபோலிருப்பதைவாய் மடிப்பிற்கவ்வி
மறுத்தொருவர்புசிக்கமன மகிலச்செய்து
மைக்கிளியவிழியாளை வேந்தைச்சேயை
மாறுவான்வெடவெடத்துக் கூறுவானே (௰௮)

(வசனம்)இவ்விதமாய் மதிமந்திரியினாலே கொண்டுவரப்பட்ட கனி-காய்-கிழங்கு-பதார்த்தங்கள்யாவற்றையும் வாங்கிக்கொண்ட அரிச்சந்திர மகாராஜனானவன் நட்சத்திரையரின் முன்பாகவைத்து நமஸ்கரித்துப் புசித்தருளுங்க ளென்றுரைக்க நட்சத்திரையர் அவைகளைக்கண்டு இந்த அழுகலையும் செதுக்கலையுந்தின்று தேகத்துக்கு விரோதமான வியாதிகளாலேக்குறித்து எத்தனைநாளுன்னுடன் தொடர்ந்துவருவதென்றிகழ்ந்து தூஷிப்பான் சிலவார்த்தைகளைப்பேசி நேத்தியாயிருக்கிற சிலபழங்களை வாயிற்கௌவிக்கொண்டுசிலதையுமிழ்ந்து வேறொருவருக்குமுபயோகமில்லாதவகை செய்து இராஜன்முதலான நால்வரையும் கடுகடுத்துப் பேசுவது காண்க,

சுலோகம்.

ராஜான்னம்மதுராந்விகாதிம்ருதுலம் மாணிக்கபாத்ரஸ்திதம்
இங்கூசீரகலவணமரீசிபிவிதை சாகைரனேகைர்யுதம்
ஸாகம்ஸம்பகபூபசூபஸஹிதம்ஸத்யோக்ருதேநாட்யுதம் (ம்
ஸ்ரீமிருத்யுஞ் செயபார்வதிப்ரியவிபோஸா போசனம்புஞ்ச்யதா

(வசனம்) இராஜராஜர்களும்புசிக்கத்தக்கதேவாமிர்தத்துக்கொப்பாகிய மதுரமுள்ள மிருதுளமானநாலுவித சித்ரான்னங்களும் மனோக்கியமான அபூபசாதங்களும் பெருங்காயம் சீரகம்மிளகுமுதலான சேர்க்கைகளுள்ள நவரசங்களும் அறுசுவையுள்ள அபூபருப்பு கிர்தனா பாயஸ சகிதமாய் தயிர் பால் நெய் இவைகளுடனே மாணிக்கப்பள்ளயத்தில் வைத்து அந்தபார்வதி பரமேசுவரர்களுக் கர்ப்பிதஞ்செய்து ஆபோசனசகிதமாய் புசிக்கவேணுமேயொழிய இந்த அழுகிப்போன கனிகாய்கிழங்குகளை சாப்பிடமாட்டேன் தூரயெடுத்தெறிந்து [illegible]ள்ளாய்

௯-தரு-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்,

கண்ணிகள்.

இராஜன்.

௧ ஐயனேஅமுதுசெய்வீர்   நாகுதச்சத்
திரையனே   அமுதுசெய்வீர்
வையகந்தனில்வளர்   வாழைக்கனிமாங்கனி
துய்யபலாக்கனிகள்   துயரும்விளக்கனிகள்(ஐய)

பிராமணன்

௨, மன்னவாமனம்பொருந்தேன்   கனிகாய்ப்புசிக்க
மன்னவாமனம்பொருந்தேன்   யாமவடையில்லாமல்
அன்னமப்பளந்தோசை   கனிகாய்களைப்புசிக்க (மன்)
கன்னலமிருத்தழிந்த

இராஜன்.

௩, நாங்கள்வஞ்சனைசெய்தோமோ   நல்லசோர்க்கறி
தாங்களில்லாமற்   றந்தோமோ
பாங்கமரும்பழங்கள்   வாங்கிப்புசிப்போகில்
தாங்கலாம்வயிற்பசி   தமியேன்தபக்கந்திரும்(ஐய)

பிராமணன்

௪,வாதினைமிகச்செய்யாதே   அரிச்சந்திரமன்னா
வாயினா   லெனைவையாதே
காசிராஜன்மைந்தற்குக்   கடன்பொருள்யாவுந்தந்தால்
சோதிமறையும்முன்னே   சுருக்கில்நடந்திடுவேன்(மன்)

இராஜன்

௫.கடுஞ்சொற்சொல்வதுதன்மமோஎன்வாய்மொழியைக்
காதலிரு   தென்மன்மமோ
கொடுத்திடுங்கொய்யாக்கனி   கொடிமுந்திரிச்சங்கனி
எடுத்துதிர்க்குமாதனை   இனியதெங்கேறுங்கனி(ஐய)

பிராமணன்.

௬;நானதைக்கையாற்றொடேன்   கௌசிகமுனி
நாதன்சாட்சியாக   வெட்டேன்
மானவருண்ணும்படா   மாண்டைபேணிலோமாசி
யானதிலேபூந்தி   யருபரியுண்பதல்லால் (நா)

இராஜன்

௭. கந்தமூலங்கள்தேடாமல்   கானகந்தனில்
காந்தற்சோரெங்கும்   தேடுவேன்
தொந்துமிகவெழுந்து   வந்வதனையறிந்து
தொந்திரவுசெய்வி[illegible]   செந்தவத்திலிருந்த(ஐய)

பிராமணன்.

௮.கோபமென்மிகச்செய்கிறாய்   என்மீதில்மெத்த
கொடூரவார்த்தைகள்   கூறுராய்
ஆபத்துவந்ததானால்   வடிவயிர்பசியாதோ
தாபத்தைத்தீர்க்குந்தண்ணீர்தயிர்நெய்பாலன்னமல்லால்(ம

பொது-விருத்தம்.

மறையவனிம்மொழிகூறமன்னவன்சோர்ந்து
மனந்தளர்ந்துவீற்றிருந்தான்மயிலையொப்பும்
இறையவனந்தன்னடியையிறைஞ்சியேத்தி
எந்நெஞ்சகந்நெஞ்சோவுந்நெஞ்செவ்வ
தறைதனில்வைத்திருந்தகனிகாய்களுண்டு
தன்புலையருந்தியவர்தயங்கமாற்ற

குறையளவுகனிகளுண்டு நீரருந்திக்
கூடினூருறக்கங்கொண்டாடினரோ. (௰௯)

(வசனம்)இவ்விதமாயுரைத்த நட்சத்திரையருடைய கொடூரமானவார்த்தைகளைக்கேட்ட அரிச்சந்திரமகாராஜனானவன் சோர்வடைந்து மனந்தளர்ந்து உட்கார்ந்திருந்தார் தர்மபத்தினியாகிய சந்திரமதியானவள் நட்சத்திரையர் முன்வந்து அனேகவிதமாய் பிரார்த்தித்துஉம்முடையமனது கல்லோஎன்றும் உருகாதோவென்றுவேண்டும்போது அங்குவைத்திருந்த கனிகாய்களிற் சிலதையெடுத்துப்புசித்துக் குளிர்ந்தகெங்காமிர்தம்போலுள்ள தீர்த்தத்தைப்புசித்து அவர்களுடைய மனக்குறைதீர்த்து நீங்களும் புசியுங்களென்றுத்திரவுசெய்தபின்பு மீந்திருந்த மற்றப்பழங்களைப்புசித்து அங்குள்ளதண்ணீரினாலே தாகசாந்திசெய்துக்கொண்டு அரிச்சந்திரன் முதலானவர்களுங் கண்ணுறங்கும்போது லோகிதகுமாரனை ஏணைகட்டியதில்படுக்கவைத்துச் சந்திரமதிதாலாட்டுவது காண்க,

௰௮-தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

பல்லவி,

ஆராரோ-ராரிரரோ-ஆரிரரோ-ராராரோ

அநுபல்லவி.

சீரானதிரிசங்குமைந்தன் செந்தவத்தால்வந்துதித்த
பேரானயிறையவனே பெருமானேகண்வளரீர்(ஆரா)

சரணங்கள்.

௧. தேனேதேவாமிர்தமே தேவர்தருமாரமுதே
வானேறுமாமதியே வள்ளலேகண்வளரீர்(ஆரா)
௨, மானேமரகதமே மன்னவர்கள்மன்னவனே
கோனேயென்றீவினைகட்கோர் அருமருந்தேகண்வளரீர்(ஆரா)
௩, வானோர்தினம்புகழும் வண்மைமிகுவள்ளலனே
மீனோன்முதல்துதிக்கும் மெய்யவனேகண்வளரீர்(ஆரா)

கொச்சகம்,

வேந்தன்மகனைவிழிமஞ்சனமாட்டக்
காந்தன்மலர்க்கைவழியேகாரிழைகண்ணீர்சோர
சாய்ந்தவிடம்பார்த்துதடித்துமிடித்துமழைகாள்
சேர்ந்தவழிப்பெய்யியநீர்சென்மியென்றன்மாமுனிவன்(௧

(வசனம்) அகோகேளுங்கள் வேந்தர்களுக்கதிபர்களே இவ்விதமாய் லோகிதகுமாரனைத்தாலாட்டி நித்திரைசெய்வித்த சந்திரமதியானவள் கண்ணுறக்கமுறும்வேளையில் விசுவாமித்திரரானவர் மாரிக்கூட்டங்களையும் காற்றினங்களையும் ஏவி அரிச்சந்திரனிருக்கிற எல்லைமுழுவதுங் கன்மாரியாகச் சொரிவிக்கென்று [illegible]

[illegible]போது ஜலப்பிரளயகாலம்போலேமழைபெய்யத் தொடங்குவது காண்க,

௰௯-தரு-இ-ம்-பைரவி-திரிபுடைதாளம்,

பல்லவி;

மழையிடிகுமுறலுண்டாச்சே மாதவன்மாய்கை மழையிடிகுமுறலுண்டாச்சே

அநுபல்லவி.

மழையிடிகுமுறலாலே மண்ணும்விண்ணுள்ளோர்திகைக்க
மாதவமுனிவசிஷ்டர் மனவன்மத்தாற்பகைக்க (ம)

சரணங்கள்,

௧, மதகரித்திரர்கள் அலறுமே சுழற்காற்றினால்
மரக்கள்முறிபட்டலருமே குமிறிமின்ன.
உதகவருவிகளா ஊர்வனங்கள்தெளிய
உத்தமமுனிவன்செய் ஊழியெனத்தெளிய (மழை)
௨, அண்டபிண்டங்களும்நடுங்க மதிதிகைத்து
அருந்தவரோவருப் ஒடுங்க ஆலாலம்போலக்
கொண்டலேழுந்திரண்டு கூடவெள்ளப்புரள
குவலயத்துள்ளசீவ கோடிகளும்மொரள(மழை)
௩, செடிகளினடிவேரொழிய வனத்திலுள்ள
சில்லுண்டிப்பூண்டுகளழிய அனுதினமும்
நெடியவுலகையாண்ட நிருபன்மனஞ்சோதிக்க
நிறைசெல்வரோவர்க்குமிந் நீதிதனைப்போதிக்க(மழை)

கொச்சகம்,

மங்கைநனைந்துமகனனைந்துமன்னனனைந்
தங்கைதடுக்கி[illegible]மெய்நடுங்கி
பங்கமதுபட்டுபற்[illegible]டென்றடிப்பத்
துங்கமணிமுடியானுக்கிரனைப்பார்த்துரைப்பான்

(வசனம்) அகோகேளுங்கள்ஞானசிரோமணிகளே இப்படியாக சந்திரமதியும் லோகித குமாரனும் அரிச்சந்திர மகாராசனும் தேகமுழுதும்நனைந்துகைகால்கள் நடுக்கமுற்று மெய்யெல்லாம் வெடவெடர்த்து மதிதளர்ந்து பற்கள்கிட்டிப்போய் நடுக்கமுற்றுதறும்போது நட்சத்திரையனைப்பார்த்து அரிச்சந்திரமகாராஜன்வணக்கமுடனே அடிபணிந்துசொல்லுவதுகாண்க.

௨௰-தரு-இ-ம்-அடாணா ஆதிதாளம்.

கண்ணிகள்,

இராசன்-

௧. மாறுவதில்லையிதுக்கென் செய்வோம் மறையவாயிம்
மழைதனிலிருந்தென்னமா யுய்வோம்

ஆறுபெருகுமுன்னே பட்டணஞ்சேரவேணும்
தாறுமாறுசொல்லாமல் தயவுசெய்தெழுந்திரும்(மா

நட்சத்திரயன்,

௨, ஆறுதலைசொல்ல வெறுத்தாயோ அரிச்சந்திரா நீ,
யாருக்காயுன்மனதுநொந் தாயோ
சீறுமரவைபோலச் சேதிசொல்வாய்நீபோமூர்
தோறும்வந்துவுனது தொண்டுசெய்யவந்தேனே (ஆறு)

இராசன்

௩. எந்தநகரில்வந்தடைந்தோ மையா நட்சத்ராயனே
எழில்மிகுங்காசிசோட்டு மையா
சொன்னபொருட்களெல்லாஞ் சுருக்கிற்கணக்குச்சேர்த்து
தன்னரசயோத்திக்கு நானனுப்புறேனையா(எந்த)

நட்சத்ராயன்,

௪, மன்னவாவுனைத்தொடர்ந்துவந்து விசுவாமித்திரர்
மாமுனிதாருக்காய் மெய்நொந்து
அன்னமாகாரமற்று அனுதினம்நடையுற்று
இன்னப்படவிதியோ செல்வமிருத்துப்பேசும்(மன்னவா)

பொது-விருத்தம்.

அந்தணனிம்மொழிபுகலஅறிவொழிந்த
அரசனுமாதரசியுமத்திரியுமேங்கி
வந்தடியில்மலர்க்கரங்கள்பு[illegible]ல்லையா
வழித்துணையாயெழுந்திரென[illegible]ப்போற்ற
மூத்தமுனிமொழியுணர்வால்முயன்றெழுந்தான்
முன்னவன்றன்சிறுவனைமந்திரிதோட்கொண்டான்
செந்தவனுமந்திரியுஞ்சிறந்தமாதுஞ்
செல்லுவார்வழிநடக்கப்புல்லுவாரே ௨௰

(வசனம்) இவ்விதமாய் தாருக்குவந்த நட்சத்ராயனென்னும் பிராமணனவர் சொல்ல மதியினமுற்ற அரிச்சந்திரனுஞ்சந்திரமதியும் சத்தியகீர்த்தியும் ஏக்கமடைந்து சரணாகதர்களாய் பாதம்பிடி எம்மையினி நடைவழிக்குத் துணையானவரே எழுந்தருள்வீரென்று பலவாறுதுதிக்க அன்று விசுவாமித்திர ருரைத்ததையெண்ணி அங்கிருந்தெழுந்தான் லோகிதகுமாரனை சத்தியகீர்த்தியானவன் தோளிலெடுத்துக்கொண்டான் அரிச்சந்திரனும் சந்திரமதியுங்கூடி ஸ்ரீகாசிவிஸ்வநாதரை தியானித்துக்கொண்டு வழிநடக்க யத்தனப்படுவதுகாண்க,

௨௨-தரு-இ-ம் ஆனந்தபைரவி அடதாளம்,
(கண்ணிகள்,)

சந்திரமதி,

௧, வழிநடந்துவாருமன்னவனே மலர்ப்பாதம்பதறுமல் வழிநட
குழிநரிகளுங் கைக்கூட்டமும் (ந்து
கூக்கூவென்றிதோ கூவியோடுது(வழிநடந்)

அரிச்சந்திரன்,

௨, மடந்தையேமெள்ளநடந்துநீவருவாய்மடமானேதேனே - ம
டந்தனைத் தப்பாமல்கடந்து
தங்கியமனை மயங்கிடாமலே(மடந்)

சந்திரமதி,

௩, சத்தியகீர்த்திக்குமுற்றதிவ்விதியோ-சாகேதத்தோர்புரஞ்சத்ய
நித்தியகர்மானுஷ் டானதானதர்மம்
நீக்கியேநெடு நாளும்நம்முடன்(சத்திய)

சத்தியகீர்த்தி,

௪, தாயேநீயும் தந்தையுந்தயங்க-பரிதாபமொழிந்து - தாயேநீயு
நாயேனு டாளிற்றேவர்கள்
நகைத்திடார்களோ நான்மறைபுகழ்(தாயே)

பொதுவிருத்தம்;

வழியறியாமற்காலாற்றடவிக்கொண்டு
வழிந்தோடும்விழிநீரினருவியாலும்
சுழியவழிந்தோடுமழைத்துளியினாலுஞ்
சாமுழுதும்வரம்புவரும்பாயறுத்துக்
கிழியவிடுந்தரைதனிலேநடக்கும்போது
கிடுகிடுப்பி[illegible]னுட்புமிடிமுழக்கும்
அழியவழிகாணுமலைந்தலைந்து
அறைகுவார்மனவெதும்பிக்கறைகுவாரே

வசனம்,

அகோ கேளுங்கள் குறுநிலந்தரசர்களே இவ்விதமாய் அடர்வனத்திலே நடக்கும்போது வழிதப்பிப்போய் கால்களாலே தடவிக்கொண்டு தாலாதாரையாய் பெருகியகண்ணீரினருவியாலும் பாளம்பாளமாய் அறுத்துக்கொண்டோடப்பட்ட மழைத்துளியின் திரளினாலும் அந்தவனமுழுதும்பாறுபாறாயறுத்து வெடிப்புற்ற நிலத்திலேநடக்கும்போது முன்னிலு மிகுதியான மின்னற்படர்க்கையும் இடி முழக்குங்கண்டு இவைபொழியும்வகை இல்லையேயென்று ஒருவர்க்கொருவர் மனோ வேதனையினால் தேவதேவதைகளான மும்மூர்த்திகளையும் துதித்துக்கொண்டு வழிநடப்பதுகாண்க,

௨௨-இ-ம்-ஆஹிரி-அடதாளம்.
(கண்ணிகள்,)

(அரி) அரிவையோநாமிந்த அவதிப்படுவோமென்று
அறிந்திலமேமதியே ஐயன்
திருவுளமிப்படியானாலுமிந்தத்
தீவினைக்கென்னசெய்வோம்
(சந்திர) கூறினசத்தியக்கூற்றுவனுச்சுதே
குவலயந்தனில்மன்னவா
மாறுவதிலேசண்டமாருதமோங்குது
மானிலயதறுதையோ
(அரி) வில்லம்புபோல்மழை விழுந்துமெய்யிற்றலைக்குதே
விமலனேயென்னசெய்வேன்
அல்லற்செய்திடுமுனிவல்லமையறியேனிவ்
வவதிக்கென்னசெய்வேன்
(சந்தி) அண்டகோளமுட்டக்கொண்டல்குமுறுதே
அடிவயிறிடிக்கிடுதே இப்போ
தெண்டிசையும்நடுங்கவிடிமுழக்கமுழங்கு
தீசனேயென்னசெய்வேன்
(அரி) அட்டைசுருட்டைகுரட்டைகள்மிதிபடு
தையனேயென்னசெய்வேன் குறுங்
கட்டைதடுத்திடுதாழ்வாய்க்கட்டைசிதறிவிழுந்தேன்
கஞ்சனேயென்னசெய்வேன்
(சந்தி) மரத்தின்கிளையொடிந்துமார்மீதில்விழுகுதையோ
மாதவாயென்னசெய்வேன் சீட்டிற்
பெருத்தபுலிகரடி பிணைந்துவருகுதிந்தப்
பெருவினைக்கென்னசெய்வேன்
(அரி) கருந்தேட்கட்டுரவெந்தன்காலிற்கொட்டுதே
காலகாலனேயென்னசெய்வேன் இப்போ
திருந்தவோரடிபேர்க்க வழிசருக்குதே
ஈசனேயென்னசெய்வேன்
(சந்தி) ஆவிபவனியெங்குந்தாவியலையுதிந்த
அவதிக்குயானென்னசெய்வேன்
காவிற்படுத்துயரைக் கண்டுமகிழ்ந்திடா
காசிநாதாவென்னசெய்வேன்

பொதுவிருத்தம்,

காவில்வழியருவிகளால்நலிந்தலைந்து
கழுத்தளவுவாயளவுகலிங்குகாவாய்

கூவியமான்புலிசிங்கந் திரியுங்குன்றும்
குளைகணைவாய் படுவோடை யிவைகள்நீந்திப்
பாவிகள்யாமினிவிடிந்து நடப்போமென்று
பரிகுலத்தாசனுடை பலவுமாற்றத்
தாவிவரும்போதமிகுபூதப்பேய்கள்
தனைக்கண்டான்கொண்டலிற்கதிரனைகொண்டானே (௨௨)

(வசனம்) இவ்விதமாய் நடக்கும்போது சாலகத்திலே வழிந்தோடப்பட்ட நீரினருவிகளாலேமிகுந்த மிசையுற்று பள்ளம்படுகுழிகளிலுள்ள சலத்திலேகழுத்தளவு வாயளவுநனைந்து கலிங்குகாவாய் முதலான நீர்ப்பாவுகளைத்தாண்டி மிருகங்கள் சஞ்சரிக்கின்ற குளைகள் கணவாய்களைக்கடந்து நெடிய-மடு-ஓடைகளைநீந்திக்கொண்டு கரைசேர்ந்து இனிநடக்கமுடியாது நாம்மகாபாபிகள் பொழுதுவிடிந்து நடப்போமென்று அவரவர்கள் கட்டியிருக்கின்ற கந்தைகளைசாற்றுமுடியாகவிசி உலத்துவோமென்று நினைந்துவரும்போது எண்ணமுடியில்லாத பூதப்பிரேத பிசாசங்களைக்கண்டு ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருப்பதுகாண்க,

௨௩-தரு-இ-ம்-போகணம்-அடதாளம்,
பல்லவி,

வருகுதுபார்பூதப் பேய்கள்-இதின்
வகையுரைக்கச்சேடன்றனக்கு மூண்டாவாய்கள்

அநுபல்லவி.

பெருகுதுவரவரப் பின்முன்னுயச்சேய்கள்
[illegible]த்துடராதோர்ப்ரபலமான நோய்கள் (வருகு)

சரணங்கள்

௧, பார்த்தோரைத் திய்த்திடுங்கண்கள்-இந்தப்
பாரெல்லாமண்டிப்-பார்க்குமிவையினெண்கள்
எரித்ததெல்லாமலைகட் குண்கள்-மிக
ஏக்கமடைவாரவை கிளைக்கண்டபெண்கள்
ஆத்தமாட்டோமிவை யாவுந்தப்பியெதிர்த்தால்
கூத்தனுக்கிளையின்றகெடிப்போமுபதேசத்தால் (வரு)
௨, வானைத்தொடுமிவைகள் தேகம்-இந்த
வடிவுகட்கிணையாமோ வளருங்கார்மேகம்
தேனைப்பழித்தசொல் வனைகம்-மறு
தெளியாதெருக்காலுமிவைகள் செய்யனுபோகம்
சேனைக்காவலனண்ட, சீமைகள்போனாலும்
மோனையுஞ்சௌரியமும்முறிடுபோயெக்காலும் (வரு)

ரு, ஓங்காரஞ்செய் தலறிக்கொண்டுஐயோ
ஓகோஆகாஊகூ வென்றலறிக்கொண்டு
ஆங்காரமாய்ச் சீறிக்கொண்டு-கையி
லகப்பட்டசீவராசிகளை யமுதாய்க்கொண்டு.
ஊங்காரங்கொண்டாகுதி கொண்டவுதவகன்போல
ரீங்காரங்கொண்டுவீ ரிட்டுக்கரிக்கூட்டம்போல்(வரு)

பொது-விருத்தம்,

எண்ணிறந்தசங்கிலியன்வீரன்சாத்தான்
இடுகாடன்சுடுசொல்லன் எல்லன்சங்கன்
உண்ணிறைந்தகருப்பண்ண னந்திச்சாமா
னொதியடிவீரன்சடைய னொதுங்காக்கள்ளன்
மண்ணிறைந்தசங்கிலியன் தலைவிரித்தான்
மதுவீரன்கரியன் மயானருத்ரன்
தண்ணிறைந்ததலையாரியிவர்களேகுந்
தழைகண்டானவைதிரியும் வழிகண்டானே (உரு)

(வசனம்) இப்படியாக அனேகவிதமான பெயர்களையுடைய பேய்க்கூட்டங்கள் வருகிற ஆரபாரத்தைக்கண்டு அரிச்சந்திரமகாராஜன் மனோரஞ்சகுண சீலனாகிய மந்திரிக்குச் சொன்னபோது தனதும்பியூகத்தினால் விசுவாமித்திரருடைய மாய்கையினால்வருகிறதென்றுணர்ந்த மந்திரியானவன் இராஜன்மனதைத் தேற்றுவதுகாண்க,

உச-மந்திரிசொல் தரு-இ-ம்-சங்கரா-அடதாளம்.

பல்லவி,

பேய்களிவைகளல்லமன்னா-விசுவாமித்திரர் - பித்தலாட்டமிதெல்லாமென்ன

அநுபல்லவி.

மாய்கைக்குணமிதெல்லாம் மன்னாமருங்கினில்
மகிழ்ந்துவருமோமனங் குன்ன
வேய்கள்மலிந்தகாட்டில் வீராதிவீரர்க்கும்
வாய்மைதவறுன்றோவண்மை மிகுசூரர்க்கும்(பே)

சரணங்கள்.

எ, எக்கமடைந்தோடாதேயாரீர் இவைகளின்
இயல்பையெல்லாஞ் சொல்வேன்வாரீர
நோக்கிக்கண்டொதுங்குதுயாரீர் மிகமெலிந்து
நொந்துமனஞ் சோறுதுயாரீர்
துக்கங்கொள்வானேஅந்தத்துறவோனிமைப்பொழுதும்
புக்கமழுமார்பனே புகல்வீர்சகமுழுதும்(பே)

உ- சத்யசந்தனர்கள்முன்செல்ல பூதப்பேய்கட்கு
சாத்தியமாமோ எளிதிற்புல்ல
நித்யநேமக்குறைவோசொல்ல காளிகாதேவி
நினைந்திடாளோ பேய்களைவெல்ல
அத்யந்தம்சுயபலமடைவோ போர்க்குறையில்லை
பத்யமாயுரைத்திட்டேன் பதங்கண்டவர்செய்தொல்லை
ரு, செகதீசன்கிருபைநமக்குண்டே எவரால்நமை
ஜெயித்திடலாஞ் சொல்வீரண்டே
மகவீசன்செய்வதுவருமீண்டே இதுகளெல்லாம்
மந்திரங்காணத் துண்டுதுண்டே
இகத்திலும்பரத்திலும் இசைந்ததுமதுகீர்த்தி
சுகத்திலிருப்போமென்றும் சோதிகுலத்தின்மூர்த்தி(பே)

பொது-விருத்தம்,

பாதவமுற்றெழுமைம்பொழிறன்னி
லேதமிகுத்தவொய்தியநாளின்
மாதவனேவியவல்கணப்பேயும்
பூதமும்வந்துபுகுந்தனவன்றே (உச)

(வசனம்) அகோகேளுங்கள் ஏகாக்ரசித்தர்களே இந்தப்பிரகாரமாய் வனவாசிகளான அரிச்சந்திர மகாராஜன்முதலான யாவரும் தத்தித்தடுமாறி அடர்வனத்தில் வருகின்ற தருணத்தில் விசுவாமித்திர மகாமுனீஸ்வரராலே ஏவிவிட்ட பூதப்பிரேத பசாசங்கள் மனந்திகைக்கும்படி ஆரப்பாரத்துடனே இராஜன் முதலானவர்களைச் சூழவருவதுகாண்க.

உரு-தரு-இ-ஜ-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி,

பூதப்பேய்கள் சூழ்ந்துகொண்டவே-மாதவன்விட்ட
பூதப்பேய்கள் சூழ்ந்துகொண்டவே

அநுபல்லவி

பூதப்பேய்கள்சூழ்ந்துகொள்ள பூபன்மனமஞ்சித்துள்ள
பூவையுமந்திரியுஞ்சேயும் புகரவன்றாள்பூண்டகையும்
புண்ணில்வேல்நுழைந்தாற்போல புகலவேசுக்ரனுஞ்சாலப்
பூதப்பேய்களெண்ணிறந்த பூமியின்மீதிற்கலந்த
பொன்னின்மலைவெள்ளிமலையும் நாமக்கிரியும்
மன்னியமந்தாவிந்தமும்
பன்னியகந்தமானமும் நீலகிரியும்
மின்னியநலமேகூடமும் சித்திரகூடமும்
துன்னியமலைகள்யாவுந்தூறுதூறாகப் போய்த்தாகவும்
கன்னியமனத்தார்மீதிற் களிப்புடன்வீழ்ந்திடும்போதிற்

கற்றவர் வழிகாணுமற் சுற்றுவார்-வெள்ளியுநொந்து
பற்றுவார்-செடிக்குச்செடி தொற்றுவார்-இப்படியாக(பூ)

சரணங்கள்,

௧, எரிதழலெண்டிசையுமூடுமே   அண்டபிண்டமும்
எழுந்தெழுந்து   குதித்தாடுமே
எரிதழற்கொழுந்துவிழ   எத்தலத்துள்ளோரும்வாட
எப்பிறப்பினுமில்லாத   எவ்வுயிர்களும்பொல்லாத
வெயிற்றினைக்கண்டோர்பிரமிக்கஇரவலனுந்தாக்ரமிக்க
எல்லையில்லாக்கவலைக்கொள்ள எழுந்துவந்தவைகள்துள்ள
எங்கேனுடியொளிப்போமென்பார்   இந்தயிரவி
வெப்படிகண்களிப்போ   மென்பார்
எத்திசைநோக்கிப்போவோமென்பார்-மறையவனை
எற்றிமனம்பொறுப்பீரென்பார்   மிகவணங்கி
எற்றையிற்போராடன்னின்றனவியவதையெல்லாஞ்சென்று
தூற்றையிற்கற்களைவாரி   துன்பமுற்றோர்தூல்வெசாரி
துலங்குவார்-துதித்தீசனைக்கலங்குவார்-அறிவழிந்து
நலங்குவார்-உயிர்போனுற்போ விலங்குவார்இந்தவேளையில்

௨, ஐயனுடலறுசுவையெனும்   சிலதுபேய்கள்
அரசனுட   லுழுதாமென்னும்
தையலுடலைத்தாவென்னும் தந்திடிவ்வுடலையென்னும்
பையநடப்பதேனென்னும்-பாச்சலில்நடப்பீரென்னும்
செய்யவனைக்கொள்வீரென்னும்-சிறுசிறுகூர்செய்வீரென்னும்
எய்பத்தாமதமேனென்னும்-எட்டியாருமுன்பின்னென்னும்
வெய்யவகுலத்தலைவனும்   வேந்திழையுஞ்சேயும்
ஐயுறவுகற்றியாரையும்
வையம்வாழுமுள்ளவென்றாரும்   தர்மமேதுணை
செய்யவந்தெப்பிழைகளுந்தாரும்   ஆயுள்ளளவும்
பொய்யனுவளவும்யாங்கள்புகன்றிடோம்   வேண்டியநீங்கள்
செய்யவந்தசெய்கையுங்கள்-சித்தமகிழ்ந்துசெய்யுங்கள்
சேருவோம்-மனதுமிகத்   தேறுவோம்பரமபதஞ்
சேருவோம்-தீராவினைகள்   தீருவோம்-என்பவர்களை(பூத)

௩, புல்லுமெக்களுங்களுமென்றார்   முனிவன்சொல்லை
சொல்லுவீர்க   ளிக்கணமென்றார்
சொல்லுவீர்நொடியிலென்றார்   கூறுகூறுவீரென்றார்
அல்லும்பகலினுமுங்கள்   அரும்பசிகளுந்தீருங்கள்
வில்லுமில்லைவாளுமில்லை   வீம்புசெய்வதினுற்றொல்லை
வெல்லுமெங்களையிவ்வேளைவெவ்வினை.பொழிந்தோர்நாளை

செல்லுமென்னப்பேய்கள்சொல்லுமே   நாங்கணுங்களை
கொல்லுமவரல்லவென்னுமே
நில்லுப்நில்லுமென்றலப்புமே   முனிசொற்படி
சொல்லுஞ்சொல்லுமென்றியம்புமேஉங்களுக்கெதிர்
சொல்லுவதில்லையென்றந்த நல்லுலாபுகல்நரேந்திரன்
கொல்லுவதுங்கள்தருமம்   புல்லுவதெங்கள்தருமம்
போற்றினேம்-பதங்கள்பணிந்தேற்றினேம் மனேமலர்கள்
தூற்றினேம்-உலகிற்புகழ்சாற்றினேமென்பவர்களைப் (பூத)

பொது-விருத்தம்

காளிகூளிகளலகைப்பூதப்பேய்கள்
காவகலச்சேவல்களுங்களித்துக்கூவத்
தோளின்மிகுமன்னவன்றன்றுயர்தணிக்கத்
தோன்றினனற்றேரின்மிசைச்சோதிவேந்தன்
வாளிமழைமாரிபொழிந்தோயக்கண்ட
வலியவிமகரனொளித்தாளுழ்வேணி
லாழிஜனகன்பதத்திலெழுகங்காஜ
லங்கண்டார்தேவர்கடலங்கண்டாரே   (௨௫)

(வசனம்)அகோகேளுங்கள் ஸற்சனர்களே இவ்விதமாய்வந்தபற்பலபூதப்பேய்கள்யாவும் காட்டைவிட்டுப்போய் விட்டபோது காலக்கோழிகள்கூவுமுன் புஜபலபராக்ரமனுன அரிச்சந்திர மகாராஜன்துயர்தணிக்கவெண்ணி சூரியபகவான் தேரூர்ந்துகீழ்திசையிற்றோன்றினன் மன்மதன்கணைகளைப்போலே பொழிந்தமழை ஓயக்கண்ட சந்திரபகவானும் ஆகாயத்தில் உற்பத்தியாகிய கங்காஜலத்தையும் தேவதேவர்கள் புகழப்பெற்ற முனிவர்கள் வசிக்கின்ற ஆச்ரமங்களையுங்கண்ட அரிச்சந்திர மகாராஜனானவன் சந்திரமதிக்குகங்காதேவியின் மகிமையைச்சொல்லி நடையிலுண்டாகிற இளைப் பாற்றிக்கொண்டு வருவதுகாண்க,

௨௬-தரு இ-ம்-அடாணா-அடதாளம்

பல்லவி.

மங்கையரோநாளும்-மாதவத்தோர்துதிக்கும்-மாநதியிதுதானே

அநுபல்லவி.

செங்கைரண்டையுங்கூப்பிச்   சேவிப்போர்கலிதீரும்
சேயிழையேயிதனால்   சென்மபல்யப்பேரும்(மங்)

சரணங்கள்.

௧, மாதவமுனிவர்கள்   துதிக்குமகாநதி
மதுசூதனன் பதத்தி   லுதித்தமகாநதி
பாதிமதியணியும்   பரமசிவன்சிரத்தில்
நீதியாகப்பரவும்   நிர்மலநதியிது(மங்)

௨, பரோதன்தவத்தினுற்   பாரினுதித்தநதி
பக்தஜனங்கட்குற்ற   பாவந்தீர்த்திடுநதி
ஸகாதனுஜருக்குப்   பகருமோட்சமருளும்
ஸத்யநிலைநிறுத்தும்   நித்யமகாநதி(யங்)
௩, கதிதருபுரிவழி   கடக்கும்படி துறையாம்
கங்கைநதியிற்பொங்கிக்   காணும் அலைகளெல்லாம்
விதிதவிழ்க்குந்தேவர்க   ளாகிவிளங்குமணல்
நதிக்குமுபநிடத   சாரமாகுந்தோயங்கள்(மங்)
௪, மோட்சவழிகட்டாகி   மூலாதாரமிதெனச்
சாட்சியாயிந்தச்சத்தம்   ஜகத்திலுள்ளோர்களுக்கு
தீட்சணமாகக்கேளாய்   தேவமுனிவரிதின்
வீட்சணத்தினுலல்லோ   விரைவிற்புகழ்படைத்தார்(மங்)

பொது-விருத்தம்.

மங்கைச்சந்த்ர மதியுடனேவரும்
சங்கையில்லாத் தவத்தினரொன்னவே
கங்கையாடிக் காசிமாநகர்நோக்கியே
பங்கயநிகர்ப்படவினிலேறினர் (௨௬)

(வசனம்) சந்திரமதிமுதலான ஐந்துபேருமாய் அரியதவத்தில் மிகுந்தவராய் கங்கைமாநதியில் தீர்த்தமாடி நித்யகர்மானுஷ்டானுதிகளை முடித்துக்கொண்டு ஸ்ரீசிவகாசிக்ஷேத்திரத்தை நோக்கி நடக்கக்கருதித் தாமரைப்பூவினிதழ்களுக்குச் சமானமானமரக்கலத்திலேறி சர்வக்ஞசொரூபரான ஸ்ரீகாசிவிசுவநாதனை த்யானஞ்செய்துகொண்டு படவிலேறி வருவதுகாண்க.

௨௭-ஏலப்பாட்டு-இ-ம்-உசேனி-திரிபுடைதாளம்,

பல்லவி.

ஏலேலோ-ஏலேலோ-தத்தையாள்-ஏலேலோ-ஏலேலோ

அநுபல்லவி.

ஆலாலமுண்டசிவன்-தத்தையா - ளிணையுமுமையருள்மிகுத்தோன்
சாலசத்ய-தர்மந்-தவறுகுண-சீலனரிச்சந்திரன் சிறந்தகங்கைகண்டான்(ஏலே)

சரணங்கள்.

௧, குருவசிஷ்டர்   தன்னருளால்-தத்தையாள்
குலமுழுதுங்   கீர்த்திபெறப்
பெருந்தவக்கோ   சிகமுனிவர்-தத்தையாள்
பெருகச்செய்த   திருவருளால்
அருந்தவரூப்   அரன்முடிதனில்
அபருங்கங்கைகண்   டமலனகினன்   (ஏலேலோ)

௨, முன்பிறப்பிற்   செய்தவத்தால்-தத்தையாள்
மூவர்முத   லோர்புகழும்
அன்பின்மிகுத்   தவருறையும்-தத்தையாள்
அரனமருங்   காசிதன்னில்
இன்பமாய்வசித்   திருந்திடநினைத்
திருடிக்கனைத்துமீபு   துகங்கைகண்டான்(ஏலேலோ)
௩, ஸத்தியதர்மந்   தனில்வழுவான்-தத்தையாள்
ஸற்சனர்கள்   பதந்தொழுவான்
நித்தியநைம   நிஷ்டையுள்ளான்.தத்தையாள்
நிருபற்கெல்லா   மிகுபுகழான்
அத்யத்யமிவ   னுதித்தன்குலத்
ததிபரின்மிக   வருந்தவனுயினன் (ஏலேலோ

பொது-விருத்தம்,

நதியதனைத்தாண்டமரக்கலத்திலேறி
நான்மறைநூறாறையுநன்மனத்திலேற்றிக்
கதியடையுந்துறையிதுதானென்றிறங்கிக்
காரிழையும்வேந்தனுமந்திரியுஞ்சேயும்
விதிமுறையைவென்றவர்போற்கரையிலேற
வெற்றிமிகுசெங்கதிரோன்வேலைபுக்கான்
மதிமிகுத்தோரங்கடைந்துவிசுவாமித்திரன்
மனங்கண்டார்வலியவிலங்கினங்கண்டாரோ , (௨௭)

(வசனம்) அகோகேளுங்கள்வேந்தர்களே இவ்விதமாகக்கங்காநதியைத்தாண்டித் தோணியின்மீதேறி நாலு வேதமும் ஆறுசாஸ்திரமுந் துதிக்கப்பட்ட ஆதிமூலத்தைத் தெளிந்தமனதுடனே தியானஞ்செய்துகொண்டு அக்கரைசேர்ந்து பரகதியடையப்பட்டவழிஇதுவேயென்று படவைவிட்டிறங்கி அரிச்சந்திரமகாராஜன்-சந்திரமதிலோகிதகுமாரன்-சத்தியகீர்த்தி முதலான யாவரும் விதிமுறையறிந்த ஆத்மக்ஞானிகள்போல கங்கைக்கரையேறினர்கள், சூரியபகவானும் கடலில்மறைந்தான் புத்திசாலிகளானயாவரும் அந்நதிக்கரையி லிருக்கும்போது விசுவாமித்திர முனிவரதுமாய்கையால் வரப்பட்டமிருகங்களின் கூட்டங்களைக் கண்டு பிர்மா விஷ்ணு மகேஸ்வரர்களென்றும் திரிமூர்த்தி ஸ்வரூபங்களாகத் தியானிப்பதுகாண்க-

௨௮-தரு-இ-ம்-கல்யாணி அடதாளம்-

பல்லவி,

வனந்தலில்வாழுந்தேவர்களே-வானோர்-வாழ்த்தியமூவர்களே

அநுபல்லவி,

தனந்தாவொருவழியுமில்லைமாதவமுனிருணந்தனைத்தரினுங்கள்
இனந்தனக்கிறை யாகுவோமல்லது
இல்லையிதிற்குறை வில்லைவெகுதொல்லை (வன)

சரணங்கள்,

௧, பாவியாக்கன் கடுந்தவத்தினுக்கஞ்சிப்
பாரெல்லாமவனுகச் செய்திரோ-நானும்
ரிஷுந்தேவர்களுரிஷுமுள்ளோரைப்
பயந்தவனடிதொழச் செய்திரோ-எங்க
ளியுடற்பொருளியாவும்விசுவாமித்திரர்க்
களித்திடமேனும் வகுத்திரோ-நீர்
அறியாததோவுமையன்றியுண்டோயிந்த
அவதிவெங்கட்கு வகுத்திரோ-உம்மைக்
கூவியழையாதார் முன்வந்திராதுவெங்கள்
குலவன்மைதவராத குரிசிலர்புண்ணியங்கள்
தாவிவந்துயிர்கவ றச்சாம்புவந்தராம்
தரணியிலவதரித் தெழுந்தீர்விசுவாசராய்
வலியமுனிவருக் கிதஞ்சொல்லீரொமைப்புல்லீர்
வற்றிடுவீர்துய ராற்றிடுவீர்புட்ப(வனந்தனில்)

௨, எங்கணுமொருகுடைக ழோண்டயிரண்யன்செய்
இடுக்கத்தவிழ்ந்திட முன்னாளில்-நல்ல
இறையவரெவர்களு முறையிடவினவியவ்
விபல்பினையறிந்தெழுந் தன்னாளில்-நர
சிங்களுருபமெடுத்துத்துயாற்றிய
சேதியல்லாம்யா மறியோமே-அந்தச்
செயலையொழித்துத்தனித்தொருசிங்கமாய்ச்
சேவைதருவதைக் குறியாயோ-மிக
பங்கப்படாறெம தாருயிர்யாவையும்
பாதுகாப்பதுன் பறமென்பதாலுய்யும்
திங்கள்குலத் தவதரித்தேமிக
தீனர்களையதித் தாதரித்தாய்ஜெக
மெங்களுமொன்று யுதித்தமாதவனே
இருடிகடனைழித் தேர்ப்பாயாதவனே (வனந்த

௩. இதஞ்சொலியுங்களை எங்களுயிர்கவர்ந்
திடவிடுவித்திடு மெழிலேதோ-முக்கண்
ஈசன்மாலயனறியத்தரவேண்டிய
யிருடியின்கடன்கொடா தொழிவேதோ-தவப்

பதஞ்சலியும்வியாக்ர பாதருமுக்கண்ணன்
பாதசேவைதனில் மிருந்திரே-மூனு
பார்த்தபேர்கட்கெலா மேத்தவித்யாஸமாய்ப்
பழுவத்துள்வந்தேன்சென் மித்திரே
அதஞ்செய்யவர்தீ ரதுவெங்கள்மனமுற்றேம்
அவனியிற்பிறப்பென்று மாசைகளற்றேம்
சதஞ்செய்யுஞ்சத்திய வார்த்தையொழியாமல்
சதயரிச்சந்திர னெனும்பெயரழியாமல்
திதமுஞ்செய்தவமுங்கள் நேசம்பலித்தது
திரந்தாமுங்கதிர் குலவொளிசொலித்தது(வனந்த)

பொது விருத்தம்,

நீதிவழாதவர் நீர்மையுணர்ந்தே
தாதிவிலங்குகள் சார்விடமண்ணிற்
றேதியவேந்த னுரைத்தகுறிப்பால்
வேதியன்மற்றொர் விசாரமுரைப்பான் ௨௮

வசனம்,

அகோகேளுங்கள் மதிமிகுந்தகுரிசிலர்களே அனுவளவும் நீதிவழுத அன்னோர்களின் நெறியுணர்ந்து மாயாகற்பிதமான மிருகாவளிகள்யாவுந் தத்தமிடங்களிற்சார்ந்தன அரிச்சந்திரமகாராசன் வினவியசிலசொற்களின் குறிப்பினால்நட்சத்ரையானவர் கபடவஞ்சகமனத்துடனே ஒருவிசேஷஞ்சொல்லுவதுகாண்க,

நட்சத்ரையர்சொல்லுதல்

௨௯-தரு-இ-ம-ஆனந்தபைரவி- ஆதிதாளம்,

பல்லவி.

புரந்தானேயிப்போ வந்தவினைகொஞ்சம்
பொறுக்கொணாதினிவருமே

அநுபல்லவி.

திரந்தாமுன்புகழ் நிலைக்குமென்புகழ்கேழ்க்கில்
நெஞ்சகந்தனில்மிக வஞ்சகமலவே(புரந்)

இராஜன்

சரணங்கள்.

௧, நெஞ்சகந்தனிற்சத்ய நெறியல்லாதுவேறென்றேனும்
நீள்கதிருள்ளளவும்
வஞ்சகமுள்ளளவும் வையகந்தனிலென்றேனும்
வானம்நீர்மதியுமி வகைகளுள்ளளவுமே (நெஞ்)

நட்சத்ரையன்

௨, எந்தனுக்காகநீ யியன்றிட்டபொருள்யாவும்
இல்லையென்பாயிப்போதே

உந்தன் துயரறிந்து   உரைக்கமனந் துணிந்தேன்
துரிசேவலவுமின்னே   உளமகிழ்ந்துயான்வந்தேன் (௭)

இராஜன்,

௨, வஞ்சியினீருமுன் றுள்வினை தீருமோ
உவமையுறுதியாகுமோ
பாரிலெங்களையவம் பரச்சொல்லதோகேபம்
பார்க்கவன்குலத்தோர்கட்கேற்குமோயிந்தஞாயம் (௮)

பொதுவிருத்தம்.

புண்ணியவண்ணலுமகனும் புகழமைச்சும்
பொற்கொடியும்புகரவனுக் கிதுபுகன்றார்
கண்ணியமாமறையோனுங்காணமுற்றான்
கற்கதிரோனுதித்தவன்றேர்கடாத்துநின்றான்
திண்ணியநற்புரத்தவனு மிடம்விட்டுத்
தீவிரமாயடர்வனங்கள் கிரிபோய்த்து
புண்ணியநற்சோணபத்ராநதியைக்கண்டு
பொங்கினார்நாடகத்தரசினரே ௨௧

வசனம்.

அகோகேளுங்கள் குந்திபுத்திரர்களே அரிச்சந்திரன் முதலானவர்களும் இவ்விதமாகச்சொல்லக்கேட்டகட்சத்ரையன்மனக்குண்ணித்தலசாய்த்தான் சூரியபகவானவன் தேரின்மீதேறிநடத்தலுற்றான், புசபலபராக்ரமத்தையுடைய அரசன்முதலானவரு மவ்விடம்விட்டு அதிதுரிதமாய் வனாந்தரங்களைக்கடந்து ஆதிபிரம்ம ஸ்வரூபரான விநாயகருற்பவித்திருக்கின்றச்ரோணபத்திரை நதியைக்கண்டுமனக்களிப்புடனே ஸ்நானஞ்செய்யத் தனித்திருப்பதுகாண்க,

௱௰-தரு-இ-ம்-வராளி-அடதாளம்,

கன்னிகள்,

௧, பாவையரேயிக்குவாராய்-ச்ரோணபத்திரை   வருந்தன்மைபாராய்
பூவையரேயுந்தன்றோய்-என்ன   புதுமைகள்தோணுதுபாராய்
௨, கடகரிகளினெழுமுத்தும்-முதிர்   கதலிக்குலையிலெழுமுத்தும்
படமிகுபன்னகமுத்தும்-உயர்   பதுமங்களிலெழுமுத்தும்
௩, மிதந்துவரும்பத்மராகமும்-அதின்   மேவிவரும்புட்பராகமும்
கதித்துவரும்மிகுசொர்ணமும்-நீரிற்   கலந்துவரும்பஞ்சவர்ணமும்
௪, படிந்துவருமணல்வண்டலும்-அதிற்பாவுஞ்சங்குகளுங்கொண்டலும்
முடிந்துவரும்புள்ளினங்களும்-அதில்   மூழ்கவருமுனிவரினங்களும்

௫, தேவர்களுநிறைம்பேரெல்லாம்-மிகத்   தெளிந்துவரும்பன்னிராயிரவர்
மூவர்களுமிதிலுண்டாகுவார்-யானை   முகவருமிதனிலுண்டாகுவார்
௬, இந்தநன்னீராடித்தேறுவோம்-எம்   மெய்களுமக்காசேருவோம்
வந்தனைசெய்திதைப்போற்றுவோம்-நமை   வாழ்த்தவென்றுகொண்டு
[ணேற்றுவோம்

பொதுவிருத்தம்.

இறையவனுமெவர்களுநீராடியங்கு
இருந்துநனிகாயத்ரிஜெபஞ்செய்துநன்னீர்த்
துறையதனைக்கடந்துவழிநடக்கப்பச்சைத்
ஆரகமேழுடையவனுந்தோற்றமுற்றான்
மறையவனுமற்றுளயாவருங்களித்து
மதிமறைத்துதயின்றெழுந்துமையல்நீங்கி
முறையதிலேயனுவளவுந்தவறிடாய
முன்கண்டார்மகிழ்ந்துதெரிசனைகொண்டாரே ௨௨

வசனம்,

அகோகேளுங்கள் மகானுபாவர்களே அரிச்சந்திரன் முதலானயாவரும் அக்குப்பாதஸ்நானஞ்செய்து நியமகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அக்குளக்கரைகாய்களைப்புசித்து ஜலபானத்தினலேதாகோபசாந்தியடைந்து அங்கிருந்தெழுந்துபலதடங்களுங்கடந்துசிலதூரம்நடந்தார்கள் ஏழுபச்சைக்குதிரைகட்டியஇரதத்தினையுடைய சூரியபகவானும் அஸ்தமானமானார் அந்தராத்திரியெல்லாரும் வசித்துநித்திரைகொண்டெழுந்தமறுநாளும் அப்படியேநடந்து சூரியபகவானுடைய புண்யகுமாரத்திசாரிசொரூபியாகிய ஜலரூபியான யமுனாதேவியைக்கண்டபோது தனதுகுலசிரோமணியான அரிச்சந்திரன்முதலானவர்களுக்குந்தெரிசனைதந்து மனக்களிப்புடனே தேவர்களும் மெய்க்க உபசரிப்பதுகாண்க,

௱௧-தரு-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்,

பல்லவி,

தெரிசனந்தந்தாளே-யமுனாதேவி-தீரன்முன்வந்தாளே

அனுபல்லவி,

தரிசனமாகச்செம்   கதிர்குலத்தரசனைக்
கருகிடாதிருடியைக்   காமித்தாளையுந்தோற்றி
வரிசைமிகுந்தகற்பும்   வழுவாதவெகுதேற்றி
வாழுமாமடந்தையை   வலியவிடுத்துத்தேற்றி
குரிசிலனைவிக்கனைக்   கொடிபோய்மீள்கொளச்சாற்றிக்
குலமுத்தினிசேயும்   குலம்வாழ்கவென்றேவாழ்த்தி தெரி

சரணங்கள்,

௧, தடுத்தநீகோசிக் முனிவனுக்கிடும்பொருள்
சுவைக்கும்பகுதியிவை பெற்றுக்கொள்வாயென்று
அடுத்துரைத்துப்பொருள்க ளம்பாரமாகவே
அவனியீதிற்குவித்த தனகேசனிகரென்று
கடுத்துரைமிகுத்தபின் ரோணடைப்படிக்கிந்தக்
கதிர்மணிகள்பூணவையுங் கருதித்தந்திடுமென்று
விடுத்தராசிராசியாய் விளக்கும்மணிகளெல்லாம்
விண்ணுமண்ணுமளாவி வேந்தர்வீசதியென்று
கொடுத்துச்சந்திரமதியின் குணப்பிரிதுகொண்டாடி
கொண்டவன்மனக்கோணக்குலதர்மபத்தினியென்று (தெரி

௨, அரியசாமன்றன்னா வியாவுமுணர்த்தாசன்
அம்மையமுனதேவிக் கன்பெனுமலர்தூவி
பிரியமானவார்த்தையைச் சொன்னயதொன்றுபோதும்
பேர்மெய்ம்மைமாபினும் பிசகாமதென்றேவி
பெரியவனைப்போல ப்ருதிவியிலெங்குகாண்பேன்
பேதமறியேனசம் பிரியாதேயெனதாவி
சரியடைந்தவந்துன் சன்மதிகண்டேன்ஜென்ம
வரப்பலயக்கொண்டேன் ஸாஸ்ட்சணையுந்தேவி
உரியபொருள்யாவும் ஒருகைப்பாடாகத்தேடி
உள்ளன்புடன்கொடுத்தாவொழிய மென்போனைக்கூவி(தெ)

௩, வேந்தனும்மைந்தனும் வீரகுமாரமந்திரியும்
வெற்றிமிகுத்துவரும் சேனைதிரளையுன்னை
சாத்தனிபூலையாள்சந் திரதயேந்திரன்றவத்தாள்
ஸத்யதர்மமேயென்றுந் சதமாமுலகுக்கென்ன
காத்தனுக்கேவல்செய்து கற்பழியாமறுய்து
காலஞ்செய்வதுபெண்கட் கழகிற்சிறந்ததென்ன
மாந்தரெவரும்காடும் மானிலத்தவரியாரும்
மதிபனிவனுக்கிணை மதிப்பெனவுண்டோவ
சந்ததில்லையென்னாமல் சாற்றுடன்கொடுப்பதில்
இன்குலத்தரசி சிவனேகுலனேயென்ன(தெரி)

பொது-விருத்தம்,

இக்கெறியின்கமுனை தனிற்றீர்த்தமாடி
இயல்புடனவ்விடத்திருக்கவிகுலத்தோன்
சொல்நெறிபேதகன்றரிவோமெனவெழுந்து
[illegible]

பின்னெறியானமியா சித்தனைவிளைத்தேன்
உனக்களித்ததில்லையென்பாயதுவொழிந்தால்
நன்னெறிமாதரசிபனைமனைந்துசெய்யென்ன
நாட்டிவானிறைமுனியைப்பாட்டுவானே (௬௧)

(வசனம்) இவ்விதமாயமுனைதீர்த்தீர்த்தமாடி அரிச்சந்திரன் முதலானவர்களும் அந்தடத்திலிருக்கும்போது அமன்னனுடைய மனதைச்சோதிக்கவென்னணி தேவதேவர்களுங் கொண்டாட்டத்தக்க விசுவாமித்திராசுவர் வந்து உன்னுடைய மனுஷிச்சயமறியாமல் இவ்வளவு செய்தேன் ஆனாலுமினிமேலாவது நீகொடுத்த பொருள்கள் யாவற்றையும் இல்லையென்றாலும் போதும், அல்லது பதிவிருதா சிரோமணிகளாகிய எனதுபுத்திரிகளான மோகினிப்பெண்களை விவாகஞ்செய்துக்கொள்வாயென்ன அரிச்சந்திரன் முதலானவர்களும் விசுவாமித்திருக்குச் சொல்லுவதாவது,

௬௨-தரு-இ-ம-கேதாரகௌளை-திரிபுடைதாளம்

பல்லவி,

இன்னமும் என்மனதைச்சோதிக்கவந்த துமக்கியற்கைபோமாதவரே
இனியித்தவார்த்தையுந்தகுமோவிதுவிதிலும்
என்னைக்கொள்ளாதிருப்பிர்வண்ணமாமுனிவரே

அனுபல்லவி,

கன்னலந்திகல்லெம்பின் கனியன்றிக்கொல்லுமெட்டிக்
கனியோதருகவெகேட்டி கலிதமவத்தியகுட்டி(இன்)

சரணங்கள்,

௧, முன்னாணதவறாமா-மொழியுனாயெனக்கனை
முற்றிலுக்காழ்ந்த மிடினும்
என்னுயிர்க்குபிராண-மந்திரியும்மைந்தனையும்
இழிசாகழ்ந்த மிடினும்
மன்னுயிர்க்குதவினர்-மனைவிவிவர்கள்கீதீர்
மண்ணிடைவீழ்க் மிடினும்
பொன்னுலகாளசெய்து புரந்தரனென்வெனைப்
பொற்புறச்சும்க்கிடினும்புகலே னெருபொய்தன்னை(இன்)

௨, பிச்சையிட்டபலிக்காய்-பசிக்குவந்ததென்றுமைப்
பின்பற்றயிடிய னல்லேன்
கொச்சைமொழியுனைக்குக்-கொடியபாவியைக்கண்டால்
குறையெல்விடதில் இல்லேன்
இச்சைமண்பெண்பொன்மூன்று இருப்பவருக்கொருவர்
சாற்றுவக்குவதாரலும் செல்லேன்

வஞ்சகரிடவேண்டாம் விக்கிக்கின்றசோற்றை
வருவிற்புசிக்கவல்லேன்-லட்சந்தாம் காசொல்லேன் (இன்)
௩. வெந்தழற்குள்ளென்றனை-வெருட்டியடித்துமிக
வேதனைசெய்ய செய்தாலும்
தந்தபிள்ளைக்கொன்றேனை தையலைப்புணரேன்
தழுவியும் மனமுய்தாலும்
வெந்தபுண்ணில்வேல்நூறு நுழையவிட்டதுபோல
நொய்யவுரைத் திட்டதாலும்
உந்தன்மொழிக்கேறுமா றுரைத்தேனென்றெந்தநேசம்
ஒழிந்திடாமலெக்காலும் உளமகிழ்வீர்மெய்ம்மேலும (இன்)

பொது விருத்தம்.

மன்னவனிம்மொழிகூறச்சினமடைந்து
மறையவனேநினைத்திடவும்மகிழ்கொண்டேகச்
சொன்னதொழிந்ததையென்றுசுட்டிக்காட்டிச்
சொரிந்துசிற்சுரோபியுரைத்தாற்போல
அன்னவனுக்குரைத்தகன்றக்கினியைக்கூவ
அந்தணனுமவந்தனுபயமென்ன
இன்னதுநீ இயற்றுவாயென்றான்செல்கின்றான்
எரிகின்றான்வன்னிதழற்சொரிகின்றானே (௬௨)

(வசனம்) அகோ கேளுங்கள் நித்யான்னதானபரிபூரணமானராசர்களே அரிச்சந்திரமகாராசனிப்படிச் சொன்னபோது விசுவாமித்திரர்கோப முற்று நட்சத்திரனாயனைக் கண்சாடையா லழைத்து உன்னுடன் சொன்ன யாவற்றையும்மறந்துவிட்டாயென்று சில[illegible]ங்களைச்சொல்லி ஆலால விஷத்திலே வைரப்பொடியைக் கலந்ததுபோலப்போதித்து மறைந்துபோய் அக்கினிபகவானையழைத்தபோது அவர் பிராமணரூபமாய்வந்து தெரிசனைதந்தபோது அரிச்சந்திரன் முதலானவர்களைத் தாபாக்கினியினாலே தகிப்பாயென்ன அந்த அக்கினிபகவானானவர் பதிவிரதா சிரோமணியாகிய சந்திரமதியின் கற்பென்னு மக்கினியானது என்னைத்தகித்துவிடுமானபடியால் அவர்களிடத்தில் போகமாட்டேனாகிலும் உம்முடைய உபத்திரவத்துக்காக உலகத்தாருக்குத் தீட்சண்யந்தோன்றும்படி விளங்குகிறேனென்று சொல்லி விசுவாமித்திரரையனுப்பிவிட்டு அக்கினிபகவானானவர் தேவாதிகளும் பிரமிக்கத்தக்கதாகச் சூழ்ந்து கனல்விரித்து பிரகாசிக்கச் செய்வது காண்க,

௬௩-வன்னித்தரு-இராகம்தோடி-ஆதிதாளம்,

எரித்தானே எண்டிசையையுமேவி
தழற்றழல்விரிந்து கொழுந்துகளெழுப்

பொரித்தானே அண்டபகிரண்டங்களைப்
பொடிப்பொடித்தரு உருத்திரலோகங்களைப்
புகைக்கவாசவன் நிலைகலமுனிவனை
நகைக்கத்தேவர்கள் பனசக்கொடியினை
அழைத்தானே வடவாமுகவனையும்
அரியவிசாகனையும் அனலனைக்குகனையும்
தழைத்தானே திரிபுராதியர்களைத்
தகனஞ்செய்தவழலைத் தரித்தபெருந்தழலை
விடுக்கவல்லெயனு மடுக்கன்சுவரிட
விடுக்ககனற்கனை மிடுக்குடனாக
விட்டானேபுகைச்சலின் மூடலை
விரித்தவளவிலே தரித்தசோலையிலே
தொட்டானே மண்ணையும்விண்ணையும்
தொகுப்பையும்சுர வகுப்பையும்கொதி
இடுக்குகளைக்கொடித் தடுக்குகளைச்செடி
முடுக்குகளைமர வடுக்குகளைச்சர
மெல்லெங்குமோடி யொளித்திடும்
இடங்களும்மலைத் தடங்களுந்திரி
தெங்கெங்கும் கூடியலைந்திடும்
எனும்புலிகளு மெழுந்தோடுங்கலைகளும்
ஓடியொளிக்கக்காடக் கூடிக்களிக்கத்தேட
வாடிக்கலங்கியோட அடுப்பில்லாமற்றன்னாட்ட
வனவாசிக ளெவரும்மனங்கலங்க
வரிவண்டெவ்வேழுன்று வாடியிரந்துவண்டு
புனவாசிகள் வெந்துகரிந்திடப்
புகைக்குள்நின்றமுழ் திகைக்குமேற்றமும்
புழுக்களும்புதைந்திடக் கழுக்களுஞ்சிதைந்திட
ஒழுக்கமிகுபாவ விழுக்கடைந்தெழுந்தோடக்
கார்க்கோடகன் முதலட்டநாகரும்
சுக்கிக்கொடுவிடத்தை கக்கியெகிடத்தை
தார்க்காலத்திலே சுருக்கியொடுக்கி
தாறுகலங்கியேத் தயங்கிமனமிரங்கி
தந்திரத்தீச்சுருண்டு சுந்திரதந்திவருண்டு
பந்தியந்தியாவேழுந் தெந்திசைந்தியேவிழுந்
தோடித்தடமேற் காமினவாம்பினை
பொற்றிடக்கொடிகள்போற் சுற்றிப்புலம்பினை

சாடுக்கொடு　　விடங்களுமணிகளுஞ்
சகமெல்லாமொளிசெய்யத்　　தகதகவெனத்துய்யத
தலமெங்குஞ்சிதறிடத்　　தலமகள்கதறிட
இலகுமிக்கனலேதென்　　றெவர்களுந்திகைத்திட
வானோர்கள்இந்　　நிவினையிவர்கட்கு
வாலாமோவெகுளன்பக்　　தாலாமோவென்றிரங்க
மானோர்களிவர்　　கட்கிலையாமென
மகிழ்ந்துதேவர்கொண்டாட　　மகிகதிர்முகம்வாட
மன்னன்மனமலைக்க　　மதியாளதைக்கலைக்க
சொன்னவக்கினிதாழச்　　சாரவர்களும்வாழ(சாந்)

பொதுவிருத்தம்,

இக்கனலேதெனப்புகலா வேந்தன்கேட்க
வெழுபசியாலெழுந்ததெனவிளம்பிகம்மில்
மிக்கவரிலொருவருயிருண்டிடாமல்
மீண்டிடாதிதற்கினியென்செய்வோமென்ற
வக்கணமேயாசனுமாதிரியும்மாது
மலரவர்கள் மனத்துன்பமகற்றி அன்னத்
தக்கவழலினில்மூழ்கத்தக்கதென்றே
தாண்டினார் தனஞ்சயனைவேண்டினாரே

(வசனம்) இப்படியாக ஆகாசத்திற்கும் பூமிக்கும் ஒரேபிரகாசமாய் அந்தப்பிரளயமுண்டானதுபோலே விளங்குகின்றஜ்வாலையைக்கண்ட அரிச்சந்திரன்முதலானவர்கள் நட்சத்திரையனைக்கேட்க இதுபசியென்னும் ஜடராக்கினியாலெழுந்தது நம்மிலமேலானவொருவரையாவது தின்றுபசியைத்தீர்த்துக்கொண்டுபோகுமே யல்லது இலேசிற்போகாதென்றுரைத்து அந்தட்சணமே அம்மன் முதலானவர்களும் [illegible] அப்படியிறதுன்பத்திலும் இந்தக்கனலில் வீழ்ந்திறப்பது பெரிதென்று அந்தனஞ்சயனை அக்கினிபகவானை வேண்டுவதுகாண்க,

௱௪-தரு-இ-ம் நாதநாமக்கிரியை-ஆதிதாளம்,

பல்லவி.

கனல்மூழ்கத்துணிந்தானே　　கதிர்குலத்தரிச்சந்திரன்
கனல்மூழ்கத்துணிந்தானே

அநுபல்லவி,

மனத்திடைமாசனு　　வளவெனுமலிந்திடா
மாதவவசிஷ்டன்றன்　　மனமகிழ்ந்துகொண்டாட
அனலவர்கள்கற்பினுக்　　கருண்டகண்டொழுந்தோட
அந்தரத்திற்றேவர்க　　ளெவரும்மிகவாட(கனல்

சரணங்கள்

௧, மறையவனுரைத்தகன்　　னெறியெனக்கருதியவ
மன்னவியுமனையுந்தனையு　　மாதிரிகிகமெனக
குறைவில்லாச்சேனையுக்　　தானையுங்குறுகினை
கோமானரிச்சந்திரன்　　கொடுப்பிரவிடையெனை
அறைந்தவரச்சமொழிக்　　ககத்துமர்மிகவுற்று
ஐயனீராண்டிடா　　வாசமிலையெனவொருவ
நிறைமதியாளனே　　தில்லுனைவிடுவித்து
வில்லாயித்திக்குதிப்பே　　னென்பதைக்கேறனு (கனல்)

௨, உத்தனல்லுயிரெனி　　லுரிமையிலையென்றேரும்
உத்தமியுயிரொனி　　லுதவாதெமக்கென்றேரும்
மைந்தனல்லுயிரொனில்　　மதியறியானென்றேரும்
மன்னனெதந்தனைமிக　　மகிழ்ந்துகொண்டாடும்
எந்தனுரைகேள்மை　　விதமதிதருமைந்த
இருவருமொழிந்திடு　　லோமனமவெறுத்து
மைந்தனுக்குச்சந்திர　　மதிக்குமெசுருகத்து
மகிழ்ந்தெண்குணமென　　மதியிகவுந்து (கனல்)

௩, மனைவெறுப்புட　　னிருவருமிதுசொல்ல
மதிமிகுசந்திர　　மதியதுபுல்ல
அனைவரதுமரி　　லவயாகய்பால்லல
அரசாகளால்லு　　மறிவதும்மல்ல
மனவருத்தமகல　　மதியுறறதுவைத்தேன்
மன்னவனுஞ்சேய　　முன்னமரசுபெற்றேன்
கனவருத்தமகலக்　　கனல்மூழ்குவதற்றேன்
தார்க்கங்கடவெனுமக்　　கன்னியாளிடைத்தோன் (கனல்)

பொதுவிருத்தம்

தந்தையுடனிந்நோதி கூறக்கேட்ட
தன்னிகரில்லாலோகிதாசன்றானே,
எந்நாளைப்பெற்றெடுத்ததுமக்கவிதிக்ககிர
வெண்ணியல்லோ யானிறப்பதியற்கையென்றான்
மைந்தனேயுன்வாய்முலைப்பால்மறந்தாயில்லை
மதுராயிருசனவையுரியும்பல்வீழ்ந்திலை
உந்தனுக்கிவ்வுணர்வுற்றவிதியேதென்றாள்
ஒழுகின்றாள்கனல்மூழ்க வெழுகின்றானே,　　௧௯

வசனம்.

இத்தப்பிரகாரமாய்ப் பிரபலமாகிய அரிச்சந்திரனுடைதாயானசந்திரமதியானவள் மனவெறுப்புற்று சொல்லக்கேட்டு குமாரனாகிய லோ

பிதாசனுனவன் அசோகேசனுமென் னருமைத்தாயே மாதாபிதாக்களுக்கு ஆபத்து வேளையில்காக்கவேணுமென்றல்லவோ குழந்தைகளைப்பெற்று வளர்த்துச் சீராட்டுகிறது ஆகையால், நான் மரணமடைந்தே தீருகிறேனென்றான், அப்போது என்செல்வனே முனிகுடிக்கிறவாடிக்கைமறந்தவனல்ல மதுரமானபதார்த்தங்களின்ருசியறியத்தக்கப்பற்களும் வீழ்ந்தவனல்ல, இப்படியான உனக்கு இவ்வளவு தீட்சண்யமானபுத்தி வந்ததேனென்று சிலாகித்து குமாரனைசமாதானப்படுத்திய சந்திரமதியானவள் அக்கினிப்பிரவேசமாகத் தரிதப்படுத்துகொண்டு,

நகு-இ-ம்-நாதநாமக்கிரியை ஆதிதாளம்.

பல்லவி,

அக்கினிதனிற்பாய்ந்தாளே-கற்பின்மிகுந்த
அருந்ததியெனவாய்ந்தாளே
மைக்கினியவிழியாள்-மதுரமிகுமொழியாள்
மைக்கினியபூபதி-கருதியசந்திரமதி

அநுபல்லவி;

மெய்க்கினியகணவனை   மேதினியில்விடுத்து
மேதகன்சத்தியகீர்த்திக்கு   மிகுபுகழ்கொடுத்து
புக்கினியபுதல்வன்றன்   புலம்பலைத்தடுத்து
பூதகாதனன்றுசெய்த   புதுமையையடுத்து (அக்)

சரணங்கள்,

௧, வேதங்கள்நாலுஞ்சொன்ன   விதியொழிந்தோமாகிலும்
வெற்றிமிகுநாலாறும்வீண்மொய்   யென்றோமாகிலும்
பேதமில்லாவிருந்தோரைப்   பிழைக்கிகழ்ந்தோமாகிலும்
பெரியோர்முன்னின்றிகழ்ந்து   பேசினோமாகிலும்
மோதமுள்ளமனுவின்மன்னன்   முறைமிகழ்ந்தோமாகிலும்
முத்திசெய்தியானை   முனிந்திகழ்ந்தோமாகிலும்
ஆதரவற்றோர்களுக்கு   அமிடுசெய்தோமாகிலும்
ஆண்டவனறியவெந்த   ஒருபிழைக்கொல்லென (அக்கி)

௨, மறையவர்களையவ   மானஞ்செய்தோமாகிலும்
மருமக்கள்தமக்கவ   மதிசெய்தோமாகிலும்
குறைமதியுடையோர்க்கு   கொடுமைசெய்தோமாகிலும்
குற்றஞ்செய்தோர்க்கவதி   கொடுத்திட்டோமாகிலும்
பிறர்மனைதனிற்சென்று   பேசிநின்றோமாகிலும்
பிணியாளர்தமக்காசைப்   பேச்சளைத்தோமாகிலும்
அறைந்தமொழிகள்மாறி   யளித்துச்செய்தோமாகிலும்
ஆசரித்தவர்க்கென்முன்னுன்றனைவந்தால்   கொல்லென் (அக்கி)

௩, தரும்மதாலைக்கட்டு   தாணியாண்டோமாகிலும்
தாதுகலங்கிடுனை   தயங்கவிட்டோமாகிலும்
வருமாமியைத்தருமா   வழிகடந்தோமாகிலும்
வலுவுவல்லமையினுல்   வன்மைபெற்றோமாகிலும்
கருமமற்றபெண்களை   கற்பழித்தோமாகிலும்
காலமற்றகாலந்தனில்   கணவனைச்சேர்ந்தோமாகிலும்
உருமவேளைவந்ததிக்   கூளிலில்லையென்றோமாகிலும்
உள்ளமதிற்கள்ளமற   வொருகொடியிற்கொல்லென (அக்கி)

பொதுவிருத்தம்,

கற்பிலேயருந்ததிக்கிணை இந்திராணிக்
கதிகமெனுமாதுசிரோமணியின் வாய்ப
விற்பனக்களுணர்ந்தவன் விடைமைதீயின்
விளக்கெனச்சுடுமெனலேவின்புகுந்தாள்
உற்பவித்ததீயாறியுதகம்பொங்கி
யொன்றாயசெந்தாமரைகளோங்கிப்பூக்க
சற்பனுடையல்லாமுகன்றதெழுமெனன்றர்,
சரியலோநர்கிஷகாஸிப்புரியென்றுரே. ௯௩

வசனம்,

அசோகேசனுக்கள் வெற்பனர்களே இந்திராணிபார்வதிதேவி அருந்ததி முதலானவர்களுக்கும் மேன்மையான மகிமைபொருந்திய கற்பின் மிக்கவளென்றுஞ் சந்திரமதியினுடையவிவேக விளக்கங்களைப்புனர்ந்து மகிழ்ந்த அக்கினிபகவானானவன் இத்தப்பதிவிரதாசிரோமணியாகியமாதரசியைச் சுள்ள தழலையடையாமுகாக்கியினிலும் மேலாய சொர்க்கத்தில் றந்து என்னைச்சுட்டுவிடும் காதிவனைத் தொடேனென்று அதிசீக்கிரமாய் றமு ஆகாயத்திலடைந்தான் அத்தடத்தில் சலிலங்கிய அனைவர்களும் பற்கடலைப்போலேஞ்சிறீச் செந்தாமரைகளும் செழித்துப்புட்பிக்கக்கண்டு யாவரும்மனக்களித்துஆரூர்த்து சொற்பனமடைக்கும்போது காசிப்பட்டணத்திலெல்லையின் முனையைக்கண்ட அரிச்சந்திரமகாராஜன் அந்நாட்டத்தின் மகத்துவத்தைச் சந்திரமதிக்குச் சொல்லிக்கொண்டு வழிநடந்துவருவதாவது,

கங-தரு-இ-மைபவி-ஆதிதாளம்,

பல்லவி,

கார்மேவம்பெண்ணே-காண்பாய்மதியவளே
கண்மணியேயென்னிருகண்ணே

அநுபல்லவி,

புண்ணியவக்கரித்தம்   புண்ணியசேவித்தாற்
பொருமென்றெத்த தானும்   புத்துவதீயாயே (காண்)

சரணங்கள்,

௩, பூஞ்சாலைதனிற்மாடப் — புறவின்னங்கள்கூடிப்
பொற்புடனேயிணங்கிப் — புணர்ந்திடமனமகிழ்
தீங்காமதிமிகுந்து — விளைந்தவயல்தொகுத்து
நின்றுமேயில்களையும் — சென்றுமேகுயில்களையும் (காண்)

௪, சாலிகளுமன்ன — சந்தனக்காருந்தம்
சாலைகளுஞ்சாதுக்கள் — ஆய்ந்தங்குமடமும்
சேவடிபோற்றிநின்று — சிவபூசைசெய்வோரையும்
சிறந்தகங்கைக்காவடி — சுமந்துவருவோரையும் (காண்)

௫, தேரின்மீதேறிவருவோர் — தேர்களின்கூட்டமும்
தெரிவையாமிகக்கூடி — தெரிசித்திடுங்கூட்டமும்
பாரின்மிசையோர்கூடிப் — பணிந்தடிதொழுதேற்றும்
பாகவதர்கள்கூடி — பஜனைசெய்திருகூற்றும்-காண்

௬, மாடமாளிகைகூட — கோபுரங்களுந்திரு
மஞ்சனவீதிகளும் — மகஞ்செய்யும்வீதிகளும்
பாடலாடலுடனே — பவனிகள்வருவதும்
பார்ப்பவர்கட்குக்கண்கள் — பதினாயிரம்போதுமோ-காண்

ஆரணியகாண்டம்-முற்றுப்பெற்றது,

ஆக-விருத்தம்-௯௫-கொச்சகம்-௨-சுலோகம்-௧,

◆ ◆ ◆

உ

எட்டாவது

காசிகாண்டம்.

பொது-விருத்தம்,

குலமகனுங்கொண்டமனையாளுநீத
கூறுமதிமந்திரியுங் குரிசிலோனும்
நிலமதிலேமுன்னடக்கத்தொடர்ந்ததாசன்
இயற்கையுடன்பின்னடக்க விமையோர்போற்றும்
அருமலருங்காசிநகர் தன்னைக்கண்டு
நாளுமெட்டாப்புதையல்கண்டவரைப்போல
பெலமடைந்தோமினிச்சலனமில்லையென்று
வலஞ்சொல்வார்காசிநகர்வளஞ்சொல்வாரே

தீ

வசனம்,

அகோகேளுங்கள் ஞானவான்களே சூரியகுலசிரேஷ்டனாகியலோகிதகுமாரனும் அரிச்சந்திரனும் சந்திரமதியும் மந்திரியான ஸத்தியகீர்த்தியும் முன்புறப்பட்டுச்செல்லவும், விசுவாமித்திரருடையதூதனை நக்ஷத்திரயன் பின்தொடர்ந்து நடந்துபோய் முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிர மிருடிகளுந் துதிக்கப்பெற்ற நன்மையைக்கொடுக்கத்தக்க ஸ்ரீகாசி க்ஷேத்திரத்தைக்கண்டு பொருளற்றவனுக்குப் புதையல்கப்பட்டதுபோலே சந்தோஷப்பட்டு ஜயப்பிரதமடைந்தோமினிச்சஞ்சலமில்லையென்று அந்த க்ஷேத்திரத்தினுடைய பெருமையையும் அதையடைந்தோர்களுக்கு லபிக்கின்ற மேன்மையையுஞ் சொல்லுவதாவன,

௨-தரு-நீ-ம்-பைரவி-ஆதிதாளம்,

பல்லவி,

காசிமாநகர்கண்காட்சிதனைச்சொல்லக்-கடவுளர்கட்குமரிதே

அநுபல்லவி,

தேசித்துவசிப்போர்க்கு — செஞ்சுடர்கலைதீர்க்கும்
பூசித்துவருவோரைப் — புனிதவீட்டினிற்சேர்க்கும் (காசி)

சரணங்கள்,

௧, ஆதிவருணமுதல் — யறுபத்துநாலுதுறைகள்
அக்கவேயருந்தவ — சமரும்படித்துறைகள்
வசிஷ்டமுனிவர்முதல் — வழிகண்டபெருந்துறைகள்
வாய்க்கக்கண்டோமினி — வாராதுமனக்குறைகள் (காசி)

௨, பூவிலுயர்திருப் — பதியொருநாற்றெட்டு
புண்யசிவஸ்தலம் — புகழுமாயிரத்தெட்டு
நாவிலுயர்முனிவ — நாற்பத்தெண்ணாயிரமட்டும்
க்கிலுமதேவர்முப்பத்து — முக்கோடிகளோமட்டும் (காசி)

௩, தங்கக்கலசம்பூண்ட — கோபுரத்தளமென்னோர்
தளைகளுந்தவத்தவர் — தங்குமடமுமன்னோர்
புங்கவர்மணிமேடைப் — பொற்புக்களாவின்னோர்
புத்தோரணங்களும் — பொன்னைக்கொண்டுநின்றோர் (காசி)

பூஞ்சாலைகளும் — புகலருபுனல்களும்
பொற்புமிகுசம்பகப் — பூஞ்சோலைவனங்களும்
வாக்காதகஞ்சைக்கா — வடிகொளுங்கிளைகளும்
வரப்போகவிருந்திடும் — வஸ்துவினிளக்களும் (காசி)

பொது-விருத்தம்.

மங்கையுமைந்தனும்வேந்தனமைச்சன்காசி
நகரின்மகிமைதனைப் பதிதிலுமினிச்

சங்கையில்லா தருமியுளங்களித்தருள்ள
அற்சனாப்பணிக்கே தந்திச் சங்கையாற்றிச்
செங்கைகளைத்தம்பதிகள்சேர்த்துக்கொண்டு
சிறந்தமணிகர்ணிகையூடொன்றாங்கு
கங்கைதீர்த்தங்களையுந்தேடியோடிக்
காழ்கின்றார் அக்கக்குமுழ்கின்றாரோ (உ)

(வசனம்) இவ்விதமாக காசிக்ஷேத்திர மகாத்மியஞ் சொல்லிக்கொண்டு கங்கைக்கரைக்குவந்துசேர்ந்து அரிச்சந்திரமகாராஜனுஞ்சந்திரமதியும் லோகிதகுமாரனும் மந்திரியான சத்தியகீர்த்திமுதலானவர்களும் அங்குள்ள வைபவங்களைக்கண்டமாத்திரத்திலே தங்கள்மனத்திலுள்ளவிதனமாதி உள்ளருநீ அத்தடத்தருகேவீற்றிருக்கின்றதபோதிதிகளைத்தரிசித்துத்தோத்திரஞ்செய்துதம்பதிகளிருவரும் கொடுக்குமுடிந்துகொண்டு கைகூப்பிமணிகர்ணிகைமுதலாக அசிவருணைவரையிலுமுள்ள அறுபத்துநாலு கங்காதீர்த்தங்களையும் ஆராய்ந்து அந்தந்த ஸ்நானஞ்செய்யத் தொடங்குவதுகாண்க,

உ-திபதை-இ-ம்-காம்போதி- அடதாளம்,

கண்ணிகள்,

க, கங்காநதிதனைக்கண்டுமனங்	களித்தோமே-எந்தன்
காதலியேஇம்ம	காதீர்த்தமாடுவோம்-வாராய்
உ, மாதாபிதாசெய்த	மாபாவதோஷங்கள்தீர-எந்தன்
மாதரசேகங்கை	மாநதியாடுவோம்-வாராய்
ங, பண்டொம்செய்த	பாபதோஷங்கள்தீர-கண்ணாற்
கண்டுகளித்து	மகாநதியாடுவோம்-வாராய்
ச, பாரிலுள்ளோர்செய்த	பஞ்சமாபாதகந்தீர-கொண்ட
பாவையரேகங்கா	பவனியிலாடுவோம்-வாராய்
ரு, இந்ததீர்த்தமிவை	யெவைக்குமுயர்ந்ததுபெண்ணே-மிக
வுத்தமணிகர்ணிகை	தீர்த்தஞ்சேர்ந்தாடுவோம்-கண்ணே
சு, பஞ்சமாபாதகம்போக்குமிந்தத்தீர்த்தம்	-பெண்ணே-பெற்ற
பாலகன்லோகிதன்	பாவங்கள்நீக்குமென்-கண்ணே
எ, அர்க்காதீர்த்தமாடத்	துலையுமெப்பாவமும்பெண்ணே-பொல்லா
துன்பமெல்லாந்திரு	மின்பமிகசேரும்-கண்ணே
அ, சத்தியகீர்த்தியே	முத்திதருந்தீர்த்தம்பாராய்-மந்திரி
சத்பநெறியுணர்ந்து	சாகேதந்தனிற்சேர்க்கும்-நேராய்
கூ, கேதாரக்ஷேத்ரமகவார்	தீர்த்தமாடுவோம்-வாராய்-மனக்
தேகம்பாவுமகற்றி	திலேசாதவிழ்த்திடும்-பாராய்

ய, தீர்த்தங்களாடினும்	திவ்வியபதவியடைந்தோமே-சிவ
தெரிசனஞ்செய்திடிற்	தீவினைகள்தீர்ந்துபோமே

விருத்தம்,

கங்கைமாநதியாடிடசிலர்கள்
சங்கையில்மனோ மலர்கள்மிகக்கொடு
மங்கையோர்பாகன் காசிவிசுவேசன்பொற்
பங்கையமெனும் பாதபூசைசெய்வார்

(வசனம்) அகோகேளுங்கள் இராஜசிரேஷ்டர்களே இவ்விதமாய் கங்காஸ்நானஞ்செய்து ஸந்துஷ்டியடைந்த யாவரும்ஸ்ரீசனமான மானஸபுஷ்பங்களாலே ஸகலரை நினைப்பிக்கொண்டு அர்த்தநாரீசுவரரான ஸ்ரீகாசிவிசுவநாதர பொன்னின்நாயகனாந் தன்னங்கருக்கொப்பாகிய பாதங்களிலே பூசிப்பதுகாண்க,

ங-ஜம்பை,

க, திருவடியிற்பூசைசெய்வோம்சிவகாசி	விசுவேசா
ஜயாபராவெங்கள் தீவினைதொழிப்பாய்
பருவமதிலெமைக்காக்கப் பரிந்தன்பதபூசைசெய்வோம்
பரிதாபமொழிந்தருளிப் பாலிப்பாய்	விசுவேசா

உ, ஆவலுடன்மனோமலர்கொண்	டடிமலரிற்பூசைசெய்வோம்
அன்பர்படுந்துயர்தணிப்பாய் அமலனே	விசுவேசா
காவலர்கள்புகழுந்தன் கற்றளைப்பூசைசெய்வோம்
கங்கைவிசாலாட்சிபின்றன் நாதனே	விசுவேசா

ங, மாதவர்கள்துதித்திறைஞ்சுமலர்ப்பதத்தைப்	பூசைசெய்வோம்
மாயாவிகளைக்காப்பாய்மாதவா	விசுவேசா
பூதலத்திலென்றுமுந்தன் பொற்பாதபூசைசெய்வோம்
புத்திமதிற்றிடச்செய்வாய் புகழ்காசி	விசுவேசா

ச, சிவகாசிபுரியானுந் தேவாவுனைப்பூசைசெய்வோம்
சிந்தனையானவையுமகலச் செய்வாய்	விசுவேசா
பலக்கடலைக்கடக்கச்செய்யும்பரமபதபூசைசெய்வோம்
பரிபாலித்தாண்டருள்வாய்பணிந்தோம்	விசுவேசா

அ-வேறு-தரு,

க-இலாவணி-இ-ம்-மனோரஞ்சனி- ஆதிதாளதரிதம்,

மந்தவர்பூசிக்குந் தாமரைமலர்கட்கிணையாம்
மனோமலர்கொண்டுபூசைசெய்வோம்-பூசைசெய்வோமே
மந்தாரைவில்வந்தும்பை மலர்களெனவேயெங்கள்
மனோமலர்கொண்டுபூசைசெய்வோமேபூசைசெய்வோமே
மண்ணும்விண்ணும்புகழுந்தன்னருட்பதந்தனில்	மனோமலர்
மல்லிகைமுல்லைகொன்றை மலர்களெனவேயெங்கள்	மனோமலர்

மதனைஜயங்கண்விழிமலர்சாத்தியபார்த்தநில் மனோன்மணி
மகனைத்தருகைக்கை திங்கட்சடைமுடிமேல் மனோன்மணி
மாதவஞ்செய்துமையாள் பூசித்ததிருவடியை மனோன்மணி
மகிழ்ச்சிகொள்ஈசனை பூசிக்கும்பேறுபெற்றனை மனோன்மணி

இவ்விடத்திற் பூசைசெய்வோர்க்கு - அனந்தப் பலநாளுமுண்டாமென்றுட் டத்து பூஜித்துக்கொண்டீர்;

பொது-விருத்தம்,

காசிவிசுவேசனைப் பொற்றாள் போற்றிக்
கருத்துடனே பூசைசெய்தகதிர்குலத்தின்
விசயநற்புகழ்மிகுந்த வேந்தனுடன்கொண்ட
விரகியுமைச்சனுமனையும் வீறுவந்தாக
நேசித்துக் காயிலமை மாகவந்து
கெடுங்கதிலவஞ்சமனறு நெறியின்மிக்க
மாசிலாமலர்ப்பதத்தோ யெம்மையாளு
மாறென்றார் அடைக்கலமாக்கப்பி செம்மலுமே (அ)

(வசனம்) இவ்விதமாய் ஸ்ரீகாசிவிசுவநாதர் கோயிலிற்சென்று பல ஸ்தோத்திரஞ்செய்து உள்ளும்புறம்புமொன்றுபட்ட சூரியகுலசிரோமணியாகிய அரிச்சந்திரனும்சந்திரமதியும்லோகிதாசனும் சத்தியகீர்த்தியும் வேதவிதிப்பிரகாரம் மனோநேசத்துடன் திருவாலயம்வலம்வந்து மனப்பூர்வமாய் கட்டியில்லாமல்காணக்கிடைக்காத பாதாரவிந்தமுடைய எங்களுயிர்த்துணையான தேவனே எங்களையெப்படியுங் காத்தாட்கொள்ளும்படிவேண்டிக்கொண்டோமென்று அடைக்கலமாகத் தருவீரென்று துதிப்பது காண்க.

௯-தரு-இ-ம-நாதநாமக்கிரியை-அடதாளம்,

பல்லவி.

அடைக்கலமென்றருளாற்கருணைபுரிவாய்காசிவிசுவநாதனே (அடைக்க)

அநுபல்லவி,

அடைக்கலமெனையாதரித்துக்காப்பாய் ஆதியேபரஞ்சோதியே
ஐயனே அன்பர்மெய்யனே ஆறுதாய் துய்யனேயாங்களுய்யவுந்தன் (அடை

சரணங்கள்,

௧, திருவுக்கிறைவனுஞ்சதுமுகனுங் கேடரியவடிமுடியோனே
திருநாட்சகனென்றும்பேர்வகித்த திண்ணியரிடபக் கொடியோனே
பருவுதரன்முப்பத்துமூவர்மேல்மையல்கொண்ட திருவடியோனே
மாதவர்தேவர்மன்னர்மன்னர்போற்றும் மாமகாசிப்பதியோனே
எவ்வுயிர்க்குமீசனெனச் சன்னிதிசிறக்கும்கொடியோனே
சாற்றவரிதுயரந்துடைப்பாய் மதிசேர்ந்திலங்கு வன்மையா

ற்றுவாயுந்தன் கடை) [னே
திங்களுங்கங்கையுங்கொடுநும்பை திகழ்ந்திநெடுஞ்சடையோ
நிலகாணிமகரன்றிருமனையுந் திருநயனமாயுடையோனே
செங்கட்செவியையாரம்பூண்ட சிறந்தபூதப்படையோனே
செய்யவானவர்யாவர்களும்புகழ் சிறந்தசந்திரக்குடையோனே
எங்கட்கபயமீகுவாய்செக தீசனே வெள்ளைவிடையோனே
ஏத்துவோம் கழல்போற்றுவோம்புகழ் சாற்றுவோமலர்தூற்று
[வோமுந்தன் (கடை)
அண்டர்படுந்துயர்சுற்றவேநஞ்சை யமுதமாயுட்கொண்ட அமல
அம்பலத்தன்னிலமரிக்கெதிரே நின் றாடியபாதகமலனே [னே
விண்டலத்தோருமண்டலத்தோரும் விரும்பித்துதிக்கும்விமல
வெற்றியிருத்சசத்யதர்மமே நித்யமாயென்னும்நிமலனே [னே
கண்டோர்க்குக்கண்காட்சிசெய்திடுங் கருணைமிகுகாகமலனே
காத்திடாய்கடன்தீர்த்திடாய் புகழ்சேர்த்திடாய்வினையாற்றிடாய்
வெண்பா. [யுந்தன் (கடைக்)

மண்ணோரியற்றும்மாபாதகந்தீர்க்கும்
விண்ணோர்புகழ்காசி விசுவேசா தன்னோர்த்த
வருணையசிவாழ்வே மலர்ப்பதங்கட்காளானோம்
கருணையுடன்கடன்தீர்த்தாக்கார். (எ)

(வசனம்) பூலோகத்தில் என்னைப்போலுள்ள அனேகர் செய்த பஞ்சமகா பாதகங்களையும் ஒழித்து நற்கதி தரப்பட்ட கடவுளே தேவதேவர்களுந் துதிக்கப்பட்ட ஸ்ரீகாசிநாதனே குளிர்ச்சியைத்தரும் வருணைநதிக்கும் அசிகட்டத்துக்கும் மத்தியானஸ்தலவாசனே உனது பாதாரவிந்தங்களே கதியென்றுவந்தசரணை அடைந்த எங்களுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றியருள் தரவேணும் கிருபாநிதியே

௰-தரு-இ-ம்-கமாசு ஆதிதாளம்.

பல்லவி,

ஈசாவேசாஸ்வயம்பிரகாசா-என்று-மெமையாளும்மனோவுல்லாஸ

அநுபல்லவி.

நேசமகலாதெங்கள் நெஞ்சுட்கவலைதீர்ப்பாய்
மாசகற்றிபுத்தன் மலர்ப்பதந்தந்துகாப்பாய் (ஈசா)

சரணங்கள்.

௧, அருந்தவத்தோர்துதிக்கு மம்மைவிசாலாட்சியிடப்
பாகா லவபோகா
அன்னைதிருபாதமைதன்னைமுடியிலுற்ற யோகா

௩௨

திருந்தியமனத்தோர்கள்   தேடித்திரியும்மோகா
திதிலாதஜெகதீசனே   சிவயோகா (ஈச)
௨. ஆர்த்திஹரனென்றன   தடிமலர்முடிமிசை
பணிந்தோம்   சொல்லத்துணிந்தோம்
அன்புடனே எமையாள்வாயென்றனுதினம்பணிந்தோம்
கார்த்திகேயனையீன்ற கர்த்தனேகுறைதணிந்தோம்
காசிநாதாவெங்கள்கடன்தீர்ப்பாயென்றுணர்ந்தோம் (ஈசா)
௩. காசிமகாநகராளுந்   தேசிகனேவிச்வநாதா
ஜெக   நாதா
சுருதிவந்தோமுன்கடைக் கண்ணருள்புரிவாய்ப்ரக்யாதா
கௌசிகமுனிமனக்குறைதீர்த்திடாய்   விநோதா
குவலயத்துட்புகழ்கொள்வாய்சுகஞான   போதா (ஈசா)

பொதுவிருத்தம்.

கோலமதுவேருனவயோத்திவேந்துங்
கொண்டவளுங்குமரனு மந்திரியுமந்நாள்
ஆலமதுண்டமரர் தமைக்காத்தஈசன்
ஆலயத்துட்சென்று வலமாகவந்து
சாலமதுவுண்டார்போல்மையலுற்றுச்
சஞ்சலத்தான்மனநொந்து ஸிக்கொண்டு
காலமதுவந்ததெமை இந்தவேளைக்
காரெம்பார்பதவிதனில்சேரென்பாரோ (௨)

(வசனம்) அகோகேளுங்கள் இராஜச்ரேஷ்டர்களே இராஜவடிவை யொழித்து தவத்தினர் வடிவாகி அயோத்தியாபுரிக் கரசனான அரிச்சந்திரனும் சந்திரமதியும் மதிமந்திரியும் லோகிதகுமாரன்முதலானவர்களும் ஸ்ரீகாசிவிச்வநாதரது திருவாலயத்திற் புகுந்துவலம்வந்து தரிசிக்கும்போது கட்குடியனைப்போலமயக்கமுற்றுச் சஞ்சலப்பட்டு உள்ளுருகி பொறுக்கொண்ணாத் துன்பத்துக்காளாகுங் காலம்வந்தது எங்களை இந்தவேளைதற்காத்தருளவேணுமென்று மறுபடியுந் துதிப்பதுகாண்க

எ-இ ம்-பூரிகல்யாணி அடதாளம்

பல்லவி,

சம்போசிவ-சம்போசிவ-சம்போமகாதேவா-சிவ(சம்போ)

[ய்த்தா

அநுபல்லவி.

சம்போசதாசிவசம்போமகாதேவா-அம்போருகப்பதமாதா வா
நம்பினேம்காசி   விச்வநாதனே தேசி
அம்புருநாதர்கின்வார   துதிக்கும்பிரதாப[சிவ
இணையாருனக்கிணையென்றகம் - துணிந்தோமுனைப்பணிந்தோம்

சரணங்கள்.

மானேச்சடையானேயிறையானேபெருமானே - கங்கைமானே
வானகத்துள்ளயாரும்   வாசவன்பூசனைய
வன்மையாகக்கொண்ட   வாரணசிவாழ்வே
யானையுரித்தோனே   மழுமானேந்தரித்தோனே
வானோர்களெல்லோருந்தினம் - வணங்கும்பதத்தோனே
வாநாதனேகுருநாதனே   வனர்காவலர்பணிபாதனே (சம்)
௨. தொண்டர்சகித்திரக்கும்புகழ்-கொண்டாய்விடமுண்டாய்
சண்டன்பிரட்டிட   வண்டியதொண்டனை
சஞ்சலமொழித்தேமன்   நெஞ்சிலுதைத்திட்ட
ஆண்டவனேயெமை   யாதரிப்பாயே
அண்டர்களுக்காய்நஞ்சுண்   டடியார்களைக்காத்தாய்
அதுபோலவேயிதுசமயமெமை-யாதரிப்பாய்சங்கர (௩)
௩. ஆதித்துநல்லயோத்தி   நாடாண்டவரிச்சந்திரன்
[illegible]திகன்றுணைத்தால்   மைந்தன்மந்திரியுடன்
கொண்டவளுமுந்தன்   கோயில்தேடிவந்தோம்
ஓசிவசிவ[illegible]   சிநேகாமியாள்பவனே
தேசித்துனைப்[illegible]பவர்   நெஞ்சண்டமாகும்
தேசாவிச்வாசாலர்   [illegible]ஜெகதீசாசிவ (சம்போ)

தேவாரம்.

மாசிலாமணியேபோற்றி மலரயன்பணிவாய்போற்றி
விசியபுகழோய்போற்றி விண்ணவர்க்கரசேபோற்றி
தேசிக்கும்பொருளேபோற்றி நின்மலவடிவேபோற்றி
காசிவிச்வேசாவுந்தன் கழலிணைபோற்றிபோற்றி (௪)

கலித்துறை.

வேதாவிநோதவிமலசொரூபவேதியர்க்குப்
போதாமடந்தையின்வாதாபுரத்தான்பூசைசெய்யும்
யாதாவென்மேற்க்ருபையார்த்திவாய்பரமாவிச்வ
நாதாவுயிர்த்துணைநீயலதாரித்தரணிலத்தே (௫)

௮-த்விபதை-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

க. கெதியென்றனையடைந்தோமுனை   கேளும்வாகாசிவாழ்வா
நதியுனமதியுமணி   நாதாவிச்வநாதா
௨. கருணைசெய்யத்தருணமெமைக்   காப்பாய்வினைதீர்ப்பாய்
அருளும்புயப்பதமேதுனை யடைந்தோமுனைத்தொடர்ந்தோம்
௩. கழுதைக்கருள்தாவேசிவ   காசிதனில்வந்தாய்
பழுதாகுமோவெமக்கார்த்திடில்   பரமேசங்கரனே

௪, விசுவாமித்திரமுனிவனைக்கடன்   விளாவிநீரவேண்டி
விசுவாசமாய்ப்பணிந்தோமுமை   விமலா அருணிமலா

பொது-விருத்தம்,

காசிநகரடைந்துதிருப்பதியைநாடிக்
கடவுளைப்போற்றிமனக்கவலையாற்றி
வாசியுடனேரடைவில்லடைந்தபோது
வண்மையிகுமந்திரியுந்தவசியாகி
ஒசிவர்ப்பொருளவையு மையமேந்தி
யிட்டதளித்தந்தருணைக்கிட்டமீதி
மாசிலாக்கற்பினளிட்டளிக்கவுண்டார்
மனங்கண்டார்மறையவன்கொள்சினங்கொண்டாரோ (உ)

(வசனம்) அகோகேளுங்கள் பூபதிகளே இவ்விதமாய் ஸ்ரீகாசிபுரியையடைந்து கங்காஸ்நானஞ்செய்து ஸ்ரீவிச்வநாதனைப்பூசித்துத்தோத்திரஞ்செய்து ஓரிடத்தில்வந்திருக்கும்போது மந்திரியானவன்தவசிரேஷ்டனுக்குசகலசாமச்ரிகைகளும் யாசித்துக்கொண்டுவந்துகொடுக்க நட்சத்திரையருக்குக் கொடுத்த மீதியைபதார்த்தங்கள் சந்திரமதியின்கையினல்சிறமத்துச் சாப்பாடுசெய்துகொண்டு ஓரிடத்தில் இருக்கும்போது பிராமணனாகிய விசுவாமித்திரபகவானுடைய மனத்துள்ள கொடூரமான எண்ணக்குறிப்பையறிவிப்பதுகாண்க

அரிச்சந்திரனும்-நட்சத்திரையருஞ்சொல்

௬-தரு-இ-ம்-தன்யாசி ஆதிதாளம்.

பல்லவி.

கோசிகனுக்குரைத்தபொருள்தனைக்கொடாவிட்டால்
கொறடாவினலடிப்பேன்

அநுபல்லவி,

காசிமாநகர்சேரக்   கைதனிற்றரேனென்று
காலத்துடனுரைத்த   காவலனே அன்று(கோசி)

சரணங்கள்.

௧, பொறுப்பொறுமையாவுந்தன்   பொன்னடிசரணம்
பொருட்களைத்தந்தனுப்ப   விதுகாலேதருணம்
வரும்வருமுந்தன்பொருள் வாய்த்திடும்வகைக்கொரு
வழிதனைத்தேடுற   வரையினுமனம்(பொறு
௨, நெத்தியிற்கல்லை   நிறுத்தியடிப்பேன்
நிலையாகவெயில்தனி   னின்றிடச்செய்வேன்
சத்தியவானென்று   சாற்றுதல்தடுப்பேன்
சபையில்முனிமொழிந்த   சபதந்தனைமுடிப்பேன்(கோ

௩, உத்தமனேயுனது   சித்தந்தனைமகிழ்வீர்
ஒயாக்கவலையுற்று   வாடுவதறிவீர்
சித்தமிரங்கிமிகத்   தயவுசெய்திடுவீர்.
சிறுமதியுடையன்மேல்   வறுமைதடுத்திடுவீர்(பொ)
௪, முதுகினிற்சுடுமணல்   மூட்டையைவைப்பேன்
மூக்கினிற்கயிற்தனை   மாட்டியிழுப்பேன்
குதிகால்நரம்பினைக்   குறட்டினலெடுப்பேன்
குடிமியில்லையென்று   கொட்டிமுழக்கிடுவேன்(கோசி)
௫, இதமிகதமிரங்கு   மறந்தமறையவரோ
இரவும்பகலுமெங்க   ளிடுக்கமறிந்திலீரோ
பதமறியாயவிந்த   விதமுனைக்கிதீரமெத்தப்
பாதவிக்கவிடாமல்   பாதுகாத்தருள்மனம் (பொ)
௬, அன்னைந்தாள்மாட்டியுன்   னங்கத்தையொடுக்குவேன்
ஆயிரந்தேட்கொட்டு   மதுபோலக்கடிக்குவேன்
அன்னவசொல்லர்மிக   வெருண்டிடமுடுக்குவேன்
வேதமுனிவன்மன   வீறுப்பைத்தடுக்குவேன்(கோசி)
௭, வண்ணநற்கூடமணி   முடியணிந்தரசாண்ட
வன்மையுடனுவயுந்தானை   வார்த்தைதந்ததுபோல
எண்ணங்கலங்கிடாம   லின்றுமும்பொருட்களை
இயற்கையாய்த்தந்துனிணையடிமலரோதுவோம்(பொ)

புராணவிருத்தம்

ஒருநாட்செலமறுநாளாயினுநாதிவினைநினையா
பெருமான்களிருடையானேடு புகரோன்மிகவெகுளாய்
முருகார்தொடைமுடியாய் மறைமுனிகூறியபொருள்நீ
தருமாறுஐதெனிலின்று தருகென்றுதடுத்தான்

பொது-விருத்தம்.

குலதரன்கோயில்தனிலிருந்திவ்வண்ணஞ்
சொல்லியமன்னவன்றிகைக்கநட்சத்திரயன்
சாலவெறியடைந்தவன்போற்றுள்ளித்துள்ளிச்
சஞ்சலத்தாலுளம்வாடஜகத்தோரெல்லாம்
ஞாலமறிவிவர்களுக்கிவ்விதியென்னென்றும்
ஞானமில்லார்பிறந்தகுலையாரென்றபோது
ஜாலமென்னசெய்தாலும்விடுகேனென்று
சாதிப்பான்அவன்மனதைப்பேதிப்பானே (௩)

வசனம்.

இப்படியாகஸ்ரீகாசிவிஸ்வநாதருடைய திருவாலயத்திலே யிருந்துசொல்லப்பட்ட அரிச்சந்திரமகாராஜனை மனப்பிரமிக்கச் செ

யிந்தநட்சத்திரையன் பதைத்துத்துள்ளி சஞ்சலமடைந்தவன்போல வாடக்கண்ட காசிநகரோர்யாவரும் பூமியில்இவர்களுக் கிப்படிவந்ததேதென்றும், அவ்வியருக்குச்சொல்லாரென்றும், அங்குகூடியபோது நீஎன்ன ஜாலம்செய்தாலும் விடேனென்று பிடிவாதமாக அரசனதுமனதைப் பேதித்துக்கொரோமாகச் சொல்லுவது காண்க.

௰-தரு-இ-ம்-தசாவந்தி-அடதாளம்

பல்லவி.

என்னஜாலஞ்செய்தாலுமினிப்பொறுத்திருந்திடேனொருக்காலும்

அநுபல்லவி,

முன்னர்மன்னனென்றிருந்தாள் மனம்பொறுத்தேன்மென்மேலும்
மாமுனிவர்சொன்மொழி மாறுமோபெரும்பாலும்
பொன்னனைத்தையுந்தந்தாற் போவேனினியாளுலும்
பொழுதுபோகுதக்ஷணம் பொறுக்கேனென்னசொன்னாலும்

சரணங்கள்,

௧ தவனைதப்பவுமாச்சே புன்னீர்ப்மொழி
தவறுதற்கிடமாச்சே இந்த
அவனியோர்க்கிகழ்ச்சே உன்னுடல்மெத்த
அவதிக்கேர்ப்படலாச்சே உந்தனுக்
கெவனித்தலத்தனிற் கவலையாயுனது
சுவணயியாவுந்தந்து சுகமளித்திடுவோன்
அவனைத்தேடித்துனை யனைத்தையுங்குவித்து
தவனலமடையத் தயக்கமன்றுற்று(என்ன)
௨, இரவிகுலத்திறைவர்க ளெவர்கட்கும்
இழிவுகள்விளைத்தாயே நாளும்
இரவும்பகலுங்காடே சரணடைந்து
இயர்க்கைமெய் யிளைத்தாயே
மருவும்விழிகளி னருவிபாய்ந்திட
சருவும்நீசெய்யுஞ் சளத்தாய்நேய்ந்திடப்
பருவந்தனிற்கடன் பணத்தைத்துலைத்திடக்
கெருவமகன்றுதற் கீர்த்திபெற்றிட(என்ன)
௩. கோசிகமுனிபாலே உனதுறத்
குணங்களைப்புவிமேலே என்றென்றும்
ஆசிகூறுவார்போலே எந்தனுக்
அருண்மிகு மொருக்காலே
மாநிலவுன மனமிகத்தெளிந்து
காசிவீதிதோறுங் களிப்புடனடந்து

ஏசிலாமனைவி மைந்தனைத்தொடர்ந்து
கூடிடாதுலைவிலை கூறுதல்கடந்து(என்ன)

பொது-விருத்தம்.

இத்தனைமையாயுரைத்தவ் விடறவன்றன்னை
யெல்லையிலாத்தொல்லைசெய்ய வெத்தனித்து
மத்தகயத்தான்மிதியுண்டாவினைப்போல்
மானிலத்திற்குதித்தெழுந்து மான்போல்துள்ளி
வித்தகனைத்துதித்திறைஞ்சும் வீணனே நீ
விசுவாமித்திரர்பொருளைத்தந்தாலல்ல
தெத்தகவும்விடேன்கிட்டி கைக்கொள்ளென்றான்
எங்கிளுள்சந்திரமதிதாங்கிளுளே

(வசனம்) இந்தப்பிரகாரமாகச் சொல்லி அந்த அரிச்சந்திர மகாராஜனை துன்பஞ்செய்ய யத்தனித்து மதவானையின்காலில்மிதிபட்டசர்ப்பம்போலக் கிளம்பிக்குதித்து மான்குட்டிபோல் துள்ளிநீஸ்ரீகாசிவிசுவநாதனைத் துதிசெய்துகொண் டிருப்பதினாலே ஆவதென்ன வீணனே எமது விசுவாமித்திரருடைய பொருளைக் கொடுத்துவிடு இல்லாவிட்டால் இல்லையென்றுவது சொல்லென்று கிட்டியைதட்டி வெறிற்கட்டும்போது சந்திரமதியானவள் மனவருத்தமடைந்து கணவனது கைகளைத்தாங்கிக்கொண்டு நட்சத்திரையனை வேண்டுவதுகாண்க.

௰௧-தரு-இ-ம்-பூரிகல்யாணி அடதாளசாப்பு

பல்லவி,

சாமியென்துரைக்கிக் கிட்டிக் கைநோகுமையா சாமி

அநுபல்லவி,

பூமியெங்குக்கீர்த்திபெற்றபுண்ணியனெங்கள் சத்தியவாசகர்க்
காமிகக்கொடுமைநட்சத் ரையர்செய்கடுமை
நேமிக்குமைகாமிக்கெதிர், நீதந்தெரியாதோ
நெஞ்சங்களித்திடச்செய்குவீர்தஞ்சமனம்பொறுத்துய்குவீர்(சா

சரணங்கள்.

௧. தீதாய்கிட்டிகட்டிமனந் திகைக்கச்செய்யலாமோ
வாதாடியெதிர் வழக்குச்செய்து
வண்மையாவையும் கைக்கொண்டுய்த்து
சூதாகவந்துபொய்யைச்-சொல்லாரென்றுணர்ந்து
ஓதாமொழியோர்தியுள முருகண்ணீர்பெருக
ஓயாக்கவலையினுலெமைத் தீயவகைதனையின்றமை(சாமி)
௨, மாசில்லாமன்னனையிப்படி மதிகலக்கலாமோ
கோசிகமுனி வர்க்குமுன்னென்ன

சொரிமைசெய்தோமோ குவலயந்தனில்
ஓசிவசிவனே தக வோபகவானே
நேசித்துறவாடியெங்கள் நிலையாவுமறிந்து
நிதமும்விதனமதாற்றிடு விதமேசெய்யத்திடமுற்றீரோ (சா)
௩, மலக்கரந்தன்னிற்கிட்டி காவலனுக்காமோ
விமலமாமுகஞ் சோறச்சோற
வெறைட்டிவெறைட்டி யடிக்கிறீரையோ
நமஸ்காரஞ்சொன்னேன் நாக்கெலுநேரம்
அமலப்பதத்தொழுதோமும் தடிபார்களைக்காரும்
அய்பாவிதுசெய்பாவினைதய்யாநட்சத்ராயாபொறும் (சா)

பொது,விருத்தம்.

நதிமதிமுடியயீசனைவிசுவ
நாதரது கோயில்வலம்வந்துநல்ல
மதியுடனே வணக்கியுள்ளும் புறம்புமொன்றாய்
மலரடியைத்தொழுதிறைஞ்சி மகிழ்ச்சிகொண்டு
பதியதனிலுள்ளநல்ல வனங்களெல்லாம்
பார்க்குடனேயாவரும்போய்ப்பார்ப்போமென்ன
விதியிதுவோ உனக்கென்று வேந்தைநீசன்
வெறித்திட்டகோட்டிக்குள்மறித்திட்டானே (௫)

(வசனம்) அகோஜனங்கள் அரசர்க்கரசர்களே கங்கையும் சந்திரனையும் ஜடாபாரத்தில் தரித்திருக்கின்ற ஜெகதீசனை ஸ்ரீ காசிவிசுவநாதருடைய திருவாலய வலம்வந்து நல்லமதியுடனே நமஸ்கரித்து வாக்கு மனமு மொன்றாய் அவரது சரணாரவிந்தங்களைத் தியானித்துத் துதித்து சந்தோஷித்து இனி ருணவிமோசனமாகும்படியான வழிதேடுவதற்காக அந்நகரிலுள்ள பற்பல வினோதங்களையும் பார்த்துவருவோமென்று ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்ளுகிற ஆரவாரங்களைக்கேட்டு இது உங்களுக்குக் கிரமமாயிருக்கிறதோ ஓய் அரிச்சந்திரமகாராஜனே நில்லென்று வழிமறித்துக் குறுக்கிட்டுத்தடைசெய்து ஒரு கோடிழைத்து அதின் மேல் நிறுத்திக்கொண்டு கன்மழைபொழிந்தாற்போலே கடுகடுத்து நட்சத்ராயன் சொல்லுவதுகாண்க

௪௨-தரு-இ-ம்-மோகனம்-அடதாளசாப்பு

பல்லவி,

இனியென்னதடைசொல்லடா-அரிச்சந்திரா
இந்தக்கோட்டில் நில்லடா

அநுபல்லவி

கனிவாயமுதபொழிந் தாற்போலமொழிந்தாயே
கனிவிதய்பொன்றருங் கவலையையொழிந்தாயே (இனி)

சரணங்கள்.

௧, கல்லுமுள்ளும்பெருத்த கானகத்திலிரண்டு
காலுங்கடுகடுக்கக் கடைவிழிகள்புரண்டு
அல்லும்பகலுமுந்த வடிகளையான்றுடர்ந்தும்
அன்னகாரமில்லாம லனுதினமும்நடந்தும் (இனி)
௨, வெய்யலினலெனது மேனிநலிந்துவாட
வேந்தனென்றல்லோவுன்னை வேண்டிவந்தேதிர்கூட
கையில்தருந்துகைகால் காசெனிற்கணக்கிட்டு
கனவானென்றபேரெடுப் பதையுங்கடத்திவிட்டு (இனி)
௩, கவலையுள்ளவனாற் கருத்துவேறொன்றிற்போமோ
காதலியுடன்கொஞ்சிக் களிக்குமனமுண்டாமோ
குவலயத்தார்புகழக் கோசிகன்கடன்தந்து
கொண்டாடுந்திறத்திலுன் குலத்தோரெவர்க்குமுந்து (இனி)

பொதுவிருத்தம்,

புகரவனிந்நெறியுரைத்து மிகச்சினத்துப்
பொறுக்கொணாத் துயரளித்துப்போர்கொடுக்க
நிகரவனிக்கிலெவரு மில்லாவேந்தன்
நெறிதயங்கிக்கண்கலங்கிநிலைமைகெட்டு
பகரியதன்பத்தா லுருகிவாடிப்
பரமசிவன்பதமலரைப்பரிந்துநாடி
நசைவரும்பொருள்தேடும் வகையேதென்று
நாம்புவான்கடவுளின்முன் தேம்புவானே (௪௩)

(வசனம்) அகோஜனங்கள் ஸத்யதர்ம சொரூபர்களே அந்நீத நட்சத்ராயனானவன் இவ்விதமாகச் சொல்லி கோபித்துப் பொறுக்கொணாத இம்சைப்படுத்திச் சண்டையிட இணையில்லாத இராஜனானவன் நிலைகுலைந்து கண்கலங்கி சொல்லுதற்கரிய மனவருத்தத்தா லுருகிவாடி ஸ்ரீகாசிவிசுவநாதரது திருவடியை தியானித்துக் கொடுக்கவேண்டிய அருமையான திரவியங்களைத் தேடுகின்றவகை எப்படியென்று மனக்கிலேசத்தினாற் புலம்புவதுகாண்க.

௪௩-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

கண்ணிகள்

௧, கோசிகன்றனதெனைக் கோட்டில்மறிக்கிறான்
தெய்வமே தெய்வமே பொன்னைக்
கொடுத்தனுப்பும்வகைக் கோர்வழியுங்காணேன்
தெய்வமே தெய்வமே
காசிவிசுவநாதா கருணைமிகப்புரிவாய்
தெய்வமே தெய்வமே இந்தக்

கடன்தீர்த்தெனையாண்டு காத்தாட்சித்தருள்வாய்
தெய்வமே தெய்வமே
உ, மதிமோசத்தாலிந்த விதிவசமானேனே
தெய்வமே தெய்வமே உந்தன்
மலரடிகண்டோர்க்கு மறுசென்மமில்லையே
தெய்வமே தெய்வமே
பதிபாவையுமிழந்து பங்கப்படுவாருண்டோ
தெய்வமே தெய்வமே உந்தன்
பாதமேகெதியல்லா லாதாரவேதுகாண்
தெய்வமே தெய்வமே
ந, பெட்டியைக்கட்டிக் கிலேசப்படுத்துறுன்
தெய்வமே தெய்வமே நல்ல
கீர்த்திவருத்திடும் மூர்த்தியும்நீயாச்சே
தெய்வமே தெய்வமே
அட்டியென்னவென்றெந்தனங்கத்தை பொடுக்குறுன்
தெய்வமே தெய்வமே இனி
யாதரவெனக்கிந்தப் பூதலந்தனில்நீயே
தெய்வமே தெய்வமே
ச, நெத்தியில்கல்லை நெருத்தியடிக்குறுன்
தெய்வமே தெய்வமே யென்னால்
நிருவாகமில்லையின் மேற்றனைமாற்றுவீர்
தெய்வமே தெய்வமே
வெத்திமிகுத்தவுன் சித்தமிகக்களிப்பாய்
தெய்வமே தெய்வமே
வேந்தன்குலத்தோரைக் காக்கும்விசுவநாதா
தெய்வமே தெய்வமே

பொதுவிருத்தம்.

மணிகொழிக்குந்தாமரைத்தடாகந்தன்னை
மதகரிகள்கோடிகலக்கியதுபோல
கணிதமில்லாப்பொருட்களையோர்விடிக்குள்ளே
கருதியளித்திடலாச்சுதில்லாவிட்டாற்
றிணிப்பனையில்லையென்றும்போதுமென்று
நீர்களைக்கலக்கும்நட்சத்திரையன்பாதம்
அணிமகுடமெனச்சிரமேற்கொண்டுகோபம்
ஆற்றுவாரவர்மனதைதேற்றுவாரே (௰உ)

(வ-ம்) இவ்விதமாய் முத்துக்கள் விளையப்பட்ட தாமரைத்தடாகத்தை கோடானுகோடி மதயானைகள் கூடிக்கலக்குகின்ற தற்சொப்பாக எண்ணிறந்த தனங்களை ஒருமாத்திரைப் பொழுதிற்குள்கொடுத்தாலாச்சுது இல்லாவிட்டால் ஓய் புஜபலபராக்கிரமத்தையுடைய அரிச்சந்திரனே இல்லையென்கிற ஒருசொல்மாத்திரஞ் சொல்லுமென்றுரைத்து நீர்களைக் கலக்கச்செய்துக்கொண்டிருக்கிற நட்சத்திரையனுடைய இரண்டுபாதங்களையும் தங்கள்சிரத்திலணிந்துகொண்டு அவருக்குண்டாகிய கோபமாற்றி சித்தமிரங்கும்படி வேண்டிக்கொள்ளுவதுகாண்க.

௰ச-ரு-இ-ம்-உசேனிஸ்வரஜதி-ரூபகதாளம்

பல்லவி.

அருள்செய்யவேணுமையா-என்சாமி அடிமலர்சரணமையா என்

அநுபல்லவி;

பொருளனைத்துந்தேடிப் பொற்புறந்தந்தனுப்பத்
தெருளில்லா தோராவெண்ணித் திகைக்குறீர்
தாரித்தா-குகுஜெந்தரி-தகஜெம்-ஜெம்தரிகிடதக
தகணந்தரி-தரிகுந்தரி-தகதீனுதகிடஜம்
பாப்பாப்ப ஸ்ஸ்ஸ ஸெநி தநிஸக்கரிஸ-நிசரிநிதபம்
தாஹுதசம்தரிகிடதகதகதக-தகதிமிதகதிமிதோம்
தகதித்தளாங்கு தகததிங்கணத்தோம்
இருளடைவத்தடர்வனம்புகுந்திடபாரில் வீழ்ந்ததுபோல
இதமறியாதுவாய்ப்பதம்பேசி[illegible] [வே
[illegible]டேறும்
வனாசெய்துவுகமை[illegible]நீக்கவேணுமையனே - எங்க
ளியல்பறிந்தையனே
ஒருவாதாரவுண்டோயிவ்வுலகிதுந்தனையல்லது
ஓகோவுடல்பாரகவே-வேகாதகம்நோகாமலே (அருள்)

சரணங்கள்,

க, ஜாலஞ்செய்வதேனென்று-என்சாமி-ஜகத்தோர் திகைக்கப்
காலப்பிழையோஜெகதி கர்த்தன்செயலிதுவோ [பேசீர்
ஞாயமீதினிலிந்த ஞாயமேதோ
தகணந்தக தரிகுகுந்தரி தகஜெணுதத்ஜெணுதத்திமி
தத்திமிதகதகதீனுத தகணங்கிடதகஜெம்
ரிக்காக நிஸ்ஸா ஸெ நிதபநிதஸெஸெநி தபகரிரிகம
தத்திமிகிடதக தரிகிடஜெந்தரி-தரிகிடகிடதகதோம்
தகதித்தளங்கு தகததிங்கணத்தோம்
ஆலமுடன்றமராகாத்தவ னருளின்படியல்லது
ரூபவேறவனை ஓய்பவிதியுளதோ
ஆதியந்தமறியாதபூசரோ-ஆ-இந்த
அவதிப்படவெங்கட்கன்றயன்விதித்தவிதியோ-அந்த
அருந்தவன்சொல்மதியோ

சோலமதுவேருகியுங் கொடுக்கக்கதியிலையென்றேமோ
கூறுவீர்மிகச்சினையாறுவீர் மனதினிற்
றேருவீர்புகழ்தனின்மீறாவினையனே (அருள்)
உ, ஆங்காரங்கொண்டுசிறி-என்சாமி-அடிக்குறீர்மிகதுடிக்குறீர்
நீங்காமனத்துயரால் நினைவழிந்தபாலனை
ஓங்காரங்கொண்டுகோலா லுதைக்குறீர்
தாதிக்கிடதரிகிமிகிட தத்திமிதிமிதித்தரிகிட
தத்தத்ஜெணு-தகதகஜெணு-தகதச்ஜெணுஜெணுத
ஸரிசமபதநிஸஸநிதப-ஸசரிகமப-ஸமஸக்கரி
தத்திமிதரிகிடதரிகிட-ஜெம்ஜெம்-தரிகிடகிடதகதோம்
தஜித்தளங்குதகதிங்கணத்தோம்
தாங்காதினிமனம்பொறுத்திடத்தருணமுமதருளும்புயத்
தாளிணைதோற்றுதற்காளாகினேனுமெனுந்
தன்மையாலேமனவன்மமாற்றியென தாருயிர்
புதல்வன்படுந்துயர்தனிந்துக்காக்கவேணுமையனே-பிரு
தவத்தோர்புகழ்துய்யனே
பாங்காய்ப்பொருளனைத்துந்தரும்
பரிவிற்குவையெனவுளாத்தோமோ
பார்ப்பீருறை நீர்ப்பீர்கதிசேர்ப்பீரொமைக்காப்பீர்மிக
௩, அருமிக்குத்தெய்வமேதுணை [illegible]போ
மிகுதியாகச்சொல்லி விம்மியேங்கியிழோதோ
தகுதியோதற்காருந்தினதயாளா
திமிதிமிகிடதித்திமிதிகுதிகுதிணுததிமிதரிகிட
திரிகுத்தகுதிரிகுகுத்தகுதிரிகிடகிடதித்திம்
ரிம்மாம்ம-கக்காரி ரிதபனி-நிதபநிதபம்
தித்திமிதிமிதிமிதிமிகிடதக-திந்திமிதிமிகிடத்தோம்
தித்தளங்குதகததிங்கணத்தோம்
பகுதிக்கடைத்தெளியோர்களைப்
பங்கஞ்செயத்திடமுற்றேமோ
பாலனைமிகவனுகூலனேதாமரைலோலனே
குணசீலனேவுமது [னே
பாதமே-கெதியென்றடைந்தோமிகப் பரியாசகாலம் வருமைய
இருபைபார்த்தருளுந்துய்யனே [யாமோ
நருகதிரவனெனமைநகையாறேநவிதுவ தனு வெனிற்பொய்
நாகரூனபோதாமிக வாதாமுன்செய்திதாமிக (அருள்)

பொதுவிருத்தம்

சாருவத்தமறையவனிவ்வாறுபுபன்
சனைமிடுக்குமுறச்செய்பத்தபக்குமுற்று

விருதனிற்பத்தியசெத்திலயப்போலும்
வேங்கைமின்கைக்கப்பட்டபசுவைப்போலும்
வரகுதிரிகையின்கல்லுக்ககப்பட்டாற்போல்
வள்ளலினைவாட்டியேலோகிதனைக்கூவி
சாருதனையுரவினிற்போட்டிடிக்கும்வண்ணஞ்
சதிகொண்டாளைதச்சந்திரமதிகண்டாளே (௰௩)

(வசனம்) இவ்விதமாய் தாதுவந்த நட்சத்திரயனைவன் அரிச்சந்திரனை துன்பப்படுத்தியபோது மகாகஸ்திப்பட்டு காட்டிற்பற்றிய நெருப்பைப்போலும் வேங்கைப்புலியின்கைக்கப்பட்ட பசுவைப்போலும் திரிகைக்கல்லிலகப்பட்ட தானியத்தைப்போலும் நானாவிதமான துன்பப்படுத்தி அந்தடத்திலிருந்தலோகிதனை யழைத்துக் காய்ந்தசருகுகளை உரலிலிட்டுஇடித்து நொறுக்குவது போல இமிசிக்கும்போது சந்திரமதியானவள்கண்டு நட்சத்திரயனைச் சரணகதியடைந்து வேண்டிக்கொள்ளுவதுகாண்க.

௰௫-தரு-இ-ம்-சங்கராபரணம் தாளம்-ரூபகசாப்பு

பல்லவி.

பாலனையா-ஐயபச்சைப்பாலனையா

அநுபல்லவி,

காலகாலன்றந்தசேனுமைந்தன் றூலமீதிலிந்தக்கோலமாகலந் [த (பா)

சரணங்கள்,

௧, பிள்ளைக்குட்டியுமக் கில்லையோ-இகன்
பிறந்தவேளையென்னை தொல்லையோ
வெள்ளைவிடையோன்கிருபை யில்லையோ-மிக
வேதினைச்செய்வாக்கு மெல்லையோ (பாலனையா)
உ, பொருளைத்தரசில்லை யென்றேமோ-மறைவிற்
போகவிட்டப்புறஞ் சென்றேமோ
மருளடைந்துமனம் வின்றேமோ உமது
மனம்வெறுக்கப்பேசி நின்றேமோ (பாலனையா)
௩, முக்கிபிப்பாரமேல பேசுநீர்-எங்கள்
முகமதியாதுபோ லேசுநீர்
அங்கிலார்போல்மனம் ரோசுநீர்-மகன்
அறிவழியாக்கோலால் வீசுநீர் (பாலனையா)
௪, ஆவின்கன்றைப்போலே காட்டுநீர்-சுழுத்தில்
அண்ணந்தானையிழுத்து மாட்டுநீர்
கூவிமனப்பாலைப் போட்டுநீர் பொல்லாப்
கொடுமையாவுமிக்கே காட்டுநீர் (பாலனையா)
௫, ஐபதுபாவ மல்லவோ மெத்த
அறிவுளவுமக்குயான் சொல்லவோ

மெய்சலாதானை வெல்லவோ-இந்த
மேதினியிற்புகழ் புல்லவோ (பாலனையா)
௩. கட்டியடித்தா சுவண்டமோ-எங்கள்
காரியமானபின் வேண்டோமோ
வெட்டித்தவஞ்செய்து மீண்டோமோ-மன
விருப்பமற்றமாக பூண்டோமோ (பால)
௪, மதலைச்சொல்மாறிடாப் பாலனே-எங்கள்
மாதவத்துக்கேற்ற சீலனே
அதலமுதலோர்புகழ் சோலனே-மறைநூல்
அனைத்துமறிந்தவனு கூலனே (பால)

விருத்தம்.

கொதித்திடுங்கொப்பறையில்விழும் புழுவைப்போலுங்
கொழுங்கொம்பிலாதசெழுங் கொடியைப்போலுங்
கதித்தவெயிலிற்றுறந்திடுபிள்ளைக் கையிற்கட்டி
சுட்டிடக்கண்டுருகியதாய் கலங்கிமுன்னம்
உதித்தகடல்நஞ்சையுண்ட கைலைவாழ்வே
உன்செயலிஃதிதுவோவென் றுள்ளம்நொந்து
துதித்திட அம்பதைத்துயிரு கண்ணிற்சோரத்
துடிக்கின்றாள்சந்திரமதி நொடிக்கின்றாளே (மெச)

(வசனம்) இவ்விதமாய் மிகுந்தவெப்பத்தினால் கொதிக்கின்ற நெய்க்கொப்பறையில்விழுந்த புழுவைப்போலும் அணையும்கொம்பில்லாத சிந்திற்கொடியைப்போலும் பரந்தெரிக்கின்றவெய்யிலிலேநிறுத்தி கைகளிற்கட்டியுங் கட்டியதைக்கண்ட தாயான சந்திரமதியானவள் மனக்கலக்கமுற்று அந்நாளில் உற்பத்தியாகியஆலகாலத்தையுண்ட ஓ கைலைவாசனே உனது திருவருளிதுவோவென்று மனம்நொந்து பலவாறுதுதித்து உடல்பதைபதைத்து இருகண்ணிலும் நீர்ததும்பத் துடிதுடித்து அபாப்படுகிற புத்திரசிகாமணியைக்கண்டு மனம்பொறுக்காமல் சந்திரமதியானவள் நட்சத்திரையனைப் பிரார்த்திப்பதுகாண்க,

௰௯-தரு-இ-ம்-ஆனந்தபைரவி ஆதிதாளம்,

பல்லவி

விரகதியாப்பாலகனைவெறுப்பதுமோசாமி
வேதனைபொறுப்பாரேசாமி

அநுபல்லவி.

பாதகியிடைக்குமோ பணமில்லையெனப்பேயோ
உரகனைப்போலேசீறி உள்ளத்திற்கோபமீறி - ஆ
உலகிலில்லாக் கலகமெல்லா-மிலகிப்புல்ல

உத்திதனில்விழுந்-தழலுந்துரும்புபோற்
ஓயாக்கவலையினால்-மாயச்செய்தனுதினம் (விரகதியா)

சரணங்கள்

௧, தஞ்சமுன்பாதமதி தயக்கந்தவிர்த்துநாளும்
நற்காந்தருளுமையா
கஞ்சனன்றுவிதித்த கதியிதென்றுணர்ந்தோர்க்கும்
நெஞ்சந்துடித்திடாதோ நிமலாநீரறியாதோ-நன்
நெறியொழிந்து-அறிவழிந்து-குறியழிந்து
நிலைகுலைந்தலைந்து-தேமெனத்தலைந்து
நீக்காமனக்கவலை-தாங்காதனுதினமும் (விரகதி)
௨, பார்வக்கொடியைக்கட்டப் படைத்தானேபிரமதேவன்
பரிதாபமொழிப்பீரையா
தேவர்க்கும்பொறுக்குமோ தீவினைசெருக்குமோ
சேவடியானைபொருள்செலுத்துவோம்பொறுத்தருள்- ஐய
சிந்தையுருக-நொந்துகருக-வெந்துமுருக
சித்திரமெத்தனை செய்யத்துடங்கினும்
செப்புமொழிதவறல் ஒப்புமோவரவர (விரகதி)
௩, மதலைச்சொல்மாறிடாத மைந்தனைவதைக்கிறீர்
மலரடிசரணமையா
அதனைமகிழ்ச்சியாலே அவனியிலுமைப்போலே
விதனப்படுத்துமேலறவி[illegible]மனங்கொண்டோரை-அந்த
விண்ணவரிலும்மண்ணவரிலும்-நன்னவறியோம்
வில்லம்புபோல்வாயிற் சொல்லம்பிறைவைது
வீழ்த்திமனதுநோகச் சுத்தியனுதினமும் (விரக)

பொதுவிருத்தம்

தூதுவந்தவந்தணனிவ்வாறுசீறித்
தொல்லைசெய்வெல்லையிலாத்துன்பமுற்று
ஏதுவழிபுரைப்பதெனவேங்கியேங்கி
யிறையவனைநெஞ்சினில்நினைத்துவரும்போது
கோதுகவிகளவுமிலா மதிதயேந்திரன்
குணமிகுநற்றவத்துதித்தகோமளாங்கி
மாதுசிரோமணிசந்திரமதியிவ்வாறு
மனங்கொண்டாள்மணவாளன்கணங்கொண்டானே ()

(வசனம்) இவ்விதமாய் இம்சித்தநட்சத்திரையன் கோபாக்ராந்தனாய் அடிக்கடி துன்பப்படுத்திடபோது துக்கித்து பணத்துக்கு என்னவகைசொல்வதென்று திகைப்புற்றுபிரம்மாவை நினைத்து நொந்துருகும்போது கடுகளவும் களங்கமில்லாத சந்திரமதி

யானவள் சிந்தையுற்ற தனதுபிராணநாயகனை நோக்கிச்சொல்லத்தொடங்குவதுகாண்க.

௰௬-தரு-இ-ம் வராளி-ஆதிதாளம்

சந்திர. மன்னவாபொருள்தேடிமறையவர்க்கீந்தால்
இந்தநரர்தனிற்பிழைத்திருந்திடலாமே
அரிச்ச. கன்னியேசொல்வாய்கவுசிகர்கடன்பொருட்
குன்னியவகைதேடவுளவறியேனே
சந்திர, கணவனேமெத்தக் கவலையேனுமக்குக்
குணமதாயென்னைவிலைகூறிவீரோ
அரிச்ச மண்டலத்தலையாண்டமன்னவர்க்கழகோ
கொண்டவளென்னைவிலைகூறிவாயே
சந்திர, தலையனுந்தலைவியுந்தன்னிகரில்லா
உனைவிலைகூறுதலுலகினிலழகோ
அரிச்ச, கன்னியேயுந்தன்கருத்ததுவாயினும்
உன்னையான்விற்றிடவுளமகிழ்வேனோ
சந்திர, மகிழ்ச்சியும்பெருமையும்மாமுனிக்கல்லால்
இகழ்ச்சியுமிலைச்செய்வோய்ராசபிரானேசா
அரிச்ச, மதியேயானிதுசெய்தால்மாநிலம்நகையாதோ
கதிர்குலத்தரசர்க்குக் கதியடைவேனோ

பொ[illegible]விருத்தம்,

கள்ளமில்லாக்காதலனிவ்வாறுரைக்கக்
சற்புமிகுமாதரசிகலக்கமாற்றி
உள்ளமகிழ்களித் தென்னையுமகனையுந்நீர்
உறுதியுடன்விலை கூறுமெவ்வாறு
தள்ளப்போமுழிவினைநம்முதாரைத்
தலைசுமையைவேறொருவர்தாங்குவாரோ
அள்ளவுந்தவறவொண்ணாதென்றுரைத்தாள்
வெடுத்திட்டான்மறுத்துமாக்கத்தொடுத்திட்டானே (௰௭)

(வசனம்) அகோ சேனுங்கள் திரிகாலங்களிலும் புகழ்பெற்ற மன்னவர்களே கபடமற்ற பிராணநாயகனானவனிப்படிச்சொல்ல பதிவிரதாசிரோமணியாகிய சந்திரமதியானவள் மனக்கிலேசமகற்றி உள்ளங்கோடு என்னையும் புத்திரனையும் விலைகூறிவிடில் ருணவிமோசனமாகும்வகையேது முற்காலத்திற்செய்ததீவினை நமக்காகுநாம் சுமக்கவேண்டியசுமையை வேறொருவர் சுமப்பாரோவென்றுப்பிரமாணமும் எவ்வாய்மொழிதவறாமல் விற்றுவிடுமென்றாள் அப்போது அரிச்சந்திரமகாராஜனானவன் தனதுபத்தி

னியாகிய சந்திரமதியின் வார்த்தைக் கெதிர்வார்த்தை சொல்லத்தொடங்குவதுகாண்க

௰௮ - அரிச்சந்திரனும் - சந்திரமதியுஞ்சொல் - ஜம்பை

அரி, ஒப்பாகநீயுரைத்தா யுத்தனையுமைந்தனையும்
இப்பாரிலேளனமாவிசைத்துதான்விற்பேனோ
சந்தி, விற்பிடித்ததிணிபுயனே வேந்தனே இதேளமோ
சொற்படிநீதவடிமைத்திறந் தொல்லுலகிலரிதோ
அரி, அரியபிரம்மாதிகளும் அரிபவனைமணம்புணர்ந்து
பெரியகுடிக்கடிமையென பேசலாமோமதியே
சந்தி, மதியழியமனங்கலங்கமாதவர்தாதுவர்செய்யும்
விதிதவிழ்க்கவினியவகை வேறேதுபிரானேசா
அரி, வேறுவகையிலையெனினும் விளங்குமூன்றாய்தந்தைபரிக்குக்
கூறும்வகையேதுள்ளது குதலைமொழியாளே
சந்தி மாதர்கள்தங்களுக்கிறைவன்மகிழ்சொல்லன்றொருவனல்லாம்
பூலத்திற்கேள்வருண்டோ புகலுவீர்பிரானேசா
அரி, பரைகுளிதாமெனவேபத்தினியும்மைந்தனையும்
தரணிதனில்விலைகூறில் தலைவர்களேசாரோ
சந்தி, எகவோருமேபேசவொரு[illegible]நீக்கமொழித் திடநினைத்துப்
பூராசன்கடனொழிக்கப் பொருந்துமவருண்டோ

பொது - விருத்தம்.

கன்னியிவ்வாறுரைத்துமனங்கசிந்துநின்றாள்
கதிர்குலத்துமன்னன்மதிகலக்கமுற்றான்
தன்னிகரில்லாமகனைத் தன்மைகண்டு
தந்தையேநீரெந்தனையும்விலையாய்கூறி
மன்னியவம்முனிருணத்தைத்தீர்த்துக்கொண்டு
மாநகரயோத்திதனக்கேகுமென்றான்
குன்னியதோர்மனத்தனிருவரையுங்கொண்டு
கூறுவான்தெருத்தெருவாய்மாறுவானே (௰௯)

(வசனம்) சந்திரமதியானவள் இவ்விதமாகச்சொல்லி நிற்கும்போது அரிச்சந்திரன் கிலேசித்து நிற்கக்கண்ட லோகிதாசனானவன் ஓய்என் பரபிதாவே நீர்என்னைவிக்கிறயித்து அந்தமாமுனீசுவரருடைய ருணவிமோசனஞ்செய்துக்கொண்டு அயோத்தியாபுரியையடையுமென்றான் அந்தருணத்தில்மனங்குன்றிய அரிச்சந்திரனானவன் மனைவியைத்தனிருவரையும் தெருத்தெருவாய்விலைகூறிவரத் தொடங்குவதுகாண்க.

௯௩ - தரு - உசேனி - அடதாளம்.

கண்ணிகள்,

க, மனைவிமைந்தனிருவரையும் விலைமதித்துக்கூறிலேன் எந்தன்
மனதுதேறினேன்
தினைவிலுங்கொடுங்கனவிலுமெனை நீங்காமையலாள் - கற்பின்
நிறைந்தநயலாள்
உ, இந்நகர்தன்னிலிருவரையுங்கொள்ளவிச்சையெவர்க்குண்டோ
பொரு - ளீவோர்களுண்டோ
நன்னகரயோத்திராடாளுஞ்செங்கோலின் நாதனரிச்சந்திரன்
சத்யம் - நவிலும்நரேந்திரன்
௩, காதிசுதன்விசுவாமித்திர முனிவன்றன் கையிற்கடன் பட்டேன்
அதைக் - கடக்கவுடன்பட்டேன்
வீதிதோறும்விலைகூறிவந்தேன்காசிவிசுவநாதனே போற்றும்
விமலபாதனே
௪, உந்தனருளால்மதிதயன்றவத்தில்வந்துதித்தஆவியாள் எனக்
குகந்ததேவியாள்
கந்தமலர்ப்பூங்குழலாளிவளைக்கருதிவிலையிட்டேன் மனங்
காணக்கடன்பட்டேன்
௫, வேண்டிவந்தோமெனமக்காத்தருள்வாயென்றும் விருபாட்சி
யே-காசிவிசாலாட்சியே
ஆண்டிடுவாயுனதடிமலர்தொழும்அருகிக்காரனை எமை
யாதரித்தனை

பொது-விருத்தம்,

கலைதனைவிட்டுப்பிரியமனவொவ்வாது
கானகத்தினிடையலையுங்கவரிமான்போல்
உலைதனில்வெந்துருகுமெழுகாய்கரைந்து
உருவழிந்துஅறிவழிந்துஒடுங்கியிந்த
நிலைதவிழ்க்கும்வகைஇலையோவிசுவநாதா
நீதியிதோவெனக்கதறவத்தலத்தோர்
தலைதனையிஞ்சிசைவாக்கலையுண்டோவென்பார்
தயங்குவமதிமறந்து மயங்குவாரே (௯௮)

(வசனம்) இவ்விதமாய் கலைமானை இணைபிரிய உள்ளம் வருமையுற்று அடவியெங்குந்திசைதப்பி யலைந்து கலையுற்ற கவரிமானைப்போலும் அனலிலிட்ட மெழுகைப்போலுமுருகி உருவமாறி மதிகெட்டு ஒடுங்கிஇவ்விதி தவிழ்ப்பதற்கு வகையில்லையோ விசுவநாதனேயென்றும், இதுநீதிநெறியோ வென்றும், பிரலாபிக்கும்போது அந்நகரிலங்கங்குள்ள ஒவ்வொருவரும் தலைக்கிஞ்சிசைத்தையுண்டாவென்றதிசைத்து அங்கலாய்ப்புற்றுச் சொல்லுவது காண்க

௯௪ தரு-இ-ம்-நீலாம்புரி ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. வீதிவீதியாய்க்கொண்டவிரகியைவிலைகூற
விதிவந்ததென்றோவென்பார் வெகுபேர்கள்-இவள்
சோதித்திருமுகமுஞ் சுகந்தமலர்வாசமும்
சொல்லவெளிதோவென்பார் வெகுபேர்கள்-என்றும்
கோதில்லாகுணத்தோர்கள்குலதர்மபுத்திரர்கள்
குவலயமாண்டோரென்பார் வெகுபேர்கள்-என்றும்
நீதில்வாதோராயினும்வேதியனெழுத்தினைத்
திருத்தவெவர்க்காமென்பார் வெகுபேர்கள்-முன்னாள்
உ. பார்க்கடலிற்பாம்பணைப்பள்ளிகொள்ளுமாதவன்
பைந்தொடிக்கிணையாவென்பார் வெகுபேர்கள்-இவள்
தீர்க்கசுமங்கிலியாள்தெரிவைதிவடிவைத்
தெட்டிப்பறித்தாரென்பார் வெகுபேர்கள்-இவளைக்
கார்க்கக்கடவோனந்தக்காலபைரவனல்லாற்
கலைநமக்கேனென்பார் வெகுமாதர்-எவர்க்கும்
ஏர்க்கவிலைச்சமுன்றுவெழுதிவனுக்கல்லோ
யெவர்க்கேவலாளோவென்பார் வெகுபேர்கள் தேவ
௩, மாதர்வடிவுமல்லமானிடர்வடிவுமல்ல
மானிலமங்கையாளென்பார் வெகுபேர்கள்-மெத்தக்
கோதரவிவர்க்குற்றசொல்லினைக்குறிக்கக்
கொடுமையால்வந்ததென்பார் வெகுபேர்கள்-இந்தப்
பூதலத்தினிலிவள்பிறக்கத்தவஞ்செய்தவன்
புண்யமேபுண்யமென்பார் வெகுமாதர்-நாளும்
ஈசாவிலையிவட் கன்னையுண்டெனிற்கூற
வந்துணிவாரோவென்பார் வெகுபேர்கள்-இவளைக்
௪. கட்டியகணவன்சொற் றட்டிநடக்குமவள்
கற்பிற்கழகோவென்பார் வெகுபேர்கள்-இந்த
நட்டிவந்ததெவ்வாறோ நாமறிவோமோயிந்த
நாட்டுவளப்பமென்பார் வெகுபேர்கள் என்னக்
கொட்டிக்கொடுத்திட்டாலும்கொண்டவளைவிற்போர்
குவலயத்துண்டோவென்பார் வெகுபேர்கள்-கன்னல்
எட்டியாகிலுந்தின்றுஇறந்துபோவதேநலம்
இம்மிசையொழியுமென்பார் வெகுபேர்கள்-பூவோர்
௫. தாய்க்குப்பின்தாரமென்றதாணியோருரைத்திடும்
தன்மையுமொழித்தானென்பார்வெகுபேர்கள் பொல்லாப்
பேய்க்கும்பெண்ணென்றுரைத்தால் பித்தந்தலைக்கேறுமே
ப்ரமையொழித்தானேயென்பார் வெகுபேர்கள்-நாளும்

காய்க்கும்மரத்துக்கல்லோகல்லெறியுமூனுக்கும்
கலக்கமுங்கட்கேனென்பார் வெகுபேர்கள்-இங்கு
வாய்க்கும்விதியைத்தள்ளிவைக்கறமக்குளதோ
வாய்ப்பேச்சோவெல்லவென்பார் வெகுபேர்கள்-ஆசா

௬, நமக்கேனிந்தவிசாரமெவர்க்கும்ஆளொருவன்
நக்குகொழிக்கிறீரென்பார் வெகுபேர்கள்!இது
அமைத்தவமைப்பின்படியான்மாலயனோர்கட்கும்
அடைவதொழியாதென்பார் வெகுபேர்கள்-ஓர்
இமைப்பொழுதேனுமனவிச்சையுடனிருந்து
ஏருதல்நலமென்பார் வெகுபேர்கள்-அந்த
இமையவல்லியிவனுக்கிணையோதுணையல்லாமல்
இவளரசன்பெண்டென்பார் வெகுபேர்கள்-நல்ல

௭, கந்தமலரும்போலேகணவனுங்காரிகையும்
காரணவிதியென்பார் வெகுபேர்கள்-இப்போ
இந்தமன்னவனைப்போலின்னொருவருண்டானால்
ஈடேறுங்குடியென்பார் வெகுபேர்கள்-பெற்ற
மைந்தனுடனேகொண்டமனைவிதனையும்விற்க
மன்னனென்செய்தானென்பார் வெகுபேர்கள்-மனச்
சிந்தனையாலிவர்கள்தேகமெல்லாஞ்சிறுத்துச்
சீரழிந்தார்களென்பார் வெகுபேர்கள்-ஐயோ

௮, ஆதிபரஞ்சோதிபோலரிவையைவிற்பதிலும்
அவன்விலைப்படலாமென்பார் வெகுபேர்கள்-வெகு
நீதியற்றவன்மிகநெஞ்சந்துணிந்தோனிவன்
நீதியவீதியென்பார் வெகுபேர்கள்-பூவில்
சாதியிவர்கட்கேதோக்ஷத்ரியர்களிவர்
ஜனனமடைந்தோரென்றார் வெகுமாதர்-நிறை
சோதிகுலத்துதித்தசந்திரர்தம்பின்மேலோர்
சொற்பிழையற்றோரென் [illegible] வெகுபேர்கள்-இப்போ

௯, இவ்விருவரைக்கொள்ளவெவர்களுண்டிந்தவூரில்
இமையவர்க்கேற்குமென்பார் வெகுபேர்கள்-என்றும்
ஒளிபழியில்லாதவள் அ நந்தநிகர்மின்மிக்காள்
ஆருக்காவாளோவென்பார் வெகுபேர்கள்-பொல்லா
வெவ்வினைதீர்க்குங்காசிவிசுவநாதர்க்கல்லாமல்
வேறெவர்க்காகுமென்பார் வெகுமாதர்-கையில்
சவ்வியுமழுவேந்தும்நாதனொருவர்க்கல்லால்
ஈருக்கிழிவாமென்பார் வெகுபேர்கள்

பொது-விருத்தம்-

காசிநகர்தன்னிலுள்ளாரிந்தநீர்மை
கருதியவரவர்கருத்திற்கண்டவாறு
யோசினையில்லாதனைக்குமொழியைக்கேட்டு
உளமயர்ந்துமிகநொந்து ஓய்விலாது
வீசியதூதுவன்முகத்தின்கடுகடுப்பும்
வெடுவெடுப்புங்கண்டுமிகவெறுப்படைந்து
கோசிகர்தன்பொருள்கொடுக்கவேபுசிப்பேனென்று
கூறுவான்தெருத்தெருவாய்மாறுவானே (௰௯)

(வசனம்) இவ்விதமாய் காசிநகரிலுள்ள பற்பலரும் அவர்களுக்குத் தோன்றியபடி முன்பின்யோசிக்காமல் சொன்னபோது கேட்டவர்கள் மனக்கிலேசமுற்று இடைவிடாமல் நட்சத்ராயன் செய்கிற கொடுமையைக்கண்டு விசுவாமித்திரருடைய தனங்களைத் தந்தபின்புதான் அந்நாகார மெடுத்துக் கொள்வதென்று பிரதிக்கினை செய்துக்கொண்டு அரிச்சந்திரமகாராஜன் மறுபடியும் விலைகூறுவதுகாண்க.

௨௯-திபதை-இ-ம்.ஆனந்தபைரவி.ஜம்பை. தாளம்

கண்ணிகள்

௧, காசியாளுந்தேசிகரே காதலியைக்கொள்வாருண்டோ
ஆசிகூறும்அந்தணரே அரிவையைக்கொள்வாருண்டோ
௨, மங்களியத்துடனேஜனித்த [illegible]
சங்கராசச்சிதானந்தா சகியாள்தன்னைக்கொள்வாருண்டோ
௩, மேதினிபடைத்தாயிந்த மெல்லியளைக்கொள்வாருண்டோ
காசிநாதர்கடன்தீரக் காரிகையைக்கொள்வாருண்டோ
௪, மாதவாமதுசூதனா மங்கையைக்கொள்வாருண்டோ
ஆதவன்குலத்தினளை ஆதரித்துக்கொள்வாருண்டோ
௫, மாநிலத்திற்பூசுரரே மனைவிதன்னைக்கொள்வாருண்டோ
நானிலத்துமங்கையரே நா[illegible]ளைக்கொள்வாருண்டோ
௬. புவியாளும்மன்னவரே புத்திரனைக்கொள்வாருண்டோ
காவியாளைவிற்கவந்தேன் காதலுற்றுக்கொள்வாருண்டோ
௭, அரிவைதனைவிற்கவந்தேன் ஆவலுடன்கொள்வாருண்டோ
தெருத்தெருவாய்த்தேடிவந்தேன்தேவையானபேர்களுண்டோ
௮, பத்தினியைவிற்கவந்தேன் க்ஷத்திரியரிற்கொள்வாருண்டோ
வேத்திமிகுருதிரரே சித்திடையைக்கொள்வாருண்டோ

விருத்தம்

இந்தடைவாய்ச்சிலகாசிவிசுவநாதர்
எதிருயர்சன்னிதிமுன்வந்தினிதுகூற

அந்தணனாய் நுதலழலையாக்கிநீபோ
யரிவையுமைந்தனையுங்கொண்டாள்வாயென்ன
எந்தனையோவிதித்தனையிவ்வியற்கைக்கென்று
ஈசனிருதாள்பணிந்தங் கிருந்தெழுந்து
கந்தமலர்க்கதிர்கோடி யுதித்தாற்போலக்
கதிக்கின்றஞ்சமன்னவன்முன் றுதிக்கின்றானே (௨௰)

(வசனம்) இவ்விதமாய்த் தெருத்தெருவாய் விலைகூறிய அரிச்சந்திரமகாராசன் ஸ்ரீ காசிவிசுவநாதருடைய சன்னிதித்தெருவிலும் வந்து விலைகூறும்போது தனது நெற்றிக்கண்ணிலுள்ள அக்கினியைப்பிராமண ரூபமாயமைத்து நீர்போய்அந்தச் சந்திரமதியையும்அவள்குமாரனையும் விலைமதித்துக்கொள்ளுவீர் என்றபோது எத்தனையோயிதற்குநியமித்திர் அந்தப்பதிவிரதா சிரோமணியை வைத்துக்கொண்டு நிர்வாகிப்பது அசாத்தியமாச்சுதேயென்று சிந்தித்துஈசுவரருடைய இரண்டுபாதத்திலும் சாளுக்கியடைந்து அனேகங்கோடி சூரியர்கள் ஏககாலத்திலே பிரகாசிப்பதுபோல அரிச்சந்திர மகாராஜன்முன்பாய் வேதமூர்த்தியாகிய காலகவுசிகனென்னும் பிராமணன் வருகிறவிதங்காண்க.

தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

வேதியர்வந்தாரோ-விமலர்தொழும்- வேதியர்வந்தாரோ

அநுபல்லவி.

வேதியரெவர்கட்கும் ஆதியார்புகழ்விண்ணின்
சோதியாருமைக்கொரு பாதியார்நுதற்கண்ணின்(வே)

சரணங்கள்.

௧, செந்திருமகட்கொப்பும் சேயிழையைவிலைகூறி
செல்வஞ்சிறுத்தவர்போற் சீமையெங்குந்தமோறி
வந்திருக்கிறாய்புந்தன் வன்மையைமனத்தேறி
வகுத்துரைசெய்வாயென்று வையகத்தோரைமீறி(
௨, வீதிவீதியாய்ச்சென்று விரகியைவிற்பேனென்று
வெட்கஞ்சிக்கமகன்று விறுவித்கொண்டெங்குஞ்செ
சாதிசாதியாய்க்கேட்டு சகிக்காமற்குன்றிநின்று
சங்கடப்பட்டுக்கொண்டு சருவுந்நீயாரோவென்று(
௩, ஒளிபயில்லாதந்த னவதியெல்லாமுன்னி
அருகிலிருக்குமைந்தனடைவையெல்லாம்பன்னி
தெளிவுமழுவேந்தும் நாதன்மேல்மனமுன்னி
தவிதுவாயெனக்கென்றுநாநாதன்முன்பாய்வன்னி(

பாராசாரியனும் காலகவுசிகனும்சொல்
ஆசியவசனம்.

(பாராசாரியன்) சுவாமிகளை சேவிக்கிறோம் (காலகவுசிகர்)ஸ்வஸ்தசஷ்டிபக்களானிபவந்து மகாராஜனுயிருக்கனு ஜலதுவாரோ பஸிர்நுவாரோ ஸர்வதா அநுகூலசித்திரஸ்து

(பாரா) பஞ்சாங்கச்ரவணஞ் செய்யியுங்கள் சுவாமிகளே

சுலோகங்கள்,

(காலகவு) கேளுங்கள் சிதம்பரம் தீட்சதாள் பட்டணம்புண்டரீகபுராம்புஜம்-ஆதிதேவாத்மனைத்தயோது ஆகுவா கோபசாந்தயே-விசுவநாதே:விராட்ரூபோ-விசிஷ்டாநா மூப்க்ரமே- சொன்னதெல்லாம் சுபோஸ்து முன்புறந்தாளமோஸ்துதே;- சார்த்ரவபிரஷ்டதச்சைவா-சுனசிச்ரோமகாபலகா- சுகரோர்கற்ப ஊர்பத்தி-பதேவிநமோஸ்துதே திநியஞ்சப் சும்மேவ ; வாராணும்சப்நமேதினே-நட்சத்ரோ ஸப்த விம்சஸ்தே-யோகமோ அவுவேதநா-காணுத் மல்லயுத்தஞ்ச பஞ்சாங்கம் சுஷிவாசிறேம்;

ஸர்வோதக்ருஷ்டசபைபிலேஸ்ரஸ்விலாசகணிதோ நாமநாசிம்மஜோஸ்ய நிர்ணயே அகசியக்ன பூகோள்நிர்ணம்.

அஸ்தமயபர்வதத்துக்குக்கிழக்கு சமுத்திரக்கரைக்குமேற்கு இராமேசுவரத்துக்குவடக்கு இமையமலைக்குத் தெற்கு இந்நாடகெல்லைக்குட்பட்டது பூகோளம்இதனுக்கு வெளிப்பட்டது கோளமென்னப்படும் இதுகளிலே அகடவிகடவிஸ்தாரோத்தரபர்வதத்துக்கு பிருஷ்டபாகத்திலே ஆகாசமானமெனவும் அகஸ்யாபுத்தேசத்திலே அங்காரகலைபோசமானமெனவும் அகடவிகடத்திலே அபுருபவருஷமெனவும் பேர்வழங்கும், இந்த வருஷத்துக்குநவநாயகாள்யாவரென்னில் இராஜா- வெள்ளையவன்னியன் மந்திரி-ஒண்ணைசக்கண்ணு முனியாண்டித்தேவன்- சேனாதிபதி குருந்தடிச்சடைவளர்த்தபண்டாரம், அக்காதிபதி- புலித்தோல்கட்டிப்பொன்னம்பலவுடையார்-ஸஸ்யாதிபதி- நிசிராத்திரிச் சேர்வைக்காரன்-மேகாதிபதி அன்னக்காவடி அழகப்பதம்பிரான் இரஸாதிபதி உலைவாரிஉளமூக்குப்புலவன்-நீரஸாதிபதி, இருள்வலியன்-தான்யாதிபதி-மூடவக்கறுப்பனம்பலகாரன் ; இந்தவருஷத்துக்குக் கன்னிப்பூக்கிரந்தியும் கார்க்கோடகமேகமும் காளிகோயில் தாசிகார்த்ரவ சிரோன்மணியாளிடத்திலுற்பத்தி இந்தவருஷத்திற்கு அதிபதிகள்பலாபலன்வச்சவன்மறந்துவிட்டால்வைத்தவன்செ

☞ இதுகளில் யாதொருவார்த்தைகளும் பேதமித்யாஸமாய்இருந்தபோதிலும் ஸலயானவர்களும் க்ஷமித்துக்கொள்ளத்தக்கது.

நேக்காட்டான் ஏழைக்கட்டாரியைக்கண்டால் பேழைக்காரனையும் பாயும் ஆலமழை-௯-சோலைமழை-௭-பித்தம் ௯-பயித்தியம் -௰௫-சுமங்கிலிபிரவசம்-௯ விதவைபிரவசம்-௮௯-ஸ்ரீரங்கயாத்திரை-௯-சிவலோகயாத்திரை-௭௯- வைத்திநாதயாத்திரை - ௪ - வைகுண்டயாத்திரை-௪௪-சுயாதினம்-வொருபங்கு-பராதினம்-௰-பங்கு சிவபூசை-ஒருபங்கு-செல்வியம்மன்பூசை-௯-அக்கினிபாதை-௯ - அவிசாரிபாதை ௫௯-இருள் எஸ்பருபங்கு-பொருள்பூச்சயம்.

இத்தவருஷத்திபலன்கள் மத்திமமாறுலும் சுயபலனைநடக்கும்

அசுவதிமுகற்றத்தாயம் குதிரைசாப்பிட்டது
பரணிமுறைக்கத்தாயம் ஆனைமுழுங்கிவிட்டது
கார்த்திகை ௨ கத்தாயம் அத்திப்பழந் திங்கப்போயிருக்கிறது
ரோகணி ௩ கத்தாயம் பாம்புபிடுங்கிவிட்டது
மிருகசீருடத்தை-சாரையடித்துவிட்டது
திருவாதிரையை நாய்பிடிங்கிவிட்டது
புனர்பூசத்தை பூனைகுடித்துவிட்டது
பூசத்தை நீர்க்காக்காய்கொத்திவிட்டது
ஆயிலியம் புன்னைமரத்திலேறிக்கொண்டது
மகத்தை எலிப்பிடித்துக்கொண்டது
பூரத்தைப் பெண்கழுகுகொத்திவிட்டது
உத்திரங் குடிசையைசுமந்துக்கொண்டது
அஸ்தத்தை பிராந்தடித்துவிட்டது
சித்திரையைச் சிறுத்தபுலிவிழுங்கிவிட்டது
சுவாதியை ஈமொய்த்துவிட்டது
விசாகம் விளாம்பழந்தின்னப்போச்சுது
அனுஷம்-மகிழம்பூப்பரிக்கப்போயிருக்குது
கேட்டை மான்வேட்டைக்குப்போயிருக்குது
மூலம் நாய்குட்டிபோட்டிருக்குது
பூராட்டத்தைக்குரங்குதூக்கிக்கொண்டுபோய்விட்டது
உத்திராடத்தை கீரிப்பிள்ளைசாப்பிட்டுவிட்டது
திருவோணத்தை வண்டுமொய்த்துக்கொண்டது
அவிட்டம் வன்னமரத்தின்கீழேபடுத்திருக்குது
சதயம் பெட்டைக்குதிரைக்குமருத்துவம்பார்க்கப்போச்சுது
பூரட்டாதியை உள்ளான்கொத்திவிட்டது,
உத்திரட்டாதியைக்கூகைமுழுங்கிவிட்டது
ரேவதி-பெண்யானையுடன்சம்போகத்துக்குப் போயிருக்குது

இராசிகளின்பலாபலன்;

மேஷம். ஆடுமேய்க்கப்போயிருக்குது
ரிஷபம் பசுவைத்தேடிப்போயிருக்குது

மிதுனம்-தாசிவீட்டுமேடையில்தூங்குகின்றது
கடகம்-இராஜாவின்கையில் பூட்டியிருக்குது
சிங்கம்-குகையிலிருக்கிறது
கன்னிகை-நோன்புநாற்கிறாள்
துலாம்-இராமன்செட்டிவீட்டுஇறப்பிலேதொங்குகின்றது
விருச்சிகம்-மந்திரத்திலகப்பட்டுக்கொண்டது
தனுசுவை- வேடன்கொண்டுபோய்விட்டான்.
மகரம்- கடலிலேஒளித்துக்கொண்டது
கும்பம்-குசவன்வீட்டு அடுக்குப்பானையிலிருக்குது
மீனத்தை- முதலைமுழுங்கிவிட்டது
ஸமஸ்தசஷ்பங்களாணிவர்த்து
ஜலத்துவாரேமுகத்துவாரே ஸதாஅநுகூலஸித்திரஸ்து.

(பாதா)சுவாமிகளேநம்முடைய கிரகத்திலேமார்சாலம் கெற்பிணியாகி வியாக்ரம்பிரவசமாயிருக்குது புண்யாவாசனம் செய்துபோட்டு போகுறீர்களா.

(காலகவுசிகர்) இதோவந்துவிட்டேன்;

பஞ்சகவ்யமந்திரம்.

அஜாமூத்ரம் கஜாமூத்ரம் சுனகமூத்ரம் ததைவசா-கார்த்ரவ்மச்கர மூத்ரஞ்ச பஞ்சைதே தீர்த்ததாயகா-கார்த்ரவா மேத்யஸங்காரஹய சுனகமூத்ராபிலேபனம-ஸம்மார்ச்சனப்ரயோகேண-ஸர்வதா மோக்சதாயகா-

பொதுவிருத்தம்;

வந்தவேதியன்வள்ளலைநோக்கிநீ
எந்தநாடுனக்கெவ்விதிவந்ததால்
இந்தமங்கையும் மதலையும்விலை
அந்தமாய்க்கூறலாகுமாமென்றான், (௨௩)

(வசனம்) இவ்விதமாய் வந்தபிராமணனானவர் அரிச்சந்திரமகாராசனை நோக்கி நீயெந்ததேசாதிபதி என்னகாரணத்தினாலே இந்தபதிவிருதாசிரோமணியான ஸ்திரீயையும் மதலைச்சொல் மாறாதபாலகனையும் தெருக்கள்தோறும்அங்காடிகூறு வதுபோலநீயேவாங்கலியோநீயே வாங்கலியோ நீயேவாங்கலியோ வென்றுவிலைகூறுவதென்னவென்று கேட்பதுகாண்க.

௨௯-தரு-இ-ம்-தேவகாந்தாரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆரடாஉயிர்த்துணை-யாருமிருவரையும்- அங்காடிவிலைகூறுறாய்

அநுபல்லவி.

சேரடாஉனர்கிது செல்லுமடாகீர்த்தடா
சேயிழையைப்பிரிந்து செய்யுந்தவமென்னாசீ(ஆரடா)

கடு

சரணங்கள்,

௧, தாரணியுள்ளோர்க்கென்ன   தாழ்வுவந்தாலுங்கொண்ட
தையலைக்கை   விடுவாருண்டோ - இந்தக்
காரணமென்னவுன்னைப்   போலுள்ளவரேவருங்
கண்டுதிகைத்துமனங்   கலங்கச்செய்யவந்தாரீ (ஆரடா)

௨, தெரிவையேயாவருந்தி   தேவியின்மிக்கவள்போல்
தெளிந்தகற்பினியிற்பிறந்தாள்   உந்தன்
பிரிவையெண்ணினிதழும்   பேதைமை யடையாளோ
பிணக்குவந்ததேதைப் பிரித்துச்சொல்வாயன்முன்னீ (ஆரடா)

௩, வையகத்தினிலிந்த   மதனொக்கினைகாணேனினீ
வாழ்ந்தநகர   மேதயா-மிகத்
தூய்யவனைப்போல்நீயுந்   தோனுகிறாய்நோக்கிற்க
ஞனுகரமேதுன்குலத்   தொழிலுரைத்துவாடாநீஆரடா

பொதுவிருத்தம்.

வேதியனைய்வந்தகனஞ்சயனிவ்வாறு
விண்ணவருமண்ணவரும் வினவக்கேட்கச்
சோதிகுலமன்னனரிச்சந்த்ரன்மிக்க
சுகுணனிவன்பொருள்கொடுக்கச்சந்தரீச
ஓதியந்தமாயிவனுக்கறியச்சொல்லி
யரிவையையுமைந்தனையுமருதிசெய்ய
நீதியதாமென நினைந்துகைகள்கூப்பி
நெறிசொல்வான்தமக்குரிய குறிசொல்வானே. (௨௨)

(வசனம்) இவ்விதமாய்வந்த பிராமணசொரூபனை அக்கினிபகவானானவர் அரிச்சந்திரமகாராஜனை உன்னுடையபூர்வோத்திர மென்னவென்று தேவர்களுக்கும் மானவர்களுக்கும் கேட்கும்படியாகக்கேட்டபோது இவரேநமக்குபொருள்யாவுங்கொடுத்தாரிப்பவாம்ம ஆவிருத்தாந்தம் யாவற்றும்சொல்லி இவர்களையும் அடிமைசெய்விப்போமென்றெண்ணமுற்று கையிரண்டையுங்கட்டி அஞ்சலி பந்தனஞ்செய்துகொண்டு தமதுசனனகாலமகுத்வங்களைச் சொல்விவருவதுகாண்க.

௨௪- தரு-இ-ம்- தருபார்-அடதாளம்,

பல்லவி,

கேளும்கேளும்புகரா-மனக்குறைதீர்த்
தாளும்நாளும்தேவரா

அநுபல்லவி.

நீளும்யோத்தியை   யாளுஞ்செங்கோற்கொண்டீ
நித்யமாயரசாண்டோஞ்   சத்யதர்மங்கைக்கொண்டே (கேளும)

சரணங்கள்

௧, செங்கதிர்குலதீரா   உதித்தான்முதலாகச்
சீமையெங்கட்காளுகை   சிறந்துவாழ்ந்தோமேலாகத்
திகழ்ந்தநான்மறைகளுந்   தெளிந்தவறுநூற்களும்
திரியும்நெறிதப்பாமற்   றேடியாள்வோமென்றனும்
புங்கவனுந்திரிசங்கு   ஜபனந்திரசொற்கம்
பூண்டான்புரந்தாற்கு   மவர்க்குமுன்டேதர்க்கம்
பூருவஜென்மத்து   சாபத்தினால்ஒரு
புண்யஹரிதீர்த்தத்தி   லாடிப்பெற்றான்பெண்உரு
அங்கவ்வுருக்கொள்ள   அங்கசன்கணைதாக்கி
ஐந்தறிவுங்கலக்கி   அகன்றனேமனநோக்கி
அந்தவேளையில்சந்த்ர   னசையுடனேகூட
அரிச்சந்த்ரனென்றுதித்தேனவனியோர்கொண்டாட (கேளும்)

௨, அந்தணன்முதலா   சாட்சிக்கெந்தனைவைத்து
அருந்தவஞ்செய்துசொர்க்க   மடைந்தானேமனங்கைத்து
ஆண்டவனுக்கினைக்   கனவும்பிசகில்லாமல்
அயோத்திநகர்தனக்கரசு   கொண்டேன்அல்லாமல்
இந்தநாளிலிலருந்   தவத்தோரனேகரைக்கண்
டிணையடிதொழுதேத்தி   யிட்டேனவர்க்குமுன்
இனகுலத்தினிலுமக்   கிணையிறைவரெவரென்
றிசைத்தாரேசூரிகள்   எண்ணிறந்தவைஎன்முன்
மந்தரமுறைதவ   ராதமதிதயேந்திரன்
மகர்சந்த்ரமதிக்கெனை   மணவாளனுக்குந்தந்த்ரம்
மகிழ்ந்துசெய்வோமெங்கள்   மனந்தமிமாறிடாமல்
மணம்புணருவாயென்றார்   மறுத்தோறுடன்தேடாமல் (கே)

௩, மாதவர்கன்னனைங்   தளராதிக்கன்னியை
மாலைசூடினேன்மனங்   களித்துச்சத்திவன்னியை
மதனும்ரதியும்போலே   சகியும்புருஷனுமாய்
மருவிச்சருவியந்த   மன்மதனுக்கிளமாய்
ஆதவன்குலத்தோர்கட்   கரசாயிப்புதல்வனை
அன்றுகண்டகாட்சியா   லடைந்தோமிம்முதல்வனை
ஆண்டேழிவனுக்காச்சு   அருந்தவவிசுவாமித்திரன்
ஆனைமேறகவன்யோமளவு   பொன்கேட்டார்விசித்ரன்
பூதலம்யாவுமப்   புண்ணியவானுக்களித்தோம்
பொக்கிஷத்திலில்லைதப்   யோனார்மனங்கழித்தோ
பூங்காவனத்தில்வேட்டை   யாடநாம்புறப்பட்டோம்
பூவையிருவரால்   புறங்கடக்கவும்பட்டோம்

௩ பெண்களிருவர்தம்மைப் பேய்களினுருவாக்கிப்
பிடியானைபோல்விட வவர்களெந்தனைநோக்கி
பெரும்புலியாண்டிடும் பூச்சக்கிரக்குடையைத்தா
பெறுவோமல்லாவிடிற் பிணங்கவாபெரும்மத்தா
கண்களுக்கெதிரிந்த நெறிவிளம்பியபொல்லாக்
காரிகையரையானுங் கடிக்கமனதிற்புல்லா
கருணைமாதவரந்தப் புலைமாதரைப்புணரக்
கடவாயென்றெனைச்சேரக் கருதும்நெறியுணர
ஏண்களைத்துமணத் தேத்தியடைக்கலமாய்
இட்டபொருட்களைத்தா வெனவேபடைக்கலமாய்
எழுந்தவர்க்குறும்பொரு ளெல்லாமளித்தகனுங்
இயற்கைகண்டகலாதேயிருப்பாயென்றார்முக்காலும் (கேளும்)

௪, அன்றுன்கையிற்றந்த பொருளைத்துந்தந்து
அகல்வாயில்லுரையென் றறைந்தார்துடர்ந்துவந்து
அவதியாதெட்டுநாள் அதம்கிட்டுமனம்பொறும்
அருந்தவருறைவார ணாசிபோய்த்தனம்வரும்
என்றடிபணிந்தெழுந் தேன்குடும்பமுழுதும்
யெய்க்கரடிபுலிமா னிவையால்மிகவுழுதும்
எழுமட்டைகருட்டைகட் டிறவுதேளரவுகள்
இடுக்கம்பொறுக்கமனம் வங்கமழைமாரிகள்
சென்றடிகள்சறுக்கிச் சிந்தைநைந்துபொறுக்கா
சிறந்தநதிகள்நீந்திச் சேரக்கண்டாயொருக்கரம்
செழித்தகாட்டுத்திமைமை சிறந்தகோட்கள்நீய்க்க
செய்யவளிவ்வகப்புச் சிரித்துக்கொண்டனுக்காக்க (கேளும்)

௫- வருத்தமெல்லாமகன்று வந்தோமிவ்வாரணசி
வந்ததாகன்பேச்சால் வதைத்தானேமனம்ரோசி
வகைசொல்லவெனதுவாய் வாராதிருந்தேன்கொண்ட
வனிதையும்மகளுமிவ் வையகந்தனிற்கண்ட
இரக்கமுள்ளவர்க்கெமை விலைகூறிடாஇந்தத்
தினநகைக்கடனென்றுந் தீராதென்றிடவந்தத்
தெரிவைவாய்மொழியேனற் றிருவாய்மொழியென்றெண்ணி
தெளிந்தேன்மனதிற்கடன் தீர்க்கும்வழியைநண்ணி
பெருத்தகாசிநகரில் தெருத்தெருவாய்விலை
பேசிகூறினேனெமைப் பின்பற்றுவோரிலை
பெண்பிள்ளையிவர்கள் ரண்டுபேரையுங்கொண்டு
பெருங்கடன்றீர்ப்போர்க்குப் பெரும்புகழும்உண்டு

* திரிசங்குவானவர் ஒருகாலத்தில் அதிகாமியென்னும் ரிஷியாச்ரமத்திற்சென்று ஸ்ரீ ஹரியினுற்பத்தியான தடாகத்தில் ஸ்நானஞ்செய்தபோது பெண்வடிவமுற்று சந்திரனையணைந்து அரிச்சந்திரனைப்பெற்று அதிகாமரிஷிக்கோபித்து அவராலே நிஷ்காமியென்ற தீர்த்தத்திலாடி மறுபடியும் புருஷசென்மமடைந்து சொர்க்கத்துக் கெழுந்தருளினனென்றும், அரிச்சந்திரன் தேவகன்னிகையால் வளர்க்கப்பட்டு சிலகாலக்குப்பின்பு மந்திரிகளாலே அரசுபெற்று செங்கோலாண்டானென்றும், பெரியோர்களால்கேழ்வியுற்றது.

பொது விருத்தம்.

வேந்தன்மனைவன்புடனிவ்வாறுகூற
விறைவியவக்கினிபகவானிருவருக்கும்
ஈந்தபொருட்களைக்கவரவாள்விடென்றான்
இசைந்ததரகனைக்கூவி யிவர்க்கீயென்றான்
காந்தன்மலர்க்கையுறைந்தான் செம்புக்காசுக்
காலளவுங்கலக்கமறத்தருமேனென்றான்
சாந்தமுடனவ்விணைமீந்தகன்றான்றூதன்
சருவிளஞ்சந்திரமதி பொருமினளே. (௨௩)

(வசனம்) அரிச்சந்திரமகாராஜனிப்படியாகச்சொன்னபோது அன்புடனழைத்துக்கொண்ட அக்கினிபகவானென்ற பிராமணன் இவ்விருவருக்கும் கொடுக்கப்பட்ட தனைக்களையெடுத்துக்கொண்டுபோக ஆமெனவே யென்றபோது அண்டையிலிருந்த நட்சத்திரையனையழைத்து இவர்கள்கையில் கொடுத்தனுப்புமென்ன ஒருசெம்புகாசளவும் பாக்கியில்லாமல் உமதுகையில்தருகிறேன் இனிஅரிச்சந்திரனைக்கேட்கவேண்டாமென்று பிராமணன் கையடித்துக்குடுக்க நட்சத்திரையனுடனே துட்டாமுறிகொடுத்து மறைந்தான். இப்பால் சந்திரமதியானவள் அரசனைப்பிரியமனம் ஓவ்வாமல் சோறுவதுகாண்க,

௨௨-தரு-இ-ம்-உசேனி-அடதாளசாப்பு

பல்லவி.

இனியென்றுகண்டுகொள்வேன் - பிராணேசனை

அநுபல்லவி.

இனியென்றுகாண்பேன் தனியேயிருவரும்
இரதிகாந்தன்போருக் கிசைந்தபோதல்லாது
எந்நாலாகிலுந் தந்ததுண்டோவிடை
ஏற்றியிணையடி போற்றிக்களித்திட
இனிவுதவாதே எவர்கட்கு
மிகழ்ந்திடத்தோதே அசோத்திபாபு
ரீசர்விசுவேசா-ஜகதீசா பிராணேசா உனை (இனி)

சரணங்கள்

க, முந்நாளின்வெகு   சொந்தமுடன்வந்த
முனிவர்களிதரியாரோ   குவியாரோ
முன்னவனேயிவை   யன்னவனென்னிடா
—மூழுமெந்திரமாச்சு   நாடுந்தந்திரம்போச்சு
மொசமோசம்   மனம்போரா
மோகமே   பாசம்-இனியதை
முனிந்தேன்மனம்   கனிந்தேன்பதம்
பணிந்தேன்முடி   யணிந்தேனுமை (இனி)

உ, எக்கலைகளும்   நீங்கும்வனம்விட்டு
இக்கலைக்கிட   மில்லையின்றுதொட்டு
இறையவனெழுந்   மெழுத்துக்கொருநாளும்
இழிவுண்டோதந்தவிளைந்திருப்போ   மினிநாளும்
எழில்விசுவாமித்திரன்   வினைதங்கள்
இயற்றும்விசித்திரன்   அவரும்நாம்
நடேரிட   நாடேரினர்
தேடேரிடில்   வீடேரிடோம் (இனி)

௩, நாமுள்ளமட்டுக்கும்   ஞானவிவேகமும்
நல்லதருமடத்தையுந்   சத்யமும்
நவிலுவோமாகிலதே   கதிர்குலதர்மம்
நரக்குத்தவறிலது   நரகடைகன்மம்
நம்மோடுநாமே   இனியானும்
நானும்வீண்போமோ   போலேபடாந்
தாலேமுன்னைப்   போலேஉமை (இனி)

பொதுவிருத்தம்

தீவினையொன்றிலாதமதிதயேந்த்ரன்
திருந்தியநற்றவமகளின்னெறிவிளம்பிப்
பாவியெனக்கேகவிடைதாருமென்றுள்
பார்த்திவன்றன்மனம்பதறிப்பரதவித்து
வினைவனெழிலிதுவோ ஆணும்பெண்ணும்
இழைந்திடும்போதகைத்தடுக்கவிசைத்திட்டானே
மாவினையந்துற்றறிதறதுவேனேவென்று
மயங்குவான்றிவழிந்துதயங்குவானே (உச)

(வசனம்) ஆகோகேளுங்கள் ஞானசிரோமணிகளே அந்தசந்திர மதியானவ ளிப்படிச்சொல்லி மகாபாவியான எனக்கு உத்திரவுகொடு மென்றபோது அந்த அரிச்சந்திரனானவன் மதிகலங்கித் தத்தளித்து

இதுகேற்பகோளையின் கையிலேவிடுகும்போது கொடுத்த கட்டளை யோ எந்தசெந்நுயின் கல்விப்புணர்ச்சியைக் கலைத்தேனே இப்படிப் பட்ட கொடும்வினை விளையக்காரண மென்னவென்றுபித்தர் களினிய ற்கையுற்றுதயங்குவதுகாண்க.

உசு-தரு-இ-ம்-கர்பி-அடதாளம்.

பல்லவி

நாயகியே-உனைப்பிரிந்து-நான்சகியேன்

அநுபல்லவி. [ரு

மாயவனுந்திருமகளைமார்பில்விட்டு-மகிழ்ந்தறிந்திந்தமாநிலத்துனைவிட்
மகிழ்வேனோ   விழிப்பயனே
யிகழ்வேனோ   தேவர்களே
புகழ்வேனோ   திராவினை
திகழ்வேனோ   நாயகியே(உனைப்பிரிந்து)

சரணங்கள்

க, மதிசேருதேவனைத்தடா   மனங்கோருதே
கதிவேறில்லையேயென்னைக்கருதிவருவோர்ச்சந்திர
மதியையிலைகூறி   மாமுனிகுணந்தீர்த்தவன்
மாபாவி   மாநிலத்திவன்
தீபாவி   யெனிர்க்கலங்கு
மென்தாவி   அக்குறைதீர்ப்ப
தார்தேவி   நாயகியே(உனைப்பிரிந்து)

உ, என்னசெய்வேனினியாரை நொந்துதயறுப்வேன்
உன்னையுந்தயைகன்   தன்னையும்பிரிந்திந்த
நுய்வில்லாக்கமலோரா   வத்திதனிலிருந்து
ஒருப்பேனோ   துன்பத்தாக்கிடா
யிருப்பேனோ   தனித்திருக்கப்
பொருப்பேனோ   முனிக்கிறு
குருப்பேனோ   நாயகியே (உனைப்பிரிந்து)

௩, அஞ்சுகமேமதிக்குகந்த   கிஞ்சுமே
நெஞ்சுதடுமாறுதே பஞ்சுபோற்கல்படருதே
நஞ்சுண்டிருப்பேனோ நரஜென்மந்துறப்பேனோ
நாயகியே   பதிவிரதை
ஸாயகியே   கொங்கோர்க்கிஷ்ட
தாயகியே   நரசிம்மபகவி
காயகியே   நாயகியே (உனைப்பிரிந்து)

பொதுவிருத்தம்.

புக்கவனுமனதிளகிப்பொறுமிவிம்மி
பூவைதனைப்பிரிவெண்ணமழுங்கிடாமத்

அங்கமெங்குந்நொந்தவதியால்வெதும்பி
யருந்திசைப்பூண்டினைமெதித்தோரலைதல்போல்
எங்கனுமொன்றுகிமதிசேர்வடைந்து
ஏக்கமுற்றுமொழிகுளறி யிளகும்போது
அங்கசனங்கணை தாவயிருவர்மேலும்
அலம்புவார்மன்முருகிப்புலம்புவாரே (உ௰)

(வசனம்) இவ்விதமாய் இராசன் மனநொந்து செழுமிக்கொண்டு மனையாளைப்பிரியமனமில்லாமல் தேகமுழுவதும் நலிந்து வெப்பமடைந்து திசைப்பூண்டைமிதித்தோர்க ளலைவதுபோலதுலைந்துகண்குழ்ச்சியுற்று வாய்வார்த்தை குளறிப்போய் பரதவிக்கும்போது விசுவாமித்திரருடைய மாய்கையினாலே மன்மதன் இருவர்மேலும் மலர் அன்புகளினலெய்ய விரகதாபம்பொறுக்கவொண்ணமல் இருவரும்புலம்புவதுகாண்க

உஎ-வர்னம்-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி

சந்திரமதிசொல்

ஈசனே யென்னசெய்குவேன் உமைப்பிரிந்து
என்னமாய்மனமுய்குவேன் பிராணேசா இனி (என்ன)

அநுபல்லவி,

மாசில்லாமன்னவுன்னை மணம்புரிந்ததுமுதல்
வசில்லாமலேனம்ப விருவோரும்வாழ்ந்திருந்தோம்
ஆசையுடன்மலரணியி [illegible]
கூசிடாமலேமருவிக் கொஞ்சியிருந்தோம்
கோசிகன்மாய்கையினு லிக்காசியில்வந்தோம்
பேசிடாதினிபிருக்கப் ப்ரம்மன்விதித்தானேஐயோ
நேசமறவாதிருந்து நித்யவயோதியானும் (ஈச)

இராஜன்சொல்-வசனம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம

பல்லவி

காதல்தங்கைதகாரிழையே உனைப்பிரியக்
காலம்வந்ததேயென்செய்வேன் என்றுதினையாக் (காலம்)

அநுபல்லவி

கோதில்லாமனத்தாளே குளிர்ந்தசந்திரமதியாளே
வேதியனிருவர்க்கும் விதித்ததிவினையிதாச்சே
ஆதாவாயிருந்தவனியில் அருமைபெருமையுடனே
ஆதவன்குலத்தலைவர்க் கதிபனெனவே
மாதமும்மாரிபெய்துய்ய மானிலமன்போம
ஞாதகத்தமாமுனிசெய் தொதரவினலேயிந்த
தோசகத்துக்காளாயினும் கோதையேயாமென்னசெய்வோம் (காதல்)

இராஜன்சொல்-விருத்தம்பிலகரி.

மைமலவன்னநிறம்போன்றவானிலவுபரந்தெரிக்கவாடைவீச
விவ்வண்ணநெடுங்காலமினிதிருந்து வாடிடவிங்காளானோவேன்
செவ்வண்ணநகையாளை திருமகளமெய்க்குறையாளைச்சேர்ந்துநீங்கி
யிவ்வண்ணப்படுவாயென் றினாயவனுந்தலையோட்டிலெழுதினனே.

சந்திரமதிசொல்-விருத்தம்-கெவுளிபந்து.

நாதியோர்முதிர்ந்தமறையோரெவர்க்கும் துன்பங்கள்செய்துமறியேன்
எதியோர்கள்பூவிலெளியோரெவர்க்கு மிகல்செய்வதென்றுமறியேன்
பதியோருயர்ந்ததியோரெவர்க்கும் பழிபாதகஞ்செய்தறியேன்
கதியாமுன்சென்ம விதியோவென்னைசக்கணவாவிதென்கொலறியேன்

இராசன் சொல்விருத்தம்-சாவேரி.

ஒப்பரியதிருமாதுக்கொப்பவளைத்தனியயிவ்வூரில்விட்டு
செப்பரியமன்மதனுக்கிளையானமைந்தனையுஞ்செயலைநீக்கி
தப்பரியவடர்வனமும்வனப்புனமுந்தழற்பரவுந்தனிடந்து
இப்பெரியபாடுபடவிறைவனுந்தலையோட்டிலெழுதினனே (உக)

சந்திரமதிசொல்-விருத்தம்-சாவேரி.

செப்பாருங்குவிமுலைபெல்லோருங்கணவனுடன்சேர்ந்துவாழ்க
ஒப்பாருமில்லாதவென்கணவனெனைச்சேர்ந்துஉறவாடாமல்
மைப்பாரும்விழியாளும்மலர்கணையோன்செய்துயரால்மனதுவாடி
இப்பாடுபடுவாவென்றிறைவனுந்தலையோட்டிலெழுதினனே.

உஅ-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி

அரிச்சந்திரன்

உன்னைப்பிரியலானேனே-வண்ணமயிலே-ஒருவராதரவுகாணேன்

அநுபல்லவி

இன்னகர்தனில்வந்து தன்னந்தனியனாக
முன்னாளில்முனிவனுக் கென்னபிழைசெய்தேனே
அன்னநடையின்னாளே சின்னஞ்சிறுவயதில் (உன்னை)

சரணங்கள்

சந்திரமதி

விதிதனைக்குறியோமே-முனிவன்செய்யுஞ்-சதிதனையறியோமே
பதிமுழுதும்பறித்துப் பங்கஞ்செய்தானேஐயோ
கொதிக்குமெழுகினிற் குதிக்குவேபதை
பதைக்குதேமன திதுக்குயென்செய்வேன் (விதி

அரிச்சந்திரன்

மைந்தனைப்பிரியலாச்சே-உந்தனுடனே மறையவநளைக்கலாச்சே

சந்திரமதியேஉன்   சுந்தரமுகமினி
யெந்தநாளினிற்கண்டு   சிந்தைமகிழ்வதென்று
யெந்தனுளங்குழைந்து   நொந்துபதைக்குதையோ   (உ)

சந்திரமதி

பதவியைக்குலைத்தாரோ-விசுவாமித்திர-ரியந்தகஞ்செய்தாரே
இதவஞ்சனையாய்வந்து இன்னமென்னசெய்வாரோ
ஏதுமறியோமவர்   சூதுகளாலேமெத்த
வாதுசெய்திடப்பொல்லா யேதுக்காங்களாச்சு   (விதித்)

இராசன்சொல் கொச்சகம்

பாவியெனைக்கைபிடித்து யாரிலெவருமபழிக்க
ஆவியனல்மெழுகாயுருந் துயரிலாழ்ந்தினையே
தாவிவந்தமாமுனிவன் தனித்தனியேபிரிந்துவிடக்
கூவியழைத்தன்றனில் கொடுமைமிகச்செய்தேனே

சந்திரமதியும் இராஜனும்சொல்

௩௧-தரு-இ-ம் நாதநாமக்கிரியை-திரிபுடைதாளம்

கண்ணிகள்

சந்திரமதி; ஐயையோநானிந்த அவதிக்கோபெண்பிறந்தேன்
வையகந்தனையாளு மதிதயன்வயத்தினில்
துய்யகாசிநகரில் துணைபிறந்தகிளிபோல்
பெய்யுமன்மதன்கணைக்கிரையாயுனைப்புரிந்து   (ஐ)
இராஜன்; வேதியன்விதிதானோ விமலர்களருள்தானோ
நீதிதப்பினதேனோ நிலமன்னர்குறைதானோ
கோதிலாக்கலைதனைக்கூடிப்பிரிந்தமான்போல்
ஆதித்தன்குலத்தோர்கட்கரசியைநான்பிரிய   (வே)
சந்திரமதி; கன்னியர்களென்னைக்கனகவளையில்வைத்து
மின்னிட்டலங்கரித்துமிகவாசீர்வதித்து
பொன்னினாலும்வெள்ளியாலும்பூமாரிபொழிந்திட
உன்னிதமணம்புணர்ந்துஉளமகிழ்ந்திருந்தேனே   (கன்
இராசன்; வாலிபவயதினில் வசிஷ்டர்தௌமியருடன்
ஞாலுதேசத்தோர்கூடி நாமிருவருங்களிக்கப்
பாலிகையைப்பூசித்துபார்வதிபதத்தைத்துதித்து
கோலங்கொண்டபோதெந்த கொடுமைகள்விளைந்ததோ

பொதுவிருத்தம்

சாதலியுங்கணவனுமிந்நெறிநொந்துமிக்
கண்களிநீர்சொரியுடன்கலங்கவாடிப்
போதவிளிதென்றினையெப்பொருள்கொடுக்க
புண்ணியர்விடேகவிடைப்புகல்விரென்றுள்

ஆதவன்றன்குலவிளக்கெனைப்பிரிந்து
அகன்றிடுநாள்வந்ததோவென்னையாவென்றான்
பாதகமென்செய்தேனோமகனேயென்று
பதறினன்மன்னவனுமகதறினனே   (௩௰)

(வசனம்) அகோ கேளுங்கள் மன்னமன்னவர்களே லங்கியும்புருஷனுமாயிப்படி வேதனையுற்றுக்கண்ணீராய்ப்பெருக மனங்கலங்கி வாடி இனிப்போவதேநலமென்றுணர்ந்து குணவிமோசனஞ்செய்தருளிய புண்ணியபுருஷன் டினைக்கேக உத்தாரம் தருவீரென்றுள் ஐய செக்தவதநிற்சிறந்த தந்தையே என்னை இணைபுரியுனு விடுவோமென்று லோகிதாசனுரைத்தான் அத்தருணத்தில் சென்மாந்திரத்தில் யென்ன பாவஞ் செய்தேனோவென்று அரிச்சந்திரன் லோகிதகுமாரனைத்தழுவிஉச்சிமுகந்து மகாவிதனத்துடன் பிரலாபிப்பதுகாண்க,

௩௨-தரு-இ-ம்-தன்னியாசி-திரிபுடைதாளம்

பல்லவி

இவ்விதியைவெல்லவழியில்லையே நானென்னசெய்வேன்
நவ்வியுமழுவுமேந்தும நாதனே விசுவநாதனே

அநுபல்லவி

கவ்வியமைந்தன்கழுத்தைக் கட்டிவிம்மிக்கதறலாச்சே
யெவ்விதமாளியியுய்வேன் ஈசனேகைலைவாசனே   (இவ்)

சரணங்கள்

க, மைந்தனோநாளும்அயோத்தி   யாளகராண்டிடும்செங்கோல்
உந்தனுக்கெனறென்மனதில்   உறுதிகொண்டிருந்தேனேயோ
வந்தனஞ்செய்யப்போய்வயிர்   வலிக்கிடந்தேடிக்கொண்டேனே
சிந்தனைசெய்வதேலாதே   செல்வனேசத்தியந்தப்புமே (இவ்)
உ, அருந்தவக்கௌசிகர்பொல்லா   அவதியிட்டதால்நொந்து
புரந்தரன்போலுனையுங்கொண்ட   பூவையாளுன்றன்றாயையும்
பொருந்தவந்தபூசுரர்க்கு   பொருளளிக்குமதற்கோய்
திருந்தபோற்றியான்கொடுக்கத்   தீவினைவந்ததேஐயோ (இவ்)
௩, யோசித்தறியாமலிந்த   ஊழித்தீவினைக்குள்ளானேன்
மாசில்லாசத்யகீர்த்தியை   மதியாமல்மோசம்போனேன்
ஆசிகூறியுன்னைமன   வன்புடன்வளர்த்துயிர்தக்
காசிநகர்விற்றிவந்து   கருணைமறையோர்க்கொப்பித்த(இவ்

மப: உ விருத்தம்,

என்னையுந்தாயையுந்தாங்குமிடுக்கமாற
யெடுத்தசுமையிறக்கினையோவென்றனத்தன்
தன்னையுமின்புறத்தழுவியுச்சிமோந்து
தவரிடவோர்வழியிலையோதரணிமீதில்

பின்னையுமெவ்விடசாமம் வருமோவெங்தன்
பேதைமதியறிகிலதென்றிரங்கும்போது
அன்னையுமைந்தனையுங்கைக்கொண்டேன்சிறி
தழைத்திட்டான்கருணைமிகத்தழைத்திட்டானே. (௬௧)

(வசனம்,) அகோ கேளுங்கள் உத்தமர்களே லோகிதகுமாரனவன் ஐய என் ஆதரவுள்ளபிதாவே யென்னையும் என்தாயையும்இரட்சிக்கும்படியான தலைச்சுமையையிறக்கினீரோவென்று புத்திரனைதழுவியுச்சிமுகந்து இந்தவிதியை தவிழக்கவே றொருதவகையுமில்லையே இந்தப்பூமியிலேஇன்னம்யென்ன ஆயிடுவருமோ வென்று உருகும்போது தாயையும்பிள்ளையையும் அடிமைகொண்டகாலகவுசிகர் காலகரணஞ்செய்யாமல் என்மனைக்கெழுந்து வாருங்களென்றழைக்கும் போது அரிச்சந்திரமகாராஜன் விடைகொடுத்தனுப்புவதுகாண்க,

இராசனும்-சந்திரமதியும்-சொல்

௬௧-தரு-அடாணா-அடதாளம்,

கண்ணிகள்,

இராஜன்—பெண்ணேநீபோய்வருவாய்-யெனதுமன
க்கண்ணே, யெனைமறவாய்
தண்ணார்மயிலேசந்திர தயன்செந்தவக்குயிலே
யெண்ணுதெண்ணரியுன்மனம்புண்ணுகாமலெனது
௧, சந்திரமதிபோய்வரோனென்கணவா பூசுரருடன்
புகழுள வென்றுணைவா
ஆமன்றுபாற்றிடலந்த அயன்விதிதவருமோ
மாய்ந்துவிடாமல்சத்யமந்த்ரம்ஜெபித்துக்காரும்
௨, இராஜன் மறையவருக்கினிமறுமொழியுரைக்காமல்
மகிமைமிகுத்தசத்திய மந்திரத்தைவிடாமல்
தறைதனையாளும் லோகிதாசன்தயங்கிடாமல்
முறைதவறியவனுடர்முனியைக்கண்டுருகாமல்
௩, சந்திரமதி நாட்டுக்குடிகளையும் நகரிச்சேனைகளையும்
கேட்டுக்கொண்டயோத்தியைகெடிமுழக்குமிவன்
வாட்டம்வண்மையுணங்குவைய்யவளமதிந்து
பாட்டுக்கிட்டமில்லாமல்பர்ஸ்தாத்துப்போயிருக்கோர்

பொதுவிருத்தம்

கற்புடையசந்திரமதிகையைப்பற்றி
காலகௌசிகமென்னுமந்தணனிழுக்கச்
சற்பனைகண்டங்கட்டுநடுங்கவண்ட
சராசரமுமநடுங்கிபகமொடுங்கத்—

கற்பனையாலடிவிழுந்தமராமரம்போல்
காவலன்விழுந்தழுது மதிகலங்கமந்திரி
விற்பனமாய்வெந்தை விருகையாலேந்தி
வீறினன்மதிசிலதுகூறினனே. (௬௨)

(வசனம்) சந்திரமதியையும் லோகிதகுமாரனிருவரையும் அடிமைகொண்டகால கௌசிகன்கைகளைப்பற்றி யழைத்துக்கொண்டு போகும்போது அண்டசராசரங்களும்நடுங்க அரிச்சந்திரன் நடுநடுங்கிக்கிடுகிடுத்து தெய்வச்செயலினலடிவிழுந்தமராமரம்போல் அலறிக்கொண்டு கீழேவிழுந்த அரிச்சந்திரனை சத்திய கீர்த்தியான மந்திரியானவன் தேற்றுவதுகாண்க.

௬௨-தரு-இ-ம-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

மன்னனேமனம்நொந்து வாடாநான்சகிப்பேனே (மன்ன)

அநுபல்லவி.

இன்றுளிலுன்செங்கோலும் செயுந்தாயும்சீமையும்
முன்னைப்போலமது முறைதவறாதுவாயி
மோ ஓ ஓகஞ்செய்த முனிவனுக்கிதுசெல்லு
மோ ஓ ஆகமுய்வாம் மூவர்களுமறியுமோ
மொழியறி வழிதெரி மொழிமாறி பழிதோறி
முன்னாளிற்செய்தீவினை தன்னாலிந்தத்தீவினை
மூளமனத்தாளலாமோ மீளவுலகாளலாமே. (மன்ன)

சரணங்கள்,

௧, திருவருள்நமைச்சேர திருந்தீவினையாவும்
திரும்பவருவாளசிதேவி திகைத்தோடுவாள்மூதேவி
விரும்பிவந்தமாமுனி வெதும்பிமன்றுகுன்னி
வே-ஏ-ஏதநெறி விரும்பியேமிகமனம்
வே-ஏ-ஏ-ஏ-ஏசாறி வேளாவேளையறிந்து
விரிமலர் - சொரிந்துநற் சரிதைகிரிதைசெயம்
அருந்தவத்தினைவிட்டு இருந்தபதவிகட்டு
அண்டர்களிற்கண்டவர்கள் துவந்நீகம்கொண்டதுன்ன (மன்ன)
௨, கோலர்ணநாளிற்கண்ட கொடுங்கனவின்பயனை
நாலாவிதமுங்கண்டு நன்மனத்திலருண்டு
காலகாலமறிந்து கருத்திலதையுணர்ந்து
கா-ஆ-ஆதலுற்று ஏனையழைத்துநீயொருக்
கா-ஆ-ஆற்மனஞ்சளித்து ஒருவதிசயமுற்று
இதுவெனபுதுமையெ னதுமனம்துவர
என்றும்நினைந்திடாத தின்றுவந்தெழிலுற்ற
தெண்ணரியதிண்ணமதை நண்ணமனத்தெண்ணவென்ற (மன்ன)

வாழ்வுவந்தநாளினில் வாசவன்போல்வாழ்ந்தோம்
தாழ்வுவந்தவேளையில் தளர்வாரோதரைமீது
ஊழ்வினையைவிலக்க ஒருவராலுமாகுமோ
ஓ ஓ ஓ மன்னவா ஊக்கந்தன்னையொழிப்பா
ரீ ரீ ரீ தபனிஸ-ரிகமப-தனிதப
ரீ ரீ ரிகமகரி ரிதபம நிதபனி
ரிஸகரி கரிரிஸ ரிதபனி னிதமப
ரிக்காம்ம ரிஸ்ஸாஸ ரித்தாப நிஸ்ஸாஸ
ரிக்கரிஸ் ரிம்மகரி ரீதபம ரீதநப (மன்னா)
யோ ஓ ஓ முன்னவா உலகாளுமவர்கட்கு
வாழ்வினில் - தாழ்வுறும் - தாழ்வினில் - வாழ்வுறும்
சூழ்வினையையழித்து பாழ்வினையையொழித்து
பத்தியுள்ள - சத்தியமே - நித்தியமாம்-வெத்திதரும் (மன்னா)

பொதுவிருத்தம்.

மந்திரிசத்தியகீர்த்தி யிந்தவண்ணம்
மன்னவனைத்தாங்கியவன் மனதைத்தேற்றி
சந்திரசூரியர்முதலோர்க் கிடுக்கமுற்றுச்
சகிக்கமுடியாவனேர் சகலமான
தந்திரமந்திரஸாமாதிகளினாலே
தாரணியாகாயமதைத் தளராதாளச்
சந்திரனேயஃதுணர்ந்து சுகிப்பீரென்னச்
சோறுவான்மறுதளித்துக் கூறுவானே (௬௬

(வசனம்) இந்தப்பிரகாரம் இராசனை அன்பாயாதரித்து மனந்தேற்றமுறச்செய்துதேவரேவர்களுக்கும்ஸகிக்கமுடியாதகஷ்டகாலங்களவந்ததாக நாம் அனேகபுராண இதிகாசங்களிற்கேழ்விப்பட்டதில்லையோ அவைகளை மனதிலுணர்ந்து சுகமாயிருமென்ன தனது தேகத்திலே பாதிதேகம்பெல்சாதியினதாக வேதசாஸ்திரங்கள் முறையிடுகின்றதென்று மந்திரிசொன்னவார்த்தைக்கு மாறுத்தரமாக அரிச்சந்திரன் சொல்லுவதாகாண்க.

௬௬-திபதை-தரு-இ-ம்-பிலகரி-அடதாளம்,

கண்ணிகள்,

அரி, கனவிலுமறவாதே கண்மணியைப்பிரிந்தேன் மந்திரி- எந்தன்
நினைவிலுமறவாதேநேரிழையையிழந்தேன்மந்திரி
மந்தி, வரும்வினைவந்ததாலேவருத்தமொழியலாமோமன்னா அந்தத்
திருவருளிதனாலே திரும்பவகையில்திரும் மன்னா
அரி, நேரமில்லாஇந்த நேர்மையிழிவிலேனே மந்திரி-இப்போ
தாரம்பிரிந்திடவிதாதாவிதித்ததேனோ மந்திரி

மந்தி, ஆரும்படாதவருத்தப்பட்டோமே மன்னா-என்றுந்
சேரும்கதியினில் சேர்க்கத்தெய்வமேதுணைமன்னா
அரி, பாலும்நீரும்போலென்றன்பாரியாளுடன்வாழ்ந்தேன்மந்திரிநங்
சேலின்விழிநாளைச் சிந்திப்பதினிமேரோமந்திரி [கச்
மந்தி, சனியன்றுடர்ந்தாலந்தச்சவளை அய்லார்க்குண்டோமன்னா என்னுஞ்
சனியனைத்தொழுதிந்த தலந்தனிற்றவஞ்செய்வோமன்னா (கண்ட)
அரி, மைமந்தன்லோகிதன்முகம்மறக்கொணுதென்செய்வேன்மந்திரிசெக
சந்திரமதிபோலென்முன் சத்திக்கச்சகித்திலேனேமந்திரி
மந்திரி, உத்தமாஉமக்கிந்தபோசினையினிதாமோமன்னா-உந்தன்
புத்திதனிலெண்ணினால்புகழ்சத்யம்பெரியபாதோமன்னா

பொதுவிருத்தம்.

பட்சமதிலனுவளவும் மறவாமந்திரி
பார்த்திபன்மனந்தேற்றிப் பரிவுகூறி
லெட்சுமிதுபொன்னரிது மித்தலத்தை
லேசிலடைமோயின்று லெய்பித்ததையோ
இச்சணமேசிவகாசி விசுவநாதன்
யிருந்தருளாலயம்வலமாய் வருவோமங்கே
ரட்சணியுனனிடனப புகலமன்னகளித்து
சேர்ந்திட்டாராலயத்துட் சேர்ந்திட்டாரே (௬௭

(வசனம்) இவ்விதமாயுரைக்க அரிச்சந்திர மகாராஜனைத்தேற்றி அனேகவிதமான சமாதானஞ்சொல்லி நாம்லெட்சோயிலெட்சுமிபொன் தந்தபோதிலும் இந்தகாசிக்ஷேத்திரத்தை ஸேச்சிக்கிரத்தில்டையோமே நம்முடையபூர்வஜன்மபுண்ணியவசத்தினாலே லபித்தது இனிமேல் நாம்ஸ்ரீகாசிவிசுவநாதராலயத்திற்குட் சென்று பிரதட்சணநமஸ்காரஞ்செய்வோம் வாருமென்றழைத்தபோது மனமகிழ்ந்து ஸ்ரீகாசி விசுவநாதரது கோயிலுக்குட்சென்று பலகாலுமுள்ளாவிதவு சனமறந்து சுவாமியைத்தோத்தரிப்பதுகாண்க;

௬௭-திபதை-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்

கண்ணிகள்;

௧, சிவகாசிவிசுவநாதா இனியுந்தன் சீர்பாதமேகதிதா
பலக்கடலொழிக்கும்பாதாளளியோரைப் பாதுகாத்தாளென்றுநா
தவசிகளாலேமேன்மையென்றுந் தூக்கத்தருளவேணுமே
அவனியிற்புகழ்காணுமே-கனவிலும் அஸத்தியமொழியவேணுமே
௨, பூவினைகுறைவிடத்தோமுந்தன்பாதம்துதித்திருந்தோம்
தனிவழிவரத்தொடுத்தோம்புகாவல்தாம்பரியத்துடனுந்தோம்

ப்ணிமலர்செஞ்சடையா-உமையொரு பாகந்தனிலுடையாக
இனிபவெள்ளைவிடையா-இடைவிடா திலகுமலைகைப்படையா
உ, பார்க்கவன்குலஞ்செழிக்க அஸத்தியம்பகர்வதென்றுமொழிக்க
மூர்க்கமதியழிக்க-க்ருபைசெய்வாய் முதுமறைநீர்க்கொழிக்க
யோர்க்கம்முனிகூடாமல்- இனியொருபுலிதரும்மனமவாடாமல்
ஏர்க்கவழிநாடாமல் அருள்புரிக் தேதுவாயிடைவிடாமல்
ஈ, சங்கராகங்காதரா தேவதேவா ஸர்வசிவதயாபரா
அங்கஜத்ரிபுரகரா சிவசிவா அரும்பார்வதிமனோகரா
பொங்கரவபூஷணா இணையடி போற்றுமேமதூஷணா
புங்கஜமுறபாஷணாஉனைப்பாடும் பக்தஜனபோஷணா

பொது-விருத்தம்,

ஆலமுண்டகண்டநுதலழலாலுற்ற
வையனடிமைகளது செங்கைகள்பற்றிச்
சாலமனக்களிப்புடனே வருகும்போது
சதாசிவத்தின்பெருமைதனைச் சாற்றிக்கொண்டு
சிலமுளார்நமக்கிவர்களென்னவேலை
செயத்தகுமென்றகத்தி னிடைசேருங்காலை
கோலமுளகாலகண்டி குணமதாக
கூடுவாள்சபையில்வந்து நாடுவாளே (கூ௫)

(வசனம்.) நஞ்சுண்டேசருடைய நெற்றிக்கண்ணி லிருந்தெழுந்த காலகௌசிகனென்பவன் தான்அடிமைகொண்ட தாயையும்பிள்ளையையும் கையில்பிடித்துக்கொண்டு சந்தோஷமாயிருக்கும்போது இவர்களை நாம் என்னமாய் ஊழியஞ்செய்யச்சொல்வதென்று ஐயுறவுடன் அகத்தைநோக்கி வருகிறதருணத்தில் காலகண்டியம்மாள்சபையைநோக்கிவருகிறவிதங்காண்க,

கூ௫-தரு. இ-ம்-பந்துவராளி; அடதாளம்,

பல்லவி,

என்டிசையோரும்புகழ்கொண்டவனுங்கால
கண்டிசபைக்கிவந்தாளே

அநுபல்லவி;

கண்டித்துக்கணவனும் தண்டித்துருக்கியேசும்
காலத்தினிலுமிகக் கடுகடுத்திடப்பேசும் (என்டி)

சரணங்கள்,

௧. திறசெம்பொன்சேலைக் குடைக்ககடுக்கன்பஞ்ச
கலசமாளியு மின்னவே,
கனகச்சரபாவலி சந்தனமுருபுன்
கரணைக்கொலுசு துன்னவே

சோதிமிகுமுகத்திலழகாய் நத்துமூக்குத்தி
சோகுசானதளுக்குபுலாக்கு ஜொளிபன்னவே (என்டி)
உ, ஆட்டியசைக்கிக்குலுக்கிப் பிலிக்கிலிக
வாகந்தங் கொண்டாடி
அருமைமகனக்கினி பூவுக்குக்கல்யாண
மாகும் வகையைநாடி
வீட்டினிலுள்ளவேலையெல்லா மொப்புக்கொள்ளவோர்
வெள்ளாட்டினனிலினி வேணுமென்றுளம்வாடி (என்டி)
ஈ, ப்பாடகந்தண்டைச் சிலம்புகொலுசுகள்
பந்துவராளி பாடப்
பரிவுள்தோழிமாருடனே சோபனங்கொட்டிப்
பண்பாய் நடனமாட
ஆடகச்சிதம்பரந் தனிலாடியகாளிபோல்
அஷ்டகாசஞ்செய்து சிஷ்டர்களுடன்கூட (என்டி)

(வசனம்) இவ்விதமாய்வந்த காலகண்டிவீட்டுக்குள் ளிருக்கிறபாவனையாக காலகவுசிகர் சந்திரமதியையழைத்துக்கொண்டுவருகிற ஆனந்தத்தினலே வாயுவேக மனோவேகமாய்வந்து அவர்களைத் தலைவாசலிலேவைத்துப்போட்டுதன்னுடைய வீட்டுக்கதவைத்தட்டித் தன்றுமனைவியைக் கூப்பிடுவதுகாண்க.

காலகவுசிகர்க்கும் - காலகண்டியம்மாளுக்கும் - வாக்குவாதம்.

ஆசியவசனம்,

(மறையோன்) அடியே- ஆர்ரிஅங்கே - அடியேண்டி ஆத்துக்குள்ளே யிருக்கின்றயோ யில்லையோ அடிப்ராஷ்டமுண்டே அடே அக்கிபுக்கா இவளாத்தைவிட்டு யெங்கடாபோயிருப்பாள் (மனைவி) அடியம்மாரேக்குப்போருமடியம்மா ஜென்மஜென்மத்துக்கும்போரும் (மறை) அடே அந்தமுண்டேஉள்ளேயிருந்துண்டு அமுக்குப்பிசாசுபிடிச்சாப்போல்இருக்கடா அடிஓங்தோஷியறுத்தவளேசுருக்கா கதவைத்திறவடீஅபிஷ்டு (மனைவி) இதென்னப்பொறப்போ சாகுருவியாட்டமா வாசவாசப்படிலே வரச்சே ஆசீர்வாதம் பண்ணிண்டு வரது (மறை) யேண்டிவாசக்கதவுதறக்க ஆறுமாஸஞ்செல்லுமா தனிஸ்ப்ராபஞ்சமிமுதல்பாதமோ இரண்டாம்பாதமோ ய்கோத்தாகுடுக்க சீதனத்தைக் கூனக்காந்தானும்கூட்டைவீரனும் கொண்டுபோயிட்டாருனே யேண்டிதாந்தின்னிப் பூடேகதவைத்தறக்கறையோ யில்லாபோனல்இப்படித்தானே நாளிகோயில் சுப்பளுத்துக்குப் போயிட்டமோ (மனைவி) ஆமா அங்கேபோருப்பிலே கரிஅனையுங் கையுமாவடிச்சுமூடிக்கொண்டுவல்லேவல்லேன் வலக்கையிலே சந்தனமும்இடக்கையிலேஅட்சதையுமாகக்காத்துக்

கொண்டிருக்கா (மறை) அடியேயேண்டி கொஞ்சம் போறவா தீர்த்தமும் பழையதுமிருக்கோடி (மனைவி) யேங்காணும் பிராமணாளென்கேட்டீர் இன்னொருதரங்கேளும் (மறை) அடியடி மூண்டேயென்னடி அடிக்கவரே ஸ்தாஸர்வகாலமும் பட்டினிகட்க்கேட்டுயிக்கின் யில்லருந்தாலும் வராமென்னு கருங்கருவாளும் பழைதையுங் கேட்டேன்சங்கரங்கட்டளையிலே பில்லுமண்டிக்கிடக்கு போச்சொன்னைப்போறேன் நீபோறென்னு ஸமஸ்த சஷ்பங்களானிபவந்து நான்தான் விடியக்காலம் உக்காண்டுசிலிப்பி சிலிப்பி மூடிப்பப்போறேனே (மனைவி) இந்தாருங்காணும்பிராமணா இதோபோட்டிருக்கு யெடுத்துண்டுபோம் அஸ்தமிக்க நாலுநாழிக்கிவாரும் அதுக்குமுன்னேவந்திரோ சோறு மூஞ்சோறு தான் (மறை) முருக்குசுத்தையே (மனைவி) நீங்கடுமொண்டாப்பிலே யிருக்குதுப்போ ஆருக்குமுருக்குங்கருக்கும் மூத்தபெண்ணுமுலையுந்தலையுமாறிக்கிறளோ மூத்தபிள்ளைக்கி சிமந்தகல்யாணபோ (மறை) யேண்டி அதுக்குரொம்பநாளிருக்கேதீ ஆனைமேலேஅங்கமணி கொணைக்குதெல்லாம் அவளுங் கொணைந்திட்டா (மனைவி) ஓகோ இங்கிருந்துண்டுவாரப்பட்டாதையுங்காணும் பெண்கள்பக்கத்தாக்குப் பிருமணையும் கம்மெனட்டிப்பக்கத்தாக்குக் கலவடையுமாப் இங்கேஉக்காண்டுமொள்ளமொள்ள சண்ணட்டபிடிக்காதியும் (மறை) அடியே அனம்போதாச்சிசுருக்காசனம்சுபபூஸ்வாமி நேவேத்தியம்பண்ணியிட்டு ஓரேதிருவையாய்ப் போயிட்டுறேன் (மனைவி) ஆச்சு இப்போதான்போதாவிடுஞ்சிருக்குஇப்போரெண்டு ஏழு கூழாங்கல்லும்நாலஞ்சு சொப்புக்குட்டியும் வச்சிண்டு அங்கேபோனமோ இங்கேபோனமோ இங்கேவச்சமே அங்கேவச்சமே இன்னுண்டு நசிப்பறவலுவுச்சண்டைக்கழைச்சுவாயைப் பெருக்கி வாயாத்துங்கொள்ந்து தானகாரியம் (மறை) யேண்டியின்னம் அடுப்புக்கூட மூட்டல்லேயா (மனைவி) இப்போத்தன்மயிரெழைபோலேபொனுகயறது மறை) ஆளுக்கோளாக்கி அம்மாளைக்கிக் காச்சிருக்கியே அதிலேதுசின்னதா ஒருகரண்டியப்பஞ் சுட்டுக்குடு திண்ணுட்டுமொள்ளத்தேலுசைட்டன்டேன் (மனைவி) ஐய்படி ஐயடி யெங்காலம் யெங்காலம் அசடனுக்கு வாக்கப்பட்டு ஆயிரங்கால பிராக்கிறதைப்பார்க்க சமத்தனுக்கு வாக்கப்பட்டுசரேபிரன்னு அறுத்துவிழலாம் அங்கேயாறு ரேழியிலே முக்கிக்கின்டு பெயாறன்டிங்ண்டுமொச்சுமொச்சென்னு குசுகுசெங்கிரா (மறை) ஐனயயோ மறந்துபோனேன் அடியே ஒனக்கு ஒத்தாசைக்கி ஒரு பெம்பெணட்டியும் ஒம்பிள்ளைக்கித் தோழனய் ஒருகிச்சானையும் ஸப்பா நிச்சக்கின்டு வட்டேண்டி (மனைவி) அப்பிடிச் சொல்லும் ஆத்தினே அத்தனம்

தடபிடல் குரவெக்கொண்டேன் கதவைத் சாத்துண்டிரா பெண்ணாபோ அதிரபமிருக்குன்னு நானெண்ணிக்கொண்டிருந்தேன் (மறை) அடியே இந்தாடி அவனைப்பார்ரிதென்னேங்காலம் பாயெழுந்திருந்தா அவமுகத்தைப்பார்த்தாலும் அனிஷ்ட நிர்வத்தியாமடி (மனைவி) யெனக்கப்பவே தெரியும் வாசலிலேயிருந்து அவயமிடச்சே இவனைக்கிப் பிராமணன்னகபிலே பெண்ணாமோ ஜப்பிட்டுதென்னுதானென்னச்சேன் அடி காந்தாரி இங்கே ஓடியாயேன் நம்பாத்து சம்ஸாரத்து சேர்ந்தெதுவாகத் தெரிந்சவாளோடே பேசலாங் யேந்தாடையின்னு கோந்தாடையின்ன அவாளோடே ஆருபேசுவா (மறை) என்னடிவாப்பிட்டு வறட்டு முண்டே கல்லும்நெல்லுங்கலந்து கொழிக்கிய போரும் போரும் ஒத்தைவிரலாலே அடக்கிக்கொடி இன்னமே இப்படியெல்லாநாவுபோயிந்தேபேசாதே பேசாதேபேசாதே அறுதலிமுண்டே (மனைவி) நீபேயிடா நீபேயிடாநீபேயிடா ஒன்னே விரியம்பாம்பு வெடுக்கென்னு புடுங்கா சாரைப்பாம்பு சரேரென்னுபுடுங்கா நல்லபாம்பு நருக்கென்னு கடிக்காதுன்னையிதே கொள்ளியைவைக்க நீவெடுக்கென்னு பேயிடா ஓகேளும்பிராமணா இவனுக்கு ஒருமாசத்துக்கு யென்னகூலிதாரன்டுகொள்ளுக்காசா மூணு நஞ்சக்காசா உள்ளத்தைச்சொல்லும இல்லாட்டால்சோறுமூஞ்சோறுதான் (மறை) அடியேயிப்படியெல்லாம் வாயாடாதே கருக்காப்

சக்கி யெடம்பூண்ணி (மனைவி) ஆசையா கொட்டுமோங்கோவிலேலேந்துமணி நம்பிளுத்திலே அவாளெங்கேயிருந்தாளோ அங்கேகொபோ விட்டு விட்டுவாரும்வந்தாத்தான்கொத்து இல்லாபோனால்மூஞ்சிக்கொத்துதான் (மறை) அடிதே இவனாலே தானடி நமக்கு ஷேமயங்கா முண்டாகப்போறது நமக்கு யென்னென்னைக்கும் யிவனாலேதான் பேரும் கீர்த்தியும் இனிமே நம்பாத்துக்கு க்ஷேமம் கிடைக்கும் யென்னையிருடீ (மனைவி) இவாளுக்கும்உமக்கும் இவ்வளவுசொந்தமென்ன (மறை) கடையிலே விக்கிற கன்னியையும் கொள்ளென்னுசொல்லியிருக்க யில்லையோடி அடியே நீயிவாளை லேசாயெண்ணி விடாதே அயோத்தியாபுரியை யாளப்பட்டவன் அரிச்சந்திரன் இன்னுஒருராசாயிருந்தான் அவனிருக்கே விசுவாமித்திரரிஷியிருக்காரே அவருக்குஒரு பெரிய ஆனையோரிலே கலகமேடுபிடிஞ்சு ஒகாத்துக்குபணாந்தரோனுமாம் ஆனைக்குமதிசாக்குமோ யிலையோ யிவானைக்கைபிலேயிருச்சக்கின்டு கொருத்தெருவா ஆலேந்தான் அவாள் துக்கத்தைப் பார்த்தேன்னைக்கே வசிக்கப்பிள்ளை நல்லதுபணாங்கொண்டுபோக ஆளெங்கிடா மன்னேன் ஒரு பின்னப்பயல் அவனுக்கு உதட்டிப்பால்சூட உல

யில்லே அவனைக்காட்டினுன் யேண்டாகுழந்தாய் நாளைக்காட்டுமே யென்மேன் ஆனாலாகட்டுமென்று அடிமைச்சீட்டை மாத்திரம்வாங்கிக்குமின்னிட்டு ஓடிப்போயிட்டான் இனிமேல் அவன்வந்துபணங்கேட்டகாலத்துக்கு பாத்துக்குவோம் கமக்கமாயிரு (மனைவி) இவருமே உள்ளே போய்ட்டுவரேன் எங்காணும்பிராமணு சம்பாரப்புட்டிலோலஞ்சுகொள்ளுக்காசு போட்டுவைச்சேனே காணமே (மறை)யண்டி ஒன்னுத்துலேகாவளப்பவாவது கைவைக்கிறேனு நாலுச்சு அசலாத்து புளிசக்கண்ணியாச்சு வட்டிவேன்னு வாங்கிட்டுபோரா (மனைவி) அவளெங்கே நான் செத்தேனன்னு பாத்துட்டுவரேன் ஓகே கடக்கட்டும் இவளென்னகாரியஞ்சேவள் போதுவிடிஞ்சோனே சாணுந்தெளிப்பளா பெருக்குவாளா மெழுகுவாளா அம்ப்புச்சாம்பலே வாருவாளா ஒருநாளைக்கு ஆயிரங்கொடம் ஜலம் யிழுக்கணுமே ஐந்நாத்துக்கலநெல்லுபுழுக்கணும் வாரி ஒலத்தணும் குத்தி அளந்தெடுத்துவைக்கணும் இதோமாட்டுக்கு புல்லறுத்துண்டாரணும்கரக் கணும்காச்சணும் கோட்டைகோட்டையா மூட்டைதட்டணும் நம்பாத்துலே இத்தனுமளந்துசெய்யோணுமே இவளாலே ஆமோ இவள்தேகமெல்லாஞ் சல்லடைக்கண்ணாயிருக்குதே லெழுதினைப்பார்த்தால் சணப்பனாட்டையாயிருக்கு சொரியுஞ்சொக்கு ஊசிகுத்தயிடங்கிடையாது ஆதிசோதி அம்புலுவாட்டமாயிருக்கா அமாமாசப் புத்தொறப்போலே முழங்கி நாலுநாள்வட்டமன்னைனையுங்கச்சுவட்டுநாள் வட்டங் கழிச்சலுக்குக்குடுத்தாக்கா எதுராளாக்கு நோணிப்போலே அவளிடக்கட்டும் அவபேரெனக்குத்தெரியாது அவளைக்கூட்டு ஆத்துக்காரியங்களெல்லாஞ் சவரணையாகச்செய்யச்சொல்லுங்கோ பார்ப்போம (மறை) அடேயப்பா அடியேசந்திரமதி (சந்திரமதி) சுவாமி (மறை) இந்தமட்டுக்கும் ஒன்னைப்பிடிச்ச அனிட்டம் விட்டுப்போச்சு எப்படியாவது ஒப்புக்கிண்டாளே அறுவது நாழிலேஅரைவிநாடியாவது அசு உருனுனுஉக்காந்துகயோ அன்னிக்குச்சோறு, செஞ்சோறுகான் இதோபாரும் மனசுலே கொஞ்சமாவது ஆண்படையானே. ஒனைக்காதே நீமகாபதிவிரதையென்னு ஒன்னைகாளமைச்சண்டு வந்தேன்னளுக்குவந்தவனுண்டே அவபேர்சொல்லவாவது கேட்டிருக்கையோ காலகண்டின்னுக்கேளமனைப்பலகாரம்பண்ரவளரொம்பசாக்கிரதையாயிரு (மனைவி) அடிசந்தி(சந்திரமதி) நாயே (மனைவி)கொல்லேலேவாசல்லே ழலேலே முடுக்குலே போனதைப் போக்கிப்பிட்டு நிக்காதேநெல்லைப் புழுக்கு தவுட்டைக்கொழிச்சுமைந்துக்கிக்குடுத்தேகோட்டாறுக்குச்சுத்தேனென்று சொல்லாதே நீயும்அள்ளிபள்ளிக்கொட்டிக்காதே அங்கஞ்சொட்டாதரானே இடுப்பிலேதூக்கிவைச்சிண்டு அறுதுபாழியும்அவ

யாதே ஆட்டப்பிள்ளைஊட்டும்பிள்ளை அடிக்கப்பிள்ளை அசலாத்துலேயின்னுவிடாதே நீயுஞ்சொன்னகாரியஞ் செயாதேபோனியோநீயுண்டு ஓங்கபிராமணனுண்டு (மறை) அடிகாலகண்டி நீயுஞ்சந்திரமதியுமா செத்தேசோபனங்கொட்டுங்கள் பார்ப்போம்

காலகண்டி சோபனங்கொட்டுதல்,

கண்டதைக்கல்லுகெளித்தாயேகாணப்படாபொருள்காணுயேவிண்டதையேவிண்டுகெட்டா யேவிள்ளப்படாபொருள்கேளாயே உண்டதனையுண்டிருந்தாயே வுவட்டாவமிர்தத்தையுண்ணுயே, பெண்டத்தின்மேன்மனம்வைத்தா பேரின்பந்தன்னை யிகழ்ந்தாயேத்தின்னாயதிந்தவர்க்கு யோகமேன் சாங்கியமேன் வயிராக்கியமேன், பின்னப்பல்லரவிடிலாக்கியமேன் பேச்சுமறந்துமனக்காட்சியேன், தேகந்தன்னைமேலேதுசெய்யினும்ஜெனனமரணஹானியாவதுண்டோ, சோகந்தீர்க்குஞ்ஞானமொன்றுஞ்சோதிருபமாயிருப்பாய் (௧)

காலகௌசிகர்-வசனம் அடிகாலகண்டி இப்படிதான்சோபனங்கொட்டறதோகான்கொட்டிக்காட்றேன்என்னுதானனுயிருககோ உன்னுதுநன்னுயிருக்கோபாரு.

காலகண்டியம்மாளும்-காலகௌசிகரும் சோபனங்கொட்டுதல்

சத்தியத்தைச்சொல்லடி-சாந்திமாதுடன்செல்லடி
நித்தியத்தைநினையடி-நிவர்த்திபண்ணுனைக்கிளையடி (௧)
நல்லோர்கம்மைநாடடி நாஸ்திகனைநலியடி
எல்லாம்நீயேதானடி யெங்குமாயிருப்பாயடி (௨)
கண்டதெல்லாமழிவடி காதல்தன்னையொழியடி
விண்டதெல்லாமவிணடி வித்தையின்னைவேண்டடி (௩)
நாமரூபசத்தடி நாட்டங்களுஞ்சித்தடி
தாமதத்தைத்தள்ளடி தற்புதத்தைக்கொள்ளடி (௪)
இந்தராசதமேனடி இன்மையெல்லாமிகழடி
சந்தேகந்தனைச்சுளியடி தானேசெத்தென்த்தெளியடி (௫)
வீட்டாவத்தைவாட்டடி முத்திமேல்மனமூட்டடி
ஆட்டபரத்தையகலடி அடக்கமாயனுபவியடி (௬)

பொது-விருத்தம்.

கோதரவத்தாயையுஞ்சேயையுங்கைக்கொண்டு
குவலயத்தோர்புகழ்ந்திடவாழ்ந்திருந்தாரங்கு
சீதானுக்கிளையானவரசனாடு
சிறந்தமதிமந்திரியுஞ் சொற்தவத்தோர்
ஆதாரமாயனந்திடுமச்காசிநசன்
அமர்ந்திடுமாலயந்திருக்கநட்சத்திரையன்

பூதரத்தோர்திசைகத்திட்டவந்தவர்கள்முன்பாய்
போருவான்மிகவேகுண்டுசிறுவானே. (நக

(வசனம்) இவ்விதமாய் சந்திரமதியானவள் பிராமணன்வீட்டடைந்து வாழ்ந்திருந்தாள் அரிச்சந்திரனும் மந்திரியும்தவத்தோர் அடைந்திருக்கப்பட்ட ஸ்ரீ காசிவிசுவநாதர் ஆலயத்துட்சென்றுதோத்திரஞ்செய்துகொண்டிருக்கும்போது பூலோகத்திலுள்ளயாவரும்பிரமிக்க நட்சத்திரையர்மறுபடியும்வந்து நடைப்படிக்குத்துடருவது காண்க.

க-விருத்தார்த்தம்- இ-ம் மோகனம்-ஆதிதாளம்,

காட்டிலுழன்றனூடுகெடுவழிநடந்துவந்து
பாட்டையிலமிருக்ககஸ்திப் பட்டதுமறியாயோடா,
நாட்டைவந்தடைந்தாயெந்த னடைபடிதருவாயல்லால்
விட்டமோயில்லை (கெத்து)
வாயினாலொருபொய்சொல்லடா அரிச்சந்திராவுன்
வாயினாலொருபொய்சொல்லடா,

வாயினாலொருபொய்சொன்னால் வன்னீம்சேரயோத்திக்கு
உபாயமாயழைத்துக்கொண்டு மாயமாய்ப்பட்டத்திடுவேன்
மாதவமுனிவரும் வாலவசேருவர்
மணிமுடியணிந்துநீ மாநகராளுவாய்
சோதிலாமனைவியும் மைந்தனுங்கூடுவர்
கோசிகவசிஷ்டரை முனிந்துகூத்தாடுவார் (வாயினா),

அரிச்சந்திரன்சொல்,

உ,விருத்தார்த்தம்-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்
கடலவரையுச்சிதன்னில் தாமரைமலர்ந்திட்டாலும
திடமுடன்சந்திரசூரியர் தென்றிசையுதித்திட்டாலும்,
கடலெல்லாங்கரைபுரண்டு காசினியழிந்திட்டாலும
உடலுள்ளவரையிற்பொய்யை (கெத்து)
ஒருக்காலுமுரைத்திடேனையா என்வாயாற்பொய்யை
ஒருக்காலுமுரைத்திடேனையா,
பொருக்காமொழியுரைத்தீ ருருக்கமதாயென்முன்னே
கருக்காரருக்குப்பாச மிருக்காதென்றெண்ணமுற்றேன்
கர்த்தனேயிந்நகர் வர்த்தகருக்கெனை
விற்றவரெவர்க்கும்ம பொருட்கனைகொண்டுமா
சத்தியமுறையாமல் வெற்றியுடனடைவும்
உத்தமமறியவே சுத்தியமாகவே (ஒருக்காலு),
பொது - விருத்தம்,
பறையவனிக்குறியுரைக்க மன்னனோக்கி
மந்திரிநீயெனைவிற்றுமதித்தபொன்னைத்

துறையிலிவர்க்கீந்திடெனத் தனுக்கமுற்றுத்
தூயவனேயுனைக்கூற வியற்கையல்ல
தரைதனில்நீயெனைக்கூறத் தகுதியென்றான்
தலைசாய்க்கில்விதிபோமோ தகர்ந்ததல்லால்
முறைதவறாதெனைக்கூறின் முடியுமென்றான்
முனைந்திட்டான்விலைகூற நினைந்திட்டானே. (கஎ)

(வசனம்.) நட்சத்திரய னிப்படிசொன்னபோது அரிச்சந்திரனானவன் மந்திரியைநோக்கி நீஎன்னைவிலைகூறி இருவருக்குநடைப்படியைத்தீர்த்தனுப்புவாயென்ன ஐய் இறைவனேஎனன் நீர்விலைகூறத்தகுமென்றான் வசனஞ்செய்துகொண்டதினாலே லலாடலிபி அழியுமோ சத்யத்தவறுமலென்னையே வில்லென்றுரைத்தஅரிச்சந்திரனை சத்யகீர்த்தியாகிய மந்திரிவிலைகூறுவதுகாண்க.

நஎ-தரு-இ-ம்-ஆகிரி-அடதாளம்,

பல்லவி.

இராஜனைக்கொள்வாருண்டோ-ராஜனுமிருந்தயோத்தி (இராஜ)
அநுபல்லவி,
தேசன்சூரியகுலதீரன் தேவேந்திரனுக்கிணையான (இராஜனை)
சரணங்கள்.
க, காசிமாநகர்வீதியில் காவலரிச்சந்திரனைக்
கோசிகர்தருகுவந்தோர் கூலிக்காகவிற்கவந்தேன்
உ, கொங்கணரேகலிங்கரே கொங்கரேதனுநாடரே
சிங்களரேதினத்தாரே சீமையாருமன்னவரே (இரா)
ந; பொங்கியகர்நாடகரே புகழ்பெறுமிலாடர்மாரே
இங்கிதன்தரிசங்குமன்னன் ஈன்றெடுத்தவரிச்சந்திரா (இரா]
பொது-விருத்தம்.
செப்பரியவயோத்திநக ராண்மைபெற்ற
செல்வனரிச்சந்திரனைச் சேர்ந்தமைச்சன்
ஒப்பரியகாசிபுரி வீதிமூலை
யொதுக்கிடுஞ்சந்துக்கள் குகைகளூடமேற்றுய்
தப்பரியமுடுக்குகளெல்லாநடந்து
தளராதுவிலைகூறத் தரணியோர்கள்
மெய்ப்பரியிவ்வெவரோ வெனக்கலங்கி
மேவுவார்தோற்றம்போற்கூவுவாரே. (கஅ)

(வசனம்.) கேளுங்கள் புண்ணியவான்களே சொல்லுதற்கரிதாகிய அயோபுரியையாளப்பட்ட அரிச்சந்திரனை மந்திரியான சத்தியகீர்த்தியென்பவன் காசிபட்டணத்திலுள்ள ஒவ்வொரு தெருவாகப்போய் விலைகூறும்போது இவர்களாரோவென்று அவ்வூரிலுள்ளயாவருநிறைந்து அவரவருக்குத் தோன்றியபடி பேசிக்கொள்ளுவதுகாண்க;

ஙஅ-இபதை-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

கண்ணிகள்.

க, ஐயோயிதென்னவொருபுதுமைநடக்குதிந்த
அதிசயங்காண்போமென்பார் அந்நாடோர்
வெய்யோன்கோடியுதித்துவெளிவந்தாற்போலவொரு
வீரனைப்பார்ப்பிரென்றார் அந்நாடோர்
உ, புட்பதன்வனிவனைப் போருக்கழைக்கமனம்
பொருந்தலறிதாமென்பார்; அந்நாடோர்
புட்பகவிமானம்நாரு யிரங்கொண்டோனிந்தப்
புரவலர்க்கிடோவென்பார் அந்நாடோர்
ங, முன்னளில்வந்திவன்கொண்டு முதுமடந்தையைவிற்று
முடிந்தான்வெகுபொன்னென்பார் அந்நாடோர்
கன்னலுவேதமாறு நாலுமுணர்ந்தோர்க்கொப்பும்
நாதன்வடிவமென்பார் அந்நாடோர்
ச, காரணங்கண்டறியக் கருதுமொருவரில்லை
கண்டோர்கொள்வாரோமென்பார் அந்நாடோர்
பூரணமாகவவர் பொருளளிப்பாரோஅவர்
பொருந்தத்தகவாமென்பார் அந்நாடோர்
ரு, இவனையடிமைகொள்ள யெவர்க்குத்திறமிவ்வூரில்
யெண்ணருள்பொருளென்பார் அந்நாடோர்
தவனையிட்டுத்தந்தா லிம்கு யோன்றனக்குக்கூட
தரவரிதாருமென்பார் அந்நாடோர்
சா, இறையவனல்லதிவன் ஏழையென்றெண்ணவேண்டாம்
ஈசனருளிதென்பார் அந்நாடோர்
குறையவனுக்கென்னுண்டோ கூறவிதிவந்தது
கொள்வாரெவரோவென்பார் அந்நாடோர்
எ, எத்திசையாண்டவனோ எந்தமன்னன்தவஞ்செய்
தீன்றபுண்யனோவென்பார் அந்நாடோர்
இத்திசையிலிவனைக் கண்டதில்லையயோத்திக்
கிறையொளிவனுமென்பார் அந்நாடோர்
அ, சூரியகுலதீரர் சொன்னமொழிமாறிடார்
சூழ்வினையேதோவென்பார் அந்நாடோர்
காரியக்கேடாயினும்தானேயடிமைபடக்
கருதுவோனுண்டோவென்பார் அந்நாடோர்
கூ, தவிமந்தனைக்காத்திடுந் தலைவனைவிலைகொள்ளத்
தரணியிலெவரென்பார் அந்நாடோர்

இம்மையினைத்திவனை • வில்கூறவந்தவன்
வல்லமையேதோவென்பார் அந்நாடோர்
ய. தருமராஜனுக்கல்லால்-தகுமோமற்றொருவர்க்குத்
தலைவானவனையென்பார் அந்நாடோர்
கருமமறிந்தோருண்டோ நெஞ்சநெழுத்தைநாளும்
கடக்கவரிதாமென்பார் அந்நாடோர்

பொதுவிருத்தம்

ஆதித்தன்குலமகவினங்கதொட்டு
அண்டரவணியபொன்றம்புகழும்காசி
வீதிதனில்விலைகூறிவிற்கக்கண்டு
வேந்தருமாந்தருமங்கு விளங்குவோரும்
கோதிலசன்றனைக்கொள்வோரரிதாமிந்தக்
குவலயத்திற்றருமனொருவனுக்காமென்னும்
போதில்புலைச்சாதியர்கள்வீதிநோக்கிப்
பொருதினன்விலைகூறக்கருதினனே. (ஙக)

